**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.**

வெளியீடு :25-5-2016 Issued:25-5-2016

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 29, 2015—தொகுதி 90

Tuesday the 29th September 2015—Volume 90

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	xiii-xviii
Governor and Council of Ministers	xix-xxiii
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xxv-xxviii
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxix-xxxix
1. வினாக்கள்-விடைகள்	
(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்	1-43
(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 16 முதல் 22 வரை இணைப்பு I—ஆகச் சேர்க்கப்பட்டுள்ளன.)	44
2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்	
(அ) தமிழ் இலக்கிய விருதுகள், பாவேந்தர் பிறந்த நாள் விழா, திருக்குறள் மற்றும் ஆத்திச்சூடி மொழிபெயர்ப்பு குறித்த முதலமைச்சரின் அறிக்கை	44-46
(ஆ) பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை	46-47
(இ) திருவாடானை ஜவுளிப் பூங்கா, வேதாரண்யம் காஸ்டிக் சோடா தொழிற்சாலை உள்ளிட்ட தொழில் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை	47-53

பக்கங்கள்

2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்—*தொடர்ச்சி*

(ஈ) *கூட்டுறவு அமைப்புகளுக்கு கட்டடம், பாதுகாப்பு மற்றும் கணினி வசதி, நுகர்பொருள் கிடங்குகளில் சுமை தூக்கும் கருவிகள் நிறுவுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை* 53-57

(உ) *புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை* 57-58

3. தமிழ் இலக்கிய விருதுகள் வழங்குதல், பத்திரிகையாளர்கள் ஓய்வூதிய உயர்வு, புதிய தொழில் திட்டங்கள், கூட்டுறவுத் துறை நவீனமாக்கல் மற்றும் புதிய அரசுக் கல்லூரிகள் தொடங்குதல்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி— 59-77

முனைவர் செ.கு. தமிழரசன் 59-61

திரு. உ. தனியரசு 62-64

**திரு. டி.வி. கதிரவன்* 64-66

**திரு. க. பாண்டியராஜன்* 66-68

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்* 68-69

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு* 69-71

மாண்புமிகு திரு. இரா. காமராஜ் 71

மாண்புமிகு திரு. பி. தங்கமணி 71-73

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா 73

**மாண்புமிகு திரு. கே. டி. இராஜேந்திர பாலாஜி* 73-75

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி 75

பக்கங்கள்

4. தகவல் கோரல்—

(அ) சத்துணவு ஊழியர்கள் பிரச்சினை 77-80,81,82-85

திரு. துரைமுருகன் 77

*திரு. அ. சவுந்தரராசன் 78

*மாண்புமிகு திரு. பா. வளர்மதி 79,81-85

திரு. எ.வ. வேலு 79

டாக்டர் க. கிருஷ்ணசாமி 79

திருமதி எஸ். விஜயதரணி 80

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை 78,80-82, 85-87 92-93

திரு. என்.ஆர். ரெங்கராஜன் 80-81

திரு. க. குணசேகரன் 78,81,85-86

திரு. க. பாலகிருஷ்ணன் 82,85

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 82,86

திரு. அ. கணேஷ்குமார் 86

முனைவர் கோவி. செழியன் 86-87

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 92-93

5. கவன ஈர்ப்பு—

கும்பகோணம் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை 45C அமைக்கும் பணிகளை விரைவுபடுத்துதல் 87-91

திரு. க. அன்பழகன் 87,89

*மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 88,90-91

6. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2015–2016, அளித்தல்— 94-100

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 94-100

		பக்கங்கள்
7.	மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1998-1999, 1999-2000, 2000-2001, 2001-2002, 2002-2003, 2003-2004 மற்றும் 2004-2005, அளித்தல்—	101-107
	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	101-107
8.	மானியக் கோரிக்கைகள், 2015-2016, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி	
	(அ) கோரிக்கை எண் 38-பொதுத் துறை (ஆ) கோரிக்கை எண் 1-மாநிலச் சட்டமன்றம் (இ) கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை (ஈ) கோரிக்கை எண் 16-நிதித் துறை (உ) கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	108-171
	(ஊ) கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	
	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	108-110,113, 115,118,120,124, 126-128,130, 131-142,151-154, 159,163-167
	*திரு. அர. சக்கரபாணி	125-128,130-133, 139-140
	*மாண்புமிகு திரு. எஸ் *வேலுமணி	129
	மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்	141
	திரு. என்.வி. காமராஜ்	142-147
	திரு. க. பாலகிருஷ்ணன்	123,147-151,156
	மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்	155-156
	திரு. சு. குணசேகரன்	113,157-162
	திரு. கே. பொன்னுசாமி	162-163

பக்கங்கள்

9. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.) 172

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் முதல் 2015–2016, முன்மொழிதல் (ஆ.செ.) 173

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.) 178

(ஈ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1998-1999 முன்மொழிதல் (ஆ.செ.) 179

(உ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1999–2000, முன்மொழிதல் (ஆ.செ.) 181

(ஊ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2000–2001, முன்மொழிதல் (ஆ.செ.) 184

(எ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001–2002, முன்மொழிதல் (ஆ.செ.) 186

(ஏ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002–2003, முன்மொழிதல் (ஆ.செ.) 187

(ஐ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003–2004, முன்மொழிதல் (ஆ.செ.) 190

(ஒ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004–2005, முன்மொழிதல் (ஆ.செ.) 192

பக்கங்கள்

9. அறிவிப்புகள்—

(ஓ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2015 (ஆஇ.) — 194

(ஔ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2015 (ஆஇ.) — 195

(அஅ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2015 (ஆஇ.) — 196

(அஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2015 (ஆஇ.) — 197

(அஇ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2015 (ஆஇ.) — 198

(அஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2015 (ஆஇ.) — 199

(அஉ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு, 2015 (ஆஇ.) — 200

(அஊ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் — 235-252

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2015 — 172-173

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 172-173

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2015 — 178-179

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 178-179

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2015 — 195

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 195

பக்கங்கள்

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(ஈ) *தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2015* 196

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 196

(உ) *தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2015* 197

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 197

(ஊ) *தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2015* 198

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 198

(எ) *தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2015* 199

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 199

(ஏ) *தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2015* 200

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 200

(ஐ) *தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு, 2015* 201

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 203

11. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2015-2016, வாக்கெடுப்பு 173-177

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 173-176

திரு. க. பாலகிருஷ்ணன் 176-177

12. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1998-1999, வாக்கெடுப்பு 179-181

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 179

பக்கங்கள்

13. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1999-2000, வாக்கெடுப்பு — 182-183

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 182

*திரு. அ. சவுந்தரராசன் — 182

14. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2000-2001, வாக்கெடுப்பு — 184-185

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 184

15. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, வாக்கெடுப்பு — 186-187

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 186

16. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002-2003, வாக்கெடுப்பு — 188-190

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 188

17. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003-2004, வாக்கெடுப்பு — 190-192

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 191

18. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004-2005, வாக்கெடுப்பு — 193-194

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 193

19. அரசினர் தீர்மானங்கள் -

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் — 202-203

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் — 252-253

பக்கங்கள்

20. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2015 — 203-205

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 203-204

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2015 — 205-207

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 205-206

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2015 — 207-209

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 207-208

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2015 — 209-211

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 209-210

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2015 — 211-212

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 211-212

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2015 — 213-214

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 213-214

(எ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2015 — 214-216

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 216-218

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2015 — 216-218

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 216-218

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

20. அரசினர் சட்டமுன்வடிவுகள் **(ஆய்வு செய்தல்)**—

(ஐ)	தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு, 2015	**218-220**
	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	**218,220**
(ஒ)	தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015	**220-222**
	*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்	**220,222**
(ஓ)	தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015	**222-224**
	*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்	**222,224**
(ஔ)	தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015	**224-226**
	*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்	**224,226**
(அஅ)	தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015	**226-228**
	*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்	**226,228**
(அஆ)	தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015	**228-230**
	*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்	**228-230**
(அஇ)	தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015	**230-232**
	*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	**230-232**

பக்கங்கள்

20. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015 — 232-234

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 233,234

21. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 253-257

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் – முனைவர் கோ. ரோசய்யா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:

 பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை

2. நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:

 நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள், கடவுச் சீட்டுகள், பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

3. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:

 மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

4. வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:

 வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

5. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

6. ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. மோகன்:

குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள், தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

7. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

9. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

10. உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு மற்றும் இந்து சமய மற்றும் அறநிலையங்கள்*
11. தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள் மற்றும் போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்*
12. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்*
13. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு*
14. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *கால்நடை பராமரிப்பு*

15. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *கைத்தறி மற்றும் துணிநூல்*
16. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை*
17. சுற்றுலாத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*
18. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*
19. மீன் வளத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*
20. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: *தகவல் தொழில்நுட்பம்*
21. வருவாய்த் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு*

22. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்

23. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

24. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:

பள்ளிக் கல்வி, தொல்பொருளியல், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

25. வனத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:

வனம்

26. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

27. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி:

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்

28\. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்

29\. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR – Dr. K. ROSAIAH

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister ..	**The Hon. Selvi J Jayalalithaa:** Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home
2. Minister for Finance & Public Works ..	**The Hon. Thiru O. Panneerselvam:** Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works
3. Minister for Electricity & Prohibition and Excise ..	**The Hon. Thiru Natham R. Viswanathan:** Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
4. Minister for Housing, Urban Development and Agriculture ..	**The Hon. Thiru R. Vaithilingam:** Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority, Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development
5. Minister for Highways and Minor Ports ..	**The Hon. Thiru Edappadi K. Palaniswami:** Highways and Minor Ports

6. **Minister for Rural Industries and Labour** ..	**The Hon. Thiru P. Mohan:** Rural Industries including Cottage Industries and Small Industries, Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment
7. **Minister for Social Welfare and Nutritious Noon Meal Programme** ..	**The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms and Nutritious Noon Meal Programme
8. **Minister for Higher Education** ..	**The Hon. Thiru P. Palaniappan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
9. **Minister for Co-operation** ..	**The Hon. Thiru Sellur K. Raju:** Co-operation, Statistics and Ex-Servicemen Welfare
10. **Minister for Food, Hindu Religious and Charitable Endowments** ..	**The Hon. Thiru R. Kamaraj:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control and Hindu Religious and Charitable Endowments
11. **Minister for Industries and Transport** ..	**The Hon. Thiru P. Thangamani:** Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives and Transport, Nationalised Transport, Motor Vehicles Act

12. Minister for Commercial Taxes and Registration ..	**The Hon. Thiru M.C. Sampath:** Commercial Taxes & Registration and Stamp Act
13. Minister for Municipal Administration, Rural Development, Law, Courts and Prisons ..	**The Hon. Thiru S.P. Velumani:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption
14. Minister for Animal Husbandry ..	**The Hon. Thiru T.K.M. Chinnayya:** Animal Husbandry
15. Minister for Handlooms & Textiles ..	**The Hon. Tmt . S. Gokula Indira:** Handlooms & Textiles
16. Minister for Sports and Youth Welfare ..	**The Hon. Dr. S. Sundararaj:** Youth Welfare and Sports Development Department
17. Minister for Tourism ..	**The Hon. Thiru S.P. Shunmuganathan:** Tourism, Tourism Development Corporation
18. Minister for Adi Dravidar & Tribal Welfare ..	**The Hon. Thiru N. Subramanian:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour
19. Minister for Fisheries ..	**The Hon. Thiru K.A. Jayapal:** Fisheries and Fisheries Development Corporation

20. **Minister for Information Technology** ..	**The Hon. Thiru N. Subramanian:** Information Technology
21. **Minister for Revenue** ..	**The Hon. Thiru R.B. Udhaya Kumar:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies
22. **Minister for Information and Special Programmes Implementation** ..	**The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto
23. **Minister for Milk and Dairy Development** ..	**The Hon. Thiru B.V. Ramanaa:** Milk and Dairy Development
24. **Minister for School Education** ..	**The Hon. Thiru K.C. Veeramani:** School Education, Archaeology, Tamil Official Language and Tamil Culture
25. **Minister for Forests** ..	**The Hon. Thiru M.S.M. Anandan:** Forests
26. **Minister for Environment** ..	**The Hon. Thiru N.D. Venkatachalam:** Environment and Pollution Control
27. **Minister for Khadi and Village Industries** ..	**The Hon. Thiru T.P. Poonachi:** Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan

28. Minister for Backward Classes and Minorities Welfare	..	**The Hon. Thiru S. Abdul Rahim:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf
29. Minister for Health	..	**The Hon. Dr. C. Vijayabaskar:** Health, Medical Education and Family Welfare

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

மாற்றுத் தலைவர்கள்#

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ஓ.கே. சின்னராஜ்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

முனைவர் செ.கு. தமிழரசன்

செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

18-2-2015 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. ம. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ரா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.பி.ஏ.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. சு. பூபதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தி.ஜெ. ஸ்ரீதர், பி.எஸ்சி.	.. குழு அலுவலர்
திரு. வே. ரவிசங்கர், எம்.ஏ., பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. கி. சீனிவாசன், எம்.ஏ., பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர்
திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி.	.. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்

திருமதி வி.சு. வசந்திமலர், எம்.ஏ., .. துணைச் செயலாளர்
பி.ஜி.எல்., எம்.ஏ.

திரு. பா. சுப்பிரமணியம், .. துணைச் செயலாளர்
பி.காம்., பி.ஜி.எல்.

திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ. .. குழு அலுவலர்

திருமதி இரா. சாந்தி, .. துணைச் செயலாளர்
எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.

திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., .. துணைச் செயலாளர்
பி.ஜி.எல். (பதிப்பாளர்)

திரு. அ. அய்யன்பெருமாள், .. துணைச் செயலாளர்
எம்.ஏ., பி.ஜி.எல்.

திரு. செ. பாண்டியன், .. துணைச் செயலாளர்
எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல்.

திரு. வெ. கலைராஜன், .. துணைச் செயலாளர்
எம்.ஏ., பி.எட்., பி.எல்.

திரு. மு. ஆதிசேஷன், .. துணைச் செயலாளர்
எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.

திரு. ப. பத்மகுமார், .. துணைச் செயலாளர்
எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. ச. குமார், எம்.காம். .. தலைமை நிருபர்

திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. கி. சூரியநாராயணன், எம்.ஏ., .. தலைமை நிருபர்
பி.ஜி.எல்., டி.டி.எல்., டி.எல்.எல்.

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., .. சார்புச் செயலாளர்
பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.

திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	..	தலைமை நிருபர்
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	தலைமை நிருபர்
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி.	..	தலைமை நிருபர்
திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. கோ. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. க.லோ. சிவக்குமரன், பி.எஸ்சி.	..	சார்புச் செயலாளர்
திரு. வே. சேதுராஜ், பி.ஏ.,	..	சார்புச் செயலாளர்
திரு. ஜி. பாண்டுரங்கன், பி.ஏ., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூபக்குமார், எம்.ஏ., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. ஜி. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	..	சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு...	கலசப்பாக்கம்
2.	அசோக், திரு. எம்.கே. ..	வேளச்சேரி
3.	அண்ணாதுரை, திரு. இரா. ..	மதுரை தெற்கு
4.	அப்துல் ரஹீம், திரு. எஸ். ..	ஆவடி
5.	அரங்கநாதன், திரு. ஆ.க. ..	கீழ்பெண்ணாத்தூர்
6.	அருண் சுப்பிரமணியன், திரு. மு. ..	திருத்தணி
7.	அருண் பாண்டியன், திரு. செ. ..	பேராவூரணி
8.	அருள்செல்வன், திரு. ஆர். ..	மயிலாடுதுறை
9.	அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. ..	சேலம் வடக்கு
10.	அழகுவேலு, திருமதி க. ..	கள்ளக்குறிச்சி (செ.வ.)
11.	அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. ..	திருச்செந்தூர்
12.	அன்பழகன், திரு. க. ..	கும்பகோணம்
13.	அன்பழகன், திரு. கே.பி. ..	பாலக்கோடு
14.	அன்பழகன், திரு. ஜெ. ..	சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி
15.	அஸ்லம் பாஷா, திரு. அ. ..	ஆம்பூர்
16.	ஆறுக்குட்டி, திரு. வி.சி. ..	கவுண்டம்பாளையம்
17.	ஆறுமுகம், திரு. எம். ..	வால்பாறை (செ.வ.)
18.	ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம். ..	திருப்பூர் வடக்கு
19.	இந்திராகாந்தி, திருமதி த. ..	துறையூர் (செ.வ.)

20. இராமகிருஷ்ணன், திரு. நா.	.. கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. டி.	.. தளி
22. இராமலிங்கம், திரு. கே.வி.	.. ஈரோடு மேற்கு
23. இராஜி, திரு. வி.எஸ்.	.. செய்யூர் (செ.வ.)
24. இராஜேந்திரன், திரு. இரா.	.. குறிஞ்சிப்பாடி
25. இராஜேந்திரன், திரு. பி.ஜி.	.. ஆலங்குளம்
26. உதயகுமார், திரு. ஆர்.பி.	.. சாத்தூர்
27. உலகநாதன், திரு. கே.	.. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
28. எடப்பாடி கே. பழனிசாமி, திரு.	.. எடப்பாடி
29. கடம்பூர் ராஜு, திரு.	.. கோவில்பட்டி
30. கனிதா சம்பத், திருமதி எஸ்.	.. மதுராந்தகம் (செ.வ.)
31. கணேசன், திரு. பா.	.. உத்திரமேரூர்
32. கணேஷ்குமார், திரு. அ.	.. செஞ்சி
33. கதிரவன், திரு. பி.வி.	.. உசிலம்பட்டி
34. கந்தன், திரு. கே.பி.	.. சோழிங்கநல்லூர்
35. கருணாநிதி, திரு. மு.	.. திருவாரூர்
36. கருப்பசாமி, திரு. ஏ.ஏ.	.. அவினாசி (செ.வ.)
37. கருப்பையா, திரு. பழ.	.. துறைமுகம்
38. கருப்பையா, திரு. மு.வீ.	.. சோழவந்தான் (செ.வ.)
39. கலை அரசு, திரு. ம.	.. அணைக்கட்டு
40. கலைராஜன், திரு. வி.பி.	.. தியாகராய நகர்
41. காமராஜ், திரு. இரா.	.. நன்னிலம்
42. காமராஜ், திரு. என்.வி.	.. வேதாரண்யம்

43. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

44. கார்த்திக் தொண்டைமான், திரு.. புதுக்கோட்டை

45. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி

46. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)

47. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.எ. .. பர்கூர்

48. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி

49. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்

50. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)

51. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை

52. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)

53. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்

54. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை

55. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்

56. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்

57. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்

58. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

59. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்

60. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)

61. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

62. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்

63. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்

64. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு

65. சந்திரசேகர், திரு. ஆர். .. மணப்பாறை

66. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்

67. சம்பத்குமார், திரு. கோவி. .. வாணியம்பாடி

68. சம்பத்குமார், திரு. பி. .. திருச்செங்கோடு

69. சரத்குமார், திரு. ரா. .. தென்காசி

70. சரோஜா, திருமதி பெ. .. ஏற்காடு (ஆ.வா.)

71. சவுந்தரராசன், திரு. அ. .. பெரம்பூர்

72. சாந்தி, திருமதி ஆர். .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

73. சாமி, திரு. ஆர். .. மேலூர்

74. சிவக்கொழுந்து, திரு. டி. .. பண்ருட்டி

75. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்

76. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். .. நெய்வேலி

77. சிவபதி, திரு. என்.ஆர். .. முசிறி

78. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்

79. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்

80. சின்னையா, திரு. டி.கே.எம். .. தாம்பரம்

81. சீனிவாசன், திரு. ஆர். .. ஆற்காடு

82. சுந்தரம், திரு. பி.எல். .. பவானிசாகர் (செ.வ.)

83. சுந்தரராஜ், டாக்டர் சு. .. பரமக்குடி (செ.வ.)

84. சுந்தர்ராஜன், திரு. ஆர். .. மதுரை மத்தி

85. சுபா, திருமதி ப. .. கெங்கவல்லி (செ.வ.)

86. சுப்பிரமணியன், திரு. ந. .. செய்யாறு

87. சுப்பையா, திரு. இ. .. அம்பாசமுத்திரம்

88. சுப்ரமணியன், திரு. ந. .. கந்தர்வகோட்டை (செ.வ.)

89. சுரேஷ்குமார், திரு. டி. .. செங்கம் (செ.வ.)

90. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி

91. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்

92. செந்தமிழன், திரு. ஜி. .. சைதாப்பேட்டை

93. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்

94. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்

95. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி

96. செல்லூர் கே. ராஜு, திரு. .. மதுரை மேற்கு

97. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

98. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு

99. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

100. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)

101. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி

102. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்

103. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி

104. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி

105. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)

106. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்

107. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி

108. தங்கவேலன், திரு. சுப. .. திருவாடானை

109. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு

110. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு

111. தமிழரசன், முனைவர் செ.கு. .. கீழ்வைத்தினான்குப்பம் (செ.வ.)

112. தமிழ்மகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)

113. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)

114. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி

115. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)

116. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்

117. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்

118. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு

119. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)

120. தினகரன், திரு. க. .. சூலூர்

121. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்

122. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு

123. துரைமுருகன், திரு. .. காட்பாடி

124. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

125. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்

126. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்

127. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்

128. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி

129. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)

130. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்

131. நாகைமாலி, திரு. வீ.பி. .. கீழ்வேளூர் (செ.வ.)

132. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்

133. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி

134. நாராயணன், திரு. பி.ஜி. .. பவானி

135. நீலகண்டன், திரு. வ. .. திரு.வி.க. நகர் (செ.வ.)

136. பச்சைமால், திரு. கே.டி. .. கன்னியாகுமரி

137. பரஞ்ஜோதி, திரு. மு. .. திருச்சிராப்பள்ளி மேற்கு

138. பரமசிவம், திரு. கே.பி. .. பல்லடம்

139. பவுன்ராஜ், திரு. க. .. பூம்புகார்

140. பழனிசாமி, திரு. கே.சி. .. அரவக்குறிச்சி

141. பழனிச்சாமி, திரு. ச. .. வேடசந்தூர்

142. பழனியப்பன், திரு. பி. .. பாப்பிரெட்டிப்பட்டி

143. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்

144. பாண்டியராஜன், திரு. க. .. விருதுநகர்

145. பாபு முருகவேல், திரு. ர.ம. .. ஆரணி

146. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை

147. பார்த்தசாரதி, திரு. ப. .. விருகம்பாக்கம்

148. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். .. மேட்டூர்

149. பாலகிருஷ்ணன், திரு. க. .. சிதம்பரம்

150. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்

151. பாஸ்கர், திரு. அ. .. தருமபுரி

152. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்

153. பிரபாகர், திரு. ஜே.சி.டி. .. வில்லிவாக்கம்

154. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்

155. பீம்ராவ், திரு. க. .. மதுரவாயல்

156. புத்திசந்திரன், திரு. .. உதகமண்டலம்

157. புஷ்பா லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்

158. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்

159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

161. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

162. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை

163. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)

164. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

165. போஸ், திரு. ஏ.கே. .. மதுரை வடக்கு

166. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)

167. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்

168. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு

169. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

170. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்

171. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்

172. மனோரஞ்சிதம், திருமதி .. ஊத்தங்கரை (செ.வ.)

173. மகேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)

174. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்

175. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி

176. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்

177. முத்துசெல்வி, திருமதி ச. .. சங்கரன்கோவில் (செ.வ.)

178. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

179. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்

180. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

181. முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு

182. முனுசாமி, திரு. கே.பி. .. கிருஷ்ணகிரி

183. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை

184. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்

185. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்

186. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

187. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்

188. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்

189. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்

190. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்

191. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

192. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)

193. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்

194. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி

195. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி

196. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்

197. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்

198. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

199. ராஜா, திரு. பொன். .. பொன்னேரி (செ.வ.)

200. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

201. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

202. ரெங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

203. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு

204. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (செ.வ.)

205. லிங்கமுத்து, திரு. கு. .. குடியாத்தம் (செ.வ.)

206. வளர்மதி, திருமதி சி. .. ஸ்ரீரங்கம்

207. வளர்மதி, திருமதி பா. .. ஆயிரம் விளக்கு

208. விஜயகாந்த், திரு. .. ரிஷிவந்தியம்

209. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

210. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

211. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. .. சங்கரி

212. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்

213. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

214. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

215. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

216. வெங்கடேசன், திரு. எல். .. திருக்கோவிலூர்

217. வெங்கட்ராமன், திரு. வி.என்.பி. .. ஆலந்தூர்

218. வேணுகோபாலு, திரு. கேஎஸ்என். .. பழனி

219. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்

220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

221. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்

222. வைகைச்செல்வன், முனைவர் .. அருப்புக்கோட்டை

223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

224. வைரமுத்து, திரு. பீ.கே. .. திருமயம்

225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. இராமநாதபுரம்

226. ஜான் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்

227. ஜானகிராமன், திரு. ஐ. .. வானூர் (செ.வ.)

228. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

229. ஜெயசுதா, திருமதி எஸ். .. போளூர்

230. ஜெயபால், திரு. கே.ஏ. .. நாகப்பட்டினம்

231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

232. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

233. ஹரிதாஸ், டாக்டர் த. .. திண்டிவனம் (செ.வ.)

234. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) .. நியமனம்

235. வெற்றிடம் .. கடையநல்லூர்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஏ.எல். சோமையாஜி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, புரட்டாசி 12, திருவள்ளுவர் ஆண்டு-2046

2015 செப்டம்பர் 29, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்"

தம்மால் எதைச் செய்ய முடியும் என்பதையும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அறிந்து, செயலில் சோர்வடையாமல் தொடர்ந்து முயல்கிறவர்களுக்கு முடியாத செயல் என எதுவும் இல்லை.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 369, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

369—

கூட்டுறவுப் பால் பண்ணை

***55616—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஆர்.கே. பேட்டையில் கூட்டுறவுப் பால் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உலகத் தமிழ் மக்களுக்காக தம் வாழ்வை அர்ப்பணித்த நம் அன்னை, தமிழகத்தின் தலைமகள் 'என் மக்கள் எப்போதும், எதற்காகவும், யாரிடமும் கையேந்தி நிற்காத காலத்தை உருவாக்குவேன்' என சூளுரைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) பொற்காலம் படைக்கின்ற, முக்காலமும் உழைக்கின்ற, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி எனது பதிலை அளிக்கின்றேன்.

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஆர்.கே. பேட்டையில் கூட்டுறவுப் பால் பண்ணை அமைக்கும் வாய்ப்புகள் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறந்து சிறந்து விளங்கிய தலைவர்கள் மத்தியில், சிறந்தே பிறந்தவர் நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முடியாது என்பது மூடத்தனம், முடியும் என்பது அம்மாவின் மூலதனம். தமிழகத்தில் வறுமையில்லை, துன்பமில்லை, எதற்கும் பஞ்சமில்லை, துயரமில்லை. காரணம், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சிதான்.

மேலும், எல்லாத் துறைகளிலும் அபார வளர்ச்சி பெற்று, இந்தியத் திருநாட்டின் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக, ஒரு வழிகாட்டி மாநிலமாகத் தமிழகம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் திகழ்வதற்கு மேலும் ஒரு காரணம், மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு சிறந்த பத்திரிகையாளர். ஆங்கிலப் புலமையும், தமிழ்ப் புலமையும், பன்மொழிப் புலமையும் ஒருங்கே பெற்றவர் நம் அம்மா. தேசத்தின் சிறந்த தலைவர்கள் அனைவருமே மாண்புமிகு அம்மா அவர்களைப்போன்று பத்திரிகையாளராக இருந்து, தேசத்தின் உயர்வுக்கு உழைத்து,

உயர்வளித்துள்ளனர். உதாரணத்திற்கு, தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்கள் ஒரு பத்திரிகையாளர்; சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு பத்திரிகையாளர்; சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒரு பத்திரிகையாளர்; பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் ஒரு பத்திரிகையாளர்; பொதுவுடைமைவாதி தோழர் ஜீவா அவர்கள் ஒரு பத்திரிகையாளர்; பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு பத்திரிகையாளர்; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு பத்திரிகையாளர்; வாழும் ஒன்பதாம் வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு சிறந்த பத்திரிகையாளர். அதனால்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் சாமான்ய மக்கள் சாம்ராஜ்யத்திலும் சந்தோஷத்தை உறுதிப்படுத்தி, சமூக வளர்ச்சிக்கு, சமூகத் திட்டங்கள் தந்துள்ள சமூக விஞ்ஞானியான மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. பேட்டையில் கூட்டுறவுப் பால் பண்ணை அமைக்கவேண்டும் என கோரிக்கை எழுப்பியிருந்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலேயே டென்மார்க், பால் உற்பத்தியிலே முதல் இடத்தை வகிக்கிறது. இந்தியாவிலேயே தமிழகம் ஒரு டென்மார்க் ஆக உருவெடுத்து, அதிகமாகப் பால் உற்பத்தி செய்கின்ற ஒரு மாநிலமாகத் திகழ்வதற்குக் காரணமே, மாண்புமிகு அம்மா அவர்களால் 2011-லே தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியான இலவச கறவை மாடுகள் வழங்கப்படும் திட்டத்தின் கீழ், எல்லா குக்கிராமங்களிலும் இருக்கின்ற ஏழையெளிய விவசாயிகளுக்கு இலவசமாக கறவை மாடுகள் கொடுத்ததுதான். அதனாலே, இன்று தமிழகத்தில் வெண்மைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே, கிராமத்து மக்களுடைய அதிகமான பால் உற்பத்தியைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள ஆர்.கே. பேட்டையில் பால் பண்ணை அமைப்பது மிகவும் அவசியம். ஏனென்றால், அங்குள்ள மூன்று ஒன்றியங்களிலும் மிக அதிகமான பால் சொசைட்டிகள் இருந்தாலும்கூட, அவர்கள் பால் கொள்முதல் செய்வதைத் தவிர்த்து வருகிறார்கள். அதனால், அங்குள்ள தனியார் அந்தப் பாலை கொள்முதல் செய்து, ஆந்திரா, சித்தூர், நகரி போன்ற இடங்களிலுள்ள தனியார் பால் பண்ணைகளுக்கு விற்பனை

செய்கிறார்கள். "Necessity is the mother of invention" என்று சொல்வார்கள். அதற்கேற்ப, ஆர்.கே. பேட்டையில் அதிகமாகப் பால் உற்பத்தி செய்யப்படுகின்ற காரணத்தால், அங்குள்ள மக்கள் வளம் பெறவும், உற்பத்தி செய்யப்படும் பாலை சரியாகப் பயன்படுத்தவும், கண்டிப்பாக அங்கு ஒரு கூட்டுறவுப் பால் பண்ணை அமைக்க வேண்டியது அவசியம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், அதில் உறுப்பினர்களாக இருக்கின்றவர்களிடமிருந்து, நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பாலைக் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறது. குறிப்பாக ஆர்.கே. பேட்டை ஒன்றியத்திலுள்ள சொசைட்டிகளிலும், திருத்தணி சட்டமன்றத் தொகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கின்ற பால் உற்பத்தியாளர்களிடமிருந்தும், பால் முழுவதுமாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற 2011 ஆம் ஆண்டிலிருந்து, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் மட்டும், அங்குள்ள ஒன்றியங்கள் மூலமாக கிட்டத்தட்ட 1 இலட்சத்து 25 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஆர்.கே. பேட்டை ஊராட்சியிலுள்ள கூட்டுறவுச் சங்கத்தில் மட்டும் நாளொன்றுக்கு 700 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. ஆர்.கே. பேட்டை ஒன்றியம் முழுவதும் நாளொன்றுக்கு 2,700 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆர்.கே. பேட்டை ஊராட்சியில், குறைந்தபட்சம் ஒரு BMC அதாவது Bulk Milk Cooler அமைப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது. 30,000 லிட்டர் அல்லது 40,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படும் இடங்களில் ஒரு chilling centre அமைக்கலாம். அதற்கு மேலும், பால் கொள்முதல் இருக்குமாயின், அதைப் பால் பண்ணையாக மாற்றக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. எனவே, இதையெல்லாம் ஆய்வுசெய்து, மாண்புமிகு இதய தெய்வம்

2015 செப்டம்பர் 29]

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பால் பண்ணை அமைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களில் எந்தெந்த மாவட்டங்களில் milk products உற்பத்தி செய்வதற்கான, அதாவது பால் சம்பந்தப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக பதவியேற்ற பிறகு, அம்பத்தூர் பால் பண்ணையில் பால் உப பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், கிட்டத்தட்ட 7,000 லிட்டர் பாலிலிருந்து பால் உப பொருட்கள் தயாரிக்கும் நிலை இருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, அம்பத்தூர் பால் பண்ணையில் மட்டும் தினந்தோறும், கிட்டத்தட்ட 10 மடங்கு அதிகமாக, அதாவது 7,000 லிட்டரிலிருந்து 75,000 லிட்டர் வரை, பால் உற்பத்தி உள்ளதால், அப்பாலிலிருந்து பால் உப பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் பணிகள் முடிவடையவுள்ளன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால், கூடியவிரைவில் அத்தொழிற்சாலை தொடங்கி வைக்கப்படவிருக்கிறது என்பதை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதியிலுள்ள வேளாங்கண்ணி, ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்ற மிகப்பெரிய சுற்றுலாத் தலமாகும். அங்கு ஆவின் பாலகம் நடத்துவதற்கு உரிமம் பெற்றவர், ஆவின் பாலகத்தை நடத்தாமல் இருக்கிறார். எனவே, அந்த ஆவின் பாலகத்தை செயல்படுத்துவதற்கும், கீழ்வேளூர் பகுதியில் மேலும் ஒரு ஆவின் பாலகம் அமைப்பதற்கும் மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாங்கண்ணியில் தற்போது ஆவின் பாலகம் செயல்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய மற்றொரு இடத்தில் ஆவின் பாலகம் அமைப்பதற்கு, நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 370, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

370—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***35954—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2015 செப்டம்பர் 29]

செய்யூர் தொகுதி, பெரியவெளிக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பெரியவெளிக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை அவர்கள் இன்னும் நிறைவு செய்யவில்லை. எனவே, அப்பள்ளியை, தற்போது உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

முற்பகல் 10—10

திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயிற்றுக்கு சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் என்ற யுகக்கவிஞன் பாரதியின் மணிவாசகத்தைத் திருவாசகமாக மதித்து பசித்தவருக்கெல்லாம் பால்சோறு படைக்கும் எங்கள் தமிழகத்தின் அன்னபூரணி அம்மா அவர்களே, பெண்கள் ஆண்களைச் சார்ந்திருக்கின்ற அடிமைத்தனத்தை அடியோடு சாய்க்கவும், வேரில் பழுத்த பலாவாய், குளிர் வடிகின்ற வட்ட நிலவாய் காலமெல்லாம் கண்ணீர் வடித்த பெண்குலத்தின் கண்ணீர் துடைக்க எண்ணிலா திட்டங்களைத்தீட்டி பெண்ணினத்தைக் கரைசேர்த்த எங்கள் பேரரசி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியவெளிக்காடு ஊராட்சியிலே உள்ள நடுநிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லவேண்டும் என்று சொன்னால் 10 கி.மீ. தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. அதனால் இந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

[2015 செப்டம்பர் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியவெளிக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு 3 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. எனினும் இந்நிலம் முதன்மைக் கல்வி அலுவலர் பெயருக்கு இன்னமும் மாற்றம் செய்யப்படவில்லை. இப்பள்ளியில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை மொத்தம் 125 ஆகும். இதில் எட்டாம் வகுப்பில் தற்போது 27 மாணவர்கள் மட்டுமே கல்வி பயின்று வருகின்றார்கள். அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமானால், எட்டாம் வகுப்பில் 70 மாணாக்கர்களாவது படிக்கக்கூடிய நிலைமை இருக்கவேண்டும். இப்பள்ளியில் ஒரு தலைமை ஆசிரியர், மூன்று பட்டதாரி ஆசிரியர்கள், இரண்டு இடைநிலை ஆசிரியர்கள் என மொத்தம் ஆறு ஆசிரியர்கள் தற்போது பணியாற்றி வருகிறார்கள். அதாவது 1:21 என்ற விகிதத்திலே ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள். உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான பொதுமக்கள் பங்களிப்புத் தொகையான ரூபாய் ஒரு இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோருவதால் இப்பள்ளிக்குச் சொந்தமான நிலம் காஞ்சிபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்படவேண்டும். இப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை குறிப்பாக எட்டாம் வகுப்பில் அதிகரிக்கும்பட்சத்தில் அரசின் நிபந்தனைகளைக் கருத்தில்கொண்டு தேவைக்கேற்ப மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.*

2015 செப்டம்பர் 29]

திரு. வி.எஸ். இராஜி: முதல் தலைமுறை பட்டதாரியின் கல்விக் கட்டணத்தை அரசே ஏற்கும் என்று அறிவித்ததன்மூலம் குடும்பத்திற்கு ஒரு பட்டதாரியை உருவாக்க வகை செய்து ஏழேழு தலைமுறையும் என்றென்றும் நினைத்துப் பார்க்கும் சாதனை புரிந்த சகாப்தமே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். பெரியவெளிக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டி அதற்குரிய பொதுமக்கள் பங்குத் தொகைக் கட்டணம் 2013 ஆம் ஆண்டே செலுத்தப்பட்டுள்ளது. அப்பள்ளியைத் தரமுயர்த்தத் தேவையான இட வசதியும் அங்கே இருக்கிறது. அதேபோன்று, அந்த ஊராட்சியைச் சுற்றி 8 நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் 10 கி.மீ. தூரம் சென்றுதான் உயர் கல்வி பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு இப்பிரச்சினையைக் கொண்டு சென்று, அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பள்ளிக்குச் சொந்தமான இடத்தை உடனடியாக மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பெயரிலே இடம் மாற்றுவதற்குத் தேவையான முயற்சிகளை எடுத்துக்கொள்ளும்பட்சத்திலே, விரைவிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை எடுத்துச் செல்லப்பட்டு, அப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

[2015 செப்டம்பர் 29

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதி ஆனைமலை ஒன்றியம் பெரியபோது அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான முறையில் அரசு அறிவித்திருக்கக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு பொதுமக்களின் பங்குத் தொகையான இரண்டு இலட்சம் ரூபாய் அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது. ஐந்து ஏக்கர் நிலம் உள்ளது. ஏற்கெனவே அப்பள்ளியைத் தரம் உயர்த்தவேண்டும் என்பதை வலியுறுத்தி proposal ஒன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரியபோது உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதி ஆனைமலை ஒன்றியம் பெரியபோது அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான பொதுமக்கள் பங்குத் தொகையாகிய இரண்டு இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. இடவசதி இருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கின்றார்கள். அந்தப் பள்ளியிலே பத்தாம் வகுப்பிலே பயிலக்கூடிய மாணாக்கர்களின் எண்ணிக்கை குறைந்தது, 100 ஆக இருக்கவேண்டும். அதேபோன்று, அந்தப் பள்ளியிலிருந்து 8 கி.மீ. தூரத்திற்கு மேல்நிலைப் பள்ளிகள் எதுவும் இருக்கக்கூடாது. தரமுயர்த்தக் கோரும் பள்ளி அமைந்துள்ள பகுதி மலைப் பகுதியாக இருந்தால், அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். மலைப் பகுதியிலுள்ள பள்ளிகளுக்குப் பல்வேறு சலுகைகளை எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கிக்கொண்டிருக்கின்றது. அதன் அடிப்படையில் ஆய்வு செய்து, பெரியபோது உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதியில் சிட்லிங் உயர்நிலைப் பள்ளி, ஏறக்குறைய 8 ஆண்டுக் காலமாக நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அந்த உயர்நிலைப் பள்ளியில் படித்த மாணவர்கள் அனைவரும் பழங்குடியின மாணவர்கள். அவர்கள், மேல்நிலைப் பள்ளிக்குச் செல்லவேண்டும் என்றால், 14 கி.மீ. தூரத்திலுள்ள சேலம் மாவட்டம், தும்பலுக்கோ அல்லது 12 கி.மீ. தூரத்திலுள்ள கோட்டப்பட்டிக்கோதான் செல்லவேண்டும். இதனால் அப்பகுதி மாணவர்களின் உயர் கல்வி பாதிக்கப்பட்டு, அவர்களுக்கு உயர்நிலைக் கல்வியே கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே சிட்லிங் உயர்நிலைப் பள்ளியைத் தரமுயர்த்துவதற்கான கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கல்வி ஆண்டிலாவது சிட்லிங் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவார்களா? அதேநேரத்தில் அரூர் மாவட்டத்தைத் தனிக் கல்வி மாவட்டமாக அறிவிப்பதற்கு அரசின் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதாக அறிகிறேன். இந்தக் கல்வியாண்டிலாவது, அரூரைத் தனிக் கல்வி மாவட்டமாக அறிவிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டது, உயர்நிலைப் பள்ளியா? அல்லது மேல்நிலைப் பள்ளியா? என்ன கேட்டீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் பகுதியிலிருக்கக்கூடிய சிட்லிங் உயர்நிலைப் பள்ளியானது, +2 வரை மாணவர்கள் பயிலக்கூடிய வகையில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்றால், குறைந்தது 100 மாணவர்கள் 10 ஆம் வகுப்பில் படிக்கக்கூடிய நிலை உருவாகவேண்டும். ஏனென்றால், கடந்த ஆட்சியில் மேல்நிலைப் பள்ளிக்கு வெறும் 5 ஆசிரியர் பெருமக்களை மட்டும் வழங்கிக்கொண்டிருந்தார்கள். அந்த நிலையை மாற்றி, மாண்புமிகு அம்மா அவர்கள், இன்றைக்கு 9 முதுகலை ஆசிரியர்கள் 1 தலைமை ஆசிரியர் என 10 ஆசிரியர்களை நியமிக்கின்றார்கள். எனவே, அதற்கேற்றவாறு மாணவர்களின் எண்ணிக்கையும் கூடுதலாக இருக்க வேண்டும். மேலும் தரமுயர்த்தக்கூடிய பள்ளியிலிருந்து 8 கிலோ மீட்டருக்கு எந்தப் பள்ளியும் இருக்கக்கூடாது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால், நீங்கள் சொல்லும் பகுதி, மலைவாழ் மக்கள் இருக்கக்கூடிய பகுதி, பின்தங்கிய பகுதி என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இருந்தாலும்கூட, ஒரு பள்ளியைத் தரம் உயர்த்தும்போது மாணவர்களின் எண்ணிக்கை 100 இல்லாவிட்டாலும் குறைந்தது 70 ஆகவாவது இருந்தால், அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. கூடுதல் செலவினத்தின் காரணமாக இப்படிப்பட்ட நிபந்தனைகளையெல்லாம் முன்வைத்துதான் மேல்நிலைப் பள்ளிகள் உருவாக்கப்படுகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த சிட்லிங் உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துவது குறித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, சிட்லிங் பள்ளிக்கு அருகிலிருக்கக்கூடிய பிற பள்ளிகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, தேவையான ஆய்வுகளை மேற்கொண்டு, அப்பள்ளியைத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி, கொட்டையூர் நடுநிலைப் பள்ளி, கொற்கை நடுநிலைப் பள்ளி, அகூர் நடுநிலைப் பள்ளி மற்றும் பழவாத்தாங்கட்டளை நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு 2014–2015 ஆம் ஆண்டில் முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

குறிப்பாக கொட்டையூர், கொற்கை மற்றும் அகூர் ஆகிய 3 நடுநிலைப் பள்ளிகளுக்கும் public contribution அதாவது, பொதுமக்களின் பங்குத் தொகையான தலா ஒரு இலட்சம் வீதம் அதாவது, மொத்தம் ரூ.3.00 இலட்சம் கட்டப்பட்டுவிட்டன. அதிலும் குறிப்பாக, கொட்டையூர் அரசுப் பள்ளியில் படித்து தற்போது சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தின் தாளாளராக இருக்கிற உயர்திரு சேதுராமன் அவர்கள், தான் படித்தப் பள்ளிக்கு நன்றி பாராட்டும்வகையில், தானாக முன்வந்து, தாராளமாக 1½ கோடி ரூபாய் மதிப்பீட்டில் இலவசமாக வகுப்பறைக் கட்டடங்களைக் கட்டித் தந்துள்ளார்கள். எனவே அரசின் சார்பில், அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொட்டையூர், கொற்கை, அகூர் மற்றும் பழவாத்தாங்கட்டளை ஆகிய நடுநிலைப் பள்ளிகளை மனமுவந்து உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பள்ளிக்கும் மற்ற பள்ளிக்கும் 5 கி.மீ. இடைவெளி இருக்கவேண்டும். 5 ஆம் வகுப்பில் குறைந்தது 70 மாணாக்கர்கள் படித்துக்கொண்டிருக்கவேண்டும். நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த 8 ஆம் வகுப்பில் 70 மாணாக்கர்கள் படித்துக்கொண்டிருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால்தான் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வாய்ப்பு ஏற்படும். முதலில் மாணவர்களின் எண்ணிக்கையைப் போன்று, தரமுயர்த்த கோரப்படும் பள்ளியிலிருந்து 5 கி.மீ. தூரத்திற்கு வேறெந்த உயர்நிலைப் பள்ளியும் இருக்கக்கூடாது. இவையெல்லாவற்றையும் முன் நிறுத்திதான் நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகத் தரம்

உயர்த்தப்படுகிறது. நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, குறிப்பிட்ட அந்தப் பகுதி ஆய்வு செய்யப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் மேற்படி நடுநிலைப் பள்ளிகள் தரமுயர்த்தித் தரப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், கிராமப் பகுதி மக்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு பெரு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி ஒன்றியம், மைட்டான்பட்டி நடுநிலைப் பள்ளி மற்றும் டி.கல்லுப்பட்டி ஒன்றியம், சந்தையூர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவதற்கு கிராம மக்களுடைய பங்குத் தொகையான ரூ.1 இலட்சம் வீதம் ரூ.2 இலட்சத்தை அரசுக்குக் கட்டியிருக்கிறார்கள். அங்கே இட வசதி இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த இரண்டு நடுநிலைப் பள்ளிகளையும் இந்த ஆண்டே உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தித் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 810 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தி சாதனை புரிந்திருக்கிறது. அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக் கூடிய இந்த இரண்டு பள்ளிகளைப் பொறுத்தவரையில், நான் இதற்குமுன் குறிப்பிட்ட அதே பதில்தான் இந்தக் கேள்விக்கும் பொருந்தும். அதாவது, அந்தப் பள்ளியிலே படிக்கக்கூடிய*

மாணவர்களில் சுமார் 70 பேர், உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லக்கூடிய மாணவர்களாக இருக்கவேண்டும். அதேபோன்று இரண்டு பள்ளிகளுக்கும் இடையில் 5 கிலோ மீட்டர் தூரம் இடைவெளி இருக்கவேண்டும். அவ்வாறு இருக்கும்பட்சத்திலே, இடவசதிகளை ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையிலே அந்தப் பள்ளிகளைத் தரமுயர்த்துவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 371, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

371—

மாணவர் விடுதி

***1428—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணப்பாக்கம் உயர்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணப்பாக்கத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2015 செப்டம்பர் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று வாழ்ந்து சரித்திர சாதனை படைத்துவரும் தாயே! இந்தியாவிலேயே தொழில் உற்பத்தியில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, சுமார் ரூ.2,42,160 கோடிக்கு முதலீடுகளை ஈர்த்த சரித்திர தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களுக்குப் பாடப் புத்தகம், மடிக்கணினி, சீருடைகள், கல்வி உதவித் தொகை, கல்வி உபகரணப் பொருட்கள், காலணிகள் என அனைத்தையும் வழங்கி, கல்வியைத் தரும் எங்கள் மகா சரஸ்வதியே! தாயே, உம் தடம் பதிக்கும் பாதையில் தவம் கிடக்கும் எங்களின் வாழ்விற்கு ஆதாரமாய் விளங்கும் புண்ணியத் தீர்த்தமே, எங்கள் அம்மாவே! தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன் தாயே. கடவுளிடம் வரம் கேட்டால்கூட கிடைக்காது. ஆனால், எங்கள் குலதெய்வம் அம்மா அவர்கள் கேட்ட வரங்கள் அனைத்தையும் உடனுக்குடன் வாரி வழங்கும் கருணை தெய்வம். (மேசையைத் தட்டும் ஒலி)*

எனது உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் அனைத்துத் துறைகளின் மூலமாக பல நலத் திட்டங்களை அள்ளித் தந்து, கல்வித் துறையில் மாபெரும் புரட்சியைச் செய்து, கல்வியில் பின்தங்கியிருந்த உளுந்தூர்பேட்டையை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்ற எங்கள் அன்னையே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், சரவணப்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,000 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியைச் சுற்றியுள்ள பெரியசெவலை, அரும்பட்டு, மாதம்பட்டு, பருகம்பட்டு, கொரட்டூர், கொத்தனூர், ஆனைவாரி, இருந்தை, மடப்பட்டு, கருவேல்பாளையம், சின்ன ஆனைவாரி, கிரிமேடு, தடுத்தாட்கொண்டூர் ஆகிய கிராமங்களிலிருந்து நிறைய மாணவர்கள் இப்பள்ளியில் கல்வி பயின்று வருகிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, பரிசீலிக்கப்படுமென்று சொல்லியிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டிலேயே அங்கே

2015 செப்டம்பர் 29]

மாணவர் விடுதி அமைக்க ஆவன செய்வார்களா என்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, இந்த நிதியாண்டிலேயே நிதிநிலைமைக்கேற்ப, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

திரு. ஆர்.என். கிட்டுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உயர் கல்வியை உலக அளவிலே உயர்த்திக் காட்டிய உன்னதத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட பாரதியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி கடந்த 4 ஆண்டுகளாக சிறப்பான முறையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரியிலே 2,000 மாணவ, மாணவியர் படித்து

வருகின்றார்கள். அந்த மாணவர்களுடைய நலனைக் கருத்திலே கொண்டு, பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்றினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டிக் கொடுக்க முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது என்று குறிப்பிட்டு, பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டுசென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 372, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

372—

டயாலிசிஸ் சிகிச்சை

***14101—திரு. ம. கலை அரசு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டயாலிசிஸ் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்*

2015 செப்டம்பர் 29]

பணியில் மாண்பு கண்ட மாதவமே! மருத்துவத்தில் தமிழகத்தை மகத்துவமாக்கிய தன்வந்திரியே! (மேசையைத் தட்டும் ஒலி) நான்கு ஆண்டுகளில், மாநிலத்தை நாடு போற்றும் நானிலமாக்கிய நற்றமிழே! வில் எடுக்க வேண்டாம்; போர் தொடுக்க வேண்டாம்; வேரறுந்து விழுவார்கள் எதிரிகள். வில் எடுக்க வேண்டாம்; போர் தொடுக்க வேண்டாம்; வேரறுந்து விழுவார்கள் எதிரிகள். தங்களின் சேவைகளை உரக்கச் சொன்னாலே போதும்; எட்டுத் திக்கும், வெற்றி முழக்கம் கொட்டி ஒலிக்கும் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே, வேலூர், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் dialysis பிரிவு, 12-2-2005 முதல் அமைக்கப்பட்டு, சிறந்த முறையிலே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தே இரண்டு dialysis equipment-களை வாங்கிக் கொடுத்து, உதவி செய்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்பற்றிக் குறிப்பிட வேண்டுமென்றால், 'Amma is an epitome of political wisdom.' 'அம்மா' என்று சொன்னாலே, quality என்று அர்த்தம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய முதல்வர்களிலேயே, முதலான, தரமான முதல்வர் யாரென்று கேட்டால், மாண்புமிகு அம்மா அவர்கள்தான். தமிழ்நாட்டிலே Thanthai Periyar era என்று சொல்வார்கள்; Perarignar Anna era என்று சொல்வார்கள்; அதற்கடுத்து Puratchi Thalaivar M.G.R. era என்று சொல்வார்கள். ஆனால், now it is our Hon'ble and beloved Amma era என்றுதான் சொல்கிறார்கள். இப்பொழுது மட்டுமல்ல; வருகின்ற காலங்கள்கூட Amma era-தான். (மேசையைத் தட்டும் ஒலி)

[2015 செப்டம்பர் 29

நேற்றைக்கு அசாத்தியமாக இருந்தவற்றை, இன்றைக்குச் சாத்தியமாக்கும் வல்லமை பெற்றவர், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். ஈடு இணையற்ற மக்கள் நலத் திட்டங்களால், தமிழக மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் ஒரே தலைவி, ஒப்பற்றத் தலைவி, திராணிமிக்க தலைவி, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திற்கும் கிடைக்காத பெருமையாக, வரமாகத் திகழக்கூடியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய முதல்வர் காப்பீட்டுத் திட்டத்தினால், இன்றைக்குத் தமிழ்நாட்டில் மனிதர்களுடைய ஆயுட்காலம் கூடிக் கொண்டிருக்கிறது; இறப்பவர்களுடைய எண்ணிக்கை குறைந்து கொண்டிருக்கிறது. காரணம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய முதல்வர் காப்பீட்டுத் திட்டம். அப்படிப்பட்ட ஒரு உன்னதமான திட்டத்தை இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்களுக்கு அளித்திருக்கிறார்கள்.

அந்த வகையில், வேலூர், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, இன்றைக்குப் பசுமை வளாகமாக, பலராலும் பாராட்டப்படுகின்ற மருத்துவமனையாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அங்கேயிருக்கக்கூடிய குழந்தைகள் நல மருத்துவ மையம் சிறப்பாகச் செயல்பட்டு, அதுவொரு role model hospital-ஆகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அனைவரும் மகிழ்ச்சி அடையக்கூடிய வகையில், மருத்துவர்கள் சிறப்பான சிகிச்சைகளை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல, கடந்த பிப்ரவரி மாதம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு dialysis கருவிகளும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. கலை அரசு, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ம. கலை அரசு: கேள்விதான் இது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் விரிவாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்களே? கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ம. கலை அரசு: எனது தொகுதி மேம்பாட்டு நிதியின் பங்களிப்போடு, மூன்று dialysis கருவிகள் வாங்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மாவட்டங்களிலேயே மிகப் பெரிய

2015 செப்டம்பர் 29]

மாவட்டம் வேலூர் மாவட்டம். 40 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட மாவட்டம்; 13 தொகுதிகளை உள்ளடக்கிய மாவட்டம். பொதுவாக, dialysis-க்குப்பிறகு, தேவைப்பட்டால், மாற்று அறுவை சிகிச்சை செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும். எனவே, அந்த மாவட்ட மக்களுடைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அங்கே மாற்று அறுவை சிகிச்சை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அங்கே Cath Lab தேவைப்படுகிறது. இன்றைக்கு மாறி வரக்கூடிய சூழ்நிலையில், மனிதனுடைய வாழ்வாதாரத்தினால், மக்கள் பல்வேறு வகையில், பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகி வருகிறார்கள். அவர்களுடைய இதய நோயை குணப்படுத்துகின்ற வகையில், ஒரு Cath Lab-ஐ அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வேலூரில் இன்றைக்குத் தண்ணீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, மருத்துவமனைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுவது தண்ணீர். வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தை மருத்துவமனை வரையில் செயல்படுத்துமாறு பணிவோடு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான கூடலூரில் 2 வட்டத் தலைமை மருத்துவமனைகள் உள்ளன. அவற்றில் முதுநிலை பட்டதாரி மருத்துவர் ஒருவர்கூட இல்லை. எம்.பி.பி.எஸ். பட்டதாரி மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர். இதனால், எதற்கெடுத்தாலும் ஊட்டியில் உள்ள மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்துகிறார்கள். இதனால் ஏழை, எளிய மக்கள் 50 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதால், அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதுநிலை பட்டதாரி

[2015 செப்டம்பர் 29

மருத்துவர்களை கடலூர் மருத்துவமனையில் நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், நீலகிரி மாவட்ட மருத்துவமனைக்சென்று மகப்பேறு மருத்துவர் ஒருவர்கூட இல்லை. இதையும் கருத்தில்கொண்டு, மேற்படி மருத்துவமனையில் சிறப்பு மருத்துவர்களை நியமிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதுநிலை பட்டதாரி மருத்துவர் நியமனம் பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், கடந்த ஆண்டு முதுநிலை பட்டதாரி மருத்துவர்களுக்கான "walk–in selection" என்ற முறை கொண்டுவரப்பட்டது. எம்.பி.பி.எஸ். முடித்து, எம்.டி., எம்.எஸ். படித்த மருத்துவர்கள் நேரடியாக online–ல் விண்ணப்பித்தால், அவர்களுக்கு எந்தவிதமான எழுத்துத் தேர்வோ, நேர்முகத் தேர்வோ இல்லாமல், உடனடியாக அவர்களுக்கு அரசு வேலை வழங்கக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டில், ஆறு மாதத்திற்குள்ளாகவே 452 சிறப்பு மருத்துவர்கள் பணியில் சேர்ந்துள்ளனர். இப்பொழுது மீண்டும் அதற்கான notification செய்யப்பட்டுள்ளது. சிறப்பு மருத்துவர்களைப் பொறுத்தவரையில், அரசு அவர்களை ஊக்குவித்து, குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்துள்ள மலைவாழ் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் பணியில் சேரக்கூடியவர்களுக்கு சிறப்புச் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. நானும் நேரடியாகத் தங்கள் பகுதியில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளுக்கு இரண்டு முறை வருகை தந்திருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் தங்கள் மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளுக்கு 3 சி.டி. ஸ்கேன் மற்றும் ஒரு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மனமுவந்து வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், மகப்பேறு மருத்துவர்களை அந்த மாவட்டத்திற்கு நியமிப்பதற்காக வேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தங்கள் பகுதியிலும் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டயாலிசிஸ் வசதி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் இருக்கின்றதா? இல்லையென்றால் அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் டயாலிசிஸ் வசதி செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னரே சொன்னதுபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், மருத்துவ சேவையை மகத்தான சேவையாக விரைவுபடுத்தி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க, அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் டயாலிசிஸ் பிரிவு ஏற்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 2.3 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக ஒதுக்கி, கருவிகள் அமைக்கப்பட்டு, சிறப்பு சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. செய்யாறு, விருதுநகர், வாலாஜா, பெரியகுளம் ஆகிய 4 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் சிறப்பாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அதேபோல, அனைத்து மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் இந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள் ஏற்கெனவே மாற்று அறுவை சிகிச்சை வசதி வேலூர் மாவட்டத்திற்கு செய்துதரப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், சென்னையில் மட்டுமே மாற்று அறுவை சிகிச்சை வசதி இருந்த நிலையை மாற்றி, இப்பொழுது முதன் முதலாக தஞ்சாவூர் மாவட்ட மருத்துவமனைக்கு அதற்கான அனுமதியை வழங்கி, அங்கு முதன் முதலாக சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது.

வேலூருக்கும் மாற்று அறுவை சிகிச்சை வசதிக்கான கருத்துரு பெறப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் தினசரி 9,000 வெளி நோயாளிகளும், 3,000 உள் நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றார்கள். மேலும், வெளி நோயாளிகளும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுத்துக்கொள்ள வருகிறார்கள். எனவே, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு மேலும் ஒரு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். மேலும், எம்.ஆர்.ஐ. ஸ்கேன், சிடி. ஸ்கேன் மற்றும் x-ray கருவி உட்பட அனைத்தையும் ஒரே கட்டடத்தில் அமைத்தால் பொதுமக்களுக்கும், நோயாளிகளுக்கும் வசதியாக இருக்கும்.*

அதேபோன்று, பார்வையாளர்களுக்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தை நிர்ணயம் செய்து, ஒழுங்குபடுத்தப்பட்டால், நிச்சயமாக அங்கு நெருக்கடியைப் போக்க உதவியாக இருக்கும். எனவே, இதுபோன்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—35

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அடுத்தபடியாக, மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தென் தமிழகப் பகுதியில் உள்ள மக்களுக்கு எல்லாம் ஒரு வரப்பிரசாதமாக இருந்து மருத்துவ சேவையை ஆற்றி வருகின்றது. சென்னை, மருத்துவக் கல்லூரியில் நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்ட M.R.I.Scan வழங்கப்பட்டிருக்கின்றது. மதுரையிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட வசதிகளை,*

நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப ஏற்படுத்தித் தர அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பார்வையாளர்களின் நேரத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாக அரசு மருத்துவமனைகளில் பார்வையாளர்களின் நேரம் மாலை 4 மணி முதல் 6 மணி வரை ஆகும். அதனைத் தற்போது நாங்கள் முறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். உறவினர்கள் அவசரமாக நோயாளிகளைப் பார்க்க வேண்டுமென்று கேட்கும்போது, சிறப்பு அனுமதியாக அவர்களைப் பார்க்க அனுமதி வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு நல்ல கட்டடங்களும், வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பல்வேறு வசதிகளை நானும் அங்கு செய்து கொடுத்திருக்கின்றேன். இருந்தாலும்கூட, மருத்துவர்கள் தற்போது அங்கு குறைவாக இருக்கின்ற காரணத்தினால், நோயாளிகள் அவதிப்படுகிறார்கள். இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் நான் நேரில் தெரிவித்திருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை ஆய்வுசெய்து மருத்துவர்கள் பற்றாக்குறையைத் தீர்த்து வைப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரலாற்றுச் சிறப்பு நிகழ்வாக மருத்துவர்கள் நியமனத்திற்கு என, M.R.B. என்று சொல்லக்கூடிய Medical Services Recruitment Board என்று தனியாக ஒரு வாரியத்தை உருவாக்கி, அதன்மூலம் இதுவரை 9,584 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இப்போது ஆரம்ப சுகாதார நிலையத்திலும், தாலுகா மற்றும் தாலுகா அல்லாத

மருத்துவமனைகளில், மருத்துவர்கள் இல்லாத நிலையை போக்கிட, 191 மருத்துவர்கள் இந்த வாரம் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பட்டுக்கோட்டையிலும் மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 373, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

373—

மின் மாற்றி

***59808—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, புளியமங்கலம் ஊராட்சி, புளியமங்கலம் கிராமத்தில் கூடுதல் மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், புளியமங்கலம் ஊராட்சி, புளியமங்கலம் கிராமத்தில் நான்கு 100 கே.வி.ஏ. திறன்கொண்ட புளியமங்கலம் எஸ்.எஸ். 1, 2, 3 மற்றும் 4 ஆகிய மின் மாற்றிகளின் வழியாக சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில்கொண்டு, புளியமங்கலம் கிராமத்திற்குக் கூடுதலாக 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றி ஒன்றினை அமைத்திட 2.8 இலட்சம் ரூபாயில், மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அப்பணிகள் இன்னும் ஒரு

2015 செப்டம்பர் 29]

மாதக் காலத்திற்குள் முடிவடையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் மின் வெட்டு மாநிலமாக இருந்த தமிழகத்தை, மின் மிகு மாநிலமாக்குவேன் என்ற வாக்குறுதியைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) மின் வெட்டே இல்லாத மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்கி, தமிழ்நாடு மின்சாரத் துறையை தலை நிமிரச் செய்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

நானூறு ஆண்டுகளானாலும் செய்ய முடியாததை, இந்த நான்கே ஆண்டுகளில் செய்து காட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அரக்கோணம் நகருக்குத் தனியாக 8 கோடி ரூபாயில் ஒரு துணை மின் நிலையம், இச்சிப்புத்தூரில் 12 கோடி ரூபாயில் ஒரு புதிய துணை மின் நிலையம், நெமிலி புன்னையில் 33 கே.வி.ஏ.-வில் உள்ள துணை மின் நிலையத்தை 14 கோடி ரூபாயில் 110 கே.வி.ஏ.-யாகத் தரம் உயர்த்தி, இதுவரை இல்லாத அளவில் மின் துறைக்கு மட்டும் 34 கோடி ரூபாயை அரக்கோணம் தொகுதி மக்களுக்கு வாரி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அரக்கோணம் தொகுதி மக்களின் சார்பில் கோடானுகோடி நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட புளியமங்கலம் கிராமத்திற்கு கூடுதலாக ஒரு 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றியை அமைத்துத் தருவதாக நல்ல பதிலைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அந்தப் பகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட மோசூரில் உள்ள 110 கே.வி.ஏ. துணை மின் நிலையத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு மின்சாரம் செல்கிறது. மின்சாரம் செல்கின்ற அந்த மின் பாதை 20 கிலோ மீட்டர் தூரம் உள்ளதால்,

மழைக் காலங்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு மின் தடை ஏற்படுகிறது. அதனால், எனது தொகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, திருவாலங்காடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு தனியாக ஒரு துணை மின் நிலையம் அமைத்து, எனது தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, வேலூர் மாவட்டத்திலே, 12–வது ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில், 15 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டு, அதில் 9 துணை மின் நிலையங்களுக்கான பணிகள் முடிக்கப்பட்டு, இப்போது பயன்பாட்டில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதம் இருக்கின்ற ஆறு துணை மின் நிலையங்களிலும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இவை தவிர, வேலூர் மாவட்டத்திலே எந்தெந்த இடங்களிலே, புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமோ அந்த இடங்கள் எல்லாம் கண்டறியப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இவைதவிர மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதியதாக ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற அந்தப் பகுதியிலே உரிய ஆய்வுகள் மேற்கொண்டு அங்கே இருக்கின்ற மின் பளுவையும் கணக்கில்கொண்டு தேவை ஏற்படின் அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 374, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2015 செப்டம்பர் 29]

374—

சாலையை அகலப்படுத்துதல்

***48037—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, தக்கலை உபகோட்டம், மேக்காமண்டபம்—தக்கலை நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை உபகோட்டம், மேக்காமண்டபம்—தக்கலை நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட பத்மநாபபுரம்—மேக்காமண்டபம் சாலை 4.7 கி.மீ. தூரம் போக்குவரத்து நெருக்கடிமிக்க சாலையாகும். இந்தச் சாலையில் அதிக அளவில் பேருந்துகளும், கனரக வாகனங்களும் இயங்கி வருகின்றன. அடிக்கடி விபத்துகளும் ஏற்பட்டு வருகின்றன. இந்தச் சாலை தற்பொழுது மாவட்ட இதர சாலை அதாவது ODR சாலையாக இருந்து வருகிறது. குமரி மாவட்டம், நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளரிடமிருந்து சாலையை அகலப்படுத்துவதற்கான அறிக்கை நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனவே, மேற்படி ODR சாலையை MDR சாலையாக அறிவித்து*

அதற்கான வடிகாலும் அமைத்து சாலையை அகலப்படுத்தித் தர மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை உபகோட்டத்தில் மேக்காமண்டபம்–தக்கலை சாலையானது பத்மநாபபுரம்–மேக்காமண்டபம் சாலை 4.7 கி.மீ. நீளமுடைய மாவட்ட இதர சாலையாகும். இச்சாலை ஒரு வழித்தட அகலம் கொண்ட தார்ச் சாலையாகும். இச்சாலையில் தற்பொழுது போக்குவரத்து செறிவு 2000–க்கும் குறைவாக உள்ளதால் சாலையினை அகலப்படுத்துவதற்கு தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், போக்குவரத்து செறிவு அதிகரிக்கும்பொழுது அகலப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் நகராட்சி மற்றும் மூன்று பேரூராட்சிகள் உட்பட பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி வருகின்ற இச்சாலையை அகலப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன் எனது தொகுதியில் மிகவும் பழுதடைந்து, குண்டும் குழியுமாக காணப்படும் குமாரபுரம்–பெருஞ்சிலம்பு சாலையை சீரமைக்க ரூ.175 இலட்சமும் குலசேகரம்–திருவெறும்பூர் சாலையை சரிசெய்ய ரூ.170 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்து ஆறு மாதங்களாகியும் இதுவரையில் எந்தப் பணியும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, இப்பகுதி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு அந்த இரண்டு சாலைகளையும் சீரமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய நான்காண்டு கால ஆட்சியிலே 63.60 கி.மீ. நீள சாலைகள் ரூ.21.72 கோடி செலவில் அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அத்துடன் 2015–2016 ஆம் ஆண்டு CRIDP திட்டத்தின் மூலமாக 21 கி.மீ. நீளமுடைய சாலைகள் 13 கோடி ரூபாய் செலவில் சீரமைப்பதற்காக Tender விட இருக்கின்றார்கள். அதேபோல, மத்திய சாலை நிதியிலிருந்து அதாவது CRF நிதியிலிருந்து 51 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 23 கோடி ரூபாய் செலவிலே அங்கே பணிகள் மேற்கொள்வதற்காக மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு சாலைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மழைக்காலமாக இருக்கின்ற காரணத்தினாலே, மழைக்காலத்தில் போடப்படுகின்ற சாலைகள் சரியாக அமையாத காரணத்தினாலேதான் இந்த காலகட்டத்தில் சாலை அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. இருப்பினும் விரைந்து அந்தச் சாலைகளை அமைப்பதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 375, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

375—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***46759—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 29

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.*

திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையினுடைய இனிய இறுதி நாளிலே எனக்கும் இந்தப் பேரவையிலே வினா எழுப்ப வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சார்ந்திருக்கிற விக்கிரவாண்டி தொகுதி கிராமப்புறங்களை மட்டுமே கொண்டிருக்கிற மிகவும் பின்தங்கிய தொகுதி. தொழில்களோ, தொழிற்சாலைகளோ எதுவும் இல்லாத ஒரு பகுதி. கிராமப்புறங்களிலே இருக்கிற, சாதாரண, அடித்தட்டிலே இருக்கிற மக்கள்தான் அங்கே வசிக்கிறார்கள். அங்கே இருக்கிற அனைத்து கல்லூரிகளும் தனியார் கைவசம் இருக்கிற காரணத்தால் கல்விக் கட்டணம் செலுத்த முடியாத சூழ்நிலையிலே, வறுமையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் கவலையோடு ஒரு விஷயத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தச் சூழ்நிலையிலே என்னுடைய தொகுதிக்கு ஒரு மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று நான் ஒரு வேண்டுகோள் வைத்தேன். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மூன்றாவது முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றபின்னால் தமிழ்நாட்டிலே எத்தனை அரசு கலை மற்றும் அறிவியல்*

கல்லூரிகள், ஏற்படுத்தப்பட்டன என்று ஒரு மிகப் பெரிய பட்டியலிட்டார். எங்களுக்கெல்லாம் மெத்த சந்தோஷம். ஆனால், அறிவித்த கல்லூரிகளில் ஒரு கல்லூரிகூட என்னுடைய தொகுதியில் இல்லையென்ற காரணத்தால் என்னுடைய மகிழ்ச்சி நிறைவு பெறவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் அழுத்தமாக வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவேதான், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்க எனது தொகுதி பொருத்தமானதாக இல்லையென்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நினைத்தால், குறைந்தபட்சம் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றையாவது நீங்கள் அமைத்துத் தர வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அமைத்துத் தர வேண்டுமென்பதுகூட பொருத்தமான வார்த்தையாக இருக்காது. அமைத்துத் தர உதவ முன்வருவார்களா என்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களது பகுதிக்கு ஒரு கல்லூரிகூட அறிவிக்கப்படாதது வருத்தமாக இருக்கிறது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்திய வரலாற்றிலே இல்லாத அளவிற்கு கடந்த நான்காண்டுகளில் மட்டும் 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தந்து இந்த நாட்டுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு சேர்த்து 53 கல்லூரிகளை நான்காண்டுகளில் நிறுவிய ஒரே ஒரு முதல்வர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். மாண்புமிகு அம்மா அவர்கள் கிராமப்புறங்களில் ஏழையெளியவர்கள் பயன்பெறவேண்டும் என்ற எண்ணத்தோடும் அவர்களுக்கு உயர் கல்வி கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும் தான் கடந்த நான்காண்டுகளில் 53 கல்லூரிகளை நிறுவியிருக்கிறார்கள். அந்தவகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் இதுபோன்ற உயர் கல்விக்கான உன்னதத் திட்டங்களைத் தந்ததன் காரணமாகத்தான் உயர் கல்வி பெறுவோரின் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே தமிழகம்

முதலிடத்தில் உள்ளது. 42.8 சதவிகிதத்தை அடைந்தது என்று சொன்னால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலத்தான் மாணவர்கள் பயில எதுவாக இன்றைக்கு 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தந்து, அந்த 11 கல்லூரிகளுக்கும் 172 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்து கட்டடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, எந்தெந்தத் தொகுதி என்று பாராமல் எந்த இடத்தில் கல்லூரி வேண்டுமோ, அந்த இடத்தில் மாண்புமிகு அம்மா அவர்களால் தேவைக்கேற்ப, மாணவர்களுடைய எண்ணிக்கைக்கேற்ப கல்லூரிகள் துவங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தாங்கள் சார்ந்திருக்கிற பகுதியில் 10 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. உங்கள் மாவட்டத்தில் ஏற்கெனவே அரகண்டநல்லூர், சங்கராபுரம் போன்ற பகுதிகளில் 2 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அங்கே மாணவர்கள் படிப்பதற்குத் தேவையான இடங்களும் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியில் எதிர்காலத்தில் தேவைக்கேற்ப, நிதிநிலைக்கேற்ப பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்து, உரையை முடியுங்கள்.*

திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் நீண்ட விளக்கத்திற்கு நன்றி. ஆனால், என்னுடைய கோரிக்கைகள் நிறைவேறவில்லை என்ற வருத்தமும் எனக்கு நீடிக்கிறது. நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று பலவகை தொழில்நுட்பக் கல்லூரி நிச்சயமாக என்னுடைய தொகுதியில் அமையுமென்ற நம்பிக்கையோடு நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருத்தம் என்ற ஒரு வார்த்தை வேண்டாம். பொதுவாக தமிழகத்தினுடைய மாணவர்களுடைய உயர் கல்வியை பூர்த்தி செய்கிறவகையில் மகிழ்ச்சியோடு வரலாற்று சாதனையாக மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற திட்டங்களைத் தொடங்கி வருகிறார்கள். ஆகவே, எதிர்காலத்தில் தாங்கள் சொன்னதைப்போல, தங்களது கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்ப, அங்கே தேவையான இடம் இருப்பின் அங்கே பலவகை தொழில்நுட்ப கல்லூரி தொடங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

முற்பகல் 10–50

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் நிறைந்த, வேலைவாய்ப்புகள் நிறைந்த விருதுநகர் மாவட்டத்தில் இதுவரை தமிழக அரசின் பாலிடெக்னிக் எதுவுமே அமைக்கப்படவில்லை. குறிப்பாக, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலமாக பெருமளவில் எரிசக்தித் துறையில் முதலீடுகள் தென் தமிழகத்தில் வர இருக்கும் இந்தச் சூழ்நிலையில், Solar technology, Transmission technology உள்ளிட்ட நவயுக தொழில்நுட்பத் துறைகள் உள்ளடங்கிய, திறன் வளர்த்தல் உள்ளடங்கிய, ஒரு Government polytechnic–ஐ விருதுநகர் தொகுதியில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை வழங்கியிருக்கிறார்கள். எந்த மாவட்டத்திற்கும் வழங்கப்படாத

சலுகையாக விருதுநகர் மாவட்டத்திற்கு, 4 ஆண்டுகளில், 4 கல்லூரிகளை வழங்கிய பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக்காட்டிய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும் தங்கள் தொகுதிக்கு வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்த வகையில், அது மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 376, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

376—

பகுதிநேர நியாய விலைக் கடை

***43765—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, பூசலாங்குடி ஊராட்சியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; நான் வணங்குகிற தெய்வம், என்னை வாழவைக்கும் தெய்வம், எங்கள் குல தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

திருத்துறைப்பூண்டி தொகுதி, பூசலாங்குடி ஊராட்சி, பூசலாங்குடி பகுதியில் 232 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதால், அதே பகுதியில்

2015 செப்டம்பர் 29]

மேலும் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, பூசலாங்குடியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போதிய கார்டுகள் இல்லை என்று சொல்கிறார்கள். பூசலாங்குடியைச் சேர்ந்த அகரவயல், தூத்தடிமுளை ஆகிய இரண்டு கிராமங்களைச் சார்ந்த கிட்டத்தட்ட 150 கார்டுகள் இராயநல்லூர் நியாய விலைக் கடையில் இருக்கின்றன. கடந்த காலங்களில் அடப்பாற்றில் தட்டிப் பாலம் இருந்த காரணத்தினாலே, அந்த தூத்தடிமுளை, அகரவயல் ஆகிய கிராமங்களிலிருந்து பூசலாங்குடிக்கு வர முடியாத சூழ்நிலையில் மேற்படி கிராமங்களின் குடும்ப அட்டைகள் இராயநல்லூர் நியாய விலைக் கடையில் சேர்க்கப்பட்டன. அந்தக் கார்டுகளைப் பிரித்து, பூசலாங்குடியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தங்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் நடத்தும் பூசலாங்குடி முழுநேர நியாய விலைக் கடையில், முன்னியூர் கிராமத்திலிருந்து 21 குடும்ப அட்டைகளும், புஞ்சையூர் கிராமத்திலிருந்து 103 அட்டைகளும், பூசலாங்குடி கிராமத்திலுள்ள 108 குடும்ப அட்டைகளும் சேர்த்து, 232 குடும்ப அட்டைகளுடன் முழுநேர அங்காடி செயல்பட்டு வருகிறது. இதுவே மிகவும் குறைந்த அளவு குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 232 குடும்ப அட்டைகளுடன் இயங்கிவரும் பூசலாங்குடி முழுநேர நியாய விலை அங்காடியிலிருந்து கார்டுகளைப் பிரித்து பகுதிநேர

அங்காடி அமைக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் கிராமங்கள் பூசலாங்குடியிலிருந்து அரை கிலோ மீட்டர் சுற்றளவுக்குள்ளாகவே இருக்கின்றன. எனவே, விதிமுறைகளின்படி எந்த நிபந்தனைகளும் பூர்த்தியாகவில்லை என்பதனால், பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 377, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

377—

போக்குவரத்துப் பணிமனை

***3529—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

ஒரு பணிமனை அமைக்கப்பட வேண்டுமென்றால், குறைந்தது 50 பேருந்துகள் இருக்க வேண்டும். போச்சம்பள்ளியில் தற்போது 17 பேருந்துகள்தான் இருக்கின்றன. பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்பட்சத்தில், பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த முடியும். பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பணிமனை அமைப்பது பற்றி பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

முற்பகல் 10—55

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் தந்த அருட்கொடையே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) காலம் தந்த கருணைக் கடலே எங்கள் அம்மா, புண்ணிய பூமியில் புவியாளப் பிறந்த பூவினம் பெற்ற புரட்சித் தாய் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அன்னைத் தமிழ்த்தாயின் அருந்தவப் புதல்வியே எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) நம் தாய்த் திருநாட்டின் தனிப் பெரும் தலைவியே எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தருமத்தாயின் தலைமகளாம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தைக் காத்த காவியத் தலைவியே எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) களம் பல கண்டு வெற்றிகள் பல ஏந்தி . . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அன்னைத் தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வியே எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா தங்கள் பொற்பாதம் பணிகிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போச்சம்பள்ளியில் ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தர மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மேலும், சேலம், திருப்பத்தூர், வாணியம்பாடி சாலை என்பது நீண்டநெடிய காலமாக இருவழிச் சாலையாகவே இருந்து வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, உரையை சுருக்கமாக முடியுங்கள்.

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போச்சம்பள்ளியில் ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் வெறும் 10 பணிமனைகள் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆண்ட இந்த 4½ ஆண்டு காலத்தில்தான் 74 பணிமனைகள் அமைக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய போச்சம்பள்ளியில் பேருந்துகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தினால்தான் வருங்காலங்களில் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்று சொன்னேன். பக்கத்தில் இருக்கக்கூடிய திருப்பத்தூர், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி, தருமபுரியில் பணிமனைகள் இருக்கின்றன. குறைந்தபட்சம் 100 பேருந்துகள் இருந்தால்தான் அந்தப் பணிமனையினைப் பிரித்து புதிய பணிமனையினை உருவாக்க முடியும். அந்தவகையில் அங்கு 17 பேருந்துகள் இருக்கின்ற காரணத்தினால், எதிர்காலத்தில் பேருந்துகளின் எண்ணிக்கையும், பயணிகளின் அடர்வும் அதிகரிக்கின்ற பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 378, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2015 செப்டம்பர் 29]

378—

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

***30597—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது குறித்து உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு ஏதும் பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் பிறக்கின்ற குழந்தைகளுக்குத் தாய்மாமன் சீதனம் தருவதற்கு முன்பாகவே தாய்க்குத் தாயாக இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) தாயின் வயிற்றிலிருந்து தொப்புள் கொடி அறுப்பதற்கு முன்பே முதல் சீதனமாக இதோ என்னுடைய சீதனம் என்று "அம்மா பெட்டகம்" வழங்கிய எங்கள் அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை வணங்குகிறேன். நான் இந்த வினாவை எழுப்பி, அவைக்கு வருமுன்பே ஆலங்குளம் மக்களின் நீண்ட நாள் கனவாக இருந்த குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தினை அமைத்துத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2015 செப்டம்பர் 29

தென்காசி, ஆலங்குளம் விவசாயப் பொதுமக்களின் கனவுத் திட்டமாக இருந்த ஜம்புநதி மேல்மட்டக் கால்வாயை நேற்றையதினம் விதி110-ன்கீழ் ரூ42 கோடியில் அமைத்துக்கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம், ஏழை விவசாயிகளின் விடிவெள்ளி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 379, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

379—

கால்நடைக் கிளை நிலையக் கட்டடம்

***53122—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, கள்ளந்திரியிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலம் கால்நடை துறைக்கு பொற்காலம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்றால், ஆட்சியிலே ஆடுகள் முதல் ஆம்புலன்ஸ் வரை அனைத்தையும் அள்ளித் தந்த ஆட்சிக்காலம்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுரை கிழக்கு தொகுதி, கள்ளந்திரியிலே உள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்கு கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மேற்படி கால்நடைக்

2015 செப்டம்பர் 29]

கிளை நிலையத்தை மருந்தகமாகத் தரம் உயர்த்தி கட்டடம் கட்ட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, தரம் உயர்த்தித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 380, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

380—

கைத்தறி விற்பனை நிலையம்

***52486—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

எண்ணற்ற திட்டங்களை நெசவாளர் சமுதாயத்திற்கு அள்ளித்தந்து என்றென்றும் நெசவாளர்களுக்கு குலதெய்வமாக விளங்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

சங்கரன்கோவில் தொகுதியிலே ஒரு கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வினாவிற்கு, தற்போது அதுபோன்ற செயற்குறிப்பு எதுவும் இல்லையென்பதுதான் பதில் என்றாலும், சங்கரன்கோவில் நகராட்சியில் அரசுக்கு சொந்தமான கட்டடங்கள் ஏதுமில்லையென்றாலும் குறைந்த வாடகைக்கு கட்டடம் கிடைக்கும்பட்சத்தில், கைத்தறி விற்பனை நிலையம் அமைப்பது தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2015 செப்டம்பர் 29

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்

(பட்டியல்கள் 18 முதல் 22 வரை)@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) தமிழ் இலக்கிய விருதுகள், பாவேந்தர் பிறந்த நாள் விழா, திருக்குறள் மற்றும் ஆத்திச்சூடி மொழிபெயர்ப்பு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்ற பாவேந்தரின் வரிகளுக்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பதைக் குறிக்கோளாகக்கொண்டு எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.*

கடந்த நான்காண்டுகளில் தமிழ் வளர்க்கும் பணிகளுக்காகப் பல திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தால் ஆஸ்திரேலியாவில் அடிலேய்டு நகரில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழ் வளர்த்த சான்றோர்களுக்கு, கபிலர், உவேசா, கம்பர், சொல்லின் செல்வர், உமறுப் புலவர்,

@ 262 முதல் 997 வரையிலான பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஜி.யு.போப், இளங்கோவடிகள் ஆகியோர் பெயர்களில் புதிய விருதுகளும், மேலும் தமிழ்த் தாய் விருது, கணினித் தமிழ் விருது, மற்றும் தமிழ்ச் செம்மல் விருது ஆகிய விருதுகளும் ஏற்படுத்தப்பட்டு, அந்த விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மொழிக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. 'பெண்கள் அறிவை வளர்த்தால்—வையம் பேதைமையற்றிடும் காணீர்!' என்ற பாரதியாரின் அமுத மொழிக்கேற்ப, பெண் எழுத்தாளர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், நடப்பாண்டு முதல் மகளிர் இலக்கியங்களைப் படைப்பதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டாற்றி வரும் பெண் படைப்பாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் "அம்மா இலக்கிய விருது" என்ற புதிய விருது (மேசையைத் தட்டும் ஒலி) சித்திரைத் திங்கள் தமிழ்ப் புத்தாண்டு நாளில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) "அம்மா இலக்கிய விருது" பெறுபவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பண முடிப்பும், தகுதியுரையும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்ற பாரதியின் கனவை நனவாக்கும் வகையில், தரமான பிறமொழி படைப்புகளைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யும் 10 மொழி பெயர்ப்பாளர்களுக்கு, ஆண்டுதோறும் சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருது வழங்கப்படும். இவ்விருது பெறுபவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பண முடிப்பும், தகுதியுரையும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–05

3. பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் புகழைப் பரப்பிடும் வகையில், அவரின் 125–வது பிறந்த நாளையொட்டி 125 கவிஞர்களைக்கொண்டு இரண்டு நாள் கவியரங்கம் ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்த ஆண்டு முதல் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் 'தமிழ்க் கவிஞர் நாள்' என்ற பெயரில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. இலக்கணம், இலக்கியம் மற்றும் மொழியியல் துறையில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழறிஞர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டில் 'உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்' வழங்கப்படும். விருதுபெறும் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் பண முடிப்பும் தகுதியுரையும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் சீன மற்றும் அரபு மொழிகளில் மொழிபெயர்க்க என்னால் ஆணையிடப்பட்டு, மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ் மொழிக்கும் கொரிய மொழிக்கும் இடையே உள்ள தொடர்பின் அடிப்படையிலும், திருக்குறளை கொரிய மொழியில் மொழிபெயர்க்க வேண்டுமென்ற கொரிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையின் அடிப்படையிலும், கொரியாவில் தமிழர்களும், தமிழகத்தில் கொரியர்களும் வாழ்ந்து வருவதைக் கருதியும், பார்போற்றும் உலகப் பொதுமறையாம் திருக்குறளை கொரிய மொழியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 36 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஓரடியில் உலக மக்களுக்கேற்ற எளிய அறநெறிக் கருத்துகளைக் கொண்ட தமிழ்மொழியின் அறநெறிக் கருவூலமான ஆத்திச்சூடியை சீன மற்றும் அரபு மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவிப்புகள் தமிழ் மொழியை வளர்க்கவும், தமிழுக்கு தொண்டாற்றுபவர்களை ஊக்குவிக்கவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கத்தி முனையைவிட பேனா முனை வலுவானது' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்குபவர்கள் பத்திரிகையாளர்கள். காலம் நேரம் பாராமல் உழைக்கின்ற*

2015 செப்டம்பர் 29][செல்வி ஜெ ஜெயலலிதா]

பத்திரிகையாளர்கள் தாங்கள் ஓய்வுபெறும் காலத்தில், மன நிறைவோடும், மன அமைதியோடும் வாழ்ந்திடவேண்டும் என்பதில் இந்த அரசு தனி அக்கறை கொண்டுள்ளது. அதன் அடிப்படையில்தான் கடந்த 2011 ஆம் ஆண்டில் இவ்வரசு பொறுப்பேற்றபின்பு, பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகியவை இரண்டு முறை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன.

20 ஆண்டுகள் பணியாற்றி, ஓய்வுபெற்று, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியம் 14–9–2011 முதல் 5,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாகவும், 7–10–2013 முதல் 6,000 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல், மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த, குடும்ப மாதாந்திர ஓய்வூதியம் 14–9–2011 முதல் 2,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், 7–10–2013 முதல் 3,000 ரூபாயிலிருந்து 4,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டு, அவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11–10

எனினும் இன்றைய வாழ்க்கைச் சூழலைக் கருத்தில்கொண்டு, பத்திரிகையாளர் நலன் கருதி, அவர்களது ஓய்வு காலம் குறித்து ஒரு நம்பிக்கையும், இன்றைய வாழ்வின்மீது ஒரு பிடிப்பும் ஏற்படும் வகையில் இந்த ஓய்வூதியங்களை மேலும் உயர்த்தி வழங்க நான் முடிவெடுத்துள்ளேன்.

இதன்படி பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் 7,500 ரூபாயிலிருந்து 8,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியம் 4,500 ரூபாயிலிருந்து 4,750 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) திருவாடனை ஜவுளிப் பூங்கா, வேதாரண்யம் காஸ்டிக் சோடா தொழிற்சாலை உள்ளிட்ட தொழில் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியைப் பெருக்கி நாட்டின்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2015 செப்டம்பர் 29

பொருளாதாரத்தை மேம்படுத்தச் செய்வதிலும், வேலைவாய்ப்பினை உருவாக்குவதிலும் சிறந்து விளங்கும் தொழில் வளத்தைப் பெருக்குவதில் பொறுப்புணர்வுடனும், தொலைநோக்குப் பார்வையுடனும் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு, அதில் மகத்தான வெற்றியும் கண்டிருக்கிறது.

இந்தியாவில், தமிழகத்தை தொழில் துறையில் வலிமை மற்றும் எழுச்சி மிக்கதாக உருவாக்கவும், சிறந்த, விரும்பத்தக்க முதலீட்டுக்கு உகந்த தேர்விடமாக ஆக்குவதற்கும், எனது தலைமையிலான அரசு, ஆற்றல்மிகு ஆக்கபூர்வமான கொள்கைகளை வெளியிடுதல், திட்டமிடுதல் மற்றும் அவற்றை சீரிய முறையில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காக, தமிழ்நாடு தொழில் கொள்கை 2014, மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்கள் கொள்கை 2014 மற்றும் உயிரி தொழில்நுட்பக் கொள்கை 2014 ஆகியவை வெளியிடப்பட்டன.

தொழில் வளர்ச்சியினை மேலும் செம்மைப்படுத்தும்வகையிலும், அதிக தொழில் முதலீட்டினை ஈர்க்கும்வண்ணமும், மாநிலத்தின் தொலைநோக்குத் திட்டங்களான தொழில் மயமாக்குதல், வேலைவாய்ப்பை அதிகரித்தல், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், சீரான பகுதி வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழலுடன் இணைந்த, நிலைத்த, நீண்டகால வளர்ச்சி ஆகியவற்றை அடைவதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சியாக எனது தலைமையிலான அரசு, மாநிலத்தில் முதன்முறையாக உலக முதலீட்டாளர்கள் சந்திப்பினை செப்டம்பர் திங்கள் 9 மற்றும் 10 ஆகிய தினங்களில் சென்னையில் நடத்தியது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் 2,42,160 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

தொழில் வளர்ச்சிக்கு பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

1. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தவும், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் எனது அரசு மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டத்தில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால்

2015 செப்டம்பர் 29][செல்வி ஜெ ஜெயலலிதா]

சிப்காட்-ஆல் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா Integrated Textile Processing Park ஒன்று 150 கோடி ரூபாய் மதிப்பில் சுமார் 224 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பூங்காவில் நாளொன்றுக்கு ஒரு கோடி லிட்டர் திறனுள்ள கடல் நீர் சுத்திகரிப்பு ஆலை ஒன்று நிறுவப்படும். இப்பூங்காவில் இடம்பெறும் 30 ஜவுளித் துறை தொழில் நிறுவனங்கள் சுமார் 450 கோடி ரூபாய் செலவில் அமையப்பெறும். இவற்றின்மூலம் 6,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாகும். மத்திய அரசின் மானியமாக 70 கோடி ரூபாயும், சிறப்பு நோக்க முகமையின் பங்குத் தொகையாக 40 கோடி ரூபாயும், மாநில அரசு மற்றும் சிப்காட் நிறுவனத்தின் 40 கோடி ரூபாயும் திட்ட நிதியாக இருக்கும்.

முற்பகல் 11–15

2. தமிழ்நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்கும்பொருட்டு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவித்து சிறப்பான முறையில் நிதியுதவி வழங்கிவருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்காக எனது அரசு 100 கோடி ரூபாயை ஒரு முறை மூலதனமாக வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மூலதனத்திற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் TIDCO-வும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் SIPCOT-ம் தலா 50 கோடி ரூபாயினை வழங்கும்.

3. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் தனியார் நிறுவனத்துடன் இணைந்து கூட்டாக காஸ்டிக் சோடா தொழிற்சாலையை தமிழ்நாடு உப்பு நிறுவனம் துவக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 36,000 மெட்ரிக் டன் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம், சுமார் 200 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்துடன் சிறப்புப் பொருளாதார

மண்டலத்தில் அமைந்துள்ள டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் நிறுவனமானது 32 கோடியே 61 இலட்சம் ரூபாய் முதலீட்டில் சிறிய மற்றும் நடுத்தர தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உடனடியாகத் தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய அபிவிருத்தி மையம் ஒன்றினை ஏற்படுத்தும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அபிவிருத்தி மையத்திற்குத் தேவைப்படும் கட்டட மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த 22 கோடியே 61 இலட்சம் ரூபாயினை டைடல் பார்க் கோயம்புத்தூர் நிறுவனத்திடம் இருந்தும், 10 கோடி ரூபாய் மத்திய அரசின் ASIDE மானியமாகவும் பெறப்படும். இத்திட்டத்தின்மூலம் சுமார் 1,000 பேருக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு, இதன்மூலம் கோயம்புத்தூரின் பொருளாதார வளர்ச்சி மேலும் மேம்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. மாநிலத்தில் உள்ள வானூர்தி உற்பத்தி சார்ந்த நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில், காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டம், வல்லம்—வடகால் கிராமங்களில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் TIDCO சுமார் 350 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 2 இலட்சம் சதுர அடி பரப்பளவில் உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம் ஒன்றினை அமைக்கும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இம்மையம், தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் வானூர்தி உதிரி பாகங்களை வடிவமைக்கவும் மற்றும் மேம்படுத்தவும் ஏதுவாக அதி வேக கணினி மற்றும் வடிவமைப்பு வசதிகளைக் கொண்டதாக இருக்கும். இம்மையத்தில் 50—க்கும் மேற்பட்ட வானூர்தி உதிரி பாகங்களை வடிவமைக்கும் மற்றும் மேம்படுத்தும் நிறுவனங்கள் தங்களது மையங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால்-TIDCO—வால் அமைக்கப்படவுள்ள சென்னை ஏரோஸ்பேஸ் பார்க் லிமிடெட் (Chennai Aerospace Park Limited) என்ற சிறப்பு நோக்கு நிறுவனம்மூலம் 350 கோடி ரூபாய் முதலீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2015 செப்டம்பர் 29][செல்வி ஜெ ஜெயலலிதா]

6. மார்ச் 22, 2012-ல் என்னால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்-2023 ஆவணத்தில் சென்னை–ராணிப்பேட்டை மற்றும் ராணிப்பேட்டை-ஓசூர் தொழில் வளாக வழித் திட்டங்கள் நட்சத்திர திட்டங்களாக அறிவிக்கப்பட்டன. தற்போது இவ்விரண்டு தொழில் வளாக வழித் திட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு சென்னை-பெங்களூரு தொழில் வளாக வழித் திட்டம் என செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கண்ட தொழில் வளாக திட்டப் பகுதியில் உள்ள பொன்னேரியில் சிறப்பு நோக்க நிறுவனம் SPV மூலம் பொன்னேரி தொழில் முனையம் (Ponneri Industrial Node) 20 ஆண்டுகளில் மூன்று கட்டங்களாக மேம்படுத்தப்படும். 13,314 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2016–2019 காலகட்டத்தில் இத்திட்டத்தின் முதற்கட்டம் நிறைவேற்றப்படும் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகாவில் உள்ள 10 கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 21,996 ஏக்கர் பரப்பளவில் அமையும்.

முற்பகல் 11–20

7. என்னால் வெளியிடப்பட்ட உயிரி தொழில்நுட்பக் கொள்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 50 கோடி ரூபாய் நிதியுடன் "உயிரி தொழில்நுட்ப மூலதன முதலீட்டு நிதி "Biotechnology Venture Capital Fund" ஒன்று உருவாக்கப்படும். இந்த நிதிக்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) 10 கோடி ரூபாயும், டைடல் மற்றும் டைசல் நிறுவனங்கள் இணைந்து 10 கோடி ரூபாயும், மாநில அரசு 5 கோடி ரூபாயும் அளிக்கும். தனியார் பங்களிப்புமூலம் 25 கோடி ரூபாய் நிதி பெறப்படும்.

8. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (TIDCO–வும்) இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனமும் (ITPO) இணைந்து கூட்டுத் துறையில் அமைத்த நிறுவனமான, தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தால் (TNTPO), சென்னை நந்தம்பாக்கத்தில், சென்னை வர்த்தக மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையம் கூடுதலாக 16,000 சதுர மீட்டர் கட்டடப் பரப்பளவு கொண்ட கண்காட்சி அரங்குகள் மற்றும் இதர வசதிகளான உணவு அரங்கம், பல அடுக்கு வாகனங்கள் நிறுத்துமிடம் (Multi–tier Car

Park) ஊழியர்கள் தங்குமிடம், பயன்பாட்டுக் கட்டடம் போன்ற வசதிகளுடன் சுமார் 298 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்திற்கான நிதி மத்திய அரசின் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்தும், தமிழ்நாடு வர்த்தக மேம்பாடு நிறுவனத்திடமிருந்தும் பெறப்படும். இந்த வசதி தமிழ்நாட்டின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை வளர ஏதுவாக இருக்கும்.

9. Transport Corporation of India என்ற நிறுவனத்தின் துணை நிறுவனமான TCI Distribution Centres Ltd., என்ற நிறுவனம், சரக்காளுமை பூங்கா (Logistics Park) ஒன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO-வின்) வழிகாட்டுதல்மூலம் 270 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், சுமார் 43 ஏக்கர் பரப்பளவில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்பெரும்புதூர் மற்றும் அதனை ஒட்டிய திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள உளுந்தை கிராமம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டம் 2 அல்லது 3 ஆண்டுகளில் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்மூலம் சுமார் 700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும்.

10. திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 37 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து (National Co-operative Development Corporation) பெறப்படும் நிதி, மாநில அரசு நிதி மற்றும் சர்க்கரை ஆலையின் நிதி ஆகியவற்றின் உதவியோடு இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

11. நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 56 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து (National

2015 செப்டம்பர் 29][செல்வி ஜெ ஜெயலலிதா]

Co-operative Development Corporation) பெறப்படும் நிதி, மாநில அரசு நிதி மற்றும் சர்க்கரை ஆலையின் நிதி ஆகியவற்றின் உதவியோடு இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

12. அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் செயல்திறனை மேம்படுத்தவும், உற்பத்திச் செலவை குறைக்கவும் 25 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அந்த ஆலை நவீனப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்படும் நிதி, மாநில அரசு நிதி மற்றும் சர்க்கரை ஆலையின் நிதி ஆகியவற்றின் உதவியோடு இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

மேற்காணும் அறிவிப்புகள் தொழில்கள் வளரவும், உற்பத்தி பெருகவும், தொழிலாளர்கள் வளமோடு வாழவும், புதிய வேலைவாய்ப்புகள் உருவாகவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25

(ஈ) கூட்டுறவு அமைப்புகளுக்குக் கட்டடம், பாதுகாப்பு மற்றும் கணினி வசதி, நுகர்பொருள் கிடங்குகளில் கனம் தூக்கும் கருவிகள் நிறுவுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாத அத்தியாவசியப் பொருட்களை காலத்தே வழங்கும் தலையாய பணியைச் செவ்வனே மேற்கொண்டுவரும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் கூட்டுறவு அமைப்புகளின்மூலம் பொது மக்களுக்கு சிறந்த சேவை வழங்கும் கூட்டுறவுத் துறை ஆகியவை பொதுமக்களுக்கு சிறந்த முறையில் சேவை வழங்குவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை கடந்த 4 ஆண்டுகளாக எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டு துறைகளையும் மேலும் வலுப்படுத்தும் வகையில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2015 செப்டம்பர் 29

1. விவசாயப் பெருமக்களுக்கும், பொது மக்களுக்கும் பல்வேறு சேவைகளை வழங்கும் கூட்டுறவு அமைப்புகளுக்கு கிடங்குகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள், கூட்டுறவு வங்கிகளுக்கு புதிய கட்டடங்கள் எனப் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 3,381 கூட்டுறவு அமைப்புகளுக்கு உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 110 கூட்டுறவு அமைப்புகளுக்கு பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை, பாதுகாப்பு பெட்டகம் போன்ற பல வசதிகளை உள்ளடக்கிய சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு தலா 20 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; இராமநாதபுரம் மற்றும் நாசரேத் நகர கூட்டுறவு வங்கிகளுக்கு முறையே 40 இலட்சம் ரூபாய் மற்றும் 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருவண்ணாமலை மாவட்டம், போளூர் மற்றும் செங்கம்; காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு மற்றும் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஆகிய தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; கடலூர் மத்திய கூட்டுறவு வங்கியின் குறிஞ்சிப்பாடி கிளை, புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கியின் கல்லூர் கிளை, சேலம் மத்திய கூட்டுறவு வங்கியின் எடப்பாடி மற்றும் பேளுக்குறிச்சி கிளைகள் ஆகியவற்றுக்கு 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மொத்தம் 23 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் 110 கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் உறுப்பினர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அவர்களது அவசர கடன் தேவைக்காக, நகையீட்டுக் கடன் பெறுகின்றனர். அவ்வாறு பெறப்படும் நகைகளையும், மதிப்புமிக்க பொருட்கள் மற்றும் ஆவணங்களையும் பத்திரமாக பாதுகாத்து வைத்திடவும் கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பு முறைகளை வலுப்படுத்த பல நடவடிக்கைகள்

2015 செப்டம்பர் 29][செல்வி ஜெ ஜெயலலிதா]

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக 39 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 46 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 42 கிளைகள், 43 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் 16 கிளைகள் மற்றும் 5 விரிவாக்க மையங்கள் மற்றும் இதர 12 கூட்டுறவு நிறுவனங்கள் என மொத்தம் 203 கூட்டுறவு நிறுவனங்களில் 8 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் பாதுகாப்பு அறைகள் மற்றும் பாதுகாப்பு கதவுகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

3. 2,672 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் கிளைகள், 106 பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணயச் சங்கங்கள், 67 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கிளைகள், 68 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் கிளைகள், மத்திய கூட்டுறவு வங்கிகளின் 10 கிளைகள், 11 மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அதன் கிளைகள் மற்றும் இதர 32 கூட்டுறவு நிறுவனங்கள் என மொத்தம் 2,966 கூட்டுறவு நிறுவனங்களின் பாதுகாப்பிற்காக 16 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்புக் கேமரா (CCTV) நிறுவப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. பெருகிவரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, வணிக வங்கிகளுக்கு இணையாக கூட்டுறவு அமைப்புகள் வளர்ச்சியடையவும், வாடிக்கையாளர்களுக்கு விரைவான மற்றும் சிறப்பான சேவையை வழங்கிடும்பொருட்டும் கூட்டுறவு வங்கிகள் கணினிமயமாக்கப்பட்டு உள்ளன. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றின் கிளைகள் கணினிமயமாக்கப்பட்டு உள்ளன. மேலும், வெளிப்படைத் தன்மை மற்றும் சிறப்பான சேவையை மக்களுக்கு

வழங்கும்பொருட்டு, அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் கணினிமயமாக்கப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக, பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களும் கணினிமயமாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் மொத்தம் 1,758 பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கங்கள் அரசுத் துறை, தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சேவை புரிந்து வருகின்றன. இச்சங்கங்களில் தற்போது 9,61,314 உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்களுக்கு தனி நபர் பிணைக் கடன், சம்பளக் கடன் மற்றும் கல்விக் கடன்களை வழங்கி, அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்காக இச்சங்கங்கள் அரும்பங்காற்றி வருகின்றன. இச்சங்கங்கள் 1,635 கோடியே 8 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனத்துடனும், 10,223 கோடியே 78 இலட்சம் ரூபாய் நடைமுறை மூலதனத்துடனும் செயல்பட்டு வருகின்றன. எனவே, இச்சங்கங்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்குவதன்மூலம் நிருவாகச் செலவுகள் குறைவதுடன், உறுப்பினர்களுக்கு சிறப்பான சேவைகளை விரைவாக வழங்கிட இயலும். எனவே, முதல் கட்டமாக நடப்பாண்டில் 1,240 பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கங்கள் 9 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கணினிமயமாக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 8.27 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 219 சொந்தக் கிடங்குகள் செயல்பாட்டில் உள்ளன. பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருள்களை ஏற்றுதல், இறக்குதல், நகர்வு செய்தல் மற்றும் அட்டியிடுதல் ஆகிய பணிகள் தற்பொழுது சுமை தூக்குவோரால் கையாளப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் சுமார் 4.10 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களான கோதுமை, சர்க்கரை, பருப்பு மற்றும் பாமாயில் போன்றவை இக்கிடங்குகளிலிருந்து பொது விநியோகத் திட்டத்தின்மூலம் பொதுமக்களுக்கு வழங்கிட நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்படுகின்றன. மேலும், இச்சுமை தூக்குவோர் பொது விநியோகத் திட்டத்திற்காக கொள்முதல் செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களை கிடங்குகளில் இறக்குதல் மற்றும் இவற்றினை சமச்சீர் செய்து சிப்பம் இடுதல் போன்ற இதர பணிகளையும் மேற்கொள்கின்றனர். இவர்களின்

2015 செப்டம்பர் 29][செல்வி ஜெ ஜெயலலிதா]

பணிகளை எளிதாக்கும்வகையில் தேவையான இயந்திரங்கள் வாங்கி வழங்கப்படும்.

முற்பகல் 11—35

முதல் கட்டமாக, தற்பொழுது கட்டப்பட்டுவரும் நாகப்பட்டினம் மாவட்டம், கோவில்பத்து மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், சென்னம்பட்டி ஆகிய கிடங்குகளிலும், மேலும் புதிதாகக் கட்டப்படவுள்ள நாகப்பட்டினம் மாவட்டம்—எடமணல், மாணிக்க பங்கு கிடங்குகள், திருவாரூர் மாவட்டம், குடவாசல் கிடங்கு ஆகிய கிடங்குகளில் அதிக கொள்ளளவுகொண்ட தானியங்கி இழுவை இயந்திரங்கள் (conveyors), சுமையினை ஏற்றி, இறக்கி அட்டியிடும் இயந்திரங்கள் (stackers) மற்றும் மின்னாக்கிகள் (generators) போன்றவை நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சென்னை, காஞ்சிபுரம், கிணத்துக்கடவு, கருமத்தம்பட்டி, கடலாடி, தூத்துக்குடி, தேவகோட்டை, புளக்குளம் மற்றும் சாத்தான்குளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள நடுத்தர கொள்ளளவு கொண்ட கிடங்குகள் மற்றும் திருவாரூர் மாவட்டம், கோவிலூரில் புதிதாகக் கட்டப்படவுள்ள கிடங்கு ஆகியவற்றில் தானியங்கி சுமைதூக்கி (fork lift) அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த இயந்திரங்கள் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி வளர்ச்சியின் மூலமே மக்களின் பொருளாதார நிலை ஏற்றம்பெறும் என்பதாலும், சமூகப் பொருளாதார வேறுபாடுகள் களையப்படும் என்பதாலும், பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி ஆகியவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவத்தை எனது தலைமையிலான அரசு அளித்து வருகிறது.

கடந்த நான்கரை ஆண்டுகளில் 4 அரசு பொறியியல் கல்லூரிகள் உள்ளிட்ட 53 கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2015 செப்டம்பர் 29

மேலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 959 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உயர் கல்வித் துறைக்கு அளிக்கப்பட்டுவரும் முக்கியத்துவம் காரணமாக 2011 இல் உயர் கல்வியில் 18 சதவிகிதம் என்ற அளவில் இருந்த மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் அதாவது gross enrollment rate தற்போது 42.8 சதவிகிதத்தை எட்டி இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 25 ஆம் தேதி உயர் கல்வித் துறைமூலம் செயல்படுத்த உள்ள பல அறிவிப்புகளை நான் இந்த மாமன்றத்தில் அறிவித்தேன். அப்போது 5 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 5 உறுப்பு கல்வியியல் கல்லூரிகள் துவங்கப்படும் என அறிவித்தேன்.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்படவேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் தேனி, ஈரோடு மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லை. இம்மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் தரமான உயர் கல்வி பெறும்பொருட்டு, தேனி மாவட்டம், வீரபாண்டியிலும், ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்திலும், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக அரசுக்கு ஒரு கல்லூரிக்கு 8 கோடியே 48 இலட்சம் ரூபாய் வீதம் மூன்று கல்லூரிகளுக்கு 25 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லாத மாவட்டமே இல்லை எனும் நிலை இதன்மூலம் உருவாகும் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு 8 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-40

3. தமிழ் இலக்கிய விருதுகள் வழங்குதல், பத்திரிகையாளர்கள் ஓய்வூதிய உயர்வு, புதிய தொழில் திட்டங்கள், கூட்டுறவுத் துறை நவீனமாக்கல் மற்றும் புதிய அரசுக் கல்லூரிகள் தொடங்குதல்— முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மொழி வளர்கின்றபோது இனம் வளரும். ஒரு மொழி பெருமைப்படுகின்றபோது அந்த இனம் பெருமைப்படும். ஒரு மொழி புகழப்படுகின்றபோது அந்த இனமே புகழப்படும். தமிழின் பெருமையை, தமிழின் தொன்மையை உயர்த்தி, தமிழ் மக்களுடைய பெருமையையும், தமிழ் மக்களுடைய வரலாற்றையும் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு உலக அரங்கிலே உயர்த்தி காட்டியிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நடவடிக்கைகளை நான் வாயார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

"துறைதோறும் தொண்டு செய்வாய் தமிழுக்கு" என்று பாவேந்தர் அவர்கள் பாடினார்கள். துறைதோறும், துறைதோறும் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் இணைத்துத் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது.

கல்வித் துறை, கூட்டுறவுத் துறை, தொழில் துறை, செய்தி, விளம்பரத் துறை மற்றும் நெசவுத் துறை இப்படி துறைதோறும், துறைதோறும் இன்றைக்கு ஏராளமான அறிவிப்புகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில், நேற்றுவரை, விதி 110-ன்கீழ், 176 அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவித்திருக்கின்றார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். இது 180-ஐயும் கடந்து இன்று

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2015 செப்டம்பர் 29

மேலோங்கி நிற்கிறது. தமிழக வரலாற்றில் மட்டுமல்ல, இந்திய வரலாற்றிலேயே ஒரு மிகப்பெரிய சாதனையை (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு முதலமைச்சர் பெற்றிருக்கிறார் என்று சொன்னால், அடைந்திருக்கிறார் என்று சொன்னால், நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதைச் செய்திருக்கின்றார்கள் என்பதால் நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப் பாராட்டுவதனால் நாங்கள் எல்லாம் வெளியே பாராட்டப்படுகின்றோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த மாமன்றத்தில் பாராட்டுகின்றபோது, வெளியே போகிறவர்களெல்லாம் ஊடகத்திலே பார்த்து, ஊடகங்கள் வழியாக அறிந்து, நீங்கள் மிகச் சிறப்பாகப் பாராட்டைத் தெரிவித்திருக்கின்றீர்கள். நாங்கள் உங்களைப் பாராட்டுகின்றோம் என்று சொல்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டுவதால் நாங்களும் பாராட்டைப் பெறுகின்றோம் என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இன்றைக்கு ஊடகங்களையும் சேர்த்து, ஊடகத்தில் செய்தியாளர்களாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியத்தை உயர்த்தி, அவர்களுக்கும் ஒரு விடியலைத் தந்திருக்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழுக்கு செய்திருக்கின்ற தொண்டு இருக்கிறதே, ஒரு பெண் கல்வி பெறுகின்றபோது, ஒரு பெண் கல்வி பெற்றாலே ஒரு தலைமுறையே நீடித்து நிற்கிறது என்று அறிஞர்கள் சொன்னார்கள். அந்தப் பெண் குலத்தை, அந்தப் பெண்களுடைய பெருமையை எழுதுகிற, இலக்கியம் படைக்கின்றவர்களுக்கு 'அம்மா இலக்கிய' விருது தந்திருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, தமிழ் தாத்தா உ.வே.சா. விருது தந்தவர் நீங்கள். 'தமிழ்த் தாய்' விருதை ஏற்படுத்தியவர் நீங்கள். இப்போது 'அம்மா இலக்கிய' விருதையும் நீங்கள் தமிழகத்தில் உருவாக்கியிருக்கின்றீர்கள் என்கின்றபோது, தமிழ் தொன்மை வரலாறு தொடர்கிறது, தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

'அறம் செய விரும்பு' என்ற ஆத்திச்சூடியை, இன்றைக்கு சீனத்து கன்பூசியஸ் தத்துவத்தோடு கலந்து, உணர்ந்து சீனத்தைப் பரவச் செய்வதற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) உலகமெல்லாம் இந்தத் தமிழ் மொழி பரவுவதற்கு, உலகப் பொதுமறை என்று நாம்

2015 செப்டம்பர் 29] [முனைவர் செ.கு. தமிழரசன்]

திருக்குறளை சொல்லிக் கொண்டிருக்கின்றோமே அந்த உலகப் பொதுமறை உண்மையாகவே, உலகத்தின் பொதுமறையாகின்ற வகையில், கொரியா மொழியிலே இன்று திருக்குறளை மொழிபெயர்ப்பதற்கு, இப்படி பிற நாட்டு மொழிகளிலெல்லாம் நம் நாட்டு சாத்திரங்கள் சென்றடைவதற்கு, உலகை ஆளுவதற்கு, உலகை ஈர்ப்பதற்கு, உலகத் தத்துவங்களோடு நம்முடைய தமிழ் மொழியின் தத்துவமும் போட்டியிட்டு நிமிர்ந்து நிற்பதற்கு இன்றைக்கு வழி செய்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் வாயார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 125-வது பிறந்த நாளை ஆண்டு முழுவதும் கொண்டாடுவதற்கு நீங்கள் வழிவகுத்திருக்கின்றீர்கள். 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடக்கத்திலே சொன்னார்கள். தமிழினுடைய சிறப்பையும், தமிழினுடைய பெருமையையும் உலகமெல்லாம் ஒலிக்கச் செய்ய வேண்டுமென்று சொன்ன பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் இன்றைக்கு இருந்திருந்தால், 'மங்காத தமிழினை உலகெல்லாம் ஓங்கச் செய்த சிங்கநிகர் அம்மாவின் சிறப்பை சங்கே முழங்கு', (மேசையைத் தட்டும் ஒலி) 'மங்காத தமிழ் மொழியை உலகெல்லாம் ஓங்கச் செய்த சிங்கநிகர் அம்மாவின் சிறப்பை சங்கே முழங்கு' என்ற புது வரியை அதிலே சேர்த்திருப்பார். புது வரியை அவர் பாடியிருப்பார். அந்த வகையிலே, இன்றைக்கு கல்வி வளர்ச்சி 42 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய கல்விக் கட்டணத்தை, உயர் கல்வி படிப்பதற்கான செலவை அரசே ஏற்றுக்கொள்ளும் என்கின்ற அப்படிப்பட்ட ஒரு அறிவிப்பை நடைமுறைபடுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நான்காண்டு காலமாக அதைச் செயல்படுத்தியதால்தான், இன்றைக்கு அடித்தட்டு மக்களுடைய உயர் கல்வி சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு, மேலும் அது தொடர்கின்ற வகையிலே, பல கல்லூரிகளைத் தந்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாயார வாழ்த்தி, பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

[2015 செப்டம்பர் 29

முற்பகல் 11—45

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று எழுதிய பாரதிதாசனாரின் பொன்வரிகளுக்கேற்ப, அந்த மகத்தான கவிஞனுடைய வீர வரிகளுக்கு, வைர வரிகளுக்கு செயல் வடிவம் தந்த ஒப்பற்ற முதல்வர், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) "ஆத்திச்சூடிகூட தெரியவில்லையா?" என்று நாம் சாதாரணமாகக் கேட்போம். "அட, அவன் ஆத்திச்சூடி தெரியாத பையனப்பா" என்று நாம் பொதுவாகச் சொல்வோம். நாமெல்லாம்கூட வாய்ப்பாட்டிலே படித்த ஆத்திச்சூடியை மறந்துவிட்டோம். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறம், நெறி, கருத்துகளை மறக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தைப் பருவத்திலே நாம் ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு படிக்கிறபோது ஆத்திச்சூடி படித்திருக்கிறோம். அதில் அவ்வளவு கருத்துகள் அடங்கியுள்ளன. "அறம் செய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல்" என்பதெல்லாம் எவ்வளவு பண்புகளை நமக்கு உரைக்கின்றன? அந்த ஆத்திச்சூடியை தமிழ்நாட்டில் இருக்கின்ற மொழிகள் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் இருக்கின்ற, உலகம் முழுவதும் இருக்கின்ற சீனம், அரபு, கொரிய மொழிகளிலே மொழி பெயர்ப்பதாக புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது, தமிழ் மொழியையும், தமிழர்களுடைய பண்பாட்டையும் உலக அளவிற்குக் கொண்டு செல்வதற்கான ஓர் அற்புதமான திட்டம்.

அதுபோன்று, திருக்குறள். திருவள்ளுவருடைய வாழ்வியல் நெறிப்படி வாழ்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆத்திச்சூடி நெறிப்படி வாழ்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி, தமிழை நேசித்து, தமிழ் மொழியை நேசித்து, தமிழினத்தை நேசித்து, பாவேந்தன் சொன்னது போன்று, தமிழை, தமிழினத்தை உயிருக்கு உயிராக நேசிக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மொழியை உலகம் முழுவதும் எடுத்துச் செல்வதிலே, இந்தத் தமிழ் மொழிக்குச் சிறப்பு சேர்க்கிற வகையிலே, பெண் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கு, சிறந்த பெண்

2015 செப்டம்பர் 29] [திரு. உ. தனியரசு]

படைப்பாளிகளுக்கு "அம்மா இலக்கிய விருது" வழங்கி கௌரவித்துள்ளார்கள். விருதுகளிலெல்லாம் உயரிய விருது என்பது, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய விருது பெறுவதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்ணினத்திற்கு ஆற்றலை, நம்பிக்கையை ஊட்டுவதற்கு பெண் இனத்திற்காக வழங்கப்படுகிற விருதுதான் பெண் இலக்கிய விருது.

அதுபோன்று, 125 கவிஞர்களை ஒன்று திரட்டி, தமிழ் மொழியில் அவர்களுக்குள் இருக்கிற ஆற்றலையெல்லாம் வெளிக் கொணர்வதற்கு அரசே தன் சொந்தச் செலவில் இரண்டு நாட்கள் மாநாடு நடத்துவதற்கு உத்தரவிட்ட அன்புத் தலைவி, தமிழ் மொழியை நேசிக்கிற தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மொழியை, தமிழ் இனத்தை நேசிப்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

அதுபோன்று, தொழில் துறைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகச் சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு தாய் தன்னுடைய குழந்தைக்கு எப்படி உணவைப் பகிர்ந்தளிப்பாரோ அதைப்போன்று ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை அள்ளித் தந்திருக்கிறார்கள். நாமெல்லாரும் தொழில் துறையை சாதாரணமாகப் பார்த்திருப்போம். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 6,000 பேருக்கு வேலை தருகிற ஒரு ஜவுளிப் பூங்காவை இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொரு தொழிற் பூங்காவை மேற்கு மண்டலத்திலிருக்கிற, கொங்கு மண்டலத்திலிருக்கிற கோவை மாநகரத்திற்கு, தொழில் அபிவிருத்தி மையத்திற்குத் தந்திருக்கிறார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொரு தொழிற்சாலையை எங்கு தருகிறார் தெரியுமா? வடக்குப் பகுதியிலே இருக்கிற காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வானூர்தி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தந்திருக்கிறார். இன்னொரு தொழிற்சாலையை எங்கு தருகிறார் தெரியுமா? கிழக்குப் பகுதியிலே, டெல்டா பகுதியிலே இருக்கிற நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு தமிழ்நாடு உப்புத் தொழிற்சாலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒத்த தொழிலுக்கான அந்தத் தொழிற்சாலைகளை நாட்டினுடைய நான்கு திசைகளுக்கும் பகிர்ந்தளித்தவர், பாகுபாடில்லாதவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. உ. தனியரசு] [2015 செப்டம்பர் 29

அதேபோன்று, உயர் கல்வித் துறையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரையில் தமிழ்நாட்டு வரலாற்றில், வரலாறு காணாத மறுமலர்ச்சியைத் தந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டினுடைய அன்பு மாணவக் குழந்தைச் செல்வங்கள்தான் இந்தியாவிலேயே உயர் கல்வி பெறுவதிலே 42 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட (மேசையைத் தட்டும் ஒலி) மாணவச் செல்வங்கள் உயர்ந்த கல்வியைப் பெற்று, இன்று தேசத்தினுடைய முன்னேறிய முதன்மை மாநிலமாக, எதிர்காலத் தலைமுறையை, தமிழ் சமூகத்தை, அறிவுசெறிந்த தமிழ் சமுதாயமாக மாற்றியெடுப்பதிலே, மிகச் சிறந்த உலகத்து அரசியலாளர்களுக்கும், நிருவாகவியலாளர்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்கிற அப்பழுக்கற்ற, நேர்மைத் திறன்மிக்க ஆத்திச்சூடியையும், வள்ளுவத்தையும் பின்பற்றி வாழுகிற தமிழ்க் குலத்தின் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அறிவிப்புகளை வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோன்று, கூட்டுறவுத் துறைக்கு எண்ணற்ற அறிவிப்புகள். அப்படி, எல்லாத் துறைகளுக்கும் இன்று பல்லாயிரம் கோடி ரூபாயைத் தந்து, தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்கு நாளெல்லாம் அறிவிப்புகளைத் தருகிற புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும், மீண்டும் பாராட்டி வரவேற்று நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் விதி 110-ன்கீழ் 5 துறைகளுக்கு புதிய அறிவிப்புகளை, சிறந்த அறிவிப்புகளைக் கொடுத்திருப்பதை, எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் மனதார வரவேற்று, பாராட்டுகிறது.

முற்பகல் 11-50

தமிழ் மொழிக்குச் சிறப்பு சேர்க்கிறவகையிலே, பெண் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும்வகையிலே, 'அம்மா இலக்கிய விருது' மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்றைய தினம் அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

2015 செப்டம்பர் 29] [திரு. பி.வி. கதிரவன்]

உலக மொழிகளில், உலக மக்களெல்லாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஒரே குறள், திருக்குறள். அந்தத் திருக்குறளை, கொரிய மொழியில் மொழி பெயர்த்து, தமிழுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள், இந்தத் திருக்குறளை கொரிய மொழியில் மொழி பெயர்ப்பதன்மூலம் தமிழ் மொழிக்குச் சிறப்பு செய்திருக்கிறார்கள்.

அதேபோன்று, இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த, குடும்ப மாதாந்திர ஓய்வூதியத்தை மூன்றாவது முறையாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அது பாராட்டக்கூடியது.

அதேபோன்று, தொழில் துறையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் 12 திட்டங்களை இன்றையதினம் அறிவித்திருக்கிறார்கள். தென் மாவட்டங்களைப் பொறுத்தவரையில், அதிலே, இராமநாதபுரம் பகுதியில் 6,000 நபர்களுக்கு வேலை அளிக்கின்ற ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கப்படுமென்று அறிவித்திருக்கிறார்கள்.

அதேபோன்று, கூட்டுறவுத் துறையிலே, புதிய கட்டடங்களைக் கட்டித் தருவதற்கும், வாடகைக் கட்டடங்களில், பழைய கட்டடங்களில் செயல்பட்ட கூட்டுறவுத் துறை அலுவலகங்களை மாற்றி, புதிய கட்டடங்கள் கட்டித் தருவதற்கான நிறைய திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இது உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, பள்ளிக் கல்வித் துறையிலே, உயர் கல்வித் துறையிலே 18 சதவிகிதமாக இருந்த வளர்ச்சி விகிதத்தை இன்றைக்கு 42.8 சதவிகிதமாக உயர்த்திய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்தியாவிலேயே தமிழகம் கல்வித் துறையில் முதல் மாநிலமாகத் திகழ்வது பாராட்டக்கூடியது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அறிவிப்புகள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் 'தொலைநோக்குத் திட்டம் 2023-ல்' கொண்டு வந்து, தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற வேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு நாளும், இந்தத் திட்டங்களை இந்த அவையில், விதி 110-ன்கீழ் அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீண்ட

ஆயுளோடு இருந்து, இந்த மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

***திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்றால் அன்பு, அம்மா என்றால் அறிவு, அம்மா என்றால் கனிவு, (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஆயிரம் அர்த்தங்களை பலரும் சொன்னாலும், எதிர்க் கட்சியினரும் ஒப்புக்கொள்ளக்கூடிய, ஒரே அர்த்தம் அம்மா என்றால் துணிவு. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று, இதே அவையில் நாம் பேசியவாறு, முதல் முறையாக இன்று ஒரு துணிகர முதலீட்டு நிதியம் அதாவது "உயிரி தொழில்நுட்ப மூலதன முதலீட்டு நிதி "Biotechnology Venture Capital Fund" ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கியதற்கு நன்றி கூறுகிறேன். ஏனென்றால், அதனுடைய அர்த்தம், தாக்கம் பலருக்குத் தெரியாது. 50 கோடி ரூபாயில் ஒரு துணிகர முதலீட்டு நிதியம் அதாவது "Biotechnology Venture Capital Fund" உருவாக்கியிருக்கிறார்கள். போட்டித் திறனில், இந்தியாவிலேயே Biotechnology-ல் முதல் இடத்தில் இருக்கிறோம். இந்த 50 கோடி ரூபாயில், குறைந்தது 5,000 பேருக்கு வேலை கொடுக்கக்கூடிய நிதியமாக அதன்மூலம் முகிழ்ந்தெழக்கூடிய பல துளிர் மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் காலடியில் காணிக்கையாக்குகிறேன்.

இரண்டாவது, ஆத்திச்சூடி பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். இன்றைக்கு இந்தியாவில் கொரிய நாட்டிலிருந்து அதிக முதலீடுகள் பெற்றது எந்த மாநிலம் என்றால் அது தமிழ்நாடுதான். தமிழகத்தில் Samsung முதல் Hyundai வரை நூறு நிறுவனங்களுக்கு மேல் கொரிய நிறுவனங்கள் இங்கே தமிழகத்தில் உருவாகி இருக்கின்றன. அவர்களுக்கு நாம் கொடுக்கும் கொடைபோல, 'இயல்வது கரவேல், ஈவது விலக்கேல்' என்று ஆத்திச்சூடியில் சொல்வதுபோல, அந்த கொரிய நாட்டிற்கு நாம் கொடுக்கும் பெரும் கொடையாக, தமிழ் மறையான திருக்குறளை கொரிய மொழியில் Translate செய்ய, அதற்கு ரூபாய் 36 இலட்சம் ஒதுக்கி, சீன, அரபு மொழியில் குறளையும், ஆத்திச்சூடியை சீன,

2015 செப்டம்பர் 29] [திரு. க. பாண்டியராஜன்]

அரபு மொழிகளில் மொழிபெயர்க்கச் சொன்ன மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, மகளிர் இலக்கியத்திற்காக, படைப்பாளிகள், இதுவரைக்கும் இந்த category யை யாரும் வைத்தது கிடையாது. மகளிர் இலக்கியம் என்று அதை categorize செய்து அதற்கான பரிசு கொடுத்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி.

முற்பகல் 11–55

தொழில் துறையிலே அறிவித்திருக்கின்ற முத்தான 12 announcements-ஐப் பார்த்தீர்கள் என்றால், குறிப்பாக, விரைவான ஒரு announcement என்னவென்றால், சென்னை ஏரோஸ்பேஸ் பார்க் லிமிடெட் (Chennai Aerospace Park Limited). Aerospace Park பற்றி பத்து வருடங்களாகப் பேசப்பட்டு வரும் நிலையில், இந்த Aerospace Park–க்கு, அதன் போட்டித் திறனை வலுப்படுத்துவதற்காக Chennai Aerospace Park Limited–ஐ உருவாக்கவுள்ளார்கள். Special Purpose Vehicle–ஆன அதிலே ஒரு Design Centre இதுவரை இந்தியாவிலேயே எனக்குத் தெரிந்து 5 Aerospace Park-தான் இருக்கின்றன. அதிலே எதுவும் இந்த மாதிரி மையமான Design Centre உருவாக்கப்படவில்லை. இந்த Design Centre உருவானால், ஏற்கெனவே 6 Aerospace நிறுவனங்கள் வந்துவிட்டன. 60 நிறுவனங்களாக இது உருவாக நல்ல வாய்ப்பு இருக்கிறது. அதேபோல, தென் மாவட்டங்களில் Textile park அமைக்கப்படும் என்ற அறிவிப்பு மிக முக்கியமான அறிவிப்பு ஆகும். RBI Governor, "இந்தியாவில் இருக்கும் 75 Scheduled Commercial வங்கிகள், 6,000 வங்கிகளாக உருவெடுக்கும்" என்று கூறியிருக்கிறார். நன்கு இயங்கும் கூட்டுறவு வங்கிகள் அனைத்துமே Scheduled Commercial Bank ஆக உருவாக வாய்ப்பு இருக்கும் நேரத்தில், தமிழகத்திலுள்ள Co–operative Banks அனைத்தும் total computerization செய்யப்படும் என்ற அறிவிப்பு முக்கியமானதாகும். 6,000 கோடிக்கு மேல் முதலீடு இருக்கும் கூட்டுறவு வங்கிகள் Scheduled Commercial Bank ஆக உருவெடுப்பதற்கு முதல் அடியாக, அனைத்து கூட்டுறவு வங்கிகளும் total computerization செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி. அனைத்திற்கும் மேலாக, இந்தியாவில், தமிழகம் Gross Enrolment Ratio–ல் முதல் இடத்தில் இருக்கிறது. அதை இன்னும்

வலுப்படுத்தும்விதமாக, இன்று, நான்கு கல்லூரிகள் அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி. தொழில் துறை, வங்கித் துறை, கல்வித் துறை மற்றும் அனைத்திற்கும் ஆதாரமான தமிழ் வளர்ச்சித் துறை என நான்கு துறைகளுக்கு, 27 திட்டங்களை அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் கொள்கைக்கு ஏற்ப, தொலைநோக்குச் சிந்தனையோடு, இந்திய வரலாற்றிலும் சரி, தமிழக வரலாற்றிலும் சரி, இதுவரை இல்லாத அளவிற்கு, நாடே வியக்கும்வண்ணம், இந்த 4 ஆண்டுகள் 6 மாதங்களில் மட்டும் 63 கல்லூரிகளை நாட்டிற்கு அர்ப்பணித்து, உயர் கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர், (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வியை உன்னத நிலைக்கு கொண்டு சென்றவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். 58 ஆண்டுகளுக்குப் பின்பு, "தமிழகத்தில் புதிதாக 5 கல்வியியல் கல்லூரிகள் அமைக்கப்படும்" என்று 3 நாட்களுக்கு முன்பு இம்மாமன்றத்தில் விதி 110-ன்கீழ் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இன்று 41 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போது, தமிழன்னையின் தாய் பூமியாம், சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், அரசுக் கல்லூரி காண்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) விடுதலைக்குப் பிறகு, தேனி மாவட்டம், குமரி மாவட்டம், ஈரோடு மாவட்டம் ஆகியவை அரசுக் கல்லூரியைக் காண்கின்றன. கருணைத் தாயின் தயவால், கனிவால், கல்வியில் தமிழகம் தலை நிமிர்கிறது; அனைத்து மாவட்டங்களிலும் அரசுக் கல்லூரிகள் என்ற நிலையைப் பெறுகிறது; தமிழ்நாட்டில் அரசுக் கல்லூரி இல்லாத மாவட்டமே இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நிலையை உருவாக்கிய மாண்புமிகு அம்மா அவர்களின் பெயர் சரித்திரத்தில் நிலையாய் இடம் பெறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்திருக்கும் ஒன்றைக் கண்டறிவதும், அதுவரையிலும் இல்லாத ஒன்றை

2015 செப்டம்பர் 29] [திரு. பீ. பழனியப்பன்]

ஆராய்ச்சியில் உருவாக்கி, உலகத்திற்கு வெளிப்படுத்துகின்ற நிலையே விஞ்ஞானம் ஆகிறது. சமூகத்தில் மக்களின் உண்மையான பிரச்சினைகளையும், தேவைகளையும் கண்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து, தீர்வுகளை முன்வைப்பதே சமூக விஞ்ஞானம் ஆகிறது. சமூகம், பொருளாதாரம் மற்றும் பாலினரீதியாக, ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான பிரச்சினைகளைக் கண்டறிந்து, தன் எல்லையற்ற பேரறிவால் பல்வேறு நலத் திட்டங்களை வகுத்து, அறிவித்து, தன் பேராண்மைமிக்க நிருவாகத் திறத்தால், அவற்றையெல்லாம் அடித்தட்டு மக்களுக்கு, கடைக்கோடியிலுள்ள மக்களுக்குச் சென்றடையும் வகையில், செயல்படுத்தி வருவதால் மாண்புமிகு அம்மா அவர்கள் சமூக விஞ்ஞானி ஆகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) கடைக்கோடி மக்களின் தேவைகளைக் கண்டறிந்த கல்வித் தாய், இந்தியாவின் வழிகாட்டி, மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

"இனியொரு விதி செய்வோம்" என்றார் மகாகவி பாரதியார். விதி 110-ன்கீழ் 4 புதிய கல்லூரிகளைத் தந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அகவை 67-ல் 67 புதிய கல்லூரிகளைத் தமிழகத்திற்குத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) புத்துயிரூட்டிய புனிதத் தாய், வாழும் மனித தெய்வம், சமூக விஞ்ஞானி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

நண்பகல் 12—00

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அண்ட சராசரத்திலுள்ள ஆயிரமாயிரம் கோள்களைக் காட்டிலும், வெகுவாக மக்களை வியக்க வைத்தது எங்கள் அம்மாவின் குறிக்கோள்தான்! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, தங்கள் குறிக்கோள்தான் அம்மா! அம்மா, தாங்கள் கூர்மதி கொண்டு, கொட்டிக் குவிக்கும் குறிக்கோள்கள் அனைத்தையும், குறி வைத்து சாதித்திடும் தங்களின் ஆற்றலைக் கண்டு முக்கடல் சூழ்ந்த பாரதம் மட்டுமல்ல, பார் உலகே வியக்கிறது அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், 2016 ஆம் ஆண்டில் மட்டுமல்ல, அடுத்து வரும்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அனைத்து தேர்தல்களிலும், எங்கள் மாண்புமிகு அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) சிம்மம்தான் இதே சிம்மாசனத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்றமுடன் வீற்றிருக்கும் அந்தக் கண்கொள்ளாக் காட்சியினை, இந்தக் கார் உலகமே காணும் அம்மா, கார் உலகே காணும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பயிர்க் கடனாக ரூ.9,163 கோடி வழங்கப்பட்டதை, இன்றைக்கு ரூ.18,800 கோடி அளவிற்கு உயர்த்தி வழங்கியும், (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், வைப்புத் தொகை ரூ.26,000 கோடியாக இருந்ததை, ரூ.46,000 கோடி அளவிற்கு உயர்த்தியும், (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த மாநிலத்திலும் சாதித்திடாத சரித்திர சாதனையாக, ரூ.490 கோடி மதிப்பில், 3,879 கிடங்குகளைக் கட்டிக்கொடுத்து, சிறு குறு விவசாயிகளுக்குக் கூடுதல் விலை கிடைக்கவும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிவகை செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அம்மா மருந்தகம், பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த, ரூ.100 கோடியில் விலை நிலைப்படுத்தும் நிதி போன்ற மகத்தான பல புதுமைத் திட்டங்களைத் தந்து, மேதகு ஜனாதிபதி விருது உட்பட, தேசிய அளவில் 17 விருதுகளைத் தமிழகத்தின் கூட்டுறவுச் சங்கங்கள் பெற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிவகுத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசதி படைத்த எல்லோரும் வள்ளல்கள் ஆவதில்லை. வாரி வாரிக் கொடுப்பதும் இல்லை. கொடுப்பதற்கு ஒரு மனம் வேண்டும். இரக்கப்படுவதற்கு ஒரு இதயம் வேண்டும். ஆம், அந்த மனமும் இதயமும் இருக்கிற ஒரே தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பற்றத் தலைவர், மாண்புமிகு நம் தாய் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு வழங்கியுள்ள இந்த முத்தான 4 புதிய திட்டங்களால், கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் வலுப்பெற்று, ஏழையெளிய அடித்தட்டு மக்களுக்கு சிறப்பான சேவையாற்ற வழிவகுக்கும் என்பதை எடுத்துக் கூறி, இந்த அரிய திட்டங்களைத் தந்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

2015 செப்டம்பர் 29] [திரு. செல்லூர் கா. ராஜு]

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கூட்டுறவுத் துறையின் சார்பாகவும், எனது சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களைப் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தான ஒரு சக்தி, மாறாத ஒரு சக்தி, தீராத பெரும் சக்தி, தீய சக்திகளை ஓட ஓட விரட்டிய ஓங்கார மகாசக்தி, (மேசையைத் தட்டும் ஒலி) விசுவாசிகளைக் காக்கும் வித்தக சக்தி, தொண்டர்களின் உயர் சக்தி, 100 ஆண்டுகாலம் வாழ்க அம்மா என்று ஒட்டுமொத்தத் தமிழகமும் வாழ்த்தி வணங்கும் ஒரே சக்தி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மா எனும் அற்புத சக்தியின் திருவடி பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

இன்று, உணவுத் துறையில், கிடங்குகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணிச் சுமை குறையவேண்டும், மனச் சுமை அகலவேண்டும் என்ற தலைசிறந்த எண்ணத்தால், தாயின் கருணை உள்ளத்தால், கிடங்குகளில் தானியங்கி இயந்திரங்கள், அட்டியிடும் இயந்திரங்கள், மின்தூக்கி மற்றும் சுமைதூக்கி அமைப்பதற்கு, விதி 110-ன்கீழ் ஆணையிட்ட 10 கோடி தமிழர்களின் பாசத்தில் விளைந்திட்ட பத்தரை மாற்றுத் தங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) அநீதிக்கு அஞ்சாத ஆற்றல்மிகு சிங்கம், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றியை என் சார்பிலும், துறை சார்பிலும், தொழிலாளர் சார்பிலும் பணிந்து வணங்கி சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகம் என்ற சொல்லுக்கு இன்று அகிலமே அர்த்தம் சொல்வது, 'அம்மா' என்றுதான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தலையெழுத்தை தொழில் மாநாடு நடத்தி தமிழனை ஏற்றம் பெறச் செய்த தன்னிகரில்லாத் தலைவி எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. பி. தங்கமணி] [2015 செப்டம்பர் 29

பேரறிவு, பேராற்றல், பேராண்மை, பெருந்துணிவு இவற்றின் மொத்த வடிவமாக இருக்கும் அறிவுப் பல்கலைக்கழகம் மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடிகளை வணங்குகிறேன்.

பிற்பகல் 12-05

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, ரூபாய் ஒரு இலட்சம் கோடி என்ற இலக்கினைத் தாண்டி, இரண்டு மடங்கு அளவிற்கு முதலீடுகளை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்தது எங்கள் தாயைத் தவிர வேறு யாராலும் முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாநாட்டின் வாயிலாக, 2,42,160 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, 4,70,065 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்ததும் எங்கள் தாய்தான். (மேசையைத் தட்டும் ஒலி) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து, ஒருபுறம் வேலைவாய்ப்பு; மற்றொரு புறம் அரசு நிறுவனங்கள்மூலம் புதிய தொழில்களை உருவாக்கித் தந்து, பல்லாயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருபவரும் எங்கள் தாய்தான். இந்தத் தாய் நாடு, தமிழகம் முன்னணியில் இருக்கின்றது என்பதற்கு சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். Automobile துறையில் தமிழகம் முதலிடம்; Textiles – Spinning Industry-யில் முதலிடம்; Leather-ல் முதலிடம்; (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுலாவில் முதலிடம்; (மேசையைத் தட்டும் ஒலி) மெடிக்கல் சுற்றுலாவில் முதலிடம்; காற்றாலை மின் உற்பத்தியில் முதலிடம்; குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களில் முதலிடம்; திறன் மேம்பாட்டில் முதலிடம்; Metropolitan City-யில் 3 துறைமுகங்கள் இருப்பதில் தமிழகம் முதலிடம்; SEZ செயல்பாடுகளில் தமிழகம் முதலிடம்; ஒரு மாநிலத்தில் 4 பன்னாட்டு விமான நிலையங்கள் இருப்பதில் தமிழகம் முதலிடம்; ஜப்பான் கம்பெனிகள் அதிகம் இருப்பதில் தமிழகம் முதலிடம்; (மேசையைத் தட்டும் ஒலி) டயர் உற்பத்தியில் தமிழகம் முதலிடம்; (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்சாலைகள் அதிகம் இருப்பதில் தமிழகம் முதலிடம்; தொழிலாளர்கள் அதிகம் இருப்பதில் தமிழகம் முதலிடம்; பனியன் ஏற்றுமதியில் தமிழகம் முதலிடம். ஆக, இந்தியாவில் மாண்புமிகு அம்மா அவர்களின் மாநிலமான தமிழகம்தான் முதலிடத்தில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த சாதனைகளையெல்லாம் முறியடிக்க வேண்டுமென்று சொன்னால், எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் மட்டுமே முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

2015 செப்டம்பர் 29] [திரு. பி. தங்கமணி]

4½ ஆண்டு காலத்தில் இத்தனை சாதனைகளைச் செய்திருக்கின்ற எங்கள் தாய், ஒரு தெய்வம். அந்த தெய்வம், மீண்டும், மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும். அவர்கள் உடல் நலத்தோடு தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, அனைத்து மக்களுக்கும் சேவை செய்ய அவர்கள் நீடூழி வாழ வேண்டுமென்று நாங்கள் அனைவரும் இறைவனிடத்தில் மன்றாடிக் கேட்டுக்கொண்டு, கோடானுகோடி நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணின் மணியாய் தமிழகத்தைக் காத்திட்டு, வளர்ச்சிப் பாதையில் ஜவுளித் துறையைக் கொண்டு செல்ல இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனைப் பகுதியில் தொழில் துறை சார்ந்த இனமாக, Integrated Textile Processing Park ரூ.150 கோடியிலும், 30 ஜவுளித் துறை தொழில் நிறுவனங்கள் சுமார் 450 கோடி ரூபாயிலும், அந்தப் பகுதியிலே ஜவுளித் தொழில் வளர்ச்சிப் பெற வேண்டுமென்பதற்காக 6,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுமென்று அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். பெண்ணினத்தின் பெருந்தவமாய், தமிழகத்தில் வந்துதித்த மனிதர்குல மாதவம், எங்கள் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் எழுத்தாளர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், 'அம்மா இலக்கிய விருது' அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து இறையருள் பெற்று, நீடூழி வாழ வேண்டுமென்று. இறைவனைப் பிரார்த்தித்து, நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புண்ணிய நதியாகவும், கண்ணிய கடலாகவும் தமிழகத்தை வளப்படுத்தும் தங்கத் தாய், எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) கருணைப் புதையலாகவும்,

பரிவுத் தென்றலாகவும், நலிந்தோர்க்கு நலம் கொடுக்கும் நம்பிக்கைத் தாய், எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) காலக் கொடையாகவும், ஞான விளக்காகவும், தமிழகம் செழிக்கச் செய்யும் தத்துவத் தாய் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) கண் இமை மூடாது, மதுரையைக் காக்கும் மீனாட்சித் தாயின் வடிவமாய் தமிழகத்தைக் காத்து நிற்கும் தெய்வத் தாய், எங்கள் அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என் முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டு நடப்புகளை உலகறியச் செய்யும் செய்தியாளர்களுக்குத் தங்கள் வீட்டு நடப்புகளைக் கவனிக்க நேரமில்லை என்பதால், செய்தியாளர்களுக்கும், அவர்தம் குடும்பங்களுக்கும் தலைவராக, தாயாக இருந்து நல் உதவிகளைச் செய்துவருபவர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராக ஆட்சியில் அமர்ந்த பிறகு, பத்திரிகையாளர்கள் நலன் குறித்து சிந்தித்தார்கள். தங்களுக்கு இன்னது வேண்டுமென்று பத்திரிகையாளர்கள் யாரும் கேட்கவில்லை. அப்படி, அவர்கள் கேட்க வேண்டுமென்று அம்மா அவர்கள் எண்ணவும் இல்லை, எதிர்பார்க்கவும் இல்லை. கேட்காமலேயே கொடுத்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 14-9-2011-ல் பத்திரிகையாளர்கள் பெற்று வந்த ஓய்வூதியத்தை ரூ.5,000/-லிருந்து ரூ.6,000/- ஆக உயர்த்தினார்கள். குடும்ப ஓய்வூதியத்தை 2,500/- ரூபாயிலிருந்து 3 ஆயிரம் ரூபாயாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்கள். அதற்கடுத்து, 'ஓய்வூதியத்தை சற்று உயர்த்துங்கள்' என்று யாரும் கேட்கவில்லை. மீண்டும் கேட்காமலேயே கொடுத்தார். 7-10-2013-ல், 6 ஆயிரம் ரூபாயாக ஏற்கெனவே உயர்த்திய பத்திரிகையாளர்கள் ஓய்வூதியத்தை, 7,500/- ரூபாயாக மீண்டும் உயர்த்தினார். குடும்ப ஓய்வூதியத்தை 3,000/- ரூபாயிலிருந்து ரூபாய் 4,500/- ஆக உயர்த்தினார். அதேபோலத்தான், இப்பொழுதும் மீண்டும் மூன்றாவது முறையாக விதி 110-ன்கீழ், பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை 8,000/- ரூபாயாகவும், பத்திரிகையாளர் குடும்ப

2015 செப்டம்பர் 29] [திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி]

ஓய்வூதியத்தை 4,750/— ரூபாயாகவும் உயர்த்தி வழங்க, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிப்பு செய்துள்ளார்கள்.

பிற்பகல் 12—10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்களின் நலன் காக்கவும், அவர்களது குலம் காக்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பத்திரிகை உலகமே நன்றி பாராட்டிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அறிவிப்பால், மனமெங்கும் மகிழ்ச்சியால் நிறைந்துள்ள பத்திரிகையாளர்கள் சார்பாகவும், அவர்களது குடும்பத்தினர் சார்பாகவும், பத்திரிகைத் துறை சார்பாகவும், எனது சார்பாகவும், எனது உளமார்ந்த நன்றியை, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து, வணங்கி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விழிபோல எண்ணி, நம் மொழி காக்கவேண்டும்' என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளுக்கேற்ப, 'கன்றின் குரலும், கன்னித் தமிழும், சொல்லும் வார்த்தை அம்மா! அம்மா!' (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கேற்ப, தமிழ் மொழிக்கும், தமிழ் அறிஞர்களைப் பெருமைப்படுத்துகின்ற எண்ணற்ற திட்டங்களைக் கொடுத்து, உலகத் தமிழ் மக்களின் விழிகளில் நிறைந்திருக்கும் வெற்றித் திருமகள் எங்கள் அம்மா, மாண்புமிகு முதல்வர் அவர்களால், (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110—ன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகளுக்கு, இப்பேரவையின் சார்பிலும், உலகத் தமிழ் அறிஞர்களின் சார்பிலும், என்னுடைய மனமார்ந்த நன்றியினைப் பாதம் பணிந்து வணங்கிச் சமர்ப்பித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'அறம் செய விரும்பு' என்று சொன்ன தமிழ் மூதாட்டி ஔவையார் பெயரிலே விருது அறிவித்து, ஔவைக்கும் புகழ் சேர்த்த புனிதம், மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஔவையாரின்

ஆத்திச்சூடியை, சீனம் மற்றும் அரபு மொழிகளிலே மொழி பெயர்த்து வெளியிட, திருக்குறளை கொரிய மொழியிலே வெளியிட நிதியொதுக்கம் செய்து அறிவிப்பு; மேலும், அம்மா இலக்கிய விருது, தமிழ்க் கவிஞர் நாள், பத்திரிகையாளர் ஓய்வூதியம் உயர்வு என இன்றைக்குச் சிறப்பான அறிவிப்புகளைத் தந்துள்ளார் மாண்புமிகு அம்மா அவர்கள்.

புதிய தலைமுறை இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகளைப் பன்மடங்காக்க, புரிந்துணர்வு ஒப்பந்தங்களால் புரட்சிகளைப் படைத்திடும் பூலோக வைகுந்தம் தந்த புத்தொளி; புரட்சிகளின் தலைமை; தொழில்கள் வளர, உற்பத்தி பெருக, தொழிலாளர்கள் வளமோடு வாழ, வேலைவாய்ப்புகள் பெருக 12 அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள். மொத்த மாநிலங்களும் மெத்த வியப்புடன் நோக்கிட வைத்தார்கள். அம்மா! எல்லையில்லா தங்களின் அர்ப்பணிப்பு; அதுவே இவ்வுலகின் வியப்பு. மேலும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் 5 சிறப்பான அறிவிப்புகள். மேலும், தமிழ்நாட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லாத மாவட்டமே இல்லை என்ற நிலையை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) புதிய கல்லூரிகள் தொடங்குவதற்கான அறிவிப்புகள்.

நேற்றைக்கு, 'விதி 110—ன்கீழ், இப்பேரவையில் மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகள் 176' என்றேன். இன்றைக்கு மணிமகுடத்திலே சேர்க்கப்பட்ட ஐந்து வைரங்களாக, மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்ட ஐந்து அறிவிப்புகளையும் சேர்த்து, 14—வது சட்டமன்றப் பேரவையில், விதி எண் 110—ன்கீழ், 181 அறிவிப்புகளை, (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பான 181 அறிவிப்புகளை, தமிழகத்தின் தலையெழுத்தை மாற்றக்கூடிய 181 அறிவிப்புகளை, தமிழக மக்களின் விதியை மாற்றக்கூடிய, வெல்லக்கூடிய 181 அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் தந்துள்ளார்கள். இந்த அறிவிப்புகள் ஒவ்வொன்றும் மகாபாரதத்தின் மகத்துவம் போன்றது; இராமாயணத்தின் இனிமை போன்றது; சிலப்பதிகாரத்தின் சிறப்பு போன்றது; திருக்குறளின் அறம் போன்றது; சீவகசிந்தாமணியின் சிறப்பு போன்றது. கண் துஞ்சா உழைக்கும் கனிவுத் தாயின், காவேரி வெற்றி தந்த காவியத் தாயின், (மேசையைத் தட்டும் ஒலி) காலமெல்லாம் தமிழகத்தை வாழ்விக்கும் கற்பக விருட்சத்தின் விதி

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

110-ன்கீழ் வெளியிட்ட 181 அறிவிப்புகள், ஒவ்வொன்றும் மகுடத்திலே பதித்த நவரத்தினம்; குழந்தைகள் நலம் பேணும் கோமேதக அறிவிப்புகள்; சிறுவர்களைக் காக்கும் மரகத அறிவிப்புகள்; இளைஞர்களை உயர்த்திடும் இரத்தின அறிவிப்புகள்; முதியவர்களைக் காத்திடும் முத்தான அறிவிப்புகள்; மாதர் குலம் போற்றும் மாணிக்க அறிவிப்புகள்; வறியவர்களை வாழ்வித்திடும் வைர அறிவிப்புகள்; தனியொரு தலைவியாகப் போராடி, வெற்றி பெற்று, தியாக சரித்திரம் படைத்த மாண்புமிகு அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110-ன்கீழ் வெளியிட்ட இந்த 181 அறிவிப்புகளையும் இந்த நூற்றாண்டு மட்டுமா போற்றிப் புகழும், மனித சமுதாயம் ஏழு பிறப்பும் போற்றுமே! (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டுமே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இப்பேரவையின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

4. தகவல் கோரல்

(அ) சத்துணவு ஊழியர்கள் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சத்துணவு ஊழியர்கள் ** குறித்து விவாதிக்க வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உறுப்பினர் இன்று காலை 10–15 மணிக்குதான் அறிவிப்பை இங்கு கொண்டு வந்து கொடுத்தார். (குறுக்கீடு) இல்லை, உங்கள் கட்சியின் கொறடா அவர்கள் 10–15–க்குத்தான் அறிவிப்பைக் கொண்டுவந்து கொடுத்தார். உடனே, அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்றால் எப்படி? உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். இப்பொழுதுதான் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதனால், இப்பொழுது உட்காருங்கள். பிறகு பார்க்கலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். பிறகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பார்க்கலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், (குறுக்கீடு) மற்றவர்களெல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடு) கட்சிக்கு ஒருவர் பேசட்டும். (குறுக்கீடு) கட்சிக்கு ஒருவர் பேசட்டும். திரு. துரைமுருகன் அவர்கள் சொல்லிவிட்டார்கள். திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் நேற்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** சத்துணவு ஊழியர்கள் நேற்று அவர்கள் கோரிக்கைக்காகப் பேரணி வந்தபோது ** அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பிரச்சினையை பேசித் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதன்மீது என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், என்னவென்று சொல்லுங்கள்.

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா பகுதியில் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னவென்று சொல்லவிடுங்கள். ஒரு வார்த்தையாவது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) முதலில் அவர்களுக்கு பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) அவர்களுக்கு பதில் சொல்லட்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் சொன்னதைத்தான் நான் பதிவு செய்துகொண்டுவிட்டேனே. (குறுக்கீடு)

(ஆ) சத்துணவு ஊழியர்கள் பிரச்சினை—தொடர்ச்சி.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். திரு. துரைமுருகன், நீங்கள் சொன்னதை நான் பதிவு செய்துகொண்டுவிட்டேன். (குறுக்கீடு) பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு). நீங்களே அதைப்பற்றிச் சொல்லியிருக்கலாம். திரு. வேலுவிடம் கொடுத்து, சொல்லச் சொல்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சத்துணவு அமைப்பாளர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து மனு கொடுக்க வேண்டுமென்று வந்திருக்கிறார்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு பேசியவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. சத்துணவு குறித்த பிரச்சினையைப்பற்றி மட்டும் மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் என்பதை மட்டும் சொல்லி உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, உங்களுடைய கோரிக்கை என்னவென்று சொல்லுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சத்துணவு அமைப்பாளர்கள் ** அவர்கள் போராடியிருக்கிறார்கள். அதேபோல. . .*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு அவர்கள் அவையின் கவனத்தை ஈர்த்திருந்தால் பரவாயில்லை. அவர் வேறு ஏதேதோ பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பேசுகிறார். (குறுக்கீடு) சத்துணவு அமைப்பாளர்களுடைய பிரச்சினைகளை, கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று சொன்னால் நான் பதிவு செய்துகொள்வேன். திரு. எ.வ. வேலு அவர்கள் வேறு ஏதேதோ பிரச்சினைகளையெல்லாம் பேசுகின்றார். (குறுக்கீடுகள்) வேறு பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) இருங்கள். வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, என்னவென்று சொல்லுங்கள். இந்த சப்ஜெக்ட் குறித்தா அல்லது வேறு சப்ஜெக்ட் குறித்து சொல்லப்போகிறீர்களா? இதே சப்ஜெக்ட் குறித்தது என்றால், அவையின் கவனத்தை ஈர்த்துவிட்டு, உட்காருங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் ** குறித்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் பேசக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

பிற்பகல் 12–20

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை—*தொடர்ச்சி*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகா தண்ணீர் தரமாட்டேன் என்று கை விரித்துவிட்டது. நேற்று நடந்த கூட்டத்தில் தண்ணீர் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கராஜன், நீங்கள் உட்காருங்கள். அதுபற்றி பிறகு பேசலாம். இப்போது நீங்கள் உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2015 செப்டம்பர் 29]

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதனைக் கொடுத்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. அதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுங்கள். இன்றைக்கு டெல்டா மாவட்டத்தில் கடை அடைப்பு எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றது. தயவுசெய்து காவேரி பிரச்சினையை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா பகுதி இன்றைக்கு கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகா நமக்கு உரிய காவேரி நீரை வழங்க மறுத்துள்ளது. நேற்றையதினம் காவேரி நதி நீர்ப் பங்கீட்டு மேற்பார்வைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில்கூட கர்நாடக அரசு தன்னிச்சையாக தண்ணீர் வழங்க முடியாது என்று சொல்லியிருக்கின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், என்ன? (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

(அ) சத்துணவு **ஊழியர்கள்** பிரச்சினை—தொடர்ச்சி

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சத்துணவு ஊழியர்கள், மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் என்னவென்று சொல்லுங்கள்?*

[2015 செப்டம்பர் 29

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை—தொடர்ச்சி

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா பாசனத்திற்குத் தண்ணீர் வழங்க முடியாது என்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், கொஞ்சம் இருங்கள், சத்துணவு ஊழியர்கள் பிரச்சினையை நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அடுத்தது, உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புழல் சிறையில், கடந்த 25 ஆம் தேதி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜவாஹிருல்லா, நீங்கள் உட்காருங்கள். அடுத்தது நீங்கள் பேசலாம், கொஞ்சம் இருங்கள். இப்பொழுது உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம், நீங்கள் உட்காருங்கள், நான் பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, நீங்கள் சத்துணவு குறித்து பேசப் போகிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள். உங்கள் பெயரை நான் அதில் சேர்த்துக்கொள்கிறேன். இப்போது உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

(இ) சத்துணவு ஊழியர்கள் பிரச்சினை—தொடர்ச்சி

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை சந்திக்கவேண்டும் என்று பல மாவட்டங்களிலிருந்து. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசும்போது, நான் அதனை எடுத்துக்கொள்கிறேன். இப்போது எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டம் என்று அறிவிக்கப்படவில்லை. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் தேவையில்லாததைப் பேசினால், நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்காமல் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்தை ஈர்க்கவேண்டும் என்கிற தலைப்பிட்டு, அவர்கள் பேரணி நடத்தி வந்திருக்கிறார்கள். வந்தவர்களை முறையாக காவல் துறையினர் அவர்களை அழைத்துக் கொண்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கர், நீங்கள் உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் சொல்லிவிட்டார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) பதிவு செய்துவிட்டேன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவர்களை முறையாக காவல் துறையினர் அழைத்துக்கொண்டு, சமூக நலத் துறையின் செயலரைப் பார்த்துப் பேசியிருக்கிறார்கள். பேசியதற்குப் பிறகு, இரவு நேரம் ஆகி விட்ட காரணத்தினால், அமைச்சர் அவர்களை சந்திக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, காவல் துறையினரின் அனுமதியோடு, அவர்களின் துணையோடு, நேற்று இரவு 10¾ மணியளவில் என்னுடைய இல்லத்திற்கு வந்து, கிட்டத்தட்ட 15 நிருவாகிகள், சத்துணவு ஊழியர்கள் அனைவரும் வந்து சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் பேசியபோது, இதுபோன்று ** எந்தப் பிரச்சினையும் எழவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை சந்திக்கவேண்டும் என்கிற ஒரே ஒரு குறிக்கோளை மட்டும், கோரிக்கையை மட்டும் வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அது நிறைவேற்றப்படும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்ததற்குப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிறகு, மிகவும் மகிழ்ச்சியாக (மேசையைத் தட்டும் ஒலி), இரண்டொரு கோரிக்கைகளை மட்டும் என்னிடத்திலே தெரிவித்தவுடனேயே, நான் அவர்களுக்கு திருப்பிச் சொன்னேன், எதுவாக இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும். மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுசென்று, உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும் என்று சொன்னதற்குப் பிறகு, மீண்டும் இரவு 12-00 மணியளவில் என்னை சந்தித்து, நன்றாக, மகிழ்ச்சியாக பேசிவிட்டு, இன்று மாலை 5-00 மணியளவில் என்னை மீண்டும் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு, சந்தோஷமாகச் சென்றிருக்கிறார்கள் என்பதுதான் உண்மையே தவிர, ** இதை எதிர்க்கட்சியைச் சேர்ந்திருக்கிற மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள் சொல்வதுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது, விசித்திரமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சத்துணவு ஊழியர்கள், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் போராட்டம் நடத்தியபோது, அன்றைய சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. அன்றைக்கிருந்த தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் சொல்லியிருக்கிறார், "சத்துணவு ஊழியர்கள் போராட்டமா? அந்தப் போராட்டத்தை இரும்புக் கரம் கொண்டு அரசாங்கம் அடக்கும்" என்று சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இது தி.மு.க. தலைவர், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் சொன்ன வார்த்தையாகும். எங்களிடத்தில் ஆதாரம் இருக்கின்றது. (குறுக்கீடு) ஆதாரத்தை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் காட்ட விரும்புகிறேன். ** மகிழ்ச்சியோடு சத்துணவு ஊழியர்கள் சென்றிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவர் சொன்னாரா, இல்லையா என்பது மாண்புமிகு கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

பிற்பகல் 12-25

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ *உட்காருங்கள்.*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: ** என்பதை அவைக் குறிப்பிலே இருந்து எடுக்க வேண்டுமென்று (குறுக்கீடுகள்) கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், என்ன விஷயம்? சொல்லுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியிலே குறுவை சாகுபடி இல்லாமல் சம்பா மட்டும் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு டெல்லியிலே நடைபெற்ற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், அதுகுறித்து கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்லி, உட்காருங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: அந்தக் குழுவில் கர்நாடகம் தண்ணீர் தர முடியாது என்று மறுத்துவிட்டது. இதனால் சம்பா சாகுபடி நடைபெறாதோ என்கிற மிகுந்த அச்சம் கலந்த சூழ்நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அதெல்லாம் விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன் அவர்கள்.

திரு. க. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா பகுதி கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலையில் காவேரி நதிநீர்ப் பிரச்சினை மேற்பார்வைக் குழுவினுடைய கூட்டம் டெல்லியிலே நடைபெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன், கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. சு. குணசேகரன்: *கர்நாடகா தண்ணீர் தர மறுக்கிறது. அதனுடைய அவசர முக்கியத்துவத்தைக் கருதி இன்றைக்கு அங்கு காவேரி டெல்டா பகுதியிலே கடையடைப்பு போன்ற போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, கவனத்தை ஈர்த்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் ஏற்கெனவே பேசிவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஏற்கெனவே பேசிவிட்டீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியில் குறுவை பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் சம்பாவைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கவனத்தை ஈர்த்து. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோருக்கும் பேச வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். திரும்பத் திரும்ப தவறானதை எல்லாம் பேசவேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) இருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25 ஆம் தேதி சென்னை புழல் சிறையில் கைதிகளுக்கும், சிறை அலுவலர்களுக்கும் இடையிலே நடைபெற்ற. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உங்கள் உறுப்பினர்தான் (குறுக்கீடுகள்) அப்புறம் ரெக்கார்டு பண்ணுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முனைவர் கோவி. செழியன், என்னவென்று சொல்லுங்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்படக்கூடிய வகையில் (குறுக்கீடுகள்)*

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் பெயரையும் சேர்த்துக்கொள்கிறேன், உட்காருங்கள்.

முனைவர் கோவி. செழியன்: கர்நாடக அரசு மேகதாது அணையின் குறுக்கே அணை கட்டுவதைக் கண்டிக்கக்கூடிய வகையிலும், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் பெயரையும் சேர்த்துக்கொள்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், (குறுக்கீடு) திரு. க. குணசேகரன், வாய்ப்பில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) நான் பார்க்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களை வற்புறுத்த முடியாது. நீங்கள் உட்காருங்கள். கவனத்தை ஈர்த்துவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசிவிட்டீர்கள். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் பேசும் வாய்ப்பை தவறாகப் பயன்படுத்துகிறீர்கள். (குறுக்கீடு) உங்களுடைய பெயரைப் பதிவு செய்யலாம். போதும், நீங்கள் உட்காருங்கள்.

5. கவன ஈர்ப்பு

கும்பகோணம் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை 45C அமைக்கும் பணிகளை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்பகோணம் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை (N.H.–45C) அமைக்கும் பணிகளை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

[2015 செப்டம்பர் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு அறிவிப்புத் தொடர்பான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

தேசிய நெடுஞ்சாலை, (N.H.–45C) விக்கிரவாண்டி–கும்பகோணம்–தஞ்சாவூர் சாலை, தமிழகத்தில் உள்ள முக்கியமான தேசிய நெடுஞ்சாலைகளுள் ஒன்றாகும். இச்சாலை, மத்திய அரசால் 2005 ஆம் ஆண்டு தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு, தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (N.H.D.P.–IV) மேம்பாடு செய்ய இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இம்மேம்பாட்டுத் திட்டத்தில் விக்கிரவாண்டி (கி.மீ. 0/0) முதல் மீன்சுருட்டி (கி.மீ. 93/500) வரை உள்ள சாலைப் பகுதியை நான்கு வழித்தடமாகவும், மீன்சுருட்டி (கி.மீ. 93/500) முதல் தஞ்சாவூர் (கி.மீ. 165/00) வரை உள்ள சாலைப் பகுதியை கடின புருவங்களுடன்கூடிய இரு வழிச் சாலையாகவும் மேம்பாடு செய்ய முடிவு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்யப்பட்டது.

இச்சாலையை கட்டுமானம், இயக்குதல் மற்றும் மாற்றுதல் (B.O.T.) முறையில் மேம்பாடு செய்ய யாரும் முன்வராததால், தற்பொழுது பொறியியல், கொள்முதல், கட்டுமான (E.P.C.) முறையின்மூலம் ஒப்பந்தம் கோர விரிவான திட்ட அறிக்கை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை தயார் செய்து, நிலம் கையகப்படுத்தும் பணி 90 விழுக்காடு முடிந்தவுடன், மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், பராமரிப்புப் பணிகள் மட்டும் மத்திய அரசின் ஒப்புதலின்படி ஜனவரி 2014 முதல் தற்பொழுது வரை மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் ரூ.54.50 கோடிக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

2015 செப்டம்பர் 29]

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி, பண்ருட்டி, நெய்வேலி, சேத்தியாத்தோப்பு, அணைக்கரை, கும்பகோணம், பாபநாசம் நகரங்களை இணைக்கும் சாலை, மேலும், விழுப்புரம், கடலூர், அரியலூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களை இணைக்கும் 165 கிலோ மீட்டர் நீளம் கொண்ட, விக்கிரவாண்டி–தஞ்சாவூர் (N.H.–45C) சாலையை அகலப்படுத்தும் பணி மற்றும் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே உள்ள 3 பாலங்களையும் இணைக்கும், ஒரே தொடர் பாலமாக அணைக்கரையில் புதிய பாலம் அமைக்கும் பணி மற்றும் இதற்கான நில எடுப்புப் பணி ஆகியவை பெருமளவில் முடிவுற்றதாகத் தெரிகிறது. இதில் விக்கிரவாண்டி–மீன்சுருட்டி பகுதி நான்கு வழிப் பாதையாகவும், மீன்சுருட்டி–தஞ்சாவூர் பகுதி இரண்டு வழிப் பாதையாகவும் அமைய உள்ளது. 2016–ல் கும்பகோணம் மகாமக விழா நடைபெறுவதை முன்னிட்டு இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து பல இலட்சக்கணக்கான பக்தர்கள் கும்பகோணத்திற்கு வருகை தர உள்ளதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தஞ்சாவூர், கும்பகோணம், மீன்சுருட்டி பகுதிகளில் இருவழிப் பாதை அமைக்கும் பணிக்கு முன்னுரிமை அளித்து அதை விரைவுபடுத்தி, கும்பகோணம் மகாமகப் பெருவிழாவிற்கு பெருமை சேர்க்கும் வகையில் சாலை அமைக்க. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், ஒரு கேள்வி கேளுங்கள். நீங்கள் எழுதி வைத்ததையெல்லாம் படித்துக் கொண்டிருக்காதீர்கள்.

திரு. க. அன்பழகன்: இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தது என்றாலும், 2016 மகாமகப் பெருவிழாவிற்கு குறுகிய காலமே உள்ள காரணத்தினால் அதன் முக்கியத்துவம் கருதி மகாமகம் தொடர்பான ஊராட்சி, நகராட்சித் துறை, அறநிலையத் துறை, பொதுப் பணித் துறை, போக்குவரத்துத் துறை, மின் வாரியம், காவல் துறை மற்றும் பல்வேறு துறைப் பணிகளை விரைவுபடுத்தியும், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இந்த மன்றத்திலே இருக்கிற காரணத்தினால், அவர்கள் பொதுமக்களுக்கு விளக்கியும் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வருகின்ற பக்தர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தரவேண்டும் என்றும், பாதுகாப்பையும் தரவேண்டும் என்றும், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2015 செப்டம்பர் 29

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை N.H. 45C விக்கிரவாண்டி-கும்பகோணம்-தஞ்சாவூர் சாலை தமிழகத்திலுள்ள முக்கியமான தேசிய நெடுஞ்சாலையாகும். 165 கிலோ மீட்டர் நீளமுள்ள இச்சாலை விக்கிரவாண்டியில் தொடங்கி, கோலியனூர், பண்ருட்டி, வடலூர், சேத்தியாத்தோப்பு, மீன்சுருட்டி, அணைக்கரை, திருப்பனந்தாள், கும்பகோணம், பாபநாசம் ஆகிய ஊர்களை இணைத்து தஞ்சாவூரில் முடிவடைகிறது. இச்சாலை மைய அரசால் 6-12-2005-ல் தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒப்படைக்கப்பட்டது. இம்மேம்பாட்டுத் திட்டத்தில் விக்கிரவாண்டி முதல் மீன்சுருட்டி வரையுள்ள 93.5 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பகுதியை 4 வழித் தடமாகவும், மீன்சுருட்டி முதல் தஞ்சாவூர் வரையுள்ள சாலைப் பகுதியை கடினப் புருவங்களுடன்கூடிய 10 மீட்டர் அகலச் சாலையாக மேம்படுத்தவும் முடிவு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தயார் செய்யப்பட்டது. திட்ட அறிக்கையின்படி மேற்படி சாலையினை ரூபாய் 1,090 கோடி செலவில் கட்டுதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் (B.O.T.) முறையில் மேம்படுத்த முதல் ஒப்பந்தப்புள்ளி 6-3-2012-ல் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் கோரப்பட்டு, இந்த ஒப்பந்தப்புள்ளி 20-3-2012 மற்றும் 25-4-2012 ஆகிய இரு தினங்களில் நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்துகொள்ளாததால், இரண்டாம் முறையாக ஒப்பந்தப்புள்ளி 31-3-2013 அன்று கோரப்பட்டும், யாரும் கலந்துகொள்ளவில்லை. எனவே, இப்பணியை பொறியியல், கொள்முதல், கட்டுமானம், (EPC) முறையின்மூலம் மேற்கொள்ள 4-11-2013 அன்று முடிவு செய்து, இதற்குரிய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் சாலையை ஒப்படைத்த

2015 செப்டம்பர் 29][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நாளிலிருந்து அதாவது 2005-லிருந்து 2013 வரை கடந்த 8 ஆண்டு காலமாக எவ்வித பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளாத காரணத்தினால் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். தொடர்ச்சியாக புகார் வந்தபோதிலும், மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனை அறியாத சில பொதுமக்கள் பத்திரிகைகளில், ஊடகங்களில் இச்சாலை மாநில அரசின் பராமரிப்பில் இருப்பதாகவும், சரியான முறையில் பராமரிக்கவில்லை எனவும் தவறான கருத்தைக் கொண்டிருந்தனர். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தியதால், பராமரிப்புப் பணியை மேற்கொள்ளாத சாலையினை மீண்டும் மாநில தேசிய நெடுஞ்சாலை அலகிடம் ஜனவரி 2014-ல் மத்திய அரசு ஒப்படைத்ததால், தற்போது பகுதி, பகுதியாக பராமரிப்புப் பணிகள் நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், மத்திய அரசு மாநில தேசிய நெடுஞ்சாலை அலகிடம் சாலையினை ஒப்படைக்கும் முன்பே, இச்சாலையினைப் பயன்படுத்தும் பொதுமக்களின் தேவையினைக் கருத்தில்கொண்டு, மேற்படி சாலையைப் போக்குவரத்துப் பயன்பாட்டிற்கு ஏதுவாக பராமரிக்கும் பொருட்டு, மாண்புமிகு அம்மாவின் அரசு, 6 கோடி ரூபாய் மாநில அரசு நிதியினை 18-4-2013 அன்று ஒதுக்கீடு செய்து, அதிக சேதம் அடைந்த கொள்ளுக்காரன்குட்டை, இந்திரா நகர், வடகுத்து, வடலூர், மீன்சுருட்டி, பாப்பாக்குடி, ஜெயங்கொண்டம், அணைக்கரை, கொரநாட்டுக் கருப்பூர், கும்பகோணம், தாராசுரம், பாபநாசம், சுவாமிமலை, தஞ்சாவூர் ஆகிய ஊர்களில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய அரசு ஜனவரி 2014 முதல் தற்போது வரை பராமரிப்புப் பணிக்காக மொத்தம் ரூபாய் 54 கோடியே 50 இலட்சம் மதிப்பிற்கு அங்கீகாரம் வழங்கி, சேதமடைந்த சாலைப் பகுதிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மாவின் அரசு தேசிய நெடுஞ்சாலை N.H. 45C விக்கிரவாண்டி-கும்பகோணம்-தஞ்சாவூர் சாலையினை அகலப்படுத்தி, மேம்படுத்தும் பணிகளை விரைந்து முடிக்க மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015–2016 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்களுக்கான (குறுக்கீடு) என்ன? நான் அடுத்த அலுவலுக்குள்ளே போகிறேன். திரு. ரெங்கராஜன், உங்களுக்கெல்லாம் வாய்ப்பு கொடுத்துவிட்டேன். திரும்பத் திரும்ப எழுந்து நிற்பது சரியில்லை. வாய்ப்பு இல்லை, இன்றைக்கு கில்லட்டின் நாள். இன்றைக்கெல்லாம் இப்படி, திரும்பத் திரும்ப எழுந்து நிற்பது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. இன்றைக்கு கில்லட்டின் நாள். இன்றைக்கெல்லாம் இப்படி, திரும்பத் திரும்ப எழுந்து நிற்பது முறையில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன டாக்டர் கிருஷ்ணசாமி? இதெல்லாம் முறையில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொல்லுங்கள், பதில் சொல்லுங்கள் என்று . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் பேசிக்கொண்டிருக்கும்போது, நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்களே?*

பிற்பகல் 12–35

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *கொஞ்சம் பொறுங்கள். பதில் சொல்லுங்கள், பதில் சொல்லுங்கள் என்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கேட்பதுதான் விநோதமாக, வியப்பாக இருக்கிறது. காவேரி பிரச்சினையில், காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு 2007–ல் வழங்கப்பட்டது. அதனை உறுதிப்படுத்துவதற்கு, அதனை மத்திய அரசினுடைய அரசிதழில் வெளியிட வேண்டும். அப்பொழுதுதான் அது முழுமைப் பெறுகின்ற நிலை ஏற்படும். அப்போது காங்கிரஸ் தலைமையிலான அரசுதான் மத்திய ஆட்சியில் இருந்தது. அவர்களோடு தி.மு.க.–கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அங்கே அமைச்சர்களாக மத்தியில் ஆட்சியில் இருந்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–ல் தமிழகத்தினுடைய முதலமைச்சராக*

2015 செப்டம்பர் 29] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வரும் வரை அந்தத் தீர்ப்புக்கு மத்திய அரசின் அரசிதழில் இடம்பெறச் செய்ய காங்கிரசாலும் முடியவில்லை, தி.மு.க.—வினாலும் முடியவில்லை. இதுதான் உண்மை நிலை. அதற்குப் பின்னால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்தப் பிரச்சினையை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று வழக்குகள் போட்டு வாதாடி, போராடி அதற்கு சட்டப்பூர்வமான அங்கீகாரம் கிடைக்கின்ற வகையில் மத்திய அரசினுடைய அரசிதழில் வெளியிடச் செய்த பெருமை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி டெல்டா பாசனப் பகுதி மட்டுமல்லாமல் தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை விவசாயிகளின் உயிர்நாடியாக விளங்கிக்கொண்டிருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். காவேரியில் உரிய நீரைப் பெறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய நடவடிக்கையினை உறுதியாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே பதிலாக உங்களுக்குத் தருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். கவலை வேண்டாம். மகிழ்ச்சியோடு இருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் ஒன்றும் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் எதுவும் பதிவாகாது. உங்களுக்கு நான் அனுமதி அளிக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி இன்றைக்கு கில்லட்டின் செய்தாக வேண்டும். எனக்கு நேரம் இல்லை. (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் அவைக் குறிப்பில் வராது. உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் வாய்ப்பு இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இதையெல்லாம் எனது அறையில் வந்து கேளுங்கள். இப்படியெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடு) இப்படிப் பேசினீர்கள் என்று சொன்னால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) நீங்கள் எனக்கு ஒத்துழைக்காமல் பிடிவாதமாகப் பேசுவது முறையில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, கோபப்படவில்லை. (குறுக்கீடு) அவரிடம் எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறார். இதுபோல் திரும்பத் திரும்ப சொல்வது முறையில்லை. (குறுக்கீடு) இதுபோல் செய்வது

முறையில்லை. (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தொடர்ந்து இந்த அவைக்கு ஒவ்வாத செயல்களைச் செய்வதால் கிருஷ்ணசாமி அவர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமியை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். காவலர்கள் அவரை வெளியேற்றுங்கள். (குறுக்கீடு) காவலர்கள் அவரை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) காவலர்களுக்கு தொல்லை கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) காவலர்களோடு ஒத்துழைத்து வெளியில் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) காவலர்களை தொல்லை செய்யாதீர்கள். (குறுக்கீடு)

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஒரு பதாகையினை உயர்த்திக் காட்டினார்)

அதையெல்லாம் காண்பிப்பது அவைக்கு ஒவ்வாத காரியம். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமியை வன்மையாகக் கண்டிக்கிறேன். அவரை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

(புதிய தமிழகக் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

6. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2015–2016, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015–2016 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்களுக்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015–2016 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இ

இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள் மொத்தம் 1,012.30 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

2. 2015 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாளன்று 2014-2015 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு 'புதுப் பணிகள்' மற்றும் 'புது துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடுசெய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.

பிற்பகல் 12-40

3. மாநில போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நிலுவையிலிருந்த அகவிலைப்படி தொகை, ஊதிய ஒப்பந்தத் தொகை மற்றும் ஓய்வுக்கால பலன்கள் ஆகியவற்றைத் தீர்வு செய்வதற்காக அனைத்து மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழிவகை முன்பணம் வழங்க 208 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. (குறுக்கீடு) இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் 208 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

4. 2009 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் பிரிவு 12(1)(சி)-ன் கீழுள்ள கூறுகளின்படி, அரசு உதவி பெறாத தனியார் பள்ளிகளில் 2013-2014 மற்றும் 2014-2015 ஆம் ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான கட்டணத்தை அப்பள்ளிகளுக்கு திரும்ப அளிப்பதற்காக, அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்கு அரசு 97.05 கோடி ரூபாயை வழிவகை முன்பணமாக அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை" என்பதன்கீழ் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

5. புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தை

@ 97 முதல் 100 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது

மேம்படுத்தும் வகையில், 310.02 கி.மீ. நீளத்திற்கு முக்கிய மற்றும் ஊட்டுக் குழாய்கள் அமைப்பதற்கு, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு, உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து 116.03 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை” என்பதன்கீழ் 40.73 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

6. சென்னை வெளிவட்டச் சாலை பகுதி–I திட்டத்தின்கீழ் பேருந்து நிறுத்த வழித்தடம், சாலையோர வசதிகள், மாற்றிகள் கட்டுதல் மற்றும் சிறிய மற்றும் பெரிய சந்திப்புகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக நிலம் கையகப்படுத்துவதற்கு அரசு, 113.50 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/– “மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.

7. தேசிய புற்றுநோய், நீரிழிவு மற்றும் இதய இரத்தக் குழாய் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்புத் திட்டத்தின்கீழ் அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தை மாநில புற்றுநோய் ஆராய்ச்சி மையமாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு 89.84 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதற்கென, இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 19 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை” என்பதன்கீழ் 89.84 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

8. கடலூர் மாவட்டம், சிதம்பரம்–நந்தனார் அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி வளாகத்திலும், திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை–ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி வளாகத்திலும் புதிய பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்க, அரசு 111.46 கோடி ரூபாய்க்கு நிருவாக அனுமதி அளித்துள்ளது. இதற்கென, இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை” என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கமாக ஒவ்வொரு இனத்தின் கீழும் ரூபாய் 1,000/– சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.

9. சென்னை அரசு பொது மருத்துவமனையின் முடநீக்கியல் துறை, சிறுநீரகவியல் மற்றும் சிறுநீர் பாதையியல் துறைகளுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கு 49.13 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 39 – கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)" என்பதன்கீழ் ரூபாய் 1,000/– சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.

10. நபார்டு வங்கி கடனுதவியுடன் 579 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள், கழிப்பறைகள், சுற்றுச் சுவர் அமைத்தல் மற்றும் குடிநீர் வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு, அரசு 250.19 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 43 – பள்ளிக் கல்வித் துறை" என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கமாக ஒவ்வொரு இனத்தின் கீழும் ரூபாய் 1,000/– சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.

பிற்பகல் 12–45

11. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015–2016 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2015–2016 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	1	..	..
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	1	..	..
3	நீதி நிருவாகம்	4,00,36	..	..
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	131,48,08	1	..

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
5	வேளாண்மைத் துறை	6,60,09	5	..
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	8,00,02	1	..
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	3	2	..
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	6	..	..
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	1	1	..
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	2,73,02	..	..
14	எரிசக்தித் துறை	3,00,01	..	51,98
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	..	1	..
16	நிதித் துறை	1,29,69	..	..
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	2,37,51	..	..
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	1,00,00	..	..
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	97,31,74	1	..

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
20	உயர் கல்வித் துறை	20,41	8	..
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	1	80,36,91	80,00,00
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	10,10	2	..
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1,00,03	94,65	..
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1,59,49	1	..
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	49,68,53	..	..
27	தொழில் துறை	2	..	2
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	2	..	..
29	சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	1	..	..
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	..	1	..
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	1	..	..
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	1,06,31	2	..
33	சட்டத் துறை	..	1	..
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	30,03	..	..

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	2	..	..
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	7,89	..	..
38	பொதுத் துறை	1,16,55	..	..
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	..	28,88,65	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	6	34,56,82	..
41	வருவாய்த் துறை	1,18,11	..	..
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	2,75,33	..	..
43	பள்ளிக் கல்வித் துறை	1,42,31	60,21,81	97,05,00
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	2	..	..
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	5	..	..
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	3	..	..
48	போக்குவரத்துத் துறை	..	..	208,00,00
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	13,45,07	..	..
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	1	..	..
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	69,19,96	..	..
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	2,70,93	2,56,44	2,00,00
	பெருமொத்தம்	**403,71,95**	**207,55,55**	**387,57,00**

7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1998–1999, 1999–2000, 2000–2001, 2001–2002, 2002–2003, 2003–2004 மற்றும் 2004–2005, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1998–1999, 1999–2000, 2000–2001, 2001–2002, 2002–2003, 2003–2004 மற்றும் 2004–2005 ஆகிய ஆண்டுகளுக்குரிய மிகைச் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998–1999 முதல் 2004–2005 வரையிலான ஆண்டுகளில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்தந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் சில இனங்களில் மேற்கொள்ளப்பட்ட மிகைச் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளை@ இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகிறேன்.*

1998–1999 முதல் 2004–2005 வரையிலான ஆண்டுகளில் நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1998–1999 முதல் 2004–2005 வரையிலான ஆண்டுகளில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 1998–1999 ஆம் ஆண்டிற்கான 232.84 கோடி ரூபாய், 1999–2000 ஆம் ஆண்டிற்கான 362.99 கோடி ரூபாய், 2000–2001 ஆம் ஆண்டிற்கான 2,239.47 கோடி ரூபாய், 2001–2002 ஆம் ஆண்டிற்கான 379.38 கோடி ரூபாய், 2002–2003 ஆம் ஆண்டிற்கான 2,436.71 கோடி ரூபாய், 2003–2004 ஆம் ஆண்டிற்கான 154.61 கோடி ரூபாய் மற்றும் 2004–2005 ஆம் ஆண்டிற்கான 2.82 கோடி ரூபாய்க்கான மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

@ 102 முதல் 107 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

1998–1999 முதல் 2004–2005 வரையிலான ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மிகைச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகள் மற்றும் உரைகள் இந்த மாமன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளன. இதனை @@ இவ்வறிக்கையின் ஒரு பகுதியாகக் கருதி படிக்கப்பட்டதாக ஏற்றுக்கொண்டு இம்மாமன்றம் இதற்கு இசைவளிக்க வேண்டுகிறேன்.

1998–1999 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை அ. வருவாய்க் கணக்கில் செலவு		(ரூபாய்)
3	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம்	27,36,208
5	முத்திரைத்தாள்கள்–நிருவாகம்	11,12,275
6	ஆவணப் பதிவு	1,24,93,462
17	கல்வி	86,95,01,172
20	வேளாண்மை	50,99,42,624
27	ஊரக வளர்ச்சி	40,53,45,648
30	பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்	85,98,748
33	நகர்ப் பகுதி வளர்ச்சி	2,29,88,201
35	பாசனம்	12,19,91,185
38	சாலைகளும் பாலங்களும்	10,34,64,791
39	சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்	30,43,527
40	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	2,77,05,230
48	குடிநீர் வழங்கல்	2,97,76,230
50	சுற்றுலா	53,705
மொத்தம்	**அ. வருவாய்க் கணக்கில் செலவு**	**211,87,53,006**

@@ 995 முதல் 1004 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கோரிக்கை		(ரூபாய்)
ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு		
52	வேளாண்மை குறித்த மூலதனச் செலவு	31,10,333
57	சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு	3,04,818
மொத்தம்	ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	34,15,151
	பெருமொத்தம்	212,21,68,157

1999-2000 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)
அ. வருவாய்க் கணக்கில் செலவு		
2	மாநில ஆயத் தீர்வைத் துறை	18,07,894
17	கல்வி	143,42,40,370
26	கதர்–கிராமத் தொழில்கள்	3,75,688
33	நகர்ப்பகுதி வளர்ச்சி	24,59,801
35	பாசனம்	97,83,26,215
38	சாலைகளும் பாலங்களும்	5,00,52,258
41	ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்	94,98,52,559
45	இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	21,21,94,494
46	செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல்	2,02,117
மொத்தம்	அ. வருவாய்க் கணக்கில் செலவு	362,95,11,396
	பெருமொத்தம்	362,95,11,396

2000-2001 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)
அ. வருவாய்க் கணக்கில் செலவு		
6	ஆவணப் பதிவு	4,89,131
21	மீன்வளம்	43,93,545
29	சமூக நலன்	5,58,72,503
35	பாசனம்	113,59,96,975
47	ஊரகத் தொழில்கள்	2,38,02,013
மொத்தம்	**அ. வருவாய்க் கணக்கில் செலவு**	**122,05,54,167**
ஆ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்		
61	மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்	22,39,03,388
	பெருமொத்தம்	**144,44,57,555**

2001-2002 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)
அ. வருவாய்க் கணக்கில் செலவு		
32	வீட்டு வசதி	1,09,26,536
35	பாசனம்	14,75,03,092
41	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	22,21,71,249
மொத்தம்	**அ. வருவாய்க் கணக்கில் செலவு**	**38,06,00,877**
	பெருமொத்தம்	**38,06,00,877**

2015 செப்டம்பர் 29] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

2002-2003 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	10,99,828	..	..
5	வேளாண்மைத் துறை	..	..	55,000
6	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை—கால்நடை பராமரிப்பு	..	200	..
14	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	1,78,01,357	..	..
16	கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணிநூல்	2,16,39,044	..	..
20	நெடுஞ்சாலைகள் துறை	41,53,15,758	..	30,00,000
26	தொழில் துறை	..	1,63,055	..
35	திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை	1,88,98,038	..	..
38	பொதுப் பணித் துறை	144,87,14,046	..	..
40	ஊரக வளர்ச்சித் துறை	..	..	48,66,688
48	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	91,24,53,629	..	..
49	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	82,75,35,091	..	..
	பெரு மொத்தம்	366,34,56,791	1,63,255	79,21,688

2003-2004 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
5	வேளாண்மைத் துறை	..	1,89,071	..
27	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை — செய்தி மற்றும் விளம்பரம்	..	42,765	..
28	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை — சுற்றுலா	..	7,96,000	..
33	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	10,07,93,119	..	..
40	ஊரக வளர்ச்சித் துறை	5,46,60,590	..	..
43	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	..	8,75,394	..
47	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	..	17,85,000	..
	பெருமொத்தம்	**15,54,53,709**	**36,88,230**	**..**

2004–2005 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
14	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	1,40,29,588	..	..
19	உயர் கல்வித் துறை	..	43,51,101	..
20	நெடுஞ்சாலைகள் துறை	..	..	440
21	உள் துறை — காவல்	..	..	2,16,043
22	உள் துறை— தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்	..	999	..
33	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	10,72,425	..	..
36	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை	37,50,993	..	..
	பெருமொத்தம்	1,88,53,006	43,52,100	2,16,483

8. மானியக் கோரிக்கைகள், 2015–2016, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

(ஆ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

(இ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

(ஈ) கோரிக்கை எண் 16–நிதித் துறை

(உ) கோரிக்கை எண் 36–திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

(ஊ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

(அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015–2016 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாம் முறை மட்டுமல்ல நூறாம் முறையும் நம் அம்மா அவர்களே (மேசையைத் தட்டும் ஒலி) ஆள வேண்டுமென்று ஏழு கோடி தமிழர்களும் ஏகமனதாய் முடிவெடுத்து ஓட்டுப் பதிவு இயந்திரத்தில் ஒரே ஒரு சின்னமாக ஈகைத் தாயின் வாகைச் சின்னமாம் (மேசையைத் தட்டும் ஒலி) இரட்டை இலை மட்டுமே இருந்தால் போதும் என்று தமிழகத்தை வீறுகொண்டு எழவைத்த வெற்றித் திலகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.349,37,77,000/–, மூலதனக்

கணக்கில் ரூ.3,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,65,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1276, திரு. என்.ஆர். ரெங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1532, திரு. பி.வி. கதிரவன்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.349,37,77,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,65,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1570, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2578, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.349,37,77,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,65,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2585, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.349,37,77,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,65,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2061, திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டெல்லி, தமிழ்நாடு இல்லத்தில் மலிவான வாடகையில் வாகனம் ஏற்பாடு செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.349,37,77,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,65,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம், மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.40,80,13,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1531, திரு. பி.வி. கதிரவன்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,80,13,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1569, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2537, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,80,13,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2584, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,80,13,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 975, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் Wi-Fi வசதி ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,80,13,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1094, திரு. எஸ். ஜான் ஜேக்கப், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1132, திரு. எம். ஆறுமுகம்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ.20,000/- வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,80,13,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1839, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதங்களுக்கு துறைச் செயலாளர்கள் பதில் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,80,13,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2059, திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு போக்குவரத்துப் படி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,80,13,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2470, திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற கூட்டத் தொடர் நாட்களை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,80,13,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2706, திரு. ஏ. லாசர், இருக்கையில் இல்லை.

(இ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.34,96,34,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1530, திரு. பி.வி. கதிரவன்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,96,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1568, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2536, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,96,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2582, திரு. ப. டில்லி பாபு.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,96,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1645, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அமைச்சரவையின் முடிவுகளை சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் அவர்கள்*

மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,96,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2092, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அயல்நாடு வாழ் தமிழர்கள் நலன் காக்கும் பிரிவு ஒன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,96,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஊ) கோரிக்கை எண் 16—நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 16—நிதித் துறை, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.965,68,46,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,000,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.106,10,23,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1529, திரு. பி.வி. கதிரவன்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.965,68,48,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,10,23,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1567, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2570, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.965,68,48,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,10,23,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2581, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.965,68,48,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,10,23,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 896, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட சதவீத சம்பள உயர்வை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.965,68,48,000/--, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,00,000/-- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,10,23,000/--ல் ரூ.100/-- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1844, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் தாலுகாவில் சார் நிலைக் கருவூலம் அமைக்க (Sub--Treasury) வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.965,68,48,000/--, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,00,000/-- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,10,23,000/--ல் ரூ.100/-- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2090, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.965,68,48,000/--, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,00,000/-- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,10,23,000/--ல் ரூ.100/-- குறைக்க வேண்டும்."

(உ) கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.228,41,68,000/—, மூலதனக் கணக்கில் ரூ.175,84,99,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1517, திரு. பி.வி. கதிரவன்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.228,41,68,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,84,99,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1566, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2580, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.228,41,68,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,84,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1686, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விலையில்லா பொருட்கள் கிடைக்காமல் விடுபட்டவர்களுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.228,41,68,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,84,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2093, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில், தனிநபர் வருமானத்தை பெருக்க வழிவகை செய்ய திட்டங்களைத் தீட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.228,41,68,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,84,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஊ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.20,072,20,64,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1516, திரு. பி.வி. கதிரவன்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,072,20,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1565, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2512, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,072,20,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2579, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,072,20,64,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1060, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறுமையில் வாடும் தியாகிகளின் குடும்பத்திற்கு தியாகிகளின் பெயரில் ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,072,20,64,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1362, டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்துவரும் பணியாளர்களின் ஓய்வூதிய பணப் பலன்களை காலதாமதமின்றி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,072,20,64,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1721, திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அங்கன்வாடி சத்துணவு ஊழியர்களுக்கு ரூ.3,050/— ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,072,20,64,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1845, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மொழிப்போர் தியாகிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,072,20,64,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1991, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொழிப்போர் தியாகிகளுக்கு, விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு இணையான ஓய்வூதியம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,072,20,64,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2154, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,072,20,64,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2417, திரு. க. அன்பழகன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "(Senior Citizen) முதியோருக்கு அடையாள அட்டை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,072,20,64,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2748, திரு. க. பாலகிருஷ்ணன்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமூக நலத் துறையால் வழங்கப்படும் ஓய்வூதியம் தகுதியானவர்களுக்கு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,072,20,64,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2846, செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்மொழி அறிஞர்கள் பெற்றுவரும் ஓய்வூதியம் மற்றும் மருத்துவ உதவி ஆகியவற்றை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,072,20,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை, மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை, மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று ஆறு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் ஆறு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். இன்றைக்கு பிற்பகல் 2–00 மணிக்குள் விவாதம் முடிந்து, மானியக் கோரிக்கைகள்

@ 1005 முதல் 1197 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் III, IV, V மற்றும் VI ஆக அச்சிடப்பட்டுள்ளன.

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

வாக்கெடுப்பிற்கு விடப்படவேண்டும். பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் மிகச் சுருக்கமாக தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள். (குறுக்கீடு) 15 நிமிடங்கள் எல்லாம் கொடுக்க முடியாது. 5 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் என்னுடைய தொகுதிப் பிரச்சினை ஒன்றைச் சொல்லிவிட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மானியக் கோரிக்கைப்பற்றி பேசுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: பேசுகிறேன். ஒன்று, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் அதைப்பற்றி தெரியும். கடந்த குளிர்காலக் கூட்டத் தொடரிலே நான் கேள்வி கேட்ட நேரத்திலே கொத்தயம் நல்லதங்காள் அணைக்கு நிதி தருவதாகச் சொன்னார். இப்போது கொத்தயம் ஊராட்சிக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. போடுவார்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த 80 பேர்களுக்கு பணம் கொடுக்கவில்லை. இன்னும் நீங்கள் என்ன சொன்னீர்கள் என்றால் மார்ச் மாதத்திற்குள் அந்தப் பணி நிறைவுபெறும் என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அன்று சொன்னீர்கள். இன்னும் அந்த நில உரிமையாளர்களுக்குப் பணம் கொடுக்கவில்லை, பணியும் ஆரம்பிக்கவில்லை. எனவே, இப்பொழுது மழைக் காலம், அந்த நில உரிமையாளர்களுக்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகையை வழங்கி அந்தப் பணியை நிறைவு செய்தால் அந்தப் பகுதி மக்கள் பெரிதும் பயனடைவார்கள். எனவே, அதைச் செய்வதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை ஏற்கெனவே சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுவிட்டு கொஞ்சம் வெளியே சென்றுவிட்டார். அதற்குரிய பதிலை நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன். போடுவார்பட்டியில் இருக்கின்ற மீதி நிலங்களுக்கு உரிய நிதியைத் தருவதற்கு நிதித் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கூடிய சீக்கிரம் அந்த நிதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனென்றால் மழைக் காலம். அந்தத் தண்ணீரை சேமித்து வைப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, உடனடியாக அந்த நில உரிமையாளர்களுக்குப் பணத்தைக் கொடுத்து, அந்தப் பணியை ஆரம்பிக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். டெல்டா மாவட்டங்களில் கடை அடைப்பு, உண்ணாவிரதம் போன்ற போராட்டங்கள் இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விரிவான விளக்கம் சொன்னார்கள். என்னைப் பொறுத்தளவிலே, இன்றைக்கு கர்நாடக முதலமைச்சர் வறட்சியின் காரணமாக அங்கு இருக்கின்ற மத்திய அமைச்சர்களை எல்லாம் அழைத்துக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியிலே சென்று பிரதம மந்திரியைப் பார்த்து வறட்சிக்கு நீங்கள் நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். அதேபோல, தமிழ்நாட்டில் இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர், இங்கு இருக்கின்ற அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களை அழைத்து டெல்லி சென்று பிரதம மந்திரியை சந்தித்து, காவேரி டெல்டா பகுதியிலே இன்றைக்கு குறுவை சாகுபடியிலே பாதிக்கின்ற விவசாயிகளுடைய நலனைப் பாதுகாக்கின்ற வகையிலே காவேரியிலிருந்து கொடுக்க வேண்டிய தண்ணீரைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுதான் டெல்லியில் காவேரி பிரச்சினை பற்றி உயர் மட்டக் குழுக் கூட்டம், இரு மாநில அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்றது. நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள்கூட அங்கே அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கின்றார். சுமுகமாகப் பேசி முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி என்பது 1996 ஆம் ஆண்டு எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்டது. அந்தத் தொகுதி மேம்பாட்டு நிதி 25 இலட்சம் ரூபாயாக இருந்ததை, இன்றைக்கு 2 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. ஏனென்றால், கடந்த காலங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குச் செல்கின்ற நேரத்திலே, பொது மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்புகின்ற சமயங்களில் அவற்றைச் செய்ய முடியாத சூழ்நிலை இருந்தது. அதற்காகத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் 1996–ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி என்று 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கினார்கள். அது இன்றைக்கு 2 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு சென்னையிலே எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் தளபதி அவர்களும், அதேபோல, திரு. ஜெ. அன்பழகன் அவர்களும் தங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியைக்கூட முழுமையாகச் செலவு செய்ய முடியாமல் இருக்கிறார்கள். தளபதி அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைக் கொண்டு குளத்தூர் தொகுதியிலும், திரு. ஜெ. அன்பழகன் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியைக் கொண்டு சேப்பாக்கம் தொகுதியிலும் கடந்த மூன்று ஆண்டுகளாக எந்தத் திட்டத்தையும் செயல்படுத்த முடியாமல் இருக்கிறது. அந்த நிதியை முழுமையாகச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த

அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல வறட்சியைப்பற்றி நான் பல முறை பேசியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 1-00

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியை முழுமையாகச் செலவழிக்க முடியவில்லை என்ற கருத்தை இங்கே சொன்னார்கள். எந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டு, எந்தப் பணிக்காக ஒதுக்கப்பட்டது, என்ன காரணத்திற்காக அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களைச் சொன்னால் அதற்குரிய பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளாக அவர்களின் தொகுதியின் மேம்பாட்டு நிதியை பல்வேறு பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை. நீங்கள் guideline-ல் குறிப்பிட்டிருக்கும் பணிக்குத்தான் அந்த நிதி வழங்கப்பட்டது. எந்தெந்த பணிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியைப் பயன்படுத்த முடியுமோ, அந்தப் பணிகளுக்குத்தான் அவர்களால் பரிந்துரை கடிதம் சென்னை மாநகராட்சி ஆணையரிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இங்கே இருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆய்வு செய்து, ஆணையருக்கு அறிவுரை வழங்கி அந்தப் பணிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே இன்றைக்கு வறட்சி. அதேபோல், முதியோர் உதவித் தொகை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்டு 18 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அதிலே, 2011–2015 வரையிலான மொத்த தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் 190 கோடியாகும். சென்னை மாநகராட்சிக்கு 115.52 கோடிக்கு பரிந்துரைத்த பணிகள் 768. அதில் முடிக்கப்பட்ட பணிகள் 183. நடைபெறும் பணிகள் 24. நடைபெறவுள்ள பணிகள் 203. பிற அரசுத் துறைகளுக்கு 70.41 கோடி. அளவிற்கு பரிந்துரைத்த பணிகள் 538. அதில் முடிக்கப்பட்ட பணிகள் 300. நடைபெறும் பணிகள் 14. நடைபெறவுள்ள பணிகள் 105. சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளில் காலதாமதம் ஏற்பட்டுவிடுகிறது. மாநகராட்சிக்கான பரிந்துரைகள் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு பணிகள் துவங்கவோ அல்லது மாற்றுப் பணிகளுக்குப் பரிந்துரை அளிக்கவோ வேண்டி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பவோ உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதிலே, நீங்கள் கொடுக்கக்கூடிய பரிந்துரைக்கு இடம் இல்லாமல் இருக்கும், இல்லையென்றால் அந்தப் பணியை மாநகராட்சியே தேர்வு செய்து அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். அந்தமாதிரியான பணிகளுக்குப் பரிந்துரைக் கடிதங்கள் கொடுக்கப்படும் சூழலில்தான் அந்தப் பணிகளை எடுத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறது. இதுபோன்று மேற்கண்ட காரணங்களினால்தான் இந்தமாதிரி சூழ்நிலை வருமே தவிர, வேறு ஒன்றுமில்லை. சென்னையில் உள்ள 16 சட்டமன்ற உறுப்பினர்களால் எத்தனைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன, முடிக்கப்பட்டுள்ளன என்ற விவரங்களை நான் இங்கே சொல்லியிருக்கிறேன். ஆகவே, நீங்கள் சொல்வது மாதிரியான சூழல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் இன்றைய ஆட்சியில் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், எந்தப் பணிக்கு நீங்கள் பரிந்துரைக் கடிதம் கொடுத்து அது செயல்படுத்தப்படவில்லை என்று தனிப்பட்ட முறையில் நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னால் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வறட்சி நிலவுகிறது. அதேபோல், முதியோர் உதவித் தொகை பற்றியெல்லாம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் பலமுறை சட்டமன்றத்திலே பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்ல வருவது, சுமார் 16 இலட்சம் தென்னை மரங்கள் காய்ந்திருக்கின்றன. நீங்கள் வறட்சிக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது என்று பலமுறை சொல்லியிருக்கிறீர்கள். எனவே, 16 இலட்சம் தென்னை மரங்கள் காய்ந்துவிட்டன. அந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல், முதியோர் ஓய்வூதியத் தொகை. நிறைய பேர் தகுதி வாய்ந்தவர்களுக்கு கொடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே, நீங்கள் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதற்குரிய நீண்ட விளக்கத்தினைப் பலமுறை தெரிவித்திருக்கின்றார்கள். ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ளவர்கள் யாராவது இருந்தால், அதை நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னால், அது பற்றி உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடத்திலே நான் சொல்லிக்கொள்வது, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சுமார் 2,500 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நான் தொகுதியிலுள்ள கிராமங்களுக்குச் சென்றிருந்த சமயத்தில் 2,500 பேர் எங்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். நான் அவர்கள் கொடுத்த மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் நேரிடையாகக் கொண்டுபோய்*

கொடுத்திருக்கின்றேன். எனவே, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நீங்கள் அறிவுரை வழங்கி, தகுதியுள்ளவர்கள் யாருக்கேனும் முதியோர் ஓய்வூதியத் தொகை நிறுத்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இந்த அரசு, தேர்தல் அறிக்கையிலே, பக்கம் 15—ல் 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 58 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் உள்ளூர் மற்றும் அரசுப் பேருந்துகளில் பக்கத்து நகரங்கள், கிராமங்களுக்குச் சென்றுவர இலவச பஸ் பாஸ் வழங்கப்படும்' என்று சொன்னீர்கள். இதுவரை, ஏன் அதைச் செயல்படுத்தவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

அதேபோல், கரும்பு உற்பத்திப் புரட்சித் திட்டம் குறித்து இந்த அரசு, தேர்தல் அறிக்கையிலே பக்கம் 3-ல் சொல்லியிருக்கிறது. கரும்பு உற்பத்தி 475.5 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து ஆயிரம் இலட்சம் மெட்ரிக் டன் ஆக உயர்த்தப்படும் என்று சொன்னீர்கள். ஆனால், இன்றைக்கு 37 சதவிகித கரும்பு உற்பத்தி குறைந்திருக்கிறது. 240 இலட்சம் டன்தான் தற்சமயம் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதேபோல், தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்குப் பணம் தராமல் நிறுத்துவதை இந்த அரசு அனுமதிக்காது என்று தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். எனவே, அந்தத் தனியார் சர்க்கரை ஆலைமூலமாக கொடுக்கப்பட வேண்டிய பணத்தை உடனடியாக விவசாயிகளுக்கு அந்த ஆலைகளிடமிருந்து பெற்றுக் கொடுத்து அந்த விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள அத்தனை குடும்பங்களுக்கும் 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட தூய்மையான குடிதண்ணீர் இலவசமாக வழங்கப்படும், இதன்மூலம் 5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு புதியதாக உருவாக்கப்படும், 1 இலட்சம் பேருக்கு போக்குவரத்துத் துறையில் வேலைவாய்ப்பு கிடைக்கும். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அர. சக்கரபாணி, இன்னும் 5 பேர் பேச வேண்டும். சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் தப்பாக பேசியதாக நான் சொல்லவில்லை. 5 பேர் பேச

வேண்டும், அதனால் சீக்கிரம் உரையை முடியுங்கள் என்றுதான் சொன்னேன்.

திரு. அர. சக்கரபாணி: இதன்மூலம், 20 ஆயிரம் தொழிற்சாலைகள் உருவாக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். எத்தனை பேருக்கு அந்த சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்ப் கொடுக்கப்பட்டிருக்கின்றது, எத்தனை பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி அறிய விரும்புகின்றேன். ஏனென்றால், தமிழ்நாட்டிலே குடிதண்ணீர் பிரச்சினை இல்லை என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களது ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 20 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிதண்ணீர் வருகிறது. அதுவும் 35, 40-க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் ** அதை நிரூபிப்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன். எனவே, சம்பந்தப்பட்ட அமைச்சர் அதை ஆய்வு செய்து அந்தத் தண்ணீர் பிரச்சினையை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்த மானியக் கோரிக்கைமீது குற்றச்சாட்டு சொல்லிக்கொண்டிருக்கின்றீர்கள். ஆதாரம் இல்லாமல் உங்கள் இஷ்டத்திற்கு ஏதாவது பேசிக்கொண்டிருந்தால் எப்படி? நான் ஏதாவது கேட்டால் நீங்கள் ஆதாரம் அப்படி, இப்படி என்று சொல்கின்றீர்கள். எதுவும் இல்லாமல், இப்படி குற்றச்சாட்டு சொல்கின்றீர்களே, இது சரியா? (குறுக்கீடு) இது எல்லாம் சரியில்லை. நீங்கள் மானியத்தில் பேசி முடியுங்கள். நான் இரண்டு மணிக்குள் இன்றைக்கு வாக்கெடுப்புக்கு விட வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. அர. சக்கரபாணி: எனவே, குடிதண்ணீர் பிரச்சினை என்னுடைய தொகுதியிலே கடுமையாக இருக்கின்றது. ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 20 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிதண்ணீர் வருகின்றது. காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது 2008-ல் துவங்கப்பட்ட திட்டம். அந்தத் திட்டம் இன்னும் பயன்பாட்டிற்கு வராததால் மக்கள் குடிநீர்ப் பிரச்சினையால் மிகவும் சிரமப்படுகின்றார்கள். எனவே, காவேரி கூட்டுக் குடிநீர்த்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திட்டத்தைச் செயல்படுத்தி உடனடியாக அந்த குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, தேர்தல் அறிக்கையில் நீங்கள் பக்கம்–8–ல் தமிழ்நாட்டை 1 இலட்சம் கோடி ரூபாய் கடனாளி மாநிலம் என்ற தலைக் குனிவிலிருந்து மீட்டு ஒவ்வொரு தமிழரும் தலைநிமிர்ந்து நிற்கவும் தன்மானத்துடன் வாழவும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த தன்னிறைவு கொண்ட தொடர்ச்சியான நீடித்த வளர்ச்சி பெற்ற மாநிலமாக வழிவகை செய்யப்படும் என்று சொல்லியிருந்தீர்கள். இன்றைக்கு இரண்டு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் கடன் உள்ளது. இதற்கு யார் தலை குனிவது? இதற்கு யார் பொறுப்பு ஏற்றுக்கொள்வது? அதேபோல, மின்சார வாரியத்திலே கடன். இந்த அரசு பொறுப்பேற்று இன்றைக்கு 4 இலட்சம் கோடி ரூபாய் அளவில் கடன் உள்ளது. இதற்கு யார் பொறுப்பேற்றுக்கொள்வது என்பதை அறிய விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, தேர்தல் அறிக்கையிலே நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 2015–க்குள் 100 பெரிய பால் பண்ணைகள், பால் பதப்படுத்தப்படும் நிலையங்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் சிறு மற்றும் பெரிய தொழிற்சாலைகள் உருவாக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். அடுத்த 5 ஆண்டுகளில் 10 இலட்சம் பேருக்கு இதன்மூலம் கிராமப்புறங்களில் சுயவேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என்று சொன்னீர்கள். இன்றைக்கு பால் 18 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகின்றது. நிறைய பேர் இன்றைக்கு பாலை சாலைகளில் கீழே கொட்டுகின்றார்கள். இன்றைக்கு பால் உற்பத்தியாளர்களுக்கு, 45 நாட்கள் முதல் 60 நாட்கள் வரை பணம் ஆவின் நிறுவனத்தால் பட்டுவாடா செய்யப்படவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இரண்டு மணிக்கு கில்லட்டின் நேரம். அதற்குள் மானியக் கோரிக்கைமீது வாக்கெடுப்பு நடத்தியாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் நிறைய கருத்தைச் சொல்லியிருக்கின்றீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர் இஷ்டத்திற்கு, சகட்டுமேனிக்கு குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டே போகின்றார். அவருக்கு விவரம் தெரியும், தெரிந்திருந்தும் அவர் பேசிக்கொண்டே போகின்றார். அதாவது இந்த பொதுக் கணக்கு பற்றி ஏற்கெனவே பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே கேள்வி எழுப்பப்பட்டு, நானும் அதற்குரிய பதிலைத் தந்திருக்கின்றேன். இருந்தாலும் மீண்டும் நீங்கள் கேள்வி எழுப்புவதால், நான் மீண்டும் அந்தப் பதிலைத் தருவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். சென்ற முறை என்னுடைய பதிலுக்கு சபாநாயகர் அவர்கள் 5 நிமிடங்கள்தான் கொடுத்தீர்கள். தமிழ்நாடு அரசு தனது மூலதனச் செலவுகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு வழங்கும் கடன்கள் முதலான நிதித் தேவைகளுக்காக வெளிச் சந்தைகள், கடன்கள், பன்னாட்டு நிதி நிறுவனங்கள், நபார்டு போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுகிறது. இவ்வாறு பெறப்படும் பொதுக் கடன், பள்ளிகள், மருத்துவமனைகள் கட்டுதல் மற்றும் தரமான சாலைகள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு செலவிடுதல்மூலம் சமூகப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக கவனிக்க வேண்டும். இந்த முதலீட்டிலிருந்து கிடைக்கக்கூடிய வருவாய் மாநிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உதவுகிறது. கடுமையான நிதிநெருக்கடி ஏற்படும் சூழ்நிலையைத் தவிர, மற்ற சமயங்களில் பெறப்படும் கடன்கள் மாநிலத்தின் மூலதனப் பணிகளுக்கான செலவினங்களுக்காகவும், அரசு பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் கழகங்களுக்கு கடன்கள் வழங்கவும் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது. 13—வது நிதிக் குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின்படி மொத்தக் கடனுக்கும்—இங்கே கவனியுங்கள். (குறுக்கீடுகள்)*

பிற்பகல் 1—10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இங்கே கவனியுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: கொஞ்சம் கவனியுங்கள், கவனியுங்கள். (குறுக்கீடு) புரியவில்லையா? (குறுக்கீடு) இது எப்படி இருக்கிறது? (குறுக்கீடு) புரியாதது மாதிரி நடிக்காதீர்கள். (குறுக்கீடு) தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின்படி மொத்தக் கடனுக்கும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பிற்கும் உள்ள விகிதாச்சாரத்தை 2011–2012 ஆம் ஆண்டில் 24.5 சதவிகிதத்திற்கும், 2012–2013 ஆம் ஆண்டில் 24.8 சதவிகிதத்திற்கும், 2013–2014 ஆம் ஆண்டில் 25 சதவிகிதத்திற்கும், 2014–2015 ஆம் ஆண்டில் 25.2 சதவிகிதத்திற்கும், அதன்பிறகு நிர்ணயிக்கப்படும் விகிதத்திற்கும் மேற்படாதவகையில் பராமரிக்க வேண்டும். அதாவது, நான் இப்பொழுது சொன்ன சதவிகிதங்களெல்லாம் 13–வது நிதிக் குழுவின் பரிந்துரை. அடுத்து சொல்ல வருகிறேன், நன்றாகக் கேளுங்கள்.

14–வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் நிலுவைக் கடன் விகிதம் 2015–2016 ஆம் ஆண்டு தொடங்கி, அடுத்த 5 ஆண்டுக் காலங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவான 25 சதவிகிதத்திற்குள் இருக்கும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 2011–2012 ஆம் ஆண்டு முதல் இதுவரை இந்த வரம்பிற்குள்ளாகவே அரசின் பொதுக் கடன் இருக்கும்வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதி செய்து வருகிறது.

கடன் நிலை. மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் பொதுக் கடன் அளவு மற்றும் மத்திய நிதிக் குழு நிர்ணயித்துள்ள வரம்பினைக் கருத்தில் கொண்டு, மாநிலங்களில் கடன் பெறும் வரம்பை ஆண்டுதோறும் மத்திய அரசுதான் நிர்ணயம் செய்கிறது. 2015–2016 ஆம் ஆண்டின் நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்ய, மாநில அரசு ஆண்டுதோறும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவிகிதத்திற்கு மிகைப்படாத அளவில், அதாவது ரூபாய் 32 ஆயிரத்து 990 கோடிக்கு பொதுக் கடன்களைத் திரட்டுவதற்கு 2015–2016 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆயினும், 2015–2016 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ரூ.30,446.68 கோடியளவில் மட்டுமே கடன் திரட்டுவதற்கு உத்தேசித்துள்ளது. திரு. சக்கரபாணி, நன்றாக கவனியுங்கள். கேள்வியைக் கேட்டுவிட்டு நீங்கள் வேறு எங்கோ வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) (சிரிப்பு) மத்திய அரசு,

2015-2016 ஆம் ஆண்டில் எவ்வளவு கடன் வாங்கிக் கொள்ளலாம் என்று நமக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு 32,992 கோடி ரூபாய். ஆனால், நம்மால் நிர்ணயம் செய்யப்பட்டிருப்பது 30,446.68 கோடி ரூபாய்தான். இது 14-வது நிதிக் குழுவிலிருந்து முடிவு செய்து மத்திய அரசிலிருந்து நமக்கு வந்த வரைவு.

அடுத்து நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். இதுவரை, இதில் 12,123.36 கோடி ரூபாய்தான் கடனாகத் திரட்டப்பட்டுள்ளது. இது வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 39 சதவிகிதமாகும். மாநிலத்தின் வட்டிச் சுமையைக் குறைத்திடுவதற்காக கடந்த 4 ஆண்டுகளாக அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும், குறைந்த அளவிலேயே கடன் பெறுவது என்பது மாநில அரசால் எடுக்கப்பட்ட உள்ளார்ந்த முடிவாகும். நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். கடந்த 4 ஆண்டுகளில், அதாவது 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2014-2015 ஆம் ஆண்டு வரை நமது மாநில அரசு பெற்ற நிகரக் கடன் 78,617.31 கோடி ரூபாய். அதாவது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் 4 ஆண்டுகளில் பெற்ற நிகரக் கடன் 78,617.31 கோடி ரூபாய். இதே காலக்கட்டத்தில் மூலதனச் செலவினம் 76,510.67 கோடி ரூபாயாக இருந்தது. இது சாலைகள் அமைத்தல், கட்டடங்கள் போன்ற மூலதனச் சொத்துக்களை உருவாக்கும் நோக்கத்திற்காகவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கடன் பயன்படுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்கிறது. அதாவது Creation of Asset. அதற்காக மட்டுமே பெற்ற கடன் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த அவைக்கு பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாநிலத்தின் நிகரக் கடன் 2014-2015 ஆம் ஆண்டிற்கு 26,985.18 கோடி ரூபாயாக கணிக்கப்பட்டிருப்பினும், 25,915.54 கோடி ரூபாய் அளவில் மட்டுமே கடன் அளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிருவாகப் பொறுப்பேற்ற பொழுது, மாநிலத்தின் நிதிநிலை வருவாய்ப் பற்றாக்குறை நிலையில் இருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய முயற்சியின் காரணமாக 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளில் மாநிலத்தின் நிதிநிலை வருவாயை உபரி நிலைக்கு திரும்பக் கொண்டு வந்தபோதும், கடந்த இரண்டு ஆண்டுகளாக தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் நிலவிவரும்

பொதுவான, பொருளாதார மந்த நிலையின் காரணமாக நம் மாநிலம் எதிர்பார்த்த வரி வருவாய் வளர்ச்சி அளவினை எய்த இயலவில்லை.

பிற்பகல் 1-15

இந்நிலையில் வருவாய்ப் பற்றாக்குறையைத் தவிர்க்க பல்வேறு நலத் திட்டப் பணிகளுக்கான செலவினத்தைக் குறைப்பது இயலாது என்ற நிலையில் வருவாய் செலவினத்தைக் கணிசமாகக் குறைத்து வருவாய்ப் பற்றாக்குறையை முழுமையாகத் தவிர்க்க இயலவில்லை. இந்தச் சவாலான சூழ்நிலை காரணமாக மூலதனத் தேவைகளுக்கான நிதியுடன் வருவாய்ப் பற்றாக்குறை நிதியினைத் திரட்டுவதற்கும் அரசு கடன் பெறவேண்டிய நிலை உள்ளது.

2014-2015 ஆம் ஆண்டு வரையில் மாநில அரசின் ஒட்டுமொத்தக் கடன் நிலுவைபற்றி திரு. சக்கரபாணி அவர்களே, நீங்கள் ரூ.4 இலட்சம் கோடி என்று சொன்னீர்களே? அதுகுறித்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு அமைச்சர் சொல்வதை கவனியுங்கள். நீங்கள் கேள்வியைக் கேட்டுவிட்டு மற்ற உறுப்பினர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறீர்களே? இங்கே கவனியுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: அதாவது, ஒட்டுமொத்த கடன் நிலை குறித்து சொல்கிறேன், கேட்டுக்கொள்ளுங்கள். 2014-2015 ஆம் ஆண்டு வரையில் மாநில அரசின் கடன் நிலுவை ரூ.1,79,967 கோடியாக உள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 19.10 சதவிகிதம் ஆகும். 2010-2011 ஆம் ஆண்டு இறுதியில் மொத்தக் கடன் நிலுவை, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 19.54 சதவிகிதம், அதாவது, நீங்கள் ஆட்சியில் இருந்தபோது அந்த ஆண்டினுடைய சதவிகிதம் 19.54 ஆகும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 4 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 19.10 சதவிகிதமாகக் குறைத்துள்ளது. 2014-2015 ஆம் ஆண்டு இறுதி வரை அதாவது 31-3-2015 அன்று நிலுவையில் உள்ள பொதுத்

துறை நிகர நிறுவனக் கடன்கள் அதாவது, பொதுத் துறை நிறுவனங்கள் வாங்கியிருக்கிற கடன் ரூ.91,942 கோடியாகும்.

எனவே, பொதுத் துறை நிறுவனங்களின் கடனுடன் மாநிலத்தின் மொத்த பொதுக் கடன் 2014–2015 ஆம் ஆண்டு வரை ரூ.2,71,909 கோடி ஆகும். ஆனால், சில அரசியல் கட்சிகள் மாநிலத்தின் பொதுக் கடன் ரூ.4 இலட்சம் கோடி என அடிப்படையற்ற தவறான தகவல்களைக் கூறி மக்களைத் திசைதிருப்ப முயற்சி செய்கின்றன. அது பலிக்காது. 14–வது நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி 2015–2016 ஆம் ஆண்டில் கடனுக்கும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்புக்குமான விகிதாச்சாரம் 25 சதவிகிதத்துக்கும் குறைவாகப் பேணப்பட வேண்டும். 2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி பொதுக் கடன் ரூ.2,11,483 கோடியாகவே இருக்கும். அதாவது 2016 மார்ச் 31 வரை. இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 19.23 சதவிகிதமாகவே இருக்கும். அதாவது 25 சதவிகிதம் வரை நாம் கடன் வாங்கிக்கொள்ளலாம் என சொல்லப்பட்டு இருந்தாலும், 2016 மார்ச் 31 வரையில் 19.23 சதவிகிதமாகத்தான் இருக்கும். நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காகப் பொதுக் கடன் பெறுவது என்பது உலகிலுள்ள அனைத்து அரசுகளும் கையாளும் கருவியாகும். கடன் பெற்று உள்கட்டமைப்பு போன்ற அசையாச் சொத்துகளை உருவாக்குவதில் முதலீடு செய்வதால் பொருளாதார வளர்ச்சி தூண்டிவிடப்படுகிறது. அத்தகைய பொருளாதார விரிவாக்கம் அதிக வருவாயைப் பெருக்குவதற்கும், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும், மாநிலங்களுக்கு நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கும் வழிவகுக்கிறது.

எனவே, கடன் நிலுவைத் தொகையானது உயர்ந்துள்ளபோதிலும் வருவாய்ப் பெருக்கத்தின் காரணமாக தவணை தவறாமல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கடனைத் திருப்பிச் செலுத்த முடிந்துள்ளது.

மத்திய அரசும், பிற மாநில அரசுகளும் பொதுக் கடன் பெற்றுத்தான் மூலதனச் செலவினங்கள் உள்பட, பிறச் செலவினங்களை மேற்கொள்கின்றன. உதாரணமாக, மத்திய அரசின் பொதுக் கடன் நிலுவை 2014–2015 ஆம் ஆண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.62,78,544 கோடியாக, அதாவது நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 49.6 சதவிகிதமாகவும், 2015–2016 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.68,94,691 கோடியாக, அதாவது

நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 48.8 சதவிகிதமாகவும் உள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கையின்படி 2014–2015 ஆம் ஆண்டு வரையில் மொத்தக் கடன் நிலுவைக்கும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்புக்குமான விகிதாச்சாரம் ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில், 25 சதவிகிதம், குஜராத்தைப் பொறுத்தவரையில் 23.7 சதவிகிதம், கர்நாடகத்தைப் பொறுத்தவரையில் 22.9 சதவிகிதம், கேரளத்தைப் பொறுத்தவரையில் 29.7 சதவிகிதம் ஆகும். இது, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 20 சதவிகிதம் மட்டுமே ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மொத்தக் கடன் நிலுவைக்கும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்புக்குமான விகிதாச்சாரம் 20 சதவிகிதமாகக் கணிக்கப்பட்டிருப்பினும் மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் காரணமாக இது 19.10 சதவிகிதம் என்ற அளவில் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, மாநில அரசின் மொத்த பொதுக் கடனுக்கும்; மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரம் ஆகியவை மத்திய நிதிக் குழு பரிந்துரைகளின் வரையறுக்கப்பட்ட அளவைக்காட்டிலும், குறைந்த அளவிலேயே உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தக் கடன் மற்றும் கடனுக்கும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரத்தைக் குறைந்த அளவில் கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. (குறுக்கீடு) இன்னும் 4 பேர் பேசவேண்டும்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் முதலமைச்சர் விருதுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால், இந்த ஆண்டு மண்டல அளவில் நடத்தப்பட்டு, மாநில அளவிலான இறுதிப் போட்டிகள் நடைபெறாமல் இருக்கின்றன.

அதையும் இந்த அரசு உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, நீங்கள் பேசும்போது ** என்று ஆதாரமில்லாமல் சொன்ன அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, நீங்கள் உரையை முடியுங்கள்.*

திரு. அர. சக்கரபாணி: ** *இதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

திரு. அர. சக்கரபாணி: *இதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, பரவாயில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், அவற்றையெல்லாம் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் வாய் வழியாகப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொன்னால் அது தீர்வாகாது. (குறுக்கீடுகள்) இங்கே அவர்கள் பேசுவதற்கு முன்பாக அதற்குண்டான ஆதாரங்களைச் சட்டமன்றப் பேரவைத் தலைவரிடம் கொடுக்கவேண்டும். (குறுக்கீடுகள்) அவர் அந்தக் குறிப்பை நம்பவேண்டும். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதற்கும், நீங்கள் சொல்வதற்கும் வித்தியாசம் இல்லையா? (குறுக்கீடுகள்) என்ன பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நீங்கள் பேசுவதற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது அல்லவா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பில் இருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சக்கரபாணி அவர்கள் ஆதாரமில்லாமல் சொன்ன அந்தக் குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி ஆதாரமில்லாமல் சொன்ன அந்தக் குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: சவாலை நான் ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) வெறுமனே ஏதாவது அர்த்தமில்லாமல் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் ஆதாரமில்லாமல் சொன்ன அந்தக் குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: ** என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்றார். (குறுக்கீடுகள்) ** (குறுக்கீடுகள்) என்னுடன் வாருங்கள், இரண்டுபேர் தொகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று கேட்கலாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நான் நீக்கிவிட்டேன். உறுப்பினர் உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மேற்கொண்டு அதை record பண்ணாதீர்கள். (குறுக்கீடு) அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறைஎன்று வைக்கப் படும்' (மேசையைத் தட்டும் ஒலி)

என்ற வள்ளுவனின் வாய்மொழி ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால், இன்று வாய்மை மொழியாய், மெய்யாகி, உயிராகி, ஆயுதமுமாகி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) திரு. காமராஜ், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சக்கரபாணி, இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, இப்படி நீங்கள் நேரடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இருக்கையை நோக்கிப் பேசக்கூடாது. (குறுக்கீடு) விவரம் தெரிந்த ஓர் உறுப்பினர், இப்படியா செய்வது? (குறுக்கீடு) பேரவைத் தலைவரைப் பார்த்துதான் நீங்கள் பேசவேண்டும். (குறுக்கீடு) நீங்கள், நேரடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இருக்கையை நோக்கி சவால் விடக் கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்கள் சொன்ன அந்தப் பிரச்சினை குறித்து விசாரிக்கப்பட்டு, அப்படிப்பட்ட நிலைமை அங்கு இருப்பின், அதைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், நீங்கள் பேசுங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 5 நிமிடங்கள்.

2015 செப்டம்பர் 29]

திரு. என்.வி. காமராஜ்: அம்மாவின் உருவெடுத்து, அரசாங்க வடிவெடுத்து, ஏழரை கோடி இதயங்களில் கொலுவிருந்து கோலோச்சும் எங்கள் உயிர்களின் உயிராய், உன்னதப் பேரொளியாய், மரபுகளின் மலர்க்கொத்தாய், மனித குல அதிசயமாய், மண்ணுலகு வந்த பெண்ணுருவாய், பேரிறையாய் விளங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதக் கமலங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேதாரண்யத்தில் உற்பத்தியாகும் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு, காஸ்டிக் சோடா ஆலை தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களிடம் இன்றுதான் கோரிக்கை வைக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன். மனதில் நினைத்ததை எல்லாம் அறிவிப்பாக, விதி 110-ன்கீழ் அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) என் தொகுதி மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களைப் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

பிற்பகல் 1-25

"குழலினிது யாழினிது" என்பதினும் மிக இனிதாகிய மழலைச் செல்வங்கள் மீது மனமார சிந்தனைகள் காட்டி, வளமார கருணைகளைக் கூட்டி, மாண்புமிகு அம்மாவின் அன்பின் அரசு ஆக்கியுள்ள சாதனைகள் உலகம் உள்ளளவும், உயர்ந்தோர்கள் உள்ளளவும், பொன்னேடெடுத்து வைரத்தால் வரையத்தக்கது.

அனாதைக் குழந்தைகளே இல்லை என்ற வகையில், அரசுத் தொட்டில் திட்டம்; பெண் சிசுக் கொலை தடுப்புச் சட்டம்; தாய்மைப் பேற்றுக்கு, தாய்மைக்கு உதவியாக மும்முறையாய் ரூ.12,000/-; தாய்க்கும், சேய்க்கும் சிறப்புத் திட்டம்; அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைக்கு, பிறந்த அன்றே பெற்றோருக்கும் முன்பாக 16 பொருள்கள் அடங்கிய "அம்மா பரிசுப் பெட்டகம்" என்று எவருக்கும் தோன்றாத் திட்டங்களை இயற்றும் இரக்கமிகு தாயுள்ளமே! அரசாக அமர்ந்து அருள்பொழியும் தனியுள்ளமே! தாயாக இறைவன் தந்த வரமே! எங்கள் அம்மா! பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு, பல கோடி நூறாண்டு வாழ இறைவனை வேண்டுகிறேன். யாராலும் செய்து முடிக்காத, சீர்மைப்படுத்தாத மகளிர்

வாழ்வுயர்த்த, மாபெரும் திட்டங்களை, ஆணுக்குப் பெண்ணிங்கு இளைப்பில்லை, காணென்று மகளிர்க்குக் காக்கிச் சட்டைகள் தந்து; கடமைகளில் சமத்துவம்; வீராங்கனைகளுக்கு விருதுகள்; சிறந்த பெண்மணிகளுக்கு ஔவையார் விருது; தாய் பெயரின் முதலெழுத்தை, பெயரின் முன்னெழுத்தாக சட்டம்; பெண்கள் எழுத்தறிவுத் திட்டம்; தொடர் கல்வித் திட்டம் என பெண் கல்வி பெரும்பணி; பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க 13 அம்சத் திட்டம்; தாலிக்குத் தங்கம்; பட்டம், பட்டயம் படித்தவர்களுக்கு ரூ.50,000/- மற்றவர்களுக்கு ரூ.25,000/-; திருமணத்திற்குப் பொருள் உதவித் திட்டம்; வேலைவாய்ப்பில் முன்னுரிமை; மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்; பணிபுரிவோர்க்கு மகளிர் விடுதிகள்; பெண் சுய தொழில்கள் நிறுவ உதவி; பெண்களுக்கு கழகத்தில் 33 சதவிகித பொறுப்புகள் என்று அள்ளி வழங்கிடும் அளவில்லா திட்டங்களால் துள்ளியெழுந்திடும் வெள்ளி விடியலே எங்கள் அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. காமராஜ், 2 மணிக்கு guillotine time. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. என்.வி. காமராஜ்: "கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே" என்றுரைக்கும் மூதுரைச் சொல்லை முழு உரையாக்கிட, அம்மாவின் அரசு இயற்றிவரும் எழிலார் செயல்முறைகள் ஏராளம்! ஏராளம்! கல்லாமை என்ற நிலை இல்லாமை ஆக்கிடுவோம்! "கல்வியே கண், கற்றோர் வாழ்வதே நாடு" என்று கல்வித் துறையில் செய்துவரும் கணக்கில்லா புரட்சிகளைக் கண்டு; மாணவர்க்குச் செய்துவரும் மலைபோல் உதவிகளைக் கண்டு; பள்ளித் தலமனைத்தும் கோவில்களாவதைக் கண்டு; விலையில்லா நோட்டுப் புத்தகம், சீருடைகள், புத்தகப் பைகள், மிதிவண்டிகள், மடிக்கணினிகள், கணித உபகரணங்கள், உலக வரைபடங்கள், மருத்துவ ஆய்வுகள், மருந்துகள் என வளர்ந்துகொண்டே இருக்கும் பயன்மிகு செயல்களைக் கண்டு; இல்லங்கள் யாவும் ஒளி பிறக்க, எதிரிகள்கூட வாய் பிளக்க, பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பால்போல், வளரும் குழந்தைக்குக் கல்விப்பால் செய்வித்த எங்கள் வள்ளுவனின் ஏடே! தெள்ளுதமிழ் நாடே! அறிவறிந்த சிரசே! என்றும் எமை ஆளுகின்ற அரசே! அன்னையே! எங்கள் அம்மாவே!

"நூறு சமயம் உளவாம் நுவலுங்கால், ஆறு சமயம் அவ்வாறுள் படுவன கூறு சமயங்கள்" கொண்ட நெறியே இறைநெறி என்னும் திருமூலரின் திருமந்திரத்திற்கிணங்க. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. என்.வி. காமராஜ்: இதோ முடித்துவிடுகிறேன்.

"குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

என்னும் குறள் வழியில், அம்மா எனும் ஆலமரத்தின் நிழலில் வாழும் தமிழக மக்களின் நலனுக்காகவே பல வரலாற்றுத் திட்டங்களைத் தீட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) அதை நிறைவேற்றிவரும் அம்மா அவர்கள் எதிர்வரும் 2016—விலும் எதிர்காலம் யாவற்றிலும் நம் அம்மாவே முதல்வர்! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் வாழும்வரை, தமிழ் மொழி இருக்கும் வரை, தமிழ் இனம் இருக்கும்வரை, அம்மா! அம்மா! என்றே தமிழக மக்கள் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நமது இலட்சியம் உயர்வானது! நமது பார்வை தெளிவானது! 2016—ல் 234 தொகுதிகளிலும் அம்மாவின் வெற்றி தொடர்வது உறுதியானது! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களே! தாங்கள் பல்லாண்டு நலமுடன் வாழ இறைவனை வேண்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து ஐந்தாவது முறையாக இம்மாமன்றத்தின்முன் நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு தொலைநோக்குப் பார்வையுடன் அறிவுசார்ந்த முடிவுகளை எடுக்கவல்ல மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என் தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுங்கள், நான் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. என்.வி. காமராஜ்: பின்வரும் கோரிக்கைகளை சமர்ப்பிக்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்

வேதாரண்யம் தொகுதியிலுள்ள வளவனாற்றில் "வெள்ளம் பெருகிவர வன்னனும் பொல்லனாய், வளவனெனும் பேராறாய், கொல்லன் திடல் நீங்கி கொள்ளாய் பெருங்கடலே" என்று ஔவையார் பாடி, வெள்ளத்தை ஓட்டியதாக நம்பப்படும் துளசியாப்பட்டினம் ஔவையார் கோயிலுக்கு குடமுழுக்கு செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெல்டா மாவட்டத்தின் கடைக்கோடி பகுதியாகிய வேதாரண்யம் பகுதியில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்த காரணத்தால், நிலத்தடி நீர் வற்றி, நீர்வரத்து இன்றி, விவசாய நிலங்கள் பயிர் சாகுபடி செய்ய இயலாத நிலையில் உள்ளன. எனவே, வேதாரண்யம் பகுதியை வறட்சிப் பகுதியாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யம் பட்டணம் கிராமம் என்பது சுமார் 194 ஏக்கர் மட்டுமே உள்ள இனாம் கிராமம். இது, 1963 ஆம் வருடம் இனாம் ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றுச் சட்டத்தின்கீழ் அரசால் கையகப்படுத்தப்பட்ட திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், செவந்திபுரம் போன்ற கிராமம். அதேபோன்று, எங்கள் கிராமக் குடியிருப்புவாசிகள் பல்லாயிரம் குடும்பங்களின் வாழ்வில் வசந்தம் பெற வருவாய்த் துறையின்மூலம் தங்கள் பொற்கால ஆட்சியில் தலைமுறை தலைமுறையாகக் குடியிருந்துவரும் வேதாரண்யம் பட்டணமனை இனாம் கிராமக் குடியிருப்புவாசிகள் சுமார் 1,000 குடும்பங்களுக்குக் குடிமனைப் பட்டா தங்கள் பொற்கரங்களால் வழங்கி, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிட, அம்மக்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி வேண்டுகிறேன்.

மழை வெள்ளக் காலங்களில் கடல்நீர் உள்ளே புகுந்து விவசாய நிலங்கள் பாதிப்படைவதால், ஓரடியம்புலம் முதல் வெள்ளப்பள்ளம் ஆற்றங்கரை மாரியம்மன் கோயில் வழியாக கள்ளிமேடு, கொடிசுற்றிப் பாலம்வரை செல்லும் அலவஞ்சான் கரைக்கு சுமார் 6 கிலோ மீட்டர் கான்கிரீட் தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யம் பட்டணம் சுமார் 250 ஆண்டுகளாக பத்திரப் பதிவுத் துறையின்கீழ் இருந்தது. கடந்த மைனாரிட்டி தி.மு.க.

ஆட்சியாளர்களால் தேவஸ்தானத்தார்மூலம் பத்திரப் பதிவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால், பத்திரப் பதிவுத் துறைக்கு ஆண்டொன்றுக்கு பல இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. அதனால், மீண்டும் பத்திரப் பதிவு செய்ய ஆணையிட்டு உதவிடுமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி வேண்டுகிறேன்.

தலைஞாயிறு ஒன்றியம், அரிச்சந்திரா நதி கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் கடல் நீர் மீண்டும் உள்ளே புகாதவாறு முதலியப்பன் கண்டியில் ஷட்டருடன்கூடிய தடுப்பு அணை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தலைஞாயிறு ஒன்றியம், ஆலங்குடி முதல் ஆலத்தம்பாடி வரை 2 கிலோ மீட்டர் தடுப்புச் சுவருடன் 5 கிலோ மீட்டர் தார்ச் சாலை அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள். ஐந்து நிமிடங்களில் பேசி முடித்துவிடுங்கள், நேரமில்லை.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவேரி பாசனப் பகுதியில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பா சாகுபடிகள் அழிந்துவிடக்கூடிய ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு, அந்த மூன்று மாவட்டங்களிலுள்ள விவசாயிகள் போராட்டத்திலே தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள். 2013 ஆம் ஆண்டு அரசு செய்ததைப்போல, ஒருவேளை சாகுபடிகள் அழிகிற ஆபத்திலே இருக்கிற காரணத்தினால், அந்த சாகுபடிகளுக்கான பயிர் இன்சூரன்ஸ் திட்டத்திற்கான பிரிமியத்தை அரசாங்கமே செலுத்தி, பாதிக்கப்படுகிறபோது அவர்கள் உரிய நிவாரணத்தைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கர்நாடக அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் வற்புறுத்திட, தமிழக அரசு அனைத்துக் கட்சித் தலைவர்களைக்கொண்ட ஒரு தூதுக் குழுவை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய 125-வது பிறந்தநாள் விழா நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு முழுவதும் கொண்டாடப்படுவதாக மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அதனையொட்டி, தமிழக அரசும் அந்த விழாவினை சாதி பேதமற்ற சமூகத்தை அமைக்கிற விழா என்கிற அடிப்படையிலே சிறப்பாகக் கொண்டாட வேண்டும்.

பிற்பகல் 1-30

Dr. Ambedkar Chair என்கிற முறையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உட்பட அனைத்து பல்கலைக்கழகங்களிலும், 'அம்பேத்கர் இருக்கை' என்பது உருவாக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1-4-2003 முதல் அமலாக்கப்படும், அரசு ஊழியர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம் கைவிடப்படும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை அமலாக்கி, பழைய ஓய்வூதிய திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கின்ற அங்கன்வாடி, சத்துணவு ஊழியர்கள் உட்பட ரூ.1,000 ஓய்வூதியமாக பெறுகிற அவர்களுக்கெல்லாம், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற குறைந்தபட்ச ஓய்வூதியமான ரூ.3,050 வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய அரசு வழங்குவதைப்போல 20 ஆண்டுக்காலம் பணிபுரிந்தாலே முழு ஓய்வூதியம் வழங்கவேண்டும்.

ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் மருத்துவப்படி ரூ.1,000/-மாக உயர்த்தி வழங்க வேண்டும். மருத்துவக் காப்பீட்டுத் தொகை ரூபாய் நான்கு இலட்சமாக உயர்த்தவேண்டும். குடும்ப பாதுகாப்பு நல நிதி திட்டத் தொகையை ரூ.1,50,000 ஆக உயர்த்திடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதியோர், மொழிப்போர் தியாகிகளுக்கும், அதேபோல, விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கும், நலிந்த கலைஞர்களுக்கும் வழங்கப்படுகின்ற ஓய்வூதியத்தையும், மருத்துவப் படியையும் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் ஓய்வூதியம் தமிழகத்திலே எவ்வளவு பேருக்கு வழங்கப்படுகிறது? எவ்வளவு பேருக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது?

என்கின்ற விவரத்தை அரசே பகிரங்கமாக வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பென்ஷன் மற்றும் மருத்துவப் படிகளை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அரசு அதை பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்புவது, மக்களவை, மாநிலங்களவையைப்போல, சட்டமன்ற உறுப்பினர்களின் பேச்சு மற்றும் அறிக்கைகள் அனைத்தையும், விவாதக் குறிப்புகளெல்லாம் புத்தகங்களாக வெளியிட்டுக் கொண்டிருக்கின்ற அதேநேரத்தில், அவைகளைத் தமிழ்நாடு சட்டமன்ற இணையதளத்தில் வெளியிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்க்கண்ட சட்டங்களை தமிழக சட்டமன்றப் பேரவையிலே நிறைவேற்றவேண்டு : ஆணவக் கொலைகளைத் தடுப்பதற்கான தனிச் சட்டமும், அரசிடம் மனுக்கள் அளித்து, மக்களுக்கு உரிய பதில் அல்லது நிவாரணம் கிடைக்க வகைசெய்ய வைக்கின்ற சேவைபெறும் உரிமைச் சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றியுள்ளது. 19 மாநிலங்கள் இச்சட்டத்தை நிறைவேற்றியிருக்கின்றன. தமிழ்நாட்டிலும் இந்தச் சட்டத்தை நிறைவேற்றவேண்டும்.

உயர்மட்ட ஊழலைத் தடுக்கின்ற வகையில், லோக் ஆயுக்தா சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். நிலம் கையகப்படுத்துவதற்கு 2013-ல் நிறைவேற்றப்பட்ட சட்டமே இறுதியானது என்று மத்திய அரசு முடிவிற்கு வந்துவிட்ட நிலையில், இச்சட்டத்திற்கு முரணாக தமிழ்நாட்டிலே உள்ள தொழிற்சாலைகளுக்கு நிலம் கையகப்படுத்தும் சட்டம், 1997 சட்டத்தை நீக்குவதற்கான சட்டத் திருத்தத்தை அரசு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்றக் கூட்ட நாட்களை அதிகரிக்கவேண்டும். ஒரு நாளில் ஒரு முக்கியமான துறை என்று வைக்கவேண்டும். கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகள் கொடுக்கப்பட்டு பல நாட்கள் ஆன பின்னரும்கூட, பதில் வரவில்லை என்று சொல்வதை மாற்றி, 48 மணி நேரத்தில் சம்பந்தப்பட்ட

துறையிலிருந்து பதிலைக் கேட்டுப் பெற்று, அவையிலே அறிவிக்கின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு ஓய்வுபெற்ற ராணுவ வீரர்கள் மத்திய, மாநில அரசில் மறுவேலைவாய்ப்பு பெறுகிறபோது, ராணுவ பென்ஷனோடு மத்திய, மாநில அரசின் பென்ஷனும் வழங்கிடவேண்டும் என 2012 ஆம் ஆண்டு மத்திய அரசு ஆணை வெளியிட்டிருக்கிறது. அதை தமிழ்நாட்டில் அமலாக்கி, அவர்கள் இரண்டு பென்ஷன்கள் பெற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், மக்கள் நலப் பணியாளர்களுக்கு இந்த அரசு கருணை கூர்ந்து வேலை வழங்கிடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மூத்த குடிமக்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் என்று ஏற்கெனவே கொடுத்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும்.

வேலை தேடி ஏஜெண்டுகள்மூலம் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிற ஏராளமானோர் ஏமாற்றப்படுகிறார்கள். எனவே, அவர்களையெல்லாம் கண்காணித்து, ஒழுங்குபடுத்துவதற்கு நாம் உருவாக்கியிருக்கின்ற இடம் பெயர்ந்தோர் வள மையத்தின்மூலம் கண்காணிப்பு ஏற்பாடு முறைகளைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசின் நிதித் துறையின்கீழ் பல்வேறு தணிக்கைத் துறைகள் இருக்கின்றன. உள்ளாட்சி நிதி, தணிக்கைத் துறைகள் உள்ளிட்ட பல்வேறு தணிக்கைத் துறைகளும் இருக்கின்றன. அவற்றின் அறிக்கைகளையெல்லாம் சட்டமன்றத்தில் வைக்கவேண்டும். 20 சதமானம் ஊராட்சிகளுக்கு மட்டும் சோதனை முறையில் தணிக்கை செய்யப்படுவதை மாற்றி, அனைத்து ஊராட்சிகள், அனைத்து கூட்டுறவு சொசைட்டிகளையும் தணிக்கை செய்யலாம் என்ற நிலையை உருவாக்கவேண்டும்.

இலங்கை அகதிகளுக்கு நாம் நிறைய செய்தாலும், அவர்களுக்கு கொடுக்கக்கூடிய நிதி போதவில்லை. 20 ஆண்டுகள், 25 ஆண்டுகளுக்கு மேலாக இங்கு இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு தற்காலிகக் குடியுரிமை வழங்கவேண்டும். ஒருவேளை அவர்கள் விரும்பி இலங்கைக்குத் திரும்புகிறவரை அவர்களுக்கு தற்காலிகக் குடியுரிமை வழங்கப்படுகிற நிலைமையை உருவாக்கவேண்டும்.

மாநில நிலப் பயன்பாட்டுக் கொள்கை, மாநில நீர் கொள்கை போன்ற கொள்கைகளை உருவாக்க வேண்டும். சிறப்பு முயற்சிகள் திட்டத்தின் சார்பிலே, நீர்வழிப் போக்குவரத்துத் திட்டம் அறிவிக்கப்பட்டு அப்படியே இருக்கிறது. மோனோ இரயில் திட்டத்தையும் உடனடியாகத் துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

அதேபோல, இன்றைக்கு எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு நேரம் ஒதுக்கியது குறித்த அறிக்கைகளைப் பார்த்தால், ஆளுங்கட்சியில் இருக்கிறவர்களுக்கு ஒதுக்கப்படுகிற நேரத்தையும், ஆளுங்கட்சி சின்னத்தில் போட்டியிட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு ஒதுக்கப்படுகிற நேரத்தையும் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு வகுத்தளிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே அந்த அறிக்கையில் இதன் விவரங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட முறையைத் தவிர்க்க வேண்டும் என்று இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், சீக்கிரம் உரையை முடியுங்கள். இன்றைக்கு கொஞ்சம் ஒத்துழையுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பூதியத்தை ரூ.10,000/- ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற விடுதிக்குச் செல்லும் சாலையை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசியபோது, "பேரவை நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சி மற்றும் இணையதளங்களில் நேரடியாக ஒளிபரப்ப வேண்டும்" என்று கோரிக்கை வைத்தார்கள். சட்டமன்ற நடவடிக்கைகளை மக்கள் அறிந்துகொள்ள ஏதுவாக, பார்வையாளர்கள் மாடத்தில் பொதுமக்களை அனுமதிக்கும்

முறையும், அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகத் துறையினருக்கு அனுமதிச் சீட்டு வழங்கி, அவர்கள் பேரவைக் கூட்ட நடவடிக்கைகளை நேரடியாகப் பார்த்து, அதன் விவரங்களை மக்களுக்கு எடுத்துச்சொல்லும் முறையும் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளன. சட்டமன்றக் கூட்டம் தொடர்பான செய்திகள் பிரதானமாக அனைத்து பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் வெளிவருகின்றன. மேலும், அனைத்து வசதிகளுடன்கூடிய, நவீன media centre ஒன்றையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பத்திரிகைத் துறையினருக்காக தலைமைச் செயலகத்தில் உருவாக்கிக் கொடுத்துள்ளார்கள்.

ஜனநாயக நாட்டில் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சட்டமன்றத்தின் செயல்பாடுகள் குறித்து ஒளி வடிவில் திரையில் காண்பதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபோது, 2001 ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் முதல் பேரவை நிகழ்ச்சிகளை வீடியோ பதிவு செய்யும் நடைமுறை தொடங்கப்பட்டது. நேரடி ஒளிபரப்பைப் பொறுத்தவரையில், மேதகு ஆளுநர் உரை, வரவு-செலவுத் திட்டம் அளித்தல், உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதி மொழி ஏற்றல் உள்ளிட்ட சில சிறப்பு நேர்வுகளின்போது மட்டும், அவை நிகழ்ச்சிகள் மத்திய அரசின் நிறுவனமான பிரசார் பாரதி நிறுவனத்தின் தூர்தர்ஷன் தொலைக்காட்சி மூலமும், அகில இந்திய வானொலி மூலமும், அந்நிறுவனங்களின் தொழில்நுட்ப சாதனைங்களைப் பயன்படுத்தி, கட்டணம் ஏதுமின்றி நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றன. மற்ற நாட்களில் 2 மணி முதல் 3 மணி நேரத்திற்கு மேல் ஓடக்கூடிய அளவிற்கு முக்கியப் பகுதிகள் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் மேற்பார்வையில், செய்தித் துறையின் தொழில்நுட்ப உதவியுடன் தொகுக்கப்பட்டு, 25-க்கும் மேற்பட்ட ஊடகங்களுக்கு, வீடியோ பதிவாக இலவசமாக செய்தித் துறையின்மூலம் கொடுக்கப்படுகின்றன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், பேரவைக் கூட்ட நாட்களை அதிகரிப்பது குறித்தும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு பேசும்போது குறிப்பிட்டார்கள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டங்கள் அதிக நாட்கள் கூட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை இங்கே

வைக்கப்பட்டது. சட்டமன்றப் பேரவை விதிகளில், ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் இத்தனை நாட்கள் பேரவை கூட்டப்பட வேண்டும் என்று அறுதியிட்டு கூறப்படவில்லை. எனினும், சட்டமன்றப் பேரவைத் தலைவரைத் தலைவராகக் கொண்ட அலுவல் ஆய்வுக் குழு, பேரவைக் கூட்டம் நடைபெற வேண்டிய நாட்கள் குறித்தும், எந்தெந்த நாட்களில், என்னென்ன அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் என்பது குறித்தும் முடிவு செய்கிறது. பேரவைத் தலைவரை தலைமையாகக் கொண்ட அலுவல் ஆய்வுக் குழுவில், அனைத்துக் கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களாக உள்ளார்கள்.

பேரவையில் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டிய அலுவல்கள், அரசு அலுவல்கள், பிற அலுவல்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, பேரவைக் கூட்டம் இத்தனை நாட்கள் நடைபெற வேண்டும் என்று அலுவல் ஆய்வுக் குழு விவாதித்து முடிவு செய்கிறது.

சட்டமன்றப் பேரவை விதி12(1)—ன்கீழ், ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் பற்றி விவாதிக்க தேவைப்படும் காலத்தைப் பொறுத்தளவில், அலுவல் ஆய்வுக் குழு கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கிறது. அதேபோல், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்கு இத்தனை நாட்கள் நடைபெற வேண்டும் என்று அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்கிறது. அதேபோல, வரவு—செலவுத் திட்டம் மற்றும் மானியக் கோரிக்கைமீதான விவாதத்தைப் பொறுத்தளவில், பேரவை விதி 183(1)—ன்படி, கால அளவு முடிவு செய்யப்படுகிறது.

சட்டமன்றப் பேரவை, அரசு அலுவல்களை மட்டும் விவாதிப்பதற்காக நடத்தப்படுகிறது என்று கூறுவது சரியல்ல. அரசு அலுவல்களைத் தவிர, பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இக்கூட்டத் தொடரைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு நாளும் அவையில் அலுவல்கள் காலை 10—00 மணிக்கு ஆரம்பித்து, மாலை 5—00 மணிக்கு மேல் பெரும்பான்மையான நாட்களில் முடிந்திருக்கிறது. அவை நடந்த நேரத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், சராசரியாக தினமும் 5 மணி 26 நிமிடங்கள் பேரவைக் கூட்டம் நடைபெற்றுள்ளது. நேற்று வரை எடுத்துக்கொண்டால்,

இந்த நிதிநிலைக் கூட்டத் தொடர் 28 நாட்கள் நடந்துள்ளது. அவையின் அலுவல் நேரம் காலை 10–00 மணி முதல் 2–00 மணி வரை 4 மணி நேரம் எனக் கணக்கிட்டால், 38 நாட்களுக்கான நேரம் அளவிற்கு இக்கூட்டத்தொடரின்போது பேரவை கூடியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–40

மேலும், வினாக்கள்–விடைகள் அனைத்து சட்டமன்றம் கூடிய நாட்களில் எடுக்கப்பட்டு, அதில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் உள்பட அனைவருக்கும் வினாக்கள், துணை வினாக்கள் கேட்க வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டத் தொடரைப் பொறுத்தவரையில், நேற்று வரை 323 வினாக்களும் 618 துணை வினாக்களும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில், தினமும் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவையில் எடுத்துக்கொள்ளப்படாத கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான பதில்கள் பெறப்பட்டவுடன், (பேரவைக் கூட்டம் முடிவுற்றாலும்) சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு தபால்மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்தக் கூட்டத்தைப் பொறுத்தவரையில் நேற்றுவரை, 14 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், 3 சிறப்புக் கவன ஈர்ப்புகள், 8 தகவல் கோரல்கள் ஆக மொத்தம் 25 பொருள்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 50 எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளன.

அனைத்து மானியக் கோரிக்கைகளும் விவாதித்து, நிறைவேற்றப்பட்டுள்ளன. தினமும் நடைபெற்ற மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தின்போது, எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு அதிக வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

எனவே, பேரவையின் அலுவல்களை விவாதித்து, நிறைவேற்றத் தேவையான கால அளவுக்கு பேரவைக் கூட்டம் நடைபெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உள்ளோரின் எண்ணிக்கையை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் புனித அரசு, சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரைக் காப்பாற்ற, சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்மூலம் ஆதரவற்றோர் மற்றும் ஏழையெளியோர், முதியோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், 50 வயது மற்றும் அதற்கு மேல் திருமணமாகாத பெண்கள் ஆகியோர் பயன்பெற்று வருகின்றனர். சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையை, 2011 ஆம் ஆண்டு முதல்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ரூ.500/—லிருந்து ரூ.1,000/—ஆக உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு மத்திய அரசு ரூ.200/—, ரூ.300/—, ரூ.500/—ஆக வழங்கியிருக்கின்ற போதிலும், அனைவருக்கும் 9 திட்டங்களில் ரூ.1,000/—ஐ வழங்கியிருக்கிற ஒரே தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழான எண்ணிக்கையைக் கேட்டார்கள். 2010—2011 ஆம் ஆண்டில், ஆண்டின் கடைசியில், வரையறை இல்லாமல் வாரி வழங்கியதன் அடிப்படையில், கடந்த ஆட்சியில் 23.71 இலட்சம் பயனாளிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. இது கொள்கை விளக்கக் குறிப்பிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 23.71 இலட்சம் பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.1,207 கோடி மட்டுமே பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னர், 2015—2016 ஆம் ஆண்டிற்கான மொத்த நிதி ஒதுக்கீட்டை, ரூ.4,198.05 கோடியை வாரி வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலமான பயனாளிகளின் எண்ணிக்கை, 36.56 இலட்சம் வரை எட்டியது. ஆனால், மத்திய அரசின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி பயனாளிகளின் வருடாந்திர சரிபார்ப்பு, ஆகஸ்டு 2014—ல் மேற்கொள்ளப்பட்டபோது, பயனாளிகளின் இறப்பு, இரட்டைப் பதிவு, முகவரியில் குடியில்லாதவர்கள் எண்ணிக்கை மற்றும்

தகுதிக்கான வரையறைகள் பூர்த்தி செய்யாமை, ஆகியவற்றைக் கண்டறியப்பட வேண்டிய காரணங்களால், தீவிரமாக ஆய்வு மேற்கொண்டு, பயனாளிகளின் எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டு வருகிறது. மேலும், தகுதியுள்ளவர்களுக்குத் தொடர்ந்து வழங்கிவருவதைப்போல், தகுதியில்லாதவர்களைக் கண்டறிந்து, தொடர் நடவடிக்கையினை மேற்கொள்வதும், அரசின் கடமையாகும். பயனாளிகளின் நலனைக் கருத்திற்கொண்டு, அனைத்து ஏழைகளும் பயனடையும் வகையில், 1962 ஆம் ஆண்டு அரசாணையின்படி ஆதரவற்றோருக்கான வரையறைகள், ஏப்ரல் 2015—ன்படி இரண்டு அரசாணைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதில் பகிரங்கமாக அறிவிப்பதற்கொன்றுமில்லை. கொள்கை விளக்கக் குறிப்பிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கடந்த அரசைக் காட்டிலும், ஏன்? இந்தியாவிலேயே 29 மாநிலங்களில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் அதிகமான பயனாளிகளுக்கு அதிக நிதியொதுக்கீடு செய்திருக்கிற ஒரே அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், சொல்லுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். ஐந்து ஆண்டுகளுக்கான பட்டியலைச் சொல்லியிருக்கிறார். நான் ஒரு மாதத்திற்கு எவ்வளவு வருகிறது என்றுதான் கேட்டேன். பரவாயில்லை.

கடைசியாக என்னுடைய கோரிக்கை, முதலமைச்சர் நிவாரண நிதி என்பது வழங்கப்படுகிறது. என்னுடைய தொகுதியில் 10 முதல் 12 பேர்களுக்காக அந்த கோரிக்கை வைக்கப்பட்டுள்ளன. அதனை உடனடியாகப் பரிசீலித்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடக இசையில் புகழ்பெற்ற ஞானிகளாக கருதப்படுகிற மும்மூர்த்திகளுக்கு அவர்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அவர்கள் வாழ்ந்த திருவாரூர் நகரத்தில், அவர்கள் பெயரில் ஒரு இசைக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. குணசேகரன் அவர்கள். 5 நிமிடங்களில் பேசி, உட்காருங்கள்.

திரு. கு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் ஈழ மக்கள் முள்ளிவாய்க்காலில் இனப் படுகொலை செய்யப்பட்ட பின்னர், சர்வதேச நீதி விசாரணை இன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் முந்தைய நிலைப்பாட்டை மாற்றியமைத்து, சிறப்பு இலங்கை உள்ளிட்ட கலப்பு நீதி விசாரணை நடத்தும் முடிவை எடுக்கப்போவதாகவும், இதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் உடன்பட்டு, செயல்படுவதாகவும் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. இலங்கை அரசாங்கத்தோடு இணைந்து, இந்த நீதி விசாரணையை நடத்தும் திட்டத்தை, இந்தத் தீர்மானம் முன்மொழியப்போவதாகத் தெரிகிறது. முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கும் உலகெங்கிலும் வாழுகின்ற தமிழக மக்களுக்கும் மனித உரிமை சக்திகளுக்கும் இழைக்கப்படும் அநீதி இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனப்படுகொலைக்குக் காரணமானவர்களை நீதிபதிகளாகக் குழுவில் பங்கேற்று விசாரணை செய்தால் அந்த நீதியின் தகுதி எவ்வாறு இருக்கும் என்பதை இந்த அவையின்மூலம் இந்திய சர்வதேச சமூகத்தைக் கேட்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-45

தமிழக சட்டமன்றம், தமிழக மக்களின் இறையாண்மையின் பிரதிநிதி. இங்கு தொடர்ந்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள், இலங்கைத் தமிழ் மக்களைக் கொன்ற குற்றவாளிகளை சர்வதேச விசாரணையின்மூலம் தண்டிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி வருகிறது. சர்வதேச விசாரணை மட்டுமல்ல, சர்வதேச நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற தீர்மானத்தையும் தமிழ்நாடு சட்டமன்றம் 14 ஆம் தேதி ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறது. இந்தக் கூட்டத் தொடரிலும் தீர்மானம் ஒருமனதாக எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் இறையாண்மைக்கு மதிப்பளித்து இதனை நிறைவேற்ற வேண்டியது, மத்திய அரசாங்கத்தின் கடமையாகும். இலங்கை அரசின் இறையாண்மை பற்றிப் பேசப்படுகிறது; இலங்கை அரசின் இறையாண்மைதான் பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் மக்களைக் கொன்று குவித்துள்ளது என்பதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசு, இலங்கைத் தமிழ் மக்களுக்கு நேர்ந்த கொடுமைகளை, இனப்படுகொலை பற்றி கவலைப்படாமல், மறைமுகமாக இலங்கை அரசுக்கு ஆதரவாக செயல்படுவது, தமிழ் மக்களின் மனதை பெரிதும் புண்படுத்துகிறது. இது மிகவும் தவறான நடைமுறையென்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய அரசு அவசரகால அடிப்படையில், இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிமன்றம் அமைத்து விசாரணை நடத்த, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, ஐக்கிய நாடுகள் சபையினுடைய மனித உரிமைக் கூட்டத்தில் முன்மொழிந்து, அதில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக சட்டமன்றப் பேரவையில் கடந்த 14 ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக, இன்றைக்கு பிரதமர் திரு. மோடி அவர்கள் கருத்துகளை முன் வைத்திருக்கிறார்கள். இது ஏதோ சட்டமன்றப் பேரவையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதோடு நமது கடமை முடிந்துவிட்டதாக நாம் கருதிவிடக் கூடாது. இன்றைக்கு சர்வதேச விசாரணை வேண்டுமென்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றும்விதமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்தத் தீர்மானத்திற்கு அழுத்தம் தருகிற வகையில், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சியினரையும் ஒருங்கிணைத்து, பிரதமர் அவர்களைச் சந்தித்து வலியுறுத்துவதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தும்விதமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இங்கே இருக்கக்கூடிய முகாம்களில் இருந்து வெளியே இருக்கக்கூடிய இலங்கைத் தமிழர்கள் 37,000 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு உயர் கல்வி மற்றும் குடியுரிமை கிடைக்க தமிழக அரசு முன் முயற்சிகளை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன், இன்றைக்கு கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள்.

திரு. சு. குணசேகரன்: ஒரு நிமிடம்தான் பேசியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான், வேறு வழியில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், துறையின் அறிவிப்புகளை அறிவிக்க வேண்டும்.

திரு. சு. குணசேகரன்: அதற்கு நான் பொறுப்பல்ல. இன்றைக்கு அரபு போன்ற நாடுகளில் வேலைக்குச் செல்லக்கூடிய வெளிநாடுவாழ் தமிழர்கள் பல வழிகளில் ஏமாற்றப்படுகிறார்கள். அங்கே இறப்பவர்களுக்குக்கூட நிவாரணம் கிடைக்காத நிலை நீடிக்கிறது. எனவே, இது மிகப்பெரிய சமூகப் பிரச்சினையாக மாறியிருக்கிற நிலையில், தமிழர்களுடைய பாதுகாப்பிற்காக வெளிநாடு அமைப்பு ஒன்றை உருவாக்கி, அதற்கான நிதியையும் உருவாக்கி அங்கே மரணமுற்றவர்களுக்கு நிதியை வழங்குவதோடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகின்ற நிகழ்வு அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களை அங்கிருந்து மீட்டு இங்கே கொண்டு வந்து சேர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள் என்பதனை இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்த நாட்டில், எந்தப் பகுதியில் வெளிநாடுவாழ் தமிழர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுகூட 175 பேர் மத்திய ஆசிய நாடுகளில் வேறு பணிகளுக்காக சென்று ஒட்டகம் மேய்க்க விடப்பட்டிருக்கிறார்கள் செய்தி பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, சிறு சேமிப்புத் துறை இங்கே வலுவாக கட்டமைக்கப்படுகிறது. ஆனாலும், அந்தத் துறையில் அரசு கூடுதலாக கவனம் செலுத்தி, சிறு சேமிப்புத் துறையை வலுப்படுத்த வேண்டும். அந்தத் துறையில் வட்டி கூடுதலாக இல்லாத காரணத்தால், இன்றைக்கு தனியார்களை நம்பி சேமிக்கக் கூடியவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகி, அதனால் மிகப்பெரிய மோசடி நடந்து கொண்டிருக்கிறது, சமீபத்தில், PACL என்று சொல்லக்கூடிய நிதி நிறுவனம், தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 40,000 கோடி ரூபாய்க்கும் மேலாக நிதி மோசடி செய்ததால், அதற்கான போராட்டங்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட போராட்டம் என்பது தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கிறது. எனவே, தனியார் நிதி நிறுவனங்கள், சிறு சேமிப்பு அல்லது ஏலச் சீட்டு போன்றவற்றை நடத்துவதற்கு, கடுமையான சட்டங்களைக் கொண்டுவந்து, அதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைப்போல, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இன்றைக்குப் பல துறைகளில் பல மாநிலங்களைவிட, நம் மாநிலம் பல சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிற நேரத்தில், பிற மாநிலங்களில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் போன்றே நீங்களும் வழங்க வேண்டும். இன்றைக்கு அவர்களெல்லாம் வயது முதிர்ந்தவர்களாக இருக்கின்ற காரணத்தினால், இரயிலில் பயணம் செய்வதற்கான பாஸ் கொடுக்க வேண்டும். மருத்துவ உதவித் தொகையை நீட்டித்துக் கொடுக்க வேண்டும். நமது சட்டமன்றக் கூட்டத் தொடரை நேரடியாக ஒளிபரப்பு செய்ய வேண்டும். அதைப்போல, சட்டமன்றம் கூடும் நாட்களை அதிகமாக நீட்டிப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும். தமிழ்நாட்டில் லோக் ஆயுக்தா அமைப்பைக் கொண்டுவர வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த அமைப்பை உருவாக்கவேண்டும்.

பிற்பகல் 1–50

அதைப்போல, தேர்தல் சீர்திருத்தம் என்பது மிக மிக அவசியமாகக் கருதப்படுகிறது. சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல், கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் என்று இன்றைக்கு

ஜனநாயகம் வலுப்படுகிற அடிப்படையில், தேர்தல் என்பது அதிகமாக நடைபெறுகின்ற நிலையில், தேர்தல்களை நடத்துவதற்கென்று தனியாக ஓர் அமைப்பு இருந்தாலும், தேர்தல் பணியிலே ஈடுபடுத்தப்படக்கூடியவர்கள் அரசுப் பணியாளர்களாக இருக்கிறார்கள். அதனால் அரசு நிருவாகத்திலே தடை அல்லது வெவ்வேறுவிதமான பிரச்சினைகள் இன்றைக்கு ஏற்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. குணசேகரன், இன்றைக்குக் கொஞ்சம் ஒத்துழைப்பு கொடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொஞ்சம் ஒத்துழையுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: எனவே, தேர்தலை நடத்துவதற்கென்று அதிகாரிகள் மட்டுமல்லாமல், தேர்தல் நடத்துவதற்கென்று தனியாக ஒரு துறையையே உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தமிழ்நாட்டினுடைய திட்டங்கள் என்ற அடிப்படையில், நதிகள் இணைப்பு என்பது இன்றைக்கு முக்கியமான பிரச்சினையாக இருக்கின்றது. அதைத் தொடர்ந்து வலியுறுத்தினாலும், நதிகள் இணைப்பு என்பது ஆமை வேகத்திலே நடந்து கொண்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்தில், கோதாவரி ஆற்றையும், கிருஷ்ணா நதியையும் 174 கிலோ மீட்டர் இணைத்துவிட்டார்கள். ஆனால், தமிழ்நாட்டு நதிகள் ஒன்றுகூட இன்றைக்கு முழுமையாக இணைக்கப்படாத நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. எனவே, தமிழ்நாட்டினுடைய நதிகளை இணைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும்.

காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் கண்காணிப்புக் குழுவை அமைப்பதற்குத் தொடர்ந்து, இன்றைக்கு இருக்கக்கூடிய பி.ஜே.பி. அரசு மறுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, அதையும் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்கவேண்டும்.

இன்றைக்கு தொழில் வளர்ச்சிக்காக, தொழில் முதலீட்டை ஈர்ப்பதற்கு மாநாடு நடத்தப்பட்டிருக்கிறது. அந்த மாநாடு குறித்தும், தென் மாவட்டங்களில் தொழிற்சாலைகள் தொடங்குவது குறித்தும் ஒரு வெள்ளை அறிக்கையை முன்வைக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அதோடு மட்டுமல்லாமல், நமது விவசாயம் சார்ந்த மதிப்புக் கூட்டக்கூடிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. குணசேகரன், கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. க. குணசேகரன்: எனக்கு mike கொடுங்கள். விவசாயம் சார்ந்த மதிப்புக் கூட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள். (குறுக்கீடு) திரு. கே. பொன்னுசாமி, நீங்கள் ஒரு நிமிடத்தில் பேசிவிட்டு உட்காருங்கள். ஒரேயொரு நிமிடத்தில் பேசிவிட்டு உட்காருங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு நெறியினிலே அரசாள, இந்த அகிலமெல்லாம் தமிழர் உறவாட, துன்பங்களெல்லாம் பறந்தோட, தூய மனம் கொண்டு பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) மலர்ப்பாதம் தொட்டு வணங்குகிறேன்.

அம்மா! நீங்கள் சித்திரை மாத நிலவு; வேனிற்காலத் தென்றல்; கொடையின் வள்ளல்; படையில் சிங்கம்; (மேசையைத் தட்டும் ஒலி) மொழியில் வேதம்; விழியில் கருணை; எதிரிகளால் அடி, முடி காணவொண்ணா இறைவன். நல்லோர்க்கு ஆதியாகவும், அல்லோர்க்கு அந்தமாகவும், ஏழைகளின் ஏந்தலாகவும், முத்தமிழின் சங்கமமாகவும் திகழ்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களை மீண்டும் பணிந்து வணங்கி, எனது தொகுதிக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்

தாராபுரம் தொகுதியில், குண்டடம் பகுதி மற்றும் தாராபுரம் ஒன்றிய மேற்குப் பகுதியில் கடும் குடிநீர்ப் பிரச்சினை இருப்பதால், திருமூர்த்தி அணையிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் தந்து உதவ வேண்டுகிறேன்.

தாராபுரம் பழமைவாய்ந்த நகரமாகும். தாராபுரம் நகராட்சி, 2016 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் நூற்றாண்டு காண இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு நிதி வழங்கி, தாராபுரம் நகரின் வளர்ச்சிக்கு உதவிட வேண்டுகிறேன்.

தாராபுரம் தொகுதிக்கு ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்கி, உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தமிழ் பூமியைக் காப்பதற்கு, சந்திரா தாயிடம் சங்கல்பம் வாங்கி வந்த சரித்திரத்தின் படைப்பே நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) வீறு தமிழ் பூமிக்கு விருதுகளைக் குவித்திடவே, வேதா நிலையம் தந்த வெற்றிகளின் பிறப்பே நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழ் இனத்தினை உவந்து காத்திடவே, பிரம்ம தேவன் படைத்திட்ட பிரத்யேக பதிப்பே நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் உரிமைகளை மீட்டிடவே உலகளந்த பெருமான் உபயம் தந்த உயிர்ப்பே நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அகத்திற்கும், அறிவிற்கும் ஒருசேர அன்னமிட்டு, இல்லாமை, கல்லாமை இரண்டையும் மாய்த்திட்ட இன்னொரு கலைமகளே நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) 'பார் வியக்கும் தமிழகத்தைப் படைப்பதன்றோ என் பிறப்பின் நோக்கம்' என்று சூளுரைத்து, பொழிகின்ற சிரபுஞ்சி மழையே நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை முதற்கண் வணங்கி, பாரம்பரிய, பெருமைமிக்க இப்பேரவையில் பொதுத் துறை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை ஆகிய துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்புகளைச் சமர்ப்பித்து, அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு உறுப்பினர்கள் பங்கேற்று, எடுத்துவைத்த விவாதங்களுக்குப் பதிலளிக்கின்ற நல்வாய்ப்பினை எனக்கு அளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது வணக்க மலர்களைச் சமர்ப்பித்து, எனது பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

பிற்பகல் 1–55

மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான ஆணையை ஏற்று, முதலாவதாக மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதித்திருக்கின்ற அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூற விழைகின்றேன்.

பொதுத் துறை

1. முன்னாள் படைவீரர்களுக்குத் தொழில் சார்ந்த செயல்திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி வழங்குதல்

முன்னாள் படைவீரர்கள் தகுந்த சுய வேலைவாய்ப்பு மற்றும் குடிமுறை சார்ந்த நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்று பயன்பெறும் பொருட்டு, தொடர்புடைய துறைகளின் தேவைக்கு ஏற்றவாறு முன்னாள் படைவீரர்களின் தொழில் சார்ந்த செயல்திறன் மேம்படுத்தப்பட வேண்டும். அதன்பொருட்டு, முன்னாள் படைவீரர்களுக்கு தொழில் சார்ந்த செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்க 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக (TEXCO) *நிதியிலிருந்து வழங்கப்படும்.*

2. முப்படைப் பணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் வீர தீரச் செயல்கள் மற்றும் சிறப்பாகப் பணிபுரிந்தமைக்காக வழங்கப்படும் விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு பணப் பயன்களை உயர்த்தி வழங்குதல்

முப்படைப் பணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் வீர தீரச் செயல்கள் மற்றும் சிறப்பாகப் பணிபுரிந்தமைக்காக விருது பெறுவோருக்கு தற்போது வழங்கப்படும் பணப் பயன்கள் மற்றும் ஆண்டு உதவித் தொகையினையும் சேர்த்து கணிசமான அளவில் உயர்த்தி வழங்கப்படும். பரம்வீர் சக்ரா விருதுக்கான தொகை ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) அசோக் சக்ரா விருதுக்கான தொகை ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாகவும், மகாவீர் சக்ரா விருதுக்கான தொகை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.15 இலட்சமாகவும், கீர்த்தி சக்ரா விருதுக்கான தொகை ரூ.8 இலட்சத்திலிருந்து ரூ.12 இலட்சமாகவும், வீர் சக்ரா விருதுக்கான தொகை ரூ.7.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாகவும், சௌரிய சக்ரா விருதுக்கான தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சமாகவும் உயர்த்தப்படும். பல்வேறு வகை பதக்கங்களுக்கான பணப் பயன்களும் 50 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை கணிசமாக உயர்த்தப்படும்.

இந்த நலத் திட்டம்மூலம் மாநில அரசிற்கு ஆண்டு செலவினம் தோராயமாக ரூ.50 இலட்சம் ஆகும்.

3. இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திரப் பணப் பயன் உயர்த்தி வழங்குதல்

இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி ரூ.4,000/—லிருந்து ரூ.4,500/— ஆக உயர்த்தப்படும். இதன்மூலம், இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த 531 முன்னாள் படைவீரர்கள் பயனடைவர்.

இதற்குக் கூடுதல் செலவினம் ஆண்டிற்கு ரூ.31.86 இலட்சம் ஆகும். இச்செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நல நிதிமூலம் செலவிடப்படும்.

4. டேராடூனில் உள்ள இராஷ்டிரிய இந்தியன் இராணுவக் கல்லூரியில் பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் மாநில அரசின் கல்வி உதவித்தொகை உயர்த்தி வழங்குதல்

தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் இராணுவப் பணியில் சேருவதை ஊக்குவிக்கும் பொருட்டும், உயர்ந்த கல்வித் தரத்தினைப் பெறும் பொருட்டும், டேராடூனில் உள்ள இராஷ்டிரிய இந்தியன் இராணுவக் கல்லூரியில் பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் மாநில அரசின் கல்வி உதவித்தொகை ரூ.12,000/— லிருந்து ரூ.40,000/— ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்கு மாநில அரசின் கூடுதல் செலவினம் ஆண்டிற்கு ரூ.1.12 இலட்சம் ஆகும்.

நிதித் துறை

1. சொந்தக் கட்டடம் இல்லாத ஆவடி சார் கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் திருவள்ளூர் மாவட்டம், ஆவடியிலுள்ள சார் கருவூலத்திற்கு 73.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் அலுவலகத்தில் புதிய கணினிப் பிரிவு உருவாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் அலுவலகத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் 34,283 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு மின்னணு முறையில் ஓய்வூதியம் வழங்கவும், தணிக்கைத் தகவல் மேலாண்மை அமைப்பை உருவாக்கவும் ஆண்டொன்றிற்கு 9.60 இலட்சம் ரூபாய் தொடர் செலவில் ஒரு முறைமை பகுப்பாய்வாளர் (System Analyst) மற்றும் நிரலர் (Programmer) பணியிடங்களுடன் கூடிய புதிய கணினிப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

3. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அலுவலகங்களுக்கு நிகரி இயந்திரங்கள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி தணிக்கை அறிக்கைகள் மற்றும் கடுங்குறைபாடு பத்திகளை உடனுக்குடன் இயக்குநர் அலுவலகம் மற்றும் பிற அலுவலகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு ஏதுவாக, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் அலுவலகம் மற்றும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள சார்நிலை அலுவலகங்களுக்கு 11 இலட்சம் ரூபாய் செலவில் 55 நிகரி (Fax) இயந்திரங்கள் வழங்கப்படும்.

4. சிறப்பு நிலை நகராட்சிகளில் உடன்நிகழ் தணிக்கைப் பிரிவு ஏற்படுத்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மூலமாக நகராட்சிகளில் தணிக்கைப் பணிகளை உடனுக்குடன் சிறப்பாக சீராய்வு செய்யும் வகையில், கீழ்க்காணும் 7 சிறப்பு நிலை நகராட்சிகள் ஒவ்வொன்றிலும் உடன்நிகழ் தணிக்கைப் பிரிவுகள் ஆண்டொன்றிற்கு 29.20 இலட்சம் ரூபாய் தொடர் செலவில் ஓர் ஆய்வாளர், ஒரு துணை ஆய்வாளர் மற்றும் ஒரு உதவி ஆய்வாளர் ஆகிய பணியிடங்களுடன் ஏற்படுத்தப்படும்.

1. கோவில்பட்டி
2. கொடைக்கானல்
3. பல்லாவரம்

4. இராஜபாளையம்

5. தாம்பரம்

6. திருவண்ணாமலை

7. மறைமலைநகர்

5. கூட்டுறவு தணிக்கைத் துறையை வலுப்படுத்தும் வகையில் சேலம் மற்றும் விழுப்புரத்தில் புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் உருவாக்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி கூட்டுறவு தணிக்கைத் துறை மூலமாக தணிக்கைப் பணிகளைச் சிறப்பாகச் செய்யும் வகையில் சேலம் மற்றும் விழுப்புரத்தினைத் தலைமையிடங்களாகக் கொண்டு, இணை இயக்குநர் பணியிடத்துடன் கூடிய புதிய இரண்டு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் 3188 இலட்சம் ரூபாய் தொடர் மற்றும் தொடராச் செலவில் உருவாக்கப்படும்.

6. பணியில் இருக்கும்போது இறக்கும் அரசுப் பணியாளரின் குடும்பத்தின் உடனடித் தேவைக்காக வழங்கப்படும் முன்பணத்தினை 5,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பணியில் இருக்கும்போது இறக்கும் அரசுப் பணியாளரின் குடும்பத்தின் உடனடித் தேவைக்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் குடும்ப நலப் பாதுகாப்பு நிதியின்கீழ் வழங்கப்படும் முன்பணம் 5,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு. பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.349,37,77,000/–, மூலதனக் கணக்கில் ரூ.3,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,65,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி எழுந்து நின்று பேச முயன்றார். சிறிது நேரத்திற்கு பின்னர் அவையிலிருந்து வெளியேறினார்.)

(ஆ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.40,80,13,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ii) கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.34,96,34,000/—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

(ஈ) கோரிக்கை எண் 16—நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 16—நிதித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நிதித் துறைப் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.965,68,48,000/—, மூலதனக் கணக்கில் ரூ.2,000,00,00,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.106,10,23,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(உ) கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.228,41,68,000/—, மூலதனக் கணக்கில் ரூ.175,84,99,000/— மற்றும் கடன்

கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 2–05

(ஊ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.20,072,20,64,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

9. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

9. அறிவிப்புகள்--*தொடர்ச்சி*

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2015-2016, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015–2016 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the Demands for Further Grants for the year 2015–2016."

11. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2015–2016, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015–2016 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015–2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–9–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2015–2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (கூடுதல்),
2015-2016, வாக்கெடுப்பு

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	1	..	..
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	1	..	..
3	நீதி நிருவாகம்	4,00,36	..	..
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	131,48,08	1	
5	வேளாண்மைத் துறை	6,60,09	5	..
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	8,00,02	1	..
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	3	2	..
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	6	..	..
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	1	1	..
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	2,73,02	..	..
14	எரிசக்தித் துறை	3,00,01	..	51,98
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	..	1	..
16	நிதித் துறை	1,29,69	..	..
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	2,37,51	..	..
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	1,00,00	..	..
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	97,31,74	..	..

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
20	உயர் கல்வித் துறை	.20,41	8	..
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	1	80,36,91	80,00,00
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	10,10	2	..
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1,00,03	94,65	..
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1,59,42	1	..
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	49,68,53	..	..
27	தொழில் துறை	2	..	2
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	2	..	..
29	சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	1	..	..
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	..	1	..
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	1	..	..
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	1,06,31	2	..
33	சட்டத் துறை	..	1	..
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	30,03	..	..
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	2	..	..

11-338—7c

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	7,89	..	..
38	பொதுத் துறை	1,16,55	..	..
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	..	28,88,65	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	6	34,56,82	..
41	வருவாய்த் துறை	1,18,11	..	..
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	2,75,33	..	..
43	பள்ளிக் கல்வித் துறை	1,42,31	60,21,81	97,05,00
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	2	..	..
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	5	..	..
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	3	..	..
48	போக்குவரத்துத் துறை	..	..	208,00,00
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	13,45,07	..	..
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	1	..	..
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	69,19,96	..	..
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	2,70,93	2,56,44	2,00,00
	பெருமொத்தம்	403,71,95	207,55,55	387,57,00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக பட்ஜெட் முடிந்து மானிய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகுதான் அரசுக்கு தொகை என்பது ஒதுக்கப்படும். ஆனால் இப்பொழுதுதான் அந்த மானியக்

கோரிக்கைகள் மூலமாக துறைகளுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசியல் சட்டம் 205 ஆம் பிரிவின்படி ஏற்கெனவே நிதி ஒதுக்கி அதற்கு மேலே கூடுதல் தொகை ஒதுக்கப்படுவதாக இருந்தால்தான் கூடுதல் நிதி ஒதுக்கப்படுகிற அந்த நிலைமை என்பது ஏற்படும். ஆனால் இப்பொழுது ஏற்கெனவே நிதியே ஒதுக்கப்படாத இந்தச் சூழ்நிலையில், மானியக் கோரிக்கைகளுக்கு நிதியே ஒதுக்கப்படவில்லை. Vote on Account தான் பட்ஜெட் கூட்டத்தின்போது நிறைவேற்றப்பட்டது. Vote on Account என்று சொல்வது ஏற்கெனவே இருக்கிற நிதி, புதிய செலவினங்கள் இல்லாமல் புதிய திட்டங்கள் இல்லாமல் செலவழிக்கப்படுவதுதான். எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் இப்பொழுது கூடுதல் செலவிற்கான நிதி ஒதுக்குவதற்கான இந்த முன்மொழிவு அரசியல் சட்டத்திற்கு ஏற்புடையதுதானா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு வருடமும் ஏற்கெனவே இருக்கிற முறைப்படித்தான் இந்த வருடமும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. Rule-ன்படி, விதிப்படிதான் இது நடத்தப்பட்டிருக்கிறது. இதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஆகவே, விதிப்படி நடத்தப்பட்டிருக்கிற இவற்றில் எந்தவிதமான objection-ம் தேவையில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 2–10

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1998–1999, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *1998–1999 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1998–1999 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

12. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1998–1999, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1998–1999 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998–1999 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–9–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1998–1999 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 1998-1999 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

	கோரிக்கை	(ரூபாய்)
அ. வருவாய்க் கணக்கில் செலவு		
3	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம்	27,36,208
5	முத்திரைத்தாள்கள்–நிருவாகம்	11,12,275
6	ஆவணப் பதிவு	1,24,93,462
17	கல்வி	86,95,01,172
20	வேளாண்மை	50,99,42,624
27	ஊரக வளர்ச்சி	40,53,45,648
30	பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்	85,98,748
33	நகர்ப் பகுதி வளர்ச்சி	2,29,88,201
35	பாசனம்	12,19,91,185
38	சாலைகளும் பாலங்களும்	10,34,64,791
39	சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்	30,43,527
40	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	2,77,05,230
48	குடிநீர் வழங்கல்	2,97,76,230
50	சுற்றுலா	53,705
மொத்தம்	**அ. வருவாய்க் கணக்கில் செலவு**	**211,87,53,006**

கோரிக்கை		(ரூபாய்)
ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு		
52	வேளாண்மை குறித்த மூலதனச் செலவு	31,10,333
57	சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு	3,04,818
மொத்தம்	**ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு**	**34,15,151**
	பெருமொத்தம்	**212,21,68,157**

9. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(உ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1999–2000, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1999–2000 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1999–2000 in excess of the amount authorised or granted for those services and purposes for that year."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகைச் செலவிற்கு இப்போது மாண்புமிகு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போதுதான் அறிவிப்பு வந்திருக்கிறது. இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை.*

[2015 செப்டம்பர் 29

13. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1999–2000, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1999–2000 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"1999–2000 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–09–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1999–2000 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மிகைச் செலவிற்காக நாம் இப்போது நிதி கோருவதற்கு 17 ஆண்டுகள், 18 ஆண்டுகள், காலம் எடுத்திருப்பது ஏன் என்று நான் அறிய விரும்புகிறேன். இது நியாயமற்ற தாமதம் என்று நான் கருதுகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இதெல்லாம் PAC–யில் *உங்கள் கட்சி உறுப்பினர்கூட* இருக்கிறார். PAC–யில் recommend *செய்து அவர்கள் எல்லாம் சேர்ந்து* recommend *செய்துதான் இன்றைக்கு அரசுத் தீர்மானமாகக் கொண்டு வந்திருக்கிறதேயொழிய வேறு ஒன்றும் இல்லை. இதில்* objection *ஒன்றும் இல்லை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 1999–2000 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை **அ. வருவாய்க் கணக்கில் செலவு**		**(ரூபாய்)**
2	மாநில ஆயத் தீர்வைத் துறை	*18,07,894*
17	கல்வி	*143,42,40,370*
26	கதர்–கிராமத் தொழில்கள்	*3,75,688*
33	நகர்ப் பகுதி வளர்ச்சி	*24,59,801*
35	பாசனம்	*97,83,26,215*
38	சாலைகளும் பாலங்களும்	*5,00,52,258*
41	ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	*94,98,52,559*
45	இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	*21,21,94,494*
46	செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல்	*2,02,117*
மொத்தம்	**அ. வருவாய்க் கணக்கில் செலவு**	**362,95,11,396**
	பெருமொத்தம்	**362,95,11,396**

பிற்பகல் 2—15

9. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஊ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2000-2001, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000–2001 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2000–2001 in excess of the amount authorised or granted for those services and purposes for that year."

14. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2000–2001, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2000–2001 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2000–2001 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–9–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2000–2001 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

நிறைவேற்றப்பெற்ற 2000–2001 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)
அ. வருவாய்க் கணக்கின் செலவு		
6	ஆவணப் பதிவு	4,89,131
21	மீனளம்	43,93,545
29	சமூக நலன்	5,58,72,503
35	பாசனம்	113,59,96,975
47	ஊரகத் தொழில்கள்	2,38,02,013
மொத்தம்	**அ. வருவாய்க் கணக்கின் செலவு**	**122,05,54,167**
ஆ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்		
61	மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்	22,39,03,388
	பெருமொத்தம்	**144,44,57,555**

9. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(எ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2001–2002 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2001–2002 in excess of the amount authorised or granted for those services and purposes for that year."

15. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001–2002, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2001–2002 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2001–2002 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–9–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2001–2002 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2001–2002 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை அ. வருவாய்க் கணக்கில் செலவு		(ரூபாய்)
32	வீட்டு வசதி	1,09,26,536
35	பாசனம்	14,75,03,092
41	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	22,21,71,249
மொத்தம்	**அ. வருவாய்க் கணக்கில் செலவு**	**38,06,00,877**
	பெருமொத்தம்	**38,06,00,877**

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஏ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002–2003, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002–2003 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2002–2003 in excess of the amount authorised or granted for those services and purposes for that year."

16. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002–2003, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2002–2003 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2002–2003 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–9–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2002–2003 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

நிறைவேற்றப்பெற்ற 2002–2003 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	10,99,828	..	..
5	வேளாண்மைத் துறை	..	..	55,000
6	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு	..	200	..
14	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	178,01,357	..	..
16	கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணிநூல்	2,16,39,044	..	..
20	நெடுஞ்சாலைகள் துறை	41,53,15,758	..	30,00,000
26	தொழில் துறை	..	1,63,055	..
35	திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை	1,88,98,038	..	..
36	பொதுப் பணித் துறை	144,87,14,046	..	..
40	உணரக வளர்ச்சித் துறை	..	..	48,66,688

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
48	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	91,24,53,629	..	..
49	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	82,75,35,091	..	..
	பெரு மொத்தம்	366,34,56,791	1,63,255	79,21,688

பிற்பகல் 2–20

9. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஐ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003–2004, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003–2004 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2003–2004 in excess of the amount authorised or granted for those services and purposes for that year."

17. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003–2004, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003–2004 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003–2004 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–9–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2003–2004 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2003–2004 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	முதலினம்	கடன்
5	வேளாண்மைத் துறை	..	1,89,071	..
27	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்	..	42,765	..
28	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா	..	7,96,000	..

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
33	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	10,07,93,119	..	..
40	ஊரக வளர்ச்சித் துறை	5,46,60,590	..	..
43	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	..	8,75,394	..
47	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	..	17,85,000	..
	பெருமொத்தம்	**15,54,53,709**	**36,88,230**	..

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஒ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004–2005, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004–2005 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2004–2005 in excess of the amount authorised or granted for those services and purposes for that year."

18. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 2004–2005, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2004–2005 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004–2005 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–9–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2004–2005 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நிறைவேற்றப்பெற்ற 2004–2005 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
14	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	1,40,29,588	..	..
19	உயர்கல்வித் துறை	..	43,51,101	..
20	நெடுஞ்சாலைகள் துறை	..	..	440
21	உள்துறை — காவல்	..	..	2,16,043
22	உள்துறை— தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்	..	999	..
33	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	10,72,425	..	..
36	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை	37,50,993	..	..
	பெருமொத்தம்	**1,88,53,006**	**43,52,100**	**2,16,483**

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஓ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

பிற்பகல் 2—25

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஔ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆஅ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(அஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

9. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(அஇ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

2015 செப்டம்பர் 29]

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(எ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

9. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆஉ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஜ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

பிற்பகல் 2–30

19. அரசினர் தீர்மானங்கள்

விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 30, 130, 132 ஆகியவற்றை தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2015), 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2015), 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2015), 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2015), 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2015), 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2015), 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2015), 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2015), 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2015) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

20. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2015), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

<u>பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.</u>

@ 29-9-2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2015 செப்டம்பர் 29

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2–35

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2015), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

@ 29-9-2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2015 செப்டம்பர் 29

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/ 2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2015), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

@ 29-9-2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2015), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

@ 29-9-2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல் **சட்டமுன்வடிவின் பகுதியாக** இருக்க வேண்டும் என்னும் **தீர்மானம் பேரவையின்** முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2–40

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2015), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

@ 29-9-2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

2015 செப்டம்பர் 29]

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2015), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/ 2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

@ 29—9—2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2015), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 29—9—2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

GISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-45

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2015), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2015 செப்டம்பர் 29] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/ 2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

@ 29—9—2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஐ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2015), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 29—9—2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/ 2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஒ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2015). மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2015)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 29—9—2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 18 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 18 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 செப்டம்பர் 29

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-50

(ஏ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2015), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 29-9-2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஔ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2015), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 29—9—2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஅ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2015), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 29-9-2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2015 செப்டம்பர் 29

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2–55

(அ.ஆ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி(திருத்தச்)சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2015), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, இருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

@ 29-9-2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2015 செப்டம்பர் 29

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஇ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2015), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2015 செப்டம்பர் 29] [திரு. எஸ்.பி. வேலுமணி]

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/ 2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 29-9-2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 3-00

(அச) சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை

2015 செப்டம்பர் 29] [திரு. எஸ்.பி. வேலுமணி]

சட்டமுன்வடிவு எண் 13/2015), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

@ 29-9-2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைகளை நிலைநாட்டும் வீராங்கனை, உழைக்கும் தொண்டர்களின் உயிர்துடிப்பு, (மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமை மிகுந்த ஆட்சியை வழங்கும், தமிழகத்தின் நம்பிக்கை ஒளிக்கீற்று, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் தம் அன்பையே வாளாக்கி, வந்த பல சோதனைகளைத் தூள் தூளாக்கி, வினை செய்த வீணரையும் வீழ்த்தி, அரியணையை அலங்கரிக்கும் அரிமா.

சிங்கத்தின் கம்பீரமும், தாயின் அருட்பரிவும் ஒருங்கே கொண்ட ஒப்பற்ற தமிழன்னை, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு பாங்குடனே பாராளும் காட்சி காண என்ன தவம் செய்தோம் நாம் என நல்லோர் அனைவரும் வியந்து போற்றும்வண்ணம், தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வினாலும், சூழ்ந்து வந்த பகையையும் சூழ்ச்சியையும் வென்று, வாகை சூடி சட்டமன்றத்திற்கு அணிசெய்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நித்தம் நித்தம் தமிழர்தம் வளம் பேண நித்திரை கொள்ளாது உழைக்கின்ற புனிதத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், மூன்றாவது முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக 2011 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதற்குப் பின்னர், கடந்த நான்கரை ஆண்டுகளில் பல்வேறு சோதனைகளைக் கடந்து எண்ணிலடங்கா சாதனைகளைப் படைத்து தமிழக மக்களைத் தமது மக்களாகக் கருதி உய்வித்துள்ளார்கள்.

"தமிழக மக்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பூர்த்தி செய்யும் வகையில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்கவும், தமிழ்நாடு மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறவும், விலைவாசியைக் கட்டுப்படுத்தவும், தமிழ்நாட்டை மீண்டும் அமைதிப் பூங்காவாக மாற்றவும் அயராது பாடுபடுவேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்."

என்று மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த பதினான்காவது பேரவையின் முதல் கூட்டத் தொடரில்

@ 29-9-2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கையில் இந்த மன்றத்தில் குறிப்பிட்டதை நான் இப்போது நினைவுகூர்கிறேன்.

தான் சொன்னதைத் தவறாது செய்துகாட்டும் திறமையும், தன்னம்பிக்கையும், தளரா முயற்சியும் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த நான்கரை ஆண்டு காலத்தில் தமிழகம் தலைநிமிர, தரணியில் முன்னிலை பெற, பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்ததோடு மட்டுமல்லாமல், கருவிலிருக்கும் குழந்தை முதல், மூத்த குடிமக்கள் வரை சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ள ஒவ்வொரு குடிமகனும் மேன்மைபெற எண்ணிலடங்கா திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார்கள். மக்களின் வாழ்க்கையைத் தொடும் ஒவ்வொரு அம்சத்தையும் கருதிப் பார்த்து, சிறு சிறு விஷயங்களில்கூட அதீத கவனம் செலுத்தி திட்டங்களை வடிவமைத்து, உடனுக்குடன் நிதி வழங்கி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், அரசு அலுவலர்களையும் கொண்டு அவற்றைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தி, இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் மட்டுமல்லாது உலக நாடுகளுக்கே உதாரணமாகத் திகழ்ந்து வருகிறார்கள் நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-05

தொட்டில் குழந்தைத் திட்டமாக இருந்தாலும் சரி, பசுமை வீடுகள் திட்டமாக இருந்தாலும் சரி, மாநில ஆதார வள மையம் அமைப்பது உள்ளிட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான திட்டங்களானாலும் சரி, மாணவர்கள் கல்வி வளர்ச்சி பெற்று முன்னேற விலையில்லா மடிக்கணினிகளும், இதர உபகரணங்களையும் வழங்குவதாக இருந்தாலும் சரி, பெண்களுக்குத் தாலிக்குத் தங்கமும், இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்சி, மின்விசிறி, கிரைண்டர் வழங்குவதாக இருந்தாலும் சரி, காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டமாக இருந்தாலும் சரி, காவலர்களுக்கான கேன்டீன் வசதியாக இருந்தாலும் சரி, அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைப்பதாக இருந்தாலும் சரி, மகளிர் கமாண்டோக்களை உருவாக்குவதாக இருந்தாலும் சரி, பெண்களுக்கெதிரான குற்றங்களைத் தடுக்கும் செயல் திட்டமானாலும் சரி, தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைத் திட்டமாக இருந்தாலும் சரி,

தேசிய மாணவர் படைக்கு நவீன பயிற்சி மையம் ஆனாலும் சரி, கிராமங்களை அலகுகளாகக் கொண்டு அடிப்படை வசதிகள் செய்யும் 'தாய்' திட்டமாக இருந்தாலும் சரி, கைவினைஞர்களுக்கு 'வாழும் கைவினைப் பொக்கிஷம்' விருதுகள் வழங்குவதானாலும் சரி, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுக்கு ஆதி திராவிட மாணவர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள உதவித்தொகை வழங்கும் உன்னதத் திட்டமாக இருந்தாலும் சரி, திருநங்கைகளுக்கு உதவித்தொகை உள்ளிட்ட வசதிகள் செய்வதானாலும் சரி, வறட்சிக்கும் உரிய நிவாரணம் வழங்குவதாக இருந்தாலும் சரி, விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனத்திற்கு மானிய ஊக்குவிப்பு அளிப்பதானாலும் சரி, முதியோருக்கு அதிகபட்ச உதவித்தொகை வழங்குவதானாலும் சரி, முதியோர் உதவித்தொகை பெறுவோருக்கு சத்துணவு வழங்குவதாக இருந்தாலும் சரி, மருத்துவத் துறை பணியாளர் தேர்வு வாரியம் அமைப்பதாக இருந்தாலும் சரி, மருத்துவக் காப்பீடாக இருந்தாலும் சரி, அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கான பரிசுப் பெட்டகத் திட்டமானாலும் சரி, பச்சிளங் குழந்தைகளுக்கென மருத்துவ ஊர்தியானாலும் சரி, கால்நடைகளுக்கான ஆதார செல் அடிப்படையிலான மறுசீரமைப்பு சிகிச்சையாக இருந்தாலும் சரி, கால்நடைகளுக்கான நடமாடும் மருத்துவ ஊர்திகளாக இருந்தாலும் சரி, விலையில்லா ஆடு, மாடுகள் வழங்கும் திட்டமானாலும் சரி, மலிவு விலையில் சிறந்த சேவைகளை மக்கள் பெற ஏதுவாக அம்மா உணவகம், அம்மா சிமெண்ட், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மருந்தகம், அம்மா திரையரங்கம் உள்ளிட்ட வசதிகளைச் செய்து கொடுப்பதானாலும் சரி, (மேசையைத் தட்டும் ஒலி) வரலாறு காணாத வகையில் பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்விக்கான கட்டமைப்பு மேம்பாட்டு வசதியாக இருந்தாலும் சரி, தொழில் வளர்ச்சி முயற்சிகளானாலும் சரி, அனைத்துத் துறைகளிலும், நாட்டுக்கே முன்னோடியாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விளங்கி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி தொடர்ந்து ஒவ்வொரு துறையிலும் நாட்டுக்கே முன்னோடியாக அமைந்த பல திட்டங்களை நான் சொல்லிக்கொண்டே போகலாம். நேரமின்மைக் காரணமாக அவையனைத்தையும் இங்கே குறிப்பிட முடியவில்லை.

இத்தகைய முன்னோடித் திட்டங்களை நித்தம் நித்தம் தந்து, விஷன் 2023 திட்டத்தின்படி, தமிழ்நாட்டை முதன்மை

மாநிலமாக்க அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நல்லாட்சி நடக்கின்ற வேளையில், இந்தச் சட்டமன்றம் 10 கூட்டத் தொடர்களைக் கண்டு இன்று பத்தாவது கூட்டத் தொடரை நிறைவு செய்யும் நிலையில் உள்ளது.

இந்த நல்ல தருணத்தில், இந்த பத்தாவது கூட்டத் தொடரில் பேரவை நிறைவேற்றியுள்ள அலுவல்கள் குறித்து அறிவிப்பு செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் பத்தாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டம் 17–2–2015 அன்று தொடங்கி 23–2–2015 வரையும், இரண்டாவது கூட்டம் 25–3–2015 அன்று தொடங்கி 1–4–2015 வரையும், மூன்றாவது கூட்டம் 24–8–2015 அன்று தொடங்கி இன்று (29–9–2015) வரையும் நடைபெற்றுள்ளது. இக்கூட்டத் தொடர்களின்போது பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பின்வருமாறு:

பேரவை கூடிய மொத்த நாட்கள் — 29
(ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட)

அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்—157 மணி
21 நிமிடங்கள்
(6-00 மணி வரை)

17–2–2015 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.

பிற்பகல் 3–10

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் மற்றும் பதிலுரை நடைபெற்ற மொத்த நாட்கள்	—	4
உரையாற்றிய உறுப்பினர்கள்	—	26 பேர்
உரையாற்றிய நேரம்	—	10 மணி 40 நிமிடங்கள்
அதில் ஆளுங்கட்சியினர்	—	7 பேர்

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

பேசிய நேரம்	— 2 மணி 15 நிமிடங்கள்
இதர கட்சியினர்	— 19 பேர்
பேசிய நேரம்	— 8 மணி 25 நிமிடங்கள்

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 6 மணி 10 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

பதிலுரை நேரம்	— 1 மணி 15 நிமிடங்கள்

நிதி அலுவல்கள்—

2015–2016 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட அறிக்கையை 25–3–2015 அன்று மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள்.

வரவு–செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் மற்றும் பதிலுரை நடைபெற்ற நாட்கள்	— 4
பங்கேற்ற உறுப்பினர்கள்	— 25 பேர்
உரையாற்றிய நேரம்	— 10 மணி 12 நிமிடங்கள்
அதில் ஆளுங்கட்சியினர்	— 9 பேர்
பேசிய நேரம்	— 1 மணி 53 நிமிடங்கள்
இதர கட்சியினர்	— 16 பேர்
பேசிய நேரம்	— 8 மணி 19 நிமிடங்கள்

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 6 மணி 26 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்

பதிலளித்த நேரம்	— 1 மணி 38 நிமிடங்கள்

[பேரவைத் தலைவர்] [2015 செப்டம்பர் 29

மானியக் கோரிக்கைகள்—

மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள்	—	18

54 மானியக் கோரிக்கைகளும் விவாதித்து நிறைவேற்றப்பட்டுள்ளன.

உரையாற்றிய உறுப்பினர்கள்	—	121 பேர்
உரையாற்றிய நேரம்	—	43 மணி 55 நிமிடங்கள்
அதில் ஆளுங்கட்சியினர்	—	35 பேர்
பேசிய நேரம்	—	9 மணி 12 நிமிடங்கள்
இதர கட்சியினர்	—	86 பேர்
பேசிய நேரம்	—	34 மணி 43 நிமிடங்கள்

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 25 மணி 31 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தனது பொறுப்பில் உள்ள துறைகள் சம்பந்தமாக பதிலளித்த நேரம்	—	58 நிமிடங்கள்
இதர அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம்	—	25 மணி 40 நிமிடம்

வெட்டுத் தீர்மானங்கள் (துணை மானியக் கோரிக்கை உட்பட):

வரப்பெற்றவை	—	2,918
அனுமதிக்கப்பெற்றவை	—	2,617
அவையில் முன்மொழியப்பெற்றவை	—	550

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

வினாக்கள்–விடைகள்:

12–8–2014 முதல் 28–9–2015 வரை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள்	—	10,386
அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை.	—	67
அனுமதிக்கப்பெற்றவை	—	10,386
உடுக்குறியிட்டவை	—	1,952
உடுக்குறியிடாதவை	—	5,462
குறுகிய கால வினாக்கள்	—	10

உடுக்குறியிட்ட வினாக்கள்

பத்தாவது கூட்டத் தொடரின்போது அவையில் விடையளிக்கப்பட்டவை	—	335
மொத்த துணை வினாக்கள்	—	640

அவையில் அதிக அளவு வினாக்களுக்கு விடையளித்த அமைச்சர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்:—

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் 24 வினாக்களுக்கு பதிலளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் 23 வினாக்களுக்கு பதிலளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் 22 வினாக்களுக்கு விடையளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் 23 வினாக்களுக்கு விடையளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் 21 வினாக்களுக்கு விடையளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 19 வினாக்களுக்கும், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் 19 வினாக்களுக்கும் விடையளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வினாக்கள்–விடைகளுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்ற மொத்த நாட்கள்	—	26
வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள்	—	23
நீட்டிக்கப்பட்ட மொத்த நேரம்	—	6 மணி 24 நிமிடங்கள்

உடுக்குறியிடாத வினாக்கள்—

அவைமுன் வைக்கப்பெற்றவை	—	1,500
உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்	—	1,325

இன்றையதினம், வினாக்கள்–விடைகள் நேரத்தின்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் துணை வினா கேட்கையில், நீண்ட உரையாற்றியபோது, துணைக் கேள்வியை சுருக்கமாகக் கேட்க வேண்டுமென்று நான் அறிவுறுத்தினேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், "உறுப்பினர் ஒரு பேச்சாளர், அவருக்கு சுருக்கமாகப் பேச வராது" என நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு உறுப்பினரின் நடவடிக்கையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் கூர்ந்து கவனித்து வருவதற்கு இதுவே ஒரு எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–15

சிறப்புக் கவன ஈர்ப்பு—

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருட்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention) என்ற வகையில் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை	—	3
உரையாற்றிய உறுப்பினர்கள்	—	12 (அனைவரும் எதிர்க்கட்சியினர்)

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

சிறப்புக் கவன ஈர்ப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் — 1 மணி 24 நிமிடங்கள்

தகவல் கோரல்—

தகவல் கோரல் என்ற முறையில் அவ்வப்போது முக்கியப் பிரச்சினைகள் அவையில் எழுப்ப அனுமதிக்கப்பட்ட நேர்வுகள் — 9

உரையாற்றிய உறுப்பினர்கள் — 13 (அனைவரும் எதிர்க்கட்சியினர்)

எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் — 34 நிமிடங்கள்

கவன ஈர்ப்புகள்—

உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை — 940

கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை — 499

அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை — 15

சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்பெற்றவை — 3

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்—

அவையில் எழுப்பப்பெற்றவை — 2

உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றவை — 2

குழு அவைக்கு அளித்துள்ள அறிக்கை — 1

அரசினர் சட்டமுன்வடிவுகள்—

வரப்பெற்றவை — 22

நிறைவேற்றப்பெற்றவை — 22

அரசினர் தனித் தீர்மானங்கள்—

வரப்பெற்றவை — 3

நிறைவேற்றப்பெற்றவை — 3

[பேரவைத் தலைவர்] [2015 செப்டம்பர் 29

கர்நாடக அரசு மேகதாதுவில் இரண்டு புதிய அணைகள் கட்ட முயற்சிப்பது தொடர்பாக 5–12–2014 அன்று பேரவை ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தின்மீது மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ளாததற்கும், மேகதாதுவில் அணை கட்டுவதற்கு திட்ட அறிக்கை தயாரிக்க 25 கோடி ரூபாயை கர்நாடக அரசு ஒதுக்கியுள்ளதற்கும் பேரவை வருத்தத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களை சந்தித்தும், கடிதம் அனுப்பியும், உச்சநீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தும் தமிழ்நாட்டின் அனுமதி இல்லாமல் காவேரியில் எந்தத் திட்டத்தையும் கர்நாடக அரசு செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காக எடுத்து வரும் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்தும், மேகதாதுவில் அணை கட்டுவதற்கான திட்ட அறிக்கை தயாரிப்பதை தடுத்து நிறுத்தவும், அதனை செயல்படுத்துவதற்கான திட்டங்களை கர்நாடக அரசு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று மத்திய அரசு அறிவிப்பை வழங்கவேண்டும் எனவும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு உடனடியாக அமைக்க வேண்டுமெனவும் மீண்டும் வலியுறுத்தும் தீர்மானம் 27–3–2015 அன்று பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் நடைபெற்றபோது, போர்க் குற்றங்கள் மற்றும் இனப் படுகொலை நடத்தியவர்கள் அனைவர்மீதும் சர்வதேச விசாரணை நடத்தும் வகையிலான வலுவான தீர்மானத்தினை இந்தியாவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு அமெரிக்கா உட்பட மற்ற நாடுகளுடன் இணைந்து கொண்டுவர வேண்டுமென்றும், அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவான நிலையை எடுத்தால், அதனை மாற்ற ராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இந்தியப் பேரரசை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பேரவையில் 16–9–2015 அன்று முன்மொழியப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

சென்னையில் இம்மாதம் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் உலகமே வியக்கும்வண்ணம் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்தி, சாதனை புரிந்து, ஒரு இலட்சம் கோடி ரூபாய் இலக்கையும் மிஞ்சி தமிழகத்திற்கு 2 இலட்சத்து 42

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

ஆயிரத்து 160 கோடி ரூபாய் முதலீட்டினை ஈர்த்து, (மேசையைத் தட்டும் ஒலி) 4 இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்து, தமிழகத்தில் தொழிற்புரட்சிமூலம் தமிழர்களின் வாழ்விலும், இந்தியப் பொருளாதாரத்திலும் மிகப் பெரிய மாற்றத்தை, மறுமலர்ச்சியை, ஏற்றத்தை ஏற்படுத்த வழிவகுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பேரவை நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்து, இது போன்ற சாதனைகள் தொடர வேண்டும் என்று மனதார வாழ்த்துகின்ற தனித் தீர்மானம் 23–9–2015 அன்று நிறைவேற்றப்பட்டது.

விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கைகள்—

விதி 110–ன்கீழ் தமிழக மக்கள் அனைவரின் வாழ்க்கையைத் தொடும் அனைத்து அம்சங்கள் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக பேரவை நடக்கும்போதெல்லாம் தினந்தோறும் பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகளை செய்து வந்துள்ளதோடு, அதற்கான நிதியையும் உடனுக்குடன் ஒதுக்கி திட்டங்கள் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்துள்ளார்கள்.

அவ்வகையில் கடந்த ஆண்டு வரை அனைத்து அரசுத் துறைகள் சம்பந்தமாக கீர்த்திவாய்ந்த 150 அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டார்கள். இந்த ஆண்டு மீண்டும் அந்த சரித்திரச் சாதனையை தொடரும் வண்ணம் இக்கூட்டத்தொடரில் மேலும் 31 அறிவிப்புகளை செய்துள்ளார்கள். ஆக, வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு இந்த பதினான்காவது பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மாநில மக்களின் நலன் பேணும் திட்டங்கள் பற்றியும், அவற்றிற்கான நிதி ஒதுக்கீடு பற்றியும் பேரவை விதி 110–ன்கீழ் மொத்தம் 181 அறிக்கைகளை அளித்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–20

உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து, ஆயுத எழுத்து என நான்கும் சேர்ந்தது, நம் தாயின் விதி 110–ன் கீழான

[பேரவைத் தலைவர்] [2015 செப்டம்பர் 29

அறிவிப்புகள். ஒவ்வொரு அறிவிப்பும், தாய்நாட்டில் தமிழ்நாட்டைத் தலைநாடாய் மாற்றும் தலையெழுத்தாகின்றன. தமிழகத்தின் தலையெழுத்தையே மாற்றுகிற, தமிழக மக்களின் விதியெழுத்தை உயர்த்துகிற ஒப்பற்ற துருவ நட்சத்திரமானவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிக்கை அளிக்கும் நேரமெல்லாம் தமிழ்நாட்டை தலைநிமிர்த்தும் தருணம் என சிறிய குழந்தை முதல் பழுத்த முதியோர் வரை கொண்டாடும் அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் பேரவை விதி 110 என்பது சரித்திரப் புகழ் பெற்றுள்ளது. இந்தக் கூட்டத் தொடரின்போது செய்யப்பட்ட அறிவிப்புகளில் உள்ள திட்டங்களின் சுருக்கமான விவரத்தை பேரவையின் அனுமதியுடன் நடவடிக்கைக் குறிப்புகளில் பதிவு செய்து கொள்கிறேன்.@

"மரம் தனக்காகப் பழுப்பதில்லை; ஆறு தனக்காக ஓடுவதில்லை; அதைப்போலவே சான்றோர்களும் தமக்காக வாழ்வதில்லை" என்றார் குருநானக். தலை தந்த குமணன், தசை தந்த சிபி, தேர் தந்த பாரி, போர்வை தந்த பேகன் என்றே தன்னிடம் உள்ளதைத் தந்தோரெல்லாம் வள்ளல்கள் என்றால், தன்னையே தந்து, தமிழுலகம் தழைக்க முக்காலமும் உழைக்கின்ற முழுமதியாம் நம் அன்னை தலையாய வள்ளலன்றோ! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் தொட்டது துலங்கும்; பொற்கரம் பட்டது துளிர்க்கும். விதி 110-ன் கீழான அன்னையின் அறிவிப்புகள், சிறார்களைச் சிறகடிக்கச் செய்யும் அறிவிப்புகள்; இளைஞர்கள் எழுச்சி பெற ஏற்றமிகு அறிவிப்புகள்; பெண்களைப் பெருமைபட வைக்கும் அறிவிப்புகள்; முதியோரை முனகலிலிருந்து காப்பாற்றிக் கரை சேர்க்கும் அறிவிப்புகள்; விவசாயிகளை விஞ்ஞான யுகத்திற்கு அழைத்துச் செல்லும் வியப்பான அறிவிப்புகள்; நெசவாளர்களை நெகிழச் செய்யும் அறிவிப்புகள்; கலைஞர்களைக் கண்ணாகப் பாதுகாக்கும் கண்ணியமிக்க அறிவிப்புகள்; காரிருளைக் கலங்கச் செய்து, ஒளியூட்டும் அறிவிப்புகள்; தொழில்களில் தொய்வினை விரட்டும் அறிவிப்புகள்; வணிகர்களின் வாட்டத்தைப் போக்கி, நாட்டத்தை உண்டாக்கும் அறிவிப்புகள்.

@ 1175 முதல் 1192 வரையிலான பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

தமிழக மக்களின் ஈரமான இதயமும், ஏழைகளின் வயிறும் குளிர்ந்திட, விழிகளில் கங்கையும் காவேரியும் ஆனந்தமாய் வழிந்தோட, வாழ்த்துகளின் வாழ்த்தொலியே, உங்களை என்றென்றும் வரலாற்றில் புகழோடு நிலைத்திருக்கும் ஒரு யுகப் புரட்சியை நிகழ்த்திய சாதனைத் தலைவியே, புரட்சியின் உருவமே, வாழ்க நீங்கள் அம்மா, பல்லாண்டு, பல்லாண்டு, பல நூறாண்டு என்றென்றும் தமிழக மக்களின் நெஞ்சிலும், நீங்காத நினைவிலும். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைக் குழுக்கள் அளித்துள்ள அறிக்கைகள் உள்ளிட்ட புள்ளிவிவரங்களை பேரவையின் முன்னனுமதியுடன் அவை நடவடிக்கைகள் குறிப்புகளில் பதிவு செய்து கொள்கிறேன்.

சட்டமன்ற விவாதங்களின்போது மாண்புமிகு உறுப்பினர்கள், அதிலும் குறிப்பாக எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளை உடனடியாக கவனத்தில் கொண்டு, அவற்றை உயர் அலுவலர்களுடன் கலந்துபேசி ஓரிரு நாட்களில் அவர்களது கோரிக்கைகளைக் கனிவுடன் ஏற்று அறிவிப்புகளாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தொடர்ந்து இந்தப் பேரவையில் அறிவித்து வந்துள்ளார்கள். உதாரணத்திற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கும்பகோணம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள், "கும்பகோணத்தில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் வேண்டும்" என 23–9–2015 அன்று பேரவையில் கோரிக்கை வைத்த 48 மணி நேரத்திற்குள்ளாக, 25–9–2015 அன்று, "கும்பகோணத்தில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்" என விதி 110–ன்கீழ் அளித்த அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்கூட தனது பதிலுரையில் சுட்டிக்காட்டினார்கள்.

அதேபோன்று, காவல் துறைக்கு 120 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் 82 அறிவிப்புகள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு 15 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் 11 அறிவிப்புகள் என மொத்தம் 136 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் 93 புதிய திட்டங்களை அறிவித்து நம் அனைவரையும் மாண்புமிகு அம்மா அவர்கள் மகிழ்ச்சிக்குள்ளாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவை அனைத்திலும், ஆளுங்கட்சி, மாற்றுக் கட்சி எனப் பாகுபாடு பாராமல், தமிழ்நாட்டிலுள்ள 234

@ 1193 முதல் 1197 வரையிலான பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தொகுதிகளுக்கும் பொதுவான பரிவுமிக்க தாயாக, ஒப்பற்ற முதலமைச்சராக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கி அனைத்துத் தொகுதிகளுக்கும், அனைத்துத் துறைகளிலும் பல்வேறு திட்டங்களை வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை நான் சொல்வதைவிட எதிர்க் கட்சி உறுப்பினரான இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள் 23–9–2015 அன்று மனசாட்சியுடன் தெரிவித்த நன்றியை இந்தநேரத்தில் நான் நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

பிற்பகல் 3–25

"பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்திற்கு வளர்ச்சித் திட்டங்களையும், பெண்ணாகரம் தொகுதி மக்களின் பல்வேறு கோரிக்கைகளையும் நிறைவேற்றியதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், புதிய வட்டங்கள், புதிய ஒன்றியங்கள், சிப்காட், சிட்கோ தொழிற்பேட்டைகள் மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் அளித்த அனைத்து மனுக்களும், கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்ணாகரம் தொகுதியில் சாலை மேம்பாடு, பாலங்கள், புதிய பள்ளிகள், தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்று பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்தமைக்காகவும், நேற்று நடைபெற்ற காவல் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில், பெண்ணாகரத்திற்கும், அரியூருக்கும் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்க அறிவித்தமைக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள் அன்று மனம் திறந்து பாராட்டினார்கள்.

பெண்ணாகரம் தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டி கோரிக்கை மனு அளித்ததோடு, வினாவையும் கொடுத்தேன். வினாவிற்கான பதில் வருவதற்கு முன்னரே ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க ஆணை வழங்கி, தொடக்க விழாவன்றே மருத்துவர்களையும் பணி நியமனம் செய்து, பணியில்

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

அமர்த்தியதோடு, ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்திற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு தமிழகத்தில் தொடங்கப்பட்ட அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மருத்துவர்களையும், பணியாளர்களையும் நியமனம் செய்து, மருத்துவமனைக்கான கட்டடங்கள் கட்டுவதற்கான நிதியையும் வழங்கி, ஆரம்ப சுகாதார மருத்துவமனை தொடங்கி, தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று நான் கருதுகிறேன். இத்தகைய சீரிய செயல்பாட்டிற்கும், விரைவான நடவடிக்கைகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று மேலும் அவர் உவகையுடன் பேரவையில் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

ஆக, மனசாட்சி உள்ள அனைவரும், நல்லோர் அனைவரும் பாராட்டும் ஒரு நல்லாட்சியினை, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நலத் திட்டங்களைப் பாகுபாடின்றி துரிதமாக நிறைவேற்றித் தரும் போற்றத்தக்க ஆட்சியினை மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்தி வருகிறார்கள் என்பதற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சட்டமன்ற ஜனநாயகத்திற்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எண்ணங்களுக்கும் எந்த அளவுக்கு உயர்ந்த சிறப்பு முன்னுரிமை வழங்கி வருகிறார்கள் என்பதற்கும் எதிர்க்கட்சி உறுப்பினரின் இந்தக் கூற்றே சாட்சியாக விளங்குகிறது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

சட்டமன்ற நிகழ்ச்சிகளில் தான் கொண்ட முழு ஈடுபாட்டை வெளிப்படுத்தும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தினந்தோறும் பல்வேறு வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்புகளை வெளியிட்டதோடு, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகளின் விவாதத்தின்போது, உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகள் அல்லது குற்றச்சாட்டுகளுக்கு நொடிப் பொழுதில் விளக்கங்களையும், அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் சுடச்சுட, ஆணித்தரமாக எடுத்துரைத்தார்கள். அவையில் தவறான தகவல்கள் பதிந்துவிடக் கூடாது என்பதற்காக ஆதாரபூர்வமான, உண்மையான தகவல்கள்

[பேரவைத் தலைவர்] [2015 செப்டம்பர் 29

நாட்டு மக்களுக்குத் தெரியவேண்டும், அவை நடவடிக்கைகளில் இடம்பெறவேண்டும் என்ற உயரிய நோக்கிலும் விவாதத்தில் அவ்வப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19 முறை குறுக்கிட்டு, சுமார் 45 நிமிட நேரம் பல்வேறு புள்ளிவிவரங்களுடன் உடனுக்குடன் விளக்கங்கள் அளித்தார்கள்.

காவல் துறை சம்பந்தமாக என்னென்ன வினாக்களை எழுப்ப முடியுமோ, என்னென்ன கேள்விகளை கேட்க முடியுமோ, அத்தனைக்கும் தன்னிடம் பதில் இருப்பதாகக் குறிப்பிட்டு, மிகப் பெரிய நான்கு volume-களில் கொண்டு வந்திருந்த பதில்களை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அவையில் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தப் பதில்களையெல்லாம் சொல்வதென்றால் காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம், ஒரு வார காலத்திற்காவது நடைபெற வேண்டும் என்று சுட்டிக்காட்டி, மாண்புமிகு உறுப்பினர்கள் எத்தனை வினாக்களை எழுப்பினாலும், எத்தகைய பிரச்சினைகளை எழுப்பினாலும் எல்லாவற்றுக்கும் பதில் தன்னிடம் தயாராக இருப்பதையும் சுட்டிக்காட்டினார்கள். மக்கள் பிரதிநிதிகளுக்கும், சட்டமன்றத்திற்கும் மிகச் சிரிய முக்கியத்துவம் அளித்து, உறுப்பினர்கள் எழுப்பக்கூடிய ஒவ்வொரு கருத்துக்கும்; கேள்விக்கும் ஆதாரபூர்வமான புள்ளிவிவரங்களுடன் குறிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்கூட்டியே தயார் செய்துகொண்டு வந்திருந்தார்கள்.

பிற்பகல் 3-30

சட்டமன்றத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுள்ள மதிப்பிற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. பேரவைக் குழுக்கள் அளித்துள்ள அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள், உறுப்பினர்களின் வருகை விவரம் பேரவையின் அனுமதியோடு பதிவு செய்யப்படுகிறது.

கடந்த 20 நாட்களாக, இந்த மன்றத்திலிருந்து வெளியே புறப்பட்ட தகவல்கள், செய்திகள், தமிழகத்தினுடைய விளிம்புக்கெல்லாம் சென்று, நாட்டு மக்களுடைய நெஞ்சத்தையெல்லாம் நனைய வைத்தது, குளிர வைத்தது என்பதை நாட்டிலுள்ள தலைவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். விஷயம் தெரிந்தவர்கள் பாராட்டுகிறார்கள்.

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

சட்டமன்றத்தின்மீது எத்தகைய ஒரு மதிப்பையும், மரியாதையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுள்ளார்கள் என்பதற்கு நிறைய எடுத்துக்காட்டுகள் உள்ளன என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

பேரவை நிகழ்ச்சிகளை பல நாட்களில் உணவு இடைவேளைகூட இல்லாமல் தொடர்ந்து பல மணி நேரம் நடத்தி, எடுத்துக்கொண்ட அலுவல்கள் எதையும் நிலுவையிலே வைக்காமல், தவறாமல் அன்றன்றே நிறைவேற்ற தக்க ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் வழங்கி, பேரவை நடவடிக்கைகளைச் சுமுகமாகவும் சிறப்பாகவும் நடத்திட எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சபையிலே சில நேரங்களில் சூடான விவாதங்களும் வேகமான கருத்துகளும் முன்வைக்கப்பட்டாலும், எனது அனுமதியின்றி ஒருசேர உறுப்பினர்கள் எழுந்துநின்று சில பிரச்சினைகளை வலியுறுத்த முனைந்தாலும், தமக்கே உரித்தான அமைதியான, நிதானமான விதத்தில், பேரவை விதிகளையும், நடைமுறைகளையும், மரபுகளையும் பொறுமையுடன் எடுத்துக்கூறி, சபை நடவடிக்கைகளை தடங்கலின்றி அமைதியாக நடத்திச் செல்ல எனக்குப் பெரிதும் உதவியாக விளங்கிய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு எனது நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை நடவடிக்கைகளை நடத்துவதில் எனக்கு பெரிதும் துணையாக இருந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாற்றுத் தலைவர்களுக்கும், அரசுத் தலைமைக் கொறடா, கட்சித் தலைவர்கள், கட்சிக் கொறடாக்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை நிகழ்ச்சிகளை வீடியோ பதிவு செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், ஒலிபெருக்கி வசதி செய்த பொதுப் பணித் துறையின் அலுவலர்களுக்கும், பேரவையின் நடவடிக்கைகளை உடனுக்குடன் மக்களுக்குக் கொண்டு செல்வதற்கு உறுதுணையாகச் செயல்பட்ட அகில இந்திய

வானொலி, தூர்தர்ஷன், இதர தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், ஊடகங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள் மற்றும் நிருபர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவையின் அலுவல்களைச் சிறப்பாக நிறைவேற்ற உதவிய பேரவைச் செயலாளர் அவர்களுக்கும், பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும், பேரவை நிருபர்களுக்கும், இதர பணியாளர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியை இந்தத் தருணத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

நீண்ட பாரம்பரியமும், வரலாற்றுப் பின்னணியும் கொண்ட இப்பேரவையின் நடவடிக்கைகள் சிறப்பாக நிறைவேற அனைத்து வழிகளிலும் எனக்கு வழிகாட்டியாகத் திகழும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கூட்டத் தொடர் இனிதே நிறைவு பெற, உறுதுணையாக இருந்து பாடுபட்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் என்ற முறையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை அனைவர் சார்பாகவும் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

19. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–34 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

21. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

147. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

148. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

149. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

150. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

151. 1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலச் சட்டத்தை செயல்படுத்துவதில் நிகழ்நிலை குறித்த 2009–2010 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1996) 65(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

152. 1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலச் சட்டத்தை செயல்படுத்துவதில் நிகழ்நிலை குறித்த 2010–2011 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1996) 65(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

153. 1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலச் சட்டத்தை செயல்படுத்துவதில் நிகழ்நிலை குறித்த 2011–2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1996) 65(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

154. 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (பொதுத் துறை நிறுவனங்கள்). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

155. 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் பிரிவு). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

156. 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (பொருளாதாரப் பிரிவு).

(இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

157. 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (பொது மற்றும் சமூகப் பிரிவு). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

158. 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (உள்ளாட்சி அமைப்புகள்). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

159. 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (மாநில நிதிநிலை). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

398. 2013–2014 ஆம் ஆண்டிற்கான பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு குறித்த ஆய்வறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

399. மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016. (தமிழ், ஆங்கிலம்)

400. மானியக் கோரிக்கை எண் 38–பொது (தேர்தல்கள்) துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016. (தமிழ், ஆங்கிலம்)

401. மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016. (தமிழ், ஆங்கிலம்)

402. மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016. (தமிழ், ஆங்கிலம்)

TRUTH ALONE TRIUMPHS

403. மானியக் கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016. (தமிழ், ஆங்கிலம்)

404. இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2015–2016. (தமிழ்)

405. வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2015–2016. (தமிழ்)

406. சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2015–2016. (தமிழ்)

407. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

408. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (பதினேழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

409. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (பதினெட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

410. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (பத்தொன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

2015 செப்டம்பர் 29]

411. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (இருபதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

412. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (இருபத்து ஒன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

413. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (இருபத்து இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 125 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

இணைப்பு I

(44-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்

(பட்டியல்கள் 16 முதல் 22 வரை)@

பட்டியல் 16

3—

அத்திக்கடவு-அவினாசி கால்வாய் அமைத்தல்

வினா எண் 5870—திரு. ஈ. சரத்குமார்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களுக்குப் பயனளிக்கும் அத்திக்கடவு-அவினாசி கால்வாய் திட்டப் பணிகளை உடனடியாகச் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

அத்திக்கடவு-அவினாசி திட்டம் குறித்து தள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது, இத்திட்டத்தின் நேர்பாட்டில் (Alignment) பல தொழில்நுட்ப நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன என்பது கண்டறியப்பட்டது. எனவே, மாற்றுப் பாதை வழியாகக் கால்வாய் அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வுக்குப் பின்னர், இத்திட்டத்தைப் பாசனத் திட்டமாகக் கருதி, மத்திய அரசின் 'விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்' திட்டத்திற்கான வழிகாட்டுதல்களின்படி திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடுபட்ட வினா எண்கள் 1,2-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

4—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 6039—திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரையில் சித்திரைத் திருவிழாவின்போது கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்க ஏதுவாக ஆழ்வார்புரத்தில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரையில் சித்திரைத் திருவிழாவின்போது கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்க ஏதுவாக ஆழ்வார்புரத்தில் பாலம் கட்ட அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

5—

ஆற்றினை இணைக்கும் பணி

வினா எண் 6667—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், நம்பியாற்றுடன் தாமிரபரணி ஆற்றை இணைக்கும் பணிகளை விரைந்து நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

மத்திய அரசின் நிதியுதவியை எதிர்நோக்கி, ரூ.369.00 கோடி மதிப்பீட்டில் தாமிரபரணி ஆற்றினை கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைக்கும் திட்டத்தின் முதல் நிலை மற்றும்

2015 செப்டம்பர் 29]

இரண்டாம் நிலைப் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. மூன்றாம் மற்றும் நான்காம் நிலைகளுக்கான (இறுதி நிலை) நிலத்தினைக் கையகப்படுத்தவும் தற்போது அரசு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவியைப் பெறவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

6—

கதவணை அமைத்தல்

வினா எண் 7953—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரி ஆற்றை வைகை குண்டாறுவுடன் இணைக்க கட்டளைக் கதவணை அமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மாயனூர் கிராமத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே தற்போதுள்ள கட்டளைப் படுகை அணையிலிருந்து 250 மீட்டர் கீழே புதியதாக ஒரு கதவணை அமைக்கும் பணியானது ரூ.234.00 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு 25-6-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு தற்போது பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

7—

இணைப்புக் கால்வாய்

வினா எண் 9289—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரி ஆற்றுடன் குண்டாற்றினை இணைக்கும் திட்டத்தின் மணிமுத்தாறு முதல் குண்டாறு வரை புதிய இணைப்புக் கால்வாய் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

காவேரி (கட்டளைக் கதவணை)–அக்னியாறு–தெற்கு வெள்ளாறு–மணிமுத்தாறு–வைகை–குண்டாறு இணைப்புத் திட்டத்தினை இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில், காவேரி (கட்டளைக் கதவணை) ஆற்றினை தெற்கு வெள்ளாற்றுடன் இணைக்கவும், இரண்டாம் கட்டத்தில் தெற்கு வெள்ளாற்றினை மணிமுத்தாறு மற்றும் குண்டாற்றுடன் இணைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டைய மத்திய அரசின் மறுகுடியமர்த்துதல் மற்றும் மறுவாழ்வு, நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படையான நிலம் கையகப்படுத்துதல் உரிமைச் சட்ட விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையினை இறுதி செய்ய கருதப்பட்டுள்ளது.

8—

இணைப்புக் கால்வாய் அமைத்தல்

வினா எண் 9290—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காவேரி ஆற்றுடன் வைகை குண்டாற்றினை இணைக்கும் திட்டத்தில் கட்டளைக் கதவணையிலிருந்து மணிமுத்தாறு வரை புதிய இணைப்புக் கால்வாய் அமைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

காவேரி (கட்டளைக் கதவணை)–அக்னியாறு–தெற்கு வெள்ளாறு–மணிமுத்தாறு–வைகை–குண்டாறு இணைப்புத் திட்டத்தினை இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில், காவேரி (கட்டளைக் கதவணை) ஆற்றினை தெற்கு வெள்ளாற்றுடன் இணைக்கவும்,

இரண்டாம் கட்டத்தில் தெற்கு வெள்ளாற்றினை மணிமுத்தாறு மற்றும் குண்டாற்றுடன் இணைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டைய மத்திய அரசின் மறுகுடியமர்த்துதல் மற்றும் மறுவாழ்வு, நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படையான நிலம் கையகப்படுத்துதல் உரிமைச் சட்ட விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையினை இறுதி செய்யப்படவுள்ளது.

9—

புதிய நீர்த்தேக்கம் அமைத்தல்

வினா எண் 9442—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் புதிய நீர்த்தேக்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடைபெற்றுவரும் கண்ணன்கோட்டை-தேர்வாய்க்கண்டிகை நீர்த்தேக்கத் திட்டம் அன்றி, சென்னை மாநகரில் புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

11—

கருவேல மரங்களை வளர்த்தல்

வினா எண் 17567—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப் பணித் துறையைச் சேர்ந்த கண்மாய்க் கரைகளில் கருவேல மரங்களை வளர்க்கவும், பராமரிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண்கள் 10-இதற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கருவேல மரங்களின் வேர்கள் கண்மாய்க் கரைகளின் உறுதித் தன்மையைப் பாதிக்கும் என்பதாலும் நிலத்தடி நீர் மட்டத்தைப் பாதிக்கும் என்பதாலும் கண்மாய் கரைகளில் கருவேல மரங்களை வளர்க்கவும், பராமரிக்கவும் திட்டம் ஏதுமில்லை.

13—

ஆற்றினை இணைக்கும் திட்டம்

வினா எண் 26521— திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, காவேரி மற்றும் கொள்ளிடம் ஆற்றை புதுக்கோட்டை குண்டாற்றுடன் இணைக்கும் திட்டத்தை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரி (கட்டளைக் கதவணை)–அக்னியாறு–தெற்கு வெள்ளாறு–மணிமுத்தாறு–வைகை–குண்டாறு இணைப்புத் திட்டத்தினை இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில், காவேரி (கட்டளைக் கதவணை) ஆற்றினை தெற்கு வெள்ளாற்றுடன் இணைக்கவும், இரண்டாம் கட்டத்தில் தெற்கு வெள்ளாற்றினை மணிமுத்தாறு மற்றும் குண்டாற்றுடன் இணைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டைய மத்திய அரசின் மறுகுடியமர்த்துதல் மற்றும் மறுவாழ்வு, நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படையான நிலம் கையகப்படுத்துதல் உரிமைச் சட்ட விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர்தான் இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்படும்.

விடுப்பட்ட வினா எண்கள் 12 மற்றும் 14-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

15—

புதிய விருந்தினர் மாளிகை

வினா எண் 28529—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, குளச்சல் மற்றும் கருங்கல் பகுதியில் புதிய விருந்தினர் மாளிகை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, குளச்சல் மற்றும் கருங்கல் பகுதியில் புதிய விருந்தினர் மாளிகை கட்டுவதற்கான கருத்துரு அரசின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

16—

சூரிய ஒளி மின் உற்பத்தி

வினா எண் 1373—திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்திய அரசின் உற்பத்திக்குத் தகுந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் சிவகங்கையில் ஒரு

5 மெகா வாட் சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டம் மற்றும் நாகப்பட்டினத்தில் ஒரு மெகா வாட் சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டம் ஆக மொத்தம் 6 மெகா வாட் மின் கட்டமைப்பில் இணைக்கக்கூடிய மின் திட்டம் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது.

தற்போது நிலக்கரியிலிருந்து தயாரிக்கப்படும் மின் உற்பத்திச் செலவைப்போல சூரிய ஒளி மின் உற்பத்திச் செலவு 5 மடங்கு அதிகமாக உள்ளது. இந்தச் சூரிய ஒளி மின் உற்பத்திச் செலவைக் குறைக்கும் முகமாக, உள்நாட்டு சூரிய ஒளி மின் பலகைகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டங்களுக்கு இந்திய அரசு 2022 ஆம் ஆண்டுக்குள் செயற்படுத்தப்படவுள்ள மின் கட்டமைப்பில் (grid) இணைக்கத் தகுந்த தேசிய சூரிய சக்தித் திட்டம் (National Solar Mission 2022) ஒன்று அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் 2013 ஆம் ஆண்டுக்குள் செயற்படுத்தக்கூடிய இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தில் மொத்தம் 12 மெகா வாட் திறனுள்ள 8 சூரிய ஒளி மின் திட்டங்களுக்கு மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் 1 மெகா வாட் திறனுள்ள திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது.

17—

புதிய துணை மின் நிலையம்

வினா எண் 2921—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், பேரிகை பகுதியில் 110 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

2015 செப்டம்பர் 29]

(ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், பேரிகை பகுதியில் 110 கே.வி. திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு 12–வது ஐந்தாண்டு பெருந்திட்டத்தில் பரிசீலனையில் உள்ளது.

18—

புதிய துணை மின் நிலையம்

வினா எண் 4980—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி ஒன்றிய பகுதிகளில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஆம். கள்ளக்குறிச்சி ஒன்றியம், தென்கீரனூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

19—

கோழிப் பண்ணைகளுக்கு இலவச மின்சாரம்

வினா எண் 5613—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேளாண்மை தொழிலான கோழிப் பண்ணைகளுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கோழிப் பண்ணைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

[2015 செப்டம்பர் 29

20—

புதிய துணை மின் நிலையம்

வினா எண் 7306— திரு. சுப. தங்கவேலன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்களம் ஒன்றியம், ஏ.ஆர். மங்களம் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* இல்லை. இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்களம் ஒன்றியம், ஏ.ஆர். மங்களம் கிராமத்திற்கு தற்சமயம் தரமான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறபடியால், புதிய துணை மின் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

21—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 7307—திரு. சுப. தங்கவேலன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் நயினார்கோவில், திருஉத்திரகோசமங்கை ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையக் கட்டுமானப் பணிகளைச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

2015 செப்டம்பர் 29]

(ஆ) (i) இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவிலில் புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க ரூ.302.45 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டபின் பணிகள் துவங்கப்பட்டு இந்த நிதியாண்டின் இறுதிக்குள் துணை மின் நிலையம் இயக்கத்திற்குக் கொண்டுவரப்படும்.

(ii) திருஉத்திரகோசமங்கையில் புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, அதைக் கையகப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இடத்தைக் கையகப்படுத்தியவுடன் துணை மின் நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு பணிகள் தொடங்கி விரைவில் முடிக்க ஆவன செய்யப்படும்.

22—

காற்றாலை மின் பண்ணை அமைத்தல்

வினா எண் 7327—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயல் விளக்கக் காற்றாலை மின் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) செயல் விளக்கக் காற்றாலை மின் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

23—

புதிய துணை மின் நிலையம்

வினா எண் 7853—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 29

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி, நாரணாபுரத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பல்லடம் தொகுதி, நாரணாபுரத்தில் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டு முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்துணை மின் நிலையம் நிறுவுவதற்கு நிறுவன ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

24—

மின் கோட்டப் பொறியாளர் அலுவலகம்

வினா எண் 13349—திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கூடலூரில் மின் வாரிய கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மின் பகிர்மான வட்டத்தில் போதுமான பணியாளர்கள் (நிருவாகம் மற்றும் களப் பணியாளர்கள்) இல்லாமையாலும், போதுமான கூடுதல் வருவாய் இன்மை மற்றும் வசதியின்மைக் காரணமாகவும் கூடலூர் கோட்ட அலுவலகம் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

2015 செப்டம்பர் 29]

25—

புதிய துணை மின் நிலையம்

வினா எண் 14660—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், குருபரபள்ளி அருகில் 230 கே.வி. திறனுடைய மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். கிருஷ்ணகிரி மாவட்டம், குருபரபள்ளி பகுதியில் 230 கே.வி. திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைக்க 12-வது ஐந்தாண்டு பெருந்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

26—

சூரிய ஒளி மின் உற்பத்தி

வினா எண் 16126—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளி மின் உற்பத்தியை மேலும் அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சூரிய ஒளி மின் உற்பத்தியை மேலும் அதிகரிக்க அரசின் நடவடிக்கை நடைமுறையில் உள்ளது.

[2015 செப்டம்பர் 29

27—

மின் பூங்கா

வினா எண் 16129— திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் 50 மெகா வாட் உற்பத்தித் திறன்கொண்ட சூரிய ஒளிமூலம் மின்சாரம் தயாரிக்கும் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் 50 மெகா வாட் உற்பத்தித் திறன்கொண்ட சூரிய ஒளிமூலம் மின்சாரம் தயாரிக்கும் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

28—

புதைவடம் அமைத்தல்

வினா எண் 17720—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை நகராட்சியில் மின் கம்பிகளை பூமிக்கடியில் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை நகராட்சியில் மின் கம்பிகளை பூமிக்கடியில் பதிக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

29—

சூரிய ஒளி அடுப்புகள் அமைத்தல்

வினா எண் 18782—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதியில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் போன்று சூரிய ஒளி அடுப்புகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போதைக்கு இதுபோன்ற திட்டம் அரசிடம் எதுவும் இல்லை.

30—

புதிய மின்மாற்றிகள் அமைத்தல்

வினா எண் 19013—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், நாகமதி, கோபாலபுரத்தில் புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், நாகமதி, கோபாலபுரத்திற்குக் குறைந்த மின்னழுத்தம்

[2015 செப்டம்பர் 29

தொடர்பாக புதிய 100 கே.வி.ஏ., மின்மாற்றி அமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

31—

புதிய துணை மின் நிலையம்

வினா எண் 19117—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி அமைந்துள்ள ஆசாரிபள்ளம் பகுதியில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் 12—வது திட்டக் காலத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

33—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 22647—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, அரனையூர் ஊராட்சி, இராசப்புளியேந்தல் கிராமத்திற்கு மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண் 32-இதற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, அரனையூர் ஊராட்சி, இராசப்புளியேந்தல் கிராமத்திற்கு குறைந்த மின்னழுத்தம் தொடர்பாக, ஒரு புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி அமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

34—

மின் நிலையத்தினை மீண்டும் செயல்படுத்துதல்

வினா எண் 22660—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெருஞ்சாணி அணைக்கட்டிலுள்ள மின்நிலையத்தினை மீண்டும் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பெருஞ்சாணி அணையிலிருந்து போதுமான நீர்மட்டத்துடன் நீர்ப்பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடும்பட்சத்தில், பெருஞ்சாணி குறும்புனல் மின் நிலையத்தின் இரண்டு இயந்திரங்களும் மின் உற்பத்திக்காக இயக்கப்படும்.

35—

புதிய துணை மின் நிலையம்

வினா எண் 22661— திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

குளச்சல் தொகுதி, சுப்பியரை பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஆம். குளச்சல் தொகுதி, சுப்பியரைக்கு அருகில் உள்ள கருங்கல் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

36—

புதிய மின்மாற்றி

வினா எண் 23969—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, ஆழூர் பேரூராட்சி, கங்கான்கடையில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, ஆழூர் பேரூராட்சி, கங்கான்கடை பகுதியில் மின்னழுத்தக் குறைவைச் சரிசெய்து மேம்படுத்த புதிய 100 கே.வி.ஏ., மின்மாற்றி அமைக்க அனுமதி வழங்கப்பட்டு புதிய மின்மாற்றி நிறுவப்பட்டுள்ளது.

37—

தனி மின் பாதை

வினா எண் 24352— திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி நகருக்கு தனி மின் பாதை அமைத்து, துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மன்னார்குடி நகரில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

38—

புதிய துணை மின் நிலையம்

வினா எண் 25652—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, தாயமங்கலத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, தாயமங்கலம் கிராமத்திற்கு இளையான்குடி துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

39—

புதிய மின்மாற்றி

வினா எண் 25664—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பிரமனூர் கிராமம், தவத்தாரேந்தல் கிராமத்திற்கு புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பிரமனூர் கிராமத்திற்கு பிரமனூர் SS I 100 KVA, *பிரமனூர்* SS II 100 KVA *பிரமனூர்* SS III 100 KVA *மற்றும் பிரமனூர்* SS IV 63 KVA, *ஆகிய மின்மாற்றிகளின்மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றிகள் வரையறுக்கப்பட்ட மின்பளுவிற்குள் இருப்பதாலும், குறைந்த மின்னழுத்தக் குறைபாடு இல்லாததாலும் தற்பொழுது புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. தவத்தாரேந்தல் கிராமத்திற்கு தவத்தாரேந்தல்* SS I 63 KVA, *தவத்தாரேந்தல்* SS II 63 KVA *மற்றும் தவத்தாரேந்தல்* SS III 63 KVA *ஆகிய மின்மாற்றிகள்மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றிகள் வரையறுக்கப்பட்ட மின்பளுவிற்குள் இருப்பதாலும், குறைந்த மின்னழுத்தக் குறைபாடு இல்லாததாலும் தற்பொழுது புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.*

40—

தானியங்கி சூரிய சக்தி விளக்கு

வினா எண் 26455—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் ஜவ்வாது மலை, ஜமுனை மருதூர் போன்ற மலைப் பகுதிகளில் தானியங்கி சூரிய சக்தி விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் ஜவ்வாது மலை, ஜமுனை மருதூர் போன்ற மலைப் பகுதிகளில் தானியங்கி சூரிய சக்தி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

2015 செப்டம்பர் 29]

(ஆ) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலமாக அனுமதி பெற்றதன்பேரில் 2011–2012 திட்டத்தின்கீழ், ஜவ்வாது மலை மற்றும் ஜமுனா மருதூரில் 20 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன. 2012–2013 இல் 34 தெரு விளக்குகள் அமைப்பதற்கு அனுமதி பெறப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

41—

கூடுதல் திறனுடைய துணை மின் நிலையம்

வினா எண் 27444—திருமதி ந. இந்திராகாந்தி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் வட்டம், ரெட்டியாப்பட்டி துணை மின் நிலையத்தினைக் கூடுதலாக 110/22 கே.வி. திறன்கொண்ட மின் நிலையமாக மாற்றியமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. தற்பொழுது துறையூர் தொகுதி, தங்க நகர் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் (ரெட்டியாப்பட்டி) 1 x 8 எம்.வி.ஏ., திறனுள்ள மின்மாற்றியுடன் இயங்கி வருகிறது. இதன் உச்ச மின் பளு 5.9 எம்.வி.ஏ., ஆகும். தங்க நகர் பகுதியின் மின் பளுவை நிறைவு செய்ய இத்துணை மின் நிலையமே போதுமானது. எனவே, தங்க நகர் (ரெட்டியாப்பட்டி) துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

42—

புதிய துணை மின் நிலையம்

வினா எண் 28335—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 29

பெரம்பூர் தொகுதி, 35 வது வட்டம், முத்தமிழ் நகரில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 35-வது வட்டத்தில் உள்ள முத்தமிழ் நகரில் துணை மின் நிலையம் அமைக்கத் தேவை எழவில்லை.

43—

மண் பரிசோதனை நிலையம்

வினா எண் 1164—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டியில் மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூரைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு மண் ஆய்வுக் கூடம் மற்றும் ஒரு நடமாடும் மண் ஆய்வுக் கூடம் திருத்துறைப்பூண்டி விவசாயிகளும் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றது. மேலும், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 10 வட்டாரங்களிலும் சிறு மண் ஆய்வுக் கூடம் மற்றும் வேளாண்மை ஆலோசனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. திருத்துறைப்பூண்டி வட்டாரத்திலும் ஒரு சிறிய மண் ஆய்வுக் கூடத்துடன்கூடிய வேளாண்மை ஆலோசனை மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் விவசாயிகள் வட்டார அளவில் தங்கள் மண்ணை பரிசோதனை செய்து உரப் பரிந்துரை பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

விடுப்பட்ட வினா எண் 44-இதற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

45—

வேளாண் கலைக் கல்லூரி

வினா எண் 6832—திருமதி ம. சக்தி: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் வேளாண்மைக் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) சீர்காழி தொகுதியில் வேளாண்மைக் கலைக் கல்லூரி அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

47—

புதிய நகரம் உருவாக்குதல்

வினா எண் 16034—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வண்டலூர் மற்றும் கேளம்பாக்கத்திற்கு அருகில் பிரதான தெற்கத்திய சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் உலகத் தரம் வாய்ந்த புதிய நகராக உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை பெருநகருக்கான இரண்டாம் முழுமைத் திட்டப் பகுதியில் பெருகிவரும் தகவல் தொழில்நுட்ப

விடுப்பட்ட வினா எண் 44-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

நிறுவனங்களின் வளர்ச்சியினைக் கருத்தில்கொண்டு திருப்போரூர் அருகே துணை நகரம் அமைக்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி அரசாணை (நிலை) எண் 73, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 2–3–2007 அப்போதைய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரைப்படி மறைமலை நகர் முதல் திருப்போரூர் வரையிலான பகுதியினை மேம்படுத்துவதற்கான வளர்ச்சித் திட்டத்தின் இடைக்கால அறிக்கையை அரசுக்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சமர்ப்பித்தது. அதனை ஆய்வு செய்து 134 கிராமங்களை உள்ளடக்கிய இப்பகுதிக்கான ஒருங்கிணைந்த வரைவு வளர்ச்சித் திட்டத்தினைத் தயாரிக்க சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அரசு ஆணை (நிலை) எண் 210, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 25–9–2012 இல் அரசு ஆணையிட்டது. அதன்படி வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

48—

நான்கு வழிப் பாதை நீட்டிப்பு

வினா எண் 115—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை–மேட்டுப்பாளையம் நான்கு வழிப் பாதையை மேட்டுப்பாளையம் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

இப்புறவழிச் சாலைக்கான நேர்பாடு இறுதி செய்வதிலும் மற்றும் சுங்கம் வசூல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் மாவட்ட நிருவாகத்திற்கும், ஆணையத்திற்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளில் உடன்பாடு ஏற்படாததாலும் இப்பணியின் செயலாக்கம் தற்போது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினரால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29]

49—

பாலம் கட்டுதல்

வினா எண் 117—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை பேரூராட்சி, பவானி ஆற்றின் குறுக்கே புதிய இருவழிப் பாதை பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை பேரூராட்சி, பவானி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

50—

புறவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 118—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, மேட்டுப்பாளையம் நகருக்குப் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தற்போது இப்புறவழிச்சாலைக்கான நேர்பாடு இறுதி செய்வதிலும் மற்றும் சுங்கம் வசூல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் மாவட்ட நிருவாகத்திற்கும், ஆணையத்திற்கும்

ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளில் உடன்பாடு ஏற்படாததாலும், இப்பணியின் செயலாக்கம் தற்போது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினரால் நிறுத்தி வைக்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

51—

சாலை அமைத்தல்

வினா எண் 120—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, திருப்பூர் சாலையிலிருந்து கோவை விமான நிலையம் வரை விமான நிலையச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, திருப்பூர் சாலையிலிருந்து கோவை விமான நிலையம் வரை விமான நிலையச் சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

52—

புற வழிச் சாலை அமைத்தல்

வினா எண் 130—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொள்ளாச்சி நகரத்திற்குப் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பொள்ளாச்சி நகரத்திற்குப் புறவழிச் சாலை அமைப்பதற்கான நில ஆர்ஜித பிரேரணை பணிகள் நடைபெற்று வருகின்றன.

விடுப்பட்ட வினா எண்கள் 53,54,55,56-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

2015 செப்டம்பர் 29]

57—

சாலை மற்றும் மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 827—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்தில் ஒருவழிச் சாலை அமைக்கவும், மேம்பாலம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தேசிய நெடுஞ்சாலையில் (NH-47) மார்த்தாண்டத்தில் ஒருவழிச் சாலை மற்றும் மேம்பாலம் அமைக்கும் திட்டம் எதுவும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் இல்லை.

59—

பாலப் பணியினை விரைந்து முடித்தல்

வினா எண் 869—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, இரணியல், வள்ளியாறு பாலத்தினை விரைவில் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, இரணியல், வள்ளியாற்று பாலமானது கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

61—

பயணியர் விடுதிக்குப் புதிய கட்டடம்

வினா எண் 1466—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விடுபட்ட வினா எண்கள் 58 மற்றும் 60-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

[2015 செப்டம்பர் 29

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை அரசினர் பயணியர் விடுதியைப் புதியதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் அரசினர் பயணியர் விடுதியைப் புதியதாகக் கட்ட திருவாரூர் மாவட்ட ஆட்சியரின் நில ஒதுக்கீடு ஆணை பெற்ற பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.

62—

இருவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 1518—திரு. சு. ரவி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, தக்கோலம் கூட்டு ரோடு–சென்னை பெங்களூர் சாலைக்குச் செல்லும் தார்ச்சாலையை பேரம்பாக்கம் வரை இருவழி தார்ச்சாலையாக அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தண்டலம்–பேரம்பாக்கம்–தக்கோலம்–அரிகில்பாடி சாலை கி.மீ. 0/0–18/5 வரை இருவழித் தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

63—

அணுகு சாலை அமைத்தல்

வினா எண் 1542—திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், சாணாரப்பட்டி அருகே நாகாவதி ஆற்றில் பாலம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், சாணாரப்பட்டி அருகே நாகாவதி ஆற்றில் பாலம் மற்றும் அணுகு சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

65—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 1820—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செஞ்சி தொகுதி, நந்தன் கால்வாய் குறுக்கே உள்ள மேலச்சேரி தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

செஞ்சி தொகுதி, நந்தன் கால்வாய் குறுக்கே உள்ள மேலச்சேரி தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

66—

பாலம் கட்டுதல்

வினா எண் 1835—திரு. கா. தமிழரசன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுரை கிழக்கு தொகுதி, சக்கிமங்கலம் முதல் வைகை ஆற்றின் குறுக்கே சிலைமானில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடுப்பட்ட வினா எண் 64-இதற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மதுரை கிழக்கு தொகுதி, சக்கிமங்கலம் முதல் வைகை ஆற்றின் குறுக்கே சிலைமான் வரை பாலம் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

67—

இருவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 1836—திரு. கா. தமிழரசன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுரை கிழக்கு தொகுதி, மந்திகுளம்-பூலாம்பட்டி சாலையை இருவழிச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மதுரை கிழக்கு தொகுதி, மந்திகுளம்-பூலாம்பட்டி சாலையை இருவழித் தடமாக அகலப்படுத்த தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

68—

சுங்கச் சாவடியை அகற்றுதல்

வினா எண் 1842—திரு. கே.பி. கந்தன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெருங்குடி பேரூராட்சிக்குட்பட்ட சுங்கச்சாவடியை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெருங்குடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சுங்கச்சாவடியை அகற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

69—

புதிய பயணியர் விடுதி

வினா எண் 1994—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பத்மநாபபுரம் தொகுதி, திருவட்டாறில் புதிய பயணியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதி, திருவட்டாறில் புதிய பயணியர் விடுதி கட்ட தற்போது திட்டம் ஏதும் இல்லை.

70—

புதிய பயணியர் மாளிகை

வினா எண் 2707—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி பகுதியில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் ஓய்வு மாளிகை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி பகுதியில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பயணியர் மாளிகை கட்டுதல் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

71—

உயர்மட்டப் பாலம் கட்டுதல்

வினா எண் 2710—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, பாத்தகோட்டா பகுதியிலுள்ள தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, பாத்தகோட்டா பகுதியிலுள்ள தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

72—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 2711—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி–இராயக்கோட்டை சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி–இராயக்கோட்டை சாலையை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

73—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 2712—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி–பேரிகை, சூளகிரி–கெலமங்கலம் சாலைகளை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி–பேரிகை சாலை மற்றும் கெலமங்கலம் சாலைகளை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

74—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 2776—திரு. க. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, நாட்டரசன்கோட்டையிலிருந்து செல்லும் நாட்டான் கால்வாய் குறுக்கே வில்லான் காட்டூர் செல்லும் சாலையின் குறுக்கே புதிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வில்லான் காட்டூர் சாலையில், நாட்டான் கால்வாய் குறுக்கே புதிய பாலம் கட்டும் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

75—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 2778—திரு. க. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை தொகுதி, பட்டமங்கலத்திலிருந்து கல்லல் செல்லும் சாலையில் மணிமுத்தாறின் குறுக்கே உள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, பட்டமங்கலத்திலிருந்து கல்லல் செல்லும் சாலையில் மணிமுத்தாறின் குறுக்கே உள்ள தரைப்பாலத்தை திட்டப் பணிகளின்கீழ் மேம்பாலமாகக் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

76—

சுற்றுச்சாலை அமைத்தல்

வினா எண் 2780—திரு. க. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சிவகங்கை நகரில் சுற்றுச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சிவகங்கை நகருக்கு புறவழிச் சாலை அமைப்பதற்காக ரூபாய் 100 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தேசிய நெடுஞ்சாலை ஆணையம்மூலம் சிவகங்கை நகரின் மேற்கு பகுதியில் புறவழிச் சாலை அமைக்க திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இப் புறவழிச் சாலை பணிகள் நிறைவு பெற்றால் சுற்றுச்சாலை அமையும்.

78—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 3076—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சி, கூரக்காடு உப்பனாற்றில் புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கூரக்காடு உப்பனாற்றில் உள்ள பழைய பாலத்தினை உறுதிப்படுத்துவதற்கும், இப்பாலத்திற்கு இணையாக புதிய இருவழிப்பாலம் கட்டுவதற்கும் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் பகுதி–IV–ல் திட்டமிடப்பட்டுள்ளது.

82—

பாலம் கட்டுதல்

வினா எண் 3341—திரு. க. பழனிச்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண்கள் 77 மற்றும் 79,80,81-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

(அ) வேடசந்தூர் தொகுதி, அய்யலூர்–செங்குறிச்சி சாலையில் உள்ள குருந்தம்பட்டி, காக்காயன்பட்டி அருகில் வறட்டாற்றில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, அய்யலூர்–செங்குறிச்சி சாலையில் குருந்தம்பட்டி அருகே பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. காக்காயன்பட்டி அருகே பாலம் கட்ட வரும் நிதியாண்டுகளில் ஆய்வு செய்யப்படும்.

83—

சாலை அகலப்படுத்தல்

வினா எண் 3342—திரு.ச. பழனிச்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, அய்யலூர்—செங்குறிச்சி நெடுஞ்சாலையை அகலப்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, அய்யலூர்–செங்குறிச்சி நெடுஞ்சாலையினை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

84—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 3580—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) நாங்குநேரி தொகுதி, பச்சையாற்றின் நடுவில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, பச்சையாற்றின் நடுவில் பாலம் கட்ட ரூபாய் 189.00 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பாலம் விரைவில் கட்டப்பட உள்ளது.

88—

புதிய பாலம் அமைத்தல்

வினா எண் 3794—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவிடைமருதூர் தொகுதி, திருமாந்துறை ஊராட்சியையும் திருவில்லியங்குடி ஊராட்சியையும் இணைக்க சாத்தனூரில் பழவாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவிடைமருதூர் தொகுதி, திருமாந்துறை ஊராட்சியையும் திருவில்லியங்குடி ஊராட்சியையும் இணைக்க சாத்தனூரில் பழவாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

89—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 5855—திரு. கோ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுபட்ட வினா எண்கள் 85,86,87-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்

(அ) சேலம் மாநகரில் 5 ரோடு பகுதியில் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகரில் 5 ரோடு பகுதியில் மேம்பாலம் கட்டுவதற்கு முதற்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

90—

உயர்மட்டப் பாலம் கட்டுதல்

வினா எண் 5927—திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர்–தருமபுரி மாநில நெடுஞ்சாலையில் பர்கூர் ஆற்றின் குறுக்கே சுந்தரம்பள்ளி அருகில் உள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர்–தருமபுரி சாலை (எஸ்.எச்.60) கி.மீ.92/0–ல் பர்கூர் ஆற்றின் குறுக்கே சுந்தரம்பள்ளி அருகில் உள்ள தரைமட்ட பாலத்தை உயர்மட்ட பாலமாக கட்ட வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் ஆய்வு செய்யப்படும்.

91—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 5961—திரு. சோழன் சித. பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) காரைக்குடி தொகுதி, கோட்டையூர்-கண்டனூர், தேவக்கோட்டை-ரஸ்தா ஆகிய இடங்களில் இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கோட்டையூர்-கண்டனூர் சாலையில் அமைந்துள்ள இரயில்வே கடவு எண் 183-ல் மாற்றாக சாலை மேம்பாலம் அமைக்க போதிய சாத்தியக்கூறு தற்போது இல்லை. தேவகோட்டை—ரஸ்தா சாலையில் கடவு எண் 181-க்கு மாற்றாக சாலை மேம்பாலம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்மூலம் கட்டப்படவுள்ளது.

92—

சாலையைப் புதுப்பித்தல்

வினா எண் 6000—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்திலிருந்து அடுக்கம் வழியாக கொடைக்கானல் செல்லும் பாதையை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்திலிருந்து அடுக்கம் வழியாக கொடைக்கானல் செல்லும் பாதையை ருபாய் 123.89 கோடி செலவில் மேம்படுத்துவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

93—

இணைப்புப் பாலம் கட்டுதல்

வினா எண் 6040—திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை வைகை ஆற்றில் ஆர்.ஆர். மண்டபம்-முனிச்சாலையை இணைக்க பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை வைகை ஆற்றில் ஆர்.ஆர். மண்டபம்-முனிச்சாலையை இணைக்க பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

94—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 6047—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி முதல் தேவஸ்தானம் ஊராட்சி பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தேவஸ்தானம் ஊராட்சி, பாலாற்றின் குறுக்கே பாலப் பணியானது ஆர்.ஐ.டி.எப்.16 நபார்டு திட்டம் 141-ன்கீழ் ரூபாய் 700 இலட்சம் மதிப்பீட்டில் துவக்கி நடைபெற்று வருகின்றன.

2015 செப்டம்பர் 29]

95—

சுற்றுச்சாலை பணியை விரைந்து முடித்தல்

வினா எண் 6052—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, தேனி நகரில் சுற்றுச்சாலை பணிகளை விரைந்து முடித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனி நகருக்கு புறவழிச் சாலை அமைக்க நில எடுப்பு பணிகள் முடிவுற்று, தற்போது புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. தேனி நகருக்கு சுற்றுச்சாலை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

96—

சாலைகளைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6131—திரு. கு.ப. தங்கவேலன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இரண்டு தேசிய நெடுஞ்சாலைகளையும், இரண்டு மாநில நெடுஞ்சாலைகளையும் இணைக்கும் மிக முக்கிய இதர சாலைகளை இடைவழித்தடச் சாலையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தேசிய நெடுஞ்சாலைகளையும், மாநில நெடுஞ்சாலைகளையும் இணைக்கும் மிக முக்கிய இதர சாலைகளை இடைவழித்தடச்

[2015 செப்டம்பர் 29

சாலையாக தரம் உயர்த்த போக்குவரத்து செறிவின் அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

97—

தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் 6342—திரு. ஆர். சந்திரசேகர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தொகுதி, மணப்பாறை நகர சாலைகளை இருவழிச் சாலையாக மாற்றி, சாலை நடுவில் தடுப்புக் கட்டை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை தொகுதி, மணப்பாறை நகர சாலைகளை இருவழிச் சாலையாக மாற்றி, சாலை நடுவில் தடுப்புக் கட்டை ஏற்படுத்த 2012–2013 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

98—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 6562—திரு. மு. ரெத்தினசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளியில் உள்ள காவேரி ஆற்றில் புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளியில் உள்ள காவேரி ஆற்றில் புதிய பாலம் கட்டும் பணிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

2015 செப்டம்பர் 29]

99—

புறவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 6565—திரு. மு. ரெத்தினசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதி, புதுச்சத்திரம்—கூடநாணல் வரை புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவையாறு தொகுதி, புதுச்சத்திரம்—கூடநாணல் வரை புறவழிச் சாலைக்கான நேர்ப்பாடு அமைக்க மற்றும் திட்ட அறிக்கை தயார் செய்ய ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது.

100—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 6595—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, பார்த்திபனூர்—ஸ்ரீவில்லிபுத்தூர் மாநில நெடுஞ்சாலையில் விருதுநகர்—சிவகாசி சாலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர்—சிவகாசி—விருதுநகர்—அருப்புக்கோட்டை—திருச்சுழி—நரிக்குடி—பார்த்திபனூர் சாலை கி.மீ.25/0—45/4 வரை இருவழிப் பாதையை பலவழிப் பாதையாக அகலப்படுத்தும் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

102—

சாலையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6645—திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாங்கண்ணி–வேதாரண்யம்–முத்துப்பேட்டை மாநில நெடுஞ்சாலையை கிழக்கு கடற்கரை சாலைக்கு (ஈ.சி.ஆர்.) இணையான சாலையாக தரம் உயர்த்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

வேளாங்கண்ணி–வேதாரண்யம்–முத்துப்பேட்டை மாநில நெடுஞ்சாலை போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில் படிப்படியாக இருவழித்தடமாக அகலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவ்வாறு இருவழித்தடமாக அகலப்படுத்தப்பட்ட பின்பு, ஈசிஆர். கிழக்கு கடற்கரை சாலைக்கு இணையாகத் தரம் உயர்த்தப்பட்டு பராமரிக்கப்படும்.

103—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 6656—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, கூரானூர் சாலை, தென்மங்கலம் கிராமம் அருகில் மலட்டாற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதி, கூரானூர் சாலை, தென்மங்கலம் கிராமம் அருகில் மலட்டாற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம்

விடுப்பட்ட வினா எண் 101-இதற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

கட்ட சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

104—

உயர்மட்டப் பாலம் கட்டுதல்

வினா எண் 6658—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை-திருவெண்ணெய்நல்லூர் சாலை, பிள்ளையார்குப்பம் அருகில் கெடிலம் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை-திருவெண்ணெய்நல்லூர் சாலை, பிள்ளையார்குப்பம் அருகில் கெடிலம் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்ட ரூபாய் 836.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு, பாலப் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

105—

புறவழிச் சாலை

வினா எண் 6661—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் நகரத்தில் புறவழிச் சாலை அமைக்கும் பணியை துரிதப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கும்பகோணம் நகரத்தில் புறவழிச் சாலை பணி தமிழ்நாடு சாலை மேம்பாலம் திட்டத்தின்கீழ் முடிக்கப்பட்டுள்ளது. மேம்பாலப் பணிக்கான அணுகு சாலைப் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

106—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 6665—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, தேவபூரீஸ்வரர் ஆலயம் உள்ள பட்டீஸ்வரம் செல்ல தாராசுரம் இரயில்வே கடவில் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தாராசுரம் இரயில்வே கடவில் மேம்பாலம் கட்டுவது தற்போது சாத்தியமில்லை.

107—

இரயில்வே மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 6666—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, அன்னலக்ரஹாரம் ஊராட்சியில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதி, அன்னகலக்ரஹாரம் ஊராட்சியில் இரயில்வே மேம்பாலம் அமைக்க சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

108—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 6674—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்ககிரி–திருச்செங்கோடு சாலையில் புகைவண்டி பாலத்தின் அடியில் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி–திருச்செங்கோடு சாலையில் புகைவண்டி பாலத்திற்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்ட ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

109—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 6937—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி நகரத்தில் தேசிய நெடுஞ்சாலையை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி நகரத்திற்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகள் நன்கு பராமரிக்கப்பட்டு, போக்குவரத்திற்கு ஏற்றவாறு உள்ளது.

110—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 6949—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கூரக்காடு உப்பனாறு பாலத்தை பழுது நீக்கி புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கூரக்காடு உப்பனாறு பாலத்தை பலப்படுத்தவும், மேலும் அப்பாலத்திற்கு இணையாக புதிய இருவழிப் பாலம் கட்டவும், தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

111—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 6950—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் இரயில்வே கடவில் மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் இரயில்வே கடவில் மேம்பாலம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

112—

சாலையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6952—திருமதி ம. சக்தி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புத்தூர்–பழையாறு மீன்பிடி துறைமுகத்துக்கு செல்லும் சாலையை இருவழிச் சாலையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புத்தூர்–பழையாறு மீன்பிடி துறைமுகத்துக்கு செல்லும் சாலையை இருவழிச் சாலையாகத் தரம் உயர்த்த தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

113—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 6956—திருமதி ம. சக்தி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சி, தென்னலக்குடியில் புதிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சி, தென்னலக்குடியில் புதிய பாலம் கட்டப்பட்டு, தற்போது போக்குவரத்துப் பயன்பாட்டில் உள்ளது.

114—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 7108—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை–மார்த்தாண்டம் நெடுஞ்சாலையை அகலப்படுத்தி மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை–மார்த்தாண்டம் நெடுஞ்சாலையை அகலப்படுத்தி மேம்பாலம் கட்டும் திட்டம் எதுவும் இல்லை.

115—

புறவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 7120—திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) இராஜபாளையத்தில் புறவழிச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலை 208–ல் கி.மீ.159/455–184/233–ல் இராஜபாளையம் முதல் திருவில்லிபுத்தூர் வரை ஒருங்கிணைந்த புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

116—

நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 712௦—திரு. கோ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் ஒன்றியம், கே.ஆர். தோப்பூர் பேருந்து நிறுத்தம் முதல் போத்தனூர் வழியாக தாரமங்கலம் செல்லும் நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் ஒன்றியம், கே.ஆர். தோப்பூர் பேருந்து நிறுத்தம் முதல் போத்தனூர் வழியாக தாரமங்கலம் செல்லும் நெடுஞ்சாலையில் கி.மீ.0/0—0/6 வரை இடைவழித் தடமாக அகலப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைகள் போக்குவரத்து செறிவின் அடிப்படையில் படிப்படியாக அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[2015 செப்டம்பர் 29

117—

விபத்துகளைத் தடுத்தல்

வினா எண் 7164—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் ஒன்றியம், தந்திரரெட்டியாபட்டி ஊராட்சி முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை தேசிய நெடுஞ்சாலையில் விபத்துகளை தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் ஒன்றியம், தந்திரரெட்டியாபட்டி ஊராட்சி முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலையில் விபத்துகளை தடுப்பதற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் ஒரு சுரங்கப்பாதை அமைக்க பிரேரணை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பரிசீலனையில் உள்ளது.

118—

இணைப்புச் சாலை அமைத்தல்

வினா எண் 7201—திரு. கோ. வெங்கடாஜலம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை டால்மியா போர்டு–செட்டிச்சாவடி, கொண்டப்பநாய்க்கன்பட்டி, பாலப்பட்டி வழியாக இணைப்புச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம்–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை டால்மியா போர்டு–செட்டிச்சாவடி, கொண்டப்பநாய்க்கன்பட்டி, பாலப்பட்டி வழியாக இணைப்புச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்சமயம் அரசிடம் இல்லை.

119—

இருவழிச் சாலை

வினா எண் 7432—திருமதி. ம. சக்தி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கோதண்டபுரம்–அளக்குடி ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கோதண்டபுரம்–அளக்குடி ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றும் கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

120—

இணைப்புப் பாலம் கட்டுதல்

வினா எண் 7527—திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, வேளாங்கண்ணி–செருதூர் வரை இணைப்புப் பாலம் கட்டட அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கீழ்வேளூர் தொகுதி, வேளாங்கண்ணி–செருதூர் வரை இணைப்புப் பாலம் கட்டும் பணி தற்போது நடைபெற்றுவருகிறது.

122—

நான்கு வழிச்சாலை

வினா எண் 7600—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தேசிய நெடுஞ்சாலை 67–ல் நான்கு வழிச்சாலை பணி முடிவடையாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவாக முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலை 67–ல் நான்கு வழிச்சாலை அமைக்கும் பணி 30–9–2012–ல் முழுமையாக நிறைவுபெற்று தற்போது பயன்பாட்டிலுள்ளது.

123—

புதிய பாலம் அமைத்தல்

வினா எண் 7622—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை கிருஷ்ணராஜபுரம் காவல் நிலையத்திற்கிடையில் வைகை ஆற்றில் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண் 121-இதற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) வரும் நிதியாண்டில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலித்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

124—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 7648—திரு. க. பவுன்ராஜ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி—ஆடுதுறை சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி—ஆடுதுறை சாலை அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

126—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 8225—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் நகரில் குண்டாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண் 125-இதற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் நகரில் குண்டாற்றின் குறுக்கே பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

127—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 8236—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு மாவட்டம், சின்னகாளியூரில் உள்ள பள்ளத்தின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், சின்னகாளியூரில் உள்ள பள்ளத்தின் குறுக்கே பாலம் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

131—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 8381—திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை, திருவான்மியூர் சிக்னல் அருகில் கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுபட்ட வினா எண்கள் 128,129,130-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, திருவான்மியூர் சிக்னல் அருகில் கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு தற்போது விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

132—

நான்கு வழிச்சாலை அமைத்தல்

வினா எண் 8413—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை–இராமேஸ்வரம் நான்கு வழிச்சாலைப் பணிகளை இந்த நிதியாண்டில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை–இராமநாதபுரம்–இராமேஸ்வரம்–தனுஷ்கோடி சாலையில் மதுரை–பரமக்குடி (கி.மீ.5/000–80/606) வரையுள்ள பகுதி நான்கு வழிச்சாலையாகவும், பரமக்குடி–இராமநாதபுரம் (கி.மீ.80/606–120/771) வரையுள்ள பகுதி கடினதளத்துடன் கூடிய இருவழிச்சாலையாகவும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேம்படுத்தப்படவுள்ளது. கி.மீ. 149/6–173/6 (24 கி.மீ.) வரை கடினதளத்துடன் கூடிய இருவழிச் சாலை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. கி.மீ.175/2–177/4 (2.4 கி.மீ.) வரை கடினதளத்துடன் கூடிய இருவழிச்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், கி.மீ.120/0–149/6, 153/6–155/6, 158/0–158/4, 160/0–161/8, 162/8–163/0 மற்றும் 173/0–183/2 வரையிலான (44.2 கி.மீ. நீளம்) பணிகள் ஆண்டுத் திட்டம் 2013–2014–ல் ஒப்பந்த நிலையில் உள்ளது.

[2015 செப்டம்பர் 29

134—

நான்கு வழிச்சாலை அமைத்தல்

வினா எண் 8645—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர், பழங்காநூத்து, ஒட்டன்சத்திரம், தாராபுரம், திருப்பூர் மாநில நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர், பழங்காநூத்து, ஒட்டன்சத்திரம், தாராபுரம், திருப்பூர் மாநில நெடுஞ்சாலை நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்கான திட்டம் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–2ன்கீழ் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

135—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 8650—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, காவேரிப்பட்டிக்கும் சித்தாருக்கும் இடையே காவேரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண் 133-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, காவேரிப்பட்டிக்கும் சித்தாருக்கும் இடையே காவேரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் தற்போது இல்லை.

136—

புதிய மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 8719—திரு. பாப்பாசுந்தரம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளித்தலை நகரில் சுங்கவாயில் அருகே இருப்புப் பாதையைக் கடக்க முசிறி–சேதுபாவாசத்திர சாலையில் மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

குளித்தலை நகரில் சுங்கவாயில் அருகே இருப்புப் பாதையைக் கடக்க முசிறி–சேதுபாவாசத்திர சாலையில் மேம்பாலம் கட்டும் அளவிற்கு இரயில் வாகன அலகு குறைவாக உள்ளதால், அவ்விடத்தில் மேம்பாலம் கட்டும் சாத்தியக்கூறுகள் இல்லை.

137—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 8720—திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூரிலிருந்து கோவிலூர் வரையுள்ள மாநில நெடுஞ்சாலையை அகலப்படுத்தி பலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூரிலிருந்து கோவிலூர் வரையுள்ள மாநில நெடுஞ்சாலையை அகலப்படுத்தி பலப்படுத்தும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

138—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 9312—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, வீரகேரளம்புதூர் முதல் வீராணம், ஊத்துமலை, கலங்கல் வழியாக சங்கரன்கோவில் செல்லும் சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, வீரகேரளம்புதூர் முதல் வீராணம், ஊத்துமலை, கலங்கல் வழியாக சங்கரன்கோவில் செல்லும் சாலையினை ரூபாய் 539 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க மேம்பாட்டு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பந்த உடன்படிக்கை செயலாக்கப்பட்டவுடன் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

139—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 10340—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலத்தில் புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, தாரமங்கலத்தில் புறவழிச்சாலை அமைக்க நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

140—

பாலம் கட்டுதல்

வினா எண் 10349—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், சோளவண்டியான் கிராமம், பாப்பம்பாடி சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதிநிலைமைக்கேற்ப நபார்டு கடனுதவி திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும்.

141—

வட்டச்சாலை அமைத்தல்

வினா எண் 10876—திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) துறையூர் தொகுதி, துறையூர்–பெரம்பலூர் சாலையுடன் ஆத்தூர் சாலையை இணைத்து வட்டச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முசிறி–துறையூர்–ஆத்தூர் சாலை கி.மீ.30/8ல் பிரிந்து, துறையூர்–பெரம்பலூர் சாலை கி.மீ.2/4ல் சேரும் வகையில் புதிய புறவழிச் சாலை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை கண்டறிய ஆய்வு செய்யப்படும்.

142—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 11114—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி நகரத்தில் புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதிக்குட்பட்ட திருத்தணி நகரத்தில் புறவழிச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

143—

நான்குவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 11215—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

மதுரை–தனுஷ்கோடி நான்கு வழிச்சாலை பணிகளை இந்த நிதியாண்டில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை.—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தேசிய நெடுஞ்சாலை 49, மதுரை–இராமநாதபுரம்–இராமேஸ்வரம்–தனுஷ்கோடி சாலையாகும். இந்தச் சாலையில் மதுரை–பரமக்குடி (கி.மீ.5/000–80/606) வரையுள்ள பகுதி நான்கு வழிச்சாலையாகவும், பரமக்குடி–இராமநாதபுரம் (கி.மீ.80/606–120/771) வரையுள்ள பகுதி தளவரிசையுடன் கூடிய இருவழிச்சாலையாகவும் மேம்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதியான இராமநாதபுரம்–இராமேஸ்வரம்–தனுஷ்கோடி (கி.மீ.120/771–190/550) வரை போக்குவரத்து செறிவு குறைவாக உள்ளதால் அகலப்படுத்தும் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

144—

நெடுஞ்சாலையை சீரமைத்தல்

வினா எண் 11270—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை–தஞ்சாவூர் இடையே தேசிய நெடுஞ்சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலை 226–ன் தஞ்சாவூர்–மானாமதுரை பகுதியில் சாலையின் ஓடுதளத்தின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு சிறப்பு பழுது நீக்கும் பணிகள் மற்றும் காலமுறை புதுப்பித்தல் பணிகள் முறையாக செய்யப்படுகிறது.

[2015 செப்டம்பர் 29

145—

சிறு பாலம் கட்டுதல்

வினா எண் 12231—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர் தொகுதி, கடுக்காம்பாளையம் கிராமத்தில் சிறு பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

அந்தியூர் தொகுதி, கடுக்காம்பாளையம் கிராமத்தில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணியானது ரூபாய் 71.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, தற்போது போக்குவரத்து பயன்பாட்டில் உள்ளது.

146—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 12233—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப்பகுதி சாலையை அகலப்படுத்தி செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப்பகுதி சாலையை அகலப்படுத்தி செப்பனிடும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

2015 செப்டம்பர் 29]

147—

துறைமுகத்தை மேம்படுத்துதல்

வினா எண் 12281—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் துறைமுகத்தை துரிதமாக சரி செய்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

குளச்சல் துறைமுகத்தில் உலகளவில் நிறுவனங்கள் பங்கேற்பாளராக ஆவதற்குரிய சாத்தியக்கூறுகள் குறித்த விவரங்களுடன் அளிக்க கேட்டுக்கொண்டதற்கிணங்க குளச்சல் துறைமுகத்தை பல்வேறு நிலைகளில் மேம்படுத்துவது தொடர்பான அறிக்கை திருவாளர்கள் ஐ-மேரிடைம் கன்சல்டன்சி நிறுவனத்தால் அளிக்கப்பட்டுள்ளது. அவை தற்போது தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

149—

சாலை அமைத்தல்

வினா எண் 14524—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கொடைக்கானலில் இருந்து அடுக்கம் வழியாக பெரியகுளம் வரை பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கொடைக்கானலில் இருந்து அடுக்கம் வழியாக பெரியகுளம் வரை பாதையமைக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை

விடுப்பட்ட வினா எண் 148-இதற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

தயாரிக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இட்ட அறிக்கையின் அடிப்படையில் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

150—

இணைப்புச் சாலை அமைத்தல்

வினா எண் 15425—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், நீலத்தநல்லூர், அரியலூர் மாவட்டம், மதனத்தூரை இணைக்கும் கொள்ளிடம் புதிய பாலத்தின் இருபுறமும் இணைப்புச் சாலை அமைக்கும் பணிகளை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், நீலத்தநல்லூர், அரியலூர் மாவட்டம், மதனத்தூரை இணைக்கும் கொள்ளிடம் புதிய பாலத்தின் இருபுறமும் இணைப்புச் சாலை அமைக்கும் பணி முடிவுற்று போக்குவரத்து சீராக நடைபெற்று வருகிறது.

151—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 16509—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஒன்றியம், வில்லூர்–மறவபட்டி சாலையில் உள்ள பழுதடைந்துள்ள பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஒன்றியம், வில்லூர்–மறவபட்டி சாலையில் கி.மீ. 4/2-ல் உள்ள பழுதடைந்துள்ள பாலத்தை வரும் நிதியாண்டில் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதுப்பித்துக்கட்ட முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

152—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 17981—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி நகரத்திற்குப் புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி நகரத்திற்கு புறவழிச்சாலை அமைக்கும் திட்டத்திற்காக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

153—

இயற்கைத் துறைமுகம்

வினா எண் 18516—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) குளச்சல் தொகுதியில் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்க குளச்சலில் உள்ள இயற்கை துறைமுகத்தை ஆரம்பிக்க அதைச் சுற்றியுள்ள நிலங்களை கையகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் துறைமுக அபிவிருத்திக்கு தனியார் பங்கேற்பாளர்களைத் தேர்ந்தெடுப்பது அவசியம் என தெரிவிக்கப்பட்டதால், குளச்சல் துறைமுகத்தை பல்வேறு நிலைகளில் மேம்படுத்துவது தொடர்பான அறிக்கை, திருவாளர்கள் ஐ–மேரிடைம் கன்சல்டன்சி நிறுவனம் அளித்துள்ளது. அவை தற்போது தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

154—

பாலம் கட்டுதல்

வினா எண் 18629—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், சருகனி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், சருகனி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க தற்போது கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2015 செப்டம்பர் 29]

155—

சுரங்கப்பாதை அமைத்தல்

வினா எண் 18765—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் பேருந்து நிலையம் எதிரில் சுரங்கப்பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் பேருந்து நிலையம் எதிரில் சுரங்கப்பாதை அமைப்பதற்கான கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

156—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 18900—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர் தொகுதி, குப்பாண்டம்பாளையம் செல்லும் சாலையில் உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

அந்தியூர் தொகுதி, குப்பாண்டம்பாளையம் செல்லும் சாலையில் உயர்மட்டப் பாலம் அமைக்கும் திட்டம் இல்லை.

157—

சாலை அமைத்தல்

வினா எண் 18905—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளத்திலிருந்து அடுக்கம் வழியாக கொடைக்கானல் வரை சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளத்திலிருந்து அடுக்கம் வழியாக கொடைக்கானல் வரை சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

158—

நான்குவழிச் சாலை

வினா எண் 18907—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தேசிய நெடுஞ்சாலை எண் 67-ல் கோவை, நரசிம்மநாயக்கன்பாளையம் முதல் மேட்டுப்பாளையம் வரையிலான சாலையை நான்குவழிச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது இப்புறவழிச்சாலைக்கான நேர்பாடு இறுதி செய்வதிலும் மற்றும் சுங்கம் வசூல் சம்பந்தப்பட்ட

2015 செப்டம்பர் 29]

பிரச்சினைகளில் மாவட்ட நிருவாகத்திற்கும் ஆணையத்திற்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளில் உடன்பாடு ஏற்படாததாலும் இப்பணியின் செயலாக்கம் தற்போது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினரால் நிறுத்திவைக்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

159—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 18911—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம்-கோத்தகிரி சாலையிலுள்ள இராமசாமி நகரில் உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம்–கோத்தகிரி சாலையிலுள்ள இராமசாமி நகரில் உயர்மட்டப் பாலம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

160—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 18912—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை–அன்னூர் சாலையிலுள்ள பன்னேபாளையம் ஏழெருமைபள்ளத்தில் உயர்மட்டப் பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை–அன்னூர் சாலையிலுள்ள ஏழெருமைபள்ளத்தில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்கு ரூபாய் 368.70 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணி துவங்கும் நிலையிலுள்ளது.

161—

பாலம் கட்டுதல்

வினா எண் 18916—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஊராட்சி ஒன்றியம், ஆமத்தூர்–லட்சுமியாபுரம் சாலையில் காளையார்குறிச்சி–புதுக்கோட்டை இடையே ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஊராட்சி ஒன்றியம், ஆமத்தூர்–லட்சுமியாபுரம் சாலையில் கி.மீ.8/10 இல் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பாலப் பணியானது மார்ச் 2014–க்குள் முழுவதுமாக கட்டி முடிக்கப்படும்.

162—

இருவழிச்சாலை

வினா எண் 18917—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி–கல்லடி சிதம்பரம் வழியாக திருநெல்வேலி வரையிலான சாலையை இருவழிச்சாலையாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி–கல்லடி சிதம்பரம் வழியாக திருநெல்வேலி வரையிலான சாலையை இருவழிச்சாலையாக மாற்றிடும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

163—

பாலம் கட்டுதல்

வினா எண் 19606—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் ஒன்றியம், முதலக்கம்பட்டி பகுதி வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், பெரியகுளம் ஒன்றியம், முதலக்கம்பட்டி பகுதி, வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணிக்காக விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பால வேலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

164—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 19613—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, குருந்தன்கோட்டில் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, குருந்தன்கோட்டில் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அஸ்திவா ர வேலைகள் நடைபெற்று வருகிறது.

165—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 19698—திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, ராஜீவ்காந்தி–திருவான்மியூர் இணைப்புச் சாலையில் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, ரா்ஜீவ்காந்தி–திருவான்மியூர் இணைப்புச் சாலையில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

167—

சுரங்கப்பாதை அமைத்தல்

வினா எண் 19775—திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விடுபட்ட வினா எண் 166-இதற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

கயத்தார்–திருநெல்வேலி புறவழிச்சாலையிலிருந்து தேவர்குளம் சாலைக்குச் செல்ல சுரங்கப்பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கயத்தார்–திருநெல்வேலி புறவழிச்சாலையில் தேவர்குளம் சந்திப்பில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் இல்லை.

168—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 20264—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், காவேரிப்பட்டி கிராமம், வட்ராம்பாளையம்–அண்ணமார்கோயில் செல்லும் தார்ச்சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், காவேரிப்பட்டி கிராமம், வட்ராம்பாளையம்–அண்ணமார்கோயில் செல்லும் சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

169—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 20467—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 29

மன்னார்குடி—திருத்துறைப்பூண்டி சாலையில் கோரையாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் பணியை தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மன்னார்குடி—திருத்துறைப்பூண்டி சாலையில் கோரையாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டுவதற்கு பதினேழு முறை ஒப்பந்த அழைப்புகள் கோரப்பட்டும் எந்த ஒப்பந்ததாரரும் பணியை எடுக்காத காரணத்தினால் மாற்றுத் திட்டத்தில் இப்பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

170—

இருவழிச் சாலை

வினா எண் 20727—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் இருந்து ஜவளகிரி வழியாக கர்நாடக மாநிலம் செல்லும் சாலையை இருவழிச்சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் இருந்து ஜவளகிரி வழியாக கர்நாடக மாநிலம் செல்லும் மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்துவதற்கு போக்குவரத்து செறிவிற்கேற்ப பரிசீலிக்கப்படும்.

2015 செப்டம்பர் 29]

171—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 20886—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கிராலத்தூர்–திருக்கொள்ளிக்காடு இடையே கடுஉருட்டி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கிராலத்தூர்–திருக்கொள்ளிக்காடு இடையே கடுஉருட்டி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட ஊரக வளர்ச்சித் துறையின் தடையின்மை சான்று பெற்று வரும் நிதியாண்டில் நபார்டு வங்கி கடனுதவியுடன் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

172—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 20887—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கட்டிமேடு–ஆதிரெங்கம் மற்றும் ஆதிச்சபுரம்–நெம்மேலி இடையே முள்ளியாற்றில் புதிய பாலங்கள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கட்டிமேடு–ஆதிரெங்கம் மற்றும் ஆதிச்சபுரம்–நெம்மேலி இடையே முள்ளியாற்றின் குறுக்கே புதிய பாலங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[2015 செப்டம்பர் 29

173—

நான்கு வழிச்சாலை

வினா எண் 20899—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியிலிருந்து வேதாரண்யம் வரை நான்கு வழிச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியிலிருந்து வேதாரண்யம் வரை உள்ள சாலையில் போக்குவரத்துச் செறிவு அதிகரிக்கும்போது நான்குவழிச் சாலையாக அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

175—

புறவழிச் சாலை

வினா எண் 21659—திரு. வே. குணசீலன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, ஆற்காடு—திண்டிவனம் சாலையிலிருந்து வெண்குன்றம் மலை வழியாக காஞ்சிபுரம் வரை புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, ஆற்காடு—திண்டிவனம் சாலையிலிருந்து வெண்குன்றம் மலை வழியாக காஞ்சிபுரம் வரை புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

விடுப்பட்ட வினா எண் 174-இதற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

176—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 21882—திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, நாரணம்மாள்புரம் பேரூராட்சி பகுதியில் நான்குவழிச்சாலையின் குறுக்கே தென்கலம் சாலை சந்திப்பில் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி தொகுதி, நாரணம்மாள்புரம் பேரூராட்சி பகுதியில் நான்குவழிச் சாலையின் குறுக்கே தென்கலம் சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

177—

சுற்றுச்சாலை அமைத்தல்

வினா எண் 21890—திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சி, பேட்டைப் பகுதியில் சுற்றுச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாநகராட்சி, பேட்டைப் பகுதியில் சுற்றுச் சாலை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

178—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 22099—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையை செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் பழுதடைந்துள்ள பகுதிகளை செப்பனிடும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

179—

பாலம் கட்டுதல்

வினா எண் 22357—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், திருத்தங்கல் மணிமுத்தாறில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், திருத்தங்கல் சாலை கி.மீ. 0/8—ல் மணிமுத்தாறு குறுக்கிடும் சாலையானது கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளதால், ஊரக வளர்ச்சித் துறையின் தடையில்லாச் சான்று பெற்று, வரும் நிதியாண்டுகளில் அரசின் நிதிநிலைக்கு ஏற்ப நபார்டு திட்டத்தின்கீழ் பாலம் கட்ட ஆய்வு செய்யப்படும்.

180—

சுரங்கப்பாதை அமைத்தல்

வினா எண் 23027—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம் தொகுதி, சிதம்பரம் நகரில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு அருகில் சுரங்கப்பாதை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் நகரில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு அருகில் சுரங்கப்பாதை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

181—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 24643—திரு. மு. முருகன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கமுதியில் புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கமுதி நகரில், முதுகுளத்தூர்–கமுதி சாலை கி.மீ. 16/4–ல் தொடங்கி பார்த்திபனூர்–கமுதி–அருப்புக்கோட்டை சாலை கி.மீ. 29/10–ல் இணையும் வகையில் புறவழிச்சாலை அமைக்க நில எடுப்புப் பணிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

182—

பயணியர் ஆய்வு மாளிகை

வினா எண் 24661—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி நகரப் பகுதியில் புதிய பயணியர் ஆய்வு மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி நகரப் பகுதியில் புதிய பயணியர் ஆய்வு மாளிகை கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

183—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 24680—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், தளி–கொமரலிங்கம் சாலை கி.மீ. 3/2–ல் மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், தளி–கொமரலிங்கம் சாலை கி.மீ. 3/2–ல் மேம்பாலம் கட்ட ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தம் செயலாக்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

2015 செப்டம்பர் 29]

184—

உயர்மட்டப் பாலம் கட்டுதல்

வினா எண் 24683—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை—திருமூர்த்திமலை மாவட்ட சாலை 10/4 கி.மீ.–ல் உயர்மட்டப் பாலம் கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை—திருமூர்த்திமலை மாவட்ட சாலை 10/4 கி.மீ.–ல் உயர்மட்டப் பாலம் ரூ.33.00 இலட்சத்தில் கட்டுவதற்கு பணி துவங்கப்பட்டுள்ளது.

185—

ரவுண்டானா அமைத்தல்

வினா எண் 24720—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம் கிழக்கு கடற்கரை சாலையும் புறவழிச்சாலையும் சந்திக்கும் இடத்தில் விபத்தினைத் தடுக்க ரவுண்டானா அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் கிழக்கு கடற்கரை சாலையும் புறவழிச்சாலையும் சந்திக்கும் இடத்தில் ரவுண்டானா அமைக்கும் கருத்துரு ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

[2015 செப்டம்பர் 29

186—

இருவழிச்சாலை

வினா எண் 24632—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி-கொமராபாளையம் சாலையை இருவழிச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி—கொமராபாளையம் சாலை கி.மீ. 8/6–9/0, 11/2–12/6 ஆகிய 1.80 கி.மீ. இடைவழித்தடச் சாலை வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் இருவழிச்சாலையாக மாற்ற பரிசீலிக்கப்படும்.

187—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 24838—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், மல்லூர்-ஏர்வாடி வாணியம்பாடி வழியாக வீரபாண்டி செல்லும் சாலையை அகலப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மல்லூர்—ஏர்வாடி—வாணியம்பாடி வழியாக வீரபாண்டி செல்லும் சாலை தற்போதைய போக்குவரத்து செறிவிற்கு ஏற்றாற்போல் உள்ளது. போக்குவரத்து அதிகரிக்கும் பட்சத்தில் சாலையை அகலப்படுத்த பரிசீலிக்கப்படும்.

188—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 24846—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டியிலுள்ள விழுப்புரம்—சென்னை புறவழிச்சாலையில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டியிலுள்ள விழுப்புரம்—சென்னை புறவழிச் சாலையில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

189—

சுற்றுச்சாலை

வினா எண் 25018—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர்–வேதாரண்யம் சுற்றுச்சாலைப் பணியினை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை.—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தஞ்சாவூர்–வேதாரண்யம் இடையே மன்னார்குடி நகரைச் சுற்றி வட்டச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

190—

சுற்றுச்சாலை

வினா எண் 25019—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி வடக்குப் பகுதியில் தஞ்சாவூர்–கும்பகோணம்–திருவாரூர் மற்றும் திருத்துறைப்பூண்டி சாலைகளை இணைக்கும்வகையில் சுற்றுச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி வடக்குப் பகுதியில் தஞ்சாவூர்–கும்பகோணம்–திருவாரூர் மற்றும் திருத்துறைப்பூண்டி சாலைகளை இணைக்கும்வகையில் சுற்றுச்சாலை அமைக்க நில எடுப்புப் ப்ணிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நில எடுப்புப் பணிகள் முடிவுற்ற பிறகு சாலைப் பணிகள் தொடங்கப்படும்.

191—

பாலம் கட்டுதல்

வினா எண் 25061—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் பேரூராட்சி, கிழக்குப் பகுதி ஒளிமதி ஊராட்சி, வைகளத்தூரை இணைக்க வெண்ணாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் பேரூராட்சி, கிழக்குப் பகுதி ஒளிமதி ஊராட்சி, வைகளத்துரை இணைக்க வெண்ணாற்றின் குறுக்கே வண்டிப்பாலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

192—

சாலையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 25074—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர்–வேதாரண்யம் சாலையை மன்னார்குடி வழியாக இணைத்து தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தி, நான்கு வழிச்சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர்–வேதாரண்யம் சாலையில் போக்குவரத்துச் செறிவு அதிகரிக்கும்போது தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தி, நான்கு வழிச்சாலையாக மாற்ற பரிசீலிக்கப்படும்.

[2015 செப்டம்பர் 29

193—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 25821—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாநகராட்சி, சேலம் நேஷனல் ஓட்டல் சாலையிலிருந்து புதிய பேருந்து நிலையம், ஐந்து சாலை, ஜி.ஆர்.டி. சாலை வரை மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, சேலம் நேஷனல் ஓட்டல் சாலையிலிருந்து புதிய பேருந்து நிலையம், ஐந்து சாலை, ஜி.ஆர்.டி. சாலை வரை மேம்பாலம் அமைக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

194—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 26524—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை, திருக்கோகர்ணம் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை, திருக்கோகர்ணம் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

2015 செப்டம்பர் 29]

195—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 26703—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைபேட்டை வட்டம், பூலாங்கிணர்–தளி 9.40 கி.மீ. பழுதடைந்துள்ள சாலையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், பூலாங்கிணர்–தளி 9.40 கி.மீ. பழுதடைந்துள்ள சாலையில் கி.மீ. 5/0–7/8 வரையுள்ள பகுதியினைத் தவிர மற்ற பகுதிகள் மேம்பாடு செய்யப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது.

197—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 26719—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, குருந்தன்கோடு ஆற்றின் குறுக்கே சாலையில் அமைந்துள்ள பழைய பாலத்தை மாற்றி புதிய பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, குருந்தன்கோடு ஆற்றின் குறுக்கே சாலையில் அமைந்துள்ள பழைய பாலத்தை மாற்றி புதிய பாலம் அமைக்கும்

விடுப்பட்ட வினா எண் 196-இதற்கான விளக்கத்தினை பக்கம் 352-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணியினை விரைவில் முழுவதுமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

198—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 26735—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரம்—இடையன்குடி சாலையில் சித்தாலங்குளம் அருகில் உள்ள நம்பியாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரம்—இடையன்குடி சாலையில் சித்தாலங்குளம் அருகில் உள்ள நம்பியாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

199—

பாலம் கட்டுதல்

வினா எண் 26756—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, இடையர்தவணை ஊராட்சி, அனுமன் நதியில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, இடையர்தவணை ஊராட்சி, அனுமன் நதியின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

200—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 26975—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, பாவூர் சத்திரம் இருப்புப்பாதை கடவில் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, பாவூர் சத்திரம் இருப்புப்பாதை கடவில் மேம்பாலம் கட்டும் பணிக்கு தெற்கு இரயில்வேயின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

(பேரவைக் கூட்டத் தொடர் முடியும் வரை தொடர்புடைய உறுப்பினர்கள் பேரவை பணிகளினின்று தற்காலிக நீக்கம் செய்யப்பெற்றுள்ளதால் வரிசை எண்கள் 1, 2, 10, 12, 14, 32, 44, 46, 53, 54, 55, 56, 58, 60, 64, 77, 79, 80, 81, 85, 86, 87, 101, 121, 125, 128, 129, 130, 133, 148, 166, 174, 196 தொடர்புடைய வினாக்கள்—விடைகள் இப்பட்டியலில் இடம்பெறவில்லை.)

[2015 செப்டம்பர் 29

பட்டியல் 17

1—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 26995—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம்–நீலத்தநல்லூர் வரை 10 கி.மீ. S.H. *சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம்–நீலத்தநல்லூர் வரை 10 கி.மீ. மாநில நெடுஞ்சாலை கி.மீ. 0/0-1/3 வரை ஏற்கெனவே அகலப்படுத்தப்பட்டுள்ளது. மீதி பகுதியான கி.மீ. 1/3 முதல் 8/450 வரையுள்ள பகுதியினை அகலப்படுத்துவதற்கான பணி தற்போது நடைபெற்று வருகிறது.

2—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 27913—திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூரில் பல்லடம் சாலையிலிருந்து நொய்யலாற்று பாலம் வரை பறக்கும் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூரில் பல்லடம் சாலையிலிருந்து நொய்யலாற்று பாலம் வரை பறக்கும் மேம்பாலம் கட்ட 2010–

2015 செப்டம்பர் 29]

2011 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.4300.00 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, நில மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. நில எடுப்புப் பணிகள் முடிவுற்ற பின் இப்பாலப் பணிகள் தொடங்கப்படும்.

3—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 28332—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் இரயில் நிலையம் அருகில் வாடிப்பட்டி நெடுஞ்சாலையில் மேம்பாலம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தான் இருப்புப்பாதை கடவு மேம்பாலம் அமைக்கும் பணிக்காக நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

4—

தங்க நாற்கர சாலை

வினா எண் 28525—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தங்க நாற்கரச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கேரளா/தமிழ்நாடு எல்லை முதல் கன்னியாகுமரி வரை உள்ள சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்த இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

5—

தென்னை சார்ந்த தொழில்

வினா எண் 2757—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் தென்னை சார்ந்த தொழில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பகுதியில் உள்ள தென்னை மரங்களிலிருந்து கிடைக்கும் தேங்காய், மட்டை, தென்னங்கீற்று ஆகிய பொருட்கள் அனைத்தும் அன்றாட பயன்பாட்டிற்கும், மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இங்கு தென்னை சார்ந்த தொழில்களான கயிறு தொழில்கள் அமைக்கத் தேவையான கட்டமைப்பு வசதி இல்லாத காரணத்தினாலும், போதிய அனுபவம் மிக்க கயிறு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினாலும் கயிறு திரிக்கும் தொழில்கள் ஆரம்பிக்க அரசு சார்பில் சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர் இங்கு தென்னை சார்ந்த தொழில் தொடங்க முன்வருவார்களேயானால் அவர்கள் மாநில அரசின் புதிய தொழில்முனைவோர் தொழில் நிறுவனங்கள் வளர்ச்சித் திட்டம் (NEEDS) வேலையில்லா இளைஞர்களுக்கு

விடுபட்ட வினா எண்கள் 6-இதற்கான விளக்கத்தினை பக்கம் 466-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) மற்றும் மைய அரசின் ரிமோட் (REMOT) பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம் (PMEGP) போன்ற திட்டங்களின்கீழ் உரிய மானியங்களையும் பிற வழிகாட்டுதல்களையும் தொடர்புடைய மாவட்டத் தொழில் மையத்திடமிருந்து பெற்று பயனடையலாம்.

7—

பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை

வினா எண் 3261—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதியில் பழங்கள், பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதியில் மாம்பழம், கொய்யாப்பழம் மற்றும் பப்பாளிப் பழ வகைகள் மொத்தம் 2544.390 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படுகின்றன. மாம்பழங்கள் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதங்களில் மட்டுமே விளைச்சலாகின்றன. மாம்பழக் கூழ் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மாம்பழங்களை நேரடியாக கிலோ ஒன்றுக்கு ரூ.5 முதல் 10 வரை எனும் விலையில் கொள்முதல் செய்து கொள்கின்றன. மாம்பழ விவசாயிகள் சந்தையில் கிலோ ஒன்றுக்கு ரூ.20 முதல் 30 வரை எனும் விலையில் விற்பனை செய்கின்றனர். வாடிப்பட்டி மற்றும் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு அருகில் உள்ள மேக்ரீட்டா எக்ஸ்போர்ட்ஸ் லிட் மற்றும் கலசம் செக்ரிட் (பி) லிட் ஆகிய இரு நிறுவனங்கள் மாம்பழச்சாறு ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையான காலத்தில் உற்பத்தி செய்கின்றன. அரசு சார்பில் நேரடியாக பழங்கள் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின்

பரிசீலனையில் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர் மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதியில் பழங்கள், பழச்சாறு பதனிடும் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம்.

2. மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்–தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்" (Needs) கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்துடன் வங்கிகள்/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. இவையல்லாது, தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் மதுரை மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

11—

மிளகாய்த் தூள் தொழிற்சாலை

வினா எண் 5249—திரு. கு.வ. மார்க்கண்டேயன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளத்தில் மிளகாய்த் தூள் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

விளாத்திகுளத்தில் மிளகாய்த் தூள் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர் எவரேனும் விளாத்திகுளத்தில் மிளகாய்த் தூள் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள் தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம்.

2. மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்–தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்" (Needs) கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்துடன் வங்கிகள்/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. இவையல்லாது, தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், தூத்துக்குடி மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

12—

தக்காளி சாஸ் தொழிற்சாலை

வினா எண் 5964—திரு. ஏ. சரத்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுபட்ட வினா எண்கள் 8,9,19-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 466-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

(அ) தென்காசி தொகுதி, பாவூர்சத்திரத்தில் தக்காளி சாஸ் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, பாவூர்சத்திரத்தில் தக்காளி சாஸ் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் தென்காசி தொகுதி, பாவூர்சத்திரத்தில் தக்காளி சாஸ் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள் தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம்.

2. மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்—தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்" (Needs) கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்துடன் வங்கிகள்/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. இவையல்லாது, தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், திருநெல்வேலி மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

2015 செப்டம்பர் 29]

13—

கயிறு திரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 6021—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதியில் கயிறு திரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதியில் ஏற்கெனவே தென்னை நார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும், இரு பிரி கயிறு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும், முறுக்குக் கயிறு தொழிற்சாலைகளும் மாநில, மத்திய அரசுகளின் மானியங்கள் பெற்று செயல்பட்டு வருகின்றன. பல்லடம் பகுதிக்கு அருகிலுள்ள பகுதிகளிலிருந்து கயிறு திரிக்கும் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்கள் கிடைப்பதால், இங்கு கயிறு திரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்க உகந்த சூழல்கள் உள்ளன. எனவே, ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதியில் கயிறு திரிக்கும் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால், அவர்கள் தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம்.

2. மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்—தொழில் நிறுவனங்கள் வளர்ச்சித் திட்டத்தின்" (NEEDS) கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்துடன் வங்கி/தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்து கடன்

பெற்று, தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. இவையல்லாது, தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் சொந்தமாக தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், திருப்பூர் மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

14—

தொழிற்பயிற்சி நிலையத்திற்குப் புதிய கட்டடம்

வினா எண் 6628—திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கவுண்டம்பாளையம் தொகுதி, கவுண்டம்பாளையம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டி, புதிய இயந்திரங்கள் வழங்கி மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

கவுண்டம்பாளையம் தொகுதி, கவுண்டம்பாளையம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் பழைய நிலையிலுள்ள கட்டடங்களைப் புதுப்பித்து பராமரிக்கவும் மற்றும் புதிய இயந்திரங்கள் வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

15—

மாம்பழக்கூழ் தொழிற்சாலை

வினா எண் 6631—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 செப்டம்பர் 29]

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் மாங்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் மாங்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கிடும் திட்டம் எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் மாங்கூழ் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் மானியங்கள் மற்றும் தேவையான வழிகாட்டுதல்களை கிருஷ்ணகிரி மாவட்டத் தொழில் மையம் வழங்கும்.

16—

கயிறு தொழிற்சாலை

வினா எண் 8251—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, கம்பைநல்லூர் பகுதியில் கயிறு தொழிற்சாலை அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில், மைய அரசின் ஸ்பூட்டி திட்டத்தின்கீழ் ரூ.1 கோடி மதிப்பீட்டில் ஒரு கயிறு குழுமம் அமைக்க கருத்துரு ஒன்று மைய அரசின் கயிறு வாரியத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டது. கொள்கை அளவில் மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு இத்திட்டத்தினைச் செயல்படுத்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு

வருகிறது. எந்த ஒரு குறு, சிறு (ம) நடுத்தரத் தொழில் நிறுவனத்தையும் அரசே நேரடியாகத் தொடங்காதென்பதால், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதியில், கம்பைநல்லூர் பகுதியில் கயிறு சார்ந்த தொழிலகங்கள் அமைப்பதற்கு முன்வந்தால், அவர்களுக்குத் தகுதிகாண் அடிப்படையில் தேவையான வழிகாட்டுதல்களை தருமபுரி மாவட்டத் தொழில் மையம் வழங்கும்.

(ஆ) பதில் எழவில்லை.

17—

சுற்றுச் சுவர்

வினா எண் 8527—திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசு நந்தனார் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா அரசு தொழிற்பயிற்சி நிலையம் என்ற பெயரில் ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. அத்தொழிற்பயிற்சி நிலையம் மூன்று புறமும் சுற்றுச் சுவர் உள்ள நந்தனார் அரசு பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளதால், தனியாக சுற்றுச் சுவர் கட்ட வேண்டிய தேவை எழவில்லை. அரசு நந்தனார் தொழில்நுட்ப நிறுவனம் என்ற பெயரில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் எதுவும் இத்துறையின்கீழ் இயங்கவில்லை.

(ஆ) எழாது.

2015 செப்டம்பர் 29]
18—

பனை சார்ந்த தொழில்

வினா எண் 8659—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பகுதியில் பனை சார்ந்த தொழில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பகுதியில் பனை சார்ந்த தொழில் துவங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் மானாமதுரை தொகுதி, மானாமதுரை பகுதியில் பனை சார்ந்த தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள் தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம்.

2. மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்–தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்" (Needs) கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்துடன் வங்கி/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. இவையல்லாது, தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

உருவாக்கும் திட்டத்தின்' கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், சிவகங்கை மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

19—

தொழிலாளர் நலத் துறை அலுவலகம்

வினா எண் 8681—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் உள்ள தொழிலாளர் நலத் துறை அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்ட தலைமையகங்களில் மட்டுமே தொழிலாளர் துறை அலுவலகங்களுக்கான சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் உள்ள தொழிலாளர் துறை அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

20—

விலையில்லா சீருடைகள் வழங்குதல்

வினா எண் 9989—டாக்டர் ரா. சரத்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் ஏழை மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் இரண்டு சீருடைகளை இலவசமாக வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் ஏழை எளிய மாணவ, மாணவியருக்கு 2013 ஆம் ஆண்டு முதல் இலவசமாக இரண்டு சீருடைகள் வழங்கப்பட்டு, இத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

21—

பட்டுப் புழு வளர்ப்பு பயிற்சி

வினா எண் 10243—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் அதிக விவசாயிகளுக்கு மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப் புழு வளர்ப்பில் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த பட்டு விவசாயிகளில் 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு ஜுலை வரை 871 விவசாயிகளுக்கு ரூ.44.69 இலட்சம் செலவில் ஓசூரில் உள்ள தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், தருமபுரி மாவட்டம், சோத்தூர் அரசு பட்டு பண்ணையில் 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஜுலை வரை 1035 விவசாயிகளுக்கு பட்டு தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளன.

[2015 செப்டம்பர் 29

22—

மலைத் தோட்டத் தொழில்

வினா எண் 13170—திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மலைத் தோட்ட தொழிலை கனரகத் தொழிலிலிருந்து விவசாயம் சார்ந்த தொழிலாக மாற்ற அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மலைத் தோட்டத் தொழிலை கனரகத் தொழிலிலிருந்து விவசாயம் சார்ந்த தொழிலாக மாற்றிட சாத்தியக்கூறுகள் இல்லை. இது அரசின் கொள்கை முடிவாகும். மேலும், மலைத் தோட்டத் தொழில் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பல்வேறு வாரியங்களான தேயிலை, காபி போன்றவைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது மத்திய அரசின் கொள்கை முடிவாகும் என்பதால், மலைத் தோட்டத் தொழிலை கனரகத் தொழிலிலிருந்து விவசாயம் சார்ந்த தொழிலாக மாற்றிட சாத்தியக்கூறுகள் இல்லை.

23—

மாம்பழக் கூழ் பதனிடும் தொழிற்சாலை

வினா எண் 14498—திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராஜபாளையம் தொகுதியில் மாம்பழக் கூழ் பதனிடும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

இராஜபாளையம் தொகுதியில் மாம்பழக் கூழ் பதனிடும் தொழில் நிறுவனம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் இராஜபாளையம் தொகுதியில் மாம்பழக் கூழ் பதனிடும் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம்.

2. மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்—தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்" (Needs) கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்துடன் வங்கிகள்/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. இவையல்லாது, தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், விருதுநகர் மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

24—

நார் தொழிற்சாலை

வினா எண் 16460—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் நார் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

மானாமதுரை தொகுதியில் நார் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் மானாமதுரை தொகுதி, மானாமதுரை பகுதியில் சொந்தமாக நார் தொழிற்சாலை தொடங்க முன்வந்தால், அவர்கள் தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம்.

மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்—தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்" (Needs) கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு வட்டி உதவித் தொகையுடன்கூடிய வங்கி/தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இவையல்லாது, தொழில்முனைவோர்கள் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் சொந்தமாக தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், சிவகங்கை மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

2015 செப்டம்பர் 29]

25—

பட்டுப் பூச்சி வளர்ப்பு

வினா எண் 18535—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழிலை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மானாமதுரை ஒன்றியத்தில் சூரக்குளம், தஞ்சாக்கூர் கிராமங்களில் உள்ள விவசாயிகள், பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலை மேற்கொள்ள அரசு ஊக்குவித்து உதவி வருகிறது. மானாமதுரை பகுதியில் உள்ள விவசாயிகள் மல்பரி சாகுபடி செய்வதற்குத் தேவையான நாற்றுகள், விதைக் குச்சிகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது; மல்பரி விதைக் குச்சிகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது; மல்பரித் தோட்டம் பாதுகாப்பதற்கும், தேவையான பட்டு முட்டைகள்/இளம் பட்டுப் புழுக்கள் பெற்றும் அவர்களுக்கு அரசால் தொழில்நுட்ப ஆலோசனைகளுடன் வழங்கப்பட்டு வருகின்றன. ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு அரசால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் வெற்றிகரமாக பட்டுக் கூடு அறுவடை செய்து வருமானத்தைப் பெருக்க அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது.

26—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 19895—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் வரதராஜபுரம், சிங்காநல்லூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம்மூலம் ஒரு மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் வரதராஜபுரம், சிங்காநல்லூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் ஒரு மருத்துவக் கல்லூரி துவக்க புதுடெல்லி மாநில காப்பீட்டுக் கழகம் முடிவெடுத்து, அதனடிப்படையில் தமிழ்நாடு அரசால் அரசாணை (நிலை) எண் 107, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 4-7-2012-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

27—

தேங்காய் எண்ணெய் ஆலை

வினா எண் 22011—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய் எண்ணெய் ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய் எண்ணெய் ஆலைகள் அமைப்பதற்கான முன்மொழிவுகள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் தேங்காய் எண்ணெய் சார்ந்த தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள் தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம்.

2015 செப்டம்பர் 29]

2. மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்—தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்" (Needs) கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்துடன் வங்கி/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. இவையல்லாது, தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், கன்னியாகுமரி மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

28—

புதிய தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 22482—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயலில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயலில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

29—

புதிய தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 22463—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், கண்ணங்குடியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், கண்ணங்குடியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

30—

தொழிற்பேட்டை

வினா எண் 23122—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரவாண்டி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விக்கிரவாண்டி தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி

2015 செப்டம்பர் 29]

தொகுதியில் தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில்முனைவோர்கள் முன்வந்தால், தொழில்முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ நிறுவனம் மூலமாக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

31—

ஜவ்வரிசி தொழிற்சாலை

வினா எண் 23161—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம்மூலம் நவீன ஜவ்வரிசி தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம்மூலம் நவீன ஜவ்வரிசி தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2. இத்தொழிற்சாலைகள் அமைக்க முன்வரும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் சேலம் மாவட்டத் தொழில் மையத்தை அணுகி அனைத்து வழிகாட்டுதல்களுடன் கீழ்க்காணும் மானியங்களைப் பெற்று பயனடையலாம்.

1. புதிய தொழில்முனைவோர்—தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 25% மானியம்

2. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 25% மானியம்

3. தொழில்ரீதியாக பின்தங்கிய பகுதிகளுக்கான 25% முதலீட்டு மானியம்

[2015 செப்டம்பர் 29

4. 20% குறைந்த அழுத்த மின் மானியம்

5. மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம்

6. மின்னாக்கி மானியம்

32—

பிளைவுட் தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 23305—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயலில் அரிசி ஆலையிலிருந்து கிடைக்கும் உமி, தவிடு, கடுக்காய் போன்றவற்றைப் பயன்படுத்தி பிளைவுட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதிக்குட்பட்ட புதுவயல் மற்றும் பள்ளத்தூர் பகுதிகளில் சுமார் 70 அரிசி ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஆண்டுக்கு 40,000 டன் நெல் அரைக்கப்படுகிறது. இதன்மூலம் பெறப்படும் தவிடு மொத்தமாக புதுவயலில் செயல்பட்டுவரும் தி/ள். மலர் சால்வென்ட் எக்ஸ்ட்ராக்சன் என்ற நிறுவனத்திற்கு தவிடு எண்ணெய் தயாரிப்பதற்கு மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. நெல் அரைப்பதன்மூலம் பெறப்படும் உமி மற்றும் இதர கழிவுப் பொருட்கள் மாட்டுத் தீவனம் தயாரிக்க பயன்படுகிறது. எனவே, காரைக்குடி தொகுதியில் புதுவயல் மற்றும் பள்ளத்தூர் பகுதிகளில் செயல்பட்டுவரும் அரிசி ஆலையிலிருந்து பெறப்படும் உமி, தவிடு ஆகியவற்றுடன் கடுக்காய் பயன்படுத்தி அரசு சார்பில் நேரடியாக பிளைவுட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

2015 செப்டம்பர் 29]

2. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர், இத்தொழில் துவங்க முன்வந்தால், அவர்களுக்கு முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம். மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்—தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்" (Needs) கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன் 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்துடன்கூடிய வங்கி/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. இவையல்லாமல், தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், சிவகங்கை மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

33—

காகிதக் கூழ் தொழிற்சாலை

வினா எண் 23306—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் காகிதக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காகிதக் கூழ் மற்றும் காகிதக் கூழ் சார்ந்த அட்டை போன்ற பொருட்கள் தயாரிக்க மூலப்பொருளாக கரும்புச் சக்கை, வைக்கோல், வனம் மற்றும் வேளாண் கழிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. காகிதக் கூழ் தயாரிக்கும் தொழ்ற்சாலையை இலாபகரமாக நடத்த குறைந்தது ஒரு நாளைக்கு 18.75 டன் காகிதக் கூழ் உற்பத்தி செய்யப்பட வேண்டும். இவ்வகையில் மூலப்பொருள் தேவை மட்டும் 300 மெட்ரிக் டன் ஆகும். சிவகங்கை மாவட்டத்தில் வேளாண் விளை பொருட்கள் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், இலாபகரமான காகிதக் கூழ் மற்றும் காகிதக் கூழ் பொருட்கள் தயாரிக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் காகிதக் கூழ் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம்.

2. மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்—தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்" (Needs) கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன் 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்துடன் வங்கிகள்/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. இவையல்லாது, தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள

2015 செப்டம்பர் 29]

தொழில்முனைவோர், சிவகங்கை மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

34—

கயிறு தொழிற்சாலை

வினா எண் 23319—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, மணவாளக்குறிச்சியில் கயிறு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை பயிரிடப்பட்டு 20,000 ஹெக்டேரில் 183 மில்லியன் தேங்காய்கள் கிடைக்கின்றன. ஏற்கெனவே குளச்சல் தொகுதியில், மணவிளை ஆதி திராவிடர் கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கம் நன்முறையில் இயங்கி வருகிறது. எனவே, ஆர்வமுள்ள கயிறு தொழிலாளர்கள் இக்கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து தொடர்ந்து வேலைவாய்ப்பினைப் பெறலாம். இருப்பினும், இத்தொழிற்சாலைகள் அமைக்க முன்வரும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் கன்னியாகுமரி மாவட்டத் தொழில் மையத்தை அணுகி அனைத்துவிதமான வழிகாட்டுதல்களுடன் கீழ்க்காணும் மானியங்களைப் பெற்று பயனடையலாம்:

1. புதிய தொழில்முனைவோர்—தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 25% மானியம்

2. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 25% மானியம்

3. 20% குறைந்த அழுத்த மின் மானியம்

4. மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம்

5. கயிறு வாரியத்தின்மூலம் ரிமோட் (REMOT) திட்டத்தின்கீழ் 40% மானியம்

[2015 செப்டம்பர் 29

35—

தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 25776—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் மானாமதுரை தொகுதி, மானாமதுரை பகுதியில் தேங்காய் எண்ணெய் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள் தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம்.

2. மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்—தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்" (Needs) கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு பின்முன்ன வட்டி மானியத்துடன் வங்கிகள்/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. இவையல்லாது, தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில

2015 செப்டம்பர் 29]

அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், நாகப்பட்டினம் மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

36—

பட்டாடைகள் தயாரிக்கும் தொழில்

வினா எண் 26514—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சிப்காட் வளாகத்தில் பட்டு நூல் உற்பத்தி மையம் மற்றும் பட்டாடைகள் தயாரிக்கும் தொழில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சிப்காட் வளாகத்தில் பட்டு நூல் உற்பத்தி மையம் மற்றும் பட்டாடைகள் தயாரிக்கும் தொழில் துவக்குவதற்கான விண்ணப்பங்கள் ஏதும் தொழில்முனைவோரிடமிருந்து பெறப்படவில்லை. மேலும், இவ்வளாகத்தில் பட்டு நூல் உற்பத்தி மையம் மற்றும் பட்டாடைகள் தயாரிக்கும் தொழில் மையம் நிறுவுவதற்கான நிலம் ஏதும் உபரியாக இல்லை. எனவே, மானாமதுரை சிப்காட் வளாகத்தில் பட்டு நூல் உற்பத்தி மையம் மற்றும் பட்டாடைகள் தயாரிக்கும் தொழில் துவக்குவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2015 செப்டம்பர் 29

37—

பழங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலை

வினா எண் 28210—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதியில் மா, கொய்யா, பப்பாளி ஆகியவற்றைப் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதியில் மா, கொய்யா, பப்பாளி ஆகியவற்றைப் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், இத்தொழிற்சாலைகள் அமைக்க முன்வரும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் மதுரை மாவட்டத் தொழில் மையத்தை அணுகி அனைத்துவிதமான வழிகாட்டுதல்களுடன் கீழ்க்காணும் மானியங்களைப் பெற்று பயனடையலாம்.

1. புதிய தொழில்முனைவோர்—தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 25% மானியம்

2. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 25% மானியம்

3. தொழில்ரீதியாக பின்தங்கிய பகுதிகளுக்கான 25% முதலீட்டு மானியம்

4. 20% குறைந்த அழுத்த மின் மானியம்

5. மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம்

6. மின்னாக்கி மானியம்

2015 செப்டம்பர் 29]

38—

புதிய தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 53294—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஊத்தங்கரையில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

39—

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகக் கட்டடம்

வினா எண் 6891—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஒன்றிய வட்டார குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

திருநாவலூர் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்து, கட்டடம் கட்டுவதற்கு உரிய மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

40—

புதிய அங்கன்வாடி மையம்

வினா எண் 8190—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை கிராமம், மோட்டூரில் புதிய அங்கன்வாடி மையம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை கிராமம், மோட்டூர் I, மோட்டூர் II ஆகிய இரு அங்கன்வாடி மையங்கள் செயல்படுகின்றன. அவற்றில் மோட்டூர் I மையம் 24–9–1993 முதல் வாடகைக் கட்டடத்திலும், மோட்டூர் II மையம் 18–3–2004 முதல் இலவசக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி, இவ்விரு மையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

41—

அங்கன்வாடி மையக் கட்டடம்

வினா எண் 12191—திரு. சு. ரவி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சயனபுரம் ஊராட்சி, சயனபுரம் 1 மற்றும் 4 ஆகிய இரு அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி வட்டாரம், சயனபுரம் 1 அங்கன்வாடி மையம் வாடகைக் கட்டடத்திலும், சயனபுரம் 4 அங்கன்வாடி மையம் வாடகையில்லா கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. இவ்விரு மையங்களுக்கும் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

42—

மழலையர் பள்ளி

வினா எண் 15824—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் மழலையர் பள்ளிகளை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசால் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 54,439 அங்கன்வாடி மையங்கள் செயல்படுகின்றன. அங்கன்வாடி மையங்களை மேம்படுத்த கல்வி உபகரணங்கள், மருந்துப் பொருட்கள் (Medicine Kit), வண்ண தொலைக்காட்சிப் பெட்டி, குறுந்தகடு ஒலிபரப்பும் பெட்டி (DVD), மழலையர் பாடல்கள், கதைகள், குழந்தைகளுக்கான பாய், நாற்காலி மற்றும் உள், வெளி விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், மையக் கட்டடங்களில் உள்ள பெரிய, சிறிய பழுதுகள் சரி செய்தும், முற்றிலும் பழுதான கட்டடங்களை இடித்து புதிதாக கட்டடமும், கட்டடங்கள் இல்லாத மையங்களுக்கு கட்டடங்கள்

கட்டவும், மையங்களுக்கு மின் இணைப்பு வழங்குதல், குழந்தைகளுக்கேற்ற கழிப்பறை கட்டுதல், மையங்களுக்கு வர்ணம் பூசுதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுகாதாரமான முறையில் குழந்தைகளுக்கு மதிய உணவை சமைத்து வழங்கும்பொருட்டு, கேஸ் அடுப்பு மற்றும் இணைப்புகள், குக்கர் போன்ற பொருட்கள் வழங்கப்படுகின்றன. உணவுப் பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கு உணவு கலன்கள் (Storage bins) வழங்கப்பட்டுள்ளன. சுத்தமான குடிநீர் கிடைக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு மழலையர் பள்ளிகள் (அங்கன்வாடிகள்) படிப்படியாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

43—

தேசிய அடையாள அட்டை

வினா எண் 17283—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊனமுற்றவர்களுக்கான தேசிய அடையாள அட்டையை இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, மருத்துவர்களால் மாற்றுத் திறனாளிகளை நேரடியாக ஆய்வு செய்து, மாற்றுத் திறனைக் கணக்கிட்டு, மாற்றுத் திறன் சதவிகிதத்தின் அடிப்படையில் தேசிய அடையாள அட்டை வழங்கப்படுகிறது. மாற்றுத் திறனாளிகளை நேரடியாக ஆய்வு செய்யாமல் மாற்றுத் திறன் அளவைக் கண்டறிய இயலாது. எனவே, மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டையினை இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க இயலாது. ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டையை இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

2015 செப்டம்பர் 29]

44—

நலத் திட்டங்கள்

வினா எண் 17285—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் அனைத்து நலத் திட்டங்களுக்கும் இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அனைத்துத் திட்டங்களுக்கும் இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க ஏதுவாக, மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் தற்போது கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 32 மாவட்டங்களில் மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து மாவட்டங்களிலும், ஒன்றியம் வாரியாக முகாம்கள் நடத்தப்பட்டு, மருத்துவக் குழுமூலம் உடல் நிலையை ஆய்வு செய்து, தகுதிக்கேற்ப மறுவாழ்வு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம் மற்றும் அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களிலும் இணையதளம்மூலம் விண்ணப்பிக்கத் தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர், மாற்றுத் திறனாளிகள் தமது நலத் திட்டங்களுக்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

45—

புதிய அங்கன்வாடி மையம்

வினா எண் 20342—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) காரைக்குடி தொகுதி, செங்கத்தான்குடி ஊராட்சி, மேலத்தோப்பில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, செங்கத்தான்குடி ஊராட்சியில் பாராவயல், மேலத்தோப்பு ஆகிய கிராமங்கள் அமைந்துள்ளன. பாராவயல் அங்கன்வாடி மையம் 2007 முதல் சுய உதவிக் குழு கட்டடத்தில் (இலவசம்) வாடகை இல்லாமல் இயங்கி வருகிறது. மேலத்தோப்பு பயனாளிகள் அருகில் உள்ள பாராவயல் மையத்தில் பயனடைந்து வருவதால், மேலத்தோப்பில் புதிய மையம் அமைக்கத் தேவை எழவில்லை.

46—

ஆதரவற்றோர் காப்பகம்

வினா எண் 21590—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதரவற்றோர் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ஒரு அரசு குழந்தைகள் காப்பகம் செயல்பட்டு வருகிறது. மேலும், தோவாளை மற்றும் முன்சிறை ஆகிய இடங்களில் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படும் இரண்டு முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய

ஒருங்கிணைந்த வளாகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றோடு மாநில அரசு மானியம் பெறும் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படும் ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் புதியதாக ஆதரவற்றோர் காப்பகம் அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை.

47—

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகக் கட்டடம்

வினா எண் 22219—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையிலுள்ள ஊட்டச்சத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் என்பது மத்திய அரசின் திட்டமாகும். மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகங்களுக்கான வாடகைத் தொகை, மத்திய மற்றும் மாநில அரசின் நிதி பங்களிப்பு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுவரும் நிலையில், தேவக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது.

48—

பணிபுரியும் மகளிர் விடுதி

வினா எண் 22640—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) மானாமதுரையில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமூக நலத் துறையின்கீழ் சென்னை-2, கடலூர்-1, புதுக்கோட்டை-1, மதுரை-1, திருச்சி-1, தருமபுரி (ஓசூர்)-1 மற்றும் தூத்துக்குடி-1 ஆகிய 7 மாவட்டங்களில் 8 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது தமிழ்நாட்டில் சிவகங்கை மாவட்டம் உட்பட 13 மாவட்டங்களில் 20 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் தொடங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளன. எனவே, மானாமதுரையில் மற்றொரு அரசு பணிபுரியும் மகளிர் விடுதி அமைக்க அவசியம் எழவில்லை.

49—

புதிய அங்கன்வாடி மையக் கட்டடம்

வினா எண் 26508—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், காளாச்சேரி ஊராட்சி, சோத்தரை கிராமத்தில் அங்கன்வாடி மையம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, காளாச்சேரி ஊராட்சியில் சோத்தரை (குறு) அங்கன்வாடி மையம் 2007 ஆம் ஆண்டு முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

2015 செப்டம்பர் 29]

இம்மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, சிட்டா அடங்கல் பெறப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

50—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 786—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவிடைமருதூர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருவிடைமருதூர் தொகுதியில் புதிதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

51—

கலைக் கல்லூரி

வினா எண் 1266—திரு. கா. ராமச்சந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குன்னூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குன்னூர் தொகுதியில் புதிதாக அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

52—

கலை மற்றும் பொறியியல் கல்லூரி

வினா எண் 2915—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் அரசு கலைக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் அரசு கலைக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

53—

அரசு கலைக் கல்லூரி

வினா எண் 3999—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பூர் தொகுதி, வியாசர்பாடியிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியை முதல்தர கல்லூரியாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பூர் தொகுதி, வியாசர்பாடியிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியை முதல்தர

2015 செப்டம்பர் 29]

கல்லூரியாக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

54—

கலை மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 4117—முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அல்லது பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருவிடைமருதூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அல்லது பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

55—

உட்கட்டமைப்பு வசதிகள்

வினா எண் 9367—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டை அரசு கலைக் கல்லூரியில் மாணவர் பயன்பாட்டுக்காக பெஞ்சுகள், நாற்காலிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்,

7 அரசு கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண் 71, உயர் கல்வி (டி1)த் துறை, நாள் 29–4–2013 வாயிலாக சுரண்டை, காமராசர் அரசு கலைக் கல்லூரிக்கு, மாணவர்கள் அமர்வதற்கு ரூ.83,94,400/– (ரூபாய் எண்பத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து நானூறு மட்டும்) தொகை மதிப்பிலான 800 டெஸ்குகள் மற்றும் பெஞ்சுகள் டான்சி மூலமாக வழங்கப்பட்டுள்ளன.

56—

சுற்றுச் சுவர்

வினா எண் 13482—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை அரசு கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை, அரசு கலைக் கல்லூரியில், 75 மீட்டருக்கு ரூ.50,000/– மதிப்பீட்டில் பாதுகாப்பு கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதிகளுக்கு ஏற்கெனவே சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 75 மீட்டருக்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்கு அக்கல்லூரி முதல்வரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டவுடன், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் அதுகுறித்து அரசால் பரிசீலிக்கப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

57—

பொறியியல் கல்லூரி

வினா எண் 14657—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) ஒசூரில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) ஒசூரில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

58—

கல்லூரி விரிவாக்கம்

வினா எண் 15799—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆண்டிப்பட்டியிலுள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழக கல்லூரியை விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

ஆண்டிப்பட்டியிலுள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழக கல்லூரியை விரிவாக்கம் செய்யும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

59—

பொறியியல் கல்லூரி

வினா எண் 17185—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சோழவந்தான் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

60—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 17407—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர் தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

அந்தியூர் தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

61—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 17425—திரு. ஒ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, மேட்டுப்பாளையம் பகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, மேட்டுப்பாளையம் பகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

63—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 17753—திரு. சு. ரவி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டையில் மகளிர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டையில் மகளிர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

64—

பொறியியல் கல்லூரி

வினா எண் 19021—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண் 62-இதற்கான விளக்கத்தினை பக்கம் 466-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

65—

கலைக் கல்லூரி

வினா எண் 20537—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

67—

பொறியியல் கல்லூரி

வினா எண் 21617—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண் 66-இதற்கான விளக்கத்தினை பக்கம் 466-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

(அ) மானாமதுரை தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

68—

பொறியியல் கல்லூரி

வினா எண் 23904—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், முப்பையூரில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், முப்பையூரில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

69—

பொறியியல் கல்லூரி

வினா எண் 23905—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயலில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயலில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

70—

பொறியியல் கல்லூரி

வினா எண் 23906—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

71—

மகளிர் கல்லூரி

வினா எண் 23931—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 செப்டம்பர் 29]

(அ) சங்கரி தொகுதி, சங்கரியில் மகளிர் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ). சங்கரி தொகுதி, சங்கரியில் மகளிர் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

72—

மகளிர் பொறியியல் கல்லூரி

வினா எண் 23947—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் மகளிர் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் மகளிர் பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

73—

மகளிர் கல்லூரி

வினா எண் 23963—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டியில் அரசு மகளிர் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டியில் அரசு மகளிர் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

74—

கல்வியியல் கல்லூரி

வினா எண் 25522—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் கல்வியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் கல்வியியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

75—

உருது அகாடமி

வினா எண் 26916—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் உருது அகாடமி அமைத்து உறுப்பினர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தமிழ்நாடு அரசு உருது அகாடமி 2000 ஆம் ஆண்டு அரசு ஆணை (நிலை) எண் 73, உயர் கல்வி (கே) துறை, நாள் 8–3–2000-ல் அமைக்கப்பட்டது. அரசு ஆணை (நிலை) எண் 210, உயர் கல்வி (கே2) துறை, நாள் 12–7–2006-ல் தமிழ்நாடு அரசு உருது அகாடமி என்பது தமிழ்நாடு மாநில உருது அகாடமி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாடு மாநில உருது அகாடமி அரசு ஆணை (நிலை) எண் 89, உயர் கல்வி, நாள் 28–2–2011 இல் (Reconstitute) திருத்தி அமைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. தற்போது மீள திருத்தியமைப்பதற்கான கோப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

76—

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 27548—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல்லில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல்லில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 27551—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல்லில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல்லில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

78—

தோல் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 27553—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதியில் நவீனத் தோல் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதியில் நவீனத் தோல் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

79—

கலைக் கல்லூரி

வினா எண் 28356—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

சோழவந்தான் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

சோழவந்தான் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

80—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 6163—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கோனார்ப்பட்டி, இலந்தைக்குளம் மற்றும் மூக்குடி பகுதிகளில் புதிதாக நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கோனார்ப்பட்டி கிராமத்தில் உள்ள 79 குடும்ப அட்டைதாரர்களும் மற்றும் இலந்தைக்குளம் கிராமத்தில் உள்ள 41 குடும்ப அட்டைதாரர்களும் தற்போது கழுவன்குளம் தாய் நியாய விலைக் கடையில் குடிமைப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். கழுவன்குளம் தாய் நியாயவிலைக் கடை தற்போது 397 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றது.

அரசாணைப்படி தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். தொடங்க உத்தேசிக்கும் பகுதி நேரக் கடையில் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மேற்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், தாய்க் கடையான கழுவன்குளம் நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப

அட்டைகளைப் பிரித்து கோனார்ப்பட்டி மற்றும் இலந்தைக்குளம் ஆகிய கிராமங்களில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், முக்குடி கிராமத்தில் 351 குடும்ப அட்டைகளுடன் முழு நேரக் கடை ஏற்கெனவே செயல்பட்டு வருவதால் அங்கு புதிய பகுதி நேரக் கடை அமைக்க வேண்டிய நிலை எழாது.

81—

வங்கிகளை இணைத்தல்

வினா எண் 8023—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை மாநில நிலவள வங்கிகளுடன் இணைத்து குறைந்த வட்டியில் விவசாயிகளுக்குக் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை மாநில நிலவள வங்கிகளுடன் இணைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

82—

கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 8548—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயலிலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதியிலுள்ள சாக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அதன் செயல் எல்லையில் உள்ள புதுவயல் கிராமத்தில் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்நிலையில், புதுவயல் கிராமத்திலுள்ள சாக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

84—

மிளகாய்க் கொள்முதல் நிலையம்

வினா எண் 17205—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் நேரடி மிளகாய்க் கொள்முதல் நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மிளகாய்க் கொள்முதலுக்கான பருவ காலம் (மார்ச் முதல் மே மாதம் வரை) நடப்பு ஆண்டிற்கு முடிந்துவிட்ட நிலையில், தற்சமயம் இளையான்குடியில் மிளகாய்க் கொள்முதல் நிலையம் துவங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை. மேலும், அடுத்த வருடம் மிளகாய் வத்தலின் வரத்து மற்றும் சந்தை நிலவரங்களை அனுசரித்து தேவைக்கேற்ப கொள்முதல் நிலையம் அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

85—

கூட்டுறவு வங்கிக் கட்டடம்

வினா எண் 17302—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண் 83-இதற்கான விளக்கத்தினை பக்கம் 466-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, கெம்மாரம்பாளையம் ஊராட்சிக்கு தனி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, கெம்மாரம்பாளையம் ஊராட்சிக்கு தனி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்க அவசியம் எழவில்லை.

86—

கூட்டுறவு மேலாண்மை நிலையக் கட்டடம்

வினா எண் 18322—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகர்கோவில் மற்றும் சிவகங்கையில் கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கையில் கூட்டுறவு மேலாண்மை நிலையம் ரூ.201.08 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு கூட்டுறவு கல்வி நிதியிலிருந்து இதுவரை ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கு சொந்தமான கட்டடம் கட்ட உத்தேசித்த செலவினத்திற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்து நிருவாக அனுமதி பெற்று, கூட்டுறவு கல்வி நிதியிலிருந்து மானியம் பெற இந்த நிதிக் குழுவின் அனுமதி பெற்ற பின்னரே கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

87—

முழுநேர நியாய விலைக் கடை

வினா எண் 18334—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், வன்னிக்குடி பகுதிநேர நியாய விலைக் கடையை முழு நேரமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள சிறுவேலங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் வன்னிக்குடி முழு நேர நியாய விலைக் கடை 596 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வந்தது. அதில் 209 குடும்ப அட்டைகளைப் பிரித்து பிடிக்குளம் என்ற பகுதி நேர நியாய விலைக் கடையும், 232 குடும்ப அட்டைகளைப் பிரித்து முடிதாளை பகுதி நேர நியாய விலைக் கடையும் செயல்பட்டு வருகிறது. தற்போது தாய்க் கடையான வன்னிக்குடி 166 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருவதால், வன்னிக்குடி தாய் நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றுவதற்கு அரசு வகுத்தமைத்த நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் வன்னிக்குடி பகுதிநேர நியாய விலைக் கடையை முழு நேர நியாய விலைக் கடையாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

88—

தானியக் கிடங்குகள்

வினா எண் 19721—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கூடுதலாக பல்லடம் பொங்கரன் பகுதியில் தானியக் கிடங்குகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் மற்றும் பொங்கலூர் பகுதிகளில் முறையே 12 மற்றும் 13 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம்:

பல்லடம் வட்டாரம்:

கே.2070 பூமலூர், கே.2055 டி. பள்ளபாளையம், கே.792 கரைப்புதூர் கணபதிபாளையம், கே.2022 கே. அய்யம்பாளையம், கே.1755 கவுண்டம்பாளையம், கே.1569 பல்லடம் உழவர் பணி கூட்டுறவுச் சங்கம், கே.2016 கோடங்கிபாளையம், கே.6636 பருவாய், கே.426 செம்மிபாளையம், கே.1622 அனுப்பப்பட்டி, கே.1603 புளியம்பட்டி மற்றும் கரடிவாவி. இதில், கரடிவாவி சங்கத்தில் மட்டும் போதிய இடவசதி இல்லாததால் கிடங்கு கட்ட இயலவில்லை. இதர 11 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.

பொங்கலூர் வட்டாரம்:

கே. 1742 கெங்கநாயக்கன்பாளையம், 6179 கழுவேரி பாளையம், கே.1389 கொடுவாய், கே.1571 கரட்டுப்பாளையம், கே.255 கண்டியன் கோவில், கே.1759 வேலம்பட்டி, கே.3886 காட்டுமாதப்பூர், கே.553 துத்தாரிபாளையம், கே.1400 எலவந்தி, கே.4081 மந்திரிபாளையம், கே.431 தொட்டம்பட்டி, பொங்கலூர் மற்றும் வி. கள்ளிபாளையம்.

இதில், பொங்கலூர் மற்றும் வி. கள்ளிபாளையம் ஆகிய இரு சங்கங்களில் மட்டும் போதிய இடவசதி இல்லாததால் கிடங்கு கட்ட இயலவில்லை. இதர 11 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.

2015 செப்டம்பர் 29]

89—

கூட்டுறவு பட்டயப் பயிற்சி மேலாண்மைக் கல்லூரி

வினா எண் 21685—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல், தும்பு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கட்டடங்களை சீர்செய்து கூட்டுறவு பட்டயப் பயிற்சி மேலாண்மைக் கல்லூரியை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்ட நாகர்கோவில் கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கு சொந்தமாக கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் சூழ்நிலையில், குளச்சலில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்திற்கு சொந்தமான கட்டடத்தை சீர்செய்து பட்டயப் பயிற்சி நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

90—

கூட்டுறவு பயிற்சிப் பள்ளி

வினா எண் 22157—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டியில் கூட்டுறவு பயிற்சிப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ளவர்கள் எந்த பயிற்சி நிலையத்திலும் சேர்ந்து பயிற்சி பெறலாம் என்பதாலும்,

திருவாரூர் மாவட்டத்தில் ஏற்கெனவே ஒரு கூட்டுறவு பயிற்சி நிலையம் செயல்பட்டு வருவதாலும், திருத்துறைப்பூண்டியில் புதியதாக கூட்டுறவு பயிற்சி நிலையம் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

91—

உர உற்பத்தியை அதிகரித்தல்

வினா எண் 25201—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பாமணி உர ஆலை உற்பத்தியை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாமணி உர ஆலை மன்னார்குடியில் தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 80 டன்கள் பாமணி 17.17.17 என்ற குருணை வடிவிலான கலப்புரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த நிலையில் ரூ.34,50,383 மதிப்பிலான தானியங்கி எடையிட்டு மூட்டையிடும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் தற்போதுள்ள உற்பத்தியினை நாளொன்றுக்கு 100 மெ. டன்கள் என்ற அளவிற்கு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பாமணி உர ஆலையினை விரிவாக்கம் செய்யும்போது, மூன்று முறை பிரிவுகளில் ஆலையை இயக்கும்போது உற்பத்தியை மேலும் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

92—

பகுதிநேர நியாய விலைக் கடை கட்டடம்

வினா எண் 27839—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், தேவிகாபுரம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், மாதனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் தேவிகாபுரம் பகுதி நேர நியாய விலைக் கடை 247 குடும்ப அட்டைகளுடன் தேவிகாபுரத்தில் அரசு நிபந்தனையின்படி பொதுமக்களால் வழங்கப்பட்ட இலவசக் கட்டடத்தில் வாடகையில்லாமல் செயல்பட்டு வருகிறது. எனவே, தேவிகாபுரத்தில் பகுதி நேர நியாய விலைக் கடைக்கு தனியாக கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

93—

கூட்டுறவுப் பயிற்சி மையம்

வினா எண் 28361—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் கூட்டுறவுப் பயிற்சி மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது மானாமதுரையில் கூட்டுறவுப் பயிற்சி மையம் தொடங்கும் திட்டம் ஏதும் இல்லை.

94—

உணவு சேமிப்புக் கிடங்கு

வினா எண் 1156—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயல் பேரூராட்சியில் உணவு சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடியில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு சொந்தமான 3,500 மெட்ரிக் டன் கொள்ளளவில் விஞ்ஞான முறைப்படி கட்டப்பட்ட சேமிப்புக் கிடங்கு 1985-1986 முதல் இயங்கி வருகிறது. இவை புதுவயல் பேரூராட்சிக்கு வெகு அருகாமையில் சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதுதவிர, தற்போது காரைக்குடியில் 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் புதிதாக கட்டப்பட்டுள்ள சேமிப்புக் கிடங்கு 15—4—2013 முதல் இயங்கி வருகின்றது. இக்கிடங்கு இந்திய உணவுக் கழகத்தின் (under PEG 2008 scheme) பயன்பாட்டிற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் பொது விநியோகத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, காரைக்குடியில் உள்ள புதுவயல் பேரூராட்சியில் உணவு சேமிப்புக் கிடங்கு கட்ட தேவை ஏதும் எழவில்லை.

95—

நெல் கொள்முதல் நிலையம்

வினா எண் 1447—திரு. சு. ரவி: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, தக்கோலம் பேரூராட்சியிலுள்ள நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தக்கோலம் பேரூராட்சியில்

சொந்தக் கட்டடம் கட்ட பொருத்தமான இடம் இதுவரை கிடைக்கப்பெறாததால் வாடகைக் கட்டடத்தில் 10-10-2011 முதல் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கி வருகிறது.

96—

நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

வினா எண் 1448—திரு. சு. ரவி: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, சயினாபுரம் ஊராட்சியிலுள்ள நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, 125 சயினாபுரம் ஊராட்சியில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு திரு. மாணிக்கம் என்பவரால் இலவசமாக நிலம் வழங்கப்பட்டுள்ளது.

2. இலவசமாக பெறப்பட்டுள்ள மேற்படி நிலத்தில் நடப்பு 2014-2015 ஆம் நிதியாண்டில் நபார்டு நிதியுடன் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் கட்டுமானப் பணி விரைவில் துவங்கப்படவுள்ளது.

97—

புதிய பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 2907—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, கணவாயூர் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, கணவாயூர் கிராமத்தைச் சேர்ந்த 52 குடும்ப அட்டைகள், 392 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் சூளைகுண்டா தாய்க் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்தாய் கடையிலிருந்து குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு பட்டிப்பாறை மற்றும் சித்தலகுண்டா ஆகிய ஊர்களில் பகுதி நேர நியாயவிலைக் கடைகள் செயல்படுகின்றன. எனவே, தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகளின்படி கணவாயூர் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

98—

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 2909—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, தொட்டேகவுனப்பள்ளி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டி.கே 80 பேரிகை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டுப்பாட்டில் 381 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் கும்பளம் தாய் நியாய விலைக் கடையுடன் தொட்டேகவுனப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த 106 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட தாய்

2015 செப்டம்பர் 29]

நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து ராமன்தொட்டி மற்றும் பெத்தகுட்டி கிராமங்களில் ஏற்கெனவே இரண்டு புதிய பகுதிநேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டுவருவதால் தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகளின்படி. தொட்டேகவுனப்பள்ளி கிராமத்தில் புதிய பகுதி நேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

99—

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 2911—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, பொன்னல்நத்தம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதியில் உள்ள இம்மிடிநாய்கனபள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டுப்பாட்டில் 522 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் கும்மிடிநாய்கனபள்ளி தாய் நியாய விலைக் கடையுடன் பொன்னல்நத்தம் கிராமத்தைச் சேர்ந்த குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே, அத்தாய் நியாய விலைக் கடையிலிருந்து நான்கு பகுதிநேரக் கடைகள் பிரிக்கப்பட்டு செயல்பட்டுவரும் நிலையில், தற்போது உள்ள அரசு நிபந்தனைகளின்படி பொன்னல்நத்தம் கிராமத்தில் 5-வது புதிய பகுதிநேரக் கடை துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

100—

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 3682—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு கருங்குளம் ஊராட்சி, பெரிய குளத்தில் நியாய விலை கிளைக் கடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தாலுகாவிலுள்ள பணகுடி கூட்டுறவுப் பண்டகச் சாலையால் சங்கனாபுரம் முழுநேர நியாய விலைக் கடை 638 குடும்ப அட்டைகளுடன் நடத்தப்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடை அமைக்கக் கோரும் பெரியகுளம் கிராமத்தில் 95 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பெரியகுளம் கிராமம் தாய்க் கடையிலிருந்து பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் 2.00 கி.மீ. இருப்பினும், அரசு நிபந்தனைகளின்படி பகுதிநேரக் கடை அமைக்க 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை நிறைவு செய்யாததால் பெரியகுளத்தில் நியாய விலை கிளைக் கடை அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

101—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 4263—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவிடைமருதூர் தொகுதி, கோவிந்தபுரம் ஊராட்சி, கோவிந்தபுரத்தில் தனி நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், மருத்துவக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டுப்பாட்டில் 1,334 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் ஆடுதுறை 1 நியாய விலைக் கடையிலிருநது 720 குடும்ப அட்டைகளைப் பிரித்து, கோவிந்தபுரம் பகுதியில் புதிய முழு நேரக் கடை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

105—

சேமிப்புக் கிடங்கைப் புதுப்பித்தல்

வினா எண் 6830—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு, திருவெண்காடு பகுதிகளிலுள்ள சேமிப்புக் கிடங்கைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில், காரைமேடு மற்றும் திருவெண்காடு ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய நிறுவனங்களுக்குச் சொந்தமான கிடங்குகள் ஏதும் இல்லை. எனவே, சீர்காழி தொகுதி, காரைமேடு, திருவெண்காடு பகுதிகளில் சேமிப்புக் கிடங்கு புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

106—

மின்னணு எடை எந்திரம்

வினா எண் 8346—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நியாய விலைக் கடைகளில் எலெக்ட்ரானிக் தராசுகளை முறையாக செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண்கள் 102,103,104-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு சரியான எடையில் விநியோகம் செய்வதை உறுதி செய்யும்வகையில் மின்னணு எடை இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மின்னணு எடை இயந்திரங்கள் பழுதடையும் நேர்வுகளில், மாற்றாக பயன்படுத்தும்வகையில் மாற்று மின்னணு எடை இயந்திரங்கள் இருப்பு வைக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், மின்னணு எடை இயந்திரங்கள் முறையாக செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை ஆய்வு அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. நியாய விலைக் கடைகளில் மின்னணு எடை இயந்திரங்கள் முறையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

107—

மின்கல மகிழுந்து

வினா எண் 9140—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலுக்கு மின்கல மகிழுந்து (Battery Car) வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை நகர், வட்டம் மற்றும் மாவட்டம், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் 4–4–2012 முதல் இத்திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின்

நலனைக் கருத்தில் கொண்டு முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு மின்கல மகிழுந்து பயன்பாட்டில் உள்ளது.

108—

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 13101—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அந்தியூர் அண்ணாநகரில் பகுதி நேர நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டத்தில் செயல்பட்டுவரும் K1735 கணபதிபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், 579 குடும்ப அட்டைகளுடன் அந்தியூர் நியாய விலைக் கடையினை நடத்தி வருகிறது.

அண்ணாநகர் பகுதியில் 201 குடும்ப அட்டைகள் உள்ளபோதிலும், அந்தியூர் கிராமத்திற்கும், அண்ணாநகர் பகுதிக்கும் இடையே 1 கி.மீ. தூரமே உள்ளது. மேலும், அண்ணா நகர் பகுதியில் உள்ள 201 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டால், தாய்க் கடையில் 378 குடும்ப அட்டைகளே இருக்கும்.

109—

புதிய பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 13103—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆண்டிபகவுண்டனூர் ஊராட்சி, பெரிசனம்பட்டி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கே 1104 எல்லையமுத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் கிளுவன்காட்டூர் நியாய விலைக் கடையில் 1124 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளதாகவும், இதில் 331 குடும்ப அட்டைகளைப் பிரித்து உரல்பட்டி என்ற இடத்தில் முதல் பகுதி நேர அங்காடியும், 168 குடும்ப அட்டைகளைப் பிரித்து ஜக்கம்பாளையம் பகுதியில் இரண்டாவது பகுதி நேர அங்காடியும் செயல்பட்டு வருவதாகவும், இதிலிருந்து மேலும் 151 குடும்ப அட்டைகளைப் பிரித்து பெரிசனம்பட்டியில் மூன்றாவது புதிய பகுதி நேர அங்காடி அமைக்க அனுமதி கோரி வரப்பெற்ற முன்மொழிவினை பரிசீலனை செய்ததில், தாய்க் கடையான கிளுவன்காட்டூர் அங்காடியானது வாரத்தில் திங்கள், செவ்வாய் மற்றும் புதன் ஆகிய மூன்று நாட்களிலும், உரல்பட்டி முதல் பகுதிநேர அங்காடி வெள்ளி மற்றும் சனி ஆகிய இரண்டு நாட்களிலும், ஜக்கம்பாளையம் இரண்டாவது பகுதி நேர அங்காடியானது வியாழக்கிழமை ஒரு நாளும் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் பெரிசனம்பட்டியில் பகுதிநேர அங்காடி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

110—

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 13109—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், நல்லண்ணகவுண்டன்புதூர், குளத்துப்பாளையம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், நல்லண்ணகவுண்டன்புதூர் முழு நேர நியாய விலைக் கடையிலிருந்து 210 குடும்ப அட்டைகளைப் பிரித்து குளத்துப்பாளையம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

111—

தானியக் களம்

வினா எண் 13626—திரு. சு. ரவி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தணிக்கை போளூர் கிராமத்திலுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடமும், தானியக் களமும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, தணிக்கை போளூர் ஊராட்சியில் கடந்த இரண்டு வருடங்களாக அப்பகுதியில் நேரடி நெல் கொள்முதல் ஏதும் செய்யப்படவில்லை. எனவே, அப்பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

113—

புதிய பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 14415—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண்கள் 112-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

[2015 செப்டம்பர் 29

குளச்சல் தொகுதி, உத்தாபுரம் பேரூராட்சி, பிரண்ட்ஸ் காலனியில் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, உத்தாபுரம் பேரூராட்சியில் கல்குளம், விளவங்கோடு தாலுகா கூட்டுறவு விற்பனை சங்கத்தால் கோடிமுனை நியாய விலைக் கடை 1326 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் எர்சனாபள்ளி மற்றும் பிரண்ட்ஸ் காலனி பகுதிகளில் முறையே 90 மற்றும் 130 ஆக 220 குடும்ப அட்டைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், தாய்க் கடையிலிருந்து இவ்விரு பகுதிகளுக்கும் இடைப்பட்ட தூரம் முறையே 1.5 கி.மீ. மற்றும் 1.25 கி.மீ. உள்ளது. எனவே, இவ்விரு இடங்களையும் சேர்த்து புதிய பகுதி நேர நியாய விலைக் கடை பிரண்ட்ஸ் காலனி பகுதியில் துவக்க நிபந்தனைகள் பூர்த்தியாகியிருப்பினும் இப்பகுதிகளில் இலவசக் கட்டடம் வழங்க எவரும் முன்வரவில்லை. எனவே, தற்போது பிரண்ட்ஸ் காலனி பகுதிகளில் பகுதி நேரக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

114—

நெல் கொள்முதல் நிலையம்

வினா எண் 14964—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் துவக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சிக்கு அருகிலுள்ள திருவம்பட்டு, ஆலம்பூண்டி ஆகிய இரு

2015 செப்டம்பர் 29]

கிராமங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவரது அனுமதியுடன் 5-2-2015 அன்று நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகின்றன.

115—

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 18369—திரு. சு. ரவி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருங்களத்தூர் முஸ்லீம் நகருக்கு தனியாக ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட பெருங்களத்தூர் ஊராட்சியில், வளர்புரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் பெருங்களத்தூரில் 494 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடையைச் செயல்படுத்தி வருகிறது. இந்நியாய விலைக் கடையைத் தாய்க் கடையாகக் கொண்டு 255 குடும்ப அட்டைகளுடன், இந்திரா நகர் பகுதியில் முதல் பகுதி நேர நியாய விலைக் கடையும், 113 குடும்ப அட்டைகளுடன் எம்.என். கண்டிகை இரண்டாம் பகுதி நேர நியாய விலைக் கடையும் செயல்பட்டு வருகிறது. இந்திரா நகர் முதல் பகுதி நேர நியாய விலைக் கடையில் முஸ்லீம் நகர் பகுதியைச் சார்ந்த குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

முஸ்லீம் நகர் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்குத் தேவையான குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இல்லை. ஏற்கெனவே பெருங்களத்தூர் தாய்க் கடை இரண்டு பகுதி நேர நியாய விலைக் கடைகளை செயல்படுத்தி வருவதாலும், நியாய விலைக் கடை அமைக்க அரசு வழிகாட்டு நெறிகளில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் நிறைவு செய்யப்படாத

நிலையிலும், பெருங்களத்தூர் முஸ்லீம் நகருக்கு தனியாக பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

117—

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 19588—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆத்தூர் ஊராட்சி, பிள்ளையார்குப்பம் நியாய விலைக் கடையைப் பிரித்து பரமநத்தம் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆத்தூர் ஊராட்சியில் களமருதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 518 குடும்ப அட்டைகளுடன் ஆத்தூர் நியாய விலைக் கடையினை நடத்தி வருகிறது. ஆத்தூர் நியாய விலைக் கடையின் பகுதி நேரக் கடையாக பிள்ளையார்குப்பம் நியாய விலைக் கடை 601 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் 85 குடும்ப அட்டைகளையுடைய பரமநத்தம் கிராமமும் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விரு பகுதிகளுக்கும் இடைப்பட்ட தூரம் 2 கி.மீ. உள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள பகுதி நேரக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகவில்லை. எனவே, பரமநத்தம் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

118—

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 20276—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண்கள் 116-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், பூசலாக்குடியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், பூசலாக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் பூசலாக்குடியில் முழுநேர நியாய விலைக் கடை 427 குடும்ப அட்டைகளுடன் 1978 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. பூசலாக்குடியில் ஏற்கெனவே முழு நேர நியாய விலைக் கடை செயல்பட்டுவரும் நிலையில் இப்பகுதியில் மீண்டும் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கும் கேள்வி எழவில்லை.

119—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 20475—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோட்டூர் ஒன்றியம், கோட்டூரில் அரசு சேமிப்புக் கிடங்கு கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான விஞ்ஞான முறைப்படி கட்டப்பட்ட கிடங்குகள் திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூரில் 9,000 மெட்ரிக் டன் மற்றும் நாஞ்சிக்கோட்டையில் 19,800 மெட்ரிக் டன் கொள்ளளவில் சேமிப்புக் கிடங்குகள் இயங்கி வருகின்றன. இவை திருத்துறைப்பூண்டி, கோட்டூர் ஒன்றியம் அருகாமையில் உள்ளது. தற்சமயம் சேமிப்புக் கிடங்கின் பயனீட்டை பயன்படுத்தக்கூடிய தனியார், அரசு மற்றும் கூட்டுறவு சரக்கு வைப்பாளர்கள் மிகவும்

குறைவாக இருப்பதால், கோட்டூர் ஒன்றியம், கோட்டூரில் அரசு சேமிப்புக் கிடங்கினை அமைக்க ஏதுவாக இல்லை.

120—

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 20861—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, நுணாக்காடு ஊராட்சி, தென்காசியில் பகுதி நேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் எழிலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நுணாக்காடு அங்காடி 574 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்தத் தாய்க் கடையுடன் 80 குடும்ப அட்டைகளையுடைய தென்காசி பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது. தாய்க் கடைக்கும் உத்தேசித்த பகுதி நேரக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ. உள்ளது. தாய்க் கடையிலிருந்து உத்தேசித்த பகுதி நேரக் கடை திறக்கக் கோரும் இடத்திலுள்ள குடும்ப அட்டைகளைப் பிரித்தால், தாய்க் கடையில் 494 குடும்ப அட்டைகளே எஞ்சியிருக்கும். மேலும், அரசு வகுத்தமைத்த நெறிமுறைகளின்படி பகுதி நேரக் கடை அமைக்க இலவச கட்டடம் வழங்க எவரும் முன்வரவில்லை. மேலும், குடும்ப அட்டைகள் பிரித்தப் பின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் மற்றும் பகுதி நேரக் கடை திறக்க 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நெறிமுறைகள் பூர்த்தியாகவில்லை. எனவே, தென்காசியில் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

121—

நெல் கொள்முதல் நிலையம்

வினா எண் 21023—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரீப் பருவம் 2014–2015-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் திட்டுவிளை, தாழைக்குடி, செண்பகராமன்புதூர், நாகர்கோவில், மாடத்தட்டுவிளை, பறக்கை, குருந்தங்கோடு மற்றும் தேரூர் ஆகிய இடங்களில் 12–2–2015 முதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

122—

நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

வினா எண் 21072—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, மேலமருதூர் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, மேலமருதூர் ஊராட்சியில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குக் கட்டடம் கட்டப்பட்டு, சொந்தக் கட்டடத்தில் தொடர்ந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

123—

பட்டா வழங்குதல்

வினா எண் 21612—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

திருத்துறைப்பூண்டி தொகுதி, ஸ்ரீபவஔஷதீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் குடியிருப்போருக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருக்கோயில் நிலத்தில் குடியிருப்போருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டத்தில் வழிவகை இல்லை. அதன்படி திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு ஸ்ரீபவஔஷதீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் குடியிருப்போருக்கு தற்போது பட்டா வழங்க இயலாது.

124—

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 21680—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, முளகுமூடு பேரூராட்சி, கோடியூரிலுள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து மல்லன்விளையில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, முளகுமூடு பேரூராட்சி, கோடியூரிலுள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து மல்லன்விளையில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடையை துவக்குவதற்கு அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, உத்தேச பகுதி நேரக் கடைக்கும், தாய்க் கடைக்கும் இடையே குறைந்தது 1½ கி.மீ. தூரம் இருக்க வேண்டும். பகுதி நேரக் கடை அமைக்க இலவச கட்டட வசதி செய்து தர வேண்டும் போன்ற நிபந்தனைகள் நிறைவு செய்யப்படாத நிலையில் மல்லன்விளையில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

விடுப்பட்ட வினா எண்கள் 125-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

126—

நெல் கொள்முதல் நிலையம்

வினா எண் 21889—திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, கல்சார், கங்கைகொண்டான் பகுதிகளில் நிரந்தர நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி தொகுதிக்குட்பட்ட கல்சார், கங்கைகொண்டான் பகுதிகளில் பருவகால பயிர்கள் விவசாயம் செய்யப்படுவதால், அப்பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் நிரந்தரமாக அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

128—

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 22121—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், அனுமந்தபுரம் ஊராட்சியில் பகுதி நேர நியாய விலைக் கடையைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், அனுமந்தபுரத்தில் ஏற்கெனவே ஒரு முழு நேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதால், அப்பகுதியில் மீண்டும் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

விடுப்பட்ட வினா எண்கள் 125-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

129—

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 22122—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், காளாச்சேரி ஊராட்சி, காளாச்சேரி மேலத் தெருவில் பகுதி நேர நியாய விலைக் கடையைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், காளாச்சேரி ஊராட்சியில், நீடாமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 551 குடும்ப அட்டைகளுடன் காளாச்சேரி நியாய விலைக் கடையினை நடத்தி வருகிறது. இக்கடையுடன் காளாச்சேரி, நடுத் தெரு, வடக்குத் தெரு, தெற்குத் தெரு மற்றும் தோட்டத் தெரு பகுதிகளை உள்ளடக்கிய 276 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. காளாச்சேரி தாய்க் கடைக்கும் உத்தேச பகுதி நேரக் கடைக்கும் இடையே 0.75 கி.மீ. தூரம் உள்ளது. குடும்ப அட்டைகளை பிரித்தப் பின் தாய்க் கடையில் 275 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். உத்தேச பகுதி நேரக் கடைக்கு குடும்ப அட்டைகளைப் பிரித்தப்பின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். தாய்க் கடைக்கும், பகுதி நேரக் கடைக்கும் இடையே குறைந்தது 1½ கி. மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், காளாச்சேரி மேலத் தெருவில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

130—

நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

வினா எண் 22144—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், இராயநல்லூர் மற்றும் குன்னூர் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதிக்குட்பட்ட இராயநல்லூர் மற்றும் குன்னூர் ஆகிய இடங்களில் தற்காலிக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேற்படி பகுதிகளில் போதிய இடம் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அங்கு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டப்படும்.

131—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 22155—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான சேமிப்புக் கிடங்கு வளாகத்தில் திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி வட்டக் கிடங்கு கீழப்பாண்டி என்னும் இடத்தில் 1850 மெடன் கொள்ளளவில் இயங்கி வருகிறது. மேற்படி இடத்திலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவிலுள்ள முத்துப்பேட்டைக்குத் தேவையான பொது விநியோகத் திட்டப் பொருள்கள் யாவும் திருத்துறைப்பூண்டி வட்டக் கிடங்கிலிருந்து நகர்வு செய்யப்படுகின்றன. எனவே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கான கிடங்கு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2015 செப்டம்பர் 29

132—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 22156—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை ஊராட்சியில் சேமிப்புக் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு சொந்தமான விஞ்ஞான முறைப்படி கட்டப்பட்ட சேமிப்புக் கிடங்குகள் திருவாரூரில் 9,000 மெ. டன் மற்றும் நாஞ்சிக்கோட்டையில் 19,800 மெ.டன் கொள்ளளவில் இயங்கி வருகின்றன. இவை திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை ஊராட்சிக்கு அருகில் உள்ளது. இது தவிர, திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான 11,000 மெ. டன் கொள்ளளவு உள்ள விஞ்ஞான முறைப்படி கட்டப்பட்ட கிடங்குகள் உள்ளன. தற்சமயம் சேமிப்புக் கிடங்கின் பயனீட்டை பயன்படுத்தக்கூடிய தனியார், அரசு (ம) கூட்டுறவு சரக்கு வைப்பாளர்கள் மிகவும் குறைவாக இருப்பதால், கொருக்கை ஊராட்சியில் சேமிப்புக் கிடங்கினை அமைக்க ஏதுவாக இல்லை.

133—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 25828—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தேவண்ணகவுண்டனூர் கிராமம், சரிபாறைகாட்டில் புதிய நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, எடப்பாடி வட்டம் பகுதியில் எஸ். 715 சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச் சாலையால் நடத்தப்பட்டுவரும் ஜி.ஓ.019 தேவண்ணகவுண்டனூர் முழுநேர நியாய விலைக் கடை 811 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் 110 குடும்ப அட்டைகளையுடைய சரிபாறைகாடு பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், தாய்க் கடைக்கும், உத்தேசித்த பகுதி நேரக் கடைக் கோரும் இடத்திற்கும் ½ கி.மீ. தூரம் உள்ளது. தற்பொழுது அரசால் வகுத்தமைத்த நெறிமுறைகளின்படி பகுதி நேரக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் மற்றும் தாய்க் கடைக்கும், புதியதாகத் தொடங்கப்பட உள்ள பகுதி நேரக் கடைக்கும் உள்ள தூரம் 1½ கி.மீ. இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், சரிபாறைகாடு பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

134—

தனி நியாய விலைக் கடை

வினா எண் 25831—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி, மகுடஞ்சாவடி நியாய விலைக் கடையைப் பிரித்து காடையாம்பட்டியில் தனி நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி, காடையாம்பட்டியில் 402 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய

விலைக் கடை செயல்பட்டு வருகிறது. எனவே, அங்கு மீண்டும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

135—

நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

வினா எண் 26709—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, மேலத்திருப்பாலக்குடி ஊராட்சியிலுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மேலத்திருப்பாலக்குடி ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இடம் கிடைக்கப்பெற்றவுடன் அவ்விடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

136—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 27160—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) களக்காடு ஒன்றியம், தேவநல்லூர் ஊராட்சி, ஆதிச்சபேரி மற்றும் கீழக்காடுவெட்டி ஊராட்சி, வடக்கு அப்பர்குளம் ஆகிய

2015 செப்டம்பர் 29]

கிராமங்களில் நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) களக்காடு ஒன்றியம், ஆதிச்சபேரி கிராமத்தில், கீழக்காடுவெட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் ஆதிச்சபேரி முழு நேர நியாய விலைக் கடை நடத்தப்பட்டு வருகிறது. இதில் 169 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஆதிச்சபேரி கிராமத்தில் முழு நேர நியாய விலைக் கடை 169 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவரும் நிலையில் புதிதாக நியாய விலைக் கடை அமைக்கும் நிலை எழவில்லை.

கீழக்காடுவெட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் கீழக்காடுவெட்டி முழு நேர நியாய விலைக் கடை நடத்தப்பட்டு வருகிறது. இக்கடையின் பகுதி நேரக் கடையாக அப்பர்குளம் பகுதி நேரக் கடை நடத்தப்பட்டு வருகிறது. இப்பகுதி நேரக் கடையில் 195 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. வடக்கு அப்பர்குளம் பகுதியில் ஏற்கெனவே பகுதி நேர நியாய விலைக் கடை செயல்பட்டு வரும் நிலையில், புதிய நியாய விலைக் கடை அமைக்கும் நிலை எழவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

137—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 27161—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், மேலத்திடியூர் ஊராட்சி, நடுத்திடியூர் மற்றும் அரியகுளம் ஊராட்சி, உத்தமபாண்டிகுளம் ஆகிய கிராமங்களில் நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், மேலத்திடியூர் ஊராட்சி பகுதியான நடுத்திடியூரில் 100 குடும்ப அட்டைகள், மேலத்திடியூரில் 134 குடும்ப அட்டைகள் ஆக மொத்தம் 234 குடும்ப அட்டைகளுடன் மேலத்திடியூர் கிராமத்தில் முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. அரியகுளம் ஊராட்சி, உத்தமபாண்டிகுளத்தில் ஏற்கெனவே நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதாலும், நடுத்திடியூர் மற்றும் உத்தமபாண்டிகுளம் ஆகிய பகுதிகளில் தனியே நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

138—

முழு நேர நியாய விலைக் கடை

வினா எண் 27494—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதி பகுதி நேரக் கடையை முழு நேர நியாய விலைக் கடையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதி பகுதியில் உள்ள கணக்கன்காடு தாய்க் கடை, கோபால்பட்டி முதல் பகுதி நேரக் கடை மற்றும் கடுக்காய்காடு இரண்டாவது பகுதி நேரக் கடைகளுடன் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே, வெட்டன்விடுதி பகுதியில் இரு பகுதிநேர நியாய விலைக் கடைகள் செயல்படும் நிலையில், வெட்டன்விடுதி பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

2015 செப்டம்பர் 29]

139—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 27908—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, தேனி ஒன்றியம், ஊஞ்சாம்பட்டி, தென்றல் நகர் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு நெறிமுறைகளின்படி ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை துவங்குவதற்கு குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய்க் கடைக்கும்; பகுதி நேரக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1½ கிலோ மீட்டர் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் எதும் நிறைவு செய்யாத நிலையில், பெரியகுளம் தொகுதி, தேனி ஒன்றியம், ஊஞ்சாம்பட்டி, தென்றல் நகர் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

140—

கிரானைட் வளாகம்

வினா எண் 2714—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி பகுதியில் கிரானைட் வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சாத்தியக்கூறுகள் இல்லை.

142—

கரும்பு வெட்டும் கூலி

வினா எண் 4533—திரு. துரை. மணிவேல்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலை நிருவாகமே கரும்பு வெட்டும் இயந்திரம் வழங்கவும், வெட்டுக் கூலியை நிருவாகமே ஏற்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் சில தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பு அறுவடை இயந்திரம் கொண்டு அறுவடை செய்து வருகின்றன. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் கரும்பு அறுவடை இயந்திரம் வாங்குவதற்கு தனியார் தொழில்முனைவோரைக் கண்டறிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கரும்பு வெட்டுக் கூலியைப் பொறுத்தவரையில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் கரும்பு நிலுவைத் தொகையை வழங்குவதில் கடும் நிதி நெருக்கடியை சந்திப்பதால் வெட்டுக் கூலியை ஆலைகளே ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் உள்ளன.

144—

கரும்பு வெட்டும் கூலி

வினா எண் 8315—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு வெட்டும் கூலியை ஆலை நிருவாகமே ஏற்றுக் கொள்ள அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுபட்ட வினா எண்கள் 141,143-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரும்பை வயலிலிருந்து ஆலைக்கு எடுத்துவரும் போக்குவரத்து வாகன வாடகை முழுவதையும் 2006–2007 அரவைப் பருவம் முதல் ஆலை நிருவாகமே ஏற்று வருவதாலும், தமிழ்நாட்டில் மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல், மாநில அரசின் பரிந்துரை விலை வழங்கப்படுவதாலும், சர்க்கரை உற்பத்திச் செலவைவிட வெளிச் சந்தையில் சர்க்கரை விற்பனை விலை குறைவாகவே உள்ளதாலும், ஆலைகளால் வாங்கப்பட்டுள்ள கடன்களின்மீது ஏற்பட்டுள்ள வட்டிச் சுமையினால், கூடுதல் நிதிச் சுமை ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் கரும்பின் வெட்டுக் கூலியை ஆலை நிருவாகம் ஏற்றுக்கொண்டால் மேலும் ஆலைகளுக்கு மிகுந்த நிதி நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதால் வெட்டுக் கூலியை ஆலை நிருவாகம் ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் உள்ளது.

145—

கிரானைட் பூங்கா

வினா எண் 14437—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி பகுதியில் கிரானைட் பூங்கா அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது சாத்தியக்கூறுகள் இல்லை.

146—

சிப்காட் தொழிற்சாலை

வினா எண் 14496—திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராஜபாளையம் தொகுதியில் சிப்காட் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகர் மற்றும் சாத்தூர் வட்டங்களில் அடங்கிய துலுக்கப்பட்டி, இ.குமாரலிங்கபுரம், இ. முத்துலிங்கபுரம் மற்றும் மேட்டமலை கிராமங்களில் 3,460 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பூங்கா ஒன்றை ஏற்படுத்த சிப்காட் நிறுவனம் தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, மேற்படி தொழில் பூங்கா இராஜபாளையம் தொகுதி உட்பட இம்மாவட்டம் முழுவதற்குமான தொழில் தேவையை நிவர்த்தி செய்வதாக இருக்கும்.

147—

போக்குவரத்துர் பணிமனை

வினா எண் 19590—திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை மாநகரிலுள்ள பொன்மேனி போக்குவரத்து பணிமனையில் தரைதளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்., பொன்மேனி கிளை 3.15 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு 7–3–1994 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி பணிமனையில் தரைதளம் அமைக்கும் பணி மேற்கொள்ள 2011–2012 ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பில் ரூ.19 இலட்சம் மதிப்பீடு செய்து நிருவாக நிதிக் குழும ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தரைதளம் அமைக்கும் பணிக்கு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியினைப் பெற்று இப்பணியினை

மேற்கொள்ள மதுரை மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் நிதி கோரப்பட்டுள்ளது. விரைவில் நிதி பெற்று பகுதி பகுதியாக தரை தளம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

148—

புதிய பேருந்து

வினா எண் 18989—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டையிலிருந்து திருப்பதிக்கு புதிய பேருந்தை இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இவ்வழித்தடத்தில் தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கிடையே மேற்கொள்ளப்படும் வழித்தட ஒப்பந்தங்களின் அடிப்படையில் மட்டுமே பேருந்து இயக்கிட இயலும். இரு மாநிலங்களுக்கிடையே வழித்தட ஒப்பந்தக் கூட்டம் நடைபெறும்போது இத்தடத்தை ஒப்பந்தத்தில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

149—

குளிர்சாதனப் பேருந்து

வினா எண் 21089—திரு. வே. குணசீலன்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியிலிருந்து மேல்மருவத்தூர் வழியாக சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வந்தவாசியிலிருந்து மேல்மருவத்தூர் வழியாக சென்னைக்கு சாதாரண பேருந்துகளே இயக்கப்படுகின்றன. தற்போது இத்தகைய பேருந்துகளே கொள்முதல் செய்யப்படுகின்றன. மேலும், 14 பேருந்துகள்மூலம் 48 நடைகள் வந்தவாசியிலிருந்து மேல்மருவத்தூர் வழியாக சென்னைக்கு இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளின் சராசரி பயணிகளின் அடர்வு 70 சதவீதம் என்ற அளவில் உள்ளது. எனவே, தற்போதுள்ள போக்குவரத்து தேவைக்கு இப்பேருந்துகளே போதுமானவையாக உள்ளன. மேலும், குளிர்சாதன பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும்போது வந்தவாசியிலிருந்து மேல்மருவத்தூர் வழியாக சென்னைக்கு குளிர்சாதன பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

150—

ஷேர் ஆட்டோ இயக்குதல்

வினா எண் 26229—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சியில் ஷேர் ஆட்டோ இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்தவரையில் 268 அரசு பேருந்துகள், 128 தனியார் பேருந்துகள், 37 ஆம்னி பேருந்துகள், 1,441 ஆட்டோ ரிக்ஷா வாகனங்கள், 1,283 சுற்றுலா சிருந்து வாகனங்கள் மற்றும் 736 மேக்ஸி கேப் வாகனங்கள் ஆகியவை இயக்கப்பட்டு பொதுமக்களுக்கு போதிய போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், ஷேர் ஆட்டோக்கள் மாவட்ட

2015 செப்டம்பர் 29]

தலைநகரை மையமாகக் கொண்டு 30 கிலோ மீட்டர் வரை இயக்க அனுமதிக்கப்பட்டால் இவ்வகையான வாகனங்கள் மிதமான வேகத்தில் புதுக்கோட்டை நகரப் பகுதியில் இயக்கப்படும் சூழ்நிலை உருவாகும். இதனால் வாகன தேக்கம் ஏற்பட்டு போக்குவரத்து இடையூறு உண்டாகும். எனவே, ஷேர் ஆட்டோ அனுமதி வழங்குவது தேவையில்லை.

151—

பேருந்து பணிமனை

வினா எண் 26716—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, காட்டாத்துறையில் பேருந்து பணிமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, காட்டாத்துறையிலிருந்து மார்த்தாண்டம் பணிமனை சுமார் 6 கி.மீ. தொலைவிலும், திருவட்டாறு பணிமனை 8 கி.மீ. தொலைவிலும், திங்கள் நகர் பணிமனை 10 கி.மீ. தொலைவிலும், குழித்துறை 1 மற்றும் 2 பணிமனை 13 கி.மீ. தொலைவிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, காட்டாத்துறையில் தற்போது புதிய பேருந்து பணிமனை அமைக்கும் நிலை எழவில்லை.

152—

புதிய பேருந்து

வினா எண் 27133—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி, சாலைக்கிராமம், R.S. மங்கலம் வழியாக வேளாங்கண்ணி மற்றும் நாகூருக்கு பேருந்து இயக்கித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை-வேளாங்கண்ணி மற்றும் நாகூர் வழி இளையான்குடி, சாலைக் கிராமம், ஆர்.எஸ். மங்கலம் புதிய வழித்தடம் ஆகும். இவ்வழித்தடத்தின் நீளம் 257.3 கி.மீ. ஆகும். மானாமதுரை-இளையான்குடி வழித்தடத்தில் கழகப் பேருந்துகள்மூலம் 18 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 20 நடைகளும் ஆகக் கூடுதல் 38 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. இளையான்குடி-ஆர்.எஸ்.மங்கலம்/உப்பூர் வழித்தடத்தில் அரசுப் பேருந்துகள்மூலம் 18 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 10 நடைகளும் ஆகக் கூடுதல் 28 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. உப்பூர்-வேளாங்கண்ணி வழித்தடத்தில் அரசுப் பேருந்துகள்மூலம் 10 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. இவ்வாறாக கோரிக்கை தடம் முழுமைக்கும் பகுதி பகுதியாக பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

153—

தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 27378—திரு. சு. ரவி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதியில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

154—

மாவட்ட பதிவாளர் அலுவலகக் கட்டடம்

வினா எண் 3752—திருமதி சு. அழகுவேலு: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண்கள் 155,156-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

கள்ளக்குறிச்சியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் மாவட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

ஆம். அரசாணை (நிலை) எண் 144, வணிக வரி மற்றும் பதிவுத் (யு2) துறை, நாள் 20-11-2012-ல் ஏனையவற்றுடன் கள்ளக்குறிச்சி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கும் புதிய அரசுக் கட்டடம் கட்ட நிருவாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மின் இணைப்பு பெறும் பணி நடைபெற்று வருகிறது.

157—

சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்

வினா எண் 5849—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொள்ளாச்சி தொகுதி, நெகமம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

பதிவுத் துறையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் 5 ஆண்டுகளுக்குள் சொந்தக் கட்டடம் கட்டுவதென அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, முதற்கட்டமாக 2011-2012 ஆம் நிதியாண்டில் அரசாணை (நிலை) எண் 57, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 12-4-2012-ல் பழுதடைந்த அரசு கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் 52 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.26.00 கோடி

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அடுத்த கட்டமாக, 2012–2013 ஆம் நிதியாண்டில் அரசாணை (நிலை) எண் 144, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 20–11–2012-ல், 29 சார் பதிவாளர் அலுவலகங்களுடன்கூடிய 17 ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகங்கள் மற்றும் தனித்தனியாக 48 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.48.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி நெகமம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு ரூ.55.00 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, திறப்பு விழாவிற்கு தயார் நிலையில் உள்ளது.

158—

வாரிய உறுப்பினர்கள்

வினா எண் 9080—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் சிறு வணிகர்களும் உறுப்பினராகச் சேர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 69, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 29–6–2011—ல் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெறாமல், உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிமம் பெற்று வணிகம் செய்யும், தொழில் வரி செலுத்தும் வரம்பில் வராத, சிறு வணிகர்களையும் வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

159—

சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம்

வினா எண் 19484—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு சார் பத்திர பதிவு அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 71, வணிக வரி மற்றும் பதிவுத் (பு2) துறை, நாள் 20–6–2013-ல், வத்திராயிருப்பு சார் பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட நிருவாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு மின் இணைப்பு பெறும் பணி நடைபெற்று வருகிறது.

160—

சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம்

வினா எண் 21288—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, கெலமங்கலத்தில் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பதிவுத் துறையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் 5

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2015 செப்டம்பர் 29

ஆண்டுகளுக்குள் சொந்தக் கட்டடம் கட்டுவதென அரசு முடிவு செய்துள்ளது. 2012–2013 ஆம் நிதியாண்டில் அரசாணை (நிலை) எண் 144, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 20–11–2012–ல், 29 சார் பதிவாளர் அலுவலகங்களுடன்கூடிய 17 ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகங்கள் மற்றும் தனித்தனியாக 48 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.48.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி, கெலமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு ரூ.55.00 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, திறப்பு விழாவிற்கு தயார் நிலையில் உள்ளது.

161—

மருத்துவமனையை திறத்தல்

வினா எண் 420—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், ஷண்டன் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை திறக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஷண்டன் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை மற்றும் மருந்தகத்தில் பணிபுரியும் அலுவலர்களை பொது சுகாதாரத் துறையில் ஈர்த்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஷண்டன் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை பொது சுகாதாரத் துறையில் ஈர்த்துக் கொண்ட பின்னர், பொது சுகாதாரத் துறையினரால் மருத்துவமனையை திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விடுபட்ட வினா எண்கள் 162,163,16-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

2015 செப்டம்பர் 29]

165—

விரைவு நீதிமன்றம்

வினா எண் 813—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்தில் விரைவு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணத்தில் விரைவு நீதிமன்றம் ஏற்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு, சென்னை உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து அரசால் பெறப்படவில்லை.

166—

நவீன குளியலறை

வினா எண் 963—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், காவல் கிணறு ஊராட்சி, காவல் கிணறு சந்திப்பு பகுதியில் நவீன குளியல் அறையுடன்கூடிய கழிப்பறை கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், காவல் கிணறு ஊராட்சி, காவல் கிணறு சந்திப்பு பகுதியில் போதிய அரசு இடம் இல்லாததால்

[2015 செப்டம்பர் 29

அப்பகுதியில் நவீன குளியல் அறையுடன்கூடிய கழிப்பறை கட்டுவதற்கு வாய்ப்பில்லை.

167—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 1048—திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேந்தமங்கலம் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், எருமப்பட்டியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி பேரூராட்சியில் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

168—

சாலையை செப்பனிடல்

வினா எண் 1294—திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டத்தில், ஒட்டனூர் முதல் ஏமனூர் வரையுள்ள சாலையை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்தில் ஒட்டனூர் முதல் ஏமனூர் வரையுள்ள சாலையை செப்பனிடும் பணி வனத் துறை சார்ந்ததாகும். எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மூலம் இப்பணியை செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

169—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 1431—திரு. கே.பி. கந்தன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) துரைப்பாக்கம் ராஜீவ்காந்தி சாலையில் கோட்டம்-193 அலுவலக வளாகத்தில் தமிழக அரசின் சார்பில் பொது சுகாதாரத் துறை மற்றும் நோய்த் தடுப்பு துறையின்கீழ் ஓர் ஆரம்ப சுகாதார மையம் தற்பொழுது இயங்கி வருகிறது.

எனவே, சோழிங்கநல்லூர் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சியில் தனியாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இயலாது.

[2015 செப்டம்பர் 29

172—

கூட்டுக் குடிநீர் திட்டம்

வினா எண் 1894—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வயல்சேரியில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வயல்சேரி மற்றும் 19 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.99.64 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு 1–12–2010 முதல் பயன்பாட்டில் உள்ளது.

173—

ஊராட்சியைப் பிரித்தல்

வினா எண் 1981—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியம் ஊராட்சியிலிருந்து கிழராங்கியம் கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண்கள் 170,171-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக சம்பந்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியம் ஊராட்சியிலிருந்து கீழராங்கியம் கிராமத்தை தனி ஊராட்சியாக பிரிக்கக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

174—

ஒன்றியத்துடன் இணைத்தல்

வினா எண் 2731—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி ஒன்றியத்திலுள்ள எண்ணேகொல்புதூர் ஊராட்சியை கிருஷ்ணகிரி ஒன்றியத்துடன் இணைக்கும் செய்ற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக சம்பந்தப்பட்ட,

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி ஒன்றியத்திலுள்ள எண்ணேகொல்புதூர் ஊராட்சியை கிருஷ்ணகிரி ஒன்றியத்துடன் இணைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

175—

தரைப் பாலம் அமைத்தல்

வினா எண் 2741—திருமதி எஸ். கனிதா சம்பத்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, வாழப்பட்டு—நெமிலியில் தரைப் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சியைச் சேர்ந்த வாழப்பட்டு கிராமத்திலிருந்து நெமிலி—செய்யூர் செல்லும் சாலையில் தரைப் பாலம் அமைக்கும் பணி 2013–2014 ஆம் ஆண்டு மாநில நிதிக் குழு மானியம் (மாவட்ட ஊராட்சி) திட்டத்தில் தரைப் பாலம் மற்றும் சாலை வசதி ரூ.7.34 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு, பணி முடிவுற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

2015 செப்டம்பர் 29]

176—

தரைப் பாலம் அமைத்தல்

வினா எண் 2747—திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஒன்றியம், நெசப்பாளையம்—தர்காஸ் பகுதியை இணைக்க தரைப் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தொகுதி, நெசப்பாக்கம் தர்காஸ் பகுதியில் தரைப் பாலம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. தர்காஸ் பகுதியில் ஊரக உட்கட்டமைப்புத் திட்டம் (வ.ஊ) 2010–2011 ஆம் ஆண்டு வட்டார ஊராட்சி ஒதுக்கீட்டில் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறு பாலம் அமைக்கப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

177—

சாலைகளை சீரமைத்தல்

வினா எண் 2760—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், சாலைக் கிராமத்திலுள்ள சாலைகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஒன்றியம், சாலைக் கிராமம் பகுதியிலுள்ள சாலைகளில் தற்போது 6 சாலைகள் ரூ.59.86 இலட்சம் செலவில் நபார்டு திட்டம், ஊராட்சி ஒன்றிய பொது நிதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள சாலைகளை எதிர்வரும் ஆண்டுகளில் மேம்பாடு செய்திட பரிசீலனை செய்யப்படும்.

178—

புதிய ஊராட்சி

வினா எண் 2790—திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து, மதகுபட்டியை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக சம்பந்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

விடுப்பட்ட வினா எண்கள் 180-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

2015 செப்டம்பர் 29]

ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து, மதகுபட்டியை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தை ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

179—

நகராட்சியாக தரம் உயர்த்துதல்

வினா எண் 2924—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை மற்றும் தேன்கனிக்கோட்டை பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை மற்றும் தேன்கனிக்கோட்டை பேரூராட்சிகளில் மக்கள்தொகை மற்றும் வருவாய் குறைவாக உள்ளதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின்படி அப்பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரம் உயர்த்த இயலாது.

181—

சார்பு நீதிமன்றம்

வினா எண் 3012—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் நிரந்தர சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் நிரந்தர சார்பு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

182—

சார்பு நீதிமன்றம்

வினா எண் 3029—திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டியில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் சார்பு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

183—

இடிதாங்கி அமைத்தல்

வினா எண் 3248—திரு. க. மனோகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*

2015 செப்டம்பர் 29]

சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, முள்ளிப்பாக்கம் ஊராட்சியில் இடிதாங்கி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முள்ளிப்பாக்கம் ஊராட்சியில் இடிதாங்கி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

185—

சமுதாய நலக் கூடம்

வினா எண் 3569—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், குன்னத்தூரில் சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், குன்னத்தூர் ஊராட்சிக்குட்பட்ட சுவாமிநாதபுரம் மற்றும் இந்திரா காலனியில் சமுதாயக் கூடம் உள்ளதால் குன்னத்தூரில் மேலும் ஒரு சமுதாய நலக் கூடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

விடுப்பட்ட வினா எண்கள் 184-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

186—

பாலம் அமைத்தல்

வினா எண் 3572—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், ஏர்வாடியில் முகைதீன் பள்ளி வடக்கு தெருவிற்கும், இரண்டாம் தெருவிற்கும் இடையே நம்பியாற்றில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், ஏர்வாடியில் முகைதீன் பள்ளி வடக்கு தெருவிற்கும், இரண்டாம் தெருவிற்கும் இடையே நம்பியாற்றின்மீது புதிய பாலம் கட்டும் பணி நபார்டு திட்டம் 2013–2014–ன்கீழ் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

187—

நீதிமன்றக் கட்டடம்

வினா எண் 3582—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரியில் இயங்கிவரும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் துணை நிலை உரிமையியல் நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் செயல்படும் நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் முன்னுரிமை பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், உகந்த நிலம் கிடைத்தல் மற்றும் செயற்குறிப்பின் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப அரசு பரிசிலனை செய்யும்.

188—

புதிய பாலம்

வினா எண் 3586—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாக மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், பாளையஞ்செட்டிகுளம் ஊரில் வாய்க்கால் கரை பகுதியில் பாலம் கட்டி புதிய பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பாளையஞ்செட்டிகுளம் ஊரில் வாய்க்கால் கரைப் பகுதியில் பொதுப் பணித் துறைமூலம் புதிய பாலம் அமைக்க பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.12.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெற்று பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விடுபட்ட வினா எண்கள் 189,190-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

191—

கழிவுநீர் வடிகால் தூர்வாருதல்

வினா எண் 4667—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஊராட்சி, பேரூராட்சி பகுதிகளில் ஊராட்சி அமைப்புகளைக் கொண்டு கழிவுநீர் வடிகால்களை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி, பேரூராட்சி பகுதிகளில் கழிவுநீர் வடிகால்கள் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு சுத்தம் செய்யப்பட்டு, பயன்பாட்டிற்கு உகந்தவகையில் இருந்து வருகிறது.

192—

நீதிமன்றம்

வினா எண் 4669—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அல்லது செருப்பாலூரில் குற்றவியல் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி மற்றும் நிருவாகம் மற்றும்ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அல்லது செருப்பாலூரில் குற்றவியல் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

194—

வசதிகளை மேம்படுத்துதல்

வினா எண் 4721—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மத்திய சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு அளிக்கப்படும் வசதிகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சிறைவாசிகளுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து வசதிகளும் சிறை நடைமுறை விதிகளின்படி மத்திய சிறை, சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

196—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 4797—திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

விடுப்பட்ட வினா எண்கள் 193,195-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 413-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

(அ) நாமக்கல்லில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் எந்நிலையிலுள்ளது?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான அனைத்துப் பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 9-5-2013 அன்று பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

197—

சுய உதவிக் குழுக் கட்டடம்

வினா எண் 4830—திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிபேட்டை பேரூராட்சி, அரியாகவுண்டன்பட்டியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சேலம் மண்டலம், நாமக்கல் மாவட்டம், நாமகிரிபேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட அரியாகவுண்டன்பட்டி பகுதியில் மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டுவதற்கு பேரூராட்சியில் திட்டம் ஏதும் இல்லை.

விடுப்பட்ட வினா எண்கள் 198,199-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 463-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

200—

தங்கும் விடுதிகள்

வினா எண் 4895—திரு. பழ. கருப்பையா: மாண்புமிகு நகராட்சி நிருவாக மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறைமுகம் தொகுதியில் உள்ள தெருவோர மக்களுக்கு தங்கும் விடுதிகள் கட்டி, உணவும் வழங்குவதற்கு அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

துறைமுகம் தொகுதியில் தெருவோர மக்களுக்கு கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் கண்ணப்பர் திடல்-சூளை, ஸ்டீன்சர் தெரு-பெரியமேடு, ராஜாஜி சாலை-மண்ணடி, காக்கஸ் காலனி-சிந்தாதிரிப்பேட்டை, ராஜரத்தினம் நகர்-கொடுங்கையூர், செரியன் நகர்-புதுவண்ணாரப்பேட்டை, தொற்று நோய் மருத்துவமனை-தண்டையார்பேட்டை ஆக மொத்தம் 7 பகுதிகளில் தங்கும் காப்பகங்கள் அமைக்கப்பட்டு, அவர்களில் வயதானவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கு மூன்று வேளை உணவும், மற்றவர்களுக்கு இரவு நேர உணவும், காலை மாலை தின்பண்டங்கள் வழங்கப்பட்டு, தங்கியிருக்குமிடம் சுகாதாரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

(பேரவைக் கூட்டத் தொடர் முடியும் வரை தொடர்புடைய உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று தற்காலிக நீக்கம் செய்யப்பெற்றுள்ளதால் வரிசை எண்கள் 6, 8, 9, 10, 62, 66, 83, 102, 103, 104, 112, 116, 125, 127, 141, 143, 155, 156, 162, 163, 164, 170, 171, 180, 184, 189, 190, 193, 195, 198, 199 தொடர்புடைய வினாக்கள்—விடைகள் இப்பட்டியலில் இடம்பெறவில்லை)

[2015 செப்டம்பர் 29

பட்டியல் 18

1—

குடிநீர் திட்ட ஆய்வுப் பணிகள்

வினா எண் 5069—செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திண்டுக்கல்லில் வைகை குடிநீர் திட்ட ஆய்வுப் பணிகள் எப்போது நிறைவுபெறும்?

(ஆ) இக்குடிநீர்த் திட்டம் எப்போது துவங்கும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாநகருக்கு வைகை குடிநீர் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் தற்போது எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

5—

புதிய ஊராட்சி ஒன்றியம்

வினா எண் 5243—திரு. கு.வ. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளாத்திகுளம் தொகுதி, எட்டையபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஊராட்சி ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுபட்ட வினா எண்கள் 2,3,4-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி மற்றும் நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சி ஒன்றியத்தினைப் பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாகத் தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில், அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, எட்டையபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஊராட்சி ஒன்றியம் அமைக்கக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

பாதாள சாக்கடை அமைத்தல்

வினா எண் 5553—திரு. ஆர். மனோகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் திருச்சி-ஸ்ரீரங்கம் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு 2008-ல் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி திட்டத்தில் விடுபட்ட பகுதிகள் மற்றும் புதிதாக

விடுப்பட்ட வினா எண் 6-க்கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் முதற்கட்டமாக ஸ்ரீரங்கம் பகுதியில் 1 முதல் 6 வார்டு வரையுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.24.00 கோடிக்கு அரசாணை (நிலை) எண் 15, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 9–2–2012–ல் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, 19.69 கி.மீ. நீளத்திற்கு பாதாள சாக்கடை அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, 29–4–2013 முதல் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமின்றி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்தப்படாத பகுதிகளுக்கும், இம்மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 5 வார்டுகளுக்கும் சேர்த்து பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கான வரைவு செயலாக்க அறிக்கை (Draft Feasibility Report) தயாரிக்கப்பட்டு, பாதாள சாக்கடை அமைக்கும் பணி நடவடிக்கையில் உள்ளது.

8—

தேசிய சட்டப் பள்ளி

வினா எண் 5569—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் தொகுதியில் தேசிய சட்டப் பள்ளிக்கு இடம் தேர்வு செய்யப்பெற்றுள்ளதா?

(ஆ) இத்திட்டத்திற்காக மத்திய, மாநில பங்கீடு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி மற்றும் நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) ஸ்ரீரங்கம் தொகுதியில் தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, 25 ஏக்கர் வளாகத்தில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி கட்டப்பட்டு, 2013–2014 ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

2015 செப்டம்பர் 29]

(ஆ) இத்திட்டத்திற்காக மாநில அரசு ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய அரசிடமிருந்து நிதி உதவி ஏதும் பெறப்படவில்லை.

9—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 5633—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகர், பூச்சநாயக்கன்பட்டி, பேகம்பூரில் மேல்நிலைத் தொட்டி கட்டும் பணி எப்போது துவங்கும்?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் நகராட்சிக்குட்பட்ட பேகம்பூர் பகுதியில் அமைந்துள்ள பூச்சிநாயக்கன்பட்டி மற்றும் எம்.வி.எம். நகரில் இரண்டு 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டிகள் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, 03/2015 முதல் மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

11—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

வினா எண் 5848—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி தொகுதி, பொள்ளாச்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடுபட்ட வினா எண் 10-க்கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பொள்ளாச்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

12—

காவேரி குடிநீர்

வினா எண் 5856—திரு. கோ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, காவேரி குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல் ஊராட்சியில் உள்ள சுமார் ஏழாயிரம் பொதுமக்களுக்கு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது.

13—

காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 6025—திரு. க. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகருக்கு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள், 944 ஊரகக் குடியிருப்புகளுக்கு மேட்டூர் அணையின் கீழ்ப்புறம் செக்கானூர் அருகே காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.1,295 கோடியில் செயல்படுத்த அரசின் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பயன்பெறவுள்ள இடங்களில் அரக்கோணம் ந. ரமும் ஒன்றாகும். இத்திட்டப் பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு, சோதனை ஓட்டத்திற்குப் பின்னர் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

14—

குடிநீர் வசதி

வினா எண் 6101—திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், பென்னாகரத்திற்கு சின்னாற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டப் பணியைச் சீர்படுத்தி, குடிநீர் பஞ்சத்தைப் போக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் பேரூராட்சிக்கு 2009–2010 ஆம் ஆண்டில் ரூ.499 இலட்சம் மதிப்பீட்டில் சின்னாற்றில்

அமைக்கப்பட்டுள்ள 3 நீர் உறிஞ்சு கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் நிறைவேற்றப்பட்டு, பேரூராட்சிவசம் ஒப்படைக்கப்பட்டு, தற்போது நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 70 லிட்டர் வீதம் போதுமான குடிநீர் வழங்கப்படுகிறது.

15—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 6267—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் 6-12-2013-ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

16—

ஊராட்சி கழிப்பறைக் கட்டடம்

வினா எண் 6390—திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை தொகுதி, கிராமப்புற சுகாதாரத் திட்டம்மூலம் ஊராட்சி கழிப்பறைக் கட்டடம் கட்டப்பட்டுள்ளதைத் திறந்து, மக்கள் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் 2011–2012 ஆம் ஆண்டில் அனைத்து மகளிர் சுகாதார வளாகங்களும் முழுமையாக ஊரகக் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.5.87 கோடியில் புனரமைக்கப்பட்டு, தற்போது மகளிர் மற்றும் குழந்தைகளால் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

17—

பயணிகள் தங்கும் கட்டடம்

வினா எண் 6392—திரு. க. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை தொகுதி, கல்லல் கிராமத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்து, பயணிகள் தங்கும் கட்டடமும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை தொகுதி, கல்லல் கிராமத்தில் புதிய பேருந்து நிலையம் மற்றும் பயணிகள் தங்கும் கட்டடம் அமைக்க இயலாது.

(ஆ) இவ்வினா எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

18—

சமரச தீர்வுமுறை பயிற்சி

வினா எண் 6514—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு சமரசத் தீர்வு முறைகளில் அளிக்கப்பட்ட உள்ள பயிற்சி பற்றிய விவரங்களை சட்டக் கல்வியிலும் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சமரசத் தீர்வு முறைகளில் அளிக்கப்படும் பயிற்சி ஏற்கெனவே அரசு சட்டக் கல்லூரிகளில் நடைமுறையில் உள்ளது.

19—

மாவட்ட சார்பு நீதிமன்றம்

வினா எண் 6518—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையில் மாவட்ட சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையில் மாவட்ட சார்பு நீதிமன்றம் அமைக்க அரசாணை (நிலை) எண் 712, உள்

2015 செப்டம்பர் 29]

(நீதிமன்றங்கள்—3) துறை, நாள் 18—9—2013—ல் ஆணை வெளியிடப்பட்டு, மேற்படி நீதிமன்றம் 25—1—2014 முதல் இயங்கி வருகிறது.

20—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6598—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் ஒன்றியம், மருளூத்து ஊராட்சி, மருளூத்து கிராமத்தில் புதிய குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், மருளூத்து ஊராட்சியில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ரூ.3,00,000/— மதிப்பீட்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

21—

பள்ளிக்கு சுற்றுச் சுவர்

வினா எண் 6640—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணியானது 2013–2014 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.90,700/– மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

22—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 6677—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொள்ளாச்சி தொகுதி, மரப்பேட்டை பள்ளத்தில் இக்கரையிலிருந்து அக்கரை செல்ல மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பொட்டுமேடு முதல் கண்ணப்பன் நகர் வரையுள்ள மரப்பேட்டை பள்ளத்தின் குறுக்கே மொத்தம் ஒன்பது பாலங்கள் பொதுமக்கள் இக்கரை முதல் அக்கரை வரை செல்ல கட்டப்பட்டுள்ளது.

23—

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

வினா எண் 6700—திரு. செ. அருண்பாண்டியன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம்,*

2015 செப்டம்பர் 29]

நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி வட்டத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் நீதித் துறை நடுவர் மன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி வட்டத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் நீதித் துறை நடுவர் மன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

24—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 6705—திரு. கு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் நகராட்சியால் வடக்குக் காடு வழியாக தென்னங்குடிபாளையம் செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் நகராட்சியால் வடக்குக் காடு வழியாக தென்னங்குடிபாளையம் செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைக்க IUDM *2013–2014–ல் ரூ.100 கோடி மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது.*

25—

பொது சுகாதார வளாகம்

வினா எண் 6718—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, விழுப்பனூர் சிற்றூராட்சி, கிருஷ்ணன் கோவிலில் பொது சுகாதார வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி, விழுப்பனூர் சிற்றூராட்சி, கிருஷ்ணன் கோவிலில் பொது சுகாதார வளாகம் கட்ட போதிய இடவசதி இல்லை.

26—

மின் மயானம் அமைத்தல்

வினா எண் 6865—திரு. எஸ். வேதாச்சலம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர், பாடி ஆகிய பகுதிகளில் மின் மயானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மின் மயானம் அல்லது கேஸ் சுடுகாடு அமைப்பது குறித்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

27—

பாதுகாக்கப்பட்ட குடிநீர்

வினா எண் 6397—திரு. ஏ. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொடைக்கானலில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் இரண்டு நீர்த்தேக்கங்களில் மழை நீர் சேகரிக்கப்பட்டு, குளோரினேசன் செய்யப்பட்டு, 4 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் நகர்ப் பகுதியில் சீராக வழங்கப்பட்டு வருகிறது. மாதத்திற்கு ஒரு முறை குடிநீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, தரப் பரிசோதனை செய்யப்பட்டு, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்பப்படுகிறது. கோடைக் காலங்களில் நகர்ப் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்கும்வகையில் மேடான பகுதிகளுக்கு நகராட்சி குடிநீர் லாரிகள்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது, நகர்ப் பகுதியில் 71 LPCD வீதம் 6 நாட்களுக்கு

ஒரு முறை 2.61 MLD என்ற அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

28—

பயணியர் விடுதி

வினா எண் 6925—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் பேரூராட்சியில் பயணியர் விடுதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சியில் பயணியர் விடுதி அமைக்க பேரூராட்சிக்குச் சொந்தமான இடவசதி இல்லாததால், இப்பேரூராட்சியின்மூலம் பயணியர் விடுதி அமைக்க வழிவகை ஏதும் இல்லை.

29—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

வினா எண் 6965—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி வட்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ.530.20 இலட்சம் வழங்கி, அரசாணை (நிலை) எண் 796, உள் துறை, நாள் 5–11–2014–ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

30—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 7063—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருத்தணி நகராட்சியில் ஏற்கெனவே அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் இயங்கி வருகிற நிலையில், புதிதாக தற்போது பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

31—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 7095—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், நடையனேரி ஊராட்சி, இராமச்சந்திரபாளையம்--நடையனேரி இடையில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஊராட்சி ஒன்றியம், நடையனேரி ஊராட்சி, இராமச்சந்திரபாளையத்தில் ஏற்கெனவே 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு, சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

32—

சாலையை சீரமைத்தல்

வினா எண் 7151—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகாசி ஒன்றியம், காரிசேரி ஊராட்சி, மத்தியசேனை கிராமத்திற்கும் காரிசேரி ஊராட்சிக்கும் இடையே உள்ள சாலை சீரமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், காரிசேரி ஊராட்சி, மத்தியசேரனை கிராமத்திற்கும், காரிசேரி ஊராட்சிக்கும் இடையே

2015 செப்டம்பர் 29]

1.90 கி.மீ. நீளத்திற்கு 13-வது நிதிக் குழு மானியத் திட்டம் 2011-2012-ன்கீழ், ரூ.17.10 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

33—

கழிப்பறை மற்றும் குளியலறை கட்டுதல்

வினா எண் 7155—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், செவலூர் கிராமத்தில் பெண்கள் கழிப்பறை மற்றும் குளியலறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தொகுதி, செவலூர் ஊராட்சியில் உள்ள மகளிர் சுகாதார வளாகத்தில், 2012-2013 ஆம் ஆண்டு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.1.15 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், அவ்வளாகத்தில் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் குளியல் தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளது.

34—

பூங்கா அமைத்தல்

வினா எண் 7291—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சியில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சியில் 600 சதுர அடி பரப்பளவுள்ள விளையாட்டு மைதானத்துடன்கூடிய நேரு சிறுவர் பூங்காவில், பொது நிதியின்கீழ் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு மற்றும் மராமத்துப் பணிகள் நடைபெற்று, தற்போது நடைபாதை பணி, பூச்செடிகள் அமைத்தல் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் நிறுவும் பணிகள் முடிவடைந்து, ஜுலை 2013 முதல் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

35—

தார்சு வீடுகள் கட்டுதல்

வினா எண் 7337—திரு. கோ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மேற்கு தொகுதியிலுள்ள ஆதி திராவிடர் மக்களுக்கு தீப்பிடிக்காத தார்சு வீடுகள் புதிதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதிகளில் வசிக்கும் ஆதி திராவிடர் இன மக்களுக்கு 2011–2012

2015 செப்டம்பர் 29]

மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.

36—

கூடுதல் குடிநீர் வழங்குதல்

வினா எண் 7351—திரு. தா. மலரவன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் வடவள்ளி பேரூராட்சியில் கூடுதலாக குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வடவள்ளி பகுதிக்காக கவுண்டம்பாளையம்–வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டம் 15–6–2010 முதல் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் 2.87 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு, ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 70 லிட்டர் என்ற விகிதத்தில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

37—

பாதுகாக்கப்பட்ட குடிநீர்

வினா எண் 7367—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆழியார் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படுமா?

(ஆ) இத்திட்டத்தின்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆனைமலை, கோட்டூர் ஆகிய கிராமங்களுக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆழியார் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கீழ்க்காணும் நான்கு குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.

1. வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்

2. ஒடையகுளம் பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

3. சமத்தூர் பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

4. ஆனைமலை... ஆளேஸ்வரன்பட்டி பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

(ஆ) ஆழியார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஆனைமலை மற்றும் கோட்டூர் ஆகிய பேரூராட்சிகளுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

38—

தமிழ் மொழியை அங்கீகரித்தல்

வினா எண் 7381—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உச்ச நீதிமன்றத்தின் ஆட்சி மொழியாகத் தமிழ் மொழியையும் அங்கீகரிக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உச்ச நீதிமன்றத்தின் ஆட்சி மொழியாகத் தமிழ் மொழியையும் அங்கீகரிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

39—

நவீன பேருந்து நிலையம்

வினா எண் 7424—திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி–விஜயநகர் மாநகரப் பேருந்து நிலையத்தை வேளச்சேரி இரயில் நிலையத்திற்கு அருகில் அடுக்கு வணிக வளாகத்துடன்கூடிய நவீன பேருந்து நிலையமாக மாற்றி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி–விஜயநகர் மாநகரப் பேருந்து நிலையத்தை வேளச்சேரி இரயில் நிலையத்திற்கு அருகில் அடுக்கு வணிக வளாகத்துடன்கூடிய நவீன பேருந்து நிலையமாக மாற்றி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது சென்னை மாநகராட்சியிடம் இல்லை.

40—

நூலகத்திற்கு கட்டடம்

வினா எண் 7491—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அளக்குடி ஊராட்சியிலுள்ள நூலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, அளக்குடி ஊராட்சியில் உள்ளடங்கிய நாணல்படுகை எனும் குக்கிராமத்தில் நூலகக் கட்டடம், 2007–2008 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், 3.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனவே, அளக்குடி ஊராட்சியில் மேலும் நூலகக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

41—

ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

வினா எண் 7518—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடியில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து, தூய குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடியில் புதியதாக ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM) 2013–2014–ன்கீழ், 2 ஆழ்துளைக் கிணறுகளும், கோடைக்கால குடிநீர்த் தட்டப்பாடு நிவர்த்தித் திட்டத்தின்கீழ் 6 ஆழ்துளைக் கிணறுகளும் அமைக்கப்பட்டு, போதுமான அளவு தூய குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2015 செப்டம்பர் 29]

42—

நீதிமன்றக் கட்டடம்

வினா எண் 7530—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் நடுவர் நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் நடுவர் நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

44—

பாதுகாக்கப்பட்ட குடிநீர்

வினா எண் 7603—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், முனியாண்டிபுரம் கிராமத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண் 43-கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், முனியாண்டிபுரம் கிராமத்திற்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

45—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 7697—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த ரூ.28.57 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்குத் தேவையான கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கத் தேவையான இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிதி ஆதாரங்களின் அடிப்படையில் அரசு உறுதி அளித்தவாறு எதிர்வரும் ஆண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் UIDSSMT, Kfw JICA ஆகிய திட்டங்களின்கீழ், மேற்படி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2015 செப்டம்பர் 29]

46—

பாலம் கட்டுதல்

வினா எண் 7756—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், பாளையம்–செட்டிகுளம் வாய்க்காலில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பாளையஞ்செட்டிகுளம் ஊரில் வாய்க்கால் கரைப் பகுதியில் பொதுப் பணித் துறைமூலம் புதிய பாலம் அமைக்க பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.12.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெற்று, பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

47—

பாதாளச் சாக்கடை

வினா எண் 7841—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் 2014–2015 ஆம் ஆண்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த ரூ.45.25 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்குத் தேவையான கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கத் தேவையான இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிதி ஆதாரங்களின் அடிப்படையில் அரசு உறுதி அளித்தவாறு எதிர்வரும் ஆண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் UIDSSMT, Kfw JICA ஆகிய திட்டங்களின்கீழ், மேற்படி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

48—

தார்ச் சாலை வசதி

வினா எண் 8029—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் 14–வது வார்டு பாரக்கல்லூர் வெட்டிகரடு கிழக்கு பகுதிக்கு தார்ச் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் பேரூராட்சிக்குட்பட்ட 14–வது வார்டு பாரக்கல்லூர் வெட்டிகரடு கிழக்குப் பகுதியில் 2012–2013

2015 செப்டம்பர் 29]

ஆம் ஆண்டு நபார்டு சாலைகள் மேம்பாடு திட்டத்தின்கீழ், ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் 1.052 கி.மீ. நீளத்திற்கு தார்ச் சாலை அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

49—

புதிய சாலை வசதி

வினா எண் 8033—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், பழையசந்தைபேட்டை, பாம்பாட்டி முனியப்பன் கோவில், பட்டக்காரன்காடு ஆகிய பகுதிகளுக்கு புதிய சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி சட்டமன்றத் தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், பழையசந்தைபேட்டை, பாம்பாட்டி முனியப்பன் கோவில், பட்டக்காரன்காடு ஆகிய பகுதிகளுக்கு சாலை அமைக்கத் தேவைப்படும் நிலம் தனியாரின் பட்டா நிலமாக உள்ளதால், சாலை அமைக்க இயலவில்லை.

50—

தார்ச் சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 8046—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, ஏகாபுரம் கிராமம், நல்லாரன் பூசாரி வளவு தார்ச் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி சட்டமன்றத் தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏகாபுரம் ஊராட்சியில் உள்ள குக்கிராமம், நல்லாரன் பூசாரி வளவு. இங்குள்ள தார்ச் சாலையின் இருபுறமும் தனியாரின் பட்டா நிலமாக உள்ளதால், தார்ச் சாலையை அகலப்படுத்த இயலாது.

51—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 8050—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, சங்கரி இரயில் நிலையம்–செக்கான் காடு வரை உள்ள கான்கிரீட் சாலையை அகலப்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி இரயில் நிலையம் முதல் செக்கான் காடு வரை உள்ள கான்கிரீட் சாலையானது, 2010–2011 ஆம் ஆண்டு சிறப்பு சாலைகள் திட்டத்தின்கீழ், ரூ.18.25 இலட்சம் மதிப்பீட்டில், 5.50 மீட்டர் அகலத்திற்கு கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டு நல்ல முறையில் உள்ளது. மேலும், இச்சாலையை அகலப்படுத்துவதற்குப் போதுமான இடவசதி இல்லாததால், இதற்குமேல் கான்கிரீட் சாலையை அகலப்படுத்த இயலாது.

2015 செப்டம்பர் 29]

52—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 8071—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடியிலிருந்து நம்பியாம்பட்டி வரை தார்ச் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி சட்டமன்றத் தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, மகுடஞ்சாவடியிலிருந்து நம்பியாம்பட்டி வரை உள்ள தார்ச் சாலையானது 2011–2012 ஆம் ஆண்டில் நபார்டு திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

53—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 8074—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், துட்டம்பட்டி முதல் வெள்ளக்கல்பட்டி வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், துட்டம்பட்டி முதல் வெள்ளக்கல்பட்டி வரை கி.மீ. 0/0–1/4 தார்ச் சாலை 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.18.25 இலட்சம் மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு இடைநிரவல் திட்டத்தின் நிதியிலிருந்து (*Infrastructure Gap Filling Fund*) தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.*

54—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 8075—திருமதி ட. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, ஓமலூர் வட்டம், துட்டம்பட்டி, கொடியன்வெட்டம் பகுதிக்கு தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், குடியன் வட்டம் பகுதியில் 2.00 கி.மீ. நீளத்திற்கு தார்ச் சாலைப் பணி பிரதம மந்திரி கிராமச் சாலைகள் (*PMGSY*) திட்டத்தின்கீழ், 2008–2009 ஆம் ஆண்டில் ரூ.36.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 2011–2012 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியின்மூலம் 200 மீட்டர் நீளத்திற்கு சாலைப் பணி ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.*

2015 செப்டம்பர் 29]

55—

மகளிர் சுகாதார வளாகம்

வினா எண் 8095—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தெசவிளக்கு ஊராட்சி, சின்னப்பிள்ளையூரில் மகளிர் சுகாதார வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்கு ஊராட்சியில் லட்சுமாயூர் மற்றும் சின்னபிள்ளையூரில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் 1999–2000 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது.

56—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 8117—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சியில் 2013–2014 ஆம் நிதியாண்டில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடை அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காண் திட்டம் செயல்படுத்தத் தேவையான சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவு நீர் உந்து நிலையம் அமைக்கத் தேவையான இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் UIDSSMT, JNNURM, Kfw JICA ஆகிய திட்டங்களின்கீழ், மேற்படி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

57—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 8118—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி பேரூராட்சியில், 2013–2014 ஆம் நிதியாண்டில் ரூ.30.79 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்திட வேண்டி விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. JNNURM, Kfw JICA ஆகிய திட்டங்களின்கீழ், கிடைக்கப்பெறும் நிதி ஆதாரங்களின்

2015 செப்டம்பர் 29]

அடிப்படையில், முன்னுரிமைப்படி, மேற்படி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

58—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 8119—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 24,556 மக்கள் தொகை கொண்ட திருப்புவனம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த, 2013–2014 ஆம் நிதியாண்டில் ரூ.19.70 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்காண் திட்டம் செயல்படுத்தத் தேவையான சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவு நீர் உந்து நிலையம் அமைக்கத் தேவையான இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் UIDSSMT, Kfw JICA ஆகிய திட்டங்களின்கீழ், மேற்படி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

59—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 8124—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஆலங்குளம், சங்கரன்கோவில், நீலிதநல்லூர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம், நீலிதநல்லூர், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 147 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகளை விரைவில் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

60—

காவேரி குடிநீர்

வினா எண் 8133—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, நவாப்மேடு, கண்டர்குலமாணிக்கம் பகுதிக்கு காவேரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சங்கரி சட்டமன்றத் தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கண்டர்குலமாணிக்கம் ஊராட்சியில் உள்ள நவாப்மேடு பகுதிக்கு காவேரி குடிநீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

2015 செப்டம்பர் 29]

61—

காவேரி குடிநீர் வழங்குதல்

வினா எண் 8135—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி, சொரியம்பட்டி எர்ணாபுரம் கிராமத்திற்கு காவேரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி சட்டமன்றத் தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மகுடஞ்சாவடி ஊராட்சி, சொரியம்பட்டி—எர்ணாபுரம் குக்கிராமத்திற்கு 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, காவேரி குடிநீர் வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

62—

காவேரி குடிநீர் வழங்குதல்

வினா எண் 8139—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், எடையப்பட்டி கிராமம், கலர்ப்பட்டி காலனிக்கு காவேரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

[2015 செப்டம்பர் 29

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், எடையப்பட்டி ஊராட்சியில் உள்ள கலர்ப்பட்டி காலனிக்கு காவேரி குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

63—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 8141—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்கு கிராமம், அணைமேடு பகுதிக்கு குடிநீர் வழங்க, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தெசவிளக்கு ஊராட்சி, அணைமேடு பகுதி மக்களுக்கு உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள்மூலம் சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

64—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 8144—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) சேலம் மாவட்டம், சங்கரி எடப்பாடி சாலை, ஆசிரியர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி, எடப்பாடி சாலை, ஆசிரியர் காலனியில் உள்ள பொதுமக்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் போதுமான அளவு காவேரி ஆற்றுச் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

65—

காவேரி குடிநீர் வழங்குதல்

வினா எண் 3145—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, நடுவனேரி கிராமம், பழைய முன்சிப் காட்டிற்கு காவேரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி சட்டமன்றத் தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நடுவனேரி கிராமம், பழைய முன்சிப் காடானது மேடான

[2015 செப்டம்பர் 29

பகுதியாக இருப்பதால், காவேரி குடிநீர் சீராக ஏறுவதற்கு வழிவகை இல்லை. எனவே, காவேரி குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது.

66—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 8154—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி, கன்னந்தேரி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி சட்டமன்றத் தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கன்னந்தேரி ஊராட்சியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி ஏற்கெனவே உள்ளது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

67—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 8161—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் ஒன்றியம், எடையப்பட்டி காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி சட்டமன்றத் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், எடையப்பட்டி காலனியில் 196 பேர் வசித்து வருகின்றனர். இவர்களுக்குப் போதுமான அளவு காவேரி குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

68—

காவேரி குடிநீர் வழங்குதல்

வினா எண் 8163—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, கண்டர்குலமாணிக்கம் கிராமம், செக்குமேடு பகுதிக்கு காவேரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி சட்டமன்றத் தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கண்டர்குலமாணிக்கம் ஊராட்சியில் செக்குமேடு பகுதிக்கு காவேரி குடிநீர் ஏற்கெனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

[2015 செப்டம்பர் 29

69—

பள்ளிக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 8172—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை கிராமம், மடத்தூர் காட்டுவளவு மழலையர் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, இடங்கணசாலை கிராமம், மடத்தூர் காட்டுவளவு மழலையர் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்ட ஊராட்சி பொது நிதியில் போதிய நிதி வசதி இல்லாததால் கட்டித் தர இயலாது.

70—

இலவச தொகுப்பு வீடுகள்

வினா எண் 8180—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, ஓமலூர் வட்டம், துட்டம்பட்டி அருந்ததியர் தெருவிற்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், துட்டம்பட்டி ஊராட்சியில் உள்ள துட்டம்பட்டி அருந்ததியர் தெருவிற்கு, 2012–2013 ஆம் ஆண்டில் ஒரு பயனாளிக்கு ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் பசுமை வீடு கட்டித் தரப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில், ஒரு பயனாளிக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட வீடும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

71—

இலவசத் தொகுப்பு வீடுகள்

வினா எண் 3161—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, ஓமலூர் வட்டம், எடையப்பட்டி ஊராட்சி, கலர்ப்பட்டி அருந்ததியர் தெருவிற்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், எடையப்பட்டி ஊராட்சி, கலர்ப்பட்டி அருந்ததியர் தெருவிற்கு, 2012–2013 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தொகுப்பு வீடு கட்டப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தொகுப்பு வீடு ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில் பசுமை வீடு திட்டத்தின்கீழ், ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

72—

பள்ளிக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 8182—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை கிராமம், மடத்தூர் காட்டுவளவு மழலையர் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரூராட்சி நிருவாகத்தால் பள்ளிகள் ஏதும் பராமரிக்கப்படுவதில்லை என்பதால் பள்ளிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

73—

பள்ளிக் கட்டடத்தைப் புதுப்பித்தல்

வினா எண் 8184—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை கிராமம், கோணேரிப்பட்டி அங்கன்வாடி பள்ளிக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, இடங்கணசாலை கிராமம், கோனேரிப்பட்டி அங்கன்வாடி பள்ளிக் கட்டடம், அங்கன்வாடி மையங்கள் பழுது பார்த்தல் திட்டத்தின்கீழ், ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

74—

பள்ளிக்கு சுற்றுச் சுவர்

வினா எண் 8219—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, ஓவரூர் மாரியம்மன் கோவிலடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, ஓவரூர் மாரியம்மன் கோவிலடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு, சுற்றுச்சுவர் 2013–2014 ஆம் ஆண்டைய ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.1,75,100/– மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

[2015 செப்டம்பர் 29

75—

சாலை அமைத்தல்

வினா எண் 8223—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, டி.கல்லுப்பட்டி ஒன்றியம், சந்தையூரிலிருந்து சாப்டூர் செல்லும் சாலையை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, சேடப்பட்டி மற்றும் தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட சந்தையூர்–சாப்டூர் சாலையின் மொத்த நீளம் 5.40 கி.மீ. ஆகும். இதில் 4.257 கி.மீ. நீளத்திற்கு சாலைப் பணி நபார்டு 2011–2012 திட்டத்தின்கீழ், ரூ.67.41 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள 1.143 கி.மீ. சாலையில் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 0.60 கி.மீ. நீள மண் சாலை பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் உள்ளதால், இதுவரை வனத் துறையின் அனுமதி பெறப்படவில்லை. தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 0.543 கி.மீ. சாலை தார்ச் சாலையாக பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் உள்ளது.

76—

சாலை அமைத்தல்

வினா எண் 8253—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி வட்டம், மருதகுளம் கிராமம், கிழக்குத் தெருவில் சிமெண்ட் சாலைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி வட்டம், மருதகுளம் கிராமம், கிழக்குத் தெருவில் மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து (2012–2013) ரூ.3.00 இலட்சம் செலவில் 141 மீட்டர் நீளமுடைய சிமென்ட் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

77—

சுய உதவிக் குழுக் கட்டடம்

வினா எண் 8259—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், திருக்கள்ளியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதி, இளையான்குடி ஒன்றியம், திருக்கள்ளி கிராமம், விசவனூர் ஊராட்சியில் இடம் பெற்றுள்ளது. ஒரு கிராமத்திற்கு ஒரு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் என்ற அடிப்படையில் விசவனூர் ஊராட்சியில் ஏற்கெனவே சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டி உபயோகத்தில் உள்ளது. எனவே, திருக்கள்ளியில் சுய உதவிக் குழுக் கட்டடம் கூடுதலாக கட்டித் தர இயலாது.

78—

புதிய ஊராட்சி ஒன்றியம்

வினா எண் 8262—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, சாலைக்கிராமத்தை தலைமையிடமாக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினைப் பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, சாலைக்கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

79—

நவீன மயானம்

வினா எண் 8554—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி நகராட்சி, சந்தைப்பேட்டை, கழனிவாசல் ஆகிய பகுதிகளில் நவீன மயானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி நகராட்சி, சந்தைப்பேட்டையில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்பட்டு, 7–1–2013 முதல் மக்கள் பயன்பாட்டில் நல்ல நிலையில் உள்ளது. மேலும், கழனிவாசலுக்கும், சந்தைப்பேட்டைக்கும் இடையே 2 கிலோ மீட்டர் இடைவெளியே உள்ளதால், கழனிவாசல் பகுதியிலிருந்து சடலங்களை சந்தைப்பேட்டைக்கு எடுத்துச் செல்ல குறைந்த வாடகைக்கு 'ஆம்புலன்ஸ் சேவை' சந்தைப்பேட்டை தகன மேடையை நிருவாகம் செய்யும் நிறுவனத்தாலேயே செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, கழனிவாசல் பகுதியில் மற்றொரு நவீன எரிவாயு தகனமேடை கட்ட வேண்டிய அவசியம் எழாது.

80—

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

வினா எண் 8636—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை விவசாயப் பணிகளுக்கும் செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை விவசாயப் பணிகளுக்கும் செயல்படுத்த அரசு ஆணை (நிலை) எண் 61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை, நாள் 23–7–2012–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[2015 செப்டம்பர் 29

81—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

வினா எண் 8664—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் ரூ.368.50 இலட்சம் செலவில், நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்காக, அரசாணை (நிலை) எண் 796, உள் துறை, நாள் 5–11–2014–ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

82—

மேம்பாலமாக மாற்றுதல்

வினா எண் 8696—திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, கருங்குழி–கத்திரிச்சேரி–கிளியாறு தரைப் பாலத்தை மேம்பாலமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தொகுதி, கருங்குழி—கத்திரிச்சேரி—கிளியாறு தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைக்கும் பணி ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டத்தின்கீழ் ரூ.304.70 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

83—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

வினா எண் 8701—திருமதி எஸ். கனிதா சம்பத்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.926.39 இலட்சம் வழங்கி, அரசாணை (நிலை) எண் 873, உள் துறை, நாள் 28—11—2014—ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

84—

புதிய ஊராட்சி ஒன்றியம்

வினா எண் 8710—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினைப் பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து, புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

சார்பு நீதிமன்றம்

வினா எண் 8730—திரு. செ. காமராஜ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் வட்டத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் வட்டத்தில் சார்பு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

2015 செப்டம்பர் 29]

86—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 8847—திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரைந்து செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 202 குடியிருப்புகளும், தொப்பம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 101 குடியிருப்புகளும் பயன்பெறும் வகையில் பிரதான வேடசந்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை நீராதாரமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள மூன்று கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் சேதமடைந்துள்ள குழாய்களை மாற்றியமைத்து சரிசெய்யும் மறுசீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

87—

குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குதல்

வினா எண் 8849—திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 29

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, கீரனூர் பேரூராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, கீரனூர் பேரூராட்சியினைப் பொறுத்தவரையில், நாள் ஒன்றிற்கு, நபர் ஒருவருக்கு 78 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. அதனால், கீரனூர் பேரூராட்சியில் குடிநீர் விநியோகத்தில் பற்றாக்குறை ஏதும் இல்லை.

88—

திண்காரை சாலை அமைத்தல்

வினா எண் 8854—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, சங்கரி பேரூராட்சி, மேட்டுத் தெருவிற்கு திண்காரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி பேரூராட்சிக்குட்பட்ட 5-வது வார்டு மேட்டுத் தெருவில் 2012–2013 ஆம் ஆண்டு பொது நிதியின்கீழ் ரூ.1.90 இலட்சம் மதிப்பீட்டில் பழைய எடப்பாடி சாலையிலிருந்து கோட்டைத் தெரு சாலையையும், மேட்டுத் தெரு சாலையையும் இணைக்கும் மெயின் சாலை சிமெண்ட் சாலையாக அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

2015 செப்டம்பர் 29]

89—

ஊராட்சியை பிரித்தல்

வினா எண் 9046—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், விஜயாபதி ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினைப் பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், விஜயாபதி ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

90—

நவீன கருவிகள் வழங்குதல்

வினா எண் 9149—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு நவீன கருவிகள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சென்னை அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு நவீன கருவிகள் வழங்கிட அரசு நிதி வழங்கி ஆவன செய்துள்ளது:

(ஆ) அரசாணை (நிலை) எண் 127, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி—1) துறை, நாள் 12—10—2011—ல், 2011—2012 ஆம் ஆண்டு பகுதி—2 திட்டத்தின்கீழ் ரூ.28.02 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

- *அரசாணை (D) எண் 111, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி—1) துறை, நாள் 8—6—2012—ல், 2012—2013 ஆம் ஆண்டு பகுதி—2 திட்டத்தின்கீழ் ரூ.20.16 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.*
- *அரசாணை (D) எண் 111, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி—3) துறை, நாள் 13—7—2012—ல், அரசு ரூ.160.00 இலட்சம் வழங்கியுள்ளது.*
- *அரசாணை (D) எண் 100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி—1) துறை, நாள் 27—6—2014—ல், 2013—2014 ஆம் ஆண்டு பகுதி—2 திட்டத்தின்கீழ் ரூ.6.42 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.*

91—

பயிற்சி நிலையத்தை நவீனப்படுத்துதல்

வினா எண் 9150—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை அண்ணா மேலாண்மை நிலையத்தின் 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையத்தை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) அரசு ஆவன செய்துள்ளது.

(ஆ) அரசாணை (டி) எண் 161, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–I) துறை, நாள் 11–11–2011–ல், ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையம் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. 30 தங்கும் அறைகளில் பயிற்சியாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், இரண்டு வகுப்பறைகள் மற்றும் விடுதியில் உள்ள இரண்டு கணினி அறைகளுக்கு குளிர்சாதன வசதி, விடுதி அறைகளில் வெந்நீர் இயந்திரம், கூடுதலாக 10 கணினிகள், மல்டிமீடியா புரோஜக்டர் (Multimedia Projector) மற்றும் நூலகத்திற்குத் தேவையான புத்தகங்கள் வாங்கப்பட்டு, அனைத்து வசதிகளுடனும் 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையம் ஒரு நவீன பயிற்சி நிலையமாகத் திகழ்ந்து வருகிறது.

92—

பயிற்சி மையத்தை மேம்படுத்துதல்

வினா எண் 9151—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

[2015 செப்டம்பர் 29

(ஆ) பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தை இந்திய அளவில் ஒரு முன்னோடி பயிற்சி நிலையமாக மாற்றும் நோக்கத்துடன் புதிய அலுவலக வளாகம், புதிய வகுப்பறைகள், காணொலி காட்சியரங்கம், உள் விளையாட்டு அரங்கம், முதல்வர், விரிவுரையாளர்கள், அலுவலகப் பணியாளர்களுக்கான புதிய குடியிருப்புகள், பயிற்சியாளர்களுக்கு புதிய விடுதிகள், நவீன சமையல் கூடம், உணவருந்தும் கூடம், புதிய நூலகம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு இணக்கமான கட்டட அமைப்புகளை உருவாக்குதல் போன்றவற்றிற்காக அரசாணை (நிலை) எண் 163, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி-1) துறை, நாள் 22-11-2012-ன்படி, ரூ.36,23,34,000/- நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பயிற்சி மையம் மிக விரைவில் புதிய கட்டடத்தில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

93—

பயிற்சி நிலையத்தை மேம்படுத்துதல்

வினா எண் 9153—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலக பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மற்றும் பயிற்சி நிலையம் மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தினை நவீனமாக்கும் வகையில், இப்பயிற்சி நிலையத்தில் ஒளித்திரை (Projector) மற்றும் இதர உபகரணங்கள் வாங்கப்பட்டு, அதனடிப்படையில் தற்போது பயிற்சி வகுப்புகள் திறம்பட நடைபெற்று வருகிறது.

2015 செப்டம்பர் 29]

(ஆ) தலைமைச் செயலகப் பணியாளர்களின் திறனை தற்கால சூழ்நிலைக்குத் தக்கவாறு மேம்படுத்தும்விதமாக, ஏற்கெனவே தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் 6 பாடத் திட்டங்களுடன் ஒன்றாக கணினி பயிற்சியையும் சேர்க்க 8-5-2012 ஆம் நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி-2) துறையின் அரசாணை (நிலை) எண் 68-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, 50 மடிக்கணினிகள் வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

94—

பயிற்சி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 8157—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மேலாண்மை நிலையம் அருகிலுள்ள காஞ்சி வளாகத்தில் அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) ஆம். கட்டப்பட்டுள்ளது.

(ஆ) அகில இந்திய குடிமைப்பணி தேர்வுப் பயிற்சி மையத்திற்காக அரசாணை (நிலை) எண் 16, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி-3) துறை, நாள் 21-1-2011-ல், ரூ.10.14 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. இப்புதிய கட்டடம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கடந்த 12-10-2012 அன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைக்கப்பட்டு, இப்பயிற்சி மையம் தற்பொழுது சிறப்பாக இயங்கி வருகிறது.

95—

மயான சாலையை சீரமைத்தல்

வினா எண் 9313—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குலசேகரப்பட்டினம் அருகேயுள்ள சடையப்பபுரம் கிராம மயான சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, குலசேகரப்பட்டி அருகேயுள்ள சடையப்பபுரம் கிராம மயான சாலை ஊராட்சி சாலை ஆகும். இச்சாலை 500 மீட்டர் நீளமும், 3.75 மீட்டர் அகலமும் கொண்டது. மேற்படி மயான சாலையை சீரமைக்கும் பணி 2011–2012 ஆம் ஆண்டில் ஊரக கட்டமைப்பு (வட்டார ஊராட்சி) திட்டத்தின்கீழ், ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுவிட்டது.

96—

ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்

வினா எண் 9428—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் உள்ளதுபோல் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களை மற்ற மாநகராட்சிகளிலும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

29–11–2011 அன்று வரை சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் மட்டுமே ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் இயங்கி வந்தன. பணிச் சுமையின் காரணமாகவும், ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்களில் நிலுவையில் இருந்த வழக்குகளைக் கவனத்தில் கொண்டும், திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இரு இடங்களில் புதிய ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்த கருதப்பட்டு, அரசு ஆணை (நிலை) எண் 160, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (என்) துறை, நாள் 8–12–2011 மூலம் தோற்றுவித்து ஆணையிடப்பட்டன. அவை, முறையே 9–12–2011 மற்றும் 7–2–2012 அன்று முதல் இயங்கி வருகின்றன.

97—

குடிநீர் வசதி

வினா எண் 9593—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, கத்தேரி கிராமம், தனலட்சுமி நடராஜா நகரில் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதிக்குட்பட்ட கத்தேரி கிராமம், தனலட்சுமி நடராஜா நகரில் உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள்மூலம் பொதுமக்களுக்குப் போதுமான அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

98—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 9940—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மானுப்பட்டி—ஜம்புக்கல்கரடு சாலையை மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மானுப்பட்டி—ஜம்புக்கல்கரடு சாலை 2007–2008 ஆம் ஆண்டு பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தில் 4.57 கி.மீ. தொலைவிற்கு ரூ.1,15,20,000/– மதிப்பீட்டில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும், அதே திட்டத்தில் 2012–2013 ஆம் ஆண்டில் இத்தார்ச் சாலை பராமரிப்பும் செய்யப்பட்டுள்ளது.

99—

மகளிர் சுகாதார வளாகம்

வினா எண் 9955—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், பாப்பான்குளம் ஊராட்சி, ரெட்டிபாளையம் கிராமத்தில் மகளிர் சுகாதார வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், பாப்பான்குளம் ஊராட்சி, ரெட்டிபாளையம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் 2011–2013 ஆம் நிதியாண்டில் மகளிர் சுகாதார வளாகம் ரூ.2.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது.

100—

மகளிர் சுகாதார வளாகம்

வினா எண் 9956—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அந்தியூர் ஊராட்சி, இந்திரா நகர் ஆதி திராவிடர் காலனியில் மகளிர் சுகாதார வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அந்தியூர் ஊராட்சி, இந்திரா நகர் ஆதி திராவிடர் காலனியில், 2006–2007 ஆம் ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் ரூ.1.15 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் பொது கழிப்பிடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளதால், மீண்டும் அதே கிராமத்திற்கு புதிய மகளிர் சுகாதார வளாகம் கட்டப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

[2015 செப்டம்பர் 29

101—

மகளிர் சுகாதார வளாகம்

வினா எண் 9957—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், தாந்தோனி ஊராட்சி, 7-வது வார்டு, ஆதி திராவிடர் காலனியில் மகளிர் சுகாதார வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம், தாந்தோனி ஊராட்சியில் மகளிர் சுகாதார வளாகம், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாக திட்டத்தின்கீழ் ஏற்கெனவே கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. 7-வது ஆதி திராவிடர் காலனிக்கும், ஏற்கெனவே உள்ள மகளிர் சுகாதார வளாக கட்டடத்திற்கும் இடையே குறைந்த இடைவெளி தூரம் உள்ளதால், 7-வது வார்டு ஆதி திராவிடர் காலனியில் புதிய மகளிர் சுகாதார வளாகம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

102—

மகளிர் சுகாதார வளாகம்

வினா எண் 9959—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், சின்னக்குமாரபாளையத்தில் மகளிர் சுகாதார வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டாரம், சின்னகுமாரபாளையத்தில் ஏற்கெனவே ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் கட்டப்பட்டுள்ளது. தற்போது ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் சீரமைப்புத் திட்டம் 2011–2012–ன்கீழ் ரூ.3.34 இலட்சம் மதிப்பீட்டில் அவ்வளாகம் மறுசீரமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

103—

மானியத்தை உயர்த்துதல்

வினா எண் 9993—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் வீடுகளில் கழிவறை கட்ட வழங்கப்படும் ரூ.3,200/– அரசு மானியத்தை ரூ.8,000/– ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் திட்டமான நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கு தனி நபர் இல்லக் கழிவறை கட்டுவதற்கு மத்திய மற்றும் மாநில அரசின் மானியம் மற்றும் பயனாளிகளின் பங்குத் தொகை கீழ்க்காணுமாறு வழங்கப்படுகிறது:

1.	மத்திய அரசின் பங்கு	—	ரூ.3,200/—
2.	மாநில அரசின் பங்கு (மாநில அரசால் வழங்கப்படும் கூடுதல் தொகை உள்பட)	—	ரூ.2,500/—
3.	பயனாளி பங்குத் தொகை	—	ரூ. 900/—
	நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின்கீழ் அலகுத் தொகை	—	ரூ.6,600/—
	மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திலிருந்து வழங்கப்படும் உதவித் தொகை	—	ரூ.4,500/—
	மொத்தம்	—	ரூ.11,000/—

104—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 10336—திருமதி ப. விஜயலட்கமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், ஓலப்பாளையத்திலிருந்து செங்காளி தோட்டம், கோரைக்காடு வழியாக சந்தைப்பேட்டை வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசிராமணி கிராமம், ஓலப்பாளையம் முதல் சந்தைப்பேட்டை வரையுள்ள பகுதியில் சுமார் 60 பேர் வசிக்கின்றனர். சாலை அமைக்க கோரப்பட்டுள்ள நிலப் பகுதி,

2015 செப்டம்பர் 29]

தனிப்பட்ட நபர்களுக்கு சொந்தமான பட்டா நிலத்தில் வருவதால் பேரூராட்சிமூலம் இப்பகுதியில் தார்ச் சாலை அமைக்க வழிவகை இல்லை.

105—

காவேரி குடிநீர் வழங்குதல்

வினா எண் 10442—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, கத்தேரி கிராமம், கொறவன்காடு பகுதிக்கு காவேரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, கொறவன்காடு உள்ளடக்கிய கத்தேரி குடியிருப்புக்கு சங்கரி மற்றும் தேவூர் பேரூராட்சிகள் மற்றும் சங்கரி ஒன்றியத்திற்குட்பட்ட 245 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் கத்தேரி குடியிருப்பில் அமைந்துள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர்கள் வீதம் 12,000 லிட்டர் காவேரி குடிநீர் பகிர்மானக் குழாய்கள்மூலம் சீரான விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

106—

சிறிய பாலம்

வினா எண் 10451—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) சங்கரி தொகுதி, கத்தேரி இராமம், கள்ளிப்பாளையம், அருந்ததியர் தெரு அருகே ஓடையில் சிறிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, கத்தேரி இராமம், கள்ளிப்பாளையம் அருந்ததியர் தெருவில் சிறிய பாலம் ரூ.50,000/– மதிப்பீட்டில் 2011–2012 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் கட்டப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

107.—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 10717—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குருவப்பநாயக்கனூர் ஊராட்சியிலுள்ள கிழக்கு ஆதி திராவிடர் காலனியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குருவப்பநாயக்கனூர் ஊராட்சியிலுள்ள கிழக்கு ஆதி திராவிடர் குடியிருப்பிற்கு 2012–2013 ஆம் நிதியாண்டில் 10,000

லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

108—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 10718—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தேவனூர்புதூர் ஊராட்சி, சாதிக் நகர் காலனியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தேவனூர்புதூர் ஊராட்சி, சாதிக் நகர் காலனியில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, ஜனவரி 2013-லிருந்து மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

109—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 10719—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம்; சின்னக்குமாரபாளையம் ஊராட்சி, ராமேகவுண்டனூர் பகுதிக்கு 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், சின்னக்குமாரபாளையம் ஊராட்சியைச் சார்ந்த ராமேகவுண்டனூர் குடியிருப்பின் நடு பகுதியான காமாட்சியம்மன் நகரில் 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, 28–2–2013 முதல் மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

110—

சார்பு நீதிமன்றம்

வினா எண் 10878—திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) துறையூர் தொகுதி, துறையூர் நகரத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, துறையூர் நகரத்தில் சார்பு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

2015 செப்டம்பர் 29]

111—

சார்பு நீதிமன்றம்

வினா எண் 10886—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

112—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 10892—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், இராவணாபுரம் கிராம ஓடையில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம்,

[2015 செப்டம்பர் 29

இராவணாபுரம் கிராம ஓடையின் அருகில் நீராதாரங்கள் ஏதுமில்லாததால் தடுப்பணை கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

113—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 11110—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், பறையம்பட்டு கிராமத்திற்கு குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2013–2014 ஆம் ஆண்டு மாநில நிதிக் குழு மானியம் (மா.ஊ.) SFC/DP *திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் திறந்தவெளி கிணறு அமைக்கப்பட்டு, குடிநீர் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. தற்போது பறையம்பட்டு ஊராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு ஏதுமில்லை.*

114—

பரிசுச் சீட்டு விற்பனையைத் தடுத்தல்

வினா எண் 11112—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேல்மலையனூர் பகுதியில் வெளி மாநில பரிசுச் சீட்டு விற்பனையைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூரில் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை வைத்து விற்பனை செய்து கொண்டிருந்த அப்பகுதியைச் சேர்ந்த இருவர்மீது பரிசுச் சீட்டு ஒழுங்குமுறை சட்டம் 1998, பிரிவு 7–ன்கீழ் [Section 7 of Lottery Regulation Act, 1998 (Central Act 17 of 1998)] வழக்குகள் பதிவு செய்து, செஞ்சி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அவ்விருவரின் மீதும் தலா ரூ.1,000/– அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும், மேல்மலையனூர் பகுதியில், வெளி மாநில பரிசுச் சீட்டு விற்பனை போன்ற குற்ற செய்கை நடைபெறாவண்ணம் அப்பகுதி காவல் துறையினரால் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

115—

ஊராட்சியைப் பிரித்தல்

வினா எண் 11260—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், தெற்கு வள்ளியூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை

இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், தெற்கு வள்ளியூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

116—

சிறிய நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 12361—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், அரிமலை ஊராட்சி, புதுமனை காலனியில் சிறிய நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அரிமலை ஊராட்சி, புதுமனை காலனியில் உள்ள மக்களுக்கு போதுமான குடிநீர் வசதி செய்யப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், சிறிய நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் எழவில்லை.

117—

இலவச தொகுப்பு வீடுகள்

வினா எண் 12365—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) தென்காசி தொகுதி, செங்கோட்டை வட்டம், குத்துக்கல் வலசையில் இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, செங்கோட்டை வட்டம், குத்துக்கல் வலசையில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், 2011–2012 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிடர்களுக்கு 15 வீடுகளும், இதர பிரிவினருக்கு 10 வீடுகளும், ஆக மொத்தம் 25 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. 2012–2013 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிடர்களுக்கு 12 வீடுகளும், இதர பிரிவினருக்கு 8 வீடுகளும், ஆக மொத்தம் 20 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2013–2014 ஆம் நிதியாண்டில் 27 வீடுகள் ஒதுக்கீடு செய்து, வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

118—

மகளிர் சுகாதார வளாகம்

வினா எண் 13470—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், கணக்கம்பாளையம் ஊராட்சி, ஜீவா நகரில் மகளிர் சுகாதார வளாகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கணக்கம்பாளையம் ஊராட்சி, எம்.ஜி.ஆர். நகரில் ஏற்கெனவே ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இவ்வளாகமானது ஜீவா நகருக்கு அருகிலேயே உள்ளதால், அதனை இரு நகர் மக்களும் பயன்படுத்திக் கொள்கின்றனர். மேலும், ஜீவா நகரில் போதிய இட வசதி இல்லாததால், புதிய மகளிர் சுகாதார வளாகம் கட்ட வழிவகை ஏதுமில்லை.

119—

மகளிர் சுகாதார வளாகம்

வினா எண் 13471—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், ஆர்.வேலூர் ஆதி திராவிடர் காலனியில் மகளிர் சுகாதார வளாகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆர்.வேலூர் ஊராட்சி, ஆர்.வேலூர் ஆதி திராவிடர் காலனியில் ஏற்கெனவே மகளிர் சுகாதார வளாகம் ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில்

கட்டப்பட்டுள்ளது. தற்போது, அவ்வளாகம் ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் சீரமைப்புத் திட்டம் 2011–2012–ன்கீழ் ரூ.1.11 இலட்சத்தில் மறுசீரமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, இங்கு புதிய மகளிர் சுகாதார வளாகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

120—

குடிநீர் பற்றாக்குறையைப் போக்குதல்

வினா எண் 13481—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், புங்கமுத்தூர் ஊராட்சி, குடிநீர் பற்றாக்குறையை போக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டாரம், புங்கமுத்தூர் ஊராட்சியில் தற்போது கணக்கம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பூலாங்கிணர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் உள்ளூர் நீர் ஆதாரங்களின்மூலம் நபர் ஒன்றுக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் தினசரி விநியோகம் செய்யப்படுகிறது. இதுதவிர, உள்ளூர் நீர் ஆதாரம்மூலம் இதர பயன்பாட்டிற்கு தேவைக்கு ஏற்ப ஊராட்சியின்மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

121—

சமுதாயக் கூடம்

வினா எண் 13508—திரு. கு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், பெருமாள்ராஜப்பேட்டை ஊராட்சி, சாலிகிராமத்தில் உள்ள நரிக்குறவர் காலனியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியம், பெருமாள்ராஜப்பேட்டை ஊராட்சி, சாலிகிராமத்தில் உள்ள நரிக்குறவர் காலனியில் வசிக்கும் மக்கள் அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவதால் அங்கு சமுதாயக் கூடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

122—

புதிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

வினா எண் 13523—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

2015 செப்டம்பர் 29]

123—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 13617—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, பரமேஸ்வரமங்கலம் ஊராட்சி, பரமேஸ்வரமங்கலம் கிராமத்திற்கு கூடுதலாக 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நெமிலி ஒன்றியம், பரமேஸ்வரமங்கலம் ஊராட்சியைச் சார்ந்த பரமேஸ்வரமங்கலம் குடியிருப்பின் மக்கள் தொகைக்கேற்ப பயனிலுள்ள 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுகளுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் போதுமானதாக உள்ளதால், கூடுதலாக 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

124—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 14121—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், எலையமுத்தூர் கிராம மேற்கு பகுதியில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், எலையமுத்தூர் கிராம மேற்கு பகுதியில் தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் 2013–2014 ஆம் ஆண்டு தடுப்பணை அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

125—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 14123—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், செல்லப்பம்பாளையம் கிராமத்தில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், செல்லப்பம்பாளையம் கிராமத்தில் தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் 2012–2013 ஆம் நிதியாண்டில் 8 மீட்டர் அகலம் கொண்ட தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29]

126—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 14124—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், சின்னக்குமாரபாளையம், எத்திகல்மேடு பகுதியில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், சின்னக்குமாரபாளையம், எத்திகல்மேடு பகுதியில் தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் 2012–2013 ஆம் ஆண்டு தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது.

127—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 14125—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், பெரியபாப்பனூத்து கிராமம், பி.ஏ.பி. வடக்கு ஓடையில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், பெரியபாப்பனூத்து கிராமம், பி.ஏ.பி. வடக்கு ஓடையில் தடுப்பணை கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

128—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 14126—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், பெரியபாப்பனூத்து கிராமம், உடுக்கம்பாளையம் தின்னப்பட்டியின் பள்ளத்தில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், பெரியபாப்பனூத்து கிராமம், உடுக்கம்பாளையம் தின்னப்பட்டியின் பள்ளத்தில் தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது.

129—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 14127—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், உடுக்கம்பாளையம்–எரிசனம்பட்டி சாலையில் பெரும்பள்ளம் இடத்தில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், உடுக்கம்பாளையம்–எரிசனம்பட்டி சாலையில் பெரும்பள்ளம் இடத்தில் தடுப்பணை கட்டுவதற்குத் தேவையான குடிநீர் ஆதாரங்கள் இல்லாததால் தடுப்பணை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

130—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 14128—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், தேவனூர்புதூர் ஊராட்சி, மயிலாடும்பாறை பகுதியில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், தேவனூர்புதூர் ஊராட்சி, மயிலாடும்பாறை பகுதியில் தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் 2013–2014 ஆம் ஆண்டு தடுப்பணை அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

131—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 14129—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை பகரிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், தேவனூர்புதூர் கிராமம், நவக்கரை ஓடையில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், தேவனூர்புதூர் கிராமம், நவக்கரை ஓடையில் குடிநீர் ஆதாரங்கள் இல்லாததால் தடுப்பணை கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

136—

சாலை வசதி

வினா எண் 14478—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை பகரிப்பாரா*

(அ) ஆனகிரி பாமன்தொட்டி சாலையில் ஆனுசோனை கிராமத்திற்கு சாலை வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுபட்ட வினா எண்கள் 132,133,134,135-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, ஆளகிரி–ராமன்தொட்டி சாலை முதல் ஆலுசோனை கிராமத்திற்கு தார்ச் சாலை அமைக்கும் பணி 0/0-0/840 கி.மீ. நீளத்திற்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் 'தாய்' திட்டம் 2011–2012-ல் எடுக்கப்பட்டு, 20–12–2012–ல் பணி முடிக்கப்பட்டு, தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

137—

வணிக வளாகம்

வினா எண் 14737—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் பேரூராட்சியில் வணிக வளாகம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் பேரூராட்சியில் வணிக வளாகம் கட்டுவதற்கு போதுமான இட வசதி இல்லாததால், இங்கு புதியதாக வணிக வளாகம் கட்ட இயலாது.

144—

கோழிப் பண்ணை அமைத்தல்

வினா எண் 15416—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விடுபட்ட வினா எண்கள் 138,139,140,141,142,143-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

[2015 செப்டம்பர் 29

மத்திய சிறையில் சிறைவாசிகள் பராமரிக்கும் வகையில் பால் பண்ணை மற்றும் கோழிப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

தமிழகத்திலுள்ள மத்திய சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறைவாசிகள் பராமரிக்கும் வகையில் பால் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், தற்போது பாளையங்கோட்டை, மத்திய சிறையில் சோதனை அடிப்படையில் கோழிகள் வளர்க்கப்பட்டு, சிறை அங்காடி (Prison Bazaar) மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

145—

மருத்துவமனை தரம் உயர்த்துதல்

வினா எண் 15417—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மத்திய சிறையில் உள்ள மருத்துவமனையை பல் வைத்தியம், கண் சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு சிகிச்சை பிரிவுகளைக் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சிறைவாசிகளுக்கு சிறப்புச் சிகிச்சைகள் சென்னை அரசு பல் மருத்துவமனையிலும், சென்னை எழும்பூரிலுள்ள அரசு கண் மருத்துவமனையிலும் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, மத்திய சிறை மருத்துவமனைகளில் பல் மற்றும் கண் மருத்துவத்திற்கு

2015 செப்டம்பர் 29]

சிறப்புச் சிகிச்சைப் பிரிவுகள் துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

146—

புதிய ஊராட்சி ஒன்றியம்

வினா எண் 15767—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

147—

நீதிமன்ற வளாகம் கட்டும் பணி

வினா எண் 16428—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டும் பணியை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு ரூ.847.43 இலட்சத்திற்கு அரசாணை (நிலை) எண் 532, உள் துறை, நாள் 19—9—2011—ல் திருத்திய நிருவாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, மேற்கண்ட பணியானது தற்போது நிறைவடைந்து, கட்டடம் நீதித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

143—

வகுப்பறைக் கட்டடத்தை புனரமைத்தல்

வினா எண் 16594—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், மூதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பழுதடைந்துள்ள இரண்டாம் மற்றும் நான்காம் வகுப்பறை கட்டடங்களை புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2012—2013 ஆம் ஆண்டைய ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, மூதூர் ஊராட்சி ஒன்றிய

தொடக்கப் பள்ளியின் பழுதடைந்துள்ள இரண்டாம் மற்றும் நான்காம் வகுப்பறை கட்டடங்கள் ரூ.3,30,000/– செலவில் புனரமைக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளன.

149—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 16826—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், கணபதிபுரம் ஊராட்சி, கணபதிபுரம் கிராமத்தில் கூடுதலாக 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், நெமிலி ஒன்றியம், கணபதிபுரம் ஊராட்சியைச் சார்ந்த கணபதிபுரம் குடியிருப்பில் தற்போது பயனிலுள்ள 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம்மூலம் வழங்கப்பட்டு வரும் குடிநீர் மக்கள் தொகைக்கேற்ப போதுமானதாக உள்ளது. எனவே, இக்குடியிருப்புக்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

150—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 16827—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 29

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், முருங்கை ஊராட்சிக்கு புதிய ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நெமிலி ஒன்றியம், கணபதிபுரம் ஊராட்சியைச் சார்ந்த முருங்கை குடியிருப்பின் மக்கள் தொகைக்கேற்ப 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம்மூலம் வழங்கப்படுவதால், புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

153—

குடிநீர் வசதி

வினா எண் 17120—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், சிறுபாலை கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், சிறுபாலை கிராமத்திற்கு வழங்கப்படும் குடிநீர் தற்போதைய நிலவரப்படி போதுமானதாக உள்ளது.

விடுபட்ட வினா எண்கள் 151,152-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

164—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 17779—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி பேரூராட்சி, கீழாயூர் காலனி, இளையான்குடி ஒன்றியம், விஜயன்குடிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, பகமை நகருக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், கீழாயூர் காலனி, இளையான்குடி பேரூராட்சிக்குட்பட்ட 13-வது வார்டு ஆகும். அதன் மக்கட்தொகை 1,100 ஆகும். இப்பகுதிக்கு பேரூராட்சியின் பராமரிப்பில் கீழாயூர் காலனி அருகில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் மூலமும், காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமும் கீழாயூர் காலனியில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பகமை நகர் பகுதியானது இளையான்குடி ஒன்றியம், விஜயன்குடி ஊராட்சி, விஜயன்குடி கிராமத்திற்கு உட்பட்டது. இக்கிராமத்தின் தற்போதைய மக்கட் தொகை 222. இங்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் செயல்பட்டு, ஊராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்புகளுக்கு தற்போதுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளே போதுமானதாகும். எனவே, இப்பகுதிகளுக்கு புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் தேவை எழவில்லை.

[2015 செப்டம்பர் 29

155—

தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் 17783—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், காவியந்திடல் கிராமத்திலுள்ள குடிநீர் குளத்தைச் சீரமைத்து, தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், சாலியந்திடல் கிராமத்தில் உள்ள குடிநீர் குளத்தைச் சுற்றி சுற்றுச் சுவர் 2012–2013 ஆம் ஆண்டு 'தாய்' திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ளது.

(ஆ) எழாது.

156—

உறை கிணறு அமைத்தல்

வினா எண் 17830—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி பேரூராட்சி அலுவலக வளாகத்திலும் மற்றும் கோட்டைகாரத் தெருவிலும் குடிநீர் வசதிக்காக நம்பியாற்றின் கரையோரம் புதியதாக உறை கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குனேரி பேரூராட்சி அலுவலக வளாகத்திலும் மற்றும் கோட்டைகாரத் தெருவிலும் குடிநீர் வசதிக்காக நம்பியாற்றின் கரையோரம் ஏற்கெனவே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் உறை கிணறு உள்ளதால், இங்கு புதியதாக உறை கிணறு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

158—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 18075—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், செம்பேடு ஊராட்சிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், செம்பேடு ஊராட்சியில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் போதுமான நீர் ஆதாரத்துடன்கூடிய தனித்தனி மின் விசைத் திட்டங்கள் பயன்பாட்டில் உள்ளன. எனவே, செம்பேடு ஊராட்சிக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

விடுப்பட்ட வினா எண் 157-க்கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

159—

வணிக வளாகம்

வினா எண் 18119—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயல் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, புதுவயல் பேரூராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தில் ஏற்கெனவே வணிக வளாகம் கட்டப்பட்டு இயங்கி வருவதால், வணிக வளாகம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

160—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 18128—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, பட்டத்தரசி காட்டு உடைக்குளத்தில் கலையரங்கம் கட்டவும், அன்பு நகர் மற்றும் காட்டு உடைக்குளத்தில் சிமெண்ட் சாலைகள் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை பேரூராட்சியில் பட்டத்தரசிக் காட்டு உடைக்குளம் பகுதியில் கலையரங்கம் அமைக்கும் அளவிற்கு பேரூராட்சிக்கு சொந்தமாக போதிய இட வசதி இல்லாததால், மேற்படி பகுதியில் தற்சமயம் கலையரங்கம் அமைக்க வழிவகை இல்லை. மேலும், அன்பு நகர், காட்டு உடைக்குளம் பகுதிகளில் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

161—

பசுமை வீடு கட்டுதல்

வினா எண் 18306—திரு. ஒ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும் பசுமை வீடுகள் திட்டத்தை பேரூராட்சி பகுதிகளுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பசுமை வீடுகள் திட்டம் பேரூராட்சிகளில் நடைமுறையில் இல்லை. இத்திட்டத்தினை பேரூராட்சிகளில் விரிவுபடுத்துவது என்பது அரசின் கொள்கை முடிவு ஆகும். அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு இத்திட்டம் பேரூராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்படும்.

162—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 18514—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதியில் நகரப் பேருந்துகளுக்கும், சிற்றுந்துகளுக்கும் தனியே பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பேருந்து நிலையம் ஏற்கெனவே உள்ள நிலையில், சிற்றுந்துகளுக்கும், பேருந்துகளுக்கும் தனியே புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான திட்டம் ஏதும் இல்லை.

163—

சார்பு நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 18555—திரு. பி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளத்தில் சார்பு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

2015 செப்டம்பர் 29]

164—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 18746—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஒன்றியம், பாவாலி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஒன்றியம், பாவாலி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் 2012–2013 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பாவாலி ஊராட்சி பொது நிதியின்கீழ் ஆறு தெரு விளக்குகள் ரூ.1,20,000/– மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

165—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 18781—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை நகராட்சிக்கு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை நகராட்சியில் 18 ஆழ்துளை கிணறுகளுடன்கூடிய குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. தற்போதுள்ள மக்கள் தொகைக்கு (44,083) நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 74 லிட்டர் என்ற அளவில் மொத்தமாக நாளொன்றுக்கு 3.26 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவை 90 லிட்டராக அதிகரிக்கும்பொருட்டு ரூ.8.32 கோடி ரூபாய் செலவில் குடிநீர் அபிவிருத்தித் திட்ட அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, 1–12–2013 முதல் சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

166—

சாலையை சீரமைத்தல்

வினா எண் 18798—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், காரிசேரி கிராமம், விருதுநகர்–சிவகாசி நெடுஞ்சாலையிலிருந்து மெப்கோ பொறியியல் கல்லூரி செல்லும் பழுதடைந்த சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியம், காரிசேரி கிராமம், விருதுநகர்–சிவகாசி நெடுஞ்சாலையிலிருந்து மெப்கோ பொறியியல் கல்லூரி சாலை

2015 செப்டம்பர் 29]

வரை ரூ.17.10 இலட்சம் மதிப்பீட்டில் 13-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

167—

மாணவர் விடுதி கட்டடம்

வினா எண் 19104—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு நிரந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என அறிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பு தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அக்கல்லூரிக்கு கட்டடம் கட்ட ரூ.6,88,00,000/- நிதி ஒப்பளிப்பு அரசாணை (நிலை) எண் 405, சட்ட (சக)த் துறை, நாள் 18-7-2013-ல் வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமானப் பணிகளை 31-5-2015-க்குள் நிறைவு செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வாறு அக்கல்லூரிக்கு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டவுடன், மாணவர்களுக்கு விடுதி கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

168—

கல்லூரிக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 19107—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ், வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, நிரந்தர கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 405, சட்ட (சக்த்) துறை, நாள் 18–7–2013–ல் ரூ.6 கோடியே 88 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) பொதுப் பணித் துறையால் தற்போது கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்டுமானப் பணிகளை 31–5–2015–க்குள் நிறைவு செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

169—

பல்கலைக்கழகத்திற்குக் கட்டடம்

வினா எண் 19108—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை பெருங்குடியில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

2015 செப்டம்பர் 29]

அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ், வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, சென்னை பெருங்குடி கொட்டிவாக்கம் கிராமத்தில் ஒரு முழுமையான வளாகம் கட்ட ரூ.59 கோடியே 27 இலட்சம் அரசாணை (நிலை) எண் 482, சட்ட (சக), துறை, நாள் 24–9–2013–ல் ஒப்பளிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) பொதுப் பணித் துறையால் பல்கலைக்கழக வளாகக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அக்கட்டுமானப் பணிகள் முடிவுற்று, வரும் கல்வியாண்டு 2015–2016 முதல் இப்புதிய வளாகத்தில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் இயங்க திட்டமிடப்பட்டுள்ளது.

170—

தமிழ் சட்ட நூல்கள்

வினா எண் 18110—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டக் கல்வியை தமிழில் பயில தமிழ் சட்ட நூல்கள் வெளியிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சட்டப் படிப்பில் மொத்தம் உள்ள 32 பாடங்களுள் 27 பாடங்களுக்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் தமிழில் சட்டப் புத்தகங்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 சட்டப் பாடங்களுக்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் விரைவில் தமிழில் புத்தகங்கள் வெளியிடப்படும்

(ஆ) எழவில்லை.

171—

விளையாட்டுத் திடல் அமைத்தல்

வினா எண் 19314—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கண்டனூர் பேரூராட்சியில் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கண்டனூர் பேரூராட்சியில் ஏற்கெனவே இரண்டு விளையாட்டுத் திடல்கள் பயன்பாட்டில் உள்ளதாலும், பூங்கா அமைத்திட பேரூராட்சிக்கு சொந்தமான இடம் இல்லாததாலும், அப்பேரூராட்சியில் கூடுதலாக விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்கா அமைத்துத் தர வழிவகை இல்லை.

172—

பேருந்து நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றுதல்

வினா எண் 19490—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி பேருந்து நிலையத்தில் குடிநீர், கழிப்பிட வசதி, விளக்கு வசதிகள் போன்ற அனைத்து வசதிகளும் உள்ள நிலையில், தற்போது இயங்கி வரும் பேருந்து நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றம் செய்திட திட்டம் ஏதுமில்லை.

173—

வீட்டு குடிநீர் இணைப்பு

வினா எண் 18491—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, கடையல் பேரூராட்சி பகுதியில் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, கடையல் பேரூராட்சி பகுதியில் வீட்டு குடிநீர் இணைப்பிற்காக விண்ணப்பித்தவர்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

174—

கடல் நீரை குடிநீராக்கும் திட்டம்

வினா எண் 19634—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

காஞ்சிபுரம் மாவட்டம், கிழக்குக் கடற்கரைச் சாலை, நெம்மேலியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டப் பணிகளை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறனுடைய கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், கிழக்குக் கடற்கரைச் சாலை, நெம்மேலியில் தொடங்கி வைக்கப்பட்டு, சென்னை நகர மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

176—

குடிநீர் வசதி

வினா எண் 19792—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் தொகுதி, வி.முத்துலிங்கபுரம் ஊராட்சி, பெத்துசெட்டிபட்டி கிராமம், கூரைக்குண்டு ஊராட்சி, செவல்பட்டி கிராமம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு குடிநீர் வசதி, கழிப்பிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், கூரைக்குண்டு ஊராட்சி, செவல்பட்டி கிராமம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 2011–2012 ஆம் ஆண்டில்

விடுபட்ட வினா எண் 175-கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குடிநீர் பாதுகாப்புப் பணி மற்றும் கழிப்பறை பழுதுபார்ப்புப் பணி ஆகியன செய்து முடிக்கப்பட்டு உள்ளன. மேலும், விருத்துலிங்கபுரம் ஊராட்சி, பெத்துசெட்டிபட்டி கிராமம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 2013–2014 ஆம் ஆண்டு ஆழ்துழாய் கிணறு அமைத்து, புதிதாக மினி பவர் பம்பு அமைத்தல் மற்றும் கழிப்பறை பழுதுபார்ப்புப் பணி ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது மாணவர்களின் பயன்பாட்டில் உள்ளன.

177—

குடிநீர் வசதி

வினா எண் 19819—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் தொகுதி, மங்கலம் ஊராட்சி, மங்கலம் கிராமத்தில் குடிநீர் கிணற்றை ஆழப்படுத்தி குழாய் அமைத்து மின் இயக்கிமூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, மங்கலம் ஊராட்சி, மங்கலம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து, தரை நிலை தொட்டி அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

178—

குடிநீர் வசதி

வினா எண் 19857—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் வட்டம், மங்கலம் ஊராட்சி, அக்ரகாரபுத்தூரில் கட்டப்பட்ட நிலமட்ட தொட்டிக்கு திருப்பூர் புதிய மேம்பாட்டு குடிநீரை குழாய் அமைத்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் சட்டமன்ற தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மங்கலம் ஊராட்சியில் அக்ரகாரபுத்தூர் ஒரு முழு அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்பாகும். மங்கலம் ஊராட்சி பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட திருப்பூர் மற்றும் 412 வழியோரக் கிராமங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் (2-வது திட்டம்) மற்றும் காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழகக் கூட்டுக் குடிநீர்த் (3-வது திட்டம்) திட்டங்களின் பயனாளியாக 6 இராம ஊராட்சிகளுக்கு புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழக குடிநீர்த் திட்டத்தை நீராதாரமாகக் கொண்டு, புதிய குடிநீர்த் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் மங்கலம் ஊராட்சியிலுள்ள அனைத்துக் குடியிருப்புகளும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் அக்ரகாரபுத்தூரின் கூடுதல் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

180—

உயர் நீதிமன்றத்தில் தமிழ் மொழியை அறிமுகப்படுத்துதல்

வினா எண் 20019—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில் தமிழ் மொழியை அறிமுகப்படுத்திட மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுபட்ட வினா எண் 179-கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில் தமிழ் மொழியை அறிமுகப்படுத்திட மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

181—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 20048—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், சித்தானூர் ஆதி திராவிடர் குடியிருப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், சித்தானூர் ஆதி திராவிடர் குடியிருப்பின் மக்கள் தொகை 320. இக்குடியிருப்பில் 1995 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்பில் மேற்கொண்டு கூடுதலாக குடிநீர்த் தொட்டி கட்டும் தேவை எழவில்லை.

[2015 செப்டம்பர் 29

182—

புதிய ஊராட்சி

வினா எண் 20088—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்திலுள்ள சித்தாணங்கூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து மாமந்தூர் ஊராட்சியாகவும், டி.கொளத்தூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து கொண்டசமுத்திரம் ஊராட்சியாகவும், ஆமூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து துலக்கம்பட்டு ஊராட்சியாகவும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். உளுந்தூர்பேட்டை தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்திலுள்ள சித்தாணங்கூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து மாமந்தூர் ஊராட்சியாகவும், டி.கொளத்தூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து கொண்டசமுத்திரம் ஊராட்சியாகவும், ஆமூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து துலக்கம்பட்டு ஊராட்சியாகவும்கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

2015 செப்டம்பர் 29]

183—

ஊராட்சியைப் பிரித்தல்

வினா எண் 20092—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், ஏ.சாத்தனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், ஏ.சாத்தனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

184—

புதிய நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 20097—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் ஒன்றியம், துங்காவி ஊராட்சி, சீலநாயக்கன்பாட்டி ஆதி திராவிடர் காலனியில் புதியதாக நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம், துங்காவி ஊராட்சி, சிலநாயக்கன்பாட்டி ஆதி திராவிடர் காலனி மக்கள் தொகைக்கு ஏற்ப தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 2010–2011 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

185—

மாவட்ட அமர்வு நீதிமன்றம்

வினா எண் 20108—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைப்பதற்கு அரசாணை நிலை எண் 322, உள் (நீதிமன்றங்கள்–3) துறை, நாள் 20–5–2013–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

186—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 20113—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) வால்பாறை தொகுதி, பொள்ளாச்சி–கோட்டம்பட்டியில் உயர்மட்டப் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெத்தநாயக்கனூர் ஊராட்சியையும், பொள்ளாச்சி (தெற்கு) ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஜமீன் கோட்டம்பட்டி ஊராட்சியையும் இணைத்து, பாலாற்றின் குறுக்கே 2001–2002 ஆம் ஆண்டு பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையின்மூலம் தரைமட்டப் பாலம் கட்டப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதனை உயர்மட்டப் பாலமாக அமைக்க அவசியம் எழவில்லை.

188—

நகராட்சியாக தரமுயர்த்துதல்

வினா எண் 20440—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை பேரூராட்சியில் மக்கள் தொகை மற்றும் வருவாய் குறைவாக உள்ளதால், தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின்படி அப்பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த இயலாது.

விடுபட்ட வினா எண் 187-கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

189—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 20441—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக கழிவு நீர் கசடு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

190—

குடிநீர் பற்றாக்குறை போக்குதல்

வினா எண் 20450—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பால் மற்றும் சித்தமல்லி பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்கிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பால் மற்றும் சித்தமல்லி பகுதிகளின் குடிநீர் பற்றாக்குறையைப் போக்கிட இயற்கை இடர்பாடுகள் நிதியின்கீழ், கொள்ளிடம் ஆற்றில் 8 இடங்களில்

2015 செப்டம்பர் 29]

ஆழ்துளை குழாய்கள் அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

193—

புதிய ஒன்றியம்

வினா எண் 21277—திரு. ஏ.ஏ. கருப்பசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், அவினாசி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து சேவூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். திருப்பூர் மாவட்டம், அவினாசி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து சேவூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைக்கக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

194—

சார்பு நீதிமன்றம்

வினா எண் 21278—திரு. ஏ.ஏ. கருப்பசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண்கள் 191,192-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

(அ) திருப்பூர் மாவட்டம், அவினாசியில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், அவினாசியில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கான ஆணை அரசாணை நிலை எண் 935, உள் (நீதிமன்றங்கள்-3) துறை, நாள் 16-12-2014-ல் வெளியிடப்பட்டுள்ளன.

195—

பேருந்து நிலையம்

வினா எண் 21808—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சியில் அடிப்படை வசதிகளுடன் பேருந்து நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மம்சாபுரம் பேரூராட்சி, ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் இராஜபாளையம் நகராட்சிகளிலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. இப்பேரூராட்சிக்கு தினந்தோறும் குறைந்த எண்ணிக்கையில் பேருந்துகள் வந்து செல்வதாலும், புதிய பேருந்து

2015 செப்டம்பர் 29]

நிலையம் அமைக்க அரசுக்கு சொந்தமான நிலம் ஏதுமில்லாததாலும், புதிய பேருந்து நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

196—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 21958—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக கழிவு நீர் கசடு மேலாண்மை திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

198—

பசுமை வீடுகள் கட்டுதல்

வினா எண் 22260—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விடுப்பட்ட வினா எண் 197-க்கான விளக்கத்தினை பக்கம் 579-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் பேரூராட்சி, 4-வது வார்டில் குடிசை வீடுகளில் வாழும் குடும்பத்தினருக்கு தமிழக அரசின் பசுமை வீடுகள் திட்டத்தில் வீடுகளை கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

தமிழக அரசின் பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ரீத்தாபுரம் பேரூராட்சியில் தற்போது நடைமுறையில் இல்லை. பேரூராட்சிகளில் இத்திட்டம் வரும்போது அந்தப் பகுதி மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து, பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

199—

புதிய நீதிமன்றக் கட்டடம்

வினா எண் 22262—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்ட தலைமை நீதிமன்றம் நலிவடைந்த நிலையில் உள்ளதால், புதிய நீதிமன்றக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைமையிடமான நாகர்கோவிலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் ரூ.1,550.47

2015 செப்டம்பர் 29]

இலட்சத்தில் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 809, உள் துறை, நாள் 8–10–2013–ல் நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

200—

பாலம் கட்டுதல்

வினா எண் 22324—திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி தொகுதி, மானூர் ஒன்றியம், புதூர் ஊராட்சி, புதூர்–உகந்தான்பட்டி இடையே சிவனையார் குளத்தில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி தொகுதி, மானூர் ஊராட்சி ஒன்றியம், புதூர் ஊராட்சி, புதூர்–உகந்தான்பட்டி சாலை அமைக்கும் பணி கி.மீ. 1/0–4/6–ல் ஊரக உட்கட்டமைப்புத் திட்டம் 2011–2012–ன்கீழ் ரூ.56.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இச்சாலையின் குறுக்கே பனஞ்சி குளத்தில் (சிவனையார்குளம்) 6 வரிசை கொண்ட குழாய் பாலம் ரூ.3,29,595/– மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

(பேரவைக் கூட்டத் தொடர் முடியும் வரை தொடர்புடைய உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று தற்காலிக நீக்கம் செய்யப்பெற்றுள்ளதால் வரிசை எண்கள் 2, 3, 4, 6, 10, 43, 132, 133, 134, 135, 138, 139, 140, 141, 142, 143, 151, 152, 157, 175, 179, 187, 191, 192, 197 தொடர்புடைய வினாக்கள்—விடைகள் இப்பட்டியலில் இடம்பெறவில்லை)

[2015 செப்டம்பர் 29

பட்டியல் 19

1—

சுரங்கப்பாதை அமைத்தல்

வினா எண் 22326—திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலி மாநகராட்சி சந்திப்பு அண்ணா சிலை, வண்ணாரப்பேட்டை, சமாதானபுரம் சந்திப்புகளில் சாலைகளைக் கடப்பதற்கு சுரங்கப்பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சாலைகள், மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமானவை. எனவே, சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள சாலை சந்திப்புகளில் சாலைகளைக் கடப்பதற்கான சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் ஏதும் திருநெல்வேலி மாநகராட்சியில் இல்லை.

2—

புதிய குடிநீர் திட்டம்

வினா எண் 22330—திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி தொகுதி, நாரணம்மாள்புரம், சங்கர் நகர், பேரூராட்சி பகுதிகளுக்கு புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி தொகுதிக்குட்பட்ட, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சங்கர் நகர், நாரணம்மாள்புரம் பேரூராட்சி பகுதி தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் தனி மின்விசைத் திட்டம்மூலம் நாளொன்றுக்கு முறையே 9 இலட்சம் லிட்டர் மற்றும் 25 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு இப்பேரூராட்சி பகுதிகளுக்கு போதுமானதாக உள்ளது. ஆகவே, தற்போது சங்கர் நகர், நாரணம்மாள்புரம் பேரூராட்சி பகுதிகளுக்கு புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

3—

தனி ஒன்றியம்

வினா எண் 22512—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டம், அரூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து தீர்த்தமலையை மையமாக வைத்து தனி ஒன்றியம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினைப் பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாகத் தீர்மானம்

உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும் பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். விழுப்புரம் மாவட்டம், அரூர் வட்டம், அரூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

4—

காவேரிக் குடிநீர் இணைப்பு

வினா எண் 22574—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி ஒன்றியம், துட்டம்பட்டி ஊராட்சி, வணிச்சம்பட்டியிலிருந்து இரட்டைவிரலி பகுதியில் காவேரிக் குடிநீர் இணைப்பு கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி ஒன்றியம், துட்டம்பட்டி ஊராட்சி, வணிச்சம்பட்டியில் ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பொதுக் குழாய்மூலம் இரட்டைவிரலி குடியிருப்புக்குப் போதுமான அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு மார்ச் 1996 ஆம் ஆண்டு ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் வணிச்சம்பட்டியில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து வடிவமைக்கப்பட்ட அளவிற்கு வடிவமைக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு மட்டும் குடிநீர் வழங்கப்பட்டு, திட்டம் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, இரட்டைவிரலி பகுதிக்கு காவேரிக் குடிநீர் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2015 செப்டம்பர் 29]

5—

சிமெண்ட் தளம் அமைத்தல்

வினா எண் 22597—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம், திருமணவயல் ஊராட்சி, கோட்டூர் மாரியம்மன் கோயிலைச் சுற்றி சிமெண்ட் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம், திருமணவயல் ஊராட்சி, கோட்டூர் மாரியம்மன் கோயிலைச் சுற்றி சிமெண்ட் தளம் அமைக்கும் பணி ரூபாய் 3.00 இலட்சம் மதிப்பீட்டில் 2012–2013 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செய்யப்பட்டுள்ளது.

6—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 23045—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், பருத்திபுத்தூர் ஊராட்சி, பருத்திபுத்தூர் அருந்ததியர் காலனிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, பருத்திபுத்தூர் ஊராட்சியிலுள்ள அருந்ததியர் காலனியின் மக்கள்தொகைக்கேற்ப தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விதிமுறைகளின்படி 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீராதாரத்துடன் தனி மின்விசைத் திட்டம் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

7—

தடுப்புச் சுவர் அமைத்தல்

வினா எண் 23047—திரு. மு. முருகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகுளத்தூர் தொகுதி, ரோஸ்மா நகர் கிராமத்தில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூர் தொகுதி, ரோஸ்மா நகர் கிராமத்தில் ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தில் (தொகுப்பு எண் 22) 54 வீடுகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக கடற்கரையிலே இருந்து 60 மீட்டர் தொலைவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கடற்கரையில் அரிப்பு இல்லாத காரணத்தால் தடுப்புச் சுவர் அமைக்கத் தேவையில்லை.

2015 செப்டம்பர் 29]

8—

நீதிமன்றக் கட்டடம்

வினா எண் 23051—திரு. மு. முருகன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, முதுகுளத்தூரில் நீதிமன்றக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ.497.31 இலட்சம் வழங்கி அரசாணை (நிலை) எண் 967, உள் துறை, நாள் 13–12–2012–ல் ஆணைகள் வெளியிடப்பட்டு கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையினரால் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

10—

கூட்டுக் குடிநீர் வழங்குதல்

வினா எண் 23089—திருமதி ம. சக்தி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி ஒன்றியம், சட்டநாதபுரம் ஊராட்சியில் திருவாலி, காரைமேடு, கீழசட்டநாதபுரம் பகுதிகளுக்குக் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடுபட்ட வினா எண் 9-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சீர்காழி ஒன்றியம், திருவாலி ஊராட்சியிலுள்ள திருவாலிக் குடியிருப்பு மற்றும் காரைமேடு ஊராட்சியிலுள்ள காரைமேடுக் குடியிருப்பு ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்ட குடிநீர்த் தரம் பாதிக்கப்பட்ட 295 குடியிருப்பு மற்றும் 310 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

கீழசட்டநாதபுரம் ஊராட்சியிலுள்ள கீழசட்டநாதபுரம் குடியிருப்பிற்கு சீர்காழி மற்றும் செம்பனார்கோவில் ஒன்றியங்களைச் சார்ந்த 184 கடலோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் கொள்ளிடம் ஆற்று நீர் வழங்கப்பட்டு வருகிறது.

11—

குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குதல்

வினா எண் 23103—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பாப்பிரெட்டிபட்டி வட்டம், மொரப்பூர் ஒன்றியம், கோபிசெட்டிப்பாளையம் ஊராட்சி, பழைய பாப்பிரெட்டிபட்டி ஊரில் நிலவி வரும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாப்பிரெட்டிபட்டி வட்டம், மொரப்பூர் ஒன்றியம், கோபிசெட்டிப்பாளையம் ஊராட்சி, பழைய

2015 செப்டம்பர் 29]

பாப்பிரெட்டிபட்டி கிராமத்தில் கோட்ரப்பட்டி ஏரியில் ஏற்கெனவே உள்ள திறந்தவெளி கிணற்றிலிருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. மேலும், ஊராட்சிப் பொது நிதியிலிருந்து ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் கிணறு ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தண்ணீர்ப் பற்றாக்குறை தீர்க்கப்பட்டுள்ளது.

12—

காவேரிக் குடிநீர்

வினா எண் 23111—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, கத்தேரி ஊராட்சி, கள்ளிபாளையத்தில் காவேரிக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி பேரூராட்சி, தேவூர் பேரூராட்சி, (பகுதி) மற்றும் 245 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 2006 ஆம் ஆண்டு முதல் கத்தேரி ஊராட்சி கள்ளிபாளையம் குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் காவேரிக் குடிநீர் போதுமான அளவு சீராக வழங்கப்பட்டு வருகிறது.

13—

குடிநீரை சுத்திகரிப்பு செய்தல்

வினா எண் 23112—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, சங்கரி பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளுக்கு வரும் காவேரிக் குடிநீரை நவீனமுறைகள்மூலம் சுத்திகரிப்பு செய்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, சங்கரி பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளுக்கு காவேரி ஆற்றில் புள்ளாகவுண்டன்பட்டி தடுப்பணை பகுதியிலிருந்து சேகரிப்பு தொட்டி அமைத்து அதிலிருந்து நீர் எடுக்கப்பட்டு அருகிலேயே அமைக்கப்பட்டுள்ள நவீன சுத்திகரிப்பு நிலையத்தில் துரித மணல் வடிகட்டி (Rapid Sand Filter) மூலம் வடிகட்டப்பட்டு தேவையான அளவு கிருமி நாசினி (Chlorine) கலந்து நீருந்து மின் இறைப்பான்மூலம் பாதுகாக்கப்பட்ட மற்றும் குடிப்பதற்கு உகந்த காவேரிக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

14—

புதிய கட்டடங்கள்

வினா எண் 23113—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரி தொகுதி, சங்கரி பேரூராட்சி 5—வது வார்டிலுள்ள நகராட்சி துவக்கப் பள்ளிக்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சங்கரி பேரூராட்சிக்குட்பட்ட 5—வது வார்டு பகுதியில் நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகள்

2015 செப்டம்பர் 29]

ஏதும் இல்லாத நிலையில், பேரூராட்சி துறைமூலம் பள்ளிக் கட்டடம் கட்டித்தர வேண்டிய அவசியம் எழவில்லை.

15—

சார்பு நீதிமன்றம்

வினா எண் 23331—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, குளச்சலில் குற்றவியல் மற்றும் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, குளச்சலில் குற்றவியல் மற்றும் சார்பு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

16—

அலங்கார வளைவு

வினா எண் 23336—திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் நகரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக நகரின் எல்லையில் அலங்கார வளைவு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் நகரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக நகரின் எல்லையில் அலங்கார வளைவு அமைக்கக்

கோரி விண்ணப்பம் ஏதும் தற்போது வரை பெறப்படவில்லை. எனவே, விண்ணப்பம் வரப்பெற்றால் அரசாணை (நிலை) எண் 221, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 20–11–1998–ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17—

குடிநீர்க் குழாய்கள் அமைத்தல்

வினா எண் 23976—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, தளிக்கோட்டையில் சாலையின் இருபுறமும் குடிநீர்க் குழாய்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தளிக்கோட்டை ஊராட்சியின் சாலையின் இருபுறமும் உள்ள குடும்பங்களுக்குத் தேவையான குடிநீர் வசதி ஊராட்சி நிதிக் கணக்கு எண் 1–லிருந்து 1,100 மீட்டர் தூரத்திற்கு பைப்லைன் அமைக்கும் பணி ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

18—

கான்கிரீட் பாதை அமைத்தல்

வினா எண் 24013—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகரம், பிருந்தாவன் நகர்—மாதா கோயிலை இணைக்கும் கம்பி பாலத்தை அகற்றி அகலமான கான்கிரீட் பாதையாக மாற்றிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடியிலுள்ள மாதா கோவில் பாலத்தை அகலமான கான்கிரீட் பாலமாக மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

19—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 24020—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க சர்வே எண் 8/3, 8/4, 8/5—ல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள யமுனாம்மாள் சத்திரத்தில் இடம் 6 ஏக்கர் உள்ளது. இவ்விடத்தில் பேரூராட்சிமூலம் புதிய

பேருந்து நிலையம் அமைக்க தஞ்சாவூர் சத்திர நிருவாகத்தின்மூலம் பேரூராட்சி நடவடிக்கை எடுக்கும்போது திரு.செந்தில் முருகன், த/பெ. ரெத்தினசபாபதி என்பவரால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, அவ்வழக்குத் தஞ்சாவூர் சத்திர நிருவாகத்தின் பேரில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நேர்வில் பேரூராட்சிக்கு சொந்தமாக வேறு இடங்கள் இல்லாததாலும், மேற்படி வழக்கு முடியும் வரை இப்பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்ட இயலாது.

20—

நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 24023—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலத்தில் நீதிமன்ற வளாகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலத்தில் நீதிமன்ற வளாகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

21—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 24845—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், சின்னத்தச்சூர், ஏசாலம் ஊராட்சிக்கு இடையே கொரையாறு ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், சின்னத்தச்சூர், ஏசாலம் ஊராட்சிக்கு இடையே கொரையாறு ஆற்றின் குறுக்கே 2010–2011 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டத்தின்கீழ் 15,06,556 ரூபாய் மதிப்பீட்டில் 50 மீட்டர் நீளத்தில் ஒரு தரைப் பாலமும், 10,81,968 ரூபாய் மதிப்பீட்டில் 35 மீட்டர் நீளத்தில் ஒரு தரைப் பாலமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இரண்டு தரைப் பாலங்கள் ஏற்கெனவே உள்ள நிலையில் அங்கு மேம்பாலம் கட்ட வழிவகை இல்லை.

22—

காங்கிரீட் பாலம் அமைத்தல்

வினா எண் 25065—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடியிலுள்ள மாதா கோயில் பாலத்தை அகலமான கான்கிரீட் பாலமாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடியிலுள்ள மாதா கோவில் பாலத்தை அகலமான கான்கிரீட் பாலமாக மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

23—

பொது சுகாதார வளாகம்

வினா எண் 25161—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் பேரூராட்சி, 9–வது வார்டு கடைவீதி 13–வது வார்டு ஆதி திராவிடர் பகுதியில் பொது சுகாதார வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீடாமங்கலம் பேரூராட்சி, வார்டு எண் 9 மற்றும் 13–ல் பேரூராட்சிக்கு சொந்தமான இடம் ஏதும் இல்லை என்பதால் பொதுக் கழிப்பிடம் கட்ட இயலாது.

24—

குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 25260—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 26–வது வார்டு, விண்டர்பேட்டை பகுதியில் உள்ள எம்.ஏ. ஜெயின் பள்ளி அருகே குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சி, 26–வது வார்டு, விண்டர்பேட்டை பகுதியிலுள்ள எம்.ஏ. ஜெயின் பள்ளி அருகே குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

25—

பேருந்து நிலையம்

வினா எண் 25273—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சி, மார்த்தாண்டத்தில் புதிய பேருந்து நிலையப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 19–2–2014 அன்று காணொலி காட்சிமூலம் திறக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

26—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 25374—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, 4-வது வார்டு அய்யனாரப்பன் கோயிலைச் சுற்றி சிமெண்ட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட அய்யனாரப்பன் கோயில் அமைந்துள்ள இடம் தனிப்பட்ட ஒரு சமுதாயத்திற்கு சொந்தமான கோயில் நிலமாகும். எனவே, மேற்படி கோயிலைச் சுற்றி பேரூராட்சிமூலம் சிமெண்ட் சாலை அமைக்க வழிவகை இல்லை.

27—

கிராம சபைக் கூட்டம்

வினா எண் 25779—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிராம சபைக் கூட்டங்களை அரசு விதிமுறைகளுடன் நடத்தாத ஊராட்சி மன்றத் தலைவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 130, ஊரக வளர்ச்சி (சி4) துறை, நாள் 25-9-2006-ன்படி கிராம சபைக் கூட்டம் கூட்டப்படுவதற்கான குறைவெண் வரம்பு (Quorum)

2015 செப்டம்பர் 29]

குறிப்பிடப்பட்டுள்ளது. போதிய குறைவெண் வரம்பு இல்லாமல் இருந்தால், கிராம சபை பின்பு ஒரு தேதியில் நடத்தப்படும். அவ்வாறு கிராம சபைக் கூட்டம் நடத்த தவறும் ஊராட்சி மன்றத் தலைவர்கள்மீது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 205–ன்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

28—

வேலை உறுதி அளிப்புத் திட்டம்

வினா எண் 25780—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலை உறுதி அளிப்புத் திட்டத்தில் முறைகேடுகள் செய்யும் உரிய நபர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் முறைகேடுகள் செய்யும் நபர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், ஊராட்சி மன்றத் தலைவர் தவறு செய்யும்பட்சத்தில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205–ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

29—

நவீனப் பேருந்து நிலையம்

வினா எண் 25912—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் நவீனப் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் நவீனப் பேருந்து நிலையம் அமைக்க போதிய இட வசதி இல்லாததால் பேருந்து நிலையம் அமைக்க இயலாது.

30—

வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குதல்

வினா எண் 26053—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ் வழியில் பயிலும் மாணவ-மாணவிகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 145, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 30-9-2010-ன்வாயிலாக தமிழ் வழியில் பயிலும் மாணவ-மாணவிகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]
31—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 26236—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரி–திருக்காட்டுப்பள்ளி குடிநீர்த் திட்டத்தை விரைவாக செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் ஆற்றில் திருக்காட்டுப்பள்ளி அருகில் உள்ள திருச்சென்னம்பூண்டியை தலைமையிடமாகக் கொண்டு, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குன்னான்டார் கோயில் (பகுதி) கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி, திருவரங்குளம், அறந்தாங்கி, விராலிமலை (பகுதி) அன்னவாசல் (பகுதி) மற்றும் புதுக்கோட்டை (பகுதி) ஆகிய 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,751 குடியிருப்புகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சிக்கான, கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசாணை (நிலை) எண் 11/ நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ4) துறை நாள் 28–1–2013 மூலம் ரூ.315.70 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 24 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மற்ற பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அனைத்துப் பணிகளும் செப்டம்பர் 2015–ல் முடிக்கப்பட்டு 6 மாத கால சோதனை ஓட்டத்திற்கு பிறகு இத்திட்டம் பொதுமக்களின் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

32—

பசுமை வீடுகள்

வினா எண் 26413—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி தொகுதியில் சூரிய விளக்குடன்கூடிய பசுமை வீடுகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி சட்டமன்ற தொகுதியில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் ஆண்டில் 273 வீடுகளும், 2012–2013 ஆம் ஆண்டில் 275 வீடுகளும், 2013–2014 ஆம் ஆண்டில் 289 வீடுகளும் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில் (2014–2015) 340 வீடுகள் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

33—

தாமிரபரணி குடிநீர் வழங்குதல்

வினா எண் 26417—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம், ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலையை மையமாகக் கொண்டு தாமிரபரணி குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம், கீழப்பாவூர், பாப்பாக்குடி, மேலநீலிநல்லூர் மற்றும் சங்கரன்கோயில் ஒன்றியங்களைச் சார்ந்த 147 கிராமங்களை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு, அரசாணை எண் 84, ந.நி (ம) கு.வ. (குவ4) துறை, நாள் 14—9—2012—ன்மூலம் ரூ.31.32 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், ஊத்துமலை ஊராட்சியைச் சேர்ந்த ஊத்துமலை கிராமமும் உள்ளது.

34—

தனி ஊராட்சி அமைத்தல்

வினா எண் 26607—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், கூட்டப்புளியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி ஊராட்சி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கிராம ஊராட்சி/ ஊராட்சி ஒன்றியத்தினைப் பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால்

பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், கூட்டப்புளியை தலைமையிடமாகக் கொண்டு தனி ஊராட்சி அமைக்கக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

35—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 26773—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி நகராட்சி, காளிதாஸ் நகர், சக்தி நகர் பகுதி மக்களுக்கு தாமிரபரணி குடிநீர்த் திட்டம்மூலம், குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) 'ஆம்' எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென்காசி தொகுதிக்குட்பட்ட காளிதாஸ் நகர் மற்றும் சங்கர் நகர் என்பது தென்காசி நகராட்சியின் புதிதாக உருவான விரிவாக்கப் பகுதிகளாகும். 2005 ஆம் ஆண்டிற்கு பின்னர் உருவாக்கப்பட்ட இக்குடியிருப்புப் பகுதியில் தற்சமயம் சுமார் 100 குடியிருப்புகள் உள்ளன. தென்காசி நகராட்சிக்கான தாமிரபரணி குடிநீர்த் திட்டம் 2003 ஆம் ஆண்டிலேயே நிறைவுற்று பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதுபோன்று சமீபத்தில் உருவான அனைத்து விரிவாக்கப் பகுதிகளுக்கும், தென்காசி நகரில் சீராக தாமிரபரணி ஆற்று நீரை விநியோகம் செய்ய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பொருட்டு M/s. Voyants Solutions Pvt. Ltd. *என்னும் கலந்தாலோசகர்மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டவுடன் காளிதாசன் நகர் மற்றும் சக்தி நகர் உள்ளிட்ட அனைத்து பகுதிகளுக்கும் தாமிரபரணி ஆற்று குடிநீரை விநியோகிக்கத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படும்.*

2015 செப்டம்பர் 29]

36—

பாடத்திட்டத்தில் மாற்றம்

வினா எண் 27142—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் பாடத் திட்டங்களில் உரிய மாற்றங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு அமைப்புத் திட்டம் மற்றும் பாடத் திட்டங்களில் மாற்றம் செய்வது தொடர்பாக தேர்வாணையத்தின் மாண்புமிகு உறுப்பினர்களின் தலைமையில் இரு வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்களின் அறிக்கையின்படி தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளின் திருத்தப்பட்ட பாடத் திட்டங்கள் யாவும் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெறப்பட்டு தேர்வாணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

பாடத் திட்டங்களில் மாற்றம் செய்யப்பட்டு தேர்வாணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

37—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

வினா எண் 27818—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செஞ்சி தொகுதி, செஞ்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ.930 இலட்சம் வழங்கி அரசாணை (நிலை) எண் 163, உள் துறை, நாள் 25-2-2014-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு பொதுப் பணித் துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

38—

பேருந்து நிலையம் இடமாற்றம்

வினா எண் 27845—திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தினை கோச்சடைக்கு இடமாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோச்சடை பகுதியானது வைகை ஆற்றுப் படுகையினை ஒட்டியுள்ள பகுதியாகும். இப்பகுதியில் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டால் குடிநீர் ஆதாரம் பாதிக்கப்படும் என்பதால் அங்கு ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தை மாற்றியமைக்க இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

39—

கடன் வழங்குதல்

வினா எண் 27847—திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, கூட்டுறவு வங்கிகள் மற்றும் கிராம வங்கிகளிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் தொகுதியில் உள்ள கூட்டுறவு வங்கிகள் மற்றும் கிராம வங்கிகள்மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டியில் கடன் பெற்று தரப்பட்டு வருகின்றது.

40—

திட்ட சாலைப் பணி

வினா எண் 27856—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, தேனி நகராட்சியில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக அமைக்கப்பட்ட திட்டச் சாலைப் பணிகளை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனி புறவழிச் சாலையில் புதிய பேருந்து நிலையம் திறக்கப்பட்டு நகருக்குள் வரும் பேருந்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. 32 திட்டச் சாலைகள் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்து பொது சாலைகளாக பயன்பாட்டில் உள்ளன. ஏற்கெனவே 22 எண்ணம் சாலைகள் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. தற்போது ஏனைய சாலைகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

41—

புதிய நீதிமன்ற வளாகம்

வினா எண் 28115—திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோவில்பட்டியில் புதிய நீதிமன்ற வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கோவில்பட்டியில் புதிய நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

42—

பேருந்து நிலையம் விரிவாக்கம்

வினா எண் 28200—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, பாலமேடு, வாடிப்பட்டி, பேருந்து நிலையங்களைப் புதுப்பிக்கவும் மற்றும் அலங்காநல்லூர் பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, பாலமேடு, வாடிப்பட்டி மற்றும் அலங்காநல்லூர் ஆகிய பேருந்து நிலையங்களைச் சுற்றிலும் குடியிருப்புப் பகுதிகளாக இருப்பதால் இப்பேருந்து நிலையங்களைப் புதுப்பிக்கவும், விரிவாக்கம் செய்திடவும் வழிவகை ஏதும் இல்லை.

43—

மாசுபடுவதைத் தடுத்தல்

வினா எண் 28221—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை மாவட்டப் பகுதிகளிலுள்ள வைகை, கிருதுமால் நதிகளில் கழிவுநீர் கலந்து மாசுபடுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சி எல்லைப் பகுதிகளில் உள்ள வைகை மற்றும் கிருதுமால் நதிகளில் கழிவுநீர் கலக்காமல் இருப்பதற்கு, தமிழக அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து பணிகள்

[2015 செப்டம்பர் 29

நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவுறும் பட்சத்தில் வைகை மற்றும் கிருதுமால் நதியில் கழிவுநீர் கலப்பது பெருமளவு தவிர்க்கப்படும்.

44—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 28502—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், தளி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், தளி பேரூராட்சியானது உடுமலைப்பேட்டையிலிருந்து திருமூர்த்தி மலைக்கு செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இப்பேரூராட்சி வழியாக நாள்தோறும் சுமார் 50 பேருந்துகள் வந்து செல்கின்றன. தளி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க பேரூராட்சிக்கு சொந்தமான போதிய இடவசதி ஏதுமில்லை. தற்போது இப்பகுதியில் காலியாக உள்ள இடங்கள் யாவும் வனத் துறை மற்றும் பொதுப் பணித் துறைக்கு சொந்தமான இடங்களாக உள்ளதால் பேருந்து நிலையம் அமைக்க இயலாது.

45—

திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

வினா எண் 28505—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை அரசு புறம்போக்கு அல்லது கோயில் நிலத்தில் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்திட திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவு நாள் 14–12–2012–ன்படி அரசு புறம்போக்கு நிலம், சர்க்கார் கண்ணாடிபுதூர் கிராம நிலத்தில் முன்நுழைவு அனுமதி பெறப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கோயில் நிலத்தில் செயல்படுத்தப்படவில்லை.

46—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 28572—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கண்ணமநாய்க்கனூர், பாலப்பம்பட்டி பகுதி மற்றும் ஜெ.ஜெ. நகர் ஆதி திராவிடர் காலனி ஆண்டியகவுண்டனூர் உரல்பட்டி பகுதி, பூலாங்கினர் பகுதி ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கண்ணமநாய்க்கனூர், பாலப்பம்பட்டி பகுதி மற்றும் ஜெஜெ. நகர் ஆதி திராவிடர் காலனி ஆண்டியகவுண்டனூர்

உரல்பட்டி பகுதிகளில் மக்கள் தொகைக்கேற்ப ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க த்தொட்டிகள்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பூலாங்கிணர் ஊராட்சியின் மக்கள்தொகைக்கேற்ப 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய ஒரு புதிய தனி மின் விசைப்பம்பு திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. எனவே, இப்பகுதிகளில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

47—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 28574—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கண்ணமநாய்க்கனூர், பாலப்பம்பட்டி பகுதி மற்றும் ஜெ.ஜெ. நகர் ஆதி திராவிடர் காலனி ஆண்டியகவுண்டனூர் உரல்பட்டி பகுதி, பூலாங்கிணர் பகுதி ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆண்டியகவுண்டனூர் உரல்பட்டி குடியிருப்பின் மக்கள்தொகை 1,600 ஆகும். இக்குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன. மேற்கண்ட குடியிருப்பில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு போதுமான அளவில் இருப்பதால் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

2015 செப்டம்பர் 29]

48—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 28685—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, கே. கிருஷ்ணாபுரம் பிரிவு மற்றும் கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், கே. கிருஷ்ணாபுரம் ஊராட்சி, கிருஷ்ணாபுரம் பிரிவு மற்றும் கிராமத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளதால் மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

49—

பேருந்து நிலையம்

வினா எண் 35703—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சி, பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சி, இராஜபாளையம் நகராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மம்சாபுரம் பேரூராட்சி வழியாக வேறு பெரிய ஊர்களுக்கு செல்லக்கூடிய வழித்தடம் ஏதும் இல்லாததால் குறைந்த அளவு பேருந்துகளே சென்று வருகிறது. மேலும், புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசுக்கு சொந்தமான நிலம் மற்றும் தனியார் நிலம் ஏதும் இல்லை. இப்பேரூராட்சிக்கென சொந்தமான நிலம் மற்றும் தனியார் நிலம் ஏதும் இல்லை இப்பேரூராட்சிக்கென தனியாக தற்போது பேருந்து நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

51—

தரம் உயர்த்துதல்

வினா எண் 1209—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

விடுபட்ட வினா எண் 50-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

2015 செப்டம்பர் 29]

52—

கால்நடை கிளை நிலையம் கட்டடம்

வினா எண் 1210—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, மணலி ஊராட்சியில் கால்நடை கிளை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, மணலி ஊரக கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்ட நபார்டு XIX திட்டத்தின் (2013-2014) கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டு தற்போது அரசாணை (நிலை) எண் 41, கால்நடை பராமரிப்பு, பால் வளம், மற்றும் மீன்வளத் (கா.ப2) துறை, நாள் 22-2-2014 மற்றும் அரசாணை (நிலை) எண் 103, கால்நடை பராமரிப்பு பால் வளம் (ம) மீன்வளத் (கா.ப2) துறை, நாள் 20-5-2014 வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் கட்டடப் பணிகள் தொடங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

53—

புதிய கால்நடை மருந்தகம்

வினா எண் 1324—திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குன்னம் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், வயலப்பாடி கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், வயலப்பாடி கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடைகளின் அலகுகள் 1,930 உள்ளதாலும், இக்கிராமத்திற்கு அருகில் நான்கு கால்நடை மருந்தகங்களும் மற்றும் நான்கு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருவதாலும், வயலப்பாடி கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இக்கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு மேற்கண்ட அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகும்.

54—

புதிய கால்நடை மருத்துவமனை

வினா எண் 1412—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடை யளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, பேரங்கியூர் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பேரங்கியூர் கிராமத்திற்கு அருகில் ஒரு கால்நடை மருத்துவமனையும், இரண்டு கால்நடை மருந்தகங்களும், இரண்டு தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையங்களும், ஐந்து கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருவதாலும் பேரங்கியூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் குறைவாக 1,780 உள்ளதாலும் இக்கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இக்கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு

2015 செப்டம்பர் 29]

அருகிலுள்ள இருவேல்பட்டு தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையத்தின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகும்.

55—

புதிய கால்நடை மருத்துவமனை

வினா எண் 3177—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி ஒன்றியம், இட்டமொழியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்திற்கு அருகில் பரப்பாடி, சாத்தன்குளம், திசையன்விளை ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதால் இட்டமொழி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

58—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 4018—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, நாங்கூரில் பகுதி நேர கால்நடை மருத்துவமனையை முழுநேர கால்நடை மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுபட்ட வினா எண்கள் 56,57-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, நாங்கூரில் கால்நடை கிளை நிலையம் இயங்கி வருகிறது. கால்நடை ஆய்வாளர் வாரத்தில் மூன்று நாட்கள் பணிபுரிந்து வருகிறார். எனினும், வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில், மேற்காணும் பொருள் குறித்து பரிசீலிக்கலாம்.

59—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 5659—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆலங்காயம் மற்றும் அக்கிராமத்திற்கு அருகில் மூன்று கால்நடை மருந்தகங்களும் மற்றும் இரண்டு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருவதால் ஆலங்காயம் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.

60—

புதிய கால்நடை மருத்துவமனை

வினா எண் 5697—திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டினத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கோட்டைப்பட்டினம் கிராமத்திற்கு அருகில் மணமேல்குடி மற்றும் கரகத்திக்கோட்டை ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. புதிய கால்நடை மருத்துவமனை நேரடியாகத் துவக்க இயலாது. அங்கு கால்நடை மருந்தகம் இருந்தால்தான் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலும்.

கோட்டைப்பட்டினம் கிராமம் மற்றும் அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கு மேல் உள்ளதால் கோட்டைப்பட்டினம் கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இருப்பினும், இக்கிராமத்திற்கு அருகில் கரகத்திக்கோட்டை கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால் கோட்டைப்பட்டினம் கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்பில்லை. எனவே, அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

61—

கால்நடை மருந்தகம்

வினா எண் 5718—திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், பி.மேட்டூர் பேரூராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், பி.மேட்டூர் ஊராட்சிக்கு அருகில் உப்பிலியாபுரம், ஏரகுடி, கொப்பம்பட்டி ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்களும், பாலகிருஷ்ணம்பட்டியில் ஒரு ஊரக கால்நடை மருந்தகமும், பச்சபெருமாள்பட்டியில் ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. மேலும், பி.மேட்டூர் பேரூராட்சியை சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கு குறைவாக உள்ளதால் பி.மேட்டூர் பேரூராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

62—

கால்நடை சுகாதார நிலையம்

வினா எண் 5742—திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆற்காடு தொகுதியில் கால்நடை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு தொகுதியில் கால்நடை சுகாதார நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

63—

புதிய கால்நடை மருத்துவமனை

வினா எண் 6857—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) சங்கரி தொகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, சங்கரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சங்கரி கிராமத்திற்கு அருகில் ஆறு கால்நடை மருந்தகங்களும் மற்றும் ஒரு தரமுயர்த்தப்பட்ட ஊரக கால்நடை மருந்தகமும் தற்போது செயல்பட்டு வருகின்றது. எனவே, சங்கரி தொகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை. எனினும், வருங்காலங்களில் சங்கரி தொகுதியில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

64—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 6876—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆசனூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆசனூர் கிராமத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், இரண்டு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருவதாலும், கால்நடைகளின் அலகுகள் 3,889 மட்டுமே உள்ளதாலும் தற்போது கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், இனிவருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் மேற்காணும் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

65—

கால்நடை மருத்துவமனையை தரம் உயர்த்துதல்

வினா எண் 7051—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பத்மனாபபுரம் தொகுதி, குலசேகரத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, குலசேகரம் கிராமத்திற்கு அருகில் திருவட்டாரில் ஒரு கால்நடை மருந்தகமும், பொன்மனை, ஆற்றூர் மற்றும் பூவன்கோடு ஆகிய மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. குலசேகரம் கிராமத்திலுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் அதிகமாக உள்ளதால் (அதாவது 5,322 அலகுகள்) குலசேகரத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளன. வரும் நிதியாண்டில் அரசின் கொள்கை முடிவின்படி செயற்குறிப்பில் கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமை பட்டியலில் சேர்த்து குலசேகரத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

67—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 7344—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூரில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுபட்ட வினா எண் 66-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கரைப்புதூர் கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் அதிகமாக (5,893) உள்ளதால் அங்கு கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. வரும் ஆண்டுகளில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்கும் திட்டம் இடம்பெறும் பட்சத்தில் மேற்படி கிராமம் தகுதியின் அடிப்படையில் முன்னுரிமை பட்டியலில் சேர்த்து பரிசீலிக்கப்படும்.

68—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 7467—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அளக்குடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அளக்குடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை. எனினும் வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

69—

வெறிநாய்க்கடி நோய் தடுப்புப் பிரிவுகள்

வினா எண் 10480—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாநகராட்சி பகுதியிலும் வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புப் பிரிவுகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கால்நடை பராமரிப்புத் துறையின் கால்நடை நிலையங்கள்மூலம் தேவையான கால்நடைகளுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்படுகிறது. இது தவிர மதுரை/திருநெல்வேலி மாநகராட்சிகளில் செயல்படும் வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புப் பிரிவுகளுக்கு வெறிநாய்க்கடி தடுப்பு மருந்து வழங்கப்படுகிறது. அரசின் கொள்கைப்படி, தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாநகராட்சிப் பகுதிகளிலும் வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பு பிரிவுகள் ஏற்படுத்தும் திட்டம் இடம்பெறும்போது ஒவ்வொரு மாநகராட்சி பகுதியிலும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பு பிரிவு அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

70—

கால்நடை மருந்தகம்

வினா எண் 11947—திரு. சு. ரவி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, கீழ்வெங்கடாபுரம் ஊராட்சி, கீழ்வெங்கடாபுரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, கீழ்வெங்கடாபுரம் ஊராட்சி, கீழ்வெங்கடாபுரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம்

2015 செப்டம்பர் 29]

அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. இருப்பினும் புதிய கால்நடை மருந்தகங்கள் துவக்கப்படும்போது தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

71—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 12778—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வெங்கடசமுத்திரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு ஒன்றியம், வெங்கடசமுத்திரம் ஊராட்சிக்கு மிக அருகில் கரும்பூர் மற்றும் மிட்டாளம் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், வெங்கடசமுத்திரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 1,034 அலகுகள்) உள்ளதாலும், வெங்கடசமுத்திரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கு அருகில் செயல்படும் கால்நடை மருந்தகங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

74—

24 மணி நேர கால்நடை மருத்துவமனை

வினா எண் 15266—திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

விடுபட்ட வினா எண்கள் 72,73-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

[2015 செப்டம்பர் 29

(அ) செஞ்சி தொகுதி, தேவனூர் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனையை 24 மணி நேரமும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, தேவனூர் கிராமத்திற்கு அருகில் மேல்மலையனூர், பெருவளூர், கள்ளப்புலியூர் மற்றும் அவலூர்பேட்டை ஆகிய நான்கு கால்நடை மருந்தகங்களும் மேலச்சேரியில் ஊரக கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகிறது. மேலும், செஞ்சி தொகுதி, தேவனூர் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனையை 24 மணி நேரமும் செயல்படுத்தத் தேவையான கீழ்க்கண்ட வசதிகள் தேவனூர் கால்நடை மருத்துவமனையில் இல்லை.

1) *தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 80-க்கும் குறைவாக உள்ளது.*

2) *கால்நடை மருத்துவமனை துறைக்கு சொந்தமான நிலத்தில் உள்ளது. ஆனால், எதிர்கால விரிவாக்கத்திற்கும் மற்றும் குடியிருப்பு கட்டுவதற்கும் ஏற்றவாறு நிலம் போதிய அளவு இல்லை.*

3) *நுண்கதிர் ஆய்வு வசதி இல்லை.*

4) *நோய் ஆய்வுக் கூடம் இணைக்கப்படவில்லை.*

5) *மருத்துவமனையை 24 மணி நேரமும் செயல்படுத்த போதிய பணியாளர்கள் இல்லை. தற்போது ஒரு கால்நடை மருத்துவர், ஒரு முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் மட்டும் பணியில் உள்ளனர்.*

எனவே, செஞ்சி தொகுதி, தேவனூர் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனையை 24 மணி நேரமும் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

2015 செப்டம்பர் 29]

75—

கோமாரி நோயைத் தடுத்தல்

வினா எண் 16553—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாட்டினங்களுக்கு ஏற்படும் கோமாரி நோய்த் தாக்கத்தைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2013–2014–ல் மத்திய அரசால் ரூ.5.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 100 சதவிகிதம் அரசு நிதியுதவியுடன், கோமாரி நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் உள்ள கால்நடைகளுக்கும் ஆறு மாத கால இடைவெளியில் ஆண்டொன்றுக்கு இரண்டு முறை தடுப்பூசி போடப்பட்டு கோமாரி நோய்த் தாக்கத்திலிருந்து மாட்டினங்களைப் பாதுகாக்க விரிவுபடுத்தப்பட்ட கோமாரி நோய் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இனிவருங்காலங்களிலும் இந்நோயினைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

76—

சொந்தக் கட்டடம்

வினா எண் 16814—திரு. சு. ரவி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், பின்னாவரம் ஊராட்சி, சேந்தமங்கலம் கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், பின்னாவரம் ஊராட்சி, சேந்தமங்கலம் கால்நடை மருந்தகத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டும் பணி தற்போது நபார்டு RIDF XVII *திட்டத்தின்கீழ் ரூ.26.66 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

77—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 16815—திரு. சு. ரவி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், ஓச்சலம் கிராமத்தில் கிளை கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், ஓச்சலம் கிராமத்தில் கால்நடைகளின் அலகுகள் 3,000—க்கும் குறைவாக உள்ளதால், கால்நடை கிளை நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

78—

கால்நடை மருந்தகம்

வினா எண் 17155—திரு. சு. ரவி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், கீழ்வெங்கடாபுரம் ஊராட்சி, கீழ்வெங்கடாபுரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், கீழ்வெங்கடாபுரம் கிராமம் மற்றும் அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் மேல் உள்ளதால் கீழ்வெங்கடாபுரம் கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. வரும் நிதியாண்டில் கால்நடை மருந்தகம் துவக்க முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

80—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 17393—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், விஜயன்குடியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள விஜயன்குடி கிராமத்திற்கு அருகில் மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், இக்கிராமத்தினைச் சுற்றியுள்ள

விடுப்பட்ட வினா எண் 79-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

கால்நடைகளின் அலகுகள் 3,000 க்கும் குறைவாக 2,635 அலகுகள் உள்ளதாலும் விஜயன்குடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும் வரும் காலங்களில் கால்நடைகளின் அலகுகள் அதிகரிக்கும் பட்சத்தில் விஜயன்குடி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

81—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 17394—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை பகர்வாரா*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், மேலாயூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், மேலாயூர் கிராமத்திற்கு அருகில் இளையான்குடி, குறிச்சி, தாயமங்கலம் ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்களும், சு. நெடுங்குளத்தில் ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், மேலாயூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக உள்ளதாலும் (அதாவது 3,300 அலகுகள்) மேலாயூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனால், கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது. வரும் நிதியாண்டில் அரசின் செயற்குறிப்பில் புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமை பட்டியலில் சேர்த்து மேலாயூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

விடுபட்ட வினா எண் 82-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

2015 செப்டம்பர் 29]

83—

புதிய கால்நடை மருத்துவமனை

வினா எண் 18566—திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, குருங்களூரில் புதிய கால்நடை மருத்துவமனை அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, குருங்களூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளின் அலகுகள் 4,422 மட்டுமே உள்ளதாலும் குருங்களூர் கிராமத்திற்கு அருகில் இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், இக்கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும் குருங்களூரில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது. வரும் நிதியாண்டில் கால்நடை கிளை நிலையம் துவங்குவதற்கான திட்டம் இடம்பெறும்போது குருங்களூரில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க பரிசீலிக்கப்படும்.

84—

புதிய கால்நடை மருத்துவமனை

வினா எண் 18568—திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, கம்மங்காட்டில் புதிய கால்நடை மருத்துவமனை அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், கம்மங்காடு கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 3,000-க்கும் குறைவாக 990 அலகுகளே உள்ளதாலும், இக்கிராமத்திற்கு அருகில் கேபுதுப்பட்டி, அறந்தாங்கி, பீர்கலைக்காடு ஆகிய மூன்று இடங்களில் கால்நடை மருந்தகங்கள் இயங்குவதாலும் கம்மங்காட்டில் புதிய கால்நடை கிளை நிலையமோ அல்லது கால்நடை மருந்தகமோ துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

85—

புதிய கால்நடை மருத்துவமனை

வினா எண் 18569—திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, கோட்டைப்பட்டினத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், கோட்டைப்பட்டினம் கிராமம் மற்றும் அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் மிகவும் குறைவாக (803 அலகுகள்) உள்ளதால் கோட்டைப்பட்டினத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இக்கிராமத்திற்கு அருகில் கரகத்திக்கோட்டை கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால் இம்மருந்தகத்தின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகும்.

2015 செப்டம்பர் 29]

86—

கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 18576—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கச்சனம் கால்நடை மருந்தகத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் கச்சனம் கால்நடை மருந்தகத்திற்கு அருகில் மணலி, திருநெல்லிக்காவல் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்களும், ஆலத்தம்பாடியில் ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேலும், கச்சனம் கால்நடை மருந்தகத்திற்கு சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்குமேல் இருந்தாலும் கச்சனம் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக தரமுயர்த்த தற்போது அவசியம் இல்லை. தற்போது கால்நடை மருந்தகத்தின் சேவையைப் பயன்படுத்தி அப்பகுதியிலுள்ள விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணிகளை மேற்கொள்ளலாம்.

88—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 19145—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, எழிலூர் ஊராட்சியில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடுப்பட்ட வினா எண்கள் 87-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

எழிலூர் கிராமம் மற்றும் அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் மிகவும் குறைவாக உள்ளதால் எழிலூர் கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. இருப்பினும் வரும் ஆண்டுகளில் கால்நடைகளின் அலகுகள் அதிகரிக்கும்பட்சத்தில் மேற்படி கிராமத்தில் (எழிலூர்) புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

89—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 20345—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, நாட்ராம்பாளையம் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, நாட்ராம்பாளையத்தில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. நாட்ராம்பாளையம் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் அதிகமாக உள்ளதால் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. அரசின் செயற்குறிப்பில் புதிய கால்நடை நிலையங்கள் துவங்கும் திட்டம் இடம்பெறும்போது நாட்ராம்பாளையம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

2015 செப்டம்பர் 29]

90—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 20606—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஜெயங்கொண்டானில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக (1,709) உள்ளதால் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

91—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 20626—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஒன்றியம், கரைப்புதூரில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரைப்புதூர் கிராமத்தில் கால்நடை அலகுகள் 5,000–க்கும் அதிகமாக உள்ளதால். புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்க அரசின் செயற்குறிப்பில் திட்டம் இடம்

பெறும்போது கரைப்புதூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

92—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 20652—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாணியம்பாடி தொகுதி, கோவிந்தாபுரம் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவிந்தாபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளின் அலகுகள் 3,000-க்கும் குறைவாக உள்ளதால், கோவிந்தாபுரம் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

93—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 20665—திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வந்தவாசி தொகுதி, வயூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், வயூர் கிராமத்திற்கு அருகில் மூன்று ஊரகக் கால்நடை

2015 செப்டம்பர் 29]

மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000—க்கும் குறைவாக உள்ளதாலும், வயூரில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், கால்நடை அலகுகள் 3000—க்கும் அதிகமாக (3,356) உள்ளதால், வரும் நிதியாண்டில் புதிய கிளை நிலையங்கள் துவங்கும் திட்டம் அரசின் கருத்துருவில் இடம்பெறும்போது முன்னுரிமைப் பட்டியலில் வயூரில் கிளை நிலையம் துவக்குவதற்கு பரிசீலிக்கப்படும்.

94—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 20670—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தக்கட்டி மற்றும் ஜவளகிரி கிராமத்தில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தக்கட்டி கிராமத்தில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஜவளகிரி கிராமத்தில் தற்போது ஊரக கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது.

95—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 20680—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்தங்கூரில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடைஷ்

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்தங்கூர் கிராமம் மற்றும் இக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 3,000-க்கு குறைவாக உள்ளதாலும், இக்கிராமத்திற்கு மிக அருகில் திருநெல்லிக்காவல் ஊரக கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதாலும் விதிமுறைகளின்படி திருத்தங்கூரில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

96—

கால்நடை கிளை நிலையக் கட்டடம்

வினா எண் 21197—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, நங்குடி ஊராட்சி, கால்நடை கிளை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, நங்குடி ஊராட்சியில், ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. உள்ளாட்சி அமைப்புகள் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் அல்லது சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தோ, பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தோ நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் நங்குடி ஊராட்சி கால்நடை கிளை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

விடுப்பட்ட வினா எண் 97-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

2015 செப்டம்பர் 29]

98—

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு

வினா எண் 21574—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, குழித்துறையில் பன்முக மருத்துவமனை மற்றும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, குழித்துறையில் ஒரு கால்நடை மருத்துவமனையும், அருகில் மூன்று கால்நடை மருந்தகங்களும், ஒரு முதலுதவி மையமும் செயல்பட்டு வருவதாலும், குழித்துறையில் உதவி இயக்குநர் பணி நிலையில் கால்நடை மருத்துவமனை செயல்படுவதாலும், பன்முக மருத்துவமனை அமைக்க சாத்தியமில்லை. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் இயங்கி வரும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுமூலம் திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நோய் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படுவதால், தற்போது குழித்துறையில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

99—

புழக்கடை கோழி வளர்ப்பு மையம்

வினா எண் 21580—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரத்தில் புழக்கடை கோழி வளர்ப்பு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நாட்டு கோழிப்பண்ணைகள் அமைக்க ஊக்குவிக்கும்பொருட்டு இம்மாவட்டத்தில் 35 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 250 முதல் 500 எண்ணிக்கையில் கோழிப்பண்ணை அமைக்கவும் அரசு கொட்டகை அமைப்பதற்கும் கோழிக்குஞ்சுகள் மற்றும் உபகரணங்கள் வாங்கும் செலவில் 25 சதவிகிதம் மாநில அரசு மானியமும் 25 சதவிகிதம் மத்திய அரசின் மானியம் நபார்டு வங்கியின் மூலமும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரத்தில் புழக்கடை கோழி வளர்ப்பு மையம் அரசால் அமைக்க அவசியம் எழவில்லை.

100—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 21592—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, வில்லுக்குறி பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வில்லுக்குறி கிராமத்திற்கு அருகில் ஒரு கால்நடை மருத்துவமனையும், மூன்று கால்நடை மருந்தகங்களும் செயல்பட்டு வருவதாலும், வில்லுக்குறி கிராமம் மற்றும் இக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின்

அலகுகள் 5,000-க்கும் குறைவாக (1,859 அலகுகள்) உள்ளதாலும் வில்லுக்குறி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இக்கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகும்.

101—

கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 21604—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி கால்நடை மருத்துவமனைக்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 60-க்கும் குறைவாக உள்ளதால், திருத்துறைப்பூண்டி கால்நடை மருத்துவமனையை தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. கால்நடை மருத்துவமனைக்குத் தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் சராசரி வருகை 60-க்கும் அதிகமாகும்பட்சத்தில், கால்நடை மருத்துவமனையைத் தரமுயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

102—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 22534—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், கண்டதேவியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், கண்டதேவி கிராமத்திற்கு மிக அருகிலேயே தேவக்கோட்டை, ஆராவயல் ஆகிய இரண்டு கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதால், கண்டதேவியில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, இக்கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு மேற்கண்ட அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

106—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 22868—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், அமராவதி நகர் பகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், அமராவதி நகரில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) வரும் நிதியாண்டுகளில் புதிய கால்நடை நிலையங்கள் துவங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இடம்பெறும்போது, முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

விடுபட்ட வினா எண்கள் 103,104,105-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

107—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 22869—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், நல்லண்ணக்கவுண்டன்புதூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) நல்லண்ணக்கவுண்டன்புதூர் கிராமம் மற்றும் அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 3,000—க்கும் மேல் உள்ளதால், நல்லண்ணக்கவுண்டன்புதூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) வரும் நிதியாண்டுகளில் புதிய கால்நடை நிலையங்கள் துவங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இடம்பெறும்போது, முன்னுரிமை பட்டியலில் சேர்த்து தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

108—

கோழிப் பண்ணை

வினா எண் 23907—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பெரியகோட்டை பகுதியில் கோழிப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதியில், செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் கோழிப் பண்ணை செயல்பட்டு வருவதனால் காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பெரியகோட்டை பகுதியில் கோழிப் பண்ணை அமைக்க அரசால் திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) எழாது.

109—

கோழிப் பண்ணை

வினா எண் 23908—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், புளியாளில் கோழிப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதியில், செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் கோழிப் பண்ணை செயல்பட்டு வருவதனால் காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், புளியாளில் கோழிப் பண்ணை அமைக்க அரசால் திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) வினா எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

110—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 24364—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, நெடுவாக்கோட்டை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மண்டலம், மன்னார்குடி தொகுதி, நெடுவாக்கோட்டை ஊராட்சிக்கு அருகில் மன்னார்குடியில் ஒரு கால்நடை மருத்துவமனையும், காரிக்கோட்டையில் ஒரு கால்நடை கிளை நிலையமும், உள்ளிக்கோட்டையில் ஒரு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதாலும், நெடுவாக்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 5,000-க்கும் (அதாவது 1,857 அலகுகள்) குறைவாக உள்ளதாலும் நெடுவாக்கோட்டையில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

111—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 25552—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, இடங்கணசாலை மடத்தூர் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், மடத்தூர் மற்றும் அக்கிராமத்திற்கு அருகில் காடையாம்பட்டி, ஏகாபுரம், மகுடஞ்சாவடி, கண்டர்குல மாணிக்கம், அழகப்பம்பாளையம்புதூர் மற்றும் வைகுந்தம் ஆகிய ஆறு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், மடத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக, அதாவது 2,730 அலகுகள் மட்டுமே உள்ளதாலும், மடத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், இக்கிராமத்திலுள்ள விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு, அருகில் செயல்படும் கால்நடை மருந்தகங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளை பயன்படுத்திக்கொள்ளலாம்.

112—

கால்நடை மருத்துவமனையை புனரமைத்தல்

வினா எண் 25573—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிபட்டி கிராமத்தில் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருத்துவமனையை புனரமைத்து மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2014–2015 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினைத் தொடர்ந்து, கால்நடை பராமரிப்புத் துறையில் நபார்டு வங்கியின் (XX திட்டத்தின்கீழ்) நிதியுதவியுடன் ரூ.80.05 கோடி செலவில் 227 புதிய கால்நடை நிலைய கட்டடங்கள்

கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அதில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிபட்டி கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.46.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதன் பிறகு, கால்நடை மருந்தகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

113—

கால்நடை மருந்தகம்

வினா எண் 25638—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியத்தில் கால்நடை அலகுகள் மிகவும் குறைவாக (676 மட்டும்) உள்ளதாலும், மிக அருகிலேயே அல்லிநகரம் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதாலும், அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும் இனிவரும் காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் இதுகுறித்து பரிசீலிக்கலாம்.

116—

புதிய மருந்தகக் கட்டடம்

வினா எண் 26310—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுபட்ட வினா எண்கள் 114,115-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், துங்காவி கால்நடை கிளை நிலையத்திற்கு புதிய மருந்தகக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், துங்காவி கால்நடை கிளை நிலையத்திற்கு "Establishment & Strengthening of Veterinary Hospitals and Dispensaries" (ESVHD) *திட்டத்தின்கீழ் 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.11.60 இலட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

117—

கோழிக்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு நிலையம்

வினா எண் 26311—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குறிச்சிக்கோட்டை கிராமத்தில் கோழிக்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2012–2013 ஆம் நிதியாண்டில் மேற்கு தொடர்ச்சி மலைத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, விவசாயப் பெருமக்கள் எளிதில் வந்து செல்லும் பொருட்டு திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

2015 செப்டம்பர் 29]

மூலம் கோழிக்குஞ்சு பொரிப்பகம் அமைக்கும் பணி துவங்கப்பட்டு மேற்கூரை வரை (Roof level) முடிக்கப்பட்டு தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

118—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 26745—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அல்லது மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, தென்காசி ஊராட்சி ஒன்றியத்தில் குணராமநல்லூர் கிராமம் மற்றும் அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000—க்கும் மேல் உள்ளதால், அக்கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. வரும் நிதியாண்டுகளில் புதிய கால்நடை மருந்தகங்கள் துவங்கும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமை பட்டியலில் சேர்த்து கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

119—

தரம் உயர்த்துதல்

வினா எண் 26749—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் ஒன்றியம், கிழவனேரி, அலப்பலச்சேரி, வாகைகுளம் ஆகிய கிராமங்களில் மற்றும்

டி.கல்லுப்பட்டி ஒன்றியம், வையூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாக தரமுயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் ஒன்றியம், கிழவனேரி, அலப்பலச்சேரி, வாகைகுளம் ஆகிய கிராமங்களில் மற்றும் டி.கல்லுப்பட்டி ஒன்றியம், வையூர் கிளை நிலையங்களின் கால்நடை அலகுகள் முறையே 1087, 1619, 1802 மற்றும் 1187 அலகுகள் என 5,000–க்கும் குறைவாக உள்ளதால், கால்நடை மருந்தகங்களாக தரமுயர்த்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

121—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 27446—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, தொண்டைமான் ஊரணியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, தொண்டைமான் ஊரணி கிராமத்திற்கு அருகில் ஒரு கால்நடை மருந்தகமும், ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருவதால் இக்கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும் தொண்டைமான் ஊரணி

2015 செப்டம்பர் 29]

மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் அதிகமாக 5405 அலகுகள் உள்ளதால் வரும் நிதியாண்டில் அரசின் கருத்துருவில் புதிய கால்நடை மருந்தகங்கள் துவக்கும் திட்டம் இடம்பெற்றால் முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து இக்கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

122—

கால்நடை மருந்தகம்

வினா எண் 27523—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கரு.வடதெரு ஊராட்சி, கனியான்கொல்லையில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கரு.வடதெரு ஊராட்சி, கனியான்கொல்லை கிராமத்திற்கு அருகில் கோட்டைக்காட்டில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதாலும், கனியான்கொல்லை கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக உள்ளதாலும், இக்கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும் கால்நடை அலகுகள் 3,000-க்கு அதிகமாக உள்ளதால் (அதாவது 3,070 அலகுகள்) கனியான்கொல்லையில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. வரும் நிதியாண்டுகளில் அரசின் கொள்கை முடிவின்படி புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கும் திட்டம் இடம்பெறும்போது கனியான்கொல்லையில் கால்நடை கிளை நிலையம் துவக்குவது குறித்து முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

விடுபட்ட வினா எண் 120-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

123—

புதிய கால்நடை மருந்தகம்

வினா எண் 27681—திரு. சு. ரவி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், மூதூர் ஊராட்சி, மூதூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், மூதூர் ஊராட்சி, மூதூர் கிராமத்திற்கு அருகில் அரக்கோணம் கால்நடை மருந்தகமும், கீழ்ப்பாக்கம் ஊரக கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதாலும், மூதூர் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளின் அலகுகள் 5000—க்கும் குறைவாக (அதாவது 3,187 அலகுகள்) உள்ளதாலும், மூதூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனால், கிளை நிலையம் துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. வரும் நிதியாண்டுகளில் புதிய கால்நடை கிளை நிலையம் துவங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இடம்பெறும்போது இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

124—

கால்நடை மருந்தகம்

வினா எண் 27682—திரு. சு. ரவி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், இச்சிபுதூர் ஊராட்சி, கெடவாரி கண்டிகை கிராமத்தில் புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், இச்சிபுதூர் ஊராட்சி, கெடவாரி கண்டிகை கிராமத்திற்கு அருகில் ஐந்து கால்நடை மருந்தகங்களும், மூன்று கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. கெடவாரி கண்டிகை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளின் அலகுகள் 5000-க்கும் அதிகமாக (அதாவது 5,449 அலகுகள்) உள்ளதால், கெடவாரி கண்டிகையில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. மேலும், வரும் நிதியாண்டுகளில் அரசின் திட்டத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் துவங்கும் போது இக்கிராமத்தினையும் சேர்த்து முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

125—

மருந்தகத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 27683—திரு. சு. ரவி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தணிக்கைப்போளூர் கால்நடை கிளை மையத்தை கால்நடை மருந்தகமாக தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தணிக்கைப்போளூருக்கு அருகில் அரக்கோணத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், குருவராஜப்பேட்டையில் ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. தணிக்கைப்போளூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் அதிகமாக உள்ளதாலும், (அதாவது 5,092

[2015 செப்டம்பர் 29

அலகுகள்) தணிக்கைப்போளூர் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளன. வரும் நிதியாண்டில் அரசின் செயற்குறிப்பில் கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து தணிக்கைப்போளூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

126—

கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்துதல்

வினா எண் 27684—திரு. சு. ரவி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை கால்நடை கிளை மையத்தை கால்நடை மருந்தகமாக தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை கிளை நிலையத்திற்கு அருகில் ஒரு கால்நடை கிளை மருந்தகம், இரண்டு ஊரக கால்நடை மருந்தகங்கள் மற்றும் ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருவதாலும், குருவராஜப்பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 5,000—க்கும் குறைவாக உள்ளதாலும், குருவராஜப்பேட்டை கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

127—

கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்துதல்

வினா எண் 27685—திரு. சு. ரவி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 செப்டம்பர் 29]

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், ஆட்டுப்பாக்கம் கால்நடை கிளை மையத்தை கால்நடை மருந்தகமாக தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், ஆட்டுப்பாக்கம் பகுதிக்கு அருகில் சேந்தமங்கலம், நெமிலி மற்றும் திருமால்பூர் ஆகிய மூன்று கால்நடை கிளை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆட்டுப்பாக்கம் கிராமத்திலுள்ள கால்நடை அலகுகள் 5,000-க்கும் அதிகமாக உள்ளதால், (அதாவது 5,579 அலகுகள்) ஆட்டுப்பாக்கம் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளன. வரும் நிதியாண்டில் அரசின் கொள்கை முடிவின்படி செயற்குறிப்பில் கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாக தரமுயர்த்தும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமை பட்டியலில் சேர்த்து ஆட்டுப்பாக்கத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

128—

சொந்தக் கட்டடம்

வினா எண் 27666—திரு. சு. ரவி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், கீழ்ப்பாக்கம் மற்றும் அனந்தாபுரத்திலுள்ள கால்நடை மருந்தகங்களுக்கு நபார்டு திட்டத்தின்மூலம் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், கீழ்ப்பாக்கம் மற்றும் அனந்தாபுரத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு நபார்டு RIDF XIX *திட்டத்தின்கீழ் சொந்தக் கட்டடம் கட்ட ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் கட்டிட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

129—

சொந்தக் கட்டடம்

வினா எண் 27688—திரு. சு. ரவி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சேந்தமங்கலம் கால்நடை மருந்தகத்திற்கு நபார்டு திட்டத்தின்மூலம் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 99, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 12–9–2011–ன்படி அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சேந்தமங்கலத்தில் கால்நடை மருந்தகம் கட்டுவதற்கு ஊரக மற்றும் வேளாண்மை வளர்ச்சிக்கான தேசிய வங்கி நபார்டு (RIDF XVII) *திட்டத்தின்கீழ் ரூ.26.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப் பணித் துறையினர்மூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

130—

பின்னலாடை தொழில்

வினா எண் 1973—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் பின்னலாடை தொழில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பின்னலாடை பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தபோதிலும் அப்பகுதியில் உள்ள தொழில் முனைவோர் பின்னலாடை பூங்கா அமைக்க முன்வருவார்களாயின் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டத்தின்மூலம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

133—

நெசவாளர்கள் கடன் உதவி

வினா எண் 8468—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதிய கைத்தறி நெசவாளர்களுக்கு மத்திய கூட்டுறவு வங்கி மூலம் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய கைத்தறி நெசவாளர்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக

விடுபட்ட வினா எண்கள் 131;132-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

[2015 செப்டம்பர் 29

நபார்டு வங்கியின் மறு நிதியுதவி திட்டத்தின்கீழ் காசுக்கடன் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

134—

விசைத்தறி கூட்டுறவாளர் நலச் சங்கம்

வினா எண் 17154—திரு. சு. ரவி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, வளர்புரம் ஊராட்சியில் விசைத்தறி கூட்டுறவாளர் நலச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் விதிகள், 1988-ல் விசைத்தறி கூட்டுறவாளர் நலச் சங்கம் அமைப்பதற்கு வழிவகை இல்லை. இதுபோன்ற நலச் சங்கங்கள் அமைக்க தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம், 1975-ல் வழிவகை உள்ளது.

136—

மின்னொளி வசதி

வினா எண் 9209—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர், நேரு விளையாட்டு அரங்கில் 30 மீட்டர் வரை கோபுரத்துடன் கூடிய மின்னொளி வசதி செய்ய அரசு முன்வருமா?

விடுபட்ட வினா எண் 135-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர், நேரு விளையாட்டு அரங்கில் 30 மீட்டர் வரை கோபுரத்துடன் கூடிய மின்னொளி வசதி செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

137—

தடகள ஓடு பாதை

வினா எண் 10287—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்சி மாநகரில் 8 ஓடுகளப் பாதைகளுடன்கூடிய செயற்கை இழையிலான தடகள ஓடு பாதை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாநகரில் 8 ஓடுகளப் பாதைகளுடன்கூடிய செயற்கை இழையிலான தடகள ஓடு பாதை அமைக்கப்பட்டுள்ளது.

138—

உள் விளையாட்டு அரங்கம்

வினா எண் 10291—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் உள்ள மாவட்ட விளையாட்டரங்கத்தில் ரூ.1.00 கோடி செலவில் உள் விளையாட்டரங்க கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

140—

துணை விளையாட்டு அரங்கம்

வினா எண் 14716—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கப்பியறை ஊராட்சி, பழத்தோட்டமலை பகுதியில் துணை விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கப்பியறை ஊராட்சி, பழத்தோட்டமலை பகுதியில் துணை விளையாட்டு அரங்கம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

141—

இளைஞர் விடுதி

வினா எண் 15437—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண்கள் 139-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

2015 செப்டம்பர் 29]

(அ) கோயம்புத்தூர், திருப்பூர், திருநெல்வேலி, தருமபுரி, சேலம், திருச்சி, வேலூர் ஆகிய இடங்களில் இளைஞர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது சென்னை, திருச்சி, தஞ்சாவூர், மதுரை மற்றும் ஊட்டி ஆகிய ஐந்து இடங்களில் இளைஞர் விடுதிகள் இயங்கி வருகின்றன. இது மத்திய அரசால் மேற்கொள்ளப்படும் திட்டம் ஆகும். மேலும், திருச்சியைத் தவிர்த்து வினாவில் கோரியுள்ள இடங்களில் இளைஞர் விடுதி அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

142—

விளையாட்டரங்கம்

வினா எண் 15445—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மற்றும் தேனி மாவட்டங்களில் 400 மீட்டர் ஓடுதள பாதையுடன்கூடிய விளையாட்டரங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டத்தில் 400 மீட்டர் ஓடுதள பாதையுடன்கூடிய விளையாட்டரங்கம் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருப்பூர் மாவட்டத்தில் நிலம் தேர்வு செய்யப்பட்டபின் நடவடிக்கை மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் உள்ளன.

[2015 செப்டம்பர் 29

143—

செம்மாப்பு விளையாட்டு விடுதிகள்

வினா எண் 15450—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மகளிர் வீராங்கனையரை வளர்த்தெடுக்கும் செம்மாப்பு விளையாட்டு விடுதிகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பகுதி–2 திட்டத்தின்கீழ், 2012–2013 ஆம் ஆண்டில் கல்லூரியில் பயிலும் மாணவியர்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி மற்றும் பள்ளிகளில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவியர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் சென்னையில் துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

144—

கால்பந்து மைதானம்

வினா எண் 17587—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் நகரில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் கால்பந்து மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் நகரில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் கால்பந்து மைதானம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

145—

கிராம விளையாட்டு வளர்ச்சி மையம்

வினா எண் 17588—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் வட்டம், வடபுதுப்பட்டி ஊராட்சியில் கிராம விளையாட்டு வளர்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் வட்டம், வடபுதுப்பட்டி ஊராட்சியில் கிராம விளையாட்டு வளர்ச்சி மையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

146—

திறன் மேம்பாட்டு மையம்

வினா எண் 17589—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தேனியில் தடகளத்திற்கான திறன் மேம்பாட்டு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனியில் தடகளத்திற்கான திறன் மேம்பாட்டு மையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

147—

நீச்சல் அகாடமி

வினா எண் 17591—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தேனியில் மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் நீச்சல் அகாடமி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் தேனியில் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் நீச்சல் அகாடமி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

148—

ஓடுதளப் பாதை

வினா எண் 17592—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) பெரியகுளம் தொகுதி, தேனி மாவட்ட விளையாட்டு அரங்கில் நவீன முறையில் 400 மீட்டர் ஓடுதளப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, தேனி மாவட்ட விளையாட்டு அரங்கில் நவீன முறையில் 400 மீட்டர் ஓடுதளப் பாதை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

149—

உடற்பயிற்சி நிலையம்

வினா எண் 17632—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அரசு உடற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவண செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்ட தலைநகரங்களில் உள்ள மாவட்ட விளையாட்டு அலுவலகங்களில் அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய உடற்பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன அனைத்து தொகுதிகளிலும் உடற்பயிற்சி மையங்கள் அரசால் நிர்மாணிக்கப்படும் பட்சத்தில் மானாமதுரை தொகுதியிலும் நிறுவப்படும்.

[2015 செப்டம்பர் 29

151—

விளையாட்டு உபகரணங்கள்

வினா எண் 18598—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, வெள்ளூர் ஊராட்சி, குமாரபுரம் ஊராட்சி, காளையார்கோவிலில் இமானுவேல் இளைஞர் விளையாட்டு அணி, தச்சக்குடி ஊராட்சி, தச்சக்குடி கிராமம் ஆகிய பகுதிகளிலுள்ள இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைத்து, விளையாட்டு உபகரணங்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* விருதுநகர் தொகுதி, வெள்ளூர் ஊராட்சி, குமாரபுரம் ஊராட்சி, காளையார்கோவிலில் இமானுவேல் இளைஞர் விளையாட்டு அணி, தச்சக்குடி ஊராட்சி, தச்சக்குடி கிராமம் ஆகிய பகுதிகளிலுள்ள இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைத்து, விளையாட்டு உபகரணங்கள் வழங்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

152—

விளையாட்டு உபகரணங்கள்

வினா எண் 18602—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஊராட்சி ஒன்றியம், வாடி முதலிப்பட்டி இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைத்து, விளையாட்டு உபகரணங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண் 150-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சு. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஊராட்சி ஒன்றியம், வாடி. முதலிப்பட்டி இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைத்து, விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

153—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 20566—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சு. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

154—

தற்காப்புக் கலையை ஊக்குவித்தல்

வினா எண் 20634—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்காப்புக் கலையை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தற்காப்புக் கலை விளையாட்டுப் போட்டிகள் நடத்திடவும், தமிழ்நாடு அணி தேசிய போட்டிகளில் பங்கேற்கவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் நிதி உதவி வழங்கப்பட்டு, தற்காப்புக் கலை விளையாட்டுகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

155—

பொது விளையாட்டு அரங்கம்

வினா எண் 21295—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் அரசு பொது விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் அரசு பொது விளையாட்டு அரங்கம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

156—

விளையாட்டு மைதானம்

வினா எண் 22231—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், அரசிராமணி பேரூராட்சி, கிழக்கு ஒலப்பாளையத்தில் இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சு. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், அரசிராமணி பேரூராட்சி, கிழக்கு ஒலப்பாளையத்தில் இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

157—

விளையாட்டு தளம்

வினா எண் 22787—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அனைத்து கிராமங்களிலும் விளையாட்டு தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சு. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

ராஜீவ் காந்தி கேல் அபியான் திட்டத்தின்படி விளையாட்டு மைதானம் அமைக்க ஏதுவாக ஆறு முதல் ஏழு ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு பெயர் மாற்றம் செய்தோ அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாகவோ உரிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் கருத்துருக்கள் பெறப்படும்பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் படிப்படியாக நிறைவேற்ற இயலும்.

[2015 செப்டம்பர் 29

158—

உடற்பயிற்சிக் கூடம்

வினா எண் 24366—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, தளிக்கோட்டையில் உடற்பயிற்சி கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, தளிக்கோட்டையில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க தற்சமயம் அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

159—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 25135—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடியில் விளையாட்டு அரங்கம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2015 செப்டம்பர் 29]

160—

உடற்கல்வி பயிற்சிக் கல்லூரி

வினா எண் 25521—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் உடற்கல்வி பயிற்சிக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் உடற்கல்வி பயிற்சிக் கல்லூரி அமைப்பதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

162—

உடற்கல்வி கல்லூரி

வினா எண் 27549—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மற்றும் கருங்கலில் உடற்கல்வி கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மற்றும் கருங்கலில் அரசு உடற்கல்வி கல்லூரி அமைப்பதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

விடுப்பட்ட வினா எண் 161-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2015 செப்டம்பர் 29

164—

அடிப்படை வசதிகள் மேம்பாடு

வினா எண் 5485—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, திருமயம் மலைக்கோட்டையை சுற்றுலா தலமாக அறிவித்து அடிப்படை வசதிகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டையிலிருந்து 17 கிலோ மீட்டர் தொலைவில் திருமயம் உள்ளது. வரலாற்று சிறப்புமிக்க திருமயம் மலைக்கோட்டை மத்திய அரசின் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இக்கோட்டையினைச் சுற்றி அடிப்படை வசதிகள் மேற்கொள்வது குறித்து மத்திய தொல்லியல் துறையின் தடையில்லா சான்றிதழ் பெற வேண்டும்.

2. திருமயம் கோட்டை பகுதியை மேம்படுத்துவது தொடர்பாக கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. மேலும், சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படும் கருத்துரு, திட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில், அப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை உருவாக்க சுற்றுலாத் துறை நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றது. இப்பொருள் தொடர்பாக கருத்துரு, திட்ட மதிப்பீடு மற்றும் மத்திய தொல்லியல் துறையின் தடையில்லா சான்று ஆகியவை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் பெறப்பட்டால், திருமயம் மலைக்கோட்டை பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது குறித்து, நிதி நிலையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விடுப்பட்ட வினா எண் 163-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

2015 செப்டம்பர் 29]

165—

அடிப்படை வசதிகள் மேம்பாடு

வினா எண் 13089—திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கூடலூர் வட்டம் நாடுகாணியிலுள்ள அரியவகை மூலிகை தாவரவியல் பண்ணையை சுற்றுலாத் தலமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், நாடுகாணியிலுள்ள மரபணு தொகுப்பு தாவரவியல் பூங்கா (Gene Pool Garden) வனத் துறையின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், அங்குள்ள அரியவகை மூலிகை தாவரவியல் பண்ணை ஆராய்ச்சிக்கு உட்பட்ட பாதுகாக்கப்பட்ட பகுதியாகும் என்பதால் இவ்விடத்தினை சுற்றுலாத் தலமாக அறிவிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

166—

அடிப்படை வசதிகள் மேம்பாடு

வினா எண் 14097—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, குளச்சலிலுள்ள வரலாற்று சிறப்புமிக்க நினைவுச் சின்னம் அமைந்துள்ள பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரியிலிருந்து 42 கிலோ மீட்டர் தொலைவிலும், நாகர்கோவிலில் இருந்து 22 கிலோ மீட்டர் தொலைவிலும் கடற்கரை பகுதியில் குளச்சல் அமைந்துள்ளது. இங்கு மீன்பிடித் துறைமுகம் மற்றும் போர் வெற்றிச் சின்னம் என ஒரு தூண் மட்டும் கல்வெட்டுடன் உள்ளது. இப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை மிகக் குறைவாக உள்ளது. மேலும், போர் நினைவுச் சின்னத்தைச் சுற்றியுள்ள பாழடைந்த இடம் (சுமார் 18 சென்ட் பரப்பளவு) தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

2. மேற்கண்ட நிலையில், குளச்சல் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள அரசு காலி நிலங்கள் ஏதும் இல்லையென்பதால், அப்பகுதியில் சுற்றுலாப் பணிகளை மேற்கொள்ள இயலாத சூழ்நிலை உள்ளது.

167—

அடிப்படை வசதிகள் மேம்பாடு

வினா எண் 17298—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, அருள்மிகு வன பத்திரகாளியம்மன் திருக்கோயில் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டியில் அமைந்துள்ள அருள்மிகு வன பத்திரகாளியம்மன் திருக்கோயில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது

இல்லை. எனினும், அப்பகுதிக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக அருள்மிகு வனபத்திரகாளியம்மன் திருக்கோயில் பகுதியில் 2007-2008 ஆம் ஆண்டு மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ.68.97 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு (சுற்றுலாத் துறை பங்கு ரூ.34.49 இலட்சம்) தங்கும் அறை, உடைமாற்றும் அறை, கழிவறைகள், வாகன நிறுத்துமிடம் போன்ற பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 2011-2012 ஆம் ஆண்டில் சுற்றுலா சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேட்டுப்பாளையம் நெல்லித் துறை சாலை மேம்பாட்டிற்கு ரூ.80.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

170—

அடிப்படை வசதிகள் மேம்பாடு

வினா எண் 18350—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், அரியக்குடியிலுள்ள தென் திருப்பதி என அழைக்கப்படும் திருவேங்கடமுடையான் திருக்கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையோ அல்லது பகுதியையோ சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. ஓர் இடத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வது குறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை, உரிய கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் உரிய பரிந்துரைகளுடன் பெறப்பட்டு, நிதி நிலையின் அடிப்படையில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடுபட்ட வினா எண்கள் 168,169-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

2. இந்த அடிப்படையில் சிவகங்கை மாவட்டம் அரியக்குடியில் உள்ள தென்திருப்பதி என அழைக்கப்படும் திருவேங்கடமுடையான் திருக்கோவில் பகுதியை மேம்படுத்துவது தொடர்பாக கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. இப்பொருள் தொடர்பாக கருத்துரு, திட்ட மதிப்பீடு ஆகியவை சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் பெறப்பட்டால் அரியக்குடி திருவேங்கடமுடையான் திருக்கோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது குறித்து நிதி நிலையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

171—

தங்கும் இடம்

வினா எண் 19744—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, பூதப்பாண்டி பகுதி உலக்கை அருவி பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தங்கும் இடம் அமைத்து மேம்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, பூதப்பாண்டி பகுதியில் அமைந்துள்ள உலக்கை அருவி பகுதியில் சுற்றுலாத் துறைமூலம் பயணிகள் தங்கும் இடம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

172—

மின் விளக்குகள்

வினா எண் 21012—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, சங்கரி கோட்டை அமைந்துள்ள மலையைச் சுற்றி சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் சாலை மற்றும் மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலத்திலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாக சங்கரி கோட்டை அமைந்துள்ளது. இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட தீரன் சின்னமலை அவர்கள் தூக்கிலிடப்பட்டது சங்கரி கோட்டையில்தான்.

2010-2011 ஆம் ஆண்டில் சங்கரியில் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் மின் விளக்கு வசதி, சாலை வசதி, மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

173—

படகு சவாரி

வினா எண் 21017—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் பனமரத்துப்பட்டி ஏரியில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் படகு சவாரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி ஏரியில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் படகு சவாரி அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

174—

அடிப்படை வசதிகள் மேம்பாடு

வினா எண் 24998—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வடுவூர் ஏரி பறவைகள் சரணாலயப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வடுவூர் ஏரி பறவைகள் சரணாலயம், மன்னார்குடி—தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் மன்னார்குடியிலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவிலும், தஞ்சாவூரிலிருந்து 24 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. பறவைகள் சரணாலயம், வனத் துறை கட்டுப்பாட்டிலும், ஏரி பொதுப் பணித் துறை பராமரிப்பிலும் உள்ளன.

2. இங்கு வனத் துறைமூலம் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, காட்சிக் கோபுரங்கள், நடைபாதை, கழிப்பறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

3. ஏரியின் நான்கு புறங்களிலும் நடைபாதை, மின்விளக்கு வசதிகளுடன் பூங்கா அமைத்தல் ஆகிய பணிகளுக்காக பொதுப் பணித் துறையிடமிருந்து திட்ட மதிப்பீடு பெறப்பட்டு நிதி நிலைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

175—

அடிப்படை வசதிகள் மேம்பாடு

வினா எண் 26668—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டையில் உள்ள கம்பன் சமாதிப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறையின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள எந்த ஒரு குறிப்பிட்ட இடத்தையும் சுற்றுலாத் தலம் என அறிவிக்கப்படுவதில்லை. இருப்பினும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தின் முக்கியத்துவத்தை கருத்தில்கொண்டு, மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அவ்விடத்தில் தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகளை மேற்கொள்ள சுற்றுலாத் துறை நிதி ஒதுக்கீடு வழங்கி வருகிறது. மேலும், தமிழ்நாட்டிலுள்ள அதிகம் பிரபலமாகாத சுற்றுலா இடங்களைக் கண்டறிந்து அவ்விடங்களிலும் தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

2. சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டையில் உள்ள கம்பர் சமாதிப் பகுதி மேம்பாடு குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. இப்பகுதியை மேம்படுத்துவது தொடர்பாக சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு, திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நிதிநிலையின் அடிப்படையில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

176—

அடிப்படை வசதிகள் மேம்பாடு

வினா எண் 34056—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழவந்தான் தொகுதி, சாத்தையாறு மற்றும் தாடகநாச்சி அருவிப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, சாத்தையாறு மற்றும் தாடகநாச்சி அருவிப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும்,

அப்பகுதிக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, அவ்விடத்தின் சுற்றுலா முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உரிய கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

177—

பள்ளிக்குச் சுற்றுச் சுவர்

வினா எண் 1195—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை, செம்படவன்காடு ஆதி திராவிடர் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை, செம்படவன்காடு ஆதி திராவிடர் நலப் பள்ளிக்கு, 2011–2012 ஆம் ஆண்டில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் (SSA) ரூ.4.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 153 மீட்டர் நீளத்திற்கு சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டு பள்ளிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

178—

மாணவ, மாணவியர் விடுதி

வினா எண் 1229—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை நகராட்சியில் ஆதி திராவிட மாணவ/மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் 50 மாணவர்கள் தங்கி பயிலக்கூடிய ஆதி திராவிட பள்ளி மாணவர் விடுதி 2012–2013 ஆம் ஆண்டில் துவங்க அரசு ஆணையிட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 4, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந4) துறை, நாள் 18–1–2013)

179—

தனி விடுதி

வினா எண் 6291—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, பெரிய கல்வராயன் மலை, மேல்நாடு ஊராட்சி, கீழ்நாடு ஊராட்சி மற்றும் ஆத்தூர் ஒன்றியம்; பைத்தூர் ஊராட்சி ஆகிய மலை கிராமங்களிலுள்ள மலைவாழ் மாணவர்களுக்கு தனி விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, பெரிய கல்வராயன் மலை, மேல்நாடு ஊராட்சி, கீழ்நாடு ஊராட்சி மற்றும் ஆத்தூர் ஒன்றியம், பைத்தூர் ஊராட்சி ஆகியவை அடங்கிய பகுதிகளில் குன்னூர் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளியும் மற்றும் சிட்டம்பட்டு, நாகலூர், சூலாங்குறிச்சி ஆகிய இடங்களில் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட துவக்கப் பள்ளிகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. எனவே, அப்பகுதியில் பழங்குடியின மாணவர்களுக்கு தனி விடுதி கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2015 செப்டம்பர் 29

180—

மாணவர் விடுதி

வினா எண் 7887—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மாணவர் விடுதிகளை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிடர் நல மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு 2011–2012 ஆம் ஆண்டில் கட்டடம் பழுதுபார்த்தல், அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல், சிறப்பு பராமரிப்பு பணிகள் மற்றும் கூடுதல் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்காக அரசாணை (நிலை) எண் 57, ஆதி (ம) பந (ஆதிந.2) துறை, நாள் 4–7–2011–ன்படி, ரூ.29.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்கண்ட பணிகள் அனைத்தும் தாட்கோ, செயற்பொறியாளர், திருநெல்வேலி அவர்களால் முடிக்கப்பட்டுள்ளது.

181—

நிலம் வழங்குதல்

வினா எண் 8510—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, அரூர் பேரூராட்சி 14–வது வார்டு அருகே ஆதி திராவிடர் மக்களுக்கு 1996–1997 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் நலத் துறைமூலம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட 211 பேருக்கு நிலத்தை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் வட்டம் கிராமம் புல எண் 123/2பி முதலியவற்றில் மொத்தம் 3.16.0 ஹெக்டேர் நிலம் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு நில எடுப்பு செய்யப்பட்டு 211 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் சுமார் 20 நபர்கள் வீடுகள் கட்டி வசித்து வருகின்றனர். மேற்படி நிலத்தில் வளர்ந்திருந்த வேலிமுள் அகற்றப்பட்டு வீட்டுமனைகளும், பொதுப் பயன்பாட்டிற்கான இடமும் அளந்து காண்பிக்கப்பட்டது. ஆக்கிரமித்து செயல்பட்டு வந்த செங்கல் சூளையும் அகற்றப்பட்டுவிட்டது.

182—

உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளி

வினா எண் 9786—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி, உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழங்குடியின மாணவ–மாணவியர்கள் தங்கி தரமான கல்வி பயின்றிடும் வகையில், பழங்குடியின மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் உண்டி உறைவிடப் பள்ளிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது இத்துறையின் வாயிலாக பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் நேரடியாக தொடங்கப்படுவது நடைமுறையில் இல்லை. எனினும்,

பழங்குடியின மாணாக்கர்களின் பள்ளி இடைநிற்றலைக் குறைக்கவும், அவர்கள் தரமான உயர் கல்வி பெறும் வகையிலும், நிதி நிலைமை மற்றும் தேவைக்கேற்ப அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலை/உயர்நிலைப் பள்ளிகள் அவற்றின் அடுத்த நிலைக்கு நிலை உயர்த்தப்பட்டு வருகின்றன.

2. மானாமதுரை பகுதியில் பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகள் ஏதும் செயல்படாத நிலையில், மானாமதுரை ஊராட்சியில் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி துவக்குவதற்கான வழிவகை இல்லை.

183—

புதிய சமையல் கூடம்

வினா எண் 13332—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி மலை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிக்கு புதிய சமையல் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி மலை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிக்கு புதிய சமையல்கூடம் மற்றும் உணவு உண்ணும் அறை கட்ட 2011–2012 ஆம் ஆண்டு மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், அரசாணை (நிலை) எண் 211, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 3–11–2011–ல் ரூ.4.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கப்படும்.

2015 செப்டம்பர் 29]

184—

மாணவர் விடுதி

வினா எண் 13334—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டையில் இளங்கலை கல்லூரிக்கு ஆதி திராவிடர் மாணவர் விடுதி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டையில் உள்ள இளங்கலை கல்லூரிக்கு ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி துவங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

186—

உண்டி, உறைவிட விடுதிகள்

வினா எண் 15816—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை அரசுக் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு உண்டி உறைவிட விடுதிகள் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதியில் உடுமலைப்பேட்டையில் அரசாணை (நிலை) எண்

விடுபட்ட வினா எண் 185-க்கான விளக்கத்தினை பக்கம் 693-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க

4, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நாள் 18–1–2013–ன்படி அரசு ஆதி திராவிடர் நல கல்லூரி விடுதி 27–3–2013–ல் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே, உடுமலைப்பேட்டையில் அரசுக் கல்லூரியில் மாணவ/மாணவியர் விடுதி புதிதாக துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

187—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 15817—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, எலையமுத்தூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், எலையமுத்தூர் கிராமம் புல எண்கள் 101/1ஏ, 1பி2, 102/1,2, 3பி–யில் 7.32 ஏக்கர் நில எடுப்பு செய்யப்பட்டு, 149 மனைகளாக பிரிக்கப்பட்டு, அதில் 80 பட்டாக்கள் 2001 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளன. காலியாக 69 மனையிடங்கள் உள்ளன. மேற்படி காலி இடத்தில் ஆதி திராவிடர்கள் யாரும் குடியிருக்கவில்லை. பட்டா வழங்கக் கோரி 36 நபர்கள் விண்ணப்பித்துள்ளனர். இலவச வீட்டுமனைப் பட்டா கோரி பெறப்பட்ட 36 மனுக்களின் மீது விசாரணை செய்யப்பட்டு, தகுதியான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்படும்.

188—

நல ஆணையம்

வினா எண் 15844—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) தமிழகத்தில் மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

189—

சமுதாயக் கூடம்

வினா எண் 20327—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சங்கரி பேரூராட்சி, கோட்டைத் தெரு, 5—வது வார்டு பகுதியிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2012—2013 ஆம் ஆண்டிற்கு 10 சமுதாயக் கூடங்கள் கட்ட அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சங்கரி தொகுதி, சங்கரி பேரூராட்சி, கோட்டைத் தெரு, 5—வது வார்டு பகுதியிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட போதுமான நிதி, தேவையான இடம் ஆகியவற்றின் அடிப்படையில் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

190—

சமுதாயக் கூடம்

வினா எண் 20617—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, அதிரான்விடுதி ஊராட்சி, அதிரான்விடுதி ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமுதாயக் கூடங்கள் கட்ட வேண்டி அதிக எண்ணிக்கையில் விண்ணப்பங்களும் கோரிக்கைகளும் பொதுமக்கள்/சமுதாய அமைப்புகளிடமிருந்தும் பெறப்படுவதுடன் சட்டமன்ற வினாக்களும் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு ஒரு மாவட்டத்திற்கு ஒரு சமுதாயக் கூடம்கூட கட்டி கொடுக்கப்பட முடியாத நிலை உள்ளது. எனினும் ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயக் கூடத்திற்கான இட வசதி மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவைகளைக் கணக்கில்கொண்டு சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன.

2. 2012–2013 ஆம் ஆண்டிற்கு 10 சமுதாயக் கூடங்களும், 2013–2014 ஆம் ஆண்டிற்கு 3 சமுதாயக் கூடங்களும் கட்டப்பட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, ஆதி திராவிடர் காலனி பகுதியில் தாட்கோமூலம் சமுதாய நலக் கூடம் கட்ட போதுமான நிதி, தேவையான இடம் ஆகியவற்றின் அடிப்படையில் கோரிக்கை பரிசிலனை செய்யப்படுகிறது.

2015 செப்டம்பர் 29]

191—

மாணவர் விடுதி

வினா எண் 21198—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதி, குமராட்சியில் புதிய ஆதி திராவிடர் நல மாணவர்கள் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் தொகுதி, குமராட்சியில் புதியதாக ஒரு மாணவர் விடுதி 2012–2013 ஆம் ஆண்டில் துவங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசு ஆணை (நிலை) எண் 4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை, நாள் 18–1–2013)

192—

மாணவ, மாணவியர் விடுதி

வினா எண் 21554—திரு. வே. குணசீலன்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஒன்றியத்தில் ஆதி திராவிடர் மாணவ, மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஒன்றியத்தில் 2 மாணவர் விடுதிகள் மற்றும் 2 மாணவியர் விடுதிகள்

[2015 செப்டம்பர் 29

ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. எனவே, தற்போது புதிதாக மாணவ/மாணவியர் விடுதி துவங்க அவசியம் எழவில்லை.

193—

மாணவியர் விடுதி

வினா எண் 21609—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு ஆதி திராவிடர் மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சியில் ஆதி திராவிடர் நல மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் ஏற்கெனவே இயங்கி வருவதால் ஆதி திராவிடர் நலத் துறை மூலம் தற்போது புதியதாக விடுதி தோற்றுவிக்க அவசியம் எழவில்லை.

194—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 22759—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, மத்தியம்பட்டி ஊராட்சியில் உள்ள வேடியப்பன் கோயில் இருளர் இன மக்கள் குடியிருக்கும் குடிசைகளுக்கு குடிமனை பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, மத்தியம்பட்டி கிராமப் புல எண் 154/1-ல் புஞ்சை தரிசு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள 0.45.0 ஹெக்டேர் நிலத்தில் திருமதி பாப்பம்மாள், அய்யம்மாள், சாந்தி, வாசுகி, மகேஸ், மயில், மாலதி மற்றும் சாந்தி ஆகியோர் வீடு கட்டி வசித்து வருகின்றனர். மேற்படி நிலத்திற்கு எதிரில் சந்திராபுரம் கிராம புல எண் 88/ 6-ல் 0.54.0 ஹெக்டேர் நிலம் இருளர் கிராம நத்தம் என வகைப்படுத்தப்பட்டுள்ள புலத்தில் 30 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் திருமதி வேடியம்மாள் அலமேலு, கருப்பி (எ) வேடியம்மாள், வாசுகி, சின்னபாப்பா, சாந்தி ஆகியோர் வீடுகள் கட்டி வசித்து வருகின்றனர். மத்தியம்பட்டி கிராமம் புல எண் 154/1-ல் வீடுகட்டியுள்ள திருமதி. பாப்பம்மாள், அய்யம்மாள், சாந்தி, வாசுகி, மகேஸ், மயில், மாலதி மற்றும் சாந்தி ஆகியோருக்கு அரூர் சந்திராபுரம் கிராமத்தில் ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில், மத்தியம்பட்டி கிராமத்தில் குடியிருக்கும் அவர்களுக்கு மறுபடியும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

195—

உண்டி, உறைவிடப் பள்ளி

வினா எண் 22837—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சங்கராபுரம் ஊராட்சி, வைரவபுரம் பகுதியில் ஆதி திராவிடர் உண்டி உறைவிடப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழங்குடியின மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில், பழங்குடியின மாணாக்கர்கள் தங்கிப் பயிலும்வகையில்

அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மட்டுமே அரசால் துவக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. ஆனால், ஆதி திராவிடர் நல உண்டி உறைவிடப் பள்ளிகள் துவக்கப்படுவதில்லை.

2. இந்நிலையில் காரைக்குடி தொகுதி, சங்கராபுரம் ஊராட்சி, வைரவபுரம் பகுதியில் ஆதி திராவிடர் உண்டி உறைவிடப் பள்ளி புதியதாக அமைப்பதற்கான வழிவகைகள் இல்லை.

196—

மேல்நிலைப் பள்ளி

வினா எண் 22838—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை, புதுவயலில் ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களின் கல்வி வளர்ச்சிக்காக, ஆதி திராவிடர்/ பழங்குடியின மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பாக ஆதி திராவிடர் நலப் பள்ளிகளும், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இத்துறையின் வாயிலாக மேல்நிலைப் பள்ளிகள் நேரடியாக தொடங்கப்படுவது நடைமுறையில் இல்லை. எனினும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணாக்கர்களின் பள்ளி இடைநிற்றலைக் குறைக்கவும், அவர்கள் தரமான உயர் கல்வி பெறும் வகையிலும், நிதி நிலைமை மற்றும் தேவைக்கேற்ப ஆதி திராவிடர்/அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலை/உயர்நிலைப் பள்ளிகள் அவற்றின் அடுத்த நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

2015 செப்டம்பர் 29]

2. இந்நிலையில், காரைக்குடி தொகுதி, தேவகோட்டை, புதுவயலில் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி புதியதாக அமைப்பதற்கான வழிவகை இல்லை.

197—

சொந்தக் கட்டடம்

வினா எண் 25515—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டம், மேலநெட்டூர் ஆதி திராவிடர் மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 114, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 20–10–1999–ன்படி சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மேலநெட்டூர் என்ற இடத்தில் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி, ஏற்கெனவே கட்டப்பட்டு, சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

198—

சொந்தக் கட்டடம்

வினா எண் 25517—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், இளையான்குடி ஆதி திராவிடர் மகளிர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 18 ஆதி (ம) பந. துறை, நாள் 12–3–2013–ல் இளையான்குடி ஆதி திராவிடர் நல மகளிர் விடுதிக்கான சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.79.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

199—

தொடக்கப் பள்ளி

வினா எண் 25671—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி, திருப்புவனத்தில் ஆதி திராவிடர் தொடக்கப் பள்ளிகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் புதிதாக தொடக்கப் பள்ளிகள் நேரடியாக துவக்கப்படுவது தற்போது நடைமுறையில் இல்லை. எனினும், ஆதி திராவிடர்/பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகள் கண்டறியப்பட்டு அப்பகுதிகளில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் (SSA) கீழ் ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளிகள் பள்ளிக் கல்வித் துறையால் துவக்கப்பட்டு வருகின்றன.

2. சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இளையான்குடி, திருப்புவனத்தில் வசிக்கும் ஆதி திராவிடர் இன மக்களின் எண்ணிக்கை, அப்பகுதியில் அமைந்துள்ள பள்ளிகளின்

2015 செப்டம்பர் 29]

எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் தேவைப்படின் அப்பகுதியில் ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளி துவங்க பரிசிலனை செய்யப்படும்.

200—

தங்கும் விடுதி

வினா எண் 27282—திரு. சு. ரவி: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதியில் இருளர் பழங்குடியின மாணவர்கள் தங்கும் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதியில் 5 ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிகளும், ஓர் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி இயங்கி வருவதால் அரக்கோணம் தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறைமூலம் இருளர் பழங்குடியினர் மாணவர்களுக்காக தனியே விடுதி துவங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

(பேரவைக் கூட்டத் தொடர் முடியும் வரை தொடர்புடைய உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று தற்காலிக நீக்கம் செய்யப்பெற்றுள்ளதால் வரிசை எண்கள் 9, 50, 56, 57, 66, 72, 73, 79, 82, 87, 97, 103, 104, 105, 114, 115, 120, 131, 132, 135, 139, 150, 161, 163, 168, 169, 185 தொடர்புடைய வினாக்கள்—விடைகள் இப்பட்டியலில் இடம்பெறவில்லை.)

பட்டியல் 20

1—

தொடக்கப் பள்ளி

வினா எண் 27285—திரு. கு. ரவி: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், கைனூர் ஊராட்சி, கைனூர் இருளர் காலனியில் ஆரம்பப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை வாயிலாக புதிதாக தொடக்கப் பள்ளிகள் நேரடியாக துவக்கப்படுவது தற்போது நடைமுறையில் இல்லை. எனினும் ஆதி திராவிடர்/பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகள் கண்டறியப்பட்டு, அப்பகுதிகளில் "அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்" (SSA)கீழ் ஆதி திராவிடர் நல/பழங்குடியினர் நல உண்டி உறைவிடத் தொடக்கப் பள்ளிகள் பள்ளிக் கல்வித் துறையால் துவக்கப்பட்டு வருகின்றன.

2. வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், கைனூர் ஊராட்சி, கைனூர் இருளர் காலனியில் ஆரம்பப் பள்ளி அமைப்பது குறித்து, அப்பகுதியில் வசிக்கும் பழங்குடியினர் இன மக்களின் எண்ணிக்கை, அப்பகுதியில் அமைந்துள்ள பள்ளிகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும், நிதி நிலைமைக்கேற்பவும், தேவைப்படின் "அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்"கீழ் அப்பகுதியில் பழங்குடியினர் நல உண்டி உறைவிடத் தொடக்கப் பள்ளி துவக்க பரிசிலிக்கப்படும்.

விடுபட்ட வினா எண் 2-இதற்கான விளக்கத்தினை பக்கம் 801-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

3—

மீன்பிடித் துறைமுகம்

வினா எண் 1212—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை, ஆசாத் நகர், ஜாம்பானோடையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை, ஆசாத் நகர், ஜாம்பானோடையில் மீனவக் கிராமங்களில் உள்ள மீன்பிடிப் படகுகள் கோரையாற்றில் நிறுத்தப்பட்டு மீன்பிடிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. கோரையாற்றின் ஆழம் (1 அடி முதல் 1½ அடி) மிகக் குறைவாகவே உள்ளதால் திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை, ஆசாத் நகர், ஜாம்பானோடையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

6—

நவீன மீன்பிடித் துறைமுகம்

வினா எண் 6900—திரு. ஏ. சரத்குமார்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலக வங்கியின் சுனாமி மறுசீரமைப்புத் திட்ட நிதியிலிருந்து நாகப்பட்டினம் பழையாற்றில் நவீன மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

விடுபட்ட வினா எண்கள் 5,6-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 801-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

விடை.—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

ஆம்.

7—

மீன் இறங்கு தளம்

வினா எண் 6902—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் 7 கடலோர மாவட்டங்களில் 12 புதிய மீன் இறங்கு தளங்கள் கட்டும் பணியை முடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்.

8—

மீன் பதப்படுத்தும் பூங்கா

வினா எண் 6906—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை மற்றும் நாகப்பட்டினத்தில் மீன் பதப்படுத்தும் பூங்கா அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் மீன் பதப்படுத்தும் பூங்கா அமைத்திட நாகூருக்கு அருகில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவ்விடத்தின் புல எண் 142/1 பரப்பளவு 0.830 ஹெக்டேர் கொண்டது. இவ்விடம் கிழக்கு கடற்கரை சாலைக்கு அருகில் அமைந்துள்ளது.

2015 செப்டம்பர் 29]

சென்னையைப் பொறுத்தவரை, இராயபுரத்திலுள்ள தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான வலைபின்னும் கூடம் புல எண் 3480/1.6 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் மீன் பதப்படுத்தும் பூங்கா அமைக்க பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இவ்விடம் கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தூரத்திற்குள் அமைந்துள்ள காரணத்தினால் கடற்கரை ஒழுங்குமுறை மண்டல (Coastal Regulation Zone) அறிவிக்கையின்படி மீன் பதப்படுத்தும் பூங்கா அமைத்திட வாய்ப்பில்லையென அறிய வந்ததைத் தொடர்ந்து மாற்று இடம் தேடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சென்னையைப் பொறுத்தவரை அரசுக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட இடம் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டதால் மீன் பதப்படுத்தும் பூங்காவிற்கு பதிலாக மீன் வள ஆதார மையம் (Fish Support Centre) அமைத்திடுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

11—

குளிர் சாதன வசதி

வினா எண் 12884—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக மீனவக் கிராமங்களில் மீன்களைப் பதனிடுவதற்கு குளிர்சாதன வசதி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

தமிழக மீனவக் கிராமங்களில் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளவும், தரத்தினை மேம்படுத்தி மீனவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் நோக்கத்தோடு மீன் பதனிடும் பூங்காக்கள் 13 கடலோர நகரங்களில் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

12—

மீன் உணவு தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 17653—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

விடுபட்ட வினா எண்கள் 9,10-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 798-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சிப்காட் வளாகத்தில் மீன் உணவு தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) தமிழக அரசால் 13 கடலோர மாவட்டங்களில் மீன் பதனிடும் தொழிற்சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, முதற்கட்டமாக, நாகை மற்றும் கடலூர் மாவட்டங்களில் இவை அமைக்கப்படவுள்ளதால், தனியாக, மானாமதுரை சிப்காட் வளாகத்தில் மீன் உணவு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) எழாது.

13—

மீன் பதப்படுத்தும் நிலையம்

வினா எண் 19158—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் கடற்பகுதியில் மிதக்கும் மீன் பதப்படுத்தும் நிலையங்களை விரைந்து அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் கடற்பகுதியில் மிதக்கும் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை. ஆனால், மீனவ மக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் வங்காள விரிகுடா மற்றும் இந்திய பெருங்கடலிலும் அரசு தனியார் பங்களிப்புடன் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29]

14—

மீன் வளப் பல்கலைக்கழகம்

வினா எண் 22553—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதியில் மீன் வளப் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதியில் மீன் வளப் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளை அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

15—

தாய்க் கப்பல் திட்டம்

வினா எண் 22554—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் கடற்பகுதியில் மிதக்கும் மீன் குளிர்ப்பதன தாய்க் கப்பல் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் கடற்பகுதியில் மிதக்கும் மீன் குளிர்ப்பதன தாய்க் கப்பல் திட்டத்தினைச் செயல்படுத்தும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

16—

கடல்சார் கல்லூரி

வினா எண் 27530—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல்சார் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சார்பில் கடல்சார் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசிடம் இல்லை.

20—

மின் ஆளுமை திட்டம்

வினா எண் 5985—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டத்தை கிருஷ்ணகிரி மாவட்டம் போன்று மின் ஆளுமை திட்டத்தின்கீழ் கொண்டுவர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தருமபுரி மாவட்டத்தை கிருஷ்ணகிரி மாவட்டம் போன்று மின் ஆளுமை திட்டத்தின்கீழ் கொண்டுவர அரசிடம் செயற்குறிப்பு உள்ளது. தமிழ்நாட்டில் ஆறு மாவட்டங்கள் (கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், அரியலூர், பெரம்பலூர், திருவாரூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்) முன்னோடி மின் மாவட்டங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதனையடுத்து மாநிலம் முழுவதுமுள்ள பிற மாவட்டங்களுக்கு மின் மாவட்ட திட்டத்தை விரிவுபடுத்த மத்திய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு மத்திய அரசின் நிருவாக ஒப்புதல் 28—3—2012 அன்று கிடைக்கப்பெற்றுள்ளது. இதனையடுத்து, இத்திட்டத்தை பிற மாவட்டங்களுக்கு படிப்படியாக விரிவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடுபட்ட வினா எண்கள் 17,18,19-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 198-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

21—

மின் ஆளுமைத் திட்டம்

வினா எண் 5867—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் ஆளுமை முயற்சிகள் (e–Governance) அரசின் அனைத்துத் துறைகளிலும் செயல்படுத்தப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மின் ஆளுமை முயற்சிகள் அரசின் அனைத்து துறைகளிலும் செயல்படுத்தப்பட அரசு ஆவன செய்து வருகிறது. இதற்கான முயற்சிகள் ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

22—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

வினா எண் 8627—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் அரசு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உத்தேசம் ஏதும் இல்லை.

[2015 செப்டம்பர் 29

23—

இன்டர்நெட் பிரவுசிங் நிலையம்

வினா எண் 17759—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாணவர்களுக்கு அனைத்து பஞ்சாயத்து பகுதிகளிலும் இலவசமாகப் பயன்படுத்தும் இன்டர்நெட் பிரவுசிங் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாணவர்களுக்கு அனைத்து பஞ்சாயத்து பகுதிகளிலும் இலவசமாகப் பயன்படுத்தும் இன்டர்நெட் பிரவுசிங் நிலையம் அமைக்கும் திட்டம் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் பரிசீலனையில் இல்லை. மாநிலத்தில் மூன்று பஞ்சாயத்துக்கு ஒன்றுவீதம் பொது மக்களுக்கு அரசின் சேவைகளை இணையதளம்மூலம் வழங்க பொது சேவை மையங்கள் (Common Service Centre) அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

26—

இலவச இணையதள உலாவி மையம்

வினா எண் 22408—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அனைத்து ஊராட்சிகளிலும் இலவச இணைய தள உலாவி மையங்களைத் துவக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

அனைத்து ஊராட்சிகளிலும் இலவச இணைய தள உலாவி மையங்களை Free Internet browsing Centres *அமைக்கும் திட்டம்*

விடுப்பட்ட வினா எண்கள் 24,25-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 798-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

இத்துறையின் பரிசிலனையில் இல்லை. மாநிலத்தில் மூன்று பஞ்சாயத்துக்கு ஒன்றுவீதம் பொது மக்களுக்கு அரசின் சேவைகளை இணையதளம்மூலம் வழங்க பொது சேவை மையங்கள் (Common Service Centre) அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

27—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

வினா எண் 26726—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அரசு ஆணையின்படி மானாமதுரை தொகுதிக்கு அருகில் உள்ள மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள மதுரை இலந்தைகுளத்தில் 28.91 ஏக்கர் நிலப்பரப்பிலும் மற்றும் மதுரை வடபழஞ்சியில் 245.17 ஏக்கர் நிலப்பரப்பிலும் எல்கோசெஸ் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவியுள்ளது. மதுரை, இலந்தைகுளம் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 2 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் மற்றும் மதுரை, வடபழஞ்சி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 5 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் இரண்டாவது நிலை நகரங்களுக்குச் செல்ல தயக்கம் காட்டுவதாலும் மற்றும் உலகளாவிய தகவல் தொழில்நுட்பவியல் துறையின் மந்தமான/தேக்க நிலையின் காரணமாகவும் மேற்கூறிய தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் முழு அளவில் இந்நிறுவனங்கள் பங்கேற்க இயலாமல் உள்ளது. இந்நிலை முழுமையாக மாற்றம் பெறவும், தகுந்த தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த

[2015 செப்டம்பர் 29

நிறுவனங்கள் இந்த இரண்டாம் நிலை நகரங்களில் உள்ள தொழில்நுட்பப் பூங்காக்களில் பங்கேற்கவும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது மானாமதுரை தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

28—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

வினா எண் 28527—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அரசு ஆணையின்படி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அருகில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள திருநெல்வேலி—கங்கைகொண்டான் கிராமத்தில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவியுள்ளது. இதில் 3 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இங்கு கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்தில் 9000 சதுர அடி இடம் திருவாளர் கோம் சாஸ் மீடியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது உலகளாவிய தகவல் தொழில்நுட்பவியல் துறையில் ஏற்பட்டுள்ள மந்தமான/தேக்க நிலையின் காரணமாக, முதன்மையான நிறுவனங்கள் இரண்டாவது நிலை நகரங்களுக்குச் செல்ல தயக்கம் காட்டுவதால் மேற்கூறிய தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் முழு அளவில் நிறுவனங்கள் பங்கேற்க இயலாமல் உள்ளது. இந்நிலை முழுமையாக மாற்றம்

2015 செப்டம்பர் 29]

பெறவும், தகுந்த தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்கள் இந்த இரண்டாம் நிலை நகரங்களில் உள்ள தொழில்நுட்பப் பூங்காக்களில் பங்கேற்கவும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

29—

உயர் தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 28562—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் உயர் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அரசு ஆணையின்படி மானாமதுரை தொகுதிக்கு அருகில் உள்ள மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள மதுரை இலந்தைகுளத்தில் 28.91 ஏக்கர் நிலப்பரப்பிலும் மற்றும் மதுரை வடபழஞ்சியில் 245.17 ஏக்கர் நிலப்பரப்பிலும் எல்கோசெஸ் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவியுள்ளது. மதுரை, இலந்தைகுளம் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 2 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் மற்றும் மதுரை, வடபழஞ்சி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 5 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் இரண்டாவது நிலை நகரங்களுக்குச் செல்ல தயக்கம் காட்டுவதாலும் மற்றும் உலகளாவிய தகவல் தொழில்நுட்பவியல் துறையின் மந்தமான/தேக்க நிலையின் காரணமாகவும் மேற்கூறிய தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் முழு அளவில் இந்நிறுவனங்கள் பங்கேற்க இயலாமல் உள்ளது. இந்நிலை முழுமையாக மாற்றம் பெறவும், தகுந்த தகவல்

[2015 செப்டம்பர் 29

தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்கள் இந்த இரண்டாம் நிலை நகரங்களில் உள்ள தொழில்நுட்பப் பூங்காக்களில் பங்கேற்கவும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது மானாமதுரை தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

31—

தனி வட்டம்

வினா எண் 944—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் திருப்புவனத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 8–5–2012 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பிற்கிணங்க, மானாமதுரை தொகுதியில், திருப்புவனத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அரசாணை (நிலை) எண் 357 வருவாய்த் துறை நாள் 10–10–2012–ன்படி தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

32—

வருவாய் வட்டம்

வினா எண் 1495—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பாள் ஊராட்சியை மையமாகக் கொண்டு வருவாய் வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுபட்ட வினா எண் 30-இதற்கான விளக்கத்தினை பக்கம் 798-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி களப்பாள் ஊராட்சியை மையமாகக் கொண்டு வருவாய் வட்டம் அமைக்க அரசு நிர்ணயித்துள்ள அளவுகோல்களின்படி சாத்தியக்கூறுகள் இல்லை.

33—

அலுவலர் நியமனம்

வினா எண் 1965—டாக்டர் (திருமதி) புஷ்பலீலா ஆல்பன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பத்மநாபபுரம் தொகுதி, கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு தேவையான அலுவலர்களை நியமனம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மொத்தம் அனுமதிக்கப்பட்ட 181 பணியிடங்களில் காலியாக உள்ளவை 52 ஆகும். காலிப் பணியிடங்களை வேலைவாய்ப்பகம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போதைய நிலவரப்படி கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 129 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், நாளது தேதியில் வருவாய் உதவியாளர் பணியிடம் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன மற்றும் 1–1–2014 முதல் காலியாக இருந்த பதிவறை எழுத்தர் பணியிடம் பூர்த்தி செய்யப்பட்டு பதிவறை எழுத்தர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார்.

விடுப்பட்ட வினா எண் 34-இதற்கான விளக்கத்தினை பக்கம் 798-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

35—

துணை வட்டாட்சியர் அலுவலகம்

வினா எண் 3086—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சாதி, வருமானம், இருப்பிடம் போன்ற சான்றுகளை உள்வட்ட அளவிலேயே பெற மண்டல துணை வட்டாட்சியர் அலுவலகங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

தற்போதுள்ள நடைமுறையில் வட்டாட்சியர் அலுவலகத்திலேயே மண்டல துணை வட்டாட்சியர் பணிபுரிவதாலும், உள்வட்டங்களில் மண்டல துணை வட்டாட்சியருக்கென தனி அலுவலகம் இல்லாததாலும் வட்டாட்சியர் அலுவலகத்திலேயே அனைத்து சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருவதாலும் சான்றுகள் வெவ்வேறு நிலை அலுவலகர்களால் வழங்கப்படும் நிலையில் மண்டல துணை வட்டாட்சியர் அலுவலகங்கள் ஏற்படுத்த நடைமுறையில் சாத்தியமாகாது என தெரிவிக்கப்படுகிறது.

36—

புதிய வட்டம்

வினா எண் 3088—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தை மூன்றாகப் பிரித்து ஆனைமலையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உத்தேசிக்கப்படும் ஆனைமலை வட்டம் அரசாணை (நிலை) எண் 279 வருவாய்த் துறை நாள் 9-6-2003-ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை

2015 செப்டம்பர் 29]

நிறைவு செய்யாததால், பொள்ளாச்சி வட்டத்தை மூன்றாகப் பிரித்து ஆனைமலையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க வாய்ப்பு இல்லை.

37—

தனி வட்டம்

வினா எண் 3089—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் வடக்கு வட்டத்திலுள்ள அன்னூர் தனிவட்டமாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்திலுள்ள சரவணம்பட்டி உள்ள வட்டத்திலிருந்து வெள்ளானைப்பட்டி கிராமத்தினை சர்க்கார்சாமக்குளம் உள்வட்டத்தில் சேர்த்து அன்னூர் வடக்கு அன்னூர் தெற்கு, சர்க்கார்சாமக்குளம் ஆகிய 3 உள்வட்டங்களை உள்ளடங்கிய புதிய அன்னூர் வட்டம் உருவாக்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 407, வருவாய்த் [வ.நி.1 (1)] துறை, நாள் 21–11–2012–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

40—

ஆதார் அடையாள அட்டை

வினா எண் 4714—திரு. ஏ. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு அங்க அடையாள அட்டை வழங்கி ஆதார் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண்கள் 38, 39-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 798-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு ஆதார் எண் கொண்ட அங்க அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

(ஆ) இப்பணியினை விரைந்து முடிக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

41—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 5164—திரு. பி.எல். சுந்தரம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மலைப்பகுதி விளை நிலங்களுக்கு பட்டா வழங்க விதிக்கப்பட்ட தடையாணையை நீக்கி, மலைவாழ் மக்களின் அனுபவ நிலங்களுக்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

மாநிலத்தில் உள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் மண் அரிப்பு மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்படாமல் தடுத்து, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதும், காடுகளைப் பாதுகாப்பதும் அவசியம் என அரசு கருதுகிறது. வனம் மற்றும் வனத்தின் அருகில் குடியிருந்து அரசு நிலத்தில் விவசாயம் செய்து வரும் பழங்குடியினருக்கு அவர்கள் விவசாயம் செய்து வரும் நிலத்தை அதிகபட்சமாக 4.00.0 எக்டர் வரை சம்பந்தப்பட்ட அனுபோகதாரருக்கு வழங்குவது தொடர்பாக வன உரிமைச் சட்டம் Forest Dwellers*-ன்கீழ் உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் விவசாயத்திற்கு நில ஒப்படை வழங்க இயலாது.*

2015 செப்டம்பர் 29]

42—

புதிய வட்டம்

வினா எண் 5796—திரு. கோ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பர்கூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குதல் தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து பரிந்துரை வரப்பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

43—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 5800—திரு. பி.எல். சுந்தரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் நகராட்சி, அண்ணாநகர், தோப்பூர் ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம் மற்றும் நகராட்சிக்குட்பட்ட அண்ணாநகர் புல எண் 76–ல் உள்ள நத்தம் வகைபாடு நிலத்தில் 175 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருப்பதை எதிர்த்து திரு. தைரியநாதன் என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 2–ம் மேல் முறையீடு மனு CMP/No/5803/84 நிலுவையில் உள்ளது.

வழக்கு முடிவுற்ற பிறகு நீதிமன்ற உத்தரவிற்கிணங்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

2. தோப்பூர் காலனி புல எண் 340/1—ல் உள்ள 0.71.0 எக்டர் நத்தம் வகைபாடு செய்யப்பட்ட நிலத்தில் நத்தம் நிலவரித் திட்டம் செயல்படுத்தும்போது குடியிருக்கும் நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும். புல எண் 340/2—ல் உள்ள 1.28.5 எக்டர் நிலம் நகராட்சிக்கு சொந்தமானது. அவை நகராட்சியின் தேவைக்கு மேற்படி இடம் தேவைப்படுவதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

45—

மாவட்டத்தைப் பிரித்தல்

வினா எண் 5972—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டத்தை பிரித்து தென்காசி மாவட்டமாக உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை நாள் 9—6—2003—ன்படி உத்தேசிக்கப்படும் புதிய தென்காசி மாவட்டம், பரப்பளவு, வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கை மற்றும் வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை அரசு நிபந்தனைகளின்படி பூர்த்தி செய்யாத காரணத்தால் தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க வழிவகை இல்லை.

46—

தனி வருவாய் வட்டம்

வினா எண் 6059—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண் 44-இதற்கான விளக்கத்தினை பக்கம் 798-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பை மையமாகக் கொண்டு தனி வருவாய் வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பை மையமாகக் கொண்டு தனி வருவாய் வட்டம் தோற்றுவிப்பது தொடர்பான கருத்துரு புதிய வட்டங்களை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவில் வைத்து அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டவுடன் அரசு பரிசீலிக்கும்.

47—

கோட்டாட்சியர் அலுவலகம்

வினா எண் 6132—திரு. சுப. தங்கவேலன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாடானை வட்டம், திருவாடானையைத் தலைமையிடமாகக் கொண்டு கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை நாள் 9-6-2003-ன்படி உத்தேசிக்கப்படும் திருவாடானைக் கோட்டம், பரப்பளவு, மக்கள் தொகை, வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை, வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை ஆகிய காரணிகள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களைப் பூர்த்தி செய்யவில்லை. எனவே, மேற்படி இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கோட்டம் ஏற்படுத்த மார்க்கமில்லை.

[2015 செப்டம்பர் 29

48—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 6408—திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீர்நிலைப் புறம்போக்காக இருந்து காலப்போக்கில் குடியிருப்புகளாக மாறிய பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்களுக்கு வகைமாற்றம் செய்து பட்டா வழங்கும் பணிகளைத் துரிதப்படுத்தி மக்களுக்குப் பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

அரசாணை எண் 41, வருவாய்த் துறை நாள் 20–1–1987–ன்படி நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களில் ஒப்படை வழங்க அரசின் தடை உள்ளது. அரசாணை எண் 854 வருவாய்த் துறை நாள் 30–12–2006–ன்படி நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்வதை ஆட்சேபித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் சிவகாசி வட்டார வரி செலுத்துவோர் சங்கத்தினரால் நீதிப் பேராணை மனு எண் 2247/07 தாக்கல் செய்யப்பட்டது. 29–4–2008 தீர்ப்பில் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவதில் சில நெறிமுறைகளை கடைப்பிடிக்க அறிவுறுத்தி அரசாணைக்கு எதிரான மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வுத்திரவினை எதிர்த்து சிவகாசி வட்டார வரி செலுத்துவோர் சங்கம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு SLP தாக்கல் செய்யப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால், நீர்நிலைப் புறம்போக்குகளிலுள்ள ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்குவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

49—

வட்டாட்சியர் அலுவலகத்தைப் பிரித்தல்

வினா எண் 6415—திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

திருப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தை திருப்பூர் (வடக்கு) மற்றும் திருப்பூர் (தெற்கு) என இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

15–5–2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க திருப்பூர் வட்டத்தைப் பிரித்து திருப்பூர் (தெற்கு) என்ற புதிய வட்டம் உருவாக்கியும் எஞ்சிய திருப்பூர் வட்டத்தினை திருப்பூர் (வடக்கு) என பெயர் மாற்றம் செய்தும் அரசாணை (நிலை) எண் 461, வருவாய்த் துறை நாள் 20–11–2013–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

50—

பெயர் திருத்தம்

வினா எண் 6507—திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தின் உண்மைப் பெயரான பொன்னகர் என்று பெயர் திருத்தம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்தில் உள்ள பொது மக்களிடம் கருத்து கேட்டதில் பென்னாகரம் என்ற பெயர்தான் பழையது என்றும் வழக்கத்தில் உள்ள இப்பெயர்தான் நன்றாக உள்ளது என்றும் திருத்தம் தேவையில்லை என்றும் பொது மக்கள் தெரிவித்துள்ளதால் பொன்னகர் என்று மாற்ற அவசியமில்லை. எனவே, தற்போதுள்ள பென்னாகரம் என்ற பெயரே தொடரலாம்.

51—

புதிய வட்டம்

வினா எண் 6560—திரு. மு. ரெத்தினசாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு தாலுகாவைப் பிரித்து புதியதாக பூதலூர் வட்டம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 15–5–2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மற்றும் திருவையாறு வட்டங்களைப் பிரித்து புதிய பூதலூர் வட்டம் உருவாக்கி அரசாணை (நிலை) எண் 486, வருவாய்த் துறை நாள் 27–11–2013–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

53—

தனி வட்டம்

வினா எண் 6701—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரையைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை நாள் 9–6–2003–ன்படி கிராமங்களின் எண்ணிக்கை என்ற காரணியைப் பொறுத்தவரையில் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களைப் பூர்த்தி

விடுபட்ட வினா எண் 52-இதற்கான விளக்கத்தினை பக்கம் 798-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

செய்யவில்லை எனினும் அரசாணையில் விதித்துள்ள நிபந்தனையினைத் தளர்த்தி கீழக்கரையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

54—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 8706—திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, கோணக்குட்டை கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், கரியமங்கலம் மதுரா கோணக்குட்டை கிராமத்தில் 120 குடியிருப்பு வீடுகள் உள்ளன. இதில் 115 குடியிருப்பு வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா உள்ளது. 5 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா இல்லை. மேற்படி 5 நபர்களும் கிராம நத்தத்தில் வருகின்றனர். இதில் மூன்று நபர்கள் ஓட்டு வீடும், ஒரு நபர் சீமை ஓட்டு வீடும் ஒரு நபர் மெத்தை வீடும் கட்டி வசித்து வருகின்றனர். இவர்களுக்கு தகுதியின் அடிப்படையிலும் அனுபவத்தின் அடிப்படையிலும் தமிழக அரசின் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இது தவிர, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதியான அரசு புறம்போக்கு நிலம் ஏதும் இல்லை. எனவே, பட்டா இல்லாத நபர்கள் எவரும் இல்லை.

55—

வருவாய் ஆய்வாளர் அலுவலகம்

வினா எண் 7175—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 29

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பாள் ஊராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூகோள ரீதியாக களப்பாள் கிராமம் திருத்துறைப்பூண்டி வட்டத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ளது. எனவே, திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பாள் ஊராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அமைக்க வாய்ப்பு இல்லை.

56—

புதிய வட்டாட்சியர் அலுவலகம்

வினா எண் 7176—திரு. தா. மலரவன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்பத்தூர் மாவட்டம், கோயம்புத்தூரில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் தற்போது கோயம்புத்தூர் தெற்கு வட்டம் மற்றும் வடக்கு வட்டம் என இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் சொந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதியதாக பிரிக்கப்பட்ட சூலூர் வட்டத்திற்கு ரூ.260.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு அரசாணை எண் 193, வருவாய்த் துறை நாள் 8—6—2012—ல் ஆணை வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

57—

வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 7131—திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிய வட்டம் உருவாக்க உத்தேசிக்கப்படும் வாலாஜாபாத் வட்டம் அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை நாள் 9–6–2003–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோல்களை நிறைவு செய்வதால் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கருத்துரு பெறப்பட்டு அரசின் பரிசிலனையில் உள்ளது.

58—

சொந்தக் கட்டடம்

வினா எண் 7206—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் தனி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தனி வட்டாட்சியர் (ஆதி திராவிடர் நலம்) அலுவலகம்

கட்டும்பொருட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்குள் தனியே செயல்பட ஏதுவாக போதுமான இடவசதி உள்ளதால், புதிதாக கட்டடம் கட்ட பொதுப் பணித் துறை செயற்பொறியாளர்மூலம் மதிப்பீடு தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், நிருவாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெற்று புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

59—

தனி வட்டம்

வினா எண் 8227—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தைத் தலைமையிடமாகக் கொண்ட தனி வட்டம் உருவாக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 15–5–2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க மதுரை மாவட்டம், மதுரை (தெற்கு) வட்டத்தைப் பிரித்து திருப்பரங்குன்றம் மற்றும் மதுரை (மேற்கு) ஆகிய இரு புதிய வட்டங்களும் மதுரை (வடக்கு) வட்டத்தைப் பிரித்து மதுரை (கிழக்கு) என்ற புதிய வட்டமும் உருவாக்கி அரசாணை (நிலை) எண் 479, வருவாய்த் துறை நாள் 27–11–2013–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

60—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 8388—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியம், உடையகுளம் பேரூராட்சி, குப்பிச்சிபுதூர் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி வட்டம், ஓடையகுளம் பேரூராட்சி, குப்பிச்சிபுதூர் கிராமம், க.ச. 718/1-ல் உள்ள தீர்வை ஏற்படாத தரிசு புறம்போக்கு நிலத்தில் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒரு நபரும், மலைவாழ் மக்கள் 3 நபரும் ஆக 4 நபர்கள் வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள். மேற்படி தீர்வை ஏற்படாத தரிசினை நத்தமாக மாற்றி பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

61—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 8389—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியம், அங்கலக்குறிச்சி ஊராட்சி, வேடசந்தூர் பழைய ரோடு பகுதியில் விவசாயச் கூலிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியம், அங்கலக்குறிச்சி கிராமம் புல எண் 8, கிராம ஆவணங்களில் 'நெடுஞ்சாலை' என உள்ளது. இதில் 40 குடும்பங்கள் குடிசை வீடு அமைத்து குடியிருந்து வருகின்றனர். இந்த இடமானது வருங்கால சாலை விஸ்தரிப்பிற்கு தேவைப்படுவதாலும், இது நெடுஞ்சாலை புறம்போக்கு என்பதாலும் இந்த இடத்தில் இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. மேற்படி நெடுஞ்சாலை

[2015 செப்டம்பர் 29

புறம்போக்கில் குடியிருக்கும் நபர்கள் மாற்று இடம் தரும்பட்சத்தில் அருகிலுள்ள கிராமங்களுக்கு செல்ல தயாராக உள்ளனர் என விசாரணையில் தெரிய வருகிறது. இக்கிராமத்திற்கு அருகில் உள்ள கரியாஞ்செட்டிபாளையம் கிராமம், வண்டிப்பாதை புறம்போக்கில் மேற்படி நபர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

62—

புயல் பாதுகாப்பு இல்லம்

வினா எண் 8406—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, புழுதுக்குடி ஊராட்சியில் புயல் பாதுகாப்பு இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதிக்குட்பட்ட புழுதிக்குடி ஊராட்சி கடலோர பகுதியில் இடம்பெறாததால் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் கடலோர பேரிடர் அபாய குறைப்புத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்படவில்லை. எனினும், புழுதிக்குடி ஊராட்சியில் பாதுகாப்பு மையம் கட்டுவதற்கு தேவையுள்ளதா என்பதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

63—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 8587—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி, காக்காபாளையம் கொத்துக்காரன் காட்டிற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி கனககிரி கிராமம், காக்காபாளையம் அருகில் உள்ள கொத்துக்காரன் காடு, புல எண் 99/1-ல் உள்ள 0.42.5 எக்டர் பரப்பளவு நிலம் கிராமக் கணக்குகளின்படி மயானம் என வகைப்படுத்தப்பட்டுள்ளதால் அந்நிலத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

64—

துணை ஆட்சியர் அலுவலகக் கட்டடம்

வினா எண் 8663—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை துணை ஆட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேவக்கோட்டை துணை ஆட்சியர் அலுவலகத்தின் பழைய கட்டடம் தற்போது நல்ல நிலையில் இயங்கி வருவதால் புதிய கட்டடம் கட்டும் அவசியம் தற்போது எழவில்லை.

65—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 9947—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், குமரலிங்கம் பேரூராட்சி, ஜெ.ஜெ. நகர் 2–ல் காட்டுப் புறம்போக்கு நிலத்தை நத்தமாக மாற்றி வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், குமரலிங்கம் மேற்கு கிராமம் 80/எ1 சாலையானது தீர்வை ஏற்படாத தரிசு என்ற வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலமாகும். இதன் மொத்த விஸ்தீரணம் 2.10.5.38 ஏர்ஸ். இதில் சுமார் 20 நபர்கள் குடிசை அமைத்து 10 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகின்றனர். மேற்படி நபர்கள் ஆக்கிரமித்துள்ள நிலமானது அரசு புறம்போக்கில் தீர்வை ஏற்படாத தரிசு என்ற வகைபாடு கொண்ட நிலமாக இருப்பதால் நத்தமாக வகைபாடு மாற்றம் செய்த பின்னர் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

66—

நில அளவை செய்தல்

வினா எண் 9991—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமங்களில், நகரங்களில் நிலங்களை அளக்க வட்டாட்சியர் அலுவலகத்தில் கட்டணம் செலுத்திய 15 அல்லது 30 நாட்களில் நில அளவை செய்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

உட்பிரிவு உள்ள இனங்களுக்கு 30 நாட்களுக்குள்ளும், உட்பிரிவு இல்லாத இனங்களுக்கு 15 நாட்களுக்குள்ளும் பட்டா வழங்க ஏற்கெனவே அரசாணை (நிலை) எண் 210 வருவாய் [நி.அ. 1(1)] துறை, நாள் 8–7–2011–ல் ஆணை வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2015 செப்டம்பர் 29]

67—

நிலம் வழங்குதல்

வினா எண் 10323—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், வீரகேரளம்புதூர் வட்டத்தில் நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட 105.61 ஏக்கர் நிலத்தை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், வீரகேரளம்புதூர் வட்டத்தில் நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட 105.61 ஏக்கர் நிலம் தொடர்பாக 31–12–1987–ல் நிலம் உபரியாக அறிவிக்கப்பட்ட அறிவிக்கை மற்றும் ஒப்படை ஆணை, நீதிமன்ற தீர்ப்புகளால் பயனற்றதாகிறது infructuous *மேலும், தற்போது உபரிநிலம் 4.328 தர ஏக்கர் மட்டுமே உள்ளது. இது தொடர்பான நீதிமன்ற வழக்கு இன்னும் முடிவாகாத நிலையில் நீதிமன்றத் தீர்ப்பு வரப்பெற்ற பின்னர் இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.*

68—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 10858—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், குமரலிங்கம் (மேற்கு) பெருமாள் புதூரில் நத்தம் புறம்போக்கு காலி இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மேற்கு குமரலிங்கம் கிராமம் பெருமாள்புதூர் க.ச. 80/ஏ1 தீர்வை ஏற்படாத தரிசு மற்றும் கரடாக உள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

69—

ஆவணங்களை நவீனப்படுத்தும் பயிற்சிக் கூடம்

வினா எண் 11602—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஒரத்தநாடு நில அளவைப் பயிற்சி மையத்தில் ஆவணங்களை நவீனப்படுத்தும் பயிற்சிக்கூடம் அமைக்கும் பணியின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் NLRMP ஒரத்தநாடு நில அளவைப் பயிற்சி நிலைய வளாகத்தில் ஒரு பயிற்சிக் கூடம்/மையம் அமைக்கும் பணிக்காக ரூ.117.64 இலட்சத்தை ஒதுக்கீடு செய்து அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை, நாள் 31-1-2012—ல் அரசு உத்தரவிட்டுள்ளது.

மேற்படி ஒப்பளிப்பு தொகையை பயன்படுத்தி மைய அரசால் வகுத்து அனுப்பப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின் அடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல், நவீன நில அளவை உபகரணங்கள் வாங்குதல் (ஜி.ப்பி.எஸ்.டோட்டல் ஸ்டேஷன்) வரைபட மென்பொருள், கணினி மற்றும் இதர துணைச் சாதனங்களை வாங்குதல், படிப்பகம் நிறுவுதல், எழுதுபொருட்கள் வாங்குதல், பயிற்சியாளர்களை நியமித்தல், கணினி மென்பொருட்கள் வாங்குதல், மரச்சாமான்கள், தங்கும் விடுதி ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு தரப்பட்ட அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2015 செப்டம்பர் 29]

70—

ஆக்கிரமிப்பை அகற்றுதல்

வினா எண் 12222—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை உடைகுளம் கண்மாய்க்குள் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம் மற்றும் டவுன், செய்களத்தூர் கிராமம், புல எண் 143/7—ல் 1.28.5 எக்டர் நிலம் கிராமக் கணக்குகளில் சர்க்கார் புஞ்சை தரிசு என பதிவு செய்யப்பட்டுள்ளது. இது உடைகுளம் கண்மாய் கரையுடன் இணைந்துள்ளது. இதில் நான்கு நபர்கள் ஓட்டு வீடு கட்டியும், ஒன்பது நபர்கள் தார்சு வீடு கட்டியும் ஆக மொத்தம் பதின்மூன்று நபர்கள் 0.09.5 எக்டர் நிலத்தில் ஆக்கிரமணம் செய்துள்ளனர். கண்மாயில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை.

71—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 12342—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரம் 18—வது வார்டு பூந்தோட்டம் பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் வட்டம் மற்றும் நகரம் 18—வது வார்டு நகர நில அளவை எண் 17, 18—ல் அமைந்துள்ள பூந்தோட்டம் பகுதியானது ஓடை புறம்போக்கு என்பதால் இதில் வசிக்கும் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

72—

அரிசி மற்றும் மண்ணெண்ணெய் அளவை அதிகரித்தல்

வினா எண் 12382—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் தீ விபத்தினால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் அரிசி மற்றும் மண்ணெண்ணெய் அளவை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 190, வருவாய்த் துறை, நாள் 15—6—2011—ன்படி தமிழ்நாட்டில் தீ விபத்தினால் முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.5,000/— மற்றும் பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.2,500/— வழங்கப்படுவதுடன் 10 கிலோ அரிசி, 1 சேலை, 1 வேட்டி மற்றும் 1 லிட்டர் மண்ணெண்ணெய் நிவாரணமாக வழங்கப்படுகிறது. மேற்படி நிவாரணமாக வழங்கப்படும் அரிசி மற்றும் மண்ணெண்ணெய் அளவினை உயர்த்துவது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டதாகும்.

73—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

வினா எண் 12389—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) தமிழ்நாட்டில் கிராம நிருவாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்களை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12,614 கிராம நிருவாக அலுவலர்களில் 12,300 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள 314 கிராம நிருவாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் படிப்படியாக கட்டித் தரப்படும். அதன்படி அரசாணை (நிலை) எண் 476 வருவாய், நாள் 27-11-2013-ல் 114 கிராம நிருவாக அலுவலர்களுக்கு கிராம நிருவாக அலுவலகங்கள் மற்றும் அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.7,92,34,300/- வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

74—

பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு பாடத் திட்டம்

வினா எண் 15433—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வினை ஆரம்பக் கல்வி முதல் கல்லூரி வரை மாவட்ட பேரிடர் மேலாண்மை குழு மூலமும் அரசு சாரா அமைப்புகள் மூலமாக அரசின் நிதியுதவி பெற்று செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்விற்கான பாடத் திட்டங்கள் மத்திய அரசின் நிருவாகத்தின்கீழ் இயங்கி வரும் அனைத்து பள்ளிகளிலும் எட்டாம் வகுப்பு பாடப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. மாநில

[2015 செப்டம்பர் 29

அரசு நிருவாகத்தின்கீழ் இயங்கிவரும் அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசு பள்ளிக் கல்வித் துறையில் ஆவன செய்யப்பட்டு வருகிறது. விரைவில் ஆணை வெளியிடப்படும்.

75—

பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு

வினா எண் 15434—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வினை அரசு சாரா அமைப்புகள் மூலமாக அரசின் நிதியுதவி பெற்று செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு சாரா அமைப்புகள்மூலம் அரசின் நிதியுதவி பெற்று பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு திட்டத்தில் தற்போது உலக வங்கியின் நிதியுதவியுடன் கடலோர பேரிடர் தடுப்பு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மை திட்டத்தின்கீழ் Integrated Coastal Zone Management Plan சமுதாயத்தின் உதவியோடு இயற்கை வளங்களை பாதுகாத்தல் மற்றும் அதனை பாதிப்பில்லாது உபயோகித்தல் போன்றவற்றிற்கு விழிப்புணர்வு பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

76—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 15621—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, சோழபுரம் பேரூராட்சி பகுதியில் வாழ்ந்து வரும் மக்களுக்குக் குடியுரிமை பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், சோழபுரம் கிராமத்தில் கடந்த 30 ஆண்டுகளாக சுமார் 68 குடும்பங்கள் தனி நபர் பட்டா நிலங்களில் வசித்து வருகின்றனர். 68 குடும்பங்களும் தனி நபர் பட்டா நிலங்களில் ஓட்டு வீடு, மாடி வீடு மற்றும் குடிசை வீடுகள்மூலம் ஆக்கிரமணம் செய்து வசித்து வருகின்றனர். தனி நபர் பட்டா நிலங்களில் ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்திட அரசின் விதிமுறைகளில் வழிவகை ஏதுமில்லை என்பதால் மேற்கண்ட தனியர்களுக்கு பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

77—

தனி வட்டம்

வினா எண் 16461—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் உள்ள திருப்புவனத்தை தனி வட்டமாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 357, வருவாய் (வ.நி–1) (1) துறை, நாள் 10–10–2012–ன்படி புதிய திருப்புவனம் வட்டம் உருவாக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

78—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 16598—திரு. க. ரவி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், கணபதிபுரம் ஊராட்சி, கணபதிபுரம் பாட்டை புறம்போக்கில் வீடு கட்டி வசித்து வரும் ஜோயி காலனி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், நெமிலி ஒன்றியம், கணபதிபுரம் கிராமம், சர்வே எண் 451/2 கிராம நத்தம் புறம்போக்கில் ஜோயி இன மக்கள் 21 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

79—

மானியத் தொகை

வினா எண் 17348—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு உழவர் மேம்பாடு மற்றும் நலத் திட்டத்தின்கீழ் விவசாயி/குத்தகைதாரர் உடல் ஊனமுற்றால் வழங்கப்படும் மானியத் தொகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 265, வருவாய் (நி.சி.1 (2) துறை, நாள் 10—9—2011—ன்படி முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து மற்றும் அந்த நிலத்தில் நேரடியாக பயிர்செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து சிறு/குறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலில் கூலி அல்லது குத்தகை அடிப்படையில்

2015 செப்டம்பர் 29]

ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் மூல உறுப்பினராகவும், சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத இதர குடும்ப உறுப்பினர்கள் இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாகவும் பதிவு செய்யப்படுவர்.

மூல உறுப்பினர்களுக்கு பண்பேறிய சிவப்பு நிற அடையாள அட்டையும் (Maroon Colour Identity Card) மூல உறுப்பினர்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு சாம்பல்நிற அடையாள அட்டையும் (Grey Colour Identity Card) வழங்கப்படும்.

பண்பேறிய சிவப்பு நிற அட்டை பெற தகுதியுள்ள உறுப்பினர் ஒருவர் விபத்துக்குள்ளாக நேரிடும்போது கீழ்க்குறிப்பிட்டவாறு உதவித்தொகை வழங்கப்படுகிறது:

a)	இறப்பு	ரூ.1,00,000/–
b)	முடியாத அளவிற்கு இழப்பு (i) இரண்டு கைகள் (அ) (ii) இரண்டு கால்கள் (அ) (iii) ஒரு கை மற்றும் ஒரு கால் (அ) (iv) மீட்க முடியாத அளவிற்கு கண்கள் இரண்டிலும் பார்வை இழத்தல்	ரூ.1,00,000/–
c)	முடியாத அளவிற்கு இழப்பு (i) ஒரு கை (அ) (ii) ஒரு கால் (அ) (iii) பக்கவாதம்	ரூ.50,000/–
d)	மேலே (b) மற்றும் (c) இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை கால்களை இழத்தல்.	ரூ.20,000/–

எனவே, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பதிவுபெற்ற மூல உறுப்பினராக உள்ளவர்கள் விபத்து காரணமாக உடல் ஊனமுற்றால் மேலே (b) முதல் (d) வரை கண்டுள்ள இனங்களில் குறிப்பிட்டவாறு நிவாரணம் வழங்கப்படுகிறது.

[2015 செப்டம்பர் 29

நிவாரணத் தொகையினை உயர்த்துவதற்கான பிரேரணை எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

80—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 17801—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி பேரூராட்சி, கீழாயூர் காலனி, பசுமை நகர், பர்மா அகதிகள் குடியிருப்பிற்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் ஒருமுறை மட்டும் ஆக்கிரமிப்புகளை ஒழுங்குபடுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்ட அரசாணை கால நீட்டிப்புச் செய்து உத்தரவு வரப்பெற்றவுடன் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

81—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 18013—திரு. சு. ரவி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், மேல்பாக்கம் ஊராட்சி, கும்பினிப்பேட்டை கிராமம், கௌதம் நகரில் குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், மேல்பாக்கம் ஊராட்சி, கும்பினிப்பேட்டை கிராமம், கௌதம் நகரில் குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க மேற்படி மேல்பாக்கம் கிராமத்தில் தகுதியான இடம் ஏதுமில்லை. ஆகவே, பட்டா வழங்க இயலாது.

82—

புதிய வட்டம்

வினா எண் 18080—திரு. இரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூர் தொகுதி, குன்னம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து செட்டிக்குளத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நிருவாக வசதிக்காக குன்னம் வட்டத்தைப் பிரித்து ஆலத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஆலத்தூரில் உருவாக்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 410, நாள் 21–11–2012–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, குன்னம் வட்டத்தைப் பிரித்து செட்டிக்குளம் வட்டம் அமைக்க வழிவகை இல்லை.

83—

தனி வட்டம்

வினா எண் 19482—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பை தனி வட்டமாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உத்தேசிக்கப்படும் வத்திராயிருப்பு வட்டம் அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை நிறைவு செய்யாததால் புதிய வத்திராயிருப்பு வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

84—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 19483—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மொட்டமலை முருகன் கோவில் குடியிருப்புகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர், மொட்டமலை முருகன் கோவில் குடியிருப்புகளுக்கு அருகில் 30 மீட்டர் தொலைவில் புறம்போக்கு மலையில் 1989 ஆம் ஆண்டு முதல் 23 ஆண்டுகளுக்கு மேலாக அரசின் அனுமதி பெற்ற கிரானைட் குவாரிகள் இயங்கி வருவதால் மக்களின் பாதுகாப்பு கருதி வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

85—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 21272—திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை தெற்கு தொகுதி, காமராஜர் பகுதி மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், கிழக்கு மதுரை கிராமம், சர்வே எண் 2597/1—ல் மொத்த விஸ்தீரணம் 33.92 ஏக்கர் நிலம் கிராமக் கணக்குகளில் 'பெரிய கண்மாய்' என பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை நாள் 20—1—1987 மற்றும் அரசாணை (நிலை) எண் 186, வருவாய்த் துறை நாள் 29-4-2003—ன்படி ஆட்சேபகரமான நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளதாலும், இப்புலத்தில் வீடுகட்டி குடியிருந்து வரும் 1266 நபர்கள் ஆட்சேபகரமான 'நீர்நிலை புறம்புகல்' நிலத்தில் குடியிருந்து வருவதாலும், நத்தமாக வகைபாடு மாற்றம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

86—

புதிய வட்டாட்சியர் அலுவலகம்

வினா எண் 22009—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, குளச்சல் பகுதியை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

உத்தேசிக்கப்படும் குளச்சல் வட்டம் அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை நிறைவு செய்யாததால் புதிய குளச்சல் வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

87—

புதிய வட்டாட்சியர் அலுவலகம்

வினா எண் 22478—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சலை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

உத்தேசிக்கப்படும் குளச்சல் வட்டம் அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை நாள் 9-6-2003-ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை நிறைவு செய்யாததால் புதிய குளச்சல் வட்டம் உருவாக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

88—

வருவாய்க் கோட்ட அலுவலகம்

வினா எண் 23038—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் வருவாய்க் கோட்ட அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதியில் தேவக்கோட்டை நகரில் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் உள்ளதால் காரைக்குடியில் வருவாய்க் கோட்ட அலுவலகம் கட்ட வாய்ப்பில்லை.

89—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 23121—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரவாண்டி தொகுதியில் நீர்நிலை புறம்போக்கு அருகில் வசிக்கும் குடும்பங்களுக்கு மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை நாள் 20-1-1987 மற்றும் அரசாணை (நிலை) எண் 186, வருவாய்த் துறை நாள் 29-4-2003—ன்படி ஆட்சேபகரமான நீர்நிலைப்

[2015 செப்டம்பர் 29

புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளதாலும், சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் உத்தரவின்படியும் நீர்நிலைப் புறம்போக்குகளில் வீட்டுமனைப் பட்டா வழங்க தடை விதிக்கப்பட்டுள்ளதாலும், உச்ச நீதிமன்றத்தில் நீர்நிலைப் புறம்போக்குகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்குவதை எதிர்த்து சிவகாசி வரி செலுத்துவோர் சங்கம் தொடர்ந்துள்ள வழக்கு நிலுவையில் உள்ளதாலும், விக்கிரவாண்டி தொகுதியில் நீர்நிலைப் புறம்போக்கு அருகில் வசிக்கும் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

90—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 23298—திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், சிறுவரப்பூர் ஊராட்சியில் சாலையோரம் ஏரி புறம்போக்கு, கோயில் நிலங்களில் குடியிருக்கும் பொது மக்களுக்கு மாற்று இடம் அளித்து பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* புவனகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட விருத்தாசலம் வட்டம், சிறுவரப்பூர் ஊராட்சியில்

2015 செப்டம்பர் 29]

புல எண் 8/2-ல் 0.59.0 ஏர்ஸ் நில ஏலத் தரிசினை நத்தமாக வகைபாடு மாற்றம் செய்து மேற்படி கிராமத்தில் சாலையோரம் மற்றும் ஏரி புறம்போக்கில் ஆக்கிரமிப்புச் செய்து வீடு கட்டி குடியிருப்பவர்களுக்கு வேறு இடம் இல்லை என்ற தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்பின்பு பட்டா வழங்கப்படும்.

91—

பேரிடர் பயிற்சி மையம்

வினா எண் 23311—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில பேரிடர் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில பேரிடர் பயிற்சி மையம் அமைக்க பிரேரணை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

92—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 25391—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், எ.கே.கண்ணாடிப்புத்தூரில் நில எடுப்பு செய்யப்பட்ட புல எண் 1733/2பி, 179/2பி மற்றும் 181/2பி ஆகியவற்றிற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் வட்டம், எ.கே.புத்தூர் கிராமம் புல எண் 1733/2பி, 179/2பி மற்றும் 181/2பி 5.08.00 ஏக்கர் பூமி நிலமெடுப்பு செய்யப்பட்டது. திரு. கே.எம்.டி.பன்னீர்செல்வம் மற்றும் 5 பேர் மேற்படி நிலத்தை மீளத் தருமாறு சென்னை உயர் நீதிமன்றத்தில் நீ.பே.ம.30337/2011 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தொடரப்படும்.

93—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 25392—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குறிச்சிக்கோட்டை கிராமம், புல எண் 147/9-க்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், குறிச்சிக்கோட்டை கிராமம், புல எண் 147/9-ல் 200 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டதை எதிர்த்து திரு. ராஜேந்திரன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில்

2015 செப்டம்பர் 29]

உள்ளது. வழக்கு முடிவுற்றதும் தீர்ப்பின் அடிப்படையில் மேல்நடவடிக்கை தொடரப்படும்.

94—

கண்மாயைப் பாதுகாத்தல்

வினா எண் 25737—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, ஆண்டிகுளம் கண்மாயில் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றி கண்மாயைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, ஆண்டிகுளம் கண்மாயில் தனியார் ஆக்கிரமிப்புகள் உள்ளன. அரசு மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற, தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம், 1905-ன்படி உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

95—

குடியிருப்பை மீட்டல்

வினா எண் 25798—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் உள்ள பேரூராட்சி நிருவாக அலுவலர் குடியிருப்பை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுத்து குடியிருப்பை மீட்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், பேரூராட்சி செயல் அலுவலர் குடியிருப்புகள் என குடியிருப்புகள் ஏதுமில்லை. மேலும், பேரூராட்சி குடியிருப்புப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை.

96—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 27463—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சி, 17-வது வார்டு, போஸ் நகர் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சி, 17-வது வார்டு, போஸ் நகர் பகுதி மக்கள் அரசினால் தடை செய்யப்பட்ட நீர்நிலைப் புறம்போக்குகளில் குடியிருந்து வருவதாலும், அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை, நாள் 20–1–1987 மற்றும் அரசாணை (நிலை) எண் 186, வருவாய்த் துறை, நாள் 29–4–2003–ன்படி ஆட்சேபகரமான நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளதாலும் மேற்கண்ட நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை.

2015 செப்டம்பர் 29]

97—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 27844—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் சான்றோர் குப்பம் பகுதியிலுள்ள அருந்ததியர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சான்றோர் குப்பம் கிராமத்தில் வசிக்கும் அருந்ததி இனத்தவர்கள் அனுபவத்திற்கேற்ப நகர சர்வே பதிவேட்டில் வீட்டுமனைகள் அவர்களது பெயரிலேயே உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது. நத்தம் அளவை செட்டில்மென்ட் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நத்தம் அளவை பணி முடிவுற்ற பின் அவர்களுக்கு மனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

98—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 27855—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, தேனி நகராட்சி, எம்.ஜி.ஆர். நகர் கருவேல்நாயக்கன்பட்டி, சின்னகுளம் கண்மாய் போன்ற பகுதிகளில் குடிமனைப் பட்டா கோரி விண்ணப்பித்தவர்களுக்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எம்.ஜி.ஆர். நகர் வனத் துறைக்கு சொந்தமான இடம் என்பதால் பட்டா வழங்க இயலாது. கருவேல்நாயக்கன்பட்டி, சின்னகுளம் கண்மாய்—நீர்நிலை புறம்போக்கு என்பதாலும் அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை, நாள் 20-1-1987 மற்றும் அரசாணை (நிலை) எண் 186, வருவாய்த் துறை, நாள் 29-4-2003—ன்படி ஆட்சேபகரமான நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளதாலும், சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் உத்தரவின்படியும், நீர்நிலைப் புறம்போக்குகளில் விட்டுமனைப் பட்டா வழங்க தடை விதிக்கப்பட்டுள்ளதாலும், உச்ச நீதிமன்றத்தில் நீர்நிலைப் புறம்போக்குகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்குவதை எதிர்த்து சிவகாசி வரி செலுத்துவோர் சங்கம் தொடர்ந்துள்ள வழக்கு நிலுவையில் உள்ளதாலும், வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

100—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 28690—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண் 99-க்கான விளக்கத்தினை பக்கம் 798-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

(அ) பல்லடம் தொகுதி, கே.கிருஷ்ணாபுரம் ஊராட்சி, மத்தநாயக்கன்பாளையம் 56/2 சாலையில் உள்ள வண்டிப்பாதையை நத்தமாக மாற்றி ஏழைகளுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், கே.கிருஷ்ணாபுரம் கிராமம், க.ச.56/2 நெ.காலை வண்டிப்பாதையை நத்தமாக மாற்ற பரிசீலனை செய்து, நெடுஞ்சாலைத் துறை அனுமதி பெற்ற பின், பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

101—

நினைவு மண்டபம்

வினா எண் 9777—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கையில் கவிஞர் மீராவுக்கு நினைவு மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கையில் கவிஞர் மீராவுக்கு நினைவு மண்டபம் கட்டுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

102—

நினைவுச் சின்னம்

வினா எண் 22635—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

குளச்சல் தொகுதி, திருநயினார்குறிச்சியில் படிப்பகத்தோடு திருவள்ளுவருக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, திருநயினார்குறிச்சியில் திருவள்ளுவருக்கு படிப்பகத்தோடு கூடிய நினைவுச் சின்னம் அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

103—

பத்திரிகையாளர்களுக்கு வீடுகள்

வினா எண் 22782—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பத்திரிகைத் துறையில் பணிபுரிபவர்களுக்கு இலவச வீடு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

104—

அரசின் திட்டம் திரையிடல்

வினா எண் 25940—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசின் திட்டங்களை குறும்படங்களாகத் தயாரித்து அனைத்து திரையரங்குகளிலும் இடைவேளையின்போது திரையிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில்; எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்படும் அரசின் திட்டங்கள் குறும்படங்களாகத் தயாரித்து தமிழ்நாட்டிலுள்ள அனைத்து திரையரங்குகளிலும் திரைப்படம் ஆரம்பிப்பதற்கு முன்பாகத் திரையிடப்பட்டு வருகிறது. இப்புதிய அரசு பதவியேற்று இதுவரை 12 குறும்படங்கள் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

105—

கம்பனுக்கு விழா

வினா எண் 25944—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு விழா நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு விழா நடத்தும் கருத்துரு அரசின் பரிசிலனையில் இல்லை.

106—

பால் கொள்முதல் நிலையம்

வினா எண் 17395—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் நேரடி பால் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியினைச் சுற்றி 22 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இளையான்குடி பகுதியில் போதிய பால் கொள்முதல் செய்யப்படாததால், இளையான்குடியில் தற்போது நேரடி பால் கொள்முதல் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

107—

ஓய்வூதியம் உயர்த்தி வழங்குதல்

வினா எண் 20297—திரு. பி.எஸ். சுந்தரம்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்திலுள்ள ஆவின் நிறுவன ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தினை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆவின் நிறுவன ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்குவது அரசின் கொள்கை முடிவிற்கு உட்பட்டதாகும்.

108—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 20559—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் 32 கிராமங்கள் உள்ளன. இதில் 15 பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வந்தன. தற்பொழுது, பால் உற்பத்தி இல்லாமல் செயல்படாமல் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கலைக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில், திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் பால் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

109—

பால் குளிரூட்டும் நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 23953—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு பேரூராட்சியிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம்–கடலூர் மா ட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், கடலூர் ம வட்டம், புவனகிரி தொகுதியில் அமைந்துள்ள சேத்தியாதே ாப்பு குளிரூட்டும் நிலையத்தின் பால் குளிரூட்டும் திறன் நா ளொன்றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 18,000 லிட்டராக உயர்த்தப்பட ுள்ளது.

110—

பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 28646—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) மானாமதுரை தொகுதியில், பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மானாமதுரை தொகுதியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க போதுமான இடவசதி இல்லை. தற்பொழுது தமிழ்நாட்டில் மாவட்ட கூட்டுறவு பால், உற்பத்தியாளர் ஒன்றியங்களில் கொள்முதல் செய்யப்படும் பால் உள்ளூர் தேவைக்கேற்ப விற்பனை செய்தது போக, எஞ்சிய குறைந்த அளவு பாலே பால் பவுடர் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. தற்போது இந்த உபரி பால் மதுரை, திருச்சி, தருமபுரி மற்றும் ஈரோடு ஒன்றியங்களில் உள்ள பால் பவுடர் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு, பால் பவுடர் தயாரிக்கப்படுகிறது. மானாமதுரை மற்றும் இராமநாதபுரம் பகுதிகளை உள்ளடக்கிய சிவகங்கை ஒன்றியத்தில் பால் கொள்முதல் அதிகரித்தாலும், உள்ளூர் தேவைக்கு போக எஞ்சிய பால் பவுடர் தயாரிக்க மேற்கண்ட பால் பவுடர் தொழிற்சாலைகளில் போதிய வசதி உள்ளதால், மானாமதுரை தொகுதியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

111—

நவீனப் பாலகம்

வினா எண் 28649—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் நவீனப் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மானாமதுரை தொகுதி, மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனை செய்ய உரிமம் வழங்கப்பட்டு, 7/12 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே, தற்சமயம் மானாமதுரை தொகுதியில் நவீன பாலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

112—

மேல்நிலைப் பள்ளி

வினா எண் 40—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தெ.புதுக்கோட்டையில் அரசு மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தெ.புதுக்கோட்டையில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மட்டுமே உள்ளது. அரசு விதிகளின்படி, அரசு உயர்நிலைப் பள்ளியை மட்டுமே மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். மேல்நிலைப் பள்ளியை நேரடியாகத் துவக்க விதிகளின்படி இயலாது. எனவே, மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தெ.புதுக்கோட்டையில் அரசு மேல்நிலைப் பள்ளி துவக்க இயலாது.

[2015 செப்டம்பர் 29

113—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 90—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, தென்பொன்முடியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, தென்பொன்முடியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியானது அரசாணை (நிலை) எண் 120, பள்ளிக் கல்வி (மேநிக2) த் துறை, நாள் 8–8–2011–ன்படி 2011–12 ஆம் கல்வி ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

114—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 499—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, விராச்சிலை பெரி, மெ.மெய்யப்ப செட்டியார் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை திருமயம் தொகுதி, விராச்சிலை பெரி, மெ.மெய்யப்ப செட்டியார்

2015 செப்டம்பர் 29]

நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

115—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 501—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, அரிமளம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை, அரிமளம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி பூர்த்தி செய்துள்ளது. நிதிநிலை மற்றும் தேவை கருதி, மேற்காண் பள்ளியினை வரும் கல்வியாண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.

116—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 518—திரு. பி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், கானாவூர் அரசு நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், கானாவூரில் ஒரு சிறுபான்மை T.D.T.A. துவக்கப் பள்ளி மட்டும் உள்ளது. எனவே, உதவி பெறும் துவக்கப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு விதிகளில் இடமில்லை.

117—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 562—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, பாப்பிரெட்டிபட்டி வட்டம், மஞ்சவாடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, பாப்பிரெட்டிபட்டி வட்டம், மஞ்சவாடி நடுநிலைப் பள்ளி 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

118—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 598—திரு. டி. இராமசந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வி (ப.க.2(2))-த் துறை, நாள் 2-7-2013-ன்படி தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக 2013-2014 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

119—

மகளிர் மேல்நிலைப் பள்ளி

வினா எண் 722—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தியில் மகளிர் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பாச்சேத்தியில் அரசு இருபாலர் மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் இருந்து தனியாகப் பிரித்து அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி உருவாக்குவதற்கு போதிய இடவசதி இல்லை. எனவே, மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தியில் மகளிர் மேல்நிலைப் பள்ளி துவக்க தற்பொழுது இயலாது.

[2015 செப்டம்பர் 29

ஆசிரியர் நியமனம்

வினா எண் 723—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை, திருவான்மியூர் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சென்னை மாநகராட்சி, திருவான்மியூர் மேல்நிலைப் பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட நான்கு முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

122—

தாய்மொழியில் கல்வி கற்றல்

வினா எண் 1064—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொழி சிறுபான்மை மாணவ, மாணவிகள் தத்தம் தாய்மொழியில் கல்வி கற்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பள்ளிகளில் மொழி சிறுபான்மை மாணவ, மாணவிகள் தத்தம் தாய்மொழியில் கல்வி கற்பதற்கு ஏதுவாக, சிறுபான்மை மொழி, வாரத்தில் நான்கு பாட வேளைகள் கற்பிப்பதற்கு வகை செய்யவும், சிறுபான்மை மொழிப் பாடங்கள் மற்றும் சிறுபான்மை மொழி வழியில் கற்பிக்கும் பாடங்களுக்கான

விடுபட்ட வினா எண் 121-இதற்கான விளக்கத்தினை பக்கம் 798-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

பாடநூல்கள் தயாரிப்பதற்கும் அனைத்து வகுப்புகளுக்கும் சிறுபான்மை மொழிப் பாடங்களுக்கான தேர்வுகள் நடத்தவும் ஆணைகள் வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

123—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1214—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வி (ப.க.2(2))த் துறை, நாள் 2–7–2013–ன்படி மேல்நிலைப் பள்ளியாக 2013–2014 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

124—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1215—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, விளக்குடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 29

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி திருத்துறைப்பூண்டி தொகுதி, விளக்குடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த போதிய இடவசதி இல்லை. மேலும், பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்தப்படவில்லை. எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

125—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1216—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கட்டிமேடு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளில் குறிப்பிட்டவாறு பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. கட்டிமேடு அரசு உயர்நிலைப் பள்ளியிலிருந்து 5 கி.மீ. சுற்றளவுக்குள் 7 மேல்நிலைப் பள்ளிகள் அமைந்துள்ளன. எனவே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கட்டிமேடு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்பொழுது இயலாது.

126—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 1217—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில், ஓர் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், ஓர் உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் நான்கு சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், ஆக மொத்தம், ஆறு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. எனவே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்க தற்போது அவசியம் எழவில்லை.

127—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1242—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியிலுள்ள திரு.வி.க. அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் திருவி.க. அரசு (இருபாலர்) உயர்நிலைப் பள்ளிக்கு அருகில் கீழ்க்கண்ட 6 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன:

1. *ஜி.எஸ். இந்து மேல்நிலைப் பள்ளி (ஆ) 1 கி.மீ.*
2. MNRD *(பெ) மேல்நிலைப் பள்ளி 1 கி.மீ.*

[2015 செப்டம்பர் 29

3. மங்கனாபுரம் இந்து நாடார் மேல்நிலைப் பள்ளி (இருபாலர் பள்ளி) 0.75 கி.மீ.

4. Sacred Heart (பெண்கள்) மேல்நிலைப் பள்ளி 0.75 கி.மீ.

5. CMS (ஆ) மேல்நிலைப் பள்ளி 2 கி.மீ.

6. தியாகராய இருபாலர் மேல்நிலைப் பள்ளி 2 கி.மீ.

உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகள் நிறைவு செய்யப்படாத நிலையில், மேற்காணும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது அவசியம் இல்லை.

128—

தொடக்கப் பள்ளி

வினா எண் 1278—திரு. சு. ரவி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, பெருமுச்சி ஊராட்சி, வெங்கடேசபுரம் கிராமத்தில் தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போதிய இடவசதியில்லாத காரணத்தினால் அரக்கோணம் தொகுதி பெருமுச்சி ஊராட்சி, வெங்கடேசபுரம் கிராமத்தில் புதிய தொடக்கப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

129—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1279—திரு. சு. ரவி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) அரக்கோணம் தொகுதி, கும்னிபேட்டை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை பூர்த்தி செய்துள்ளதால் அரசாணை (நிலை) எண் 137, பள்ளிக் கல்வி (மேநிக2)த் துறை, நாள் 8–6–2012–ன்படி 2012–2013 ஆம் கல்வியாண்டில் அரக்கோணம் தொகுதி, கும்னிபேட்டை உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

130—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1280—திரு. சு. ரவி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, மூதூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, மூதூர் உயர்நிலைப் பள்ளியானது அரசாணை (நிலை) எண் 120, பள்ளிக் கல்வி (மேநிக2)-த் துறை, நாள் 8–8–2011–ன்படி, 2011–2012 ஆம் கல்வி ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

131—

நூலகக் கட்டடம்

வினா எண் 1322—திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னம் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியம், கொளக்காநத்தம் கிராமத்திலுள்ள நூலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியம், கொளக்காநத்தம் கிராமத்திலுள்ள ஊர்ப்புற நூலகம் தற்போது ஊராட்சி ஒன்றியத்தால் வழங்கப்பட்ட இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட பேருந்து நிலையம் அருகில் 8 சென்ட் நிலம் (3,488 சதுர மீட்டர்) ஊராட்சி மன்றத் தலைவரால் மாவட்ட நூலக அலுவலருக்கு பத்திரப்பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையிடமிருந்து திருத்திய வரைபடம் மற்றும் மதிப்பீடு பெற்று கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

132—

கூடுதல் கட்டடம்

வினா எண் 1323—திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னம் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியம் கூடலூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், கூடலூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு RMSA திட்டம்மூலம் ரூ.58.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன், கட்டட வேலைகள் தொடங்கப்படவுள்ளது.

133—

மேல்நிலைப் பள்ளி

வினா எண் 1325—திரு. பி. சிவக்கொழுந்து: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஏற்கெனவே செயல்பட்டுவரும் அரசு (பெண்கள்) உயர்நிலைப் பள்ளியைத்தான் அரசு (பெண்கள்) மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். நேரிடையாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க விதிகளில் இடமில்லை. மேலும், போதிய இடவசதி இல்லை என்பதால் பண்ருட்டி தொகுதி, பண்ருட்டியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் துவக்க தற்பொழுது இயலாது.

134—

ஆண்கள் மேல்நிலைப் பள்ளி

வினா எண் 1884—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நேரடியாக அரசு (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளி தொடங்க விதிகளில் இடமில்லை என்பதால் மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க தற்பொழுது இயலாது.

135—

தொடக்கப் பள்ளி

வினா எண் 2324—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வடக்கு இளையநயினார்குளத்தில் தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வடக்கு இளையநயினார் குளத்தில் 2014–2015 ஆம் கல்வியாண்டில் புதிதாக தொடக்கப் பள்ளி துவக்கப்பட்டு 10–12–2014 முதல் செயல்பட்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

136—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 2325—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், சிதம்பரம் ஊராட்சி, ஆத்துக்குறிச்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், சிதம்பரம் ஊராட்சி, ஆத்துக்குறிச்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

137—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 2347—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பல்லடம் தொகுதி, சாமிக்கவுண்டன்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 137, பள்ளிக் கல்வி (மேநிக2)த் துறை நாள் 8-6-2012-ன்படி பல்லடம் தொகுதி, சாமிக்கவுண்டன்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக 2012–2013 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

138—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 3186—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குனேரி தொகுதி, முனைஞ்சிப்பட்டியிலுள்ள குருசங்கர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 137, பள்ளிக் கல்வி (மேநிக2)த் துறை, நாள் 8–6–2012–ன்படி முனைஞ்சிப்பட்டி குருசங்கர் அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

139—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 4026—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, மங்கைமடம் ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை சீர்காழி தொகுதி, மங்கைமடம் ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

140—

அகழ்வாராய்ச்சி இடத்தைப் பராமரித்தல்

வினா எண் 4396—திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நெல்லை மாவட்டம் ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி இடத்தைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெல்லை மாவட்டம், ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி இடம் மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் உள்ளதால் அதனை மாநில அரசு பராமரிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

141—

ஓவியத்தைப் பராமரித்தல்

வினா எண் 4397—திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சித்தன்னவாசல் (புதுக்கோட்டை மாவட்டம்) ஓவியத்தைப் பராமரித்து, பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், சித்தன்னவாசல் ஓவியம் மத்திய அரசின் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வரும் சின்னமாகும். அச்சின்னத்தினை மாநில அரசின் தொல்லியல் துறை பாதுகாக்கும் நிலை எழவில்லை.

143—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 4978—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், குதிரைசந்தலில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடுபட்ட வினா எண் 142-இதற்கான விளக்கத்தினை பக்கம் 801-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 137, பள்ளிக் கல்வி (மேநிக2)த் துறை, நாள் 8–6–2012–ன்படி கள்ளக்குறிச்சி தொகுதி, சின்ன சேலம் ஒன்றியம், குதிரைசந்தலில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக 2012–13 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

144—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 5041—திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றியம், தாளப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, அரசு உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றியம், தாளப்பட்டியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மட்டுமே உள்ளது. அரசு உயர்நிலைப் பள்ளி இல்லாததால் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

145—

பரிசோதனைக் கூட வசதி

வினா எண் 5102—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ் பரிசோதனைக்கூட வசதி நடப்பு கல்வியாண்டில் எத்தனை பள்ளிக் கூடங்களில் ஏற்படுத்தப்படும் என்பதை அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் கல்வியாண்டில் 919 அரசு உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கூடம் கட்டுவதற்காக மத்திய திட்ட ஏற்பளிப்புக் குழுவால் ஒரு பள்ளிக்கு ரூ.6.10 இலட்சம் வீதம் ரூ.5,605.90 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, இதுவரையில் நிதி ஒதுக்கீடு ஏதும் பெறப்படவில்லை. 2012-2013 ஆம் ஆண்டில் மத்திய திட்ட ஏற்பளிப்புக் குழு பரிந்துரை செய்யப்படவில்லை.

நடப்பு கல்வியாண்டில் (2013-14) ஒரு பள்ளிக்கு ரூ.16.92 இலட்சத்தில் 956 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு பரிசோதனைக் கூடம் வசதி செய்து தர மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் திட்ட ஒப்புதல் குழுவிற்கு கருத்துரு (PAB) அனுப்பப்பட்டதில், மத்திய திட்ட ஏற்பளிப்புக் குழுவால் இக்கருத்துரு ஏற்கப்படவில்லை.

146—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 5103—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இடைநிலைக் கல்வித் திட்டத்தில் நடப்பு கல்வியாண்டில் எத்தனை இடைநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட உள்ளன என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

விடை—

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் கல்வியாண்டில் 710 அரசு நடுநிலைப் பள்ளிகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 2012–13 ஆம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட ஏற்புக் குழு ஒப்புதல் அளிக்கவில்லை என்பதால் இத்திட்டத்தின்கீழ் 2012–13 ஆம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தப்படவில்லை.

147—

பள்ளிக்குப் புதிய கட்டடம்

வினா எண் 5104—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இடைநிலைக் கல்வித் திட்டத்தில் (RMSA) பள்ளிகளுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் (RMSA) கீழ் 200 உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. மேலும், இந்த (2015–2016) நிதியாண்டில் 344 உயர்நிலைப் பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட உள்ளன.

150—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 5329—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) பல்லடம் தொகுதி, வேலம்பாளையம் ஊராட்சி, வேலம்பாளையத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, வேலம்பாளையம் ஊராட்சி, வேலம்பாளையத்திலுள்ள நடுநிலைப் பள்ளி 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

151—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 5563—திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, இராயண்டபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வித் (ப.க.2(2)) துறை, நாள் 2-7-2013-ன்படி செங்கம் தொகுதி, இராயண்டபுரம் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக 2013-2014 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

153—

மேல்நிலைப் பள்ளி

வினா எண் 5657—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுபட்ட வினா எண் 152-க்கான விளக்கத்தினை பக்கம் 798-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

(அ) வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி நகராட்சியில் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி நகராட்சியில் நான்கு அரசு நிதி உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் செயல்படுகின்றன. தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி ஏற்கெனவே செயல்படும் அரசு உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். புதிதாக மேல்நிலைப் பள்ளிகள் தோற்றுவிக்க விதிகளில் இடமில்லை என்பதால் வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி நகராட்சியில் நேரடியாக மேல்நிலைப் பள்ளி துவக்க இயலாது.

154—

மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

வினா எண் 5667—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடியிலுள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடியிலுள்ள முத்துப்பட்டிணம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி XII-ல் அடிப்படை வசதிகள் செய்வதற்கு நிதியுதவி அளிப்பது தொடர்பான கருத்துரு நபார்டு வங்கியின் இசைவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றபின், இப்பள்ளிக்கான அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2015 செப்டம்பர் 29]

155—

தொடக்கப் பள்ளி

வினா எண் 5678—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வாடி கிராமத்தில் தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வாடி கிராமத்தில் 1 முதல் 5 வகுப்புகளுடன் ஏற்கெனவே ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி இயங்கி வருகிறது. எனவே, இப்பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

156—

சிற்ப வேலை தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 5977—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் சிற்ப வேலை தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடியில் புதியதாக சிற்ப வேலை தொழிற்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

157—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6243—திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பூர் தொகுதி, திருப்பூர் வட்டம், வீரபாண்டி, பெரிச்சிபாளையத்திலுள்ள அரசுப் பள்ளிகளை முறையே மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளைத் திருப்பூர் தெற்கு தொகுதி, திருப்பூர் வட்டம் வீரபாண்டி மற்றும் பெரிச்சிபாளையத்திலுள்ள அரசுப் பள்ளிகள் நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளிகளை தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

158—

மேல்நிலைப் பள்ளி

வினா எண் 6244—திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பூர் வடக்கு பகுதியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஏற்கெனவே செயல்படும் உயர்நிலைப் பள்ளிகள் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. நேரடியாக

2015 செப்டம்பர் 29]

மேல்நிலைப் பள்ளியைத் துவக்க விதிகளின்படி இயலாது. திருப்பூர் வடக்கு பகுதியில் தற்போது நகரவை (பெண்கள்) உயர்நிலைப் பள்ளி, புதுராமகிருஷ்ணாபுரத்தில் செயல்பட்டு வருகிறது. தரம் உயர்த்துவதற்கு வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, இப்பள்ளியைத் தற்போது மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது. மேலும், இப்பள்ளியைத் தவிர திருப்பூரில் 5 மேல்நிலைப் பள்ளிகள் உள்ள நிலையில், திருப்பூர் வடக்கு பகுதியில் தற்போது பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்குவதற்கு விதிகளின்படி இயலாது.

159—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6867—திரு. எஸ். வேதாச்சலம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, சோழபுரம் பகுதியிலுள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் தொகுதி, சோழபுரம் பகுதியிலுள்ள அரசு நடுநிலைப் பள்ளி 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

160—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6877—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, இருந்தை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை பூர்த்தி செய்துள்ளது. நிதிநிலை மற்றும் தேவை கருதி, மேற்காண் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA) மூலம் பரிசீலிக்கப்படும்.

161—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6878—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, கிளியூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வித் (ப.க.2(2)) துறை, நாள் 2–7–2013–ன்படி உளுந்தூர்பேட்டை தொகுதி, கிளியூர் அரசினர் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக 2013-2014 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

162—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6883—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, பாதூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதி, பாதூர் உயர்நிலைப் பள்ளி அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வித் (ப.க.2(2)) துறை, நாள் 2–7–2013–ன்படி மேல்நிலைப் பள்ளியாக 2013-2014 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

163—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6884—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, அதையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை உளுந்தூர்பேட்டை தொகுதி, அதையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

164—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6885—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, புகிள்ளனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை உளுந்தூர்பேட்டை தொகுதி, பு.கிள்ளனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தற்போது தரம் உயர்த்த இயலாது.

165—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6987—திரு. கு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, பெரியகல்வராயன் மலை, கீழ்நாடு ஊராட்சி, குன்னூரிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை ஆத்தூர் தொகுதி, பெரியகல்வராயன் மலை, கீழ்நாடு ஊராட்சி, குன்னூரிலுள்ள நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

166—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6988—திரு. கு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) ஆத்தூர் தொகுதி, தாண்டவராயபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, தாண்டவராயபுரம் அரசு உயர்நிலைப் பள்ளி அரசாணை (நிலை) எண் 148, பள்ளிக் கல்வி (ப.க2(2))த் துறை, நாள் 22–9–2014–ன்படி 2014–2015 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

167—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 7039—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அரூர் கௌப்பாறை நடுநிலைப் பள்ளியை அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 199, பள்ளிக் கல்வித் துறை, நாள் 7–12–2011–ல் அரூர் தொகுதி, கௌப்பாறை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டு, தற்போது உயர்நிலைப் பள்ளியாக இயங்கி வருகிறது.

168—

சங்க இலக்கியங்களைப் பாதுகாத்தல்

வினா எண் 7067—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொன்மையான சங்ககால இலக்கியங்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்க இலக்கியங்களைப் பல்கலைக்கழகங்களும், பதிப்பகங்களும் கையடக்கப் பிரதியாகவும், அழகிய வடிவிலும் அதிக அளவில் அச்சிட்டு விற்பனை செய்து வருவதால், சங்ககால இலக்கியங்கள் அழியும் நிலை இல்லாமலிருப்பதால் தனியாகப் பாதுகாக்க வேண்டிய நிலை எழவில்லை.

169—

இரவுக் காவலர் நியமனம்

வினா எண் 7342—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் இரவுக் காவலர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பள்ளிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கான 2001 இரவுக் காவலர் பணியிடங்கள் அனுமதித்து அரசாணை (நிலை) எண் 47, பள்ளிக் கல்வி (ஆர்.1)த் துறை, நாள் 2–3–2012–ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

170—

பள்ளிக்குச் சுற்றுச்சுவர்

வினா எண் 7353—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் தொகுதி, மங்கலம் ஊராட்சி, மங்கலம் கிராமத்திலுள்ள மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், மங்கலம் மேல்நிலைப் பள்ளிக்கு 550 மீட்டர் சுற்றளவில், 300 மீட்டர் சுற்றுச்சுவர் மட்டும் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2013 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 250 மீட்டர் சுற்றுச்சுவர் பணிகளை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

172—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 7371—திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், அரட்டவாடி கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வி (ப.க.2(2)) த் துறை, நாள் 2-7-2013-ன்படி செங்கம் தொகுதி, செங்கம் வட்டம் அரட்டவாடி கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக 2013-2014 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

விடுப்பட்ட வினா எண் 171-க்கான விளக்கத்தினை பக்கம் 798-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

173—

ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் 7379—திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் விவசாயம் மற்றும் நெசவு, மரவேலை ஆகிய கைத்தொழில் ஆசிரியர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 16–12–1992–ல் நடைபெற்ற (Ze-Bag) ஆய்வின்படி விவசாயம், நெசவு மற்றும் மரவேலை ஆகிய கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்கள் இனிவருங்காலங்களில் நிரப்பலாகாது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில், இப்பணியிடங்களின் நியமனம் அரசால் தடை விதிக்கப்பட்டது. இப்பணியிடங்களை நிரப்ப அரசளவில் தடையுள்ள நிலையில், இப்பணியிடங்களில் நியமனம் செய்ய வாய்ப்பில்லை.

174—

ஆசிரியர் பணி நியமனம்

வினா எண் 7382—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொருளாதாரம், வணிகவியல் பாடங்களில் பட்டதாரி ஆசிரியர் கல்வி படித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, வயது மூப்பு நிலையில் உள்ள பட்டதாரிகளுக்கு சிறப்பு அரசாணைமூலம் ஆசிரியர் பணி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தமிழக அரசின் கொள்கை முடிவின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண் 90, பள்ளிக் கல்வித் துறை, நாள் 28-3-2012-ன்படி ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக ஆசிரியர் நியமனம் தொடர்பாக நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் மற்றும் இனசுழற்சி ஆகியவைகளின் அடிப்படையில், பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்வு செய்ய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நிலையில், பொருளாதாரம், வணிகவியல் பாடங்களைப் படித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வயது மூப்பு நிலையில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு சிறப்பு ஆணை மூலம் ஆசிரியர் பணி வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

175—

தொழிற்கல்வி ஆசிரியர் ஓய்வூதியம்

வினா எண் 7725—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடத்தில் முறையான ஊதிய விகிதத்தில் 1–4–2003–க்குப் பின்னர் பணியமர்த்தப்பட்டு, 10 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்த தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு ஓய்வூதிய விதிகளின்கீழ் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

[2015 செப்டம்பர் 29

176—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 7859—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் பொல்லிக்காளிபாளையம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளைப் பூர்த்தி செய்து கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. எனவே, பல்லடம் தொகுதி, பொங்கலூர், பொல்லிக்காளிபாளையம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தற்போது தரம் உயர்த்திட இயலாது.

177—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 7888—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, காரியாண்டிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, காரியாண்டியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி

ஆணைகள் வெளியிடப்பட்டு, தற்போது உயர்நிலைப் பள்ளியாக இயங்கி வருகிறது.

178—

புதிய நூலகக் கட்டடம்

வினா எண் 8127—திரு. க. ரவி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, சித்தாம்பாடி ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் புதிய நூலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, சித்தாம்பாடி ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் பொது நூலகத் துறையின்கீழ் நூலகம் எதுவும் இயங்கவில்லை. அங்கு நூலகம் திறக்க உரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்து தருமாறு சித்தாம்பாடி ஊராட்சி மன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். நிபந்தனைகள் பூர்த்தி செய்து பெறப்பட்டதும், அங்கு பகுதிநேர நூலகம் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

179—

வேளாண்மை ஆசிரியர் நியமனம்

வினா எண் 8411—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசுப் பள்ளிகளில் வேளாண்மை (விவசாயம்) ஆசிரியர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் இதுவரை 300 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் வேளாண்மை தொழில் கல்வி பாடம் துவங்க அனுமதி அளிக்கப்பட்டு, 300 வேளாண்மை பட்டதாரி ஆசிரியர்கள் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியிடங்கள் நிரப்பப்பட்டன. அதில் காலியாக உள்ள 25 வேளாண்மை பட்டதாரி தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை எழுத்து தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு மூலமாக நிரப்ப ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

180—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 8472—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தப்பாங்குட்டை ஊராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை சங்கரி தொகுதி, தப்பாங்குட்டை ஊராட்சி நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

181—

தொடக்கப் பள்ளி

வினா எண் 8474—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) சங்கரி தொகுதி, கூத்தம்பாளையம் கிராமம், காச்சக்காரனூர் பகுதியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளி துவங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை சங்கரி தொகுதி, கூத்தம்பாளையம் கிராமம், காச்சக்காரனூர் பகுதி நிறைவு செய்யாததால் இப்பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

182—

உயர்நிலைப் பள்ளி

வினா எண் 8488— திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு மாவட்டம், பர்கூர் மலைப் பகுதியில் உயர்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பர்கூர் மலைப் பகுதியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, புதுக்காடு, காந்தி நகர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஒசூர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தேவர்மலை ஆகிய மூன்று நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டு, 2011–2012 ஆம் கல்வி ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளிகளாக இயங்கி வருகின்றன.

183—

புதிய கட்டடம்

வினா எண் 8489—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பகுதி, தவிட்டுபாளையம் உயர்நிலைப் பள்ளியை வேறு இடத்திற்கு மாற்றி புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பேரூராட்சி, தவிட்டுபாளையம் பகுதியில் உயர்நிலைப் பள்ளிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிய கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

184—

பள்ளியைச் சீரமைத்தல்

வினா எண் 8512—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டம் VI—ன்கீழ் 18 வகுப்பறைகள், ஓர் ஆய்வகம், 6 கழிவறைகள் ரூ.80.84 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

185—

ஆங்கில வழிக் கல்வி

வினா எண் 8811—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கணிதம், இயற்பியல், வேதியியல், கணினி அறிவியல் பாட வகுப்பு ஆங்கில வழியில் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 2012–2013 ஆம் கல்வியாண்டில் ஆங்கில வழியில் கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் கணினி அறிவியல் பாடப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளன.

186—

மேல்நிலைப் பள்ளி

வினா எண் 8820—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியத்தில், மகளிர் மேல்நிலைப் பள்ளியைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செயல்படும் உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். நேரடியாக மகளிர் மேல்நிலைப் பள்ளி தொடங்க விதிகளில் இடமில்லை. மேலும், சாக்கோட்டையில் இருபாலர் பயிலும் அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. இப்பள்ளியைத் தனியாகப் பிரித்து மகளிர் மேல்நிலைப் பள்ளி தொடங்க விதிகளில் இடமில்லை என்பதால், காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியத்தில், மகளிர் மேல்நிலைப் பள்ளியைத் துவக்க தற்பொழுது இயலாது.

[2015 செப்டம்பர் 29

187—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 8866—திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், வேல்வார்கோட்டை நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், வேல்வார்கோட்டை நடுநிலைப் பள்ளி 2012–2013 ஆம் கல்வியாண்டு முதல் உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

188—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 8868—திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியானது, அரசாணை (நிலை) எண் 137, பள்ளிக் கல்வி (மேநிக2)த் துறை, நாள் 8–6–2012–ன்படி

2015 செப்டம்பர் 29]

2012-2013 ஆம் கல்வியாண்டில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது.

189—

தொடக்கப் பள்ளி

வினா எண் 11729—திரு. ஆ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், பள்ளிகுப்பம் புத்தர் காலனியில் தொடக்கப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய தொடக்கப் பள்ளி துவங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், பள்ளிகுப்பம் புத்தர் காலனி குடியிருப்பு பகுதி நிறைவு செய்யாததால், இப்பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

190—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 11763—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர், பர்கூர் மலைப்பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அந்தியூர், பர்கூர் மலைப்பகுதியில், 1. ஆதி திராவிட நல உண்டு உறைவிடப் பள்ளி, பர்கூர், 2. அரசு உயர்நிலைப் பள்ளி,

தேவர்மலை, 3. அரசு உயர்நிலைப் பள்ளி, ஓசூர் ஆகிய மூன்று உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. மேற்காணும் பள்ளிகளில் போதிய மாணவர்கள் இல்லாததால், மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

191—

புதிய கட்டடம்

வினா எண் 11765—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், சாலை கிராமத்திலுள்ள நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், சாலை கிராமத்திலுள்ள நூலகம், ஊராட்சிக்குச் சொந்தமான இலவசக் கட்டடத்தில் 252 சதுர அடியில் செயல்பட்டு வருகின்றது. இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட மாவட்ட ஆட்சியர்மூலம் காலிமனை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலிமனை பெறப்பட்டவுடன், பொதுப் பணித் துறையின்மூலம் புதிய கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும்.

192—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 12414—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், பெரியாங்குப்பம் உருது ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், பெரியாங்குப்பம் உருது ஆரம்பப் பள்ளி நிறைவு செய்யாததால், இப்பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு வாய்ப்பு இல்லை.

193—

வகுப்பறையைச் சீரமைத்தல்

வினா எண் 12776—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், மேல்பள்ளிக்குப்பம் அரசு மேல்நிலைப் பள்ளி வகுப்பறைகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம் மாதனூர் ஒன்றியத்தில், மேல்பள்ளிக்குப்பம் அரசு மேல்நிலைப் பள்ளி என்ற பெயரில் பள்ளி ஏதும் இல்லை.

194—

புதிய தொடக்கப் பள்ளி

வினா எண் 13339—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், ஆண்டியகவுண்டனூர் ஊராட்சி, குட்டியகவுண்டனூரில் புதிய தொடக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், ஆண்டியகவுண்டனூர் ஊராட்சி, குட்டியகவுண்டனூர் குடியிருப்பு பகுதி, புதிய தொடக்கப் பள்ளி துவங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி துவக்கிட வாய்ப்பு இல்லை.

195—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 13343—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மானுப்பட்டி இராம ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மானுப்பட்டி இராம ஒன்றிய தொடக்கப் பள்ளி 2003–2004 ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டு நடுநிலைப் பள்ளியாக இயங்கி வருகிறது.

196—

நூலகத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 13348—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், இராவணாபுரம் இராமத்திலுள்ள ஊர்ப்புற நூலகத்தை கிளை நூலகமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

LEGISLATURE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், இராவணாபுரம் ஊர்ப்புற நூலகம் கிளை நூலகமாகத் தரம் உயர்த்தப்பட்டு 8–11–2013 முதல் செயல்பட்டு வருகிறது.

197—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 13743—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், வானவாடி நாராயணசாமி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை பூர்த்தி செய்து கருத்துரு ஏதும் பெறப்படாததால், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், வானவாடி நாராயணசாமி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

198—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 13897—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, அவனியாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி திருப்பரங்குன்றம் தொகுதி, அவனியாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த கருத்துரு பெறப்பட்டுள்ளது. ஆனால், பொது மக்கள் பங்குத்தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. எனவே, மேற்படி பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாத நிலை உள்ளது.

(பேரவைக் கூட்டத் தொடர் முடியும் வரை தொடர்புடைய உறுப்பினர்கள் நீக்கம் செய்யப்பெற்றுள்ளதால், வரிசை எண்கள் 2, 4, 5, 9, 10, 17, 18, 19, 24, 25, 30, 34, 38, 39, 44, 52, 99, 121, 142, 148, 149, 152, 171, 199, 200 தொடர்புடைய வினாக்கள்–விடைகள் இப்பட்டியலில் இடம்பெறவில்லை.)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

பட்டியல் 21

2—

கலையரங்கம்

வினா எண் 14655—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டை, சூளகிரி அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கலையரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டை, சூளகிரி அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கலையரங்கம் அமைப்பது குறித்து செயற்குறிப்பு ஏதும் இல்லை.

3—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 15252—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட

விடுபட்ட வினா எண் 1-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காணலாம்.

நெறிமுறைகளின்படி பொது மக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. மேலும், இப்பகுதியில் ½ கி.மீ. தொலைவில் இருபாலர் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளியும், 5 கி.மீ. தொலைவில் சியாமளா மகளிர் மேல்நிலைப் பள்ளியும் உள்ளன. எனவே, சீர்காழி தொகுதி, வைத்திஸ்வரன் கோவில் பேரூராட்சியில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

4—

ஆதி திராவிடர் நலப் பள்ளியாக மாற்றுதல்

வினா எண் 15253—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, கீழசட்டநாபுரம் ஊராட்சி, நிம்மேலி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை ஆதி திராவிடர் நலத் துறை பள்ளியாக மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கீழசட்டநாபுரம் ஊராட்சி, நிம்மேலி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் அதிகமாகவும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் குறைவாகவும் இருப்பதால், இப்பள்ளியை ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியாக மாற்றம் செய்வதற்கான வாய்ப்பு இல்லை.

5—

சொல்வங்கி திட்டம்

வினா எண் 15967—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) தமிழ்நாட்டில் அரசு சொல்வங்கி திட்டத்தின்கீழ் உருவாக்கும் சொற்களையே அனைவரும் ஒரேமாதிரியாகப் பயன்படுத்தும் வகையில் ஆணை பிறப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். ஒரேமாதிரியான தமிழ்ச் சொற்கள் பயன்படுத்த அரசின் "சொல்வங்கி" எனும் திட்டம்மூலம் தொடர்ந்து புதிய சொற்கள் உருவாக்கப் பெறுவதுடன், அவை அனைத்து அரசுத் துறைத் தலைமை அலுவலகங்கள், நாளிதழ்கள், வார இதழ்களுக்கும் அனுப்பி வைக்கப்பெறுகின்றன.

6—

பெண் கல்வியை ஊக்கப்படுத்துதல்

வினா எண் 16531—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண் கல்வியை ஊக்கப்படுத்த அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண் கல்வியை ஊக்கப்படுத்தும்பொருட்டு, பள்ளிக் கல்வித் துறையில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

(i) *ஒவ்வொரு கல்வியாண்டிலும், புதிதாக மகளிர் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகள் நிலை உயர்த்தி தோற்றுவிக்கப்படுகின்றன.*

[2015 செப்டம்பர் 29

(ii) பெண்களுக்கான கஸ்தூரிபாய் காந்தி பாலிகா வித்யாலயா திட்டத்தின்கீழ் 61 உண்டி, உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இது அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசின் 35% பங்குடன் செயல்படுத்தப்படும் திட்டம்.

(iii) 13 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கியுள்ள மாணவியர்கள் பயன்பெறும் பொருட்டு, 44 மகளிர் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசின் 10% பங்குடன் செயல்படுத்தப்படும் திட்டம்.

மேற்காணும் திட்டங்களைத் தவிர, கீழ்க்காணும் பல்வேறு நலத் திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, அனைத்தும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் பள்ளிகளில் பெண்கள் சேர்க்கை உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

(1) பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா பாடப் புத்தகம், நோட்டுப் புத்தகங்கள்

(2) நான்கு இணைச் சீருடைகள்

(3) மாணவர், மாணவியர் அனைவரும் இடைநிலைக் கல்வியை இடைநிற்றல் இன்றி தொடர சிறப்பு ஊக்கத் தொகை

(4) பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர், மாணவிகள் அனைவருக்கும் விலையில்லா மடிக்கணினி

(5) மாணவர், மாணவியருக்கு விலையில்லா காலணிகள்

(6) விலையில்லா புத்தகப் பை

(7) விலையில்லா கணித உபகரணப்பெட்டி

(8) விலையில்லா வண்ணப் பென்சில்கள் மற்றும் கிரையான்கள்

(9) விலையில்லா வரைபடப் புத்தகங்கள் (Atlas)

(10) மலைப்பிரதேசங்களில் பயிலும் மாணவ, மாணவியர்களில் சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறுபவருக்கு கம்பளிச் சட்டைகள்

2015 செப்டம்பர் 29]

(11) 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகள்

(12) தொலைதூரத்திலிருந்து பள்ளிக்குச் செல்லும் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவசப் பேருந்து பயண அட்டைகள்

இன்னும் பிற நலத் திட்டங்களும் மாணவ, மாணவியர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

7—

ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் 16533—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யும். அரசால் ஒவ்வொர் ஆண்டும் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் செயல்படும் அனைத்து அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களைப் பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனம் மூலமாக நிரப்ப ஆணைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. அவ்வாறே 2012–2013 ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து பெறப்பட்ட 8,627 பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிடங்களுக்கான தகுதிவாய்ந்தோர் பட்டியலின்படி அப்பணி நாடுநர்களுக்கு கடந்த 13–12–2012 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

[2015 செப்டம்பர் 29

(ஆ) நிரப்பப்படாமல் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் வரும் கல்வியாண்டில் பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனம் மூலமாக நிரப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அப்போது மேற்குறிப்பிட்ட பள்ளிகளில் காலிப் பணியிடம் இருப்பதாக அறியப்பட்டால் அக்காலிப் பணியிடங்களையும் நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்படும்.

8—

தேர்வு மையம்

வினா எண் 16534—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பழையனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்புத் தேர்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பழையனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு புதிய தேர்வு மையம் அமைக்கக் கோரி சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு, 2012-2013 ஆம் ஆண்டில் இப்பள்ளியில் புதிய தேர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

9—

பள்ளிக்குக் கூடுதல் வசதிகள்

வினா எண் 16781—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பேரையூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு இரண்டு கூடுதல் வகுப்பறையும், சிமெண்ட் தளமும் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், பேரையூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 2012–2013 ஆம் கல்வியாண்டில் மராமத்துப் பணிக்கென ரூ.2,00,000/– நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, 4 வகுப்பறைகளுக்கு சிமெண்ட் தரைத் தளம் போடப்பட்டுள்ளது. 4 வகுப்பறைகளுக்கு வெளியில் உள்ள வராண்டாவிலும் (Kotta Stone) பதிக்கப்பட்டுள்ளது.

10—

ஆய்வகங்கள் கட்டுதல்

வினா எண் 16786—திரு. சு. ரவி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, தணிகைப்போளூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு அடுக்குமாடி வகுப்பறைகளும், ஆய்வகங்களும் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நபார்டு திட்டத்தின்கீழ் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு மட்டுமே அடிப்படை வசதிகளான வகுப்பறைகள், கழிவறைகள், குடிநீர் வசதி, ஆய்வகம் மற்றும் சுற்றுச்சுவர் ஆகிய வசதிகள் செய்து தரப்படுகின்றன. வேலூர் மாவட்டம், தணிகைப்போளூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அடுக்குமாடி வகுப்பறைகள், கழிப்பிடம், குடிநீர், ஆய்வகம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நபார்டு திட்டத்தில் வழிவகை இல்லை.

11—

கூடுதல் வகுப்பறைக் கட்டடம்

வினா எண் 16795—திரு. சு. ரவி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சயனபுரம் ஊராட்சி, சயனபுரம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின்கீழ் சுற்றுச்சுவரும், வகுப்பறைக் கட்டடங்களும் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், சயனபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் உட்பட அடிப்படை வசதிகள் செய்வது சார்ந்து நபார்டு பகுதி XII திட்டத்தின்கீழ் முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பரிந்துரை செய்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. நபார்டு பகுதி XII திட்ட ஒப்புதல் பெறப்பட்ட உடன், சயனபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தரப்படும்.

12—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 17138—திரு. சு. ரவி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, முருங்கை ஊராட்சி, முருங்கை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்மூலம் அரசினர் உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை அரக்கோணம் தொகுதி, முருங்கை ஊராட்சி, முருங்கை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

விடுப்பட்ட வினா எண் 13-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

14—

மனநல ஆலோசகர் நியமனம்

வினா எண் 17179—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மனநல ஆலோசகர்களைப் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வளரிளம் பருவத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உளவியல் ஆலோசனைகள் வழங்கும் வகையில், 32 மாவட்டங்களை நான்கு/மூன்று மாவட்டங்களாக ஒன்றிணைத்து, அதில் ஒரு மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, பத்து மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலத்திற்கும் 10 நடமாடும் ஆலோசனை மையங்கள் அமைத்தும், அம்மையம் ஒவ்வொன்றிலும் ஒரு உளவியல் ஆலோசகர் என்ற அளவில் பத்து உளவியல் ஆலோசகர்கள் நியமனம் செய்ய அரசாணை (நிலை) எண் 298, பள்ளிக் கல்வித் துறை, நாள் 30—11—2012 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைக்க 10 நடமாடும் ஆலோசனை மையங்கள் ரூ.1.27 கோடி (ரூபாய் ஒரு கோடியே இருபத்தேழு இலட்சம் மட்டும்) செலவில் அமைக்கப்பட்டு, அம்மையங்களில் 10 உளவியல் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நடமாடும் ஆலோசனை மையங்களின்மூலம் இதுவரை 208 பள்ளிகளிலுள்ள 45,141 மாணவ, மாணவிகளுக்கு குழுவாக ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 1,653 மாணவ, மாணவிகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தி தனிப்பட்ட ஆலாசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

[2015 செப்டம்பர் 29

15—

இணையதள உலாவி மையம்

வினா எண் 17252—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தின் அனைத்துப் பள்ளிக்கூடங்களிலும் மாணவர்களுக்கு இலவச இணையதள உலாவி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2006–2007 முதல் ICT திட்டம் மற்றும் கணினிக் கல்வித் திட்டத்தின்கீழ் மாணவர்கள் பயன்பெறும்பொருட்டு, அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கணினி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு கணினி/உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் BSNL நிறுவனம்மூலம் இணையதள வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, தமிழகத்தின் அனைத்துப் பள்ளிக்கூடங்களிலும் மாணவர்களுக்கென தனியாக இலவச இணையதள உலாவி மையம் அமைப்பது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

16—

தேர்வு மையம்

வினா எண் 17601—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, தேனி அல்லிநகரம் மேல்நிலைப் பள்ளியில் +2 தேர்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, தேனி அல்லிநகரம் மேல்நிலைப் பள்ளியில் +2 தேர்வு மையம் அமைக்கக் கோரி சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. எனினும், நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படாத நிலையில், 2012–2013 ஆம் கல்வியாண்டிற்கு இப்பள்ளியில் புதிய தேர்வு மையம் அமைக்கப்படவில்லை.

18—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 17659—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கலியாந்தூர் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கலியாந்தூர் அரசு நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

19—

கூடுதல் வகுப்பறைக் கட்டடம்

வினா எண் 17660—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுபட்ட வினா எண் 17-இதற்கான விளக்கத்தினை பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்களைச் சீரமைக்கவும், கூடுதல் வகுப்பறைகள் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 2013–2014 ஆம் ஆண்டிற்கான கட்டடங்கள் மராமத்துப் பணிக்கென நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் சீரமைக்கப்படும். மேலும், இப்பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி XA-ல் 24 வகுப்பறைகள், 1 ஆய்வுக்கூடம், 4 கழிவறைகள், 1,000 மீட்டர் சுற்றுச்சுவர் ஆகிய அடிப்படை வசதிகள் ரூ.166.57 இலவச மதிப்பீட்டில் கட்ட அரசாணை பெறப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

20—

கிளை நூலகம்

வினா எண் 17701—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, அறிவொளி நகரில் கிளை நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, அறிவொளி நகரில் நேரடியாக கிளை நூலகம் திறக்க வாய்ப்பு இல்லை. மேற்படி, இடத்தில் முதற்கட்டமாக பகுதி நேர நூலகம் திறப்பதற்கு இலவசமாக இடவசதி மற்றும் உரிய நிபந்தனைகளை நிறைவேற்றித் தருமாறு அந்நகராட்சி மன்றத் தலைவருக்குக் கடிதம்

TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

அனுப்பப்பட்டுள்ளது. நிபந்தனைகள் பூர்த்தி செய்து பெறப்பட்டவுடன், அங்கு பகுதி நேர நூலகம் திறக்கப்படும்.

21—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 17702—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி, புளியம்பட்டி, குங்குமம்பாளையம், மகாலட்சுமி நகர், வெங்கிடாபுரம், மல்லேகவுண்டம்பாளையம், காளிவேலம்பட்டி, குச்சிப்பட்டி ஆகிய பகுதிகளிலுள்ள தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை, பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி, புளியம்பட்டி, குங்குமம்பாளையம், மகாலட்சுமி நகர், வெங்கிடாபுரம், மல்லேகவுண்டம்பாளையம், காளிவேலம்பட்டி, குச்சிப்பட்டி ஆகிய பகுதிகளிலுள்ள பள்ளிகள் நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளிகளைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்புகள் இல்லை.

22—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 17704—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், சாமிகவுண்டம்பாளையம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், சாமிகவுண்டம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியானது, அரசாணை (நிலை) எண் 137, பள்ளிக் கல்வித் (மேநிக 2) துறை, நாள் 8–6–2012–ன்படி, 2012–2013 ஆம் கல்வியாண்டில் அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

23—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 17714—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மித்திராவயல் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 137, பள்ளிக் கல்வித் (மேநிக 2) துறை, நாள் 8–6–2012–ல் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மித்திராவயல் உயர்நிலைப் பள்ளியானது மேல்நிலைப் பள்ளியாகத் 2012–2013 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

24—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 17715—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், சாக்கவயல் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை, காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், சாக்கவயல் நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்புகள் இல்லை.

26—

பொதுத் தேர்வு மையம்

வினா எண் 17746—திரு. சு. ரவி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், குருவராஜப்பேட்டை அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் பொதுத் தேர்வு மையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், குருவராஜப்பேட்டை அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு புதிய தேர்வு மையம் அமைக்கக் கோரி சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு, 2012–2013 ஆம் கல்வியாண்டிற்கு இப்பள்ளியில் புதிய தேர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

26—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 18580—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வி (ப.க.2(2))-த் துறை, நாள் 2–7–2013–ன்படி மேல்நிலைப் பள்ளியாக 2013–2014 ஆம் கல்வியாண்டில் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

27—

தேர்வு மையம்

வினா எண் 18583—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பாள் அரசு மேல்நிலைப் பள்ளியில் தேர்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பாள் அரசு மேல்நிலைப் பள்ளியில் 12–ம் வகுப்பு புதிய தேர்வு மையம் அமைக்கக் கோரி சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு, 2013–2014 ஆம் கல்வியாண்டிற்கு இப்பள்ளியில் புதிய தேர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது. அப்பள்ளிக்கு 10–ம் வகுப்புத் தேர்வு மையம் முன்னரே வழங்கப்பட்டுவிட்டது.

2015 செப்டம்பர் 29]

28—

நூலகம்

வினா எண் 18803—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, நெடுங்குளம் ஊராட்சி, கந்தன்தேவன்பட்டி கிராமம் மற்றும் காரிசேரி ஊராட்சியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, நெடுங்குளம் ஊராட்சி, கந்தன்தேவன்பட்டி கிராமம் மற்றும் காரிசேரி ஊராட்சியில் பகுதி நேர நூலகம் திறக்க உரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்து வழங்குமாறு ஊராட்சி மன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். நிபந்தனைகள் பூர்த்தி செய்து பெறப்பட்டவுடன், அங்கு பகுதி நேர நூலகம் திறக்கப்படும்.

29—

கூடுதல் வகுப்பறைக் கட்டடம்

வினா எண் 18849—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், எலவனாசூர்கோட்டை அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கிமூலம் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், எலவனாசூர்கோட்டை அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி VI-ல் 17

வகுப்பறைகள், 1 ஆய்வுக்கூடம், குடிநீர் வசதி மற்றும் 5 கழிவறைகள் ஆகிய அடிப்படை வசதிகள் ரூ.71.33 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. மேலும், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் தேவைப்படின், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

30—

கூடுதல் வகுப்பறைக் கட்டடம்

வினா எண் 18850—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, சேந்தநாடு, எலவனாசூர்கோட்டை, திருநாவலூர், சரவணம்பாக்கம், பேரங்கியூர், ஆனத்தூரிலுள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கிமூலம் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், சேந்தநாடு அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி XI–ல் 20 வகுப்பறைகள், 1 ஆய்வுக்கூடம், 4 கழிவறைகள், 1 குடிநீர் வசதி மற்றும் 10 மீட்டர் சுற்றுச்சுவர் ஆகிய அடிப்படை வசதிகள் ரூ.174.06 இலட்சத்தில் செய்ய அரசின் அனுமதி பெறப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எலவனாசூர்கோட்டை, திருநாவலூர், சரவணம்பாக்கம், பேரங்கியூர் மற்றும் ஆனத்தூர் ஆகிய பள்ளிகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளாக இருந்தபோது, நபார்டு வங்கித் திட்டம்மூலம் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டு, கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும், கூடுதலாகத் தேவைப்படும் அடிப்படை வசதிகள் குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

2015 செப்டம்பர் 29]

31—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 18857—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆசனூர், செங்குறிச்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆசனூர் உயர்நிலைப் பள்ளி அரசாணை (நிலை) எண் 137, பள்ளிக் கல்வித் (மேநிக 2) துறை, நாள் 8–6–2012–ன்படி, 2012–2013 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

உளுந்தூர்பேட்டை தொகுதி, செங்குறிச்சி உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரை, பொது மக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால், போதிய இடவசதி இல்லை. எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த தற்போது இயலாது.

32—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 19024—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், உருவாட்டி அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை, காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், உருவாட்டி அரசு நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

33—

நூலகக் கட்டடம்

வினா எண் 19026—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கண்டனூர் பேரூராட்சி நூலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, கண்டனூர் பேரூராட்சி கிளை நூலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. தற்போது குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி என்பவர் 450 சதுர அடி பரப்பில் புதிய கட்டடம் கட்டி, மேற்படி நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து, வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வந்த இக்கிளை நூலகம் 10-3-2013 முதல் நன்கொடையாகப் பெறப்பட்ட புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது.

34—

நடுநிலைப் பள்ளி

வினா எண் 19027—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) விருதுநகர் தொகுதி, எம்புதுப்பட்டி கிராமத்திலுள்ள அசேபா திட்டக் கட்டடத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, எம்புதுப்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கென சொந்தக் கட்டடங்கள் 5 உள்ளதால், அசேபா என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனக் கட்டடத்தில் நடுநிலைப் பள்ளி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

35—

பள்ளியைச் சீரமைத்தல்

வினா எண் 19041—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் தொகுதி, மீசலூர் ஊராட்சி மேல்நிலைப் பள்ளியில் கட்டடங்கள் மற்றும் ஜன்னல் பகுதிகளில் உள் மேற்கூரைகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், மீசலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கட்டடங்கள் மற்றும் ஜன்னல் பகுதிகளில் உள் மேற்கூரைகளில் உள்ள பழுதுகள் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்மூலம் ரூ.25,000/- நிதியில் சீரமைக்கப்பட்டுவிட்டன.

36—

நவீன வகுப்பறைக் கட்டடம்

வினா எண் 19151—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, தக்கலை கல்வி மாவட்டத்தின்கீழ் இயங்கிவரும் இரணியல் அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய நவீன வகுப்பறைக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், இரணியல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி XB-ல் 2 வகுப்பறைகள், 20 மீட்டர் சுற்றுச்சுவர் ஆகிய அடிப்படை வசதிகள் ரூ.11.04 இலட்சத்தில் பொதுப் பணித் துறையினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது வகுப்பறைகள் மாணவர்கள் பயன்பாட்டில் உள்ளன.

37—

தொடக்கப் பள்ளி

வினா எண் 19919—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, அய்யனார்புரம், கலிங்கப்பட்டி, நத்தம்பட்டி, மேலூர் ஆகிய கிராமங்களில் தொடக்கப் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய தொடக்கப் பள்ளி துவங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, அய்யனார்புரம், கலிங்கப்பட்டி, நத்தம்பட்டி, மேலூர் ஆகிய கிராமங்கள் நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பகுதிகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்குவதற்கு வாய்ப்பு இல்லை.

விடுபட்ட வினா எண் 38-இதற்கான விளக்கத்தினை பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

39—

புதிய தொடக்கப் பள்ளி

வினா எண் 20325—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தேவண்ணகவுண்டனூர் கிராமம், வரதங்காட்டானூரில் புதிய தொடக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, தேவண்ணகவுண்டனூர் ஊராட்சிக்குட்பட்ட வரதங்காட்டானூர் குடியிருப்புப் பகுதியிலிருந்து 1 கி.மீ. தொலைவில் தங்காயூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இயங்கி வருகிறது. எனவே, இப்பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி அமைக்க வாய்ப்பில்லை.

40—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 20329—திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்வேளூரில் உள்ள அருள்மிகு அஞ்சு வட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கீழ்வேளூரில் உள்ள அருள்மிகு அஞ்சு வட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளியானது, இந்து சமய அறநிலையத் துறையினரால் நிருவகிக்கப்பட்டு வரும் அரசு நிதியுதவிபெறும்

[2015 செப்டம்பர் 29

பள்ளியாகும். மேற்கண்ட அரசு உதவிபெறும் பள்ளியினை நடத்தும் நிருவாகம், பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்திடக் கருதி விண்ணப்பித்தால், தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைச்) சட்டம், 1973 மற்றும் அதன்கீழ் அமையப்பெற்ற விதிகளின்படி, பள்ளியினைத் தரமுயர்த்திட பள்ளிக் கல்வி இயக்கக இணை இயக்குநரால் (மேல்நிலைக் கல்வி) பரிசீலிக்கப்படும்.

41—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 20343—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பெத்தாச்சி குடியிருப்பு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை, காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பெத்தாச்சி குடியிருப்பு நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

42—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 20350—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வித் (ப.க. 2(2)) துறை, நாள் 2–7–2013–ன்படி, தனி தொகுதி, தேன்கனிக்கோட்டை அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக 2013–2014 ஆம் கல்வியாண்டில் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

43—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 20353—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், ஏ.கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை, உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், ஏ.கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

44—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 20355—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், ஏ.அத்திப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை, உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், ஏ. அத்திப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

45—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 20356—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், ஏ.சாத்தனூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை, உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், ஏ.சாத்தனூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

46—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 20358—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2015 செப்டம்பர் 29]

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், நரிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை, உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், நரிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

47—

பெண்கள் மேல்நிலைப் பள்ளி

வினா எண் 20523—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, பெருகவாழ்ந்தானில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, பெருகவாழ்ந்தானில் தற்போது இருபாலர் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளி செயல்படுகிறது. மேலும், பெருகவாழ்ந்தானைச் சுற்றி 8 கி.மீ. தொலைவில் புத்தகரம், நாச்சிகுளம் ஆகிய ஊர்களில் இருபாலர் பயிலும் மேல்நிலைப் பள்ளியும், 12 கி.மீ. தொலைவில் முத்துப்பேட்டை, திரும்மக்கோட்டை ஆகிய ஊர்களில் பெண்கள் மேல்நிலைப் பள்ளியும் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே, பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகச் செயல்பட்டுவரும் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலும் என்ற நிலையில், திருத்துறைப்பூண்டி தொகுதி, பெருகவாழ்ந்தானில் தற்போது நேரடியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க விதிகளில் இடமில்லை.

[2015 செப்டம்பர் 29

48—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 20524—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, மழவராயநல்லூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, திருத்துறைப்பூண்டி தொகுதி, மழவராயநல்லூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட இடவசதி போதுமானதாக இல்லை. பொது மக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தற்போது தரமுயர்த்த இயலாது.

49—

தேர்வு மையம்

வினா எண் 20588—திரு. வி.எஸ். இராஜி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செய்யூர் தொகுதி, சூனாம்பேடு அரசு மேல்நிலைப் பள்ளிக்கு +2 தேர்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செய்யூர் தொகுதி, சூனாம்பேடு அரசு மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு புதிய தேர்வு மையம்

2015 செப்டம்பர் 29]

அமைக்கக் கோரி சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு, 2012–2013 ஆம் கல்வியாண்டிற்கு இப்பள்ளியில் புதிய தேர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

50—

அறிவியல் ஆய்வுக்கூடம்

வினா எண் 20590—திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அனைத்து உபகரணங்களுடன் நவீன முறையில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பள்ளிக் கல்வித் துறை சார்ந்த அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நபார்டு திட்டத்தின்கீழ் கட்டடம் I முதல் XA முடிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், அறிவியல் ஆய்வுக்கூட கட்டடம் கட்டப்பட்ட பள்ளிகளுக்குத் தேவையான அறிவியல் ஆய்வக உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டு வருகின்றன.

51—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 20619—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் கிராமம், அருள்புரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தவும், சுற்றுச்சுவர் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, பல்லடம் தொகுதி, கரைப்புதூர் கிராமம், அருள்புரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த பொது மக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. போதிய இடவசதி இல்லை. எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த தற்போது இயலாது.

52—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 20621—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் கிராமம், கரைப்புதூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை, பல்லடம் தொகுதி, கரைப்புதூர் கிராமம், கரைப்புதூர் நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

53—

தேர்வு மையம்

வினா எண் 20651—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) தளி தொகுதி, மதகொண்டப்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் +2 தேர்வு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, மதகொண்டப்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் +2 தேர்வு மையம் அமைக்க உரிய நிபந்தனைகளை நிறைவு செய்யும்பட்சத்தில், அப்பள்ளியில் தேர்வு மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

54—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 20676—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, எஸ்.புதூர் ஒன்றியம், முசுண்டப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை, முசுண்டப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி பூர்த்தி செய்துள்ளதால், நிதிநிலை மற்றும் தேவை கருதி, மேற்காணும் பள்ளியினை வரும் கல்வியாண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் நிதி பெற்று, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த பரிசீலிக்கப்படும்.

[2015 செப்டம்பர் 29

55—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 21297—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், வடுகப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. மேலும், தரம் உயர்த்துவது தொடர்பாக கருத்துருக்கள் பெறப்படவில்லை. எனவே, சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், வடுகப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த தற்போது இயலாது.

56—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 21301—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை உளூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வித் (பக. 2(2)) துறை, நாள் 2–7–2013–ன்படி, பட்டுக்கோட்டை தொகுதி,

2015 செப்டம்பர் 29]

புதுக்கோட்டை உளூர் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக 2013–2014 ஆம் கல்வியாண்டில் தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

57—

மகளிர் மேல்நிலைப் பள்ளி

வினா எண் 22038—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரம், பெரியப்பட்டிணம், புதுமடம் ஆகிய பகுதிகளில் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பெரியபட்டிணம் மற்றும் புதுமடம் ஆகிய பகுதிகளில் இருபாலர் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இராமநாதபுரத்தில் நகராட்சி மேல்நிலைப் பள்ளி உள்ளது. மகளிர் உயர்நிலைப் பள்ளிகள் இருந்தால்தான், அதனை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலும். எனவே, இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரம், பெரியப்பட்டிணம் மற்றும் புதுமடம் ஆகிய பகுதிகளில் நேரடியாக அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைக்க விதிகளின்படி இயலாது.

58—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 22041—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, உத்திரகோசமங்கை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வித் (ப.க. 2(2)) துறை, நாள் 2–7–2013–ன்படி, இராமநாதபுரம் தொகுதி, உத்திரகோசமங்கை உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக 2013–2014 ஆம் கல்வியாண்டில் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

59—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 22043—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் தொகுதி, பாம்பன் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 137, பள்ளிக் கல்வித் (மேநிக 2) துறை, நாள் 8–6–2012–ன்படி, இராமநாதபுரம் தொகுதி, பாம்பன் அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

60—

பயிற்சிக் கூடம்

வினா எண் 22050—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் மாவட்டம், தொண்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டுத் திடலில் பயிற்சிக்கூடமும், விளையாட்டு வீரர்களுக்கான விடுதியும் கட்ட அரசு முன்வருமா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தொண்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டுத் திடலில் பயிற்சிக்கூடம் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கான விடுதியும் கட்ட போதுமான இடவசதி உள்ளதால், விளையாட்டு (ம) இளைஞர் நலத் துறையுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

61—

வகுப்பறைக் கட்டடம்

வினா எண் 22076—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, வடுவூர் மேல்நிலைப் பள்ளியில் போதிய வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் கட்டடங்கள் கட்டுவது, உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது, கட்டடங்களைச் சீரமைப்பது ஆகிய பணிகள் அரசால் மேற்கொள்ளப்படுவதில்லை. எனவே, திருவாரூர் மாவட்டம், வடுவூர் உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிக்கு பள்ளி நிருவாகமே வகுப்பறை வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

(ஆ) வினா எழவில்லை.

62—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 22206—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பெத்தாச்சி குடியிருப்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை, காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பெத்தாச்சி குடியிருப்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்புகள் இல்லை.

63—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 22207—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், சருகணி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, அரசு உயர்நிலைப் பள்ளிகளைத்தான் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த இயலும். சிவகங்கை மாவட்டம், சருகணியில் அரசு உயர்நிலைப் பள்ளி ஏதும் இல்லையாதலால் மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தும் கேள்வி எழ வாய்ப்பில்லை.

2015 செப்டம்பர் 29]

64—

நடுநிலைப் பள்ளி

வினா எண் 22211—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், மங்களம் நடுநிலைப் பள்ளியைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியத்திற்குட்பட்ட மங்களம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியானது 2009–2010 ஆம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

65—

மேல்நிலைப் பள்ளி

வினா எண் 22212—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே செயல்பட்டுவரும் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளையே அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த இயலும்.

தேவக்கோட்டையில் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் ஏதும் இல்லை. நகராட்சி உயர்நிலைப் பள்ளி மட்டுமே உள்ளது. இப்பள்ளியில் போதிய மாணவர்கள் மற்றும் போதிய இடவசதி இல்லை. உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, இந்நகராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த தற்போது இயலாது. மேலும், காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியை நேரடியாகத் துவக்க விதிகளின்படி இயலாது.

66—

பெண்கள் மேல்நிலைப் பள்ளி

வினா எண் 22220—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டி, செட்டிப்பட்டியில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே செயல்பட்டுவரும் பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத்தான் பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலும். சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், அரசிராமணி பேரூராட்சி, செட்டிப்பட்டி மற்றும் குள்ளம்பட்டி அருகே அரசு மேல்நிலைப் பள்ளி, தேவூர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, இடப்பாடி ஆகியன செயல்படுகின்றன. எனவே, செட்டிப்பட்டி மற்றம் குள்ளம்பட்டியில் நேரடியாகப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள் துவங்க விதிகளில் இடமில்லை.

2015 செப்டம்பர் 29]

67—

நூலகம்

வினா எண் 22223—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதியில் அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் நூலக வசதிகள் ஏற்கெனவே செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

68—

பயிற்சி அளித்தல்

வினா எண் 22225—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணிகளுக்கான பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணிகளுக்கான பயிற்சிகள் கல்லூரி படிப்பு முடித்த பின்னரே வழங்க இயலும். பள்ளிகளில் இதுபோன்ற பணிகளுக்கான பயிற்சிகள் வழங்க திட்டம் ஏதுமில்லை.

69—

நூலகத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 22538—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், சருகனியிலுள்ள நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், சருகனியில் பொது நூலகத் துறையின்கீழ் நூலகம் ஏதும் செயல்படவில்லை. இங்கு பகுதி நேர நூலகம் திறக்க உரிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து வழங்குமாறு சருகனி ஊராட்சிமன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். நிபந்தனைகள் பூர்த்தி செய்து பெறப்பட்டதும் அங்கு பகுதி நேர நூலகம் திறக்கப்படும்.

70—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 22662—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, கருப்பிலிப்பட்டி, கோரியம்பட்டிபுதூர், வேப்பநத்தம், நாச்சினாம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை அரூர் தொகுதி, கருப்பிலிப்பட்டி, கோரியம்பட்டிபுதூர், வேப்பநத்தம், நாச்சினாம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளிகளைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

71—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 22679—திரு. மு. முருகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகுளத்தூர் தொகுதி, இளஞ்செம்பூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை, இளஞ்செம்பூர் அரசு உயர்நிலைப் பள்ளி பூர்த்தி செய்துள்ளதால், நிதிநிலை மற்றும் தேவைக் கருதி, மேற்காண் பள்ளியினை வரும் கல்வியாண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் நிதி பெற்று மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த பரிசிலிக்கப்படும்.

72—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 23935—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) சீர்காழி தொகுதி, மங்கைமடம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை சீர்காழி தொகுதி, மங்கைமடம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

73—

மேல்நிலைப் பள்ளி

வினா எண் 23936—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே செயல்படும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளைத்தான் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த இயலும். சீர்காழி தொகுதி, சீர்காழியில் நேரடியாகப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் தொடங்கிட விதிகளின்படி இயலாது.

74—

நூலகத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 23938—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியில் உள்ள நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் உள்ள கிளை நூலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும்பொருட்டு, 0.226 சதுர மீட்டர் காலிமனை சீர்காழி வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இக்காலிமனையில் புதிய நூலகக் கட்டடங்களுக்கான திருத்திய வரைபடம் மற்றும் மதிப்பீடு அறிக்கை பொதுப் பணித் துறையிடமிருந்து பெறப்பட்டவுடன், சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

75—

ஆண்கள் மேல்நிலைப் பள்ளி

வினா எண் 24349—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகரில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடியில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் இருபாலர் நகராட்சி மேல்நிலைப் பள்ளி ஆகியவை உள்ளன. மன்னார்குடி நகரில் புதிய அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி நேரடியாகத் துவக்க தற்போது இயலாது.

76—

தொன்மை நாகரீக எழுத்துக்களைப் பாதுகாத்தல்

வினா எண் 25058—திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மலைப் பகுதிகளில் காணப்படும் ஹரப்பா, மொஹன்சதாரோ தொன்மை நாகரீக எழுத்துக்களைப் பாதுகாத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மலைப் பகுதிகளில் ஹரப்பா, மொஹன்சதாரோ தொன்மை நாகரீக எழுத்து வடிவங்கள் எவையும் இல்லையென்பதால், மாநிலத் தொல்லியல் துறையால் அவற்றைப் பாதுகாக்கும் கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

77—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 25513—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, பூவந்தி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்தப்படவில்லை. போதிய

2015 செப்டம்பர் 29]

இடவசதி பெறவில்லை. மேலும், இப்பள்ளிக்கு அருகில் திருப்புவனம் மற்றும் திருமாஞ்சோலை அரசு மேல்நிலைப் பள்ளிகள் செயல்படுகின்றன. எனவே, மானாமதுரை தொகுதி, பூவந்தி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த தற்போது இயலாது.

78—

பள்ளிக் கட்டடத்தைச் சீரமைத்தல்

வினா எண் 25561—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்ககிரி தொகுதி, சங்ககிரி பேரூராட்சி, சங்ககிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழுதடைந்த கட்டடங்களைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, சங்ககிரி பேரூராட்சி, சங்ககிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1953 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட 10 வகுப்பறைகளில் 8 வகுப்பறைகள் பழுதடைந்துள்ளன. 2012-2013 ஆம் நிதியாண்டில் 4 வகுப்பறைகளைச் சீரமைக்க சிறப்பு மராமத்து நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் கட்டுமானப் பணிகள் செய்யப்பட்டு, அவ்வகுப்பறைகள் தற்போது மாணவர் பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 4 வகுப்பறைகள் முன்னாள் பள்ளி மாணவர்கள் சங்கத்தினரால் சீரமைக்கப்பட்டு அவ்வகுப்பறைகள் பயன்பாட்டில் உள்ளன.

79—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 25566—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம், சாமராயபட்டி, மடத்தூர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம், சாமராயபட்டி, மடத்தூர் நடுநிலைப் பள்ளிகள் நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளிகளைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

80—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 25567—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம், வேடபட்டி, கழுகரை ஒன்றிய தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம், வேடபட்டி, கழுகரை ஆகிய தொடக்கப் பள்ளிகள் நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளிகளைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

82—

பெண்கள் மேல்நிலைப் பள்ளி

வினா எண் 26298—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண் 81-இதற்கான விளக்கத்தினை பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

(அ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளங்குறிச்சி மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, பெண்களுக்குத் தனியாக மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, ஏற்கெனவே செயல்பட்டுவரும் பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத்தான் பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலும். எனவே, புதுக்கோட்டை தொகுதி, முள்ளங்குறிச்சி மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக உருவாக்க இயலாது.

83—

கூடுதல் கட்டட வசதி

வினா எண் 26300—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை தொகுதி, மஹாகதம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, மஹாகதம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி XI–ல் 18 வகுப்பறைகள், 1 ஆய்வுக்கூடம், 2 கழிவறைகள், குடிநீர் வசதி ஆகிய அடிப்படை வசதிகள் ரூ.153.86 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

84—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 26488—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, ஆவுடையானூர்பாளையம், ஆ.பொன்னுசாமி நாடார் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. மேலும், இப்பள்ளியைச் சுற்றி 8 கி.மீ. தூரத்தில் புனித அருளப்பர் மேல்நிலைப் பள்ளி, ஆவுடையானூர், அரசு மேல்நிலைப் பள்ளி (ஆண்கள்), பாவூர்சத்திரம், அரசு மேல்நிலைப் பள்ளி (பெண்கள்), பாவூர்சத்திரம் ஆகியவை செயல்படுகின்றன. எனவே, தென்காசி தொகுதி, ஆவுடையானூர் பாளையம், ஆ.பொன்னுசாமி நாடார் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

85—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 26489—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், சாத்தனூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. போதிய இடவசதியைப் பெற்றுள்ளது. எனவே, அரசின் நிதிநிலை மற்றும் தேவையின் அடிப்படையில், மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், சாத்தனூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் நிதி பெற்று, பரிசீலனை செய்யப்படும்.

86—

நூலகம்

வினா எண் 28836—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், அரியகுளம் ஊராட்சி, தளவாய்புரத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், அரியகுளம் ஊராட்சி, தளவாய்புரத்தில் நூலகம் திறக்க உரிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து வழங்குமாறு அரியகுளம் ஊராட்சிமன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். நிபந்தனைகள் பூர்த்தி செய்து பெறப்பட்டதும், அங்கு பகுதி நேர நூலகம் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2015 செப்டம்பர் 29

87—

பொது நூலகம்

வினா எண் 26839—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், சிங்கிகுளம் ஊராட்சி, கீழஉப்பூரணியில் பொது நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், சிங்கிகுளம் ஊராட்சி, கீழஉப்பூரணியில் பொது நூலகம் திறக்க உரிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து வழங்குமாறு சிங்கிகுளம் ஊராட்சிமன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். நிபந்தனைகள் பூர்த்தி செய்து பெறப்பட்டவுடன், அங்கு பகுதி நேர நூலகம் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

88—

நூலகம்

வினா எண் 27525—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, பட்டத்திகாடு ஊராட்சி, மயிலாடி கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, பட்டத்திகாடு ஊராட்சி, மயிலாடி கிராமத்தில் பகுதி நேர நூலகம் திறக்க இடவசதி மற்றும் உரிய நிபந்தனைகளை நிறைவேற்றித் தருமாறு பட்டத்திகாடு ஊராட்சிமன்றத் தலைவர்

2015 செப்டம்பர் 29]

கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். நிபந்தனைகள் பூர்த்தி செய்து பெறப்பட்டவுடன், அங்கு பகுதி நேர நூலகம் திறக்கப்படும்.

89—

ஊர்ப்புற நூலகங்களைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 28536—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, தேவனூர்புதூர், போடிப்பட்டி, குறிச்சிக்கோட்டை, ராமராயபட்டி, பாப்பான்குளம், நரசிங்காபுரம் மற்றும் எலையமுத்தூர் ஆகிய பகுதிகளிலுள்ள நூலகங்களைக் கிளை நூலகங்களாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, போடிப்பட்டி ஊர்ப்புற நூலகம் கிளை நூலகமாகத் தரமுயர்த்தப்பட்டு, 8–11–2013 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், தேவனூர்புதூர், குறிச்சிக்கோட்டை, ராமராயபட்டி, பாப்பான்குளம், நரசிங்காபுரம் மற்றும் எலையமுத்தூர் ஆகிய ஊர்ப்புற நூலகங்கள் அவற்றின் பயன்பாட்டினைப் பொருத்து, கிளை நூலகங்களை தரமுயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

90—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 28539—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம், நரசிங்காபுரத்திலுள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை மடத்துக்குளம், நரசிங்காபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளிகளைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

91—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 28542—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம், மெட்ராத்தி, கிருஷ்ணாபுரம், சாலரப்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம், மெட்ராத்தி, கிருஷ்ணாபுரம், சாலரப்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள நடுநிலைப் பள்ளிகள் நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளிகளைத் தற்போது உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

92—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 28544—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம், காரத்தொழுவிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வித் (ப.க.2(2)) துறை, நாள் 2–7–2013–ன்படி, மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம், காரத்தொழுவிலுள்ள உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக 2013–2014 ஆம் கல்வியாண்டில் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

95—

மயில்கள் சரணாலயம்

வினா எண் 8574—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், காட்டூரணி பகுதியில் மயில்கள் சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், காட்டூரணி பகுதியில் மயில்கள் சரணாலயம் அமைக்கத் தேவையான வனச்சூழலுடன்கூடிய வாய்ப்பான நிலம் இல்லையென்பதால் மயில்கள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

96—

தேன் உற்பத்தியைப் பெருக்குதல்

வினா எண் 10202—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

விடுப்பட்ட வினா எண் 93,94-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்மூலம் தேன் உற்பத்தியைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்மூலம் தேன் உற்பத்தியைப் பெருக்க அரசு ஊக்குவித்து வருகிறது.

(ஆ) தமிழ்நாடு தோட்டக்கலைத் துறைமூலமாக ரூ.30.01 இலட்சம் நிதியுதவி பெறப்பட்டு, தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்கும்பொருட்டு, 23 மாவட்டங்களில் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட திட்ட மதிப்பின்படி தேனீ வளர்ப்புத் தொழிலில் அதிக ஆர்வமுள்ள விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 440 விவசாயிகளுக்குத் தேனீ வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்குத் தேனீ குடும்பங்கள் மற்றும் இதர உபகரணங்களும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் 25 நபர்களுக்கு 3 மாத தேனீ வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

97—

தேனீ வளர்ப்புப் பண்ணை

வினா எண் 21591—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, முளகுமூடு பகுதியில் தேனீ வளர்ப்புப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) குளச்சல் தொகுதி, முளகுமூடு பகுதியில் தேனீ வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

2015 செப்டம்பர் 29]

98—

மாணவியர் விடுதி

வினா எண் 24—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவிகள் தங்கும் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

99—

மாணவர் விடுதி

வினா எண் 1153—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவருக்காக விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் செயல்பட்டுவரும் பிற்படுத்தப்பட்டோர் நல

[2015 செப்டம்பர் 29

கல்லூரி மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

100—

மாணவர் விடுதி

வினா எண் 1956—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சின்னக்கண்ணனூரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சின்னக்கண்ணனூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

101—

மாணவியர் விடுதி

வினா எண் 2595—திரு. க. குணசேகரன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை வட்டம், மல்லல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் மாணவியர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், மல்லல் எனும் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

102—

மாணவர் விடுதி

வினா எண் 2897—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரியில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி விடுதி (50 மாணவர்கள் எண்ணிக்கையில்) ஏற்கெனவே இயங்கி வருவதால், புதிதாக மாணவர் விடுதி துவங்குவது குறித்த அவசியம் எழாது.

103—

ஆங்கில வழிக் கல்வி

வினா எண் 4351—திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளர் மற்றும் சீர்மரபினர் துறை சார்பில் ஆங்கில வழிக் கல்வி முறையைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 3 மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு 5 அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளிகள் வீதம் 15 பள்ளிகளில் 2011–2012 ஆம் கல்வியாண்டில் ஆங்கில வகுப்பு (L.K.G.) துவக்க அரசாணை (நிலை) எண் 95, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் (பிந 3) துறை, நாள் 3–11–2011 இல் ஆணைகள் வெளியிடப்பட்டு, L.K.G. வகுப்புகள் செயல்பட்டு வருகின்றன.

104—

மாணவியர் விடுதி

வினா எண் 4538—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தி மற்றும் கீழடியில் மாணவிகள் தங்கும் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தி மற்றும் கீழடியில் மாணவியர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

105—

மாணவர் விடுதி

வினா எண் 5449—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் மாணவர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

106—

மாணவியர் விடுதி

வினா எண் 5450—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி கட்டும் பணியை விரைவாகத் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதிக்குப் புதிதாக நிலம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

107—

விடுதிக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 17970—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர், திண்டுக்கல் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள இஸ்லாமிய பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி சிறுபான்மையினர் நலப் பள்ளி/கல்லூரி மாணவியர் விடுதி, திண்டுக்கல் மாவட்டம், பேகம்பூர் சிறுபான்மையினர் நலப் பள்ளி/கல்லூரி மாணவியர் விடுதி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் சிறுபான்மையினர் நலப் பள்ளி/கல்லூரி மாணவியர் விடுதி ஆகியவற்றுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும், அவ்விடுதிகளில் சூரிய எரிசக்திக் கருவிகள் நிறுவுவதற்கும் ஆணையிடப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29]

108—

விடுதிக்கு சுற்றுச்சுவர்

வினா எண் 20500—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, ஓமலூர் வட்டம், தாரமங்கலத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிக்கு மூன்று பக்க சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, ஓமலூர் வட்டம், தாரமங்கலம் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதிக்குச் சுற்றுச்சுவர் கட்டித் தர ரூ.9.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

109—

மேல்நிலைப் பள்ளி

வினா எண் 21521—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, பூவந்தியில் கள்ளர் மேல்நிலைப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, பூவந்தி கிராமத்தில் பிரமலைக் கள்ளர் இனத்தைச் சார்ந்த மக்கள்

மிகக் குறைவாக வசிப்பதாலும், மேலும், பள்ளிக் கல்வித் துறையின்கீழ் பூவந்தி கிராமத்திலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்தில் 3 அரசு மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருவதாலும், பூவந்தியில் அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

110—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 22468—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளர் இன மக்களுக்கு பிரமலைக் கள்ளர் என சாதிச் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு முழுவதும் கள்ளர் வகுப்பு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பாகவும், பிரமலைக் கள்ளர் வகுப்பு சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் சீர்மரபினர் வகுப்பாகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரமலைக் கள்ளர் வகுப்பானது ஒரு குறிப்பிட்ட மாவட்டங்களில் சீர்மரபினர் வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், கள்ளர் இன மக்கள் அனைவருக்கும் பிரமலைக் கள்ளர் என சாதிச் சான்றிதழ் வழங்க இயலாது.

111—

மாணவர் விடுதி

வினா எண் 24646—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 செப்டம்பர் 29]

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மித்திராவயலில் அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மித்திராவயலிலிருந்து 15 கி.மீ. தொலைவில் புதுவயல் என்னுமிடத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியும் இயங்கி வருகிறது. மேலும், மித்திராவயலில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசிலனையில் இல்லை.

112—

மாணவ, மாணவியர் விடுதி

வினா எண் 26616—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, முனைவென்றி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, முனைவென்றியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் மற்றும்

[2015 செப்டம்பர் 29

மாணவியர் விடுதிகள் துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

113—

குறை தீர்க்கும் மையம்

வினா எண் 28282—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வெளிநாட்டில் அவதியுறும் தமிழ்நாட்டைச் சார்ந்த வெளிநாட்டுவாழ் இந்தியர்களுக்குக் குறை தீர்க்கும் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) வெளிநாட்டில் அவதியுறும் தமிழ்நாட்டைச் சார்ந்த இந்தியர்களின் குறைகளைக் களையவும், அவர்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும், தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, 2010 ஆம் ஆண்டு முதல் அகதிகள் மறுவாழ்வு ஆணையரகத்தின் ஒரு பகுதியாகச் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

114—

மருத்துவமனையைச் சீரமைத்தல்

வினா எண் 19—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு மருத்துவமனையைச் சீரமைத்து நவீனப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசு வட்ட மருத்துவமனை 68 படுக்கைகள் கொண்ட வசதியுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு சராசரியாக நாளொன்றுக்கு உள் நோயாளிகள் 30 நபர்களும், வெளி நோயாளிகள் 480 நபர்களும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனை தற்போது தேவையான நவீன வசதிகளுடன் இயங்கி வருவதாலும், இதனை மேலும் நவீனப்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

115—

மருத்துவமனையை நவீனப்படுத்துதல்

வினா எண் 20—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி அரசு மருத்துவமனையை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்ட அரசு மருத்துவமனை 38 படுக்கைகள் கொண்ட வசதியுடன் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாளொன்றுக்கு உள் நோயாளிகள் 15 நபர்களும், வெளி நோயாளிகள் 463 நபர்களும் ஆய்வகப் பரிசோதனைமூலம் 250 நபர்களும் சிகிச்சைப் பெறுகின்றனர். இம்மருத்துவமனை ஏற்கெனவே போதுமான நவீன வசதிகளுடன் செயல்பட்டு வருவதாலும், தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையைவிட சிகிச்சைப் பெறும் உள் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாக

இருப்பதாலும், மருத்துவமனை பயன்பாடு நிறைவாக உள்ளதாலும் இம்மருத்துவமனையை மேலும் நவீனப்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

116—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 32—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு சமூக நல மருத்துவமனையை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் சமூக நல மருத்துவமனை அரசு மருத்துவமனையாக அரசாணை (நிலை) எண் 148, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 27—5—2014-ன்படி தரம் உயர்த்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

117—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 63—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நெ.4, வீரபாண்டி பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், நெ.4, வீரபாண்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

118—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 64—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் அரசு பொது மருத்துவமனையை நவீன வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை 116 படுக்கைகள் கொண்ட வசதியுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக உள் நோயாளிகள் 95 நபர்களும், வெளி நோயாளிகள் 1,054 நபர்களும் சிகிச்சைப் பெறுகின்றனர். இங்கு அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கையைவிட குறைந்த எண்ணிக்கையில் உள் நோயாளிகள் சிகிச்சைப் பெறுவதாலும், இம்மருத்துவமனை தற்போது போதுமான வசதிகளுடன் செயல்பட்டு வருவதாலும், இம்மருத்துவமனையை மேலும் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

[2015 செப்டம்பர் 29

119—

மூலிகைப் பண்ணை

வினா எண் 423—திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், கொல்லிமலையில் மூலிகைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் மூலிகைப் பண்ணைகள் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

120—

மருத்துவமனையை நவீனப்படுத்துதல்

வினா எண் 1086—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், முத்தனேந்தல் அரசு மருத்துவமனையை நவீனப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், முத்தனேந்தல் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம்,

2015 செப்டம்பர் 29]

மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

122.—

புதிய மருத்துவ வசதி

வினா எண் 1099—திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, அரசு இராசாசி மருத்துவமனையைப் புதிய மருத்துவ வசதியுடன் மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை, அரசு இராசாசி மருத்துவமனையில் உள்ள பல்வேறு துறைகள் ரூ.95.06 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பிரதான் மந்திரி ஸ்வஸ்த்ய சுரக்ஷா யோஜனா (PMSSY) என்ற திட்டத்தின்மூலம் அம்மருத்துவமனையினை அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்திற்கு (AIIMS) இணையாகத் தரம் உயர்த்துவதற்காக ரூ.150 கோடி செலவில் கட்டடப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

123.—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1101—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, குன்னூர் மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண் 121-இதற்கான விளக்கத்தினை பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், குன்னூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

124—

காலிப் பணியிடம்

வினா எண் 1172—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 19 மருத்துவர் பணியிடங்களில் 14 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. காலியாக உள்ள துப்புரவுப் பணியாளர் பணியிடம் மற்றும் மருத்துவமனைப் பணியாளர் பணியிடங்கள் பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்களாக வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையில், மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் தினக் கூலி அடிப்படையில், மாவட்ட இணை இயக்குநரால் பணி நியமனம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காலியாக உள்ள செவிலியர் உதவியாளர் நிலை—2 பணியிடங்கள் பதவி உயர்வுமூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சுப் பணியாளர்களில் ஒப்பளிக்கப்பட்ட இளநிலை நிருவாக அலுவலர் பணியிடம்—1, அலுவலகக் கண்காணிப்பாளர் பணியிடம்—1 மற்றும்

2015 செப்டம்பர் 29]

உதவியாளர் பணியிடங்கள்—3 ஆகிய அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளன. தற்பொழுது பணியிலுள்ள மருத்துவம், மருத்துவம் சாரா, இதரப் பணியாளர்களைக் கொண்டு இப்பகுதி மக்களுக்குச் சிறப்பான மருத்துவச் சேவை வழங்கப்பட்டுகிறது.

125—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 1173—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், பாலையூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. பாலையூர் கிராமம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,11,532. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், பாலையூர் கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் தலையாமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், பாலையூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

126—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 1427—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, எறையூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், எறையூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

127—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 1444—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு மாவட்டம், சவுண்டப்பூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. சவுண்டப்பூர் கிராமம், கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின்

மக்கள்தொகை 1,34,204. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், சவுண்டப்பூர் கிராமத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் அத்தாணி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், சவுண்டப்பூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

128—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 1748—திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, அவலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. அவலூர்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இதே ஊராட்சி ஒன்றியத்தில் வளத்தி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அவலூர்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

129—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1753—திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 29

(அ) செஞ்சி தொகுதி, ஒட்டம்பட்டு அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. செஞ்சி ஊராட்சி ஒன்றியம், சத்தியமங்கலம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருவதால், அதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒட்டம்பட்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

130—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1940—திரு. ஆர். சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கருங்காலக்குடி பிரதான

2015 செப்டம்பர் 29]

ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கொட்டாம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

132—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 1980—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், அல்லிநகர சுகாதார நிலையத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், அல்லிநகரம் கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

134—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 2110—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, திக்கணங்கோடு ஊராட்சி, சேவியர்புரம் மற்றும் கோதநல்லூர் பேரூராட்சி, மாறாங்கோணத்திலும் துணைச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண்கள் 131,133-இவற்றுக்கான விளக்கத்தினை பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 2,000 மக்கள்தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், துணைச் சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. சேவியர்புரம் கிராமத்தின் மக்கள்தொகை 5,000-க்கும் குறைவாக இருப்பதால், சேவியர்புரம் கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. கோதநல்லூர் பேரூராட்சி, மாறாங்கோணம் கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

135—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 2556—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செஞ்சி தொகுதி, அனந்தபுரம் பேரூராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி, 30 படுக்கைகள் கொண்ட முழுநேர மருத்துவமனையாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சத்தியமங்கலம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள

2015 செப்டம்பர் 29]

அனந்தபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

136—

அறுவை சிகிச்சை மையம்

வினா எண் 2560—திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசு பொது மருத்துவமனையிலுள்ள அறுவை சிகிச்சை மையத்தைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அரசு மருத்துவமனையின் அறுவை சிகிச்சை மையத்தில் பொதுப் பணித் துறையால் கட்டடம் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது இப்பணிகள் முடிக்கப்பட்டு, இந்த அறுவை சிகிச்சை மையம் பயன்பாட்டில் உள்ளது.

137—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 2887—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, உத்தனப்பள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. உத்தனப்பள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தில், சூளகிரி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள உத்தனப்பள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

138—

தரம் உயர்த்துதல்

வினா எண் 2888—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. ராயக்கோட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில், கெலமங்கலம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம்

2015 செப்டம்பர் 29]

மேம்படுத்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ராயக்கோட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

139—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 2893—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, அத்திமுகம் மற்றும் முதுகுறிக்கியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியும் உள்ளது. அத்திமுகம் மற்றும் முதுகுறுக்கி கிராமங்கள் சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. சூளகிரி ஊராட்சி ஒன்றியம் அத்திமுகம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. முதுகுறுக்கி கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் பேரிகை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. எனவே, முதுகுறுக்கி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2015 செப்டம்பர் 29

140—

செவிலியர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 2912—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் செவிலியர் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் செவிலியர் பயிற்சிப் பள்ளி துவங்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

141—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 3455—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், எலவிஞ்சிபுரத்தில் துணைச் சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 2,000 மக்கள்தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் என்ற

2015 செப்டம்பர் 29]

அடிப்படையிலும், துணைச் சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. எலவிஞ்சிபுரம் கிராமத்தின் மக்கள்தொகை 5,000–க்கும் குறைவாக இருப்பதால், எலவிஞ்சிபுரம் கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

142—

அறுவை சிகிச்சை அரங்கம்

வினா எண் 3456—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள அறுவை சிகிச்சை அரங்கத்தை செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரம் தொகுதி, பணகுடி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள அறுவை சிகிச்சை அரங்கம் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.1,01,868 செலவில் கட்டப்பட்டு, 28–10–2011 அன்று முதல் செயல்படத் துவங்கியுள்ளது.

143—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 3458—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், தனக்கர்குளம் ஊராட்சி, கோவியான்குளத்தில் துணைச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 2,000 மக்கள்தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், துணைச் சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. கோவியான்குளம் கிராமத்தின் மக்கள்தொகை 5,000-க்கும் குறைவாக இருப்பதால், கோவியான்குளம் கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

147—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 3659—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவிடைமருதூர் தொகுதி, கதிராமங்கலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. கதிராமங்கலம் கிராமம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,14,669. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், கதிராமங்கலம் கிராமத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் துகிலி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், கதிராமங்கலம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

விடுப்பட்ட வினா எண்கள் 144,145,146-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

149—

தேவையான மருந்து வழங்குதல்

வினா எண் 3678—திரு. பழ. கருப்பையா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

துறைமுகம் தொகுதி, அரசு பொது மருத்துவமனையை புனரமைப்புச் செய்து, தேவையான மருந்துகளை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

துறைமுகம் தொகுதியில் உள்ள சென்னை, அரசு பொது மருத்துவமனைக்கு 2014–2015 ஆம் நிதியாண்டில் ரூ.140.00 இலட்சம் கட்டடப் பராமரிப்பிற்காகவும் மற்றும் ரூ.70.00 இலட்சம் மின்சாரப் பராமரிப்பிற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையினரால் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புப் பணி ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சென்னை, அரசு பொது மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்குத் தேவைப்படும் அத்தியாவசியமான மருந்துகள் போதுமான அளவு தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்தின்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

151—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 4322—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், இடையன்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுபட்ட வினா எண்கள் 148,150-இவற்றிற்கான விளக்கத்தினை *பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.*

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. இடையன்குளம் கிராமம், களக்காடு ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,07,009. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. இடையன்குளம் கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

152—

மருத்துவக் கல்லூரி மருத்துவமனை

வினா எண் 4432—செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—*

(அ) திண்டுக்கல்லில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதனடிப்படையில், ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. திண்டுக்கல்லில் அரசு மருத்துவக் கல்லூரி

2015 செப்டம்பர் 29]

தொடங்குவதற்காக அரசு ஆணை (நிலை) எண் 62, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எம்சிஏ 1) துறை, நாள் 17–2–2011 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு, மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின் அடிப்படையிலும், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும், திண்டுக்கல்லில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்காக வெளியிடப்பட்டுள்ள ஆணையின்மீதும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படாமல் உள்ள இதர மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்தும் பரிசீலிக்கப்படும்.

153—

அவசர ஊர்தி

வினா எண் 4467—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைப் பகுதியில் 108 அவசரகால ஊர்திகள் இலவசமாகச் செயல்பட்டு வருவதால் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு அவசரகால ஊர்தி வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

154—

வயது வரம்பினை நீக்குதல்

வினா எண் 4471—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) அரசு மருத்துவமனைகளில் மருந்தாளுநர் நியமனத்திற்குத் தற்போதுள்ள வயது வரம்பினை நீக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (2டி) எண் 55, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 6–7–2012–ன்படி, மருந்தாளுநர் பணி நியமனத்திற்கு இருந்த உச்ச வயது வரம்பினை ஒருமுறைச் சலுகையாக 6–7–2012 முதல் ஐந்து ஆண்டுக் காலம் வரை நீக்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

155—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 4525—திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், குஜிலியம்பாறை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

2015 செப்டம்பர் 29]

156—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 4526—திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, கூவாக்காபட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், கூவாக்காபட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

157—

மருந்துவமனையைத் திறத்தல்

வினா எண் 4570—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காட்டுமன்னார்கோவில் தொகுதி, இலால்பேட்டை பேரூராட்சி, குமராட்சி ஒன்றிய மருந்தக மருத்துவமனையை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்

பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இலால்பேட்டை ஊராட்சி, குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,43,785. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், இலால்பேட்டை பேரூராட்சியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் முறையே எள்ளேரி ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதாலும், இலால்பேட்டை பேரூராட்சியில் செயல்பட்டு வந்த ஊராட்சி ஒன்றிய மருந்தக மருத்துவமனையை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

158—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5397—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, எஸ்.கொடிகுளம் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. எஸ்.கொடிகுளம் கிராமம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின்

2015 செப்டம்பர் 29]

மக்கள்தொகை 1,16,239. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், எஸ்.கொடிகுளம் கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதாலும் எஸ்.கொடிகுளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

159—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 5417—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதனடிப்படையில், ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. திண்டுக்கல்லில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்காக அரசு ஆணை (நிலை) எண் 62, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எம்சிஏ 1) துறை, நாள் 17–2–2011-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு, மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின் அடிப்படையிலும், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும், திண்டுக்கல்லில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்காக வெளியிடப்பட்டுள்ள ஆணையின்மீதும் மருத்துவக் கல்லூரி

அமைக்கப்படாமல் உள்ள இதர மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்தும் பரிசீலிக்கப்படும்.

160—

மருத்துவமனையாகத் தரமுயர்த்துதல்

வினா எண் 5435—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், அமராவதிநகர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. அமராவதிநகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில், எரிசனம்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அமராவதிநகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

161—

பணி நியமனம்

வினா எண் 5451—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாக மருத்துவர் மற்றும் செவிலியரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு 6 தலைமை குடிமை மருத்துவர் பணியிடம், 7 முதுநிலை குடிமை மருத்துவர் பணியிடம், 7 உதவி மருத்துவர் பணியிடம் ஆகியவை நிரப்பப்பட்டு, மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 23 நிரந்தரச் செவிலியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு செவிலியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், ஒப்பந்த அடிப்படையில் 8 செவிலியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அதில் 3 செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

162—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 5460—திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா அரசு புற்றுநோய் மருத்துவமனையைத் தரம் உயர்த்தவும், அதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவுப் புற்றுநோய் மருத்துவமனையை மேம்படுத்துவதற்காக தேசிய புற்றுநோய் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் மத்திய அரசின் மூலமாகவும் மற்றும்

மாநில அரசின் மூலமாகவும் நிதி ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்தின் மூலமாக உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, நிறுவப்பட்டு, மக்களின் பயன்பாட்டில் உள்ளன.

163—

ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்

வினா எண் 5480—திரு. பொன். ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சி பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் பணியை விரைவாக தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி ஊராட்சி ஒன்றியத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. ஆரணி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட தேசிய ஊரக நல நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு கட்டடப் பணிகள் முடிவடைந்து 28-2-2014 முதல் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

164—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 5517—திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பொது மருத்துவமனையை அனைத்து வசதிகளும் கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனை 56 படுக்கை வசதிகளுடன் மாவட்ட தலைமை மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில், நாளொன்றுக்கு சராசரியாக வெளிநோயாளிகள் 750 நபர்களும், உள்நோயாளிகள் 50 நபர்களும் சிகிச்சை பெறுகின்றனர். மேலும், மாதம் ஒன்றிற்கு சராசரியாக 22 பெரிய அறுவை சிகிச்சைகளும், 10 பிரசவங்களும், 23,439 ஆய்வக பரிசோதனைகளும் நடைபெறுகின்றன. இங்கு உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையைவிட சிகிச்சை பெறும் உள்நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலும், தேவையான அளவிற்கு புதிய கூடுதல் கட்டடங்கள் கட்டி பயன்பாட்டில் உள்ளதாலும், போதுமான அனைத்து வசதிகளுடன் இயங்கி வருவதாலும், குறைந்த மருத்துவமனை பயன்பாடு உள்ளதாலும், இம்மருத்துவமனைக்கு மேலும் வசதிகள் செய்ய வேண்டிய சாத்தியக்கூறு ஏதும் தற்போது எழவில்லை.

165—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5524—திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆற்காடு தொகுதி காவனூரை மையமாக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்களுக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவப்பட்டு வருகின்றது.

[2015 செப்டம்பர் 29

காவனூர் கிராமம் திமிரி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. திமிரி ஊராட்சி ஒன்றியத்தில், மாம்பாக்கம், வளையாத்தூர், திமிரி, விளாம்பாக்கம் ஆகிய நான்கு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இரு சுகாதார நிலையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். காவனூர் கிராமத்திற்கும், விளாப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் ஆறு கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், காவனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

166—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 6200—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரத்தில் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதனடிப்படையில் ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. இராமநாதபுரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்காக அரசு ஆணை (நிலை) எண் 60, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. நாள் 17-2-2011–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 2013-2014 கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் மருத்துவக் கல்லூரி

துவக்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின் அடிப்படையிலும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் இராமநாதபுரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்காக வெளியிடப்பட்டுள்ள ஆணையின் மீதும், மருத்துவக் கல்லூரி அமைக்கப்படாமல் உள்ள இதர மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்தும் பரிசீலிக்கப்படும்.

167—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6231—திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கவுண்டம்பாளையம் தொகுதி, எஸ்.எஸ்.குளம் ஒன்றியம், விளாங்குறிச்சி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. விளாங்குறிச்சி கிராமம், சர்க்கார்சாமகுளம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இக்கிராமத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில் சர்க்கார்சாமகுளம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால் விளாங்குறிச்சி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

168—

அவசர சிகிச்சைப் பிரிவு

வினா எண் 6233—திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் பகுதி ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் சுகாதார மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து முறையே பத்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருப்பூர் மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் அவிநாசி அரசு மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருவதால், பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் அவசியம் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

169—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6757—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தாரமங்கலம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் அரசு ஆணை (நிலை) எண் 303, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை,

2015 செப்டம்பர் 29]

நாள் 28-11-2011-ன்படி, தரம் உயர்த்தப்பட்டு 30 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

170—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6758—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, வடுகப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், சங்கரி ஊராட்சி ஒன்றியம், வடுகப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி, அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

171—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6803—திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, சேந்தநாடு கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம், சேந்தநாடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்கப்பட்டு 24-1-2012 முதல் செயல்பட்டு வருகின்றது.

TRUTH ALONE TRIUMPHS

172—

மூலிகைப் பண்ணை

வினா எண் 6811—திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் மூலிகைப் பண்ணை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

173—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6817—திரு. கு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, குன்னூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. குன்னூர் கிராமம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்

2015 செப்டம்பர் 29]

தொகை 1,31,909. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதால், குன்னூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

174—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6624—திருமதி ம. சக்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி 24 மணி நேரமும் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

175—

சித்த மருத்துவமனை

வினா எண் 7074—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், மங்கலம் ஊராட்சியிலுள்ள சித்தா மருத்துவமனையை செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து ஏற்கப்பட வேண்டிய இந்திய மருத்துவப் பிரிவுகள் தொடர்பாக, துறைகள் அளவில் கலந்தாய்வு செய்யப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த இத்துறையில், ஏற்கத்தக்க வகையில் இருந்த 64 ஊராட்சி மருந்தகங்கள் மட்டும் இத்துறையில் ஏற்கப்பட்டன. இந்த 64 ஊராட்சி மருந்தகங்கள் பட்டியலில் விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், மங்கலம் ஊராட்சி சித்த மருத்துவப் பிரிவு இடம் பெறவில்லை. எனவே, அவ்வமயம் விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், மங்கலம் ஊராட்சி சித்த மருத்துவப் பிரிவு இத்துறையில் ஏற்கக் கூடிய தகுதிகள் இல்லாமல் இருந்ததால் ஏற்கப்படவில்லை. இத்துறையில் ஏற்கப்பட்ட 64 பிரிவுகள் தவிர, வேறு பிரிவுகள் ஏதும் இருக்குமானால் அவற்றையும் இத்துறையின்கீழ் ஈர்த்துக் கொள்வதற்கான கருத்துரு பெறப்படின் அரசால் பரிசீலிக்கப்படும்.

176—

போதிய மருந்துகள் வழங்குதல்

வினா எண் 7250—திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கம் தொகுதி, அரட்டவாடி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு போதிய மருந்துகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை சுகாதார மாவட்டத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள செங்கம் தொகுதியில் அரட்டவாடி ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. சுகாதார நிலையங்களின் செயல்திறன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு

2015 செப்டம்பர் 29]

செய்யப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து மருந்துகளும் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் வாயிலாக வழங்கப்படுகின்றன.

177—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7251—திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, சின்னபிஞ்சூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. சின்னபிஞ்சூர் கிராமம், செங்கம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,46,623. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், சின்னபிஞ்சூர் கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் அரட்டவாடி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும் சின்னபிஞ்சூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

178—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7252—திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், குப்பாநத்தம் டேம் அருகே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. குப்பநத்தம் கிராமம், செங்கம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,46,623. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப, அங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், குப்பநத்தம் கிராமத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் பரமனந்தல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும் குப்பநத்தம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

179—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 7263—திரு. அ. பாப்பாசுந்தரம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளித்தலை வட்டம், நங்கவரம் கிராமத்திலுள்ள ஒன்றிய மருத்துவமனையை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும்

2015 செப்டம்பர் 29]

மலைப்பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றன. நங்கவரம் கிராமம், குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 91,295. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், நங்கவரம் கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் பெருகுமணி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால் நங்கவரம் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

181—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7459—திருமதி ம. சக்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருநன்றியூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. திருநன்றியூர் கிராமம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,98,407. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப

விடுப்பட்ட வினா எண் 180-இதற்கான விளக்கத்தினை பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

அங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், திருநன்றியூர் கிராமத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையும் மற்றும் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் வைதீஸ்வரன்கோவில் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், திருநன்றியூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

182—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7470—திரு. கே.பி. நாகராஜன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மைலம் தொகுதி, வெள்ளிமேடுபேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம், வெள்ளிமேடுபேட்டை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டு 13–02–2013 முதல் செயல்பட்டு வருகின்றது.

183—

மருத்துவமனையை நவீனப்படுத்துதல்

வினா எண் 7659—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(இ) சிவகங்கை சுகாதாரப் பகுதி மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பூவந்தி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

184—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 7680—திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வந்தவாசி தொகுதி, தெள்ளாறு மருத்துவமனையை வட்டார தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, செய்யாறு சுகாதார மாவட்டம், தெள்ளாறு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகும். இப்பகுதியின் மக்கள் தொகை, 17,562 ஆகும். மேலும், இவ்வாரம்ப சுகாதார நிலையத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 145 வெளிநோயாளிகளும் 2 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகிறார்கள். ஒரு மாதத்திற்கு சராசரியாக 22 பிரசவம் நடைபெறுகிறது. மேலும், ஒப்பளிப்பு செய்யப்பட்ட படுக்கை எண்ணிக்கையை விட நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளதால் தெள்ளாறு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2015 செப்டம்பர் 29

நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

185—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 7681—திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வந்தவாசி தொகுதி, குன்னகம்பூண்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. குன்னகம்பூண்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தெள்ளாறு ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில், தெள்ளாறு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குன்னகம்பூண்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

186—

மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

வினா எண் 7683—திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) வந்தவாசி தொகுதி, நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. நல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தெள்ளாறு ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. தெள்ளாறு ஊராட்சி ஒன்றியத்தில், தெள்ளாறு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தும் சாத்திய கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

187—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7920—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி ஒன்றியம், பாணான் குளத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், பாணான்குளம் கிராமத்தில் துணை சுகாதார நிலையத்தில்,

[2015 செப்டம்பர் 29

தாய்சேய் நலப்பணிகள், தடுப்பூசிப் பணிகள், குடும்ப நலப்பணிகள் மற்றும் சிறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் ஆகிய பணிகள் கிராம சுகாதார செவிலியர்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

188—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 8004—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி அரசு மருத்துவமனையை 250 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அரசு மருத்துவமனை 105 படுக்கைகள் வசதி கொண்ட வட்ட மருத்துவமனையாகும். தற்போது, தினமும் சராசரியாக 740 வெளிநோயாளிகளும், 80 உள்நோயாளிகளும் சிகிச்சைப்பெற்று வருகின்றனர். மாதம் ஒன்றிற்கு சராசரியாக, 100 பெரிய அறுவை சிகிச்சைகளும், 110 பிரசவங்களும் மற்றும் 60 சிசேரியன்களும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவை அரங்கம், மகப்பேறு பிரிவு, குழந்தைகள் நலப் பிரிவு, கண் மருத்துவம் போன்ற பிரிவுகளும் மற்றும் அனைத்து வசதிகள் உள்ளன. இம்மருத்துவமனையில் அனைத்து பகுதிகளிலும் குடிநீர் வசதி உள்ளது.

மேற்படி மருத்துவமனை பயன்பாட்டின் அடிப்படையில் 42 படுக்கை வசதிகளிலிருந்து கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு மேம்படுத்தப்பட்டு 105 படுக்கை வசதிகளுடன் சிறப்பாக

2015 செப்டம்பர் 29]

செயல்பட்டு வருகிறது. ஒப்பளிக்கப்பட்ட படுக்கைகளைவிட, குறைந்த அளவு உள்நோயாளிகளே சிகிச்சை பெறுவதால் மேலும் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

189—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 8300—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி வட்டம், கோனேரிப்பட்டி அக்ரஹாரம், பொன்னம்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. பொன்னம்பாளையம் கிராமம், சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,28,577. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், பொன்னம்பாளையம் கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அரசிராமணி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும் பொன்னம்பாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2015 செப்டம்பர் 29

190—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 8351—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், கீழநெட்டூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. கீழநெட்டூர் கிராமம், இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,11,323. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப, அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், கீழநெட்டூர் கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் முனைவென்றி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், கீழநெட்டூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

193—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 8908—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

விடுப்பட்ட வினா எண்கள் 191,192-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

(அ) சங்ககிரி தொகுதி, தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி, புட்டமனை மலங்காடு பகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. புட்டமனை மலங்காடு கிராமம், சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,29,702. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், புட்டமனை மலங்காடு கிராமத்திலிருந்து, ஆறு கிலோ மீட்டர் தொலைவில் அரசிராமணி ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் எடப்பாடி அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதாலும் புட்டமனை மலங்காடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

194—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 8913—திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாயனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப்பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியும் உள்ளது. மாயனூர் கிராமம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,29,341. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப அங்கு செயல்பட்டு வரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதால், மாயனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

195—

பிரேத பரிசோதனைக் கூடம்

வினா எண் 8920—திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரேத பரிசோதனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மட்டுமே பிரேத பரிசோதனை செய்யப்படுகிறது.

எனவே, குறிஞ்சிபாறை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரேத பரிசோதனைக் கூடம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

196—

நடமாடும் மருத்துவமனைத் திட்டம்

வினா எண் 9166—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பாலமலைப்பகுதியிலுள்ள மலைவாழ் மக்களுக்கு நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தின்மூலம் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஆரம்ப சுகாதார நிலைய நடமாடும் மருத்துவக் குழுவின்மூலம் பாலமலை மலைவாழ் மக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

197—

சிறப்பு மருத்துவமனை

வினா எண் 9170—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை இராஜாஜி மருத்துவமனையில் சிறப்பு மருத்துவமனை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மருத்துவக்கல்லூரி/அரசு இராஜாஜி மருத்துவமனையினை பிரதான் மந்திரி ஸ்வஸ்த்ய சுரக்ஷா யோஜனா என்ற திட்டத்தின்கீழே, அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்திற்கு இணையாக தரம் உயர்த்துவதற்கான நிருவாக ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அதற்கான கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

198—

நடமாடும் மருத்துவமனை

வினா எண் 9172—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், சின்னதண்டாவிலுள்ள லம்பாடி இன மலைவாழ் மக்களுக்கு நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தின்மூலம் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள 20 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களை தலைமையிடமாகக் கொண்டு நடமாடும் மருத்துவக்குழு செயல்பட்டு வருகிறது. மேட்டூர் வட்டம், சின்னதண்டாவிலுள்ள லம்பாடி இன மலைவாழ் மக்களுக்கு இந்நடமாடும் மருத்துவக்குழுமூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

2015 செப்டம்பர் 29]

199—

நடமாடும் மருத்துவமனை

வினா எண் 9178—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதியிலுள்ள மக்களுக்கு நடமாடும் மருத்துவமனைமூலம் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதியிலுள்ள மக்களுக்கு நடமாடும் மருத்துவமனைமூலம் மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

200—

நடமாடும் மருத்துவமனை

வினா எண் 9179—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், சித்தேரி மலைப் பகுதி மக்களுக்கு நடமாடும் மருத்துவமனைமூலம் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவக் குழு செயல்பட்டு

வருகின்றது. தருமபுரி மாவட்டம், சித்தேரி மலைப் பகுதியில் நடமாடும் மருத்துவக் குழு மூலமாகவும், சினேகசதன் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலமாகவும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

(பேரவைக் கூட்டத் தொடர் முடியும் வரை தொடர்புடைய உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று தற்காலிக நீக்கம் செய்யப்பெற்றுள்ளதால் வரிசை எண்கள் 1, 13, 17, 38, 81, 93, 94, 121, 131, 133, 144, 145, 146, 148, 150, 180, 191, 192 தொடர்புடைய வினாக்கள்—விடைகள் இப்பட்டியலில் இடம்பெறவில்லை)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

பட்டியல் 22

1—

சேவைகளை விளம்பரப்படுத்துதல்

வினா எண் 9185—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் சேவைகளை விளம்பரப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, கிண்டி நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் சேவைகளை பத்திரிகைச் செய்திகள், ஊடகம் மற்றும் இணையதளங்களில் செய்திகளை வெளியிடுவதன் மூலம் தனது சேவைகளை ஏற்கெனவே விளம்பரப்படுத்தி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது.

2—

மின்தூக்கி அமைத்தல்

வினா எண் 9187—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் முடநீக்கியல் துறையில் ஒரு மின்தூக்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள முடநீக்கியல் துறையில், பழுதடைந்த மின்தூக்கியை மாற்றி, புதிய மின்தூக்கி அமைக்க ஏதுவாக 2011–2012 ஆம் ஆண்டின் பகுதி–2 திட்டத்தின்கீழ் ரூ.26.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் மின்தூக்கி நிறுவப்பட்டு, தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, மேலும் ஒரு மின்தூக்கி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

3—

மின்தூக்கி அமைத்தல்

வினா எண் 9188—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை சேப்பாக்கம் அரசினர் தாய்–சேய் நல மருத்துவமனையில் ஒரு மின்தூக்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, சேப்பாக்கம், சமூக மகப்பேறியல் நிலையம் மற்றும் அரசினர் கஸ்தூரிபா காந்தி தாய்–சேய் நல மருத்துவமனையில் நான்கு மின்தூக்கிகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. இந்த நான்கு மின்தூக்கிகளும் பொதுப் பணித் துறையினரால் பராமரிக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. எனவே, மேலும் ஒரு மின்தூக்கி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2015 செப்டம்பர் 29]

4—

மாணவர் விடுதி

வினா எண் 9189—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசு பல் மருத்துவமனையில் முதுகலை பட்ட மேற்படிப்பு மாணவர் கட்டடத்தில் ஆண்களுக்கான விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் முதுகலை பட்ட மேற்படிப்பு மாணவர் (ஆண்களுக்கான) விடுதி கட்டுவதற்கு அரசாணை எண் 172, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 18-7-2011-ல் ரூ.2.40 கோடி நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, 29-5-2013 முதல் பயன்பாட்டில் உள்ளது.

5—

கூடுதல் கட்டடம்

வினா எண் 9190—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவமனையிலுள்ள சிறுநீரகவியல் துறையில் விபத்து மற்றும் இயற்பியல் பிரிவில் கூடுதல் தளங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் உள்ள சிறுநீரகவியல் துறையில் விபத்து மற்றும் இயற்பியல் பிரிவில் கூடுதல் தளங்கள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 174, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 18–7–2011–ல் ரூ.4.35 கோடி நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, 16–7–2013 முதல் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

6—

கூடுதல் கட்டடம்

வினா எண் 9191—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகக் கட்டடத்தில் இரண்டாம் தளம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகக் கட்டடத்தில் இரண்டாம் தளம் கட்டுவதற்காக அரசாணை (நிலை) எண் 173, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 18-7-2011–ல் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, 13-9-2014 முதல் அலுவலகப் பயன்பாட்டில் உள்ளது.

2015 செப்டம்பர் 29]

7—

மருத்துவமனைக் கட்டடத்தைப் புதுப்பித்தல்

வினா எண் 9193—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, சேத்துப்பட்டிலுள்ள அரசு நெஞ்சக மருத்துவமனை கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?.

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஆண்டும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் பல்வேறு மருத்துவ நிலையங்களில் உள்ள கட்டடங்களைப் பராமரிக்கவும், பழுதுபார்க்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதனடிப்படையில் சேத்துப்பட்டில் உள்ள அரசு நெஞ்சக மருத்துவமனைக்குக் கட்டடப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பிற்கென ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8—

காசநோய் தடுக்க விளம்பரம்

வினா எண் 9194—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காசநோயைத் தடுக்க போதுமான விளம்பரங்கள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காசநோயைத் தடுக்க தமிழக அரசின் முயற்சியால் வருடம் முழுவதும் மாவட்டந்தோறும் காசநோய் விழிப்புணர்வு கூட்டங்கள், பள்ளிக் கல்லூரி விழிப்புணர்வு கூட்டங்கள், காசநோயாளிகள்-டாட்ஸ் தருபவர் கலந்துரையாடல் கூட்டங்கள், வானொலி விளம்பரங்கள், தொலைக்காட்சி விளம்பரங்கள், காசநோய் குறித்த பொருட்காட்சி, காசநோய் தடுப்பு வாரம் மற்றும் உலக காசநோய் தினம் மார்ச் 24 ஆகிய விளம்பரப் பணிகள் காசநோய்க்காக செய்யப்பட்டு வருகிறது.

9—

காசநோய்க்கான சிகிச்சை

வினா எண் 9196—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கூட்டு மருந்துக்குக் கட்டுப்படாத புதுவகை காசநோய்க்கான சிகிச்சையை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கூட்டு மருந்துக்குக் கட்டுப்படாத புதுவகை காசநோய்க்கான சிகிச்சை அனைத்து மாவட்டங்களிலும் 2009 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 2,625 கூட்டு மருந்துக்குக் கட்டுப்படாத புதுவகை காசநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

10—

உணவு பகுப்பாய்வுக் கூடம்

வினா எண் 9882—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) கோயம்புத்தூர் மாவட்ட உணவுப் பகுப்பாய்வுக் கூடத்தை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உணவு பகுப்பாய்வுக் கூடங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.5,99,50,000/– (ரூபாய் ஐந்து கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்து அரசு ஆணை (நிலை) எண் 101, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 16–3–2012–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி நிதியிலிருந்து கோயம்புத்தூர் மாவட்ட உணவு பகுப்பாய்வுக் கூடத்திற்கு உபகரணங்கள் வாங்கி நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

11—

உணவு பகுப்பாய்வுக் கூடம்

வினா எண் 9863—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்ட உணவுப் பகுப்பாய்வுக் கூடத்தை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உணவு பகுப்பாய்வுக் கூடங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்க ரூ.5.99 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி நிதியிலிருந்து சேலம் மாவட்ட உணவு பகுப்பாய்வுக் கூடத்திற்கு உபகரணங்கள் வாங்கி நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

[2015 செப்டம்பர் 29

12—

உணவு பகுப்பாய்வுக் கூடம்

வினா எண் 9884—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை மாவட்ட உணவுப் பகுப்பாய்வுக் கூடத்தை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உணவு பகுப்பாய்வுக் கூடங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்க ரூ.5,99,50,000/- (ரூபாய் ஐந்து கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்து அரசு ஆணை (நிலை) எண் 101, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள் 16-3-2012-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி நிதியிலிருந்து மதுரை மாவட்ட உணவுப் பகுப்பாய்வுக் கூடத்திற்கு உபகரணங்கள் வாங்கி நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

13—

உணவுப் பகுப்பாய்வுக் கூடம்

வினா எண் 9885—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் உணவுப் பகுப்பாய்வுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் ஒரு உணவு பகுப்பாய்வுக் கூடம் தற்போது இயங்கி வருகிறது. எனவே, தென்காசியில் உணவுப் பகுப்பாய்வுக் கூடம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

14—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 9912—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், விஜயன்குடியில் இளை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 2,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், துணை சுகாதார நிலையம் அமைக்கப்படவேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. விஜயன்குடி கிராமத்தின் மக்கள் தொகை 5,000–க்குக் குறைவாக இருப்பதால், விஜயன்குடி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

15—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 10992—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், சின்னபள்ளிகுப்பம் கிராமத்தில் தாய்-சேய் நல விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 2,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. சின்னபள்ளிகுப்பம் கிராமம் மாதனூர் ஒன்றியத்தினைச் சார்ந்தது. சின்னபள்ளிகுப்பம் கிராமத்தின் மக்கள் தொகை 5,000-க்குக் குறைவாக இருப்பதாலும், சின்னபள்ளிகுப்பம் கிராமத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் அரிமலை துணை சுகாதார நிலையமும், எட்டு கிலோ மீட்டர் தொலைவில் மராட்டிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், சின்னபள்ளிகுப்பம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் தாய்-சேய் நல விடுதி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

16—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11011—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) அண்டநல்லூர் வட்டம், பெட்டவாய்த்தலை ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருச்சி சுகாதார மாவட்டம், அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம், பெட்டவாய்த்தலை புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்கப்பட்டு, தற்போது தரம் உயர்த்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

17—

நடமாடும் புலனாய்வுக் குழு

வினா எண் 11015—திரு. ஏ. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரமற்ற மருந்துகள் குறித்து ஆய்வு செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும் நடமாடும் புலனாய்வுக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்மாவட்டங்களுக்கு மதுரையை தலைமையிடமாகக் கொண்டும், வட மாவட்டங்களுக்கு சென்னையை தலைமையிடமாகக் கொண்டும், இரு புலனாய்வுப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகம் என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு,

புலனாய்வுப் பிரிவில் பணிபுரிய கூடுதலாக 3 மருந்து ஆய்வாளர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, தற்போதைய நிலையில் தரமற்ற மருந்துகள் குறித்து ஆய்வு செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாக நடமாடும் புலனாய்வுக் குழு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

18—

புகையிலை கட்டுப்பாடு திட்டம்

வினா எண் 11191—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புகையிலை கட்டுப்பாடு திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 'மாநில புகையிலை கட்டுப்பாட்டு மையம்' பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறையின்கீழ் செயல்படுகிறது. 'தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டம்' 2003 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மையம்' அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டு, அந்தந்த மாவட்டங்களில் துணை இயக்குநர், சுகாதார நலப் பணிகள் அவர்களின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது. அந்த மையத்தின் மூலமாக புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

19—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11613—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாகளுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) அந்தியூர் தொகுதி, வெள்ளிதிருப்பூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றது. வெள்ளிதிருப்பூர் கிராமம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,24,457. அவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், வெள்ளிதிருப்பூர் கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் ஆலம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், வெள்ளிதிருப்பூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

20—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11614—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர் தொகுதி, சென்னம்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இடையே

குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,24,457 ஆகும். மக்கள் தொகைக்கேற்ப அங்கு நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, சென்னம்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வரும் நிலையில் ஆரம்ப சுகாதார நிலையம் துவங்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

21—

இன்சுலின் ஊசி மருந்து

வினா எண் 11619—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மலைவாழ் செட்டில்மெண்ட் பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இன்சுலின் ஊசி மருந்துகளை இலவசமாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் வாயிலாக இன்சுலின் உள்ளிட்ட மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

22—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 13031—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) ஆம்பூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், மேலகுப்பம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. மேல்குப்பம் கிராமம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,39,895. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டு வரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், மேல்குப்பம் கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் வாணியம்பாடி அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதாலும், மேல்குப்பம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

23—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 13213—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றியம், மேல்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. மேல்குப்பம் கிராமம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. ஆலங்காயத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், மேல்குப்பம் கிராமத்திற்கும் ஆலங்காயம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 8 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், மேல்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

24—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 13214—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு ஒன்றியம், வெங்கடசமுத்திரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. வெங்கடசமுத்திரம் கிராமம், பேர்ணாம்பட்டு ஊராட்சி

ஒன்றியத்தினை சார்ந்தது. வெங்கடசமுத்திரத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும் இக்கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் நரியம்பட்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் 6 கிலோ மீட்டர் தொலைவில் ஆம்பூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றது. எனவே, வெங்கடசமுத்திரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் துவங்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

33—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 14091—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதனடிப்படையில் ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. 2013–2014 ஆம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின் அடிப்படையிலும், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படாமல் உள்ள இதர மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்து பரிசீலிக்கப்படும். தற்சமயம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைத்திடும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

விடுப்பட்ட வினா எண்கள் 25,26,27,28,29,30,31,32-இவற்றிற்கான விளக்கத்தினை பக்கம் 994-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

[2015 செப்டம்பர் 29

34—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 14390—திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராஜபாளையம் தொகுதியில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதனடிப்படையில் ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. 2013–2014 ஆம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின் அடிப்படையிலும், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படாமல் உள்ள இதர மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

35—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 14391—திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராஜபாளையம் அரசு மகப்பேறு மருத்துவமனையை நவீன வசதியுடன் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் அரசு மருத்துவமனை 164 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனைக்கு வடமேற்கு பகுதியில் மகப்பேறு மருத்துவமனை உள்ளது. இது 24 மணி நேர ஒருங்கிணைந்த அவசரகால தாய்-சேய் நல மையமாக இயங்கி வருகிறது. மேலும், தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்கீழ் மகப்பேறு மருத்துவப் பிரிவு 48 படுக்கை வசதிகளுடன் ரூ.158.54 இலட்சம் செலவில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், அம்மருத்துவமனைக்குத் தேவையான ஸ்கேன் இயந்திரம் மற்றும் குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கு, எக்ஸ்ரே இயந்திரம் ஆகிய சகல வசதிகளுடன்கூடிய தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனையாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, மேலும் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

36—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 14393—திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராஜபாளையம் தொகுதி, ஜமீன்கொல்லங்கொண்டான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், ஜமீன்கொல்லங்கொண்டான் பிரதான ஆரம்ப சுகாதர நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

37—

புதிய கட்டடம்

வினா எண் 14398—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, வள்ளுவக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்தில் வள்ளுவக்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ளது. வள்ளுவக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.11.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து 2011 ஆம் ஆண்டு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு வீடியோ கான்பிரன்ஸ்மூலம் திறக்கப்பட்டது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

38—

மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

வினா எண் 14975—திரு. ஆர். சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேலூர் தொகுதி, தெற்குத் தெரு, சேக்குப்பட்டி, கிழவளவு மற்றும் திருவாதவூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலூர் தொகுதிக்குட்பட்ட தெற்குத் தெரு, சேக்குப்பட்டி, கீழவளவு மற்றும் திருவாதவூர் ஆகிய நான்கு ஊர்களிலும் மக்கள் தொகை 30,000–க்குக் குறைவாகவே உள்ளது. மேற்படி நான்கு ஊர்களிலும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இவற்றில் சிகிச்சைக்கு வரும் வெளிநோயாளிகளின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, தற்போது மேற்படி அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த அவசியம் இல்லை.

39—

மருத்துவர் நியமனம்

வினா எண் 14976—திரு. ஆர். சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, மேலூர் மற்றும் கொட்டாம்பட்டியில் உள்ள அரசு மருத்துவமனைகளில் கூடுதல் மருத்துவர்களை நியமனம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மேலூர் தொகுதி, மேலூர் அரசு மருத்துவமனை 108 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 1,200 புறநோயாளிகளும், 102 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர் மற்றும் இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சுமார் 60 பிரசவங்களும் நடைபெறுகின்றன.

மேற்கண்ட மருத்துவமனையின் செயல்பாட்டினையும் உள் மற்றும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கையையும் கருத்திற்கொண்டும் மருத்துவர்கள் மறுசீரமைப்பின்படியும் கூடுதலாக ஒரு மருத்துவர் பணியிடம் ஒப்பளிக்கப்பட்டு, தற்போது இம்மருத்துவமனையில் 20 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது ஒப்பளிக்கப்பட்டு பணியில் உள்ள மருத்துவர்கள் மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்கள் போதுமான அளவில் உள்ளனர்.

40—

கூடுதல் மருந்து பொருட்கள்

வினா எண் 14977—திரு. ஆர். சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

மேலூர் தொகுதி, வெள்ளலூர், தெற்குத் தெரு, திருவாதவூர், கொட்டகுடி, சேக்கிப்பட்டி மற்றும் கிழவளவு பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் மருந்து பொருட்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மதுரை சுகாதார மாவட்டத்தின்கீழ் வெள்ளலூர், தெற்குத் தெரு திருவாதவூர், கொட்டக்குடி, சேக்கிப்பட்டி மற்றும் கிழவளவு ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஆண்டுதோறும் பயன்பெறும் உள்/வெளி நோயாளிகளின் தேவைக்கேற்ப மருந்துகளுக்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அவ்வாறு 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் நிதியாண்டுகளுக்கான நிதி ஒதுக்கீடு பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29]

வ. எண்	ஆரம்ப சுகாதார நிலையம்	2013–2014 (ரூ.)	2014–2015 (ரூ.)
1.	வெள்ளலூர்	2,20,000	2,00,000
2.	தெற்குத்தெரு	1,20,000	1,20,000
3.	திருவாதவூர்	1,50,000	1,50,000
4.	சாத்தன்குடி	1,20,000	1,20,000
5.	சேக்கிப்பட்டி	1,30,000	1,40,000
6.	கீழவளவு	1,30,000	1,40,000

எனவே, கூடுதல் மருந்துப் பொருட்கள் வழங்கும் அவசியம் எழவில்லை.

41—

கூடுதல் வசதிகள்

வினா எண் 14998—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை சித்தா பிரிவில் புதிதாக கட்டில்கள் மற்றும் மெத்தைகள் வழங்கவும், மின்னாக்கி அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், அரசினர் தலைமை மருத்துவமனை சித்தா பிரிவிற்கான 15 படுக்கைகள் கொண்ட உள் நோயாளிகள் பிரிவிற்கு 10 கட்டில்கள் வழங்கப்பட்டு, தற்போது நோயாளிகளின் நலனுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள பழுதான கட்டில்களுக்கு பதிலாக புதிய கட்டில்கள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்திலேயே சித்த மருத்துவப் பிரிவு செயல்படுவதால் தனியாக இந்திய முறை பிரிவுகளுக்கு மின்னாக்கி வழங்க இயலாது.

42—

ஆயுர்வேதக் கல்லூரி

வினா எண். 15201—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகர்கோவில் ஆயுர்வேதக் கல்லூரியை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோட்டாரில் அமைந்துள்ள அரசு ஆயுர்வேதா கல்லூரி, சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய ஆணையின்படி, 12—3—2012 பிற்பகல் முதல் பட்டப் படிப்பு முதலாம் ஆண்டு வகுப்புகள் துவக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

43—

மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 15236—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி நகராட்சி, வாலியன் பொத்தையில் அரசு மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி நகராட்சியில் வாலியன் பொத்தையிலிருந்து 2 கி.மீ. தொலைவில் தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையும், 8 கி.மீ. தொலைவில்

2015 செப்டம்பர் 29]

செங்கோட்டை தாலுகா மருத்துவமனையும் அமைந்துள்ளதால், வாலியன் பொத்தையில் அரசு மருத்துவமனை துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பல்நோக்கு சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளுடன் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது.

44—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 15942—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, சோழபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. சோழபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் பட்டீஸ்வரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சோழபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 16883—திரு. சு. ரவி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, தணிகைப்போளூர் கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 29

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. தணிகைப்போளூர் கிராமம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. தணிகைப்போளூர் கிராமத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிற்குள் அரக்கோணம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும், அரக்கோணம் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால் தணிகைப்போளூர் கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

46—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 16922—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மேலநெட்டூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. மேலநெட்டூர் கிராமம், மானாமதுரை

ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. மேலநெட்டூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. மேலும், இக்கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் முனைவென்றி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. எனவே, மேலநெட்டூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

47—

24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 16924—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியம், பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேர பிரசவ சேவையுடன் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகவும் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

48—

மருத்துவமனை சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 17056—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

11-335—31b

[2015 செப்டம்பர் 29

(அ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தல் அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடமும் சுற்றுச் சுவரும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) முத்தனேந்தல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2011–2012 ஆம் நிதியாண்டில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்மூலம் (NRHM) ரூ.6.50 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டு நோயாளிகள் காத்திருப்புக்கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது மற்றும் ரூ.9.60 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டு, (NRHM) பிரசவப் பின் கவனிப்புப் பிரிவுக் கட்டடம் பொதுப் பணித் துறைமூலம் கட்டி முடிக்கப்பட்டு, 13-9-2013 முதல் பயன்பாட்டில் உள்ளது. முத்தனேந்தல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முன்பக்கம் (வடக்கு தெற்கு) சுற்றுச் சுவர் இருந்த நிலையில் மற்றப் பக்கங்களில் சுற்றுச் சுவர் 2013–2014 ஆம் ஆண்டு பழுதுபார்ப்புப் பராமரிப்புப் பணிகளுக்கு அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் ரூ.27.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

49—

கூடுதல் கட்டடம்

வினா எண் 17059—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் சமூக நல மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை சுகாதாரப் பகுதி மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் திருப்புவனம் சமுதாய நல மையம் 20 படுக்கைகள் உடன் 24 மணி நேர சேவை மையமாக உள்ளது. ரூ.6.60 இலட்சம் செலவில் செவிலியர் குடியிருப்பும், ரூ.13.20 இலட்சம் செலவில் அறுவை அரங்கக் கட்டடமும், ரூ.9.60 இலட்சம் செலவில் பிரசவ பின் கவனிப்பு அறையும் விரிவாக்கம் செய்து தற்போது பயன்பாட்டில் உள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

51—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 17246—திரு. சு. ரவி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், முள்வாய் ஊராட்சி, முள்வாய் கிராமத்தை மையமாகக் கொண்டு ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற நியதியில் துணை சுகாதார நிலையம் நிறுவப்பட்டு வருகிறது. முள்வாய் கிராம மக்கள் தொகை 1,200. முள்வாய் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் கீழ்ப்பாக்கம் துணை சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் மூதூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், முள்வாய் கிராம மக்கள் தொகை குறைவாக இருப்பதாலும்,

விடுபட்ட வினா எண் 50-இதற்கான விளக்கத்தினை பக்கம் 994ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

முள்வாய் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

52—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 17247—திரு. சு. ரவி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சிறுணமல்லி ஊராட்சியை மையமாகக் கொண்டு ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், நெமிலி ஒன்றியம், சிறுணமல்லி கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

53—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 17248—திரு. சு. ரவி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், முருங்கை ஊராட்சி, முருங்கை கிராமத்தில் ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 2,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. முருங்கை ஊராட்சியின் மக்கள் தொகை 5,000–க்குக் குறைவாக இருப்பதாலும், 3 கி.மீ. தொலைவில் கணபதிபுரம் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், முருங்கை கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

54—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 17307—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை பேரூராட்சி, மங்கலைக்கரைப்புதூரில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியம், மங்கலைக்கரைப்புதூரில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2015 செப்டம்பர் 29

55—

செவிலியர் கல்லூரி

வினா எண் 17310—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் செவிலியர் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் செவிலியர் கல்லூரி துவங்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

56—

துணை கிராம சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 17512—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தஞ்சாக்கூர் துணை கிராம சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும்

2015 செப்டம்பர் 29]

மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. தஞ்சாக்கூர் கிராமம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,03,881. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டு வரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், தஞ்சாக்கூர் கிராமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் கொம்புக்காரனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், தஞ்சாக்கூர் கிராமம் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

57—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 17528—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், புளியாளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சமவெளிப் பகுதியில் 30,000 மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும்,

[2015 செப்டம்பர் 29

இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியும் உள்ளது. புளியால் கிராமம், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டு வரும் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், புளியால் கிராமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் மொன்னிகார்மாங்குடி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும் புளியால் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

58—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 17529—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், நெசவாளர் காலனியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. நெசவாளர் காலனி கிராமம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,14,721. மக்கள் தொகைக்கேற்ப இவ்வூராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. எனவே, நெசவாளர் காலனி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

விடுப்பட்ட வினா எண் 59-இதற்கான விளக்கத்தினை பக்கம் 914-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

60—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 18332—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், சருகணியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. சருகணி கிராமம், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 74,076. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டு வரும் 5 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், சருகணி கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் திருவேகம்பத்து ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும் சருகணி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

61—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 18336—திரு. கு. பாண்டியராஜன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், சங்கரலிங்காபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. சங்கரலிங்காபுரம் கிராமம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. சங்கரலிங்காபுரம் கிராமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் கன்னிசேரிபுதூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. எனவே, சங்கரலிங்காபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

63—

சித்த மருத்துவப் பிரிவிற்குக் கட்டடம்

வினா எண் 19163—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, குன்னூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் சித்தா பிரிவிற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, குன்னூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்பட்டு வரும் சித்த மருத்துவப்

விடுப்பட்ட வினா எண் 62-இதற்கான விளக்கத்தினை பக்கம் 994-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

பிரிவிற்குக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

64—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 19164—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, நத்தம்பட்டி அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நத்தம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து 20 கி.மீ. சுற்று வட்டாரத்தில் 114 படுக்கை வசதிகள் கொண்ட ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை, 92 படுக்கை வசதிகள் கொண்ட வத்திராயிருப்பு வட்ட சாரா மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வருவதால், நத்தம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

65—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 19575—திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், களபத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார நிலையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. களபம் கிராமம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. களபம் கிராமத்திற்கு 7 கிலோ மீட்டர் தொலைவில் கரூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. எனவே, களபம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

66—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 19576—திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, மீமிசலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கை வசதிகள் கொண்டதாக மேம்படுத்துவது என்ற அடிப்படையில், ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. மீமிசல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் பொன்பேத்தி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே

2015 செப்டம்பர் 29]

மேம்படுத்தப்பட்டுவிட்டதால் மீமிசல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

67—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 19578—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்டனூர் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கண்டனூர் பேரூராட்சி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,14,878. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டு வரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், கண்டனூர் பேரூராட்சியில் கண்டனூர் அரசு மருத்துவமனையும் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் புதுவயல் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், கண்டனூர் பேரூராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

68—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 19738—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆழியாறு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பெத்தநாயக்கனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றை 24 மணி நேரமும் செயல்படும் வகையில் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் சுகாதாரப் பகுதி மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், ஆழியாறு மற்றும் பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய பிரசவ மருத்துவ சேவை விரிவுபடுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

69—

விஷமுறிவு மருந்து வழங்குதல்

வினா எண் 19739—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வால்பாறை வட்டத்திற்குக் கூடுதல் நடமாடும் மருத்துவமனையை இயக்கிடவும், விஷமுறிவு வழங்கிடவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோவை மாவட்டத்தின் ஆனைமலை வட்டாரத்திற்குட்பட்டது வால்பாறை ஆகும். தேசிய ஊரக நல்வாழ்வு திட்டத்தின்மூலம் 'நடமாடும் மருத்துவமனை திட்டத்தின்' கீழ் ஒரு வட்டாரத்திற்கு

2015 செப்டம்பர் 29]

ஒரு நடமாடும் மருத்துவமனை என்ற அடிப்படையில், ஏற்கெனவே ஒரு நடமாடும் மருத்துவக் குழுவினர் இவ்வட்டாரத்தில் மருத்துவ சிகிச்சை அளித்து வருகின்றனர். மேலும், வால்பாறை உட்பட ஆனைமலை வட்டாரத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் முன் பயணத் திட்டத்தின்படி நடமாடும் மருத்துவக் குழுவினர் நேரடியாக சென்று மருத்துவ சேவைகள் முழுமையான அளவில் அளித்து வருகின்றனர். எனவே, வால்பாறைக்குக் கூடுதலாக நடமாடும் மருத்துவமனை இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், வால்பாறை ஆரம்ப சுகாதார நிலையத்தில் விஷமுறிவு மருந்து வழங்கப்படுகிறது.

70—

பணியாளர் நியமனம்

வினா எண் 19740—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி மேலும் சிறப்பு சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்கள், பெண் மருத்துவர்கள் மற்றும் மருந்தாளுநர்களை நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை குறைந்த மக்கள் தொகை கொண்ட இடமாக உள்ளது. வால்பாறை அரசு மருத்துவமனை 38 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. மருத்துவர் மறுசிரமைப்பின்படி, இம்மருத்துவமனையின் செயல்பாட்டினை கருத்தில்கொண்டு மொத்தம் 11 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இதில் 1 பெண் மருத்துவர் உட்பட மொத்தம் 5 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். 2 மருந்தாளுநர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு பணியில் உள்ளனர். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக வெளிநோயாளிகள் 450 நபர்களும், உள்நோயாளிகள் 22 நபர்களும்

மட்டுமே சிகிச்சை பெறுகின்றனர். மாதம் ஒன்றுக்கு சராசரியாக 4 பிரசவங்கள் மட்டுமே நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையைவிட சிகிச்சை பெறும் உள்நோயாளிகளின் எண்ணிக்கைக் குறைவாகவே உள்ளது. மருத்துவமனை பெண் மருத்துவர், மருத்துவ சாரா பணியாளர்கள் மற்றும் உபரி படுக்கை வசதிகளுடன் அனைத்து வசதிகளுடனும் செயல்பட்டு வருவதால் இம்மருத்துவமனையை மேலும் விரிவுபடுத்த தற்போது அவசியம் எழவில்லை.

71—

மூலிகைப் பண்ணை

வினா எண் 19741—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மூலிகைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மூலிகைப் பண்ணை அமைத்திடும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

72—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 19765—திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதனடிப்படையில் ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. 2013–2014 ஆம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின் அடிப்படையிலும், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படாமல் உள்ள இதர மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

73—

கல்லூரியை செயற்படுத்துதல்

வினா எண் 20202—டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாறு அரசு ஆயுர்வேத கல்லூரி மற்றும் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் வகுப்புகள் தொடர்ந்து நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

12–3–2012 நாளிட்ட சென்னை உயர் நீதிமன்ற ஆணையின்படி, கோட்டாறு அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் 12–3–2012 பிற்பகல் முதல் பட்டப் படிப்பும், பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பும், இளங்கலை பட்டப் படிப்பும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

74—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 20284—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். 2013–2014 ஆம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு, மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின் அடிப்படையிலும், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படாமல் உள்ள இதர மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்து அவ்வப்போது பரிசீலித்து அரசு முடிவெடுக்கும். தற்போது கிருஷ்ணகிரியில் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

75—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 20285—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, மதகாண்டப்பள்ளி மற்றும் உரிகம் மலைக் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) அரசு ஆணை (நிலை) எண் 46, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அ.உ.தி–II(2) துறை, நாள் 17–2–2014–ல் கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், மதகாண்டப்பள்ளி மற்றும் உரிகம் ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

76—

மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

வினா எண் 20495—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, ஆதிச்சபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. ஆதிச்சபுரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் திருமக்கோட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துவதற்கான ஆணை வெளியிடப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆதிச்சபுரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[2015 செப்டம்பர் 29

77—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 20496—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, குன்னியூரில் துணை சுகாதார நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் வட்டம், குன்னியூர் கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது.

79—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 20731—திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்வேளூர் தொகுதி, தெற்குபனையூர் கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

விடுப்பட்ட வினா எண் 78-இதற்கான விளக்கத்தினை பக்கம் 994-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

அமைக்கப்படுகின்றன. தெற்குபனையூர் கிராமம், கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 72,934. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டு வரும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், தெற்குபனையூர் கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் வலிவலம் ஆரம்ப சுகாதார நிலையமும், 4 கிலோ மீட்டர் தொலைவில் திருக்குவளை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், தெற்குபனையூர் கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

80—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 20732—திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்வேளூர் தொகுதி, அகரஒரத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அகரஒரத்தூர் கிராமம், நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 84,545. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டு வரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், அகரஒரத்தூர் கிராமத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில்

[2015 செப்டம்பர் 29

வடலூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 5 கிலோ மீட்டர் தொலைவில் வடுகச்சேரி பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், அகரஓரத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

82—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 21033—திரு. ஏ.ஏ. கருப்பசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், அவிநாசி ஒன்றியம், பெரியாயிபாளையம் மற்றும் ஆலத்தூரில் ஆரம்ப துணை சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியத்தில், பெரியாயிபாளையம் மற்றும் ஆலத்தூரில் துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

83—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 21038—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, கும்ளாபுரம் மற்றும் மதகொண்டப்பள்ளியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடுப்பட்ட வினா எண் 81-இதற்கான விளக்கத்தினை பக்கம் 994-ல் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) அரசு ஆணை (நிலை) எண் 46, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அ.உ.தி–II(2) துறை), நாள் 17–2–2014–ல் கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், கும்ளாபுரம் மற்றும் மதகாண்டப்பள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்காக அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

84—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 21040—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா;

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். 2013–2014 ஆம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு, மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின் அடிப்படையிலும், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படாமல் உள்ள இதர மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்து அவ்வப்போது பரிசீலித்து அரசு முடிவெடுக்கும். தற்போது, கிருஷ்ணகிரியில் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 21050—திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடியாத்தம் தொகுதி, T.T. மேட்டூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், T.T. மேட்டூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

86—

சித்தா மருத்துவப் பிரிவு

வினா எண் 21054—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்தா மருத்துவப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆயுர்வேத மருத்துவப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இந்நிலையில்

2015 செப்டம்பர் 29]

இப்பேரூராட்சிக்குட்பட்ட குள்ளம்பட்டியில் புதிதாக மற்றொரு சித்தா மருத்துவப் பிரிவினை துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 21081—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி ஒன்றியம், அரசிராமணி கிராமம், கிழக்கு ஓலப்பாளையத்திற்கு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. கிழக்கு ஓலப்பாளையம் கிராமம், குள்ளம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,25,546. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டு வரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், கிழக்கு ஓலப்பாளையம் கிராமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் அரசிராமணி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், கிழக்கு ஓலப்பாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

88—

கூடுதல் கட்டடம்

வினா எண் 21509—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தல் அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை சுகாதாரப் பகுதி மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் முத்தனேந்தல் மேம்படுத்தப்பட்ட முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், முத்தனேந்தல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடும்ப நல அறுவை அரங்கம் உள்ளது. 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டுள்ளது. இரத்த பரிசோதனை பிரிவு உள்ளது. இசி.ஜி. (E.C.G.) பரிசோதனை பிரிவு, பிரசவ தாய்மார்களுக்கான ஸ்கேன் வசதி, நுண்கதிர் பிரிவு, இரத்த சேமிப்பு வங்கி ஆகிய அனைத்து வசதிகளுடன் முத்தனேந்தல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்படுகிறது. முத்தனேந்தல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2011-2012 ஆம் நிதியாண்டில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்மூலம் (NRHM) ரூ.6.50 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டு, நோயாளிகள் காத்திருப்புக் கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது மற்றும் ரூ.9.60 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டு, (NRHM) பிரசவப் பின் கவனிப்புப் பிரிவுக் கட்டடம் பொதுப் பணித் துறைமூலம் கட்டி முடிக்கப்பட்டு, 13-9-2013 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் உள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

2015 செப்டம்பர் 29]

89—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 21669—திரு. வே. குணசீலன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், சத்தியவாடி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் புதியதாக துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. சத்தியவாடி கிராமம், தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 99,649. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப இங்கு செயல்படும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், சத்தியவாடி கிராமத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிற்குள் தூதாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் தெள்ளார் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், சத்தியவாடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

90—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 21861—திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 29

(அ) செங்கம் தொகுதி, அரசங்கண்ணி, தண்டரம்பட்டு இடையே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார நிலையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அரசங்கண்ணி, தண்டரம்பட்டு கிராமம், செங்கம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,68,839. மக்கள் தொகைக்கேற்ப ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, அரசங்கண்ணி, தண்டரம்பட்டு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

91—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 21872—திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, மானூரில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. மானூர்

2015 செப்டம்பர் 29]

ஊராட்சி ஒன்றியத்தில் உக்கிரன்கோட்டை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மானூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

92—

அறுவை சிகிச்சை சிறப்புப் பிரிவுகள்

வினா எண் 21875—திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பல் மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை சிறப்புப் பிரிவுகள் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பல் மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை சிறப்புப் பிரிவுகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

93—

ஆயுர்வேத மருந்தகத்தை தரம் உயர்த்துதல்

வினா எண் 21886—திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி தொகுதி, சுத்தமல்லி அரசு ஆயுர்வேத மருத்துவமனைக்கு புதிய கட்டடங்கள் கட்டவும் மற்றும் படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாக தரம் உயர்த்தவும் அரசு முன்வருமா?

TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், சுத்தமல்லி பகுதியில் அமைந்துள்ள ஊரக ஆயுர்வேத மருந்தகம் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, அங்கு புதிய கட்டடங்கள் கட்ட வேண்டிய தேவை எழவில்லை. மேலும், அங்கு படுக்கை வசதிகள் ஏற்படுத்தி மருத்துவமனையாக தரம் உயர்த்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

94—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 22345—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், கண்டதேவியில் புதிய துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஒன்றியம், கண்டதேவியில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

95—

நடமாடும் மருத்துவமனை

வினா எண் 22346—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், தளக்காவயல் ஊராட்சி, பாப்பாங்கோட்டையில் நடமாடும் மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் திருவேகம்பத்தூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட தேவகோட்டை ஒன்றியம், தளக்காவயல் ஊராட்சிப் பகுதியில் பாப்பாங்கோட்டையில் தேசிய ஊரக நல வாழ்வுத் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட நடமாடும் மருத்துவக் குழுவினர் முன் பயணத்திட்டத்தின்படி நேரடியாக சென்று மருத்துவ சேவைகள் முழுமையான அளவில் அளித்து வருகின்றனர்.

96—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 22348—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், களத்தூரில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு

[2015 செப்டம்பர் 29

இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. களத்தூர் கிராமம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,14,878. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், களத்தூர் கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் பீர்க்கலைக்காடு ஆரம்ப சுகாதார நிலையமும், 5 கிலோ மீட்டர் தொலைவில் புதுவயல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், களத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

97—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 22349—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஜெயங்கொண்டானில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார நிலையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஜெயங்கொண்டான் கிராமம் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. ஜெயங்கொண்டான் கிராமத்திற்கு 3 கிலோ மீட்டர் தொலைவில்

2015 செப்டம்பர் 29]

பீர்க்கலைக்காடு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. எனவே, ஜெயங்கொண்டான் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

98—

துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 22363—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) குள்ளம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. குள்ளம்பட்டி கிராமம், சங்கரி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,33,839. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டு வரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், குள்ளம்பட்டி கிராமத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில் அரசிராமணி

[2015 செப்டம்பர் 29

ஆரம்ப சுகாதார நிலையமும், 5 கிலோ மீட்டர் தொலைவில் எடப்பாடி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், குள்ளம்பட்டி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகவோ அல்லது அரசு மருத்துவமனையாகவோ தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

99—

சி.டி. ஸ்கேன் வசதி

வினா எண் 22366—திரு. எம். ரெங்கசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிக்கு ஸ்பைரல் சி.டி. ஸ்கேன் வசதி செய்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பழைய ஒற்றை ஸ்லைஸ் சி.டி. ஸ்கேனர் மாற்றப்பட்டு, புதிய 4 ஸ்லைஸ் சி.டி. ஸ்கேனர் ஏப்ரல் 2013-ல் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.

100—

புற்று நோய் அறுவை சிகிச்சைத் துறை

வினா எண் 22369—திரு. எம். ரெங்கசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரத்த குழாய் (Vascular Surgery) அறுவை சிகிச்சை, புற்றுநோய் அறுவை சிகிச்சை (Oncology) ஆகிய புதிய துறைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையினை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் பல்வேறு துறைகளுடன் இரத்த குழாய் (Vascular Surgery) அறுவை சிகிச்சை துறை துவங்கும் கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. புற்றுநோய் அறுவை சிகிச்சை (Oncology) துறை துவங்குவதற்கான ஆணை வெளியிடப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

101—

புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம்

வினா எண் 22382—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு தொடங்க ரூ.12.82 கோடிக்கு அரசாணை வெளியிடப்பட்டு, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

102—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 22386—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் மருத்துவமனையை அனைத்து வசதிகளுடன் மாவட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் அரசு மருத்துவமனை 48 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 362 மற்றும் 36 நபர்கள் வெளிநோயாளிகள் மற்றும் உள்நோயாளியாக பயன்பெற்று வருகின்றனர். மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 26 பெரிய அறுவை சிகிச்சையும் 184 சிறிய அறுவை சிகிச்சையும், 11 பிரசவங்களும் 5 அறுவை சிகிச்சை பிரசவங்களும் 6,018 ஆய்வகப் பரிசோதனைகளும் நடைபெறுகிறது. குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம் மற்றும் எக்ஸ்ரே வசதியும் உள்ளது. போதுமான உபகரணங்களும் உள்ளது. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள படுக்கை எண்ணிக்கையைவிடக் குறைவான நோயாளிகளே சிகிச்சைப்பெற்று வருவதால், தற்போது உள்ள வசதிகளைக்கொண்டு அப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாவட்டத்திற்கு ஒரு தலைமை மருத்துவமனை என்ற அடிப்படையில் ஏற்கெனவே பத்மநாபபுரம் மருத்துவமனை தலைமை மருத்துவமனையாக செயல்பட்டு வருவதால் இம்மருத்துவமனையை தரம் உயர்த்த தற்போது அவசியம் எழவில்லை.

103—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 22387—திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், சிக்கத்தம்பூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. சிக்கத்தம்பூர் ஊராட்சி, துறையூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,16,633. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டு வரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், சிக்கத்தம்பூர் ஊராட்சியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் பெருமாள்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், சிக்கத்தம்பூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

104—

மருத்துவர் பணி நியமனம்

வினா எண் 24567—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரூர் வட்டம், ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள மகப்பேறு மையத்தில் இரவு நேரங்களில் கூடுதலாக மருத்துவர்களை பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி சுகாதார மாவட்டம், அரூர் வட்டத்தில் பின்வரும் 5 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஆரம்ப சுகாதார நிலையத்தின் இருப்பு	மருத்துவ அலுவலர் ஒப்பளிப்பு	மருத்துவ அலுவலர் இருப்பு
தீர்த்தமலை	2	2
காட்டம்பட்டி	2	2
சின்னான்குப்பம்	2	2
கூத்தாடிபட்டி	2	2
சிட்லிங்	2	2

அரசு விதிகளின்படி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2 மருத்துவ அலுவலர் பணியிடங்கள்தான் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. மேலும், மகப்பேறு சேவைகளை 24 மணி நேரமும் வழங்க பயிற்சி பெற்ற செவிலியர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகிறார்கள். அவசர அழைப்பின் பேரில் மருத்துவ அலுவலர்கள் இரவு நேரங்களில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து தேவையான மருத்துவ சிகிச்சைகளை வழங்கி வருகிறார்கள்.

105—

சித்த மருத்துவப் பிரிவிற்கு தனிக் கட்டடம்

வினா எண் 24665—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இயங்கி வரும் சித்த மருத்துவப் பிரிவிற்கு தனிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்பட்டு வரும் சித்த மருத்துவப் பிரிவிற்கு

தனியாக புதிய கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

106—

மின்னாக்கி வசதி

வினா எண் 24666—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பெரிய மின்னாக்கி வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஏற்கெனவே 5 கே.வி. மின்னாக்கி வழங்கப்பட்டுள்ளது. இது ஆரம்ப சுகாதார நிலைய தேவைகளுக்கு போதுமானதாக உள்ளது.

107—

உணவுப் பொருட்களில் கலந்துள்ள நஞ்சு அளவு

வினா எண் 24723—திரு. கு. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் உணவுப் பொருட்களில் கலந்துள்ள நஞ்சு அளவு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறதா?

(ஆ) இல்லையெனில் இனி ஆய்வு மேற்கொள்வதற்கு செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஆம். ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

108—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 24759—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி ஒன்றியம், திருவாலிகாரைமேடு ஊராட்சி மையப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாலிகாரைமேடு ஊராட்சி என்பது திருவாலி மற்றும் காரைமேடு என தனித் தனி ஊராட்சிகள் ஆகும்.

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. திருவாலி மற்றும் காரைமேடு ஊராட்சிகள் சீர்காழி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,24,524. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக

2015 செப்டம்பர் 29]

உள்ளதாலும், திருவாலி ஊராட்சியிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையமும், காரைமேடு ஊராட்சியிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் வைதீஸ்வரன்கோயில் அரசு மருத்துமனையும் செயல்பட்டு வருவதால் திருவாலி மற்றும் காரைமேடு ஊராட்சிகளில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

109—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 24851—திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டி ஒன்றியம், முட்டத்தூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. முட்டத்தூர் கிராமம், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,23,938. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டு வரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், முட்டத்தூர் கிராமத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வேம்பி, ஒட்டம்பட்டு மற்றும் எண்ணாயிரம் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதாலும், முட்டத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

110—

பாம்புக் கடி மருந்து

வினா எண் 24852—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் முதலுதவிக்கு பாம்புக் கடி மருந்துகளை இருப்பில் வைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 2014–2015 ஆம் நிதியாண்டில் மருந்துகளுக்கென ரூ.36,71,86,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து உயிர் காக்கும் மருந்துகளும், பாம்புக் கடி மருந்துகள் உட்பட எல்லா மருந்துகளும் தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம்மூலம் வழங்கப்பட்டு, போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், நாய்க் கடி மருந்திற்கென 2014–2015 ஆம் நிதியாண்டில் ரூ.9,55,74,997/– ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம்மூலம் மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

111—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 24999—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பரவாக்கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில், 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. பரவாக்கோட்டை கிராமம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,53,770. பரவாக்கோட்டை கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளிக்கோட்டை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் திருமக்கோட்டை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், பரவாக்கோட்டை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

112—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25004—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், தென்பரை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில், 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. தென்பரை ஊராட்சி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,11,361. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், தென்பரை ஊராட்சியிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் தலையாமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தொலைவில் திருமக்கோட்டை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால் தென்பரை ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

113—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25008—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, பொதக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 24 மணி நேரமும் இயங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் கொண்டதாக மேம்படுத்துவது என்ற அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. பொதக்குடி கூடுதல் ஆரம்ப

2015 செப்டம்பர் 29]

சுகாதார நிலையம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் வடுவூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொதக்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், பொதக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவ கவனிப்பு சேவை விரிவுபடுத்தப்பட்டு 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

114—

மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்

வினா எண் 25010—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, பொதக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுழற்சி முறையில் முழுநேரமும் சிறப்பு மருத்துவர்களை நியமிக்கவும், போதிய அத்தியாவசியமான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கிடவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டாரத்தின்கீழ் 1. கோவில்வெண்ணி, 2. பேரையூர், 3. பொதக்குடி, 4. ராயவரம், 5. தலிகோட்டை ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களும் மற்றும் வடவூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளன. பொதக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரண்டு மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு அவ்விடங்களில் இரண்டு மருத்துவர்கள்

பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், அங்கு பிரசவ கவனிப்பு சேவை விரிவுபடுத்தப்பட்டு மூன்று செவிலியர்கள் நியமிக்கப்பபட்டு, ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் உள்ள குடியிருப்பில் தங்கி 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகிறார்கள். அதே ஒன்றியத்தில் உள்ள வடுவூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 5 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, மருத்துவர்கள் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகிறார்கள். இதுதவிர அவசர அழைப்பின் பேரில் மருத்துவ அலுவலர்கள் இரவு நேரங்களில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து தேவையான மருத்துவ சிகிச்சைகளை வழங்கி வருகிறார்கள். மேலும், பொதக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அருகில் அத்திக்கடை ஆரம்ப சுகாதார நிலையம் கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மன்னார்குடி ஆகியன உள்ளன. பொதக்குடி ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் என்பதால் சிறப்பு மருத்துவர் பணியிடம் ஒப்பளிப்பு இல்லை.

115—

ஓமியோபதி பிரிவு

வினா எண் 25577—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை அரசினர் மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவு துவக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2015 செப்டம்பர் 29]

116—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 26519—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றது. வெட்டன்விடுதி கிராமம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,17,442. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டு வரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், வெட்டன்விடுதி கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் வானக்கன்காடு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், வெட்டன்விடுதி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

117—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 26526—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, வானக்கன்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. வாணக்கன்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் மழையூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வானக்கன்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

118—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 26722—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதிக்குட்பட்ட திங்கள் நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

தற்பொழுது குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே முட்டம், நடுவூர்க்கரை, வெள்ளிச்சந்தை மற்றும் குருந்தன்கோடு ஆகியவை செயல்பட்டு வருகின்றது. இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், திங்கள் நகர் கிராமத்திற்கும், குளச்சல் அரசு மருத்துவமனைக்கும் இடைப்பட்ட தூரம் 7 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், திங்கள் நகர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

119—

ஊடுகதிர் கருவி

வினா எண் 26732—திரு. சி. ஜைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஊடுகதிர் கருவி வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் உள்ள 130 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஊடுகதிர் கருவி செயல்பட்டு வருகின்றது. இதற்கான எக்ஸ்ரே பிலிம் தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம்மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் அனைத்து மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் ஊடுகதிர் இயந்திரம் படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது.

120—

மருத்துவமனையை மேம்படுத்துதல்

வினா எண் 27158—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 29

(அ) திருமங்கலம் தொகுதி, பேரையூர் வட்டம், அரசு மருத்துவமனைக்கு போதிய மருத்துவர்களும், மருத்துவ உபகரணங்களும் வழங்கி மருத்துவமனையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, பேரையூர் அரசு மருத்துவமனை 36 படுக்கை வசதிகளைக்கொண்டு செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 20 உள் நோயாளிகளும், 600 வெளி நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். சராசரியாக மாதமொன்றுக்கு 2 பெரிய அறுவை சிகிச்சைகளும், 5 மகப்பேறுகளும் மட்டுமே நடைபெறுகிறது. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 3 உதவி மருத்துவர் பணியிடங்களிலும் உதவி மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். முதன்மை குடிமை மருத்துவர் முதுநிலை குடிமை மருத்துவர் பணியிடங்கள் இரண்டு ஒப்பளிக்கப்பட்டு, அப்பணியிடங்களை பதவி உயர்வு கலந்தாய்வுமூலம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உள் நோயாளிகளாக சிகிச்சைபெறும் நோயாளிகளின் எண்ணிக்கை ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிடக் குறைவாக உள்ளதால், தற்போது இம்மருத்துவமனையின் செயல்பாட்டிற்கேற்ப மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் என்பதையும் மேலும் இம்மருத்துவமனையின் தேவைக்கேற்ப போதிய அளவில் மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

121—

செவிலியர் கல்லூரி

வினா எண் 27507—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2015 செப்டம்பர் 29]

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் இயன்முறை மருத்துவம் மற்றும் தாதியர் (Nursing) கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் இயன்முறை மருத்துவம் மற்றும் தாதியர் (Nursing) கல்லூரி துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

122—

பல் மருத்துவக் கல்லூரி

வினா எண் 27870—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கலில் இயன்முறை மருத்துவம், செவிலியர் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கலில் இயன்முறை மருத்துவம், செவிலியர் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகள் துவங்க தற்சமயம் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

123—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 27873—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 செப்டம்பர் 29

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கலில் மருத்துவக் கல்லூரிகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதனடிப்படையில் ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. 2013–2014 ஆம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின் அடிப்படையிலும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படாமல் உள்ள இதர மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மேலும், கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில் 100 மாணவர் சேர்க்கையுடன்கூடிய அரசு மருத்துவக் கல்லூரி இயங்கி வருகிறது. இந்நிலையில் கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல்லில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

124—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 27917—திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பூர் வட்டம், நல்லூரை மையமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

2015 செப்டம்பர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருப்பூர் வட்டம், நல்லூரில் ஏற்கெனவே நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. நல்லூர், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 3,17,442. நல்லூரிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் முதலிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையமும், 5 கிலோ மீட்டர் தொலைவில் திருப்பூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், நல்லூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

125—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 28367—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், விசவனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச

[2015 செப்டம்பர் 29

இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. விசுவனூர் கிராமம் இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,11,552. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், விசுவனூர் கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் ஆனந்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், விசுவனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

(பேரவைக் கூட்டத் தொடர் முடியும் வரை தொடர்புடைய உறுப்பினர்கள் பேரவைப் பணிகளின்று தற்காலிக நீக்கம் செய்யப் பெற்றுள்ளதால் வரிசை எண்கள் 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 50, 59, 62, 78, 81, தொடர்புடைய வினாக்கள்—விடைகள் இப்பட்டியலில் இடம்பெறவில்லை)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

இணைப்பு II

(102 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

1998-1999 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1998-1999 ஆம் ஆண்டில், சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் சில இனங்களில் மேற்கொள்ளப்பட்ட மிகைச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

2. 1998-1999 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1998-1999 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெற பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 1998-1999 ஆம் ஆண்டு தொடர்பான 232.84 கோடி ரூபாய் மிகைச் செலவுகளைச் சரிகட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

3. 1998-1999 ஆம் ஆண்டில் "கல்வி", "வேளாண்மை" மற்றும் "பாசனம்" ஆகிய இனங்களின்கீழ் பெருமளவு மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

4. விவசாயத்திற்கான மின்சார மானியம் வழங்குவதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கட்டணவீத இழப்பீடு தனிக் கணக்குகளின் அடிப்படையில் மாநில கணக்குத் துறைத் தலைவரால் பதிவுகள் மாற்றப்பட்டு கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக "வேளாண்மை" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

5. ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியதால் வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகள் நிலுவைத் தொகை, மிகை ஊதியம், கருணைக் கொடைகள் ஆகியவற்றின் காரணமாக "கல்வி" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. கணக்கு தவறாகப் பதிவு செய்யப்பட்டதாலும் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

6. பணியாளரமைப்புச் செலவுகள் மற்றும் வட்டிச் செலவுகள் விகிதாச்சார அடிப்படையில் புத்தக சரிகட்டல் மூலமாக சரிகட்டப்பட்டதால் "பாசனம்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

7. எனவே, 1998–1999 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

1999–2000 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1999–2000 ஆம் ஆண்டில், சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் சில இனங்களில் மேற்கொள்ளப்பட்ட மிகைச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

2. 1999–2000 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்குமேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1999–2000 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெற பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 1999–2000 ஆம் ஆண்டு தொடர்பான 362.99 கோடி ரூபாய் மிகைச் செலவுகளைச் சரிகட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

2015 செப்டம்பர் 29]

3. 1999–2000 ஆம் ஆண்டில் "கல்வி", "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" மற்றும் "இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்" ஆகிய இனங்களின்கீழ் பெருமளவு மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

4. 1–1–1996–க்கு முன்னர் ஓய்வுபெற்ற அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும், திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதியம், பணிக்கொடை, தொகுத்து வழங்கப்பட்ட ஓய்வூதியம் ஆகியவற்றிற்கான நிலுவைகளை வழங்கியதாலும், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அதிகரிக்கப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி வழங்கப்பட்ட காரணத்தாலும், "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

5. 65,000 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு ஆறாவது ஊதியக் குழுவின் நிலுவைத் தொகையில் 20 சதவீதம் வழங்கப்பட்டதன் காரணமாக "கல்வி" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

6. வருவாயான கேளிக்கை வரியை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகப்படியாக ஒதுக்கீடு செய்ததால் "இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

7. எனவே, 1999–2000 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

2000–2001 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2000–2001 ஆம் ஆண்டில், சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மேற்கொள்ளப்பட்ட மிகைச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

2. 2000–2001 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்குமேல் செலவு

செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 2000–2001 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெற பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 2000–2001 ஆம் ஆண்டு தொடர்பான 2,239.47 கோடி ரூபாய் மிகைச் செலவுகளைச் சரிகட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

3. 2000–2001 ஆம் ஆண்டில் "பாசனம்", "பொதுக் கடன்–திருப்பிச் செலுத்துதல்" மற்றும் "கடன் செலவுகள்" ஆகிய இனங்களின்கீழ் பெருமளவு மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

4. இந்திய ரிசர்வ் வங்கியின் கணக்கீட்டின்படி வட்டி செலுத்தப்பட்டதாலும், கணக்கு தவறாகப் பதிவு செய்யப்பட்டதாலும் "கடன் செலவுகள்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

5. நிதியாண்டின் இறுதியில் தீர்வு செய்யப்பட்ட பட்டியல்களுக்கான தொகையை வழங்கிட இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட வழிவகை முன்பணம், மிகைப் பற்றை திருப்பி செலுத்தியதாலும், தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்தியதாலும் "பொதுக் கடன்–திருப்பிச் செலுத்துதல்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

6. பணியாளரமைப்புச் செலவுகள் மற்றும் வட்டிச் செலவுகள் விகிதாச்சார அடிப்படையில் புத்தக சரிகட்டல் மூலமாக சரிகட்டப்பட்டதாலும், கணக்கு தவறாகப் பதிவு செய்யப்பட்டதாலும் "பாசனம்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

7. எனவே, 2000–2001 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

2015 செப்டம்பர் 29]

2001–2002 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2001–2002 ஆம் ஆண்டில், சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மேற்கொள்ளப்பட்ட மிகைச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

2. 2001–2002 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்குமேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 2001–2002 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெற பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 2001–2002 ஆம் ஆண்டு தொடர்பான 379.38 கோடி ரூபாய் மிகைச் செலவுகளைச் சரிகட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

3. 2001–2002 ஆம் ஆண்டில் "பொதுக் கடன்–திருப்பிச் செலுத்துதல்", "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" மற்றும் "பாசனம்" ஆகிய இனங்களின் கீழ் பெருமளவு மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

4. அரசுக் கணக்கில் நாள்தோறும் நடைபெறும் பரிவர்த்தனைகளில் ஏற்படும் ஏற்ற–இறக்கங்களின் தன்மையால், இந்திய ரிசர்வ் வங்கி வழங்கும் வழிவகை முன்பணம், மிகைப் பற்று ஆகியவற்றை திருப்பிச் செலுத்தியதில் "பொதுக் கடன்–திருப்பிச் செலுத்துதல்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

5. ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களின் எண்ணிக்கை மதிப்பிடப்பட்டதற்கும் அதிகமாக இருந்ததால், அவர்களுக்கு விடுப்பு சம்பளம், ஓய்வூதியம், தொகுக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்கிய வகையில் ஏற்பட்ட உயர்வின் காரணமாக

[2015 செப்டம்பர் 29

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

6. பணியாளரமைப்புச் செலவின வகையில் ஏற்பட்ட உயர்வினாலும், பணியாளரமைப்புச் செலவுகள் மற்றும் வட்டிச் செலவுகள் விகிதாச்சார அடிப்படையில் புத்தக சரிகட்டல் மூலமாக சரிகட்டப்பட்டதாலும், வட்டிச் செலவினத்தில் ஏற்பட்ட உயர்வின் காரணமாகவும் "பாசனம்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

7. எனவே, 2001–2002 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

2002–2003 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2002–2003 ஆம் ஆண்டில், சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மேற்கொள்ளப்பட்ட மிகைச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

2. 2002–2003 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 2002–2003 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெற பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 2002–2003 ஆம் ஆண்டு தொடர்பான 2,436.71 கோடி ரூபாய் மிகைச் செலவுகளைச் சரிகட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

3. 2002–2003 ஆம் ஆண்டில் "பொதுக் கடன்–திருப்பிச் செலுத்துதல்", "இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு"

2015 செப்டம்பர் 29]

மற்றும் "நெடுஞ்சாலைகள் துறை" ஆகிய இனங்களின்கீழ் பெருமளவு மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

4. அரசுக் கணக்கில் நாள்தோறும் நடைபெறும் பரிவர்த்தனைகளில் ஏற்படும் ஏற்ற-இறக்கங்களின் தன்மையால், இந்திய ரிசர்வ் வங்கி வழங்கும் வழிவகை முன்பணம், மிகைப் பற்று ஆகியவற்றை திருப்பிச் செலுத்தியதில் "பொதுக் கடன் – திருப்பிச் செலுத்துதல்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

5. இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்பட்ட எதிர்பாரா செலவினங்களுக்காக தேசிய இயற்கை இடர்பாடுகள் செலவு நிதியின்கீழ் மத்திய அரசிடமிருந்து மூன்றாவது தவணைத் தொகையானது நிதி ஆண்டின் இறுதியில் பெறப்பட்டதால், அந்நிதியிலிருந்து செலவுகள் சரிகட்டப்படாத காரணத்தால் "இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

6. சாலை அபிவிருத்தித் திட்ட நிதிக்கு 2001–2002 மற்றும் 2002–2003 ஆம் ஆண்டுகளுக்கான தொகையை 2002–2003 ஆம் ஆண்டில் மாற்றம் செய்ததாலும், மத்திய சாலை நிதிக்கு மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட மானியத் தொகையை மாற்றம் செய்ததாலும், தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகத்திற்கு வழிவகை முன்பணம் வழங்கியதாலும் "நெடுஞ்சாலைகள் துறை" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

7. எனவே, 2002–2003 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

2003–2004 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2003–2004 ஆம் ஆண்டில், சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மேற்கொள்ளப்பட்ட மிகைச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

2. 2003–2004 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்குமேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 2003–2004 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெற பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 2003–2004 ஆம் ஆண்டு தொடர்பான 154.61 கோடி ரூபாய் மிகைச் செலவுகளைச் சரிகட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

3. 2003–2004 ஆம் ஆண்டில் "நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை", "ஊரக வளர்ச்சித் துறை" மற்றும் "கடன் செலவுகள்" ஆகிய இனங்களின்கீழ் பெருமளவு மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

4. மதிப்பீட்டிற்கும் அதிகமாக வரி வசூலானதால், மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் மானியத்தைக் கூடுதலாக வழங்கியதாலும், சிறு நகரங்கள், நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான திட்டச் செயலாக்கத்தில் அதிக செலவினம் ஏற்பட்ட காரணத்தாலும், "நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

5. சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கும், ஊரக மருந்தகங்களில் உள்ள சித்த மருத்துவர்களுக்கு ஊதிய நிலுவைத் தொகை வழங்கப்பட்டதாலும், சத்துணவு மையங்களுக்குப் புதிய பாத்திரங்கள் வாங்கியதாலும் "ஊரக வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

6. கடன்களுக்குச் செலுத்தப்படவேண்டிய வட்டித் தொகையை இந்திய ரிசர்வ் வங்கி பற்று வைத்ததாலும், தமிழ்நாடு மின் வாரியத்தின் நிலுவைகளை நுண்ணாய்வு செய்தது தொடர்பாக மத்திய பொதுத் துறை நிறுவனங்களுக்கு மதிப்பீட்டைவிட அதிகமாக வட்டித் தொகை செலுத்தியதாலும், வட்டி விகிதம் மாற்றத்திற்கேற்ப வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக்

2015 செப்டம்பர் 29]

கழகத்தின் கேட்பு அமைந்ததாலும், எதிர்பார்த்ததைவிட அதிகமான பணியாளர்கள் ஓய்வு பெற்றதால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வட்டித் தொகை அதிகரித்ததாலும், கணக்கு தவறாகப் பதிவு செய்யப்பட்டதாலும் "கடன் செலவுகள்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

7. எனவே, 2003–2004 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

2004–2005 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2004–2005 ஆம் ஆண்டில், சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மேற்கொள்ளப்பட்ட மிகைச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

2. 2004–2005 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்குமேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 2004–2005 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெற பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 2004–2005 ஆம் ஆண்டு தொடர்பான 2.82 கோடி ரூபாய் மிகைச் செலவுகளைச் சரிகட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

3. 2004–2005 ஆம் ஆண்டில் "உயர் கல்வித் துறை", "சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை" மற்றும் "நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" ஆகிய இனங்களின்கீழ் பெருமளவு மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

[2015 செப்டம்பர் 29

4. சேலம், பெரியார் பல்கலைக்கழகத்திற்கு கட்டடப் பணிகளுக்கென பெறப்பட்ட வைப்பீடு தொகைக்கும் கூடுதலாக செலவு மேற்கொள்ளப்பட்டதாலும், அனாமத்து கணக்குத் தலைப்பில் கணக்கு தவறாக பதிவு செய்யப்பட்டதாலும் "உயர் கல்வித் துறை" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

5. நிதி ஆண்டின் வருவாய் வசூலிப்பில் காணப்பட்ட அதிகரிப்பு காரணமாக, ஆண்டு இறுதியில் வருவாய் வசூலிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு வன மேம்பாட்டு காப்பு நிதிக்கு அதிகமான தொகை மாற்றம் செய்யப்பட்டதாலும், சம்பளம், கூடுதல் அகவிலைப்படி ஆகிய இனங்களில் ஏற்பட்ட கூடுதல் செலவினங்களாலும், கணக்கு தவறாகப் பதிவு செய்யப்பட்டதாலும் "சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

6. மதிப்பீட்டிற்கும் அதிகமாக வரி வசூலானதால், மாநில நிதிக் குழுவின் பரிந்துரைப்படி நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் மானியத்தை கூடுதலாக வழங்கியதால் "நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

7. எனவே, 2004–2005 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

(124 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 38–பொதுத்துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016

பொதுத் துறை, முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கட்டுபாட்டில் இயங்கி வருகிறது. இத்துறையில் மாநிலத்தின் பொது நிருவாகம் தொடர்புடைய சில முக்கியப் பணிகள் கையாளப்பட்டு வருகின்றன. இத்துறையில் கவனிக்கப்படும் முக்கியமான பணிகளாவன:

- ஆளுநரின் அலுவலகம் மற்றும் இல்லப் பராமரிப்பு தொடர்பான பணிகள்.
- மாண்புமிகு அமைச்சர்களின் பணி நியமனம் தொடர்பான பணிகள்.
- முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் அலுவலகப் பணியமைப்பு தொடர்பான பணிகள்.
- அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தல்.
- தலைசால் பெருமக்களின் வருகையின்போது மரபு சீர்முறையிலான ஏற்பாடுகளைச் செய்தல்.
- தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, பன்மாநிலக் குழு மற்றும் தென்மண்டலக் குழு உட்பட, நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான பொதுவான விவரங்கள் குறித்து கவனித்தல்.
- நடுவண் அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் அயல்நாட்டுத் தூதரகங்களுடன் தொடர்பு கொள்ளல்.

[2015 செப்டம்பர் 29

- ❖ சென்னை, உதகமண்டலம் மற்றும் புதுதில்லியிலுள்ள அரசு விருந்தினர் இல்லங்களை நிருவகித்தல்.

- ❖ அரசு விமானப் போக்குவரத்துப் பிரிவு சம்பந்தமான பணிகளை நிர்வகித்தல் மற்றும் கவனித்தல்.

- ❖ இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர்களின் நிருவாகப் பணிகளை கவனித்தல்.

- ❖ மாவட்ட நீதிபதிகள் மற்றும் உயர் நீதிமன்ற சட்ட அலுவலர்கள் நியமனம்.

- ❖ சட்டம் (ம) ஒழுங்கு பராமரித்தல், உள்பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் (NSA).

- ❖ மனித உரிமைகள் குறித்த விவரங்கள், மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993-ஐ செயல்படுத்துதல், மாநில மனித உரிமைகள் (SHRC) மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் சம்பந்தப்பட்ட பணிகள் (NHRC).

- ❖ இந்திய தரைப்படை, கப்பற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல்படை ஆகிய இராணுவ அதிகாரிகளுடன் ஒத்துழைப்பு நல்குதல்.

- ❖ அயல்நாட்டவர்களைப் பதிவு செய்தல், உரிய நுழைவிசைவுடன் வருகின்ற அயல்நாட்டினருக்கு தமிழ்நாட்டில் தங்கும் காலத்தை நீட்டித்து அனுமதித்தல், சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்ல விழைபவர்களுக்கு வெளிச்செல்ல அனுமதித்தல் போன்றவற்றை அயல்நாட்டினர் சட்டம் 1946-ன்படி செயல்படுத்துதல்.

- ❖ முன்னாள் படை வீரர்கள் நலன், அவர்களது குடும்ப நலன் மற்றும் முன்னாள் படை வீரர்கள் கழகத்தை நிருவகித்தல்.

- ❖ மாநிலத்தில் வெவ்வேறு முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நலன் பேணுதல்.

2015 செப்டம்பர் 29]

❖ வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்.

❖ **அரசியல் ஓய்வூதியம்:** சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களுக்காக ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் நலப் பணிகளைச் செயல்படுத்துதல்.

❖ வருடாந்திர மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் மாநாட்டை நடத்துதல்.

❖ முதலமைச்சரின் தனிப் பிரிவில் பெறப்பட்ட மனுக்கள்மீது உரிய ஆய்வு செய்து தீர்வு காணுதல்.

❖ தலைமைச் செயலக கட்டடங்களைப் பராமரித்தல்.

❖ பொது விடுமுறை மற்றும் உள்ளூர் விடுமுறை அறிவித்தல்.

தேசிய விழாக்கள், சிறப்பு நாட்கள் மற்றும் விருதுகள்

2. இந்திய தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள் மற்றும் குடியரசுத் திருநாள் விழாக்களை மாநில அளவில் தேசப் பற்றுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை இத்துறை செய்து வருகிறது.

3. மாநில அரசின் விருதுகளான அண்ணா பதக்கம், மத நல்லிணக்கத்திற்கான கோட்டை அமீர் விருது மற்றும் கல்பனா சாவ்லா விருது ஆகியவற்றிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைச் செயலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, விருதாளர்களைத் தெரிவு செய்வதற்கான பொறுப்பும் இத்துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்விருதுகள் குடியரசு மற்றும் சுதந்திரத் தினத்தன்று வழங்கப்படும். மேலும், நடுவண் அரசின் விருதுகளான பத்ம விருதுகள், வீர தீரச் செயல்களுக்கான விருதுகள், பொது நிருவாகத்தில் சிறப்பாகப் பணிபுரிந்தவர்களுக்காக அளிக்கப்படும் பிரதமர் விருது, கபீர் புரஸ்கார் விருது மற்றும் காந்தியடிகள் அமைதி விருது போன்ற விருதுகளுக்கும் இத்துறையின்மூலம் பரிந்துரைகள் அனுப்பப்படுகின்றன.

அயல்நாட்டினர் செயலாக்க விதி

4. இந்தியாவில் தங்குவதற்கு அனுமதியுடனும் உரிய நுழைவு இசைவுடனும் வருகை புரியும் அயல்நாட்டினர்களுக்கு இந்தியாவில் தங்கும் காலத்தை நீட்டித்து அனுமதி வழங்குதல், இந்தியாவை விட்டுச் செல்ல விரும்புபவர்களுக்கு அனுமதி

வழங்குதல் (Exit Permission), மற்றும் இந்தியாவை விட்டு வெளியேற்று/ வெளியேறக் கோரி ஆணை பிறப்பித்தல் ஆகிய அயல்நாட்டினர் தொடர்பான மாநில அரசால் வழங்க வேண்டிய அனைத்து பொருளினங்களுக்கும் பொதுத் துறை ஒரு முகமைத் துறையாக செயல்பட்டு வருகிறது. குடிநுழைவு இசைவு, அயல்நாட்டினர் பதிவு மற்றும் கண்காணிக்கும் முறை (Immigration, Visa, Foreigners Registration and Tracking System) இவையாவும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அயல்நாட்டினர் பதிவு அலுவலகங்களில் (FROs) மின்னணு மூலமாக பெறப்பட்டு இத்துறையால் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலமாக, வெளிநாட்டினர் தொடர்புடைய பதிவு மற்றும் அனுமதி வழங்குவது போன்ற செயல்கள் மின்னணு முறையில் செயல்படுத்தப்படுகின்றன. இவற்றுடன், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் மீது அவற்றின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டபின் இத்துறையால் சான்றுறுதி செய்யப்படுகிறது.

மனித உரிமைகள்

5. மனித உரிமைகளைப் பாதுகாத்தலும், பாதுகாப்பளித்தலும் அரசின் முக்கிய நோக்கமாகும். 1993 ஆம் ஆண்டைய மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 21-ன்கீழ், தமிழ்நாடு அரசால் மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்டு, 17-4-1997 முதல் இயங்கி வருகிறது. புகார்கள் அல்லது தாமாக முன்வந்து ஆணையமே பதிவு செய்வதன்பேரில், மனித உரிமைகள் மீறல் குறித்த வழக்குகளை விசாரித்து, தொடர்புடைய துறைகளுக்கு ஆணையம் உரிய பரிந்துரைகளைச் செய்கிறது. தேசிய, மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையங்களின் பரிந்துரைகள் மீதான செயலாக்கம் இத்துறையால் கண்காணிக்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வு

6. அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம் தமிழகத்தில் உள்ள பல்வேறு முகாம்களில் வசித்துவரும் இலங்கைத் தமிழர்களின் நலன் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

துறையில் உள்ள புள்ளிவிவரங்களின்படி, இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவது மற்றும் அவர்களின் நலன்

2015 செப்டம்பர் 29]

பேணுவது இந்த ஆணையரகத்தின் தற்போதைய முக்கிய பணியாகும்) இலங்கையில் 1983-ல் ஏற்பட்ட இனக்கலவரத்திற்கு பிறகு மொத்தம் 3,04,269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து 1-6-2015 அன்று பெறப்பட்ட புள்ளி விவரங்களின்படி, 19,746 குடும்பங்களைச் சேர்ந்த 64,569 இலங்கைத் தமிழர்கள் மாநிலத்தில் உள்ள 24 மாவட்டங்களில் (இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட) 109 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதைத் தவிர, 37,073 இலங்கைத் தமிழ் அகதிகள், முகாம்களுக்கு வெளியில் வசித்து வருகின்றனர். முகாம்களில் வசித்துவரும் இலங்கைத் தமிழர்களுக்கு பல்வகையான நிவாரண உதவிகள், மைய மற்றும் மாநில அரசின் வகைப்பாடு நிர்ணயங்களின்படியும் மற்றும் ஒப்புதலுடன் வழங்கப்படுகிறது.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்கள்:

7. முகாம்களில் வசித்துவரும் இலங்கைத் தமிழர்கள் கண்ணியம் மற்றும் பாதுகாப்புடன் தங்கள் வாழ்வினை மேற்கொள்ள வழிவகை செய்வதே இவ்வரசின் முனைப்பான திட்டமாகும். எனவே, மத்திய அரசு வழங்கி வரும் நலத் திட்ட உதவிகளோடு கூடுதலாக தமிழக மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து நலத் திட்ட உதவிகளையும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டித்து செயல்படுத்திடும் வகையில் ஜூன் 2011-ல் இந்த அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது.

நிவாரணம்:

8. முகாம்களில் வசித்துவரும் இலங்கைத் தமிழர்களுக்கு பணக்கொடை, உணவுப் பொருட்கள் மற்றும் தினசரி தேவைப்படும் அத்தியாவசிய பொருள்களான துணிகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், சமையல் பாத்திரங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்கள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்குக் குடிநீர், கழிப்பிடம், மின்சாரம் மற்றும் கட்டணமில்லா இருப்பிட வசதி போன்ற நிவாரண உதவிகளும் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

[2015 செப்டம்பர் 29

அகதிகளுக்கு நடைமுறையில் இருந்து வரும் திட்டங்களின்கீழ் வழங்கப்பட்டு வரும் நிவாரணங்கள் கணிசமான அளவு உயர்த்தப்பட்டுள்ளன. குடும்பத் தலைவருக்கு வழங்கப்பட்டு வரும் பணக்கொடையின் அளவு மாதமொன்றிற்கு ரூ.400/-லிருந்து ரூ.1,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வயது வந்த பிற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத பணக் கொடையானது ரூ.288/-லிருந்து ரூ.750/-ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ரூ.180/- மற்றும் ரூ.90/- என இரண்டு விதமாக வழங்கப்பட்டு வந்த மாத பணக்கொடை ரூ.400/-ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

9. இலங்கைத் தமிழர்கள் குடும்பத்திற்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வந்த அரிசியில் 20 கிலோ வரை விலை ஏதுமின்றி வழங்கப்படுகிறது. இத்துடன் சர்க்கரை, கோதுமை, மைதா, ரவை போன்ற பொருட்களும் மானிய விலையில் நியாய விலைக் கடைகள், மூலம் வழங்கப்படுகிறது. முகாம்களில் வசித்து வரும் 19,746 இலங்கைத் தமிழர் குடும்பத்தினர் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்து வருகின்றனர்.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள அகதிகள் முகாம்களில் தலா ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில், நீடித்து நிலைக்கும் 1,655 புதிய வீடுகள் கட்டுவதற்கு இந்த அரசு 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.19.86 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பணி ஊரக வளர்ச்சித் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் 1,041 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டும், பிற வீடுகள் கட்டுமான பணிகளில் பல நிலைகளில் உள்ளன.

கல்வி உதவி:

11. முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர் குடும்பத்தைச் சேர்ந்த சிறார்களின் முறையான கல்வி வளர்ச்சிக்கு, இவ்வரசு பல்வேறு சீரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து வரும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு 12-ம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இத்துடன் தமிழ்நாட்டிலுள்ள பிற மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், சீருடைகள், மதிய உணவு, இலவசப் பேருந்து அனுமதிச்சீட்டு மற்றும் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

நடப்பாண்டில் (2015-2016) 22,994 இலங்கைத் தமிழ் மாணவர்கள் பல்வேறு கல்வி நிலையங்களில் சேர்ந்துள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு:—

வ.எண்	நிலை	மாணவர்களின் எண்ணிக்கை
1.	மழலையர் பள்ளி	3,277
2.	ஆரம்பப் பள்ளி	8,732
3.	நடுநிலைப் பள்ளி	4,456
4.	உயர்நிலைப் பள்ளி	2,827
5.	மேல்நிலைப் பள்ளி	2,137
6.	கல்லூரி	1,565
	மொத்தம்	22,994

12. இத்துடன், இலங்கைத் தமிழ் அகதி மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழில் சார்ந்த கல்லூரிகள், தொழில்நுட்ப நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பொதுப் பிரிவின்கீழ் கலந்தாய்வில் கலந்து கொண்டு, சேர்ந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், அவர்கள் நடப்புக் கல்வி ஆண்டு 2015 முதல் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயில அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மாநிலத்தில் உள்ள மற்ற மாணவர்களைப் போல அனைத்து விதமான கல்வி உதவித்தொகை பெறத் தகுதியுடையவர்களாக்கப்பட்டுள்ளனர். மேலும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத் துறை அரசு விடுதிகள் ஒவ்வொன்றிலும் தலா ஐந்து இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இலங்கைத்

தமிழர்கள் குடும்பங்களைச் சேர்ந்த தகுதியுள்ள மாணவர்கள் தங்கி, தங்களது படிப்பினைத் தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டில் 84 மாணவர்கள் அரசு விடுதிகளில் தங்கியுள்ளனர்.

13. இலங்கைத் தமிழர் முகாம்களில் வசித்துவரும் மாணவர்களுக்கு அவர்கள் பயிலும் கல்வி தகுதிக்கு ஏற்ப ரூ.850/- முதல் ரூ.4,700/- வரை உயர் கல்வி தொடர கல்வி உதவித் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது:-

வ. எண்	படிப்பின் பெயர்	ஆண்டு உதவித் தொகை ரூ.
1.	இளங்கலை	1,200/-
2.	இளம் அறிவியல்	1,250/-
3.	முதுகலை	1,330/-
4.	முதுநிலை அறிவியல்	1,650/-
5.	பட்டயப்படிப்பு (தொழில்நுட்பம்)	850/-
6.	பொறியியல்	2,750/-
7.	மருத்துவம்	4,700/-
8.	கால்நடை மருத்துவம்	1,400/-
9.	சட்டம்	860/-
10.	இளம் அறிவியல் (வேளாண்மை)	2,850/-

இத்திட்டத்தின்கீழ் 2012-2013 ஆம் ஆண்டில் 625 மாணவர்களும், 2013-2014 மற்றும் 2014-2015 ஆம் ஆண்டுகள் முறையே 426 மற்றும் 541 மாணவர்களும் கல்வி உதவித் தொகைகள் பெற்றுள்ளனர்.

பரிசுத் தொகை:

14. தமிழ்நாட்டில் வசித்து வரும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் (மாணவ/மாணவியர்களுக்கு) கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகைகள் வரும் நடப்பு கல்வி ஆண்டு முதல் வழங்கிட 7-1-2015 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

10—ஆம் வகுப்பு	
நிலை	ரூபாய் (தலா ஒரு மாணவர் / மாணவி வீதம்)
முதலாவது	25,000/—
இரண்டாவது	20,000 /—
மூன்றாவது	15,000/—
12—ஆம் வகுப்பு	
முதலாவது	50,000/—
இரண்டாவது	30,000 /—
மூன்றாவது	20,000/—

பிழைப்புதவி:

15. இலங்கைத் தமிழர்கள் வருவாய் ஈட்டும் வேலைவாய்ப்பைப் பெருக்கிடும் வகையில் அவர்களுக்கு அரசு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து வருகிறது. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. தையல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு, விலையில்லா தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. அதன்மூலம் அவர்கள் தங்களின் வருவாயை உயர்த்திக் கொள்ள இயலும். 2014-2015-ல் 212 பெண்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர். முகாம்களில் வசித்து வரும் தமிழர்கள் சிக்கனம் மற்றும் கடன் நடவடிக்கைகள் மூலமாகப் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையில் 416 மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, குழு ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் சுழல் நிதி "ஒருமுறை மானியமாக" 2012-2013 ஆம் வருடம் வழங்கப்பட்டுள்ளது.

நலத் திட்ட உதவி:

16. மாதாந்திர பணக்கொடை மட்டுமில்லாமல், சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்களில் தங்கியுள்ள ஆதரவற்ற விதவைப் பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் மணமாகாத பெண்களுக்கு

மாத ஓய்வூதியமாக ரூ.1,000/- வழங்கப்படுகிறது. 2014-2015 ஆம் ஆண்டில் 328 பேர்கள் கூடுதலாக சேர்த்து மொத்தம் 4,257 பேர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர். முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்தில் இறப்பு ஏதும் ஏற்படின், அவ்வாறு இறந்த நபர்களின் குடும்பங்களுக்கு இறுதிச் சடங்குகள் செய்திட வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.2,500/- என்பது இந்த அரசால் ரூ.5,000/- என உயர்த்தப்பட்டு தற்போது வழங்கப்படுகிறது. இந்த நிதியுதவி 2014-2015 ஆம் ஆண்டில், 247 இறந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று, விபத்தின் காரணமாக இறப்பு ஏற்படின், அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை ரூ.15,000/-லிருந்து ரூ.25,000/- ஆக 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படுகிறது. 2014-2015 ஆம் ஆண்டில் 4 குடும்பத்தினர் இதன் மூலம் பயனடைந்துள்ளனர்.

17. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண உதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் ஆகியவை இலங்கைத் தமிழர்கள் குடும்பத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், பெண்களில் பட்டம் / பட்டயம் பெற்ற பெண்களுக்கான உதவித் தொகை ரூ.20,000/-லிருந்து ரூ.50,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்துடன் திருமாங்கல்யத்திற்கான 4 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. பத்தாம் வகுப்பு வரை படித்த இதர பெண்களுக்கு ரூ.25,000/- மற்றும் திருமாங்கல்யத்திற்கான 4 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 2014-2015 ஆம் ஆண்டில் 51 மகளிர் பயனடைந்துள்ளனர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்மூலம் கருவுற்ற முகாம் வாழ் இலங்கைத் தமிழ் பெண்களுக்கு மகப்பேறு உதவியாக ரூ.12,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2014-2015 ஆம் ஆண்டில் 594 பெண்கள் பயனடைந்துள்ளனர். அதேபோன்று, பெண் குழந்தை பாதுகாப்புதிட்டம் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒரே ஒரு பெண் குழந்தை உள்ள குடும்பத்திற்கு ரூ.50,000/- அப்பெண் குழந்தையின் பெயரில் 20 ஆண்டுகளுக்கு வைப்பீடு செய்யப்படுகிறது. இரண்டு பெண் குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு தலா ரூ.25,000/- வீதம்

2015 செப்டம்பர் 29]

ஒவ்வொரு குழந்தையின் மீதும் 20 ஆண்டுகளுக்கு அப்பெண் குழந்தைகளின் பெயரில் வைப்பீடு செய்யப்படுகிறது. 2014-2015-ல் இத்திட்டத்தின்மூலம் 12 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

18. முதலமைச்சரின் புதிய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், அனைத்து இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது கடந்த 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து முகாம்களுக்கு வெளியில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களும் பயன்பெறும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு முகாம்கள்:

19. தமிழகத்தில் செய்யார் (திருவண்ணாமலை மாவட்டம்) மற்றும் திருச்சி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) சிறப்பு முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றில் குற்ற வழக்குகளில் ஈடுபட்டுள்ள சில இலங்கைத் தமிழர்கள் தங்கவைக்கப்பட்டு தேசிய பாதுகாப்பு நலன் கருதி அவர்களது நடமாட்டங்களைத் தடுக்க வேண்டிய அவசியம் உண்டாகிறது. 1-8-2015 நிலவரப்படி 19 இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டினர் சட்டம் 1946 பிரிவு 3(2)(இ)-ன்கீழ் இவ்விரண்டு சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தினமும் ரூ.100/- வீதம் சமைத்த உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்:

20. பொருளாதாரம் உலக மயமாக்கப்பட்டதன் காரணமாக வேலைவாய்ப்பு, வர்த்தகம் மற்றும் வியாபார வாய்ப்புகளை எதிர்நோக்கி தமிழர்கள் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து செல்வது அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளது. வெளிநாடுகளில் பணிபுரிந்து வரும் காலத்தில் ஏற்படும் ஆதரவற்ற நிலை, பணியமர்த்தப்படுபவர்களால் கொடுமைப்படுத்தப்படுதல் மற்றும் வஞ்சிக்கப்படுதல், சிறைத் தண்டனை மற்றும் சித்ரவதை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு அரசின்மூலம் தீர்வு காண வேண்டியுள்ளது. இத்துடன், அவசர மருத்துவ வசதி கோருபவர்கள் அல்லது அசாதாரண நிலை காரணமாக பாதிக்கப்படுபவர்களை மீட்பதிலும் மற்றும் இறந்த தமிழர்களின் உடல்களைத் தாயகம் கொண்டு வருதலிலும், அரசின் தலையீடு அவசியமாகிறது. வெளிநாடுகளில் பணிபுரிந்து வரும் தமிழர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், குறிப்பாக குறைந்த வருவாய் பெற்று பணியாற்றி வரும் தமிழர்களின் உரிமைகளை மத்திய

[2015 செப்டம்பர் 29

அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக மாநில அரசு பாதுகாக்க வேண்டியுள்ளது. இதன் விளைவாக, சென்னையில் உள்ள மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தில் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன்காக்க தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டு, இந்த ஆணையரகத்தின் பெயர் "அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆணையரகம், இது போன்ற பிரச்சினைகளுக்கு மத்திய அரசின் வெளிநாடு வாழ் இந்தியர் விவகாரத் துறை அமைச்சகத்துடன் ஒருங்கிணைந்தும், பல்வேறு நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களுடன் தொடர்பு கொண்டும் உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அண்மையில் ஈராக் மற்றும் ஏமனில் ஏற்பட்ட கலவரத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து தமிழர்களையும் தாயகம் திரும்ப அழைத்து வருவதில் அரசு வெற்றிகரமாக செயல்பட்டுள்ளது.

21. வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்கள், அலுவலர்களைத் தொடர்பு கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட நல அலுவலர் (வெளிநாடு வாழ் தமிழர்கள்) ஆகவும் மற்றும் மாவட்ட தலைமை மேலாளர் (குற்றவியல்) அவர்களின் பொறுப்பின்கீழ் உள்ள பிரிவானது மாவட்ட நல மையம் (வெளிநாடு வாழ் தமிழர்கள்) ஆகவும் செயல்படும். இந்தப் பிரிவானது வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களிடமிருந்து வருகின்ற முறையீடுகள் மற்றும் குறைகள் தொடர்பான மனுக்களைப் பெற்று, உரிய பதிவேட்டில் பதிவு செய்து, தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், வெளி நாடுகளில் வேலை தேடிச் செல்லும் தமிழர்கள் தொடர்பான விளம்பரங்களை முறைப்படுத்துவது தொடர்பாகவும், பதிவு செய்யப்படாத முகவர்கள்மீது குற்றவியல் நடவடிக்கைகள் தொடரவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. வறிய நிலை/ மருத்துவ இயலாமையில் உள்ள வெளிநாடு வாழ் தமிழர்களை தாய் நாட்டிற்குத் திரும்ப அழைத்து வருவதற்கும் மற்றும் இறந்தவர்களது உடலைக் கொண்டு வருவதற்கும் ஏற்படும் செலவினத்தை மேற்கொள்ள ரூ.1/- கோடி சுழற்சி நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வெளிநாடு வாழ் தமிழர்கள் கோரும்

2015 செப்டம்பர் 29]

அனைத்து விவரங்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தக்க அறிவுரைகள் வழங்கிட ஏதுவாக, மறுவாழ்வுத் துறை ஆணையர் அலுவலகத்தில், இடம் பெயர்ந்தோர் வள மையம் (Migration Resources Centre) என்ற ஒரு அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது.

முன்னாள் படை வீரர்கள் நலன்

22. முன்னாள் படை வீரர்கள் நலனைப் பேணிக் காப்பதில் முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாடு அரசு முன்னாள் படை வீரர்களின் மறுவாழ்வு மற்றும் புனரமைப்பில் கவனம் செலுத்துவதோடு மட்டுமல்லாது இராணுவத்தில் பணிபுரிவோரின் குடும்பத்தார் நலனிலும் அக்கறை செலுத்தி வருகிறது. இதனை நிறைவேற்ற முன்னாள் படை வீரர் நல இயக்ககம் பொதுத் துறையின்கீழ் இயங்கி வருகிறது.

23. முன்னாள் படை வீரர்கள், படைப் பணி புரிவோர் மற்றும் படைப் பணியில் இறந்தோர் ஆகியோரின் குடும்பத்தினரின் நலனை உயர்த்திடும் பொருட்டு முன்னாள் படை வீரர் நல இயக்ககம் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய தமிழ்நாட்டைச் சேர்ந்த 1,400 படை வீரர்கள் படைப் பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றனர். 30-6-2015 அன்றைய நிலவரப்படி முன்னாள் படை வீரர் நலத் துறையில் 1,84,717 முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களின் விதவைகளை தனது பதிவேட்டில் ஏற்கெனவே பதிந்துள்ளது. இவ்வியக்ககம் 29 மாவட்ட அலுவலகங்கள்மூலம் இவர்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் நிறைவு செய்கிறது. அதனுடைய திட்டங்களுக்கு நிதி வழங்கும் பொருட்டு கொடிநாள் நிதி திரட்டும் திட்டத்தின்கீழ் முன்னாள் படை வீரர் நலத் துறை நிதி திரட்டுகிறது.

24. முன்னாள் படை வீரர் நல இயக்ககத்தின் தலையாய திட்டங்களை கீழ்வருமாறு ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தலாம்:—

I. மானியங்கள் / நிதியுதவிகள் வழங்குதல்

II. மறு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தித்தருதல்

III. பயிற்சி மற்றும் திறன் மேம்படுத்துதல்

[2015 செப்டம்பர் 29

IV . கல்வி நிலையங்களில் முன்னாள் படை வீரர்களின் குழந்தைகளுக்கான இட ஒதுக்கீடு

V. சுய வேலைவாய்ப்பினை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்

I. மானியங்கள் / நிதியுதவிகள் வழங்குதல்:

முன்னாள் படை வீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்கு தமிழ்நாடு முன்னாள் படை வீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதி மூலமாக பல்வேறு வகை நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(அ) தமிழ்நாடு முன்னாள் படை வீரர் நல நிதி

25. ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம், பல்வேறு வகையிலான மருத்துவ நிதியுதவி, முன்னாள் படை வீரரின் மகளுக்கு திருமண நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவி மற்றும் இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் இழப்புகளுக்கான கருணைத் தொகை போன்ற நிதியுதவிகள் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் நல நிதியின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

2014-2015 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போர் படை வீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி படை வீரர்களுக்கு ரூ.2,000/-லிருந்து ரூ.3,000/-ஆகவும், விதவையர்களுக்கு ரூ.1,500/-லிருந்து ரூ.2,000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதர நிதியுதவிகள் அளவு கீழ்வரும் அட்டவணையில் உள்ளவாறு சமீபத்தில் உயர்த்தப்பட்டுள்ளது:—

வ. எண்	நிதியுதவியின் பெயர்	உயர்த்தப்பட்ட தொகை (மாதந்தோறும்) ரூ.
1.	ஆதரவற்றோருக்கான ஆயுட்கால மானியம்	1,000/–
2.	முதியோர் ஓய்வூதியம்	1,000/–
3.	கண் பார்வையற்றோருக்கான நிதியுதவி	1,000/–
4.	தொழுநோய் மானியம்	1,000/–
5.	பக்கவாதத்திற்கான மானியம்	1,000/–

2015 செப்டம்பர் 29]

வ. எண்	நிதியுதவியின் பெயர்	உயர்த்தப்பட்ட தொகை (மாதந்தோறும்) ரூ.
6.	மாதாந்திர நிதியுதவி – வறிய நிலையில் உள்ள முன்னாள் படை வீரர்களுக்கு	1,000/–
7.	மாதாந்திர நிதியுதவி – வறிய நிலையில் உள்ள விதவையர்களுக்கு	1,000/–
8.	காசநோய் மானியம்	1,000/–
9.	பக்கவாத மானியம் (முன்னாள் படை வீரர் குழந்தைகளுக்கு)	1,000/–
10.	கண் பார்வையற்றோர் மானியம் (முன்னாள் படை வீரர் குழந்தைகளுக்கு)	1,000/–
11.	மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான மானியம் (முன்னாள் படை வீரர் குழந்தைகளுக்கு)	1,000/–
12.	புற்றுநோய் நிவாரண நிதியுதவி	1,000/–
	இதர உதவிகள்	
13.	திருமண மானியம்	10,000/–
14.	ஈமச்சடங்கு மானியம்	5,000/–
15.	தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீபாவளிப் பண்டிகைக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை	ரூ.1,000/–க்கு (மிகாமல்)

இவை தவிர, முன்னாள் படை வீரர்கள் / விதவைகளுக்குத் தேவைப்படும் செயற்கை உபகரணங்கள், பல்செட், மூக்கு கண்ணாடி, காது கேட்கும் கருவிகள் வழங்கப்படுகின்றன.

2014-2015-ம் ஆண்டில் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் நல நிதியிலிருந்து, 9,926 முன்னாள் படை வீரர் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு மானியங்களாக ரூ.19,19,93,848/- வழங்கப்பட்டுள்ளது.

[2015 செப்டம்பர் 29

(ஆ) தொகுப்பு நிதி

26. தொகுப்பு நிதியிலிருந்து பெறப்படும் வருமானத்திலிருந்து, படைப் பணியில் உயிரிழந்தோரின் வாரிசுகளுக்கும், படைப் பணியில் ஊனமுற்றோருக்கும் பல்வேறு நிதியுதவிகள் வழங்கப்படுகிறது. போரில் உயிர்நீத்தோரின் வாரிசுகளுக்கும், ஊனமுற்றோருக்கும் வழங்கப்படும் நிதியுதவி அளவானது கீழ்வருமாறு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

வ. எண்	நிதியுதவியின் தலைப்பு	ஏற்கெனவே உள்ள தொகை ரூ.	உயர்த்தப்பட்ட தொகை ரூ.
1.	கருணைத் தொகை – போர் விதவைகள்/ சார்ந்தோர்கள்	30,000/–	50,000/–
2.	வருடாந்திர பராமரிப்பு மானியம்	12,000/–	25,000/–
3.	திருமண மானியம் (போரில் உயிர்நீத்தவரின் மகள்கள் மற்றும் போரில் 50% மற்றும் அதற்கு மேற்பட்ட ஊனமுற்ற முன்னாள் படை வீரரின் மகள்களுக்கு)	25,000/–	50,000/–
4.	வீடு கட்ட மானியம்	30,000/–	50,000/–

மேலும், இந்நிதியிலிருந்து பெறப்படும் வருமானம் சுயவேலைவாய்ப்பு திட்டங்களுக்கான வட்டி மானியம் மற்றும் முன்னாள் படை வீரர்களின் சிறார்களுக்கான கல்வி உதவித் தொகைகள் வழங்குவதற்காக பயன்படுத்தப்படுகிறது. முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களுக்கு தொழில் நுட்பம் / வணிக தொழிற்கல்விகளுக்கான உதவித் தொகை ஆண்டொன்றிற்கு ரூ.7,500/-லிருந்து ரூ.10,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கூடுதலாக விடுதிக் கட்டணம் ஆண்டிற்கு ரூ.4,000/- வழங்கப்படுகிறது.

2015 செப்டம்பர் 29]

2014-2015-ம் ஆண்டில் மார்ச் 2015 வரை 5,389 முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தொகுப்பு நிதியிலிருந்து ரூ.5,32,15,225/- வழங்கப்பட்டுள்ளது.

(இ) வீரதீர செயல்களுக்கான பண முடிப்பு மற்றும் படை வீரர்களின் பெற்றோர்களுக்கான போர்ப் பணி ஊக்க மானியம்

27. வீரதீர செயல்களுக்கான வீர பதக்கங்கள், போற்றத்தக்க பணி புரிந்தமைக்கான பதக்கங்கள் பெறுவோருக்கு அரசு நிதியிலிருந்து பணமுடிப்பு வழங்கப்படுகிறது. இப்பணமுடிப்பு தொகையினை அரசு கீழ்க்கண்டவாறு உயர்த்தியுள்ளது.

வ. எண்	விருது பெயர் <u>வீர விருதுகள்</u>	ஏற்கெனவே வழங்கப்பட்டது		பணமுடிப்பு மற்றும் நிலத்திற்கு பதிலாக பணமுடிப்பு தொகையினை சேர்த்து ஒட்டுமொத்தமாக உயர்த்தப்பட்ட தொகை (ரூபாய்)
		பணமுடிப்பு (ரூபாய்)	நிலத்திற்கு பதிலாக பணமுடிப்பு (ரூபாய்)	
1.	பரம்வீர் சக்ரா	22,500	1,50,000	15,00,000
2.	அசோக் சக்ரா	20,000	1,25,000	12,00,000
3.	மகாவீர் சக்ரா	15,000	1,00,000	10,00,000
4.	கீர்த்தி சக்ரா	12,000	75,000	8,00,000
5.	வீர் சக்ரா	7,000	50,000	7,50,000
6.	செளரிய சக்ரா	5,000	40,000	5,00,000
6A	சேனா/ நாவோ / வாயு சேனா பதக்கம் (வீர விருதுகள்)	---	---	50,000
7.	மென்சன்--இன்--டெஸ்பேட்ச்சஸ்	2,000	---	10,000

போற்றத்தக்க சேவைப் பதக்கங்கள்:

வ. எண்.	விருது பெயர்	ஏற்கெனவே வழங்கப்பட்டது (ரூபாய்)	உயர்த்தப்பட்ட பணமுடிப்பு (ரூபாய்)
1.	பரம் விஷிஷ்ட் சேவா பதக்கம்	15,000	50,000
2.	சர்வோத்தும் யுத் சேவா பதக்கம் (OPS)	17,000	50,000
3.	உத்தம் யுத் சேவா பதக்கம் (OPS)	10,000	25,000
4.	அதி விஷிஷ்ட் சேவா பதக்கம்	7,000	25,000
5.	யுத் சேவா பதக்கம் (OPS)	4,000	15,000
6.	விஷிஷ்ட் சேவா பதக்கம்	3,000	15,000
7.	சேனா பதக்கம்	3,000	15,000

இவ்வகையில் 2014-2015-ம் ஆண்டில் வீர பதக்கம் மற்றும் போற்றத்தக்க பணிக்காக பதக்கம் பெற்ற 14 நபர்களுக்கு ரூ.14,14,000/- வழங்கப்பட்டுள்ளது. மேலும், வீர விருது பெற்ற 20 நபர்களுக்கு ஆண்டு உதவித் தொகையாக ரூ.7,650/- மற்றும் பிரதேச இராணுவப் படை விருது (Territorial Army Medal) பெற்ற 39 நபர்களுக்கு ரூ.1,02,000/- வழங்கப்பட்டுள்ளது.

தனது மகன்/மகளை படைப் பணிக்கு அனுப்பிய பெற்றோர்களை கௌரவிக்கும் வகையில், தனது ஒரே மகனை / மகளை படைப் பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு வருடம்

ஒன்றுக்கு ரூ.750/-ம் ஒன்றுக்கு மேற்பட்ட மகன் / மகளை படைப் பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.1,000/ வழங்கப்படுகிறது. 2014-2015-ம் ஆண்டில் ரூ.3,32,500/- போர்ப்பணி ஊக்க மானியமாக தமிழக அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இம்மானியம் 647 பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இம்மானியம் தற்போது படைப் பணிக்கு தனது ஒரே மகன் / மகளை அனுப்பும் பெற்றோர்களுக்கு ஒரே தடவையாக ரூ.20,000/ - மற்றும் வெள்ளிப் பதக்கமும் மேலும் தனது ஒன்றுக்கு மேற்பட்ட மகன்/ மகளை அனுப்பும் பெற்றோர்களுக்கு ஒரே தடவையாக ரூ.25,000/- மற்றும் வெள்ளிப் பதக்கமும் வழங்கப்படும் வகையில் உயர்த்தப்பட்டுள்ளது.

முப்படைகளின் படைப் பணிகளில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ஒரே தடவையாக கீழ்வருமாறு மானியங்கள் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(i) முப்படையில் நிரந்தர படைத்துறை அலுவலர்களாக (Permanent Commissioned Officers) பயிற்சியில் (NDA/IMA/ Naval / Air Force Academy) சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.1,00,000/- வழங்கப்படும்.

(ii) முப்படையில் குறுகிய கால படைத்துறை அலுவலர்களாக (Short Service Commissioned Officers) பயிற்சியில் சேரும் முன்னாள் படை வீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.50,000/- வழங்கப்படும்.

(iii) இராணுவத்தில் இளநிலை படை அலுவலர்கள் மற்றும் இதர பதவியில் (Junior Commissioned Officers and Other Ranks) சேரும் முன்னாள் படை வீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.25,000/- வழங்கப்படும்.

(ச) <u>போரில் உயிர்நீத்தோருக்கான கருணைத் தொகை:</u>

28. போரில் மற்றும் சிவில் நிர்வாகத்திற்கு உதவிடும் நடவடிக்கையின் போது உயிரிழந்த / ஊனமுற்ற படை வீரர்களின் தியாகத்தை போற்றும் வகையிலும், அவர்தம் குடும்பத்தினரின் துயர் நீக்கிடும் வகையிலும் ரூ.10/- இலட்சம் வரை கருணைத் தொகை தமிழக அரசினால் வழங்கப்படுகிறது. 2014-2015-ம் ஆண்டில் இவ்வகையிலாக 17 நபர்களுக்கு ரூ.42,17,000/- மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

[2015 செப்டம்பர் 29

தீவிரவாதிகள் / பயங்கரவாதிகளுக்கு எதிரான பணிகளின்போது உயிர்நீத்த/ ஊனமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவ படை வீரர்களுக்கு (CRPF, CISF, ITBP, SSB) இக்கருணைத் தொகை நீட்டிக்கப்பட்டுள்ளது.

II. மறு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருதல்:

(அ) அரசினால் வேலைவாய்ப்புகள் வழங்கப்படுதல்

29. முன்னாள் படை வீரர்கள் பெரும்பாலும் அவர்தம் இளம்பிராயத்தில் பல ஆண்டுகள் திறமையான பணிக் காலத்தினை மீதமாகக் கொண்டு படைப் பணியிலிருந்து விலகுவதால், அவர்களுக்கு மறு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு, தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் கீழ்வருமாறு இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளது.

1.	பிரிவு "சி" காலிப் பணியிடங்கள்	5%
2.	அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் காலிப் பணியிடங்கள்	10%
3.	வனக்காவலர் காலிப் பணியிடங்கள்	10%
4.	வனப் பாதுகாவலர் காலிப் பணியிடங்கள்	5%
5.	தேசிய மாணவர் படை அலுவலகங்களில் லஸ்கர், ஓட்டுநர் மற்றும் இரவு காவலர்கள் காலிப் பணியிடங்கள்	25%
6.	சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு "சி" காலிப் பணியிடங்கள்	5%
7.	கால்நடை ஆய்வாளர்	5%

முன்னாள் படை வீரருக்காக ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு பரிந்துரை செய்யும் கூட்டு பரிந்துரை அதிகாரத்தை, முன்னாள் படைவீரர் நலத் துறைக்கு தமிழ் நாடு அரசு வழங்கியுள்ளது. 2014-2015-ல் அரசு / அரசு சார்ந்த / வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் குரூப் 'சி' பிரிவில் 83 நபர்களும், குரூப் 'டி'பிரிவில் 110 நபர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

2015 செப்டம்பர் 29]

(ஆ) கோயில் பாதுகாப்புப் படை:

30. தமிழக கோயில்களிலுள்ள சிலைகள், நகைகள், உண்டியல் சேகரிப்புகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை பாதுகாப்பதற்காக கோயில் பாதுகாப்புப் படை 1992-ம் ஆண்டு நிறுவப்பட்டது. கோயில் பாதுகாப்புப் படையில் சிறப்பு காவல் அலுவலர்களாகப் பணிபுரிய முன்னாள் படை வீரர்களுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் பணிபுரியும் முன்னாள் படை வீரர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் தொகுப்பூதியம் ரூ.1,500/-லிருந்து ரூ.5,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டில் இதன் மூலம் 1,545 முன்னாள் படை வீரர்கள் பயன்பெற்றுள்ளனர்.

(இ) கருணை அடிப்படை வேலைவாய்ப்பு

31. படைப் பணியில் உயிர்நீத்தோர் மற்றும் பணியின் போது இறந்தவர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு நிலுவையிலிருந்த 367 விண்ணப்பங்களை சிறப்பு நேர்வாகப் பரிசீலித்து, தீர்வு செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களை முகமை அலுவலர்களாக இந்த அரசு நியமனம் செய்தது. இதன்படி மேற்குறிப்பிட்ட 367 உயிரிழந்தோரின் வாரிசுகளில் 136 வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் 2014-2015 ஆண்டு வரை வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2012-ம் ஆண்டிற்கு பின்னர் பெறப்பட்ட 54 விண்ணப்பங்களில் 12 வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

III. பயிற்சி மற்றும் திறன் மேம்படுத்துதல்:

32. ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்களுக்கு இராணுவத்தில் சேருவதற்கான முன்னோடி பயிற்சி வழங்கப்படுகிறது. அவ்வாறான பயிற்சி திருவண்ணாமலை மாவட்டத்தில் நடத்தப்பட்டது. 2014-2015-ம் ஆண்டில் ரூ.27,825/- அரசு நிதியிலிருந்து செலவிடப்பட்டு 62 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

[2015 செப்டம்பர் 29

IV. கல்வி நிலையங்களில் முன்னாள் படை வீரர்களின் குழந்தைகளுக்கான இட ஒதுக்கீடு:

33. முன்னாள் படை வீரர்களின் சிறார்களுக்கு பொறியியல், மருத்துவம், பல்மருத்துவம், இளங்கலை (செவிலியர்), சட்டப்படிப்பு, பட்டதாரி ஆசிரியர் படிப்பு, தொழில்நுட்பப் பட்டயக் கல்வி, தொழிற்பயிற்சி போன்ற பல்வேறு படிப்புகளுக்காக கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன. தற்போது எம்.பி.பி.எஸ். படிப்பிற்கான இட ஒதுக்கீடு 2-லிருந்து 5 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

V. சுய வேலைவாய்ப்பினை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்:

34. முன்னாள் படை வீரர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதுடன், சுய வேலைவாய்ப்பு துவக்கவும் ஊக்குவிக்கப்படுகிறது. சுய வேலைவாய்ப்பிற்காக பெறப்படும் ரூ.10/- இலட்சம் வரையிலான கடன்களுக்கு 75% வட்டி மானியமும், சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15/- இலட்சம் வரையிலான கடன்களுக்கு 100% வட்டி மானியமும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 2014-2015-ம் ஆண்டு இத்திட்டங்களின் மூலம் 293 முன்னாள் படை வீரர்கள் மற்றும் 8 சுய உதவிக் குழுக்களுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.20,04,710/- மானியமாக வழங்கப்பெற்று பயனடைந்துள்ளனர்.

படைவீரர் மாளிகை/முன்னாள் படை வீரர் மையம்/முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்:

35. நலத் திட்டங்களுக்கான நிதிகளைத் திரட்டும் பொருட்டு, படை வீரர் மாளிகை, முன்னாள் படை வீரர் மையம், முன்னாள் படை வீரர் நல இயக்கக வளாகம் ஆகியவை கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் திரட்டப்படும் நிதி, நல நிதிகளில் சேர்க்கப்படுகிறது. 2014-2015-ம் ஆண்டில் இச்சொத்துக்கள்மூலம் வருவாய் ரூ.2,09,31,084/- பெறப்பட்டுள்ளது.

மின் ஆளுமைத் திட்டம்:

36. முன்னாள் படை வீரர் நலத் துறையில் தேசிய தகவல் மையத்தின் மூலம் மின் ஆளுமைத் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, கணினி வாயிலாக (Online) *பதிவு செய்து அடையாள அட்டை வழங்குதல், வேலைவாய்ப்பு உதவி மற்றும்*

2015 செப்டம்பர் 29]
பல்வேறு நலத் திட்ட உதவிகளை அறிமுகப்படுத்தி முன்னாள் படை வீரர்கள், முன்னாள் படை வீரர் நல இயக்ககத்துடனான தொடர்பை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

புதிய மாவட்ட அலுவலகங்கள் தோற்றுவித்தல்:

37. 2014-2015-ம் ஆண்டில் இந்த அரசு அரியலூர் மாவட்டத்தில் புதிய மாவட்ட முன்னாள் படை வீரர் நல அலுவலகம் தோற்றுவிக்க ஆணைகள் வெளியிட்டது.

தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

38. தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ), தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படை வீரர்களின், சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு பல்வேறு நலத் திட்டங்களை வகுத்து, செயல்படுத்த 1986-ல் நிறுவப்பட்டது. முன்னாள் படை வீரர் நல இயக்ககத்தில் பதிவுசெய்த முன்னாள் படை வீரர்கள் தொகுப்பிலிருந்து பல்வேறு நிறுவனங்கள், துறைகள் ஏனைய சேவை கோரும் முகமைகளுக்கு பாதுகாவலர்கள், ஓட்டுநர்கள், எழுத்தர்கள், தொலைபேசி இயக்குபவர்கள், சுற்றுலாக் காவலர்கள், செவிலியர் உதவியாளர்கள், தீ அணைக்கும் பணியாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள், ஆசிரியர்கள், காப்பாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்குப் பணியாளர்களை வழங்கி, தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் மனிதவள முகமையாக செயல்படுகிறது. தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கழகம், சென்னை மாநகராட்சிக்காக, இலாபத்தினைப் பகிர்ந்துகொள்ளும் அடிப்படையில், வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கும் பணி போன்ற வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 31-3-2015-ன்படி, 10,397 முன்னாள் படை வீரர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு பல்வேறு திட்டங்களில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

புதிய முயற்சிகள்

- *தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கழகத்தில் பணிபுரிபவர்களுக்கு பல்வேறு துறைகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.*

- ❖ தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கழகத்தின் அனைத்து ஒப்பந்தப் பணியாளர்களுக்கும் விபத்து காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.3/- இலட்சம் வழங்கப்படும்.
- ❖ தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக ஒப்பந்த பணியாளர்களுக்காக ஆண்டுக்கு தோராயமாக சராசரி ரூ.2.76 கோடி செலவில் தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கழக நல நிதி திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் தனிப்பிரிவு

39. மாண்புமிகு முதலமைச்சரின் தனிப் பிரிவானது, பொதுமக்களின் குறைகளுக்கு நேர்மையாகவும், நியாயமாகவும், துரிதமாகவும் நடவடிக்கை எடுத்து தீர்வு காணும் மிக முக்கியமான பணியை மேற்கொண்டு வருகிறது. பொதுமக்களின் குறைகள் களையும் முறையில், சேவையின் தரம் மற்றும் அதன் தன்மையை உறுதிப்படுத்துகிற வகையில் இப்பிரிவு செயலாற்றுகிறது.

- குறை தீர்க்கும் அமைப்பு மேலும் செம்மையுறச் செயல்படும் வகையில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- குறைகள் குறித்த மனுக்களைப் பெற்றுக் கொண்டமைக்கு உரிய காலத்தில் ஒப்புகை அளித்தல்.
- குறைகளை மிகுந்த கவனத்துடன் ஆய்வு செய்தல். அத்துடன், தொடர்புடைய துறைகளுக்கு / பிரிவுகளுக்கு மனுக்களை அனுப்பி, குறிப்பிட்ட கால வரையறைக்குள் தீர்வு காணப்படுவதை வலியுறுத்துதல்.
- புகார் அளித்தவருக்கு உரிய முடிவு காணப்பட்ட பதிலை அனுப்புதல்.
- மனுதாரர்களிடமிருந்து தீர்வு தன்மை குறித்த தகவலைப் பெறுதல்.
- புகார் அளித்தவர்களின் குறைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதா என்பதை அறிவதற்காக, சில மனுதாரர்களிடம் கேட்டறிதல்.

2015 செப்டம்பர் 29]

40. முதலமைச்சரின் தனிப் பிரிவுக்குப் பொறுப்பு வகிக்கிற தனி அலுவலருக்கு வழக்கமான தகவல் தொடர்பு முறையை மாற்றி, மாநில அரசின் உரிய அதிகாரியுடன் நேரடியாகக் தொடர்பு கொண்டு குறைகளை விரைவில் தீர்வு செய்யும் வகையில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் சுற்றுப்பயணத்தின் போதும்/ அலுவலகத்திலும் அளிக்கப்படும் மனுக்கள், அளிக்கப்பட்ட புகாரின் தன்மையின் அடிப்படையில் வகைப்பாடு செய்யப்படுகின்றன. மனுக்களின்மீது தீர்வுகாண அந்தந்த தலைமைச் செயலகத் துறைகளுக்கு/துறைத் தலைவர்களுக்கு/ மாவட்ட ஆட்சியர்களுக்கு/காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த தீர்வு முறை முழுவதும் கணினி வழி கண்காணிப்பு மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இந்த தீர்வு முறையை கண்காணித்து மதிப்பீடு செய்யவும், நிலுவையின் கால அளவு, மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்படுதல், குறைகளைக் களையும் முறையின் தரம் ஆகியவற்றை ஆய்வு செய்ய துறைகளின் ஒருங்கிணைப்பு அதிகாரிகளுடன் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு துறையின்/ மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு அதிகாரி, ஒவ்வொரு புகாரின் தீர்வு நடவடிக்கையை ஆய்வு செய்வதற்கு பொறுப்பாக்கப்படுகிறார். மாண்புமிகு முதலமைச்சரின் தனிப் பிரிவும், ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் அவற்றைக் கண்டறிந்து சரிசெய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு, மாதிரி ஆய்வுகளை மேற்கொள்கிறது.

இங்கு பெறப்படும் புகார்களுக்கு தீர்வு காண்பதற்கான கால அளவையும் மனுக்களுக்குத் தீர்வு காணப்படுகின்ற முறையின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக அதிகாரிகளுக்கு ஊக்கமளிக்கும் ஒரு நடவடிக்கையாக, சிறந்த செயல்பாட்டிற்கான விருதுகள்

ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் வருடாந்திர மாநாட்டில் துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கு இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

அண்மைக்காலப் புது முயற்சிகள்:

- 12-8-2012 அன்று முதலமைச்சரின் தனிப்பிரிவு வலைத்தளமான http:/www.cmcell.tn.gov.in வாயிலாக கணினி வழி மனுக்களைத் தாக்கல் செய்வதற்காக துவக்கப்பட்டது. இன்றைய நிலையில், முதலமைச்சரின் தனிப்பரிவிற்குக் கிடைக்கப் பெறும் மனுக்களில் 15% மனுக்கள் கணினி வழியாகப் பெறப்படுகின்றன. பொதுமக்களிடமிருந்து பெறப்படுகின்ற மனுக்களைத் திறம்படக் கையாளும் செயல்முறையை எளிமைப்படுத்தும் வகையிலும், சிறந்த முறையில் கண்காணிக்கப்படுவதைக் கருத்திற்கொண்டும் மனுதாரர்கள் கணினி வழி பொதுச் சேவை மையத்தைத் பயன்படுத்தி தமது மனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

- பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் தொடர்புடைய துறைகளுக்கு/மாவட்டங்களுக்கு அஞ்சல் வழியாக அனுப்பப்பட்டு வந்தது. அஞ்சல் வழி அனுப்புவதால் ஏற்படும் கால தாமதத்தை குறைக்கும் வகையில், தற்போது மனுக்கள் நிழல் ஒளி கூராய்வு (Scan) செய்யப்பட்டு இணையதள வழியாக தொடர்புடைய துறைகளுக்கு/மாவட்டங்களுக்கு உடனுக்குடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

- இவ்வாறாக இணையதளம் வழியாகவும் அஞ்சல் மற்றும் பிற வழியாகவும் 2014 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மனுக்களில் 98% தீர்வு காணப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29]

மானியக் கோரிக்கை எண் 38—பொதுத் துறை (தேர்தல்)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2015-2016

உலகிலுள்ள ஜனநாயக நாடுகளில் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா ஆகும். ஒரு ஜனநாயக நாட்டின் உறுப்பினராக இருப்பது அதன் குடிமக்களுக்கு வாக்களிக்கும் உரிமையைத் தருகிறது. அதுவே, ஒவ்வொரு ஜனநாயகத்தின் மிக முக்கியமான அம்சமாகும். இந்த வாக்குரிமையைப் பயன்படுத்துவதன்மூலம் அரசாங்கமே மக்களுக்கு பொறுப்பாகிறது. தேர்தல்கள் நடத்த வேண்டிய அதிகாரப் பொறுப்பு இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சுதந்திரமான, நியாயமான மற்றும் வெளிப்படையான தேர்தல்களை நடத்துவதற்கான உகந்த ஒரு சூழலையும், முழு ஒத்துழைப்பினையும் தமிழக அரசு தொடர்ந்து தேர்தல் ஆணையத்திற்கு வழங்கி வருகிறது.

I தேர்தல் நிருவாக அமைப்பு முறை

இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரு தேர்தல் ஆணையர்களைக் கொண்ட இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவு 324-ன்கீழ், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின்மூலம் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல், நாடாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றத்திற்கான அனைத்து தேர்தல்களை நடத்துதல், குடியரசுத் தலைவர் மற்றும் துணை குடியரசுத் தலைவர் பதவிகளுக்கான தேர்தல்களை நடத்துதல் ஆகிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களான மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1950, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951, குடியரசுத் தலைவர் மற்றும் துணை குடியரசுத் தலைவர் சட்டம், 1952, முதலியவற்றின்மூலம் மேலும் வலுவாக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கான பொறுப்பு, இந்திய தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு மாநில அளவில் துறையின் தலைவராக விளங்கும் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறைக்கு உதவுவதற்காக மாவட்ட அளவில் மாவட்டத் தேர்தல் அதிகாரிகள்

உள்ளனர். சென்னையைத் தவிர அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு, சென்னை மாநகராட்சியின் ஆணையர் மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். பின்வரும் மாநில நிருவாக அரசு பணியாளர்கள் மாவட்டத் தேர்தல் அதிகாரிக்கு உதவுவதற்காக உள்ளனர்,

(i) வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு வாக்காளர் பதிவு அதிகாரிகள் (EROs) மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் (AEROs) மற்றும்

(ii) தேர்தல் நடத்தும் பணிகளுக்கு தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (ROs) மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (AROs).

மேற்கண்ட அலுவலர்கள் தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும்போது இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர்களாக கருதப்படுவார்கள். கள அளவில் ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும், வாக்குச் சாவடி நிலை அலுவலர்களை இத்துறை பெற்றுள்ளது. அரசு பணியாளர்களான இவர்கள், வாக்குச் சாவடி நிலை அலுவலர்களாக பகுதி நேர அடிப்படையில் பணிபுரிகின்றனர். ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களும் மேற்கண்ட பணிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவு 13A-ன்படி, மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி அனைத்து சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல் மற்றும் திருத்தம் செய்தல் குறித்த பணிகளைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டவராவார். மேலும், 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவு 20-ன்படி நாடாளுமன்ற மற்றும் மாநிலத்திற்கான சட்டமன்றத் தேர்தல்கள் நடத்தப்படுவதைக் கண்காணிக்கும் பொறுப்பும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் தேர்தல் அதிகாரிகளும் 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவு 13AA-ன்படி, அவ்வாறே அறிவிக்கப்பட்டுள்ளனர். ஊரகப் பகுதிகளில் அடங்கும் தொகுதிகளுக்கு, வருவாய்க் கோட்ட அலுவலர்கள் நிலையில்

2015 செப்டம்பர் 29]

உள்ளோர் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும், மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட தொகுதிகளுக்கு மாநகராட்சி ஆணையர்கள், துணை ஆணையர்கள் ஆகியோர் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். வட்டாட்சியர் மற்றும் நகராட்சி ஆணையர்கள், உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, சென்னை மாநகராட்சியின் மண்டல அதிகாரிகள் அந்தந்த மண்டலங்களுக்குரிய வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும், சம்பந்தப்பட்ட உதவி வருவாய் அதிகாரிகள் / செயற்பொறியாளர்கள் அந்தந்த மண்டலங்களுக்குரிய குரிய உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

II பொது (தேர்தல்கள்) துறையின் பொறுப்புகள்

பொது (தேர்தல்கள்) துறையானது பின்வரும் தேர்தல்கள் மற்றும் இடைத் தேர்தல்களை நடத்தும் பொறுப்பினைப் பெற்றுள்ளது:—

- தமிழ்நாடு சட்டப் பேரவையின் 234 சட்டமன்றத் தொகுதிகள்
- தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள 39 மக்களவைத் தொகுதிகள்
- தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள 18 மாநிலங்களவை உறுப்பினர்கள்
- இந்திய குடியரசுத் தலைவர் பதவி மற்றும்
- இந்திய துணை குடியரசுத் தலைவர் பதவி

இத்துறையானது உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் செயற்கட்டளைகளுக்கு உட்பட்டு செயல்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, இத்துறை பின்வரும் பணிகளை மேற்கொண்டு வருகிறது:—

i. பிழையில்லாத புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் பராமரித்தல்

[2015 செப்டம்பர் 29

ii. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரித்தல் மற்றும் அனைத்து வாக்காளர்களுக்கும் வழங்குதல்

iii. வாக்குச் சாவடிகளை அமைத்தல்

iv. பணியாளர்களைத் தேர்வு செய்தல் மற்றும் உரிய பயிற்சி வழங்குதல்

v. முறையாக வாக்காளர்களுக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பு (SVEEP)

vi. வாக்காளர் பட்டியல் பொருண்மை குறித்த பயிற்சி, வாக்காளர் பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி மற்றும் வாக்குச் சாவடி நிலை அலுவலர் ஆகியோருக்கு வழங்குதல்

vii. பாதுகாப்பு மற்றும் காவல் துறையினரைப் பணியில் ஈடுபடுத்துதல்

viii. தேர்தல் செலவினக் கட்டுப்பாடு

ix. தேர்தல் தொடர்புடைய பல்வேறு இதர பணிகள்

III 2014–2015–ன் முக்கிய நிகழ்வுகள்

1. வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2015

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவு 21-ன்படி மக்களவை அல்லது மாநிலச் சட்டப் பேரவைக்கான ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்பும் மற்றும் காலியிடத்தை நிரப்புவதற்கான ஒவ்வொரு இடைத் தேர்தலுக்கு முன்பும், சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்யப்படும். மேலும், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின் அடிப்படையில் இத்தகைய வாக்காளர் பட்டியல் திருத்தம் எந்த ஒரு வருடத்திலும் குறிப்பிட்ட தகுதியேற்படுத்தும் தேதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். சாதாரணமாக, வாக்காளர் பட்டியலின் வருடாந்திர திருத்தமானது ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதல் தேதியைத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

2015 செப்டம்பர் 29]

1-1-2015-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தமானது கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது:—

வரைவுப் பட்டியல் வெளியீடு	15-10-2014
கோரிக்கை/மறுப்புரை அளிக்க கடைசி தேதி	10-11-2014
இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு	5-1-2015

இத்திருத்தத்தின்போது, வாக்காளர் பட்டியலில் இடம்பெற்ற சேர்த்தல்கள், நீக்குதல்கள் மற்றும் திருத்தங்கள் பின்வருமாறு:—

	ஆண்	பெண்	மூன்றாம் பாலினம்	மொத்தம்
சேர்த்தல்கள்	7,95,586	8,27,828	362	16,23,776
நீக்குதல்கள்	1,48,564	1,38,919	44	2,87,527
திருத்தங்கள்	1,97,459	1,61,664	43	3,59,166

5-1-2015 அன்று வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியல்களின்படி 5.62 கோடி வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றனர். அதன் விவரம் பின்வருமாறு :—

	ஆண்	பெண்	மூன்றாம் பாலினம்	மொத்தம்
பொது வாக்காளர்கள்	2,80,68,149	2,81,34,949	3,449	5,62,06,547
பணித் தொகுதி வாக்காளர்கள்	53,669	18,368	0	72,037
மொத்தம்	2,81,21,818	2,81,53,317	3,449	5,62,78,584

[2015 செப்டம்பர் 29

2. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 139. ஸ்ரீரங்கம் சட்டப் பேரவை மற்றும் சென்னை மாவட்டத்திலுள்ள 11. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டப் பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்கள்:—

இந்தியத் தேர்தல் ஆணையமானது திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 139. ஸ்ரீரங்கம் சட்டப் பேரவை தொகுதிக்கான இடைத் தேர்தலை நடத்த 12-1-2015 அன்று அறிக்கை வெளியிட்டதைத் தொடர்ந்து அத்தொகுதிக்கான இடைத்தேர்தல் 13-2-2015 அன்று நடத்தப்பட்டு 16-2-2015 அன்று வாக்குகள் எண்ணப்பட்டன.

இந்தியத் தேர்தல் ஆணையமானது சென்னை மாவட்டத்திலுள்ள 11. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டப் பேரவை தொகுதிக்கான இடைத் தேர்தலை நடத்த 26-5-2015 அன்று அறிக்கை வெளியிட்டதை தொடர்ந்து அத்தொகுதிக்கான இடைத் தேர்தல் 27-6-2015 அன்று நடத்தப்பட்டு 30-6-2015 அன்று வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டது.

இந்த இடைத் தேர்தல்களில், தேர்தல் நடத்தைக்கான விதிமுறைகள் மற்றும் தேர்தல் செலவினக் கட்டுப்பாடு வழிமுறைகள் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டன. மத்திய காவல் படையினர் தேவையான அளவு ஈடுப்படுத்தப்பட்டதுடன் அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மற்றும் வாக்காளர் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டன. 139. ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி மற்றும் 11. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும் நடைபெற்ற வாக்குப் பதிவு நிகழ்வுகளை இணைய வழி (Online)/நிகழிட (Offline) மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இடைத் தேர்தல்கள் அமைதியாகவும், சுதந்திரமாகவும் நடைபெற்றன. 139. ஸ்ரீரங்கம் சட்டப் பேரவை தொகுதி இடைத் தேர்தலில் வாக்குப் பதிவு 81.83 சதவீதமும் மற்றும் 11. டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில் வாக்குப் பதிவு 74.62 சதவீதமும் பதிவாகியுள்ளன. 11. டாக்டர் இராத கிருஷ்ணன் நகர் சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில் தேர்தலை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்திடவும், குடிமக்கள், தேர்தல் அலுவலர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகியோர் தத்தம் பங்கினை சமமாக ஆற்றிடவும், தேர்தல் இயந்திரத்தின் முயற்சிகளை ஒருங்கிணைக்கும் ஒரு தனித்துவமான வழியாக 'இ'-நேத்ரா முறைமை செயல்படுத்தப்பட்டது.

2015 செப்டம்பர் 29]

3. தேசிய வாக்காளர் தினம், 2015

இந்தியத் தேர்தல் ஆணையம், தன்னுடைய நிறுவன தினமான ஜனவரி, 25 ஆம் தேதியை தேசிய வாக்காளர் தினமாக, ஜனவரி 25, 2011 முதல், ஒவ்வோர் ஆண்டும் கொண்டாட முடிவு செய்துள்ளது. 2015 ஆம் ஆண்டின் ஐந்தாவது தேசிய வாக்காளர் தினத்தின் முக்கிய குறிக்கோள் "சுலபமான பதிவு" "சுலபமான திருத்தம்" என்பதாகும். மேலும், பெண்கள், இளைஞர்கள் மற்றும் சமூகத்தில் நலிந்த பிரிவினர் ஆகியோரது பெயர்கள் அதிக அளவில் வாக்காளர் பட்டியலில் இடம் பெறச் செய்வது ஆகும். இதன்மூலமாக, வாக்களித்தலின் அவசியம், வாக்காளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

தேசிய வாக்காளர் தினமானது, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநிலத்தின் அனைத்து வாக்குச் சாவடி அமைவிடங்களிலும் 25-1-2015 அன்று கொண்டாடப்பட்டது. மாநில அளவில் ஆளுநர் மாளிகையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் தலைமையில் தேசிய வாக்காளர் தின விழா சிறப்பாக நடத்தப்பட்டது. அந்நிகழ்வில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி மேதகு ஆளுநர் தலைமையில் அனைவராலும் எடுக்கப்பட்டு, புதிதாக பதிவு செய்த வாக்காளர்களுக்குப் புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியின் போது, வலுவான ஜனநாயகத்திற்குப் பெருமளவில் பங்கேற்றலின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும்வகையில் பள்ளிக் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. மேலும், குடியரசு தின விழா அணி வகுப்பின் போது இத்துறையின் சார்பில் 'ஒப்பனைக்காட்சி ஊர்தியும்' இடம் பெற்றது. இதில் 2015-ன் போது "சுலபமான பதிவு" "சுலபமான திருத்தம்" என்பதன் முக்கியத்துவம் எடுத்துச் சொல்லும் வகையில் அமைக்கப்பட்டது.

அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி அனைவராலும் எடுக்கப்பட்டு, வாக்காளர் பட்டியலில் புதிதாக பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்குப் புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. இதேபோன்று, ஒவ்வொரு வாக்குச் சாவடி அமைவிடங்களிலும் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி எடுக்கப்பட்டு, புதிய

[2015 செப்டம்பர் 29

வாக்காளர்களுக்கான புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. மேற்கண்ட நிகழ்வுகள், வலுவான ஜனநாயகத்திற்குத் தேவையான தேர்தல் நடைமுறைகளின்பால் புதிதாக சேர்க்கப்பட்ட வாக்காளர்களை மிகவும் ஈர்த்தன. தேசிய வாக்காளர் தின விழாக்களுக்கு, குடியுரிமை சங்க அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள், ஊடகங்கள், மகளிர் மற்றும் இளைஞர் அமைப்புகளும் தங்கள் முழு ஆதரவை நல்கின.

இவ்வாண்டு நடைபெற்ற தேசிய வாக்காளர் தின விழாவில் மாநிலம் முழுவதும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் புதிதாக சேர்க்கப்பட்ட வாக்காளர்கள் கலந்து கொண்டு புதிய புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் அடையாள அட்டைகளைப் பெற்றனர். இவ்விழாக்களில் தங்கள் அடையாள அட்டைகளைப் பெற முடியாதவர்களுக்கு வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மூலம் அவை வழங்கப்பட்டன.

IV. 2015–2016 இல் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய நிகழ்வுகள்

1. 1-1-2016-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் மற்றும் தேசிய வாக்காளர் தினம், 2016 1-1-2016-ஐ தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வருடாந்திர வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் குறித்து இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்தவுடன், 2015-ம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் இப்பணி மேற்கொள்ளப்படும். இந்த சுருக்கமுறைத் திருத்தத்துடன் விரிவான "முறையாக வாக்காளர்களுக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பு" "(Systematic Voters Education and Electoral Participation) (SVEEP) பரப்புரை செய்யப்படுவதுடன், இந்தியத் தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்டுள்ள இந்திய சர்வதேச ஜனநாயக மற்றும் தேர்தல் மேலாண்மை நிறுவனத்தால் (India International Institute of Democracy and Election Management) தலைமை பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள்மூலம் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்த பல கட்டப் பயிற்சிகளும் வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து, தேசிய வாக்காளர் தினம் 25-1-2016-ல் கொண்டாடப்படும். இத்தருணத்தில், புதிதாக சேர்க்கப்பட்ட வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

2015 செப்டம்பர் 29]

2. தேசிய அளவில் வாக்காளர் பட்டியல்களைச் செம்மைப்படுத்தி விவரங்களை உறுதிப்படுத்தும் திட்டம் (NERPAP)

வாக்காளர் பட்டியல்களைப் பிழைகளில்லாமலும் மற்றும் விவரங்கள் உறுதிபடுத்தப்பட்டதாகவும் தயாரிப்பதை முதன்மை இலக்காகக் கொண்டு 3-3-2015 முதல் தேசிய அளவில் வாக்காளர் பட்டியல்களை செம்மைப்படுத்தி விவரங்களை உறுதிப்படுத்தும் திட்டம் (National Electoral Roll Participation and Authentication Programme '(NERPAP)' *என்ற விரிவான திட்டத்தினைத் தெளிவான காலவரையறையோடும் வரையறுக்கப்பட்ட இலக்குகளோடும் இந்தியத் தேர்தல் ஆணையம் செயல்படுத்தியுள்ளது.*

திட்ட நோக்கங்கள்

I *வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை விவரங்களோடு ஆதார் எண்களை வாக்காளர் தரவு தளத்தில் பதிவு செய்தல் (இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி 13-8-2015 அன்று முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.)*

II. *வாக்காளர் தாமே முன்வந்து ஒன்றிற்கும் மேற்பட்ட தம்முடைய பதிவுகளைத் தெரிவித்தல் மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர் அத்தகைய விண்ணப்பங்களை சரியான முறையில் 15 நாட்களுக்குள் தீர்வு செய்து அத்தகவல்களை அந்த வாக்காளருக்குத் தெரிவித்தல்*

III. *தகுந்த சான்றுகளின் அடிப்படையில் வாக்காளர்களின் பதிவுகளில் பிழை திருத்தம் செய்தல்*

IV. *தேவைப்படின் விதிகளுக்குட்பட்டு வாக்காளரின் புகைப்படம் மேம்பாடு செய்தல்*

V. *வாக்காளர்களின் அலைபேசி / தொலைபேசி & மின்னஞ்சல் விவரங்களைப் பெறுதல்*

VI. *வாக்குச் சாவடி அமைவிடங்களையும் பாகம் எல்லைகளையும் சீரமைத்தல் (இம்முன்னோடித் திட்டம் கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, திருவள்ளூர் மாவட்டத்தில் முதல் கட்டமாக நடைமுறைப் படுத்தப்பட்டது)*

ஆதார் தரவை இணைக்கும் செயல்முறையானது ஒவ்வொரு வாக்காளரின் ஆதார் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண் விவரங்கள் பெறுதல் மற்றும் ஆதார் எண்ணை வாக்காளர் பட்டியல் தரவு தளத்துடன் இணைத்தல், வாக்காளர் பதிவு அலுவலர்/உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அவற்றை ஆதார் தரவு தளத்தில் சரிபார்த்த பின்பு அதனை வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண்ணோடு இணைத்து உறுதிப்படுத்தல், பிறகு வாக்காளர் பட்டியல் தரவு தளத்துடன் ஆதார் விவரங்களை ஒன்றிணைத்தல்.

தேசிய அளவில் வாக்காளர் பட்டியல்களைச் செம்மைப்படுத்தி விவரங்களை உறுதிப்படுத்தும் திட்டத்தின் கால அட்டவணை பின்வருமாறு:—

வ. எண்	நிகழ்வு	கால அளவு
1.	வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று கணக்கெடுத்தல்	25-03-2015 முதல் 06.04.2015 வரை
2.	வாக்குச் சாவடி அமைவிடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்துதல்	12-4-2015 (ஞாயிற்றுக்கிழமை, 26-4-2015 (ஞாயிற்றுக்கிழமை) 10-5-2015 (ஞாயிற்றுக்கிழமை; 24-5-2015 (ஞாயிற்றுக்கிழமை)
3.	வாக்காளர் பதிவு அலுவலர்கள்/ உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் நடத்தும் சிறப்பு விசாரணை (மாலை நேரங்களில் ஒரு வாரத்திற்கு குறைந்தபட்சம் இருநாட்கள்)	13-4-2015 முதல் 31-5-2015 வரை.

2015 செப்டம்பர் 29]

தேசிய அளவில் வாக்காளர் பட்டியல்களைச் செம்மைப்படுத்தி விவரங்களை உறுதிப்படுத்தும் திட்டம் வெற்றிகரமாக முடிக்கும்பட்சத்தில், 100% பிழையில்லா வாக்காளர் பட்டியல் சாத்தியமாகிவிடும்.

இத்திட்டம் குறித்த விழிப்புணர்வை வாக்காளர்களிடம் ஏற்படுத்தும் வண்ணம் பல்வேறு விழிப்புணர்வு முயற்சிகள் எல்லா அளவிலும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டம் குறித்த பரப்புரை, அச்சு ஊடகங்கள், மின்னணு ஊடகங்கள், வானொலி, பண்பலை மேலும் சமூக ஊடகங்கள் மற்றும் வலைதளங்கள் மூலம் மக்களைச் சென்றடைகிறது. இத்திட்டத்தின் சேவைகளை இந்தியத் தேர்தல் ஆணையம் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரியின் இணையதளங்களிலும் வாக்காளர்கள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் பற்றிய குறும்படங்கள், மின்னணு பதாகைகள், சுவரொட்டிகள் அனைத்து முக்கிய இடங்களிலும் வெளியிடப்பட்டு, அனைத்து வாக்காளர்களும் இத்திட்டம் குறித்த விழிப்புணர்வினைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் நோக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், அனைத்து அளவிலான அலுவலர்களுக்கும் இத்திட்டம் குறித்த பயிற்சியும் இத்திட்டத்தின் பங்கேற்பாளர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

3. முறையாக வாக்காளர்களுக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பு

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க தமிழ்நாட்டில் பொது மக்களிடையே வாக்காளராக பதிவு செய்வது மற்றும் மனசாட்சிப்படி வாக்களிப்பது ஆகியவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. "கண்ணியத்துடன் வாக்களித்தல்" வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்கான பணிகள் நடைபெறும்போதும் மற்றும் தொடர் முறை திருத்தம் குறித்த பணிகள் நடைபெறும் போதும் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தின் மேற்பார்வையின்கீழ், குறிப்பாக இளம் தலைமுறை வாக்காளர்கள் மற்றும் மாணவர்கள் வாக்காளர்களாக தங்களைத் பதிவு செய்யத் தூண்டும் வண்ணம் பல்வேறு விழிப்புணர்வு முயற்சிகள் மாவட்டத் தேர்தல் அதிகாரிகள்மூலமாக

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 100 சதவீத வாக்காளர் பதிவு என்னும் இலக்கின் அடிப்படையில் பல்வேறு அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

"முறையாக வாக்காளர்களுக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பு" முயற்சிகள் மூலமாக 1-1-2016 ஆம் நாளை தகுதி நாளாகக் கொண்டு தகுதியான அனைவரும் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்படும்.

4. தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு

இந்தியத் தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல் தயாரிப்பு பணியை செம்மையாகவும், பயனுள்ள வகையிலும் நிருவகிக்க ஏதுவாக கணினியில் பல மென்பொருட்கள் மற்றும் புதிய தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறது. இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்துள்ளபடி, மாநிலம் முழுவதற்குமான வாக்காளர் பட்டியல் கணினிமயமாக்கல் பணியினைக் கையாளவும், கண்காணிக்கவும் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் மற்றும் அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகங்களிலும் தேவையான உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் அடங்கிய தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படியும் ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத்தன்மை சட்டம் மற்றும் விதிமுறைகளின்படியும் அரசாணை நிலை எண் 614, பொதுத் (தேர்தல்கள்-2) துறை, நாள்: 12-6-2015-ல் ஆம்னி அகேட் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் ஒப்பந்த உடன்படிக்கையாக 1-6-2015 லிருந்து ஐந்து ஆண்டு காலம் மாநில அளவிலான முகமையாக மற்றும் வாக்காளர் பட்டியல் பராமரிப்பு மற்றும் மேம்படுத்துதல் பணிகள், தேர்தல் நடத்துதல் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் மாநிலம் முழுவதற்குமான கணினி வன்பொருட்கள் பராமரிப்புப் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29]

இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தலின் அடிப்படையில் 10 இருக்கைகள் கொண்ட 1950 என்ற எண் கொண்ட கட்டணமில்லா தொலைபேசி அழைப்பு மையம் வருடம் முழுவதும் அதாவது தேர்தல் அல்லாத மற்றும் திருத்தம் இல்லாத நேரத்திலும் நிரந்தரமாக இயங்கி வருகிறது. மேலும் வாக்காளர்கள் 9444123456 என்ற எண்ணுக்கு குறுந்தகவல்கள் அனுப்பி தங்களது வாக்குச் சாவடியை தெரிந்து கொள்ளும் வசதியும் இத்துறையால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தியத் தேர்தல் ஆணையமானது "தேசிய அளவில் வாக்காளர் பட்டியலை செம்மைப்படுத்தி விவரங்களை உறுதிப்படுத்தும் திட்டம்'' என்ற திட்டத்தை 3-3-2015 முதற்கொண்டு செயல்படுத்தியுள்ளது. 100% பிழைகளற்ற மற்றும் விவரங்கள் உறுதிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் தயாரித்தல் மற்றும் ஆதார் எண்/ஆதார் பதிவு செய்யும் பொழுது வழங்கப்பட்ட அடையாள பதிவு எண்ணை இணைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். எனவே வாக்காளர் பற்றிய தரவுகளை தேசிய வாக்காளர் சேவை தளத்தில் இணைப்பதற்கு போதுமான தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பினை ஏற்படுத்துவதும், கணினி வன்பொருட்கள் மற்றும் இணைப்புகளை மேம்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே, ஒன்றிற்கும் மேற்பட்ட பதிவுகளை நீக்குதல், தேசிய வாக்காளர் சேவை தளத்தில் இணைத்தல் போன்றவற்றிற்காக ஒரு மைய வாக்காளர் பட்டியல் தரவு தளம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மத்திய கிளவுட் சர்வர், தலைமைத் தேர்தல் அதிகாரி, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களுக்கான அகன்ற வரிசை இணைப்புகள் வழங்கும் பணி சென்னை தொலைபேசி நிறுவனத்திடம் தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத்தன்மை சட்டம் 1998-ல் பிரிவு (16) உட்பிரிவு (1)-ன்படி ஒப்பந்தப்புள்ளி கோராமல் ஒப்படைவு செய்ய இத்துறை முடிவெடுத்துள்ளது.

மேலும் 29 மாவட்டங்களுக்கான 6 கோர் சர்வர்கள், மத்திய கிளவுட் சர்வர் மற்றும் 29 சர்வர்களுக்கான MS-SQL சர்வர் 2014 மென்பொருள் உரிமை ஆகியவற்றை வழங்கும் பணியை எல்காட் நிறுவனத்திடம் தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத்தன்மை சட்டம் 1998-ல் பிரிவு (16) உட்பிரிவு (1)-ன்படி ஒப்பந்தப்புள்ளி

கோராமல் ஒப்படைவு செய்ய இத்துறை முடிவெடுத்துள்ளது. தலைமைத் தேர்தல் அதிகாரி, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் அலுவலகங்களில் உள்ள கணினிகளை மாற்றி புதிய கணினி வழங்கும் பணியையும் ஒப்படைவு செய்ய இத்துறை முடிவெடுத்துள்ளது. 2009, 2013 மற்றும் 2014-ம் ஆண்டில் 166 கணினிகள் தலைமைத் தேர்தல் அதிகாரி, 32 மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், 97 வாக்காளர் பதிவு அலுவலர்கள், 234 உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் அலுவலகங்களின் பயன்பாட்டுக்காக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்கூறப்பட்ட பணிக்காக 483 கணினிகள் மேலே கூறப்பட்ட அலுவலகங்களுக்கு தேவைப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில் மின்னணு சிறு பலகைமூலம் சோதனை முறையில் மேற்கொள்ளப்படும் திட்டத்திற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத் தன்மை சட்டம் 1998 மற்றும் திருத்தச் சட்டம், 2000-ன்கீழ் மின்னணு சிறு பலகைகள் வாங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியதன்படி இத்துறையானது வாக்காளர் பட்டியலில் உள்ள ஒன்றிற்கும் மேற்பட்ட பதிவுகளை களைவதற்கும் செம்மைப்படுத்துவதற்குமான முயற்சிகளை "தேசிய அளவில் வாக்காளர் பட்டியலைச் செம்மைப்படுத்தி விவரங்களை உறுதிப்படுத்தும் திட்டம்" வழியாக முயற்சி செய்து வருகிறது.

5. வாக்காளர்களுக்கு பி.வி.சி.-யிலான வண்ணப் புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

தமிழ்நாட்டில் வாக்காளர் அடையாள அட்டை வழங்கும் பணி 1996 ஆம் ஆண்டிலிருந்து மூன்று கட்டங்களாக நடைபெற்று, நான்காம் கட்டப் பணிகள் (இணைய வழியில்) பிப்ரவரி 2006 முதல் ஏப்ரல் 2006 வரை நடைபெற்றன. மாநிலம் முழுவதும் 100 விழுக்காடு புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வாக்காளர்களுக்கான புகைப்பட அடையாள அட்டைகள் வழங்க இந்தியத் தேர்தல் ஆணையம்

2015 செப்டம்பர் 29]

வலியுறுத்தியுள்ளது. மேற்படி இலக்கை அடைவதற்கான அனைத்து முயற்சிகளும் ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாகத் தற்பொழுது தமிழ்நாட்டில் 100 சதவிகித புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து 234 சட்டமன்றத் தொகுதிகளில் உருவாக்கப்பட்ட வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மையங்கள் தற்பொழுது பொதுமக்களிடமிருந்து படிவங்கள் பெறுதல், தரவு உள்ளீடு, ஸ்கேனிங், வாக்காளர் பட்டியல் தரவு தளத்தை பராமரித்தல், இணையதள அறிக்கை அளித்தல் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிக்கான வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைக்கான பி.டி.எப். வடிவத்தை உருவாக்கி, குறுந்தகட்டில் தகவல்களை வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை ஆபரேட்டர்களிடம் வழங்குதல் முதலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின் படி., தற்பொழுது மாநிலத்தில் இந்தியத் தேர்தல் ஆணையம் வகுத்துள்ள நெறிமுறைகளின்படி வாக்காளர்களுக்கு கறுப்பு வெள்ளை வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைக்குப் பதிலாக வண்ண பி.வி.சி. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்க உத்தேசிக்கப்பட்டு, அதை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, மாநிலத்திலுள்ள 32 மாவட்டங்களை 5 பகுதிகளாகப் பிரித்து முறையே சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய ஐந்து பகுதிகளுக்கு ஆபரேட்டர்களை தேர்வு செய்யும் முகமையாக எல்காட் நிறுவனம், சென்னை-35 நியமிக்கப்பட்டு, எல்காட் நிறுவனத்தால் 5 பகுதிகளின் பி.வி.சி. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (புதிய மற்றும் மாற்று வாக்காளர்கள்) அச்சிட்டு வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, தற்பொழுது திருவாளர்கள் பிரிண்டோகிராபி சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், மும்பை என்ற நிறுவனம் சென்னை, திருச்சி மற்றும் மதுரை உள்ளடக்கிய பகுதிகளுக்கும் மற்றும் திருவாளர்கள் சிவிஸ் டெக் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஐதராபாத் என்ற நிறுவனம் சேலம் மற்றும் கோயம்புத்தூர் உள்ளடக்கிய பகுதிகளுக்கும் வண்ண பி.வி.சி. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (புதிய மற்றும் மாற்று

[2015 செப்டம்பர் 29

வாக்காளர்கள்) தயாரிப்பதற்காக ஆபரேட்டர்களாக ஐந்து ஆண்டு காலத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், தொடர் திருத்தக் காலங்களில் வண்ண பி.வி.சி. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் அச்சிட்டு வழங்குவதற்காக ஒவ்வொரு மாவட்ட தலைமையகத்திலும் ஒரு பணி நிலையம் ஒப்பந்ததாரர்களால் அமைக்கப்பட்டுள்ளன. வண்ண பி.வி.சி. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மாநிலத்தில் நடைமுறைப்படுத்திய பிறகு இதுவரை 25.80 இலட்சம் வாக்காளர்களுக்கு (10 இலட்சம் தொடர் நிகழ்வு திருத்தத்தின் போதும் மற்றும் 15.80 இலட்சம் சிறப்பு சுருக்க முறை திருத்தம், 2015-ன் போதும்) அச்சிடப்பட்டு ஒப்பந்ததாரர்களால் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்து வாக்காளர்களுக்கும் புதிய அல்லது மாற்று வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையாக எதுவாக இருந்தாலும் வண்ண பி.வி.சி. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கு இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

V. நிதி ஒதுக்கீடு

தேர்தல் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு "2015.00 தேர்தல்கள்" என்ற பெருந்தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண்.38.02 இல் இடம் பெற்றுள்ளது. 2015-2016 ஆம் நிதி ஆண்டில், தேர்தல் பணிகளுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள், 1-1-2016-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக்கொண்டு மேற்கொள்ளப்படவுள்ள புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல், திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் புகைப்பட வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை வழங்குதல், மக்களவை பொதுத் தேர்தல் மற்றும் தமிழக சட்டப் பேரவைக்கான இடைத்தேர்தல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்காக ரூ.133,35,62,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன செலவினங்களுக்கான மதிப்பீடுகள் சில முக்கிய இனங்களுக்கு தலைப்பு வாரியாக கீழே விவரமாக விவரிக்கப்பட்டுள்ளன:

2015 செப்டம்பர் 29]

102. தேர்தல் அதிகாரிகள்

எ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள்

தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தில் தேர்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் முதலியோரின் ஊதியம் மற்றும் படிகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், சில்லறை செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள் முதலான செலவினங்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.19,58,32,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை மத்திய அரசு திரும்ப அளிக்கும்.

103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்

எ. சட்டப் பேரவைத் தொகுதிகள்

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டப் பேரவைத் தொகுதிகளின் புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல், திருத்துதல் மற்றும் அச்சிடுவதற்கான செலவினங்கள் இத்துணைத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக நியமிக்கப்படும் தற்காலிக பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் ஆகியவையும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். மேலும், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் சட்டப் பேரவை தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை பராமரிப்பதற்காக நிரந்தர அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ள ஒரு உதவியாளர் மற்றும் ஒரு பதிவுரு எழுத்தர் ஆகியோருக்கு ஊதியம் மற்றும் படித் தொகைகள் ஆகியவை இத்துணை கணக்குத் தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு, வாக்காளர் பட்டியல் தரவு தளத்தை பராமரித்தல், புவியியல் குறியீட்டு முறையிலான வாக்குச் சாவடிகள் சீரமைப்பு, தேசிய வாக்காளர் தின கொண்டாட்டங்கள், தேர்தல்களின்போது வாக்குச்சீட்டுகள் விநியோகம் செய்தல், கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் அளிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு தகவல் கடிதங்கள் அனுப்புவதற்கான அஞ்சல் கட்டணம் ஆகிய செலவினங்களும் இத்துணைத்

தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2015-2016 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.87,86,49,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை மத்திய அரசு திரும்ப அளிக்கும்.

104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

ஏஏ. மக்களவைக்கும் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள்

மக்களவை மற்றும் சட்டமன்றப் பேரவைக்கு தேர்தல்கள் நடைபெறும்போது ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாடு சேமிப்புக் கழக நிறுவனக் கிடங்குகள், ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிடங்குகளில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் சேமித்தலுக்கான வாடகைக் கட்டணம் வழங்குதல் மற்றும் தேர்தல் பொருட்கள் வாங்குதல் போன்ற செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத் திட்டத்தில் ரூ.1,84,37,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை மத்திய அரசு திரும்ப அளிக்கும்.

105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

ஏபி. மக்களவைக்குத் தேர்தல்

மக்களவைக்கு மட்டும் தனியாக பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு பின்னர் முழுத் தொகையையும் மத்திய அரசிடமிருந்து திரும்ப அளிக்கும். 16-வது நாடாளுமன்ற பொதுத் தேர்தல் சமீபத்தில் 24-4-2014 அன்று நடைபெற்றது. தற்போது தமிழ்நாட்டிலிருந்து நாடாளுமன்றத்திற்கான மக்களவையில் காலியிடம் ஏதுமில்லை.

நாடாளுமன்ற மக்களவைக்கான அடுத்த பொதுத் தேர்தல்கள் மே மாதம் 2019-ல் நடைபெறவுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 27,000/- அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29]

106. மாநிலச் சட்டப் பேரவை தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

என். மாநிலச் சட்டப் பேரவை

மாநிலச் சட்டப் பேரவைக்கு நடைபெறும் பொதுத் தேர்தல்கள் மற்றும் இடைத் தேர்தல்கள் தொடர்பான செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இது தொடர்பான தமிழக சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தலை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு/தற்காலிக பணியாளர்களுக்கான ஊதியம், படிகள், பயணப்படிகள் மற்றும் கடுமையான தேர்தல் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கான மதிப்பூதியம், தொலைபேசி கட்டணங்கள், முக்கிய நிகழ்வுகளைக் காணொளிப் பதிவு செய்தல், தேர்தல் பார்வையாளருக்கான செலவினம், வாக்குச் சாவடிகளில் நிகழிட காணொளிப் பதிவு மற்றும் குறுந்தகவல் அடிப்படையிலான வாக்குப் பதிவு கண்காணிப்பு முறைகள், தேர்தல் மாதிரி நடத்தை விதிகளைத் தீவிரமாக அமல்படுத்துதல், பறக்கும் படை, வீடியோ கண்காணிப்புக் குழு, நிலை கண்காணிப்புக் குழு ஆகிய செலவின கண்காணிப்புக் குழுக்களுக்கான செலவினம், முக்கிய இதர சில்லறைச் செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தேர்தல் நாளன்று மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் வாக்களிப்பது குறித்த விளம்பரம், வாக்கு எண்ணிக்கை மையங்களில் தடுப்பு அரண் ஏற்படுத்துவது மற்றும் விளக்குகள் அமைத்தலுக்கான செலவினங்கள், எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநரால் வழங்கப்பட்ட தேர்தல் பொருட்கள் மற்றும் எழுதுபொருட்கள், முறையாக வாக்காளருக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் பங்கேற்பு நடவடிக்கைகள் (SVEEP) ஆகியவற்றிற்கான பிரச்சாரச் செலவினம், வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணுகைப் பணியாளர்கள், பாரத மின்னணு நிறுவனத்தின் தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர், ஓய்வு பெற்ற காவலர்கள், தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களுக்கான பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய் செலவினம், அச்சுக் கட்டணங்கள் ஆகியவற்றிற்கான செலவினங்கள் அனைத்தும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

[2015 செப்டம்பர் 29

சட்டமன்றப் பேரவை இடைத்தேர்தலுக்கான அனைத்து செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.17,51,56,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களையும் மாநில அரசே ஏற்கும்.

108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

எஎ. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டப் பேரவை தொகுதிகளிலும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் மையங்கள் அமைக்கப்பட்டு, வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வாக்காளர்களுக்கு வண்ண பி.வி.சி. அடையாள அட்டைகளை வழங்கும் பணியை இத்துறை மேற்கொண்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.6,43,95,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தில் 50 சதவீதத்தினை மத்திய அரசு திரும்ப அளிக்கும்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமையின்கீழ் செயல்படும் முழுத் தேர்தல் நிருவாக அமைப்பும், தனது பொறுப்பினை முற்றிலும் உணர்ந்துகொண்டு, பிழைகளற்ற வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்கவும், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த மிகப் பொறுப்பான குறிக்கோளை அடைவதற்கு தமிழக அரசு தேவையான முழு ஒத்துழைப்பினையும் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கி வருகிறது.

இணைப்பு IV

(124 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2015-2016

முகவுரை:

"வாரி பெருக்கி வளம்படுத்(து) உற்றவை
ஆராய்வான் செய்க வினை" 512

என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஏற்றமிகு தலைமையிலான இவ்வரசு, வருவாய் தரும் வழிமுறைகளைத் திறம்படத் தெரிவுசெய்து, அதனைப் பெருக்கி, அத்தகைய வருவாயைத் தொலைநோக்கோடு முறையான வழிகளில் பயன்படுத்தி தமிழக மக்களுக்கு நலன் பயக்கும் நல்ல பல திட்டங்களைக் கடந்த நான்கு ஆண்டுகளாக செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையிலான இவ்வரசு இந்த நிதியாண்டு உட்பட தொடர்ந்து கடந்த ஐந்து நிதிநிலை அறிக்கைகளை பல புதிய திட்டங்களுடன் இந்த அரசின் பல்வேறு சாதனைகளையும் எடுத்துரைத்து தாக்கல் செய்து சாதனை படைத்துள்ளது.

3. நிதித் துறையின் முக்கிய பணிகள்:

(i) மாநில அரசின் நிதி மேலாண்மை தொடர்பான அனைத்து கொள்கை முடிவுகளை உருவாக்குதல், ஆய்வு செய்தல்.

(ii) ஒவ்வொரு ஆண்டும் அரசின் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையினை தயாரித்து சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்தல்.

(iii) தமிழக அரசின் பொது நிதி நிருவாகத்தினை மேலாண்மை செய்தல்.

(iv) மாநிலக் கருவூலத்தை நிருவகித்தல்.

(v) வரவுகளையும் செலவுகளையும் சீராகப் பராமரிக்கும் ஒட்டுமொத்த பொறுப்புடன் கடன் பொறுப்புகளைத் திருப்பிக் கொடுக்கும் பொறுப்பினையும் வகித்தல்.

(vi) ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அரசின் நிதி இலக்குகளை எய்தும் பொருட்டு, வரவுக்கேற்றபடி செலவினங்களைச் செய்யும் பொருட்டு, தேவை, செலவுக்கேற்ற பயன், ஆகியவற்றின் அடிப்படையில் வரவு செலவுத் திட்ட நிதியொதுக்கம், நிதி நடைமுறை, முதலியவற்றைப் பல்வேறு துறை வாரியாக கூர்ந்தாய்வு செய்து மதிப்பீடு செய்தல்.

4. தமிழ்நாட்டின் பொருளாதாரம், அனைத்து முக்கியத் துறைகளிலும் அதன் இலக்கினை எய்துவதற்காக, பதினைந்து இலட்சம் கோடி ரூபாய் மொத்த முதலீட்டு மதிப்பீட்டில், பல்வேறு முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களைத் தெரிவு செய்து அவற்றை நிறைவேற்றுவதற்காக துறை சார்ந்த குறிப்பிட்ட உத்தி அணுகுமுறையுடன், தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ன் இரண்டாம் தொகுதியை, 21-2-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டத்தினை நிறைவேற்றிடத் தேவையான நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் வகையில் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ன் மூன்றாம் தொகுதியாக "உள்கட்டமைப்பு செயல் திட்டம்" வகுக்கப்பட்டு, அதற்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

5. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (Tamil Nadu Infrastructure Fund Management Company Limited) என்ற புதிய நிறுவனம் 15-7-2015-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஒரு சொத்து மேலாண்மை நிறுவனமாகச் செயல்படும். தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் புதிய நிதியுதவி அமைப்புகளை ஏற்படுத்தி நிருவகிக்கும். இந்நிறுவனம் இந்திய பங்கு பரிவர்த்தனை வாரிய (SEBI) வழிகாட்டுதலின்படி உள்கட்டமைப்பு வசதிக் கடன் நிதியம் (Infrastructure Debt Fund), மாற்று முதலீட்டு நிதி (வகை-I) (Alternative Investment Fund) மற்றும் உள்கட்டமைப்பு வசதி முதலீட்டு பொறுப்பாண்மை / கூட்டு நிறுவனம் (Infrastructure Investment Trust) உட்பட்ட உள்கட்டமைப்பு நிதியுதவி அமைப்புகளை (Infrastructure Finance Vehicles)

2015 செப்டம்பர் 29]

உருவாக்கும். தமிழ்நாட்டின் நான்காம் தலைமுறை நிதி நிறுவனங்களான இந்நிறுவனங்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் புகழ் பெற்ற தனியார் நிதி நிறுவனங்களுடன் கூட்டாகச் செயல்படும். இவற்றுக்கான நிதியானது உள்நாடு மற்றும் அயல்நாடுகளிலிருந்து முதலீடு செய்யக்கூடிய முதலீட்டாளர்களிடமிருந்து திரட்டப்படும். இந்நிதியானது, பொதுத் துறை, தனியார் துறை மற்றும் அரசு-தனியார் பங்களிப்பு முறையிலோ அல்லது ஒப்பந்தக் கொள்முதல் முறையிலோ உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு கடனாகவும்/முதலீடாகவும் தரப்படும்.

6. மேலும், மதுரை-தூத்துக்குடி தொழில் மேம்பாட்டு வழித்தடத் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் ஆளுகை அமைப்பின் ஒரு பகுதியாக மதுரை-தூத்துக்குடி தொழிலக பெருவழிச்சாலைத் திட்ட வளர்ச்சி நிதி மற்றும் மதுரை-தூத்துக்குடி தொழிலக பெருவழிச் சாலைத் திட்ட அமலாக்க சுழல் நிதி ஆகியவற்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. இதன்படி நிதித் துறையின் கட்டுப்பாட்டில் மேற்குறிப்பிடப்பட்ட நிதிகளை நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. இந்நிதிகளின் மேலாண்மையானது, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். இத்தகைய முயற்சிகள் அனைத்தும், பெரிய அளவில் நிதி தேவைக்கான இடைவெளியினை நிரப்பி, அதிகளவில் கட்டமைப்புத் திட்டங்களுக்குத் தேவையான கூடுதல் நிதி ஆதாரங்களை வழங்கி பொருளாதார வளர்ச்சியினை உயர்த்த உதவும்.

8. நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் பின்வரும் ஏழு துறைகள் இயங்கி வருகின்றன:—

(i) கருவூலக் கணக்குத் துறை

(ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(iii) கூட்டுறவு தணிக்கைத் துறை

(iv) சிறு சேமிப்புத் துறை

(v) அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

(vi) அரசுத் துறை - நிறுவனத் தணிக்கைத் துறை

(vii) ஓய்வூதிய இயக்ககம்

[2015 செப்டம்பர் 29

தொடர் எண் (i) முதல் (vi) வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண் 50 "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு காலப் பயன்களும்" குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

கருவூலக் கணக்குத் துறை

9. கருவூலக் கணக்குத் துறையானது கருவூலக் கணக்கு இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இத்துறையின்கீழ் இயங்கும் ஆறு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், ஏழு சம்பளக் கணக்கு அலுவலகங்கள், இரண்டு சார் சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 32 மாவட்டக் கருவூலங்கள், ஒரு ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், ஓர் உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 229 சார் கருவூலங்கள், கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

மின் ஆளுமை முயற்சிகள்

(i) வலைதள சம்பளப் பட்டியல் (Web Payroll) :

10. இத்திட்டம் 2013-2014 ஆம் ஆண்டு முதல் கருவூலக் கணக்குத் துறை அலுவலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு தற்போது பிற துறை அலுவலகங்களிலும் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசுப் பணியாளர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த தரவுதளத்தில் (Centralized Database) பணியாளர்களின் விவர எண்ணிக்கை, சம்பளம் மற்றும் அதைச் சார்ந்த பிற விவரங்களை பெறும் வகையில் வலைதளப் சம்பளப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது. இது தவிர, மனிதவள மேலாண்மை அமைப்பிற்கு இத்திட்டம் ஒரு சிறந்த கருவியாக அமையும்.

(ii) ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் (IF&HRMS):

11. நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள் திறம்பட மற்றும் செவ்வனே நடைபெற நிதி மற்றும் மனித வள மேலாண்மையை ஒருமைப்படுத்தி ஒருங்கிணைந்த நிதி மற்றும்

2015 செப்டம்பர் 29]

மனிதவள மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு இதனடிப்படையில், திருவாளர்கள் அசென்சர் சர்வீசஸ் (பி) லிமிடெட், சென்னை நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட திட்ட விவர அறிக்கையின்படி, திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தேர்வு செய்து திருவாளர்கள் விப்ரோ நிறுவனத்துடன் 288.91 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான பணிகள் திருவாளர்கள் விப்ரோ நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

12. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள 22,000-க்கும் மேற்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் நேரடியாக இணையத்தின்மூலம் சம்பளப் பட்டியலை கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். இத்திட்டத்தில் பொது நுழைவாயில் சேவையை (Common Gate Way) பயன்படுத்துவதால் அரசு நிகழ்நேர வருவாயை உடனுக்குடன் பெற இயலும். இதன்மூலம் பொதுமக்கள் தடைகளின்றி உடனடி சேவையை பெற இயலும். இத்திட்டத்தின்மூலம் அனைத்து அரசுப் பணியாளர்களின் பணிப் பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் கணினிமயமாக்கப்பட்டு சம்பளப் பட்டியல், பதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மற்ற விவரங்கள் உடனுக்குடன் பதியப்படும். நிதி மற்றும் மனித வள மேலாண்மை திட்டம், எண்ம ஒப்பம் (Digital Signature) மற்றும் உயிரி அடையாளப் பதிவுமுறை (Bio - Matric) மூலம் உறுதிப்படுத்துவது போன்ற பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் நிதி நிலை விவரம் உடனுக்குடன் அரசுக்கு கிடைப்பதுடன் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை நிருவாகம் குறித்த முடிவுகளை அரசு உடனுக்குடன் எடுக்க இயலும்.

(iii) மின்னணு வழி ஓய்வூதியம் (e-Pension):

13. இத்திட்டம் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் 1-9-2013 முதல் செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியதாரர்களின் அனைத்து விவரங்களும் கணினியில் பதிவு செய்யப்பட்டு, மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் இதர பணப் பயன்கள் அவரவர் வங்கிக் கணக்கில் மின்னணு தீர்வை/மண்டல மின்னணு தீர்வை மூலம் (ECS/RECS) வரவு வைக்கப்படுகிறது. அனைத்து

ஓய்வூதியதாரர்களும் தங்களது ஓய்வூதிய விவரங்கள் அவர்களின் வங்கி கணக்கில் பற்று வைக்கப்படுவதை இணையதளம் (online) மூலம் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(iv) ஓய்வூதியர் நேர்காணல்: (Mustering of Pensioners)

14. மூத்த குடிமக்களுக்கு ஏற்படும் இடர்களைக் கருத்தில் கொண்டு, ஓய்வூதியதாரர்களின் வருட நேர்காணலை எளிமைப்படுத்தும் முயற்சியாக தேசிய தகவலியல் மையத்துடன் (NIC) இணைந்து, ஓய்வூதியதாரர்கள் அடையாளம் காண உயிரி அடையாளப் பதிவு செய்தல் (Bio Metric identification) மற்றும் வலைதள ஒளிப்பட கருவி (Webcamera) மூலம் புகைப்படம் எடுக்கும் முறை நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. வருட நேர்காணலின்போது தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடன், அனைத்து கருவூலங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்தில் விரல்ரேகை மின்னணு பதிவு முறையில் அடையாளம் காண்பதற்காக ஓய்வூதியதாரர்களின் விரல்ரேகை மற்றும் புகைப்படம் கணினியில் பதிவு செய்யப்படுகின்றது.

15. மேலும், ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் மூலம் ஓய்வூதியதாரர்கள் தங்களுக்கான அரசின் சேவைகள் அனைத்தையும் எவ்வித சிரமமும் இன்றி மிக எளிமையாக பெற முடியும்.

(v) ஓய்வூதிய ஆவணங்கள் கணினிமயமாக்கல் (Digitization):

16. ஓய்வூதிய கொடுவை ஆணைகளை கணினிமயமாக்கும் முறை ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்து மாவட்ட கருவூல அலுவலகங்களிலும் தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (ELCOT) மூலம் நடைபெற்று வருகிறது. இதற்கென அரசு 1.26 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்து ஆணையிட்டுள்ளது. கணினிமயமாக்கப்பட்டபின், ஓய்வூதிய ஆவணங்கள் மின்னணு ஓய்வூதிய மென்பொருளில் இணைக்கப்படும். இச்செயலாக்கத்தின் மூலம் ஆவணங்கள் மற்றும் தகவல்களை நீண்டகாலம் பாதுகாப்பாக வைக்க முடியும். ஒரே நேரத்தில் பல்வேறு பதிவுகளைப் பயன்படுத்தவும், பார்வையிடவும் இயலும். தற்போது இப்பணி நிறைவு பெறும் தருவாயில் உள்ளது.

2015 செப்டம்பர் 29]

(vi) ஓய்வூதியதாரர்களுக்கான மின்னணு வாழ்வுச் சான்றிதழ்:

17. தமிழ்நாட்டில் உள்ள 7,14,041 ஓய்வூதியதாரர்களில் 6,31,074 ஓய்வூதியதாரர்கள் சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்கள் மூலமும், மீதியுள்ள 82,967 ஓய்வூதியதாரர்கள் பொதுத் துறை வங்கிகள் மூலமும் ஓய்வூதியம் பெறுகின்றனர். பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்களிடம், விரல்ரேகைப் பதிவு உட்பட அனைத்துத் தேவையான ஆவணங்களையும் ஓய்வூதியதாரர்கள் தற்போது சமர்ப்பிக்க வேண்டும். மேலும், ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் முதல் ஜுன் வரையிலான ஆண்டு நேர்காணலுக்காக ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் முன் நேரில் வந்தோ அல்லது உரிய அதிகாரியிடமிருந்து வாழ்வுச் சான்றிதழ் பெற்றோ பதிவை புதுப்பிக்க வேண்டும்.

18. இந்த முறையினால் வயது முதிர்ந்த ஓய்வூதியதாரர்களுக்கு மிகுந்த சிரமமும் அசௌகரியமும் ஏற்படுவதோடு உடல் நலிந்த ஓய்வூதியதாரர்களால் உரிய அதிகாரியிடம் நேரில் சென்று வாழ்வுச் சான்றிதழ் பெறவும் இயலவில்லை. மேலும், சமீபகாலங்களில் அதிக எண்ணிக்கையில் அரசு அலுவலர்கள் ஓய்வு பெற்றவுடன் உள்நாட்டின் பிறபகுதிகளுக்கும் மற்றும் வெளிநாடுகளுக்கும் இடம் பெயர்ந்து செல்லும் நிலை உள்ளது. இத்தகைய ஓய்வூதியதாரர்கள் ஆண்டு நேர்காணலுக்கென நேரில் வருவதிலும் வாழ்வுச் சான்றிதழ் பெறுவதிலும் நடைமுறையில் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

19. வாழ்வுச் சான்றிதழ் பெறும் நடைமுறையினை சீர்படுத்தவும், ஒளிவு மறைவில்லாத வகையில் இடர்பாடுகளை களையவும் ஒரு புதிய முயற்சியாக ஓய்வூதியதாரர்களுக்கு மின்னணு வாழ்வுச் சான்றிதழ் வழங்கும் முறை இந்த நிதியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்தகைய மின்னணு வாழ்வுச் சான்றிதழினை ஓய்வூதியதாரர்கள் பொது சேவை மையங்கள், வங்கிகள், கருவூலங்கள், கணினி மற்றும் கைபேசியில் விரல்ரேகைப் பதிவுமூலம் பதிவு செய்து கொள்ள இயலும். இச்சான்றிதழ்களை மின்னணு வாழ்வுச் சான்றிதழ் காப்பகத்திலிருந்து ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்கள் பெற்று பரிசீலிக்கவும், ஓய்வூதியதாரர்கள் தமது மின்னணு வாழ்வுச் சான்றிதழை பதிவிறக்கம் செய்யவும் இயலும். இம்முறை செயல்படுத்தப்படும்போது கணிசமான அளவிற்கு ஓய்வூதியதாரர்களின் நேர்காணல் குறைக்கப்படும்.

[2015 செப்டம்பர் 29

புதிய மருத்துவ காப்பீடு திட்டம்–2012:

20. புதிய மருத்துவ காப்பீடு திட்டம் - 2012, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீடு நிறுவனம்மூலம் 1.7.2012 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் அரசு அலுவலர்கள் மட்டுமின்றி உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் வாரியங்கள், இத்திட்டத்தைச் செயல்படுத்த முன்வரும் அரசு நிறுவனங்கள்/நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவர்களின் தகுதிவாய்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு நான்காண்டுகளுக்கு நான்கு இலட்சம் ரூபாய் வரை மருத்துவ காப்பீட்டு உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

21. இத்திட்டத்தின்கீழ் 113 வகையான மருத்துவ அறுவை சிகிச்சை முறைகள் மேற்கொள்வதற்குத் தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூரு, திருவனந்தபுரம் மற்றும் புது தில்லி ஆகிய இடங்களில் உள்ள 649 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாளான முதல் 1-7-2012 முதல் 31-8-2015 வரை 591.33 கோடி ரூபாய் மதிப்பில் 1,49,844 பயனாளிகள் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்–2014:

22. ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்-2014, இந்த அரசின் ஒரு புதிய முயற்சியாகும். இத்திட்டம் பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் மூலமாக 1-7-2014 முதல் செயல்படுத்தப்படுகிறது. ஓய்வூதியம் பெறுபவர்களும் (வாழ்க்கைத் துணை உட்பட)/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் கட்டணமில்லா சிகிச்சை முறையில் நான்காண்டுகளுக்கு (2014-2018) இரண்டு இலட்சம் ரூபாய் வரை மருத்துவ வசதியினைப் பெறும்பொருட்டு இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

23. இத்திட்டத்தில் ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் பயன்பெறும் பொருட்டு 114 சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அதில் 60 அறுவை சிகிச்சைகளும்

2015 செப்டம்பர் 29]

மற்றும் 54 மருத்துவ சிகிச்சை நடைமுறைகளும் அடங்கும். மேலும் 647 மருத்துவமனைகள் இத்திட்டத்தின்கீழ் மருத்துவ உதவியினை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் துவங்கிய நாள், 1.7.2014 முதல் 3-8-2015 வரையில் 153.10 கோடி ரூபாய் மதிப்பில் கட்டணமில்லா முறையில் மருத்துவ உதவியினை 53,790 ஓய்வூதியதாரர்கள் பெற்றுள்ளனர்.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (Contributory Pension Scheme)

24. இத்திட்டம், 1-4-2003 மற்றும் அதற்கு பின்னர் பணியில் சேர்ந்த அரசு அலுவலர்களுக்காக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் பணியாளர் பணியேற்பு செய்த மாதம் முதல் பங்களிப்புத் தொகை பிடித்தம் செய்யப்படுகிறது. தனி நபரின் பங்களிப்பிற்கு இணையாக அரசின் பங்களிப்பும் வழங்கப்படுகிறது. இதற்கான வட்டித் தொகை, பங்களிப்பு தொகை பிடித்தம் செய்யப்பட்ட மாதம் முதலே கணக்கிடப்பட்டு மொத்தத் தொகையும் ஓய்வூதிய நிதிக்கு மாற்றம் செய்யப்படுகிறது.

25. தற்போது பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் கருவூலக் கணக்குத் துறைமூலம் அரசுத் தகவல் தொகுப்பு விவர மைய உதவியுடனும் தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடனும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் உள்ள அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் ஓய்வூதிய பங்களிப்புத் திட்ட முகப்பு எண் (Index No.) மற்றும் ஆண்டுமுறை கணக்கு விவரக்குறிப்பு (CPS Account Slip) 2012-2013 ஆம் ஆண்டுவரை சென்னை மாநில கணக்காயராலும், 2013-14 ஆம் ஆண்டில் இருந்து ஆண்டுமுறை கணக்கு விவரக் குறிப்பு (CPS Account Slip) அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தாலும் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டக் கருவூலங்களில் மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டம் இத்துறையால் நடத்தப்பட்டு, இத்திட்டத்தின் செயல்பாடு/ முன்னேற்றமானது கருவூலக் கணக்கு இயக்ககத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

புதிய சார்—கருவூலங்கள் ஏற்படுத்துதல்:

26. கடந்த மூன்று ஆண்டுகளில், 23 புதிய சார் கருவூலங்கள் உருவாக்கப்பட்டு தற்போது மொத்தம் 229 சார் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. பொது மக்கள் சார் கருவூலங்களை எளிதாக அணுகும்பொருட்டு புதிதாக உருவாக்கப்பட்ட வருவாய்

வட்டங்களில் மேலும் 14 புதிய சார்கருவூலங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

27. கருவூலக் கணக்குத் துறையின் 32 மாவட்டக் கருவூலங்களில் 29 மாவட்டக் கருவூலங்கள் அரசு கட்டடங்களிலும், மீதமுள்ள சென்னை, தூத்துக்குடி மற்றும் திருப்பூர் ஆகிய மூன்று மாவட்டக் கருவூலங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. தூத்துக்குடி மாவட்டக் கருவூல கட்டடப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. திருப்பூர் மாவட்டக் கருவூலத்திற்கென திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் இதற்கான கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. சென்னை மாவட்டக் கருவூலத்திற்கு நந்தனத்தில் புதிதாக கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த நிதித் துறை அலுவலக வளாகத்தில் இடம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இதன்படி, மாவட்டக் கருவூலங்கள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமான கட்டடத்திலேயே இயங்குவதை இவ்வரசு உறுதி செய்கிறது.

28. மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 64 சார் கருவூலங்களுக்குச் சொந்த கட்டடம் கட்டுவதற்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, அவற்றில் 15 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 42 கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 7 சார் கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட நிலமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

29. மேலும், இவ்வரசால் 21.60 கோடி ரூபாய் செலவில், நிதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் 10 அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது கட்டடப் பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. மேலும், இப்பணிகள் இந்நிதியாண்டு இறுதிக்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

30. அரசாணை (நிலை) எண் 125, நிதித் துறை, நாள் 10-2-1921-ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை

தோற்றுவிக்கப்பட்டது. மாநிலத்திலுள்ள நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட உள்ளூர் நூலக அதிகார மன்றங்கள் மற்றும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் சட்டபூர்வத் தணிக்கையானது, இத்தகைய நிறுவனங்களுக்குரிய சட்ட விதிகளின்கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

31. மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள உள்ளாட்சி அதிகார அமைப்புகள் மற்றும் பிற அதிகார அமைப்புகள் மத்திய, மாநில அரசுகளின் மானியங்களை பயனுள்ள வகையில் செலவு செய்வதனை உறுதி செய்வதற்கும், இவ்வமைப்புகள் பொது நிதியை எவ்வாறு செலவு செய்கின்றன என்பதன்மீது பொது நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் பதிமூன்றாவது மத்திய நிதிக் குழு மற்றும் இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படியும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 (த.நா.சட்ட எண் 24/2014) தமிழ்நாடு சட்டப் பேரவையால் இயற்றப்பட்டது.

32. இச்சட்டத்தின் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் தணிக்கை மற்றும் இச்சட்டத்தின் பிரிவு 5-ன்படி பிற நிறுவனங்களின் தணிக்கை, தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டத்தின்படியும் அதன்கீழ் இயற்றப்படவுள்ள விதிகளின்படியும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் இனிவருங்காலங்களில் மேற்கொள்ளப்படும்.

33. இச்சட்டம், உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் செய்யப்படும் தணிக்கைக்கு சட்டமுறை ஏற்பளிப்பு வழங்குகிறது. மேலும், உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் தொகுக்கப்பட்ட ஆண்டு அறிக்கையினை, மத்திய தலைமை கணக்குத் தணிக்கைத் தலைவரின் அறிக்கையுடன் சட்டப் பேரவையில் சமர்ப்பிக்கவும் வழிவகை செய்துள்ளது.

34. இன்றைய நாளில் பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

வ. எண்	நிறுவனங்கள்	மொத்த எண்ணிக்கை
(i)	மாநகராட்சிகள்	12
(ii)	நகராட்சிகள்	126
(iii)	பேரூராட்சிகள்	528
(iv)	மாவட்ட ஊராட்சிகள்	31
(v)	ஊராட்சி ஒன்றியங்கள்	385
(vi)	பல்கலைக்கழகங்கள்	23
(vii)	உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள்	32
(viii)	மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுக்கள்	21
(ix)	தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம்	1
(x).	வேளாண் விற்பனைக் கழக பொறியியல் பிரிவு	2
(xi)	கோயம்பேடு மொத்த விற்பனைக் குழு	1
(xii)	உள்ளூர் திட்டக் குழுமங்கள்	27
(xiii)	கிராம ஊராட்சிகள் (சோதனை தணிக்கை மட்டும்)	2,506
(xiv)	பல்வகை நிறுவனங்கள்	09

2015 செப்டம்பர் 29]

உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை

35. உள்ளாட்சி அமைப்புகளின் வரவு-செலவுகள், சட்டங்கள், விதிகள் மற்றும் அரசாணைகளின்படி உண்மை நிலையை பிரதிபலிக்கின்றனவா என்பதை உறுதி செய்யும் பொருட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கையின் தணிக்கைக் குழுக்கள், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்ப்பதுடன், தணிக்கை மேற்கொள்ளப்படும் நிறுவனங்களின் வருமானம் மற்றும் செலவினம் குறித்த தனியுரிமை தணிக்கை (Proprietary Audit) மேற்கொள்கின்றன. மேலும் அரசு மற்றும் பிற நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் தொகை நன்முறையில் பயன்படுத்துவதையும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படவும் அந்த தொகைகள் எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு முறையாகச் செலவிடப்படுகிறதா என்பதனை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உறுதி செய்ய வேண்டும்.

கிராம ஊராட்சி நிறுவனங்களின் சோதனை தணிக்கை

36. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் துறை வாயிலான முறைப்படியான தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 20 சதவீதம் சோதனைத் தணிக்கை மட்டும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, ஆண்டுதோறும் 2,506 ஊராட்சிகள் இத்துறையால் தணிக்கை செய்யப்படுகின்றன. இத்துடன் கிராம ஊராட்சிகளின் உயரளவு வரவினங்கள் அல்லது மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பு மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன ஆணையரால் அனுப்பப்படும் குறிப்பிட்ட புகார்களின் அடிப்படையில், இரண்டு சதவீத கிராம ஊராட்சிகளின் சோதனை தணிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

உலக வங்கி நிதி உதவி பெறும் நிறுவனத் தணிக்கை

37. உலக வங்கி நிதி உதவி பெறும் நிறுவனங்களின் தணிக்கையும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது. கோயம்புத்தூர், தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படும் உலக வங்கி நிதி உதவித் திட்டங்களின் தணிக்கை இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, 2013-2014 வரையிலான தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உடன் நிகழ் தணிக்கை (Concurrent Audit)

38. தற்போது 12 மாநகராட்சிகளிலும், 10 நகராட்சிகளிலும் மற்றும் 14 பல்கலைக்கழகங்களிலும் உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டு முதல், அனைத்து 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் உடன் நிகழ் தணிக்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி தெரிவு செய்யப்பட்ட 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓர் ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர் / ஓர் உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன் பின் தணிக்கை (Immediate Post Audit) நடைமுறை

39. உடன் நிகழ் தணிக்கை செயல்படுகின்ற கீழ்க்கண்ட 12 மாநகராட்சிகளிலும் 10 நகராட்சிகளிலும் உடன் பின்-தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்முறையின்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, தொகை வழங்கப்பட்டவுடன் செலவுச் சீட்டுக்கள் உடனுக்குடன் தணிக்கை செய்யப்பட்டு, குறைபாடுகள் நிருவாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றன. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை நிருவாகத்தால் உடனுக்குடன் களைய இம்முறை வழிகோலுகிறது.

வரிசை எண்	மாநகராட்சிகள்	நகராட்சிகள்
(i)	சென்னை	ஆவடி
(ii)	சேலம்	காஞ்சிபுரம்
(iii)	கோயம்புத்தூர்	கடலூர்
(iv)	திருச்சி	கரூர்
(v)	மதுரை	கும்பகோணம்
(vi)	திருநெல்வேலி	புதுக்கோட்டை
(vii)	தூத்துக்குடி	பழனி
(viii)	வேலூர்	பொள்ளாச்சி
(ix)	திருப்பூர்	உதகை
(x)	ஈரோடு	நாகர்கோவில்
(xi)	தஞ்சாவூர்	—
(xii)	திண்டுக்கல்	—

2015 செப்டம்பர் 29]

40. உடன்நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவற்றுக்கு வரப்பெற்ற பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்யுமிடத்து, அந்த தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. அவ்வாறு தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் குறித்து பெறப்படும் பதில்கள் சம்பந்தப்பட்ட நிறுவனப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களோடு தணிக்கைக் குழுவினரால் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு, தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யப்படுகின்றன.

உடன் நிகழ் தணிக்கைக்குட்படாத பிற நிறுவனங்களின் ஆண்டுத் தணிக்கை

41. உடன் நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 116 நகராட்சிகள், 9 பல்கலைக்கழகங்கள், ஏனைய உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக ஆணையக் குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்ட பின்னர், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகர்ப்புர உள்ளாட்சி மன்றங்களில் இயல்பாகச் சேரும் அடிப்படையில் (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்

42. நகர்ப்புர உள்ளாட்சி நிறுவனங்களில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இயல்பாகச் சேரும் அடிப்படையில் கணக்கு வைப்பு முறை (Accrual based Accounting System) 1999-2000, 2000-2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயற்படுத்தப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்த கணக்கு முறை பேரூராட்சிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

43. ஓர் ஆண்டின் நிதி சார்ந்த நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக்

கணக்குகளையும் (Income and Expenditure Account), ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் உண்மையான நிதிநிலையை அறிந்து கொள்ள உதவும் ஐந்தொகைக் கணக்குகளையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறை கோட்பாட்டின்படி தயாரித்து, கணக்குகளைப் பேணுவதே இந்த கணக்கு முறையின் இலக்கு மற்றும் நோக்கமாகும்.

44. இந்த நடைமுறையினால் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், உரிய மதிப்பீட்டு முறைகளோடு, கணக்குகளில் சேர்க்கப்பட்ட அவற்றின் சொத்துக்களை சொத்து பதிவேட்டின் மூலம் அறிந்துகொள்ள முடியும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மேம்படுத்தப்பட்ட கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், மூலதனத் திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதன்மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மூலதன மற்றும் நலத்திட்டங்களுக்கு நிதி பெறுகிற வாய்ப்பு அதிகரித்துள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குதல்

45. உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குவது மிகவும் முக்கியமான பணியாகும். மேலும் முறையான தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அர்த்தமற்றவை என்பது பன்னாட்டு அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். இதன்படி, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள், அரசாணை (நிலை) எண் 93 நிதித் (.IV) துறை, நாள் 28-3-2003 இல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, இத்துறையின் அலுவலர்களால் தணிக்கைச் சான்றளிக்கப்படுகின்றன.

46. உலக வங்கியின் நிதி உதவியுடன் கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு நவீன பாசன வேளாண்மை, நீரமைப்பு மீட்புப் பணி மற்றும் மேலாண்மைத் (IAMWARM) திட்டத்திற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்று அளிக்கப்படுகிறது.

2015 செப்டம்பர் 29]

தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை

47. தணிக்கை அறிக்கையின்மீது தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின்போது கண்டறியப்படும் கடுமையான முறைகேடுகள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாக அதிகாரிகளின் கவனத்திற்கு உடனடியாக எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிதிக்கையாடல், பொது மக்களின் பணத்திற்கு ஏற்பட்ட இழப்பு போன்ற கடுங்குறைபாடுகள், மாதாந்திர கால முறை அறிக்கைகள் மற்றும் சிறப்பு அறிக்கைகள்மூலம் தொடர் நடவடிக்கையாக அரசுக்கும், நிருவாகத் துறைத் தலைவர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

48. வழக்கமாக தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு, மெய்யான நேர்வுகளில் தணிக்கை மறுப்புரைகள் கைவிடப்படுகின்றன. மேலும் தணிக்கை மறுப்புரைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிருவாகத் துறை ஏற்பாடு செய்யும் இணை கூட்டமர்வின் மூலமாகவும் இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களாலும் தணிக்கை மறுப்புரைகளுக்கு உடனடி தீர்வு காணப்படுகிறது.

49. நிறுவனங்கள் தணிக்கையின்போது தொடக்க நிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், அத்தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக் காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது. அரசாணை (நிலை) எண் 83, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 1-6-2009-ல் இது தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய விரிவான வழிகாட்டுதல்களை அரசு வழங்கியுள்ளது.

மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்

50. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர்நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையரைத் தலைவராகக் கொண்டு மாநில உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. 2014-2015 ஆம் ஆண்டில்

மாவட்ட அளவிலான 74 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 2,254 எண்ணிக்கையிலான தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டுள்ளன.

51. பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரை தலைவராகக் கொண்டும், பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்களை அமைக்க, அரசாணை (நிலை) எண் 1 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூ2) நாள் 4-1-2007-ல் ஆணையிடப்பட்டுள்ளது. 2014-2015-ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 26 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 3,803 எண்ணிக்கையிலான தணிக்கை மறுப்புரைகள் மீது மாவட்ட உயர்நிலைக் குழுக்களால் முடிவெடுக்கப்பட்டுள்ளன.

52. அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு, நகராட்சி நிருவாக இயக்குநரக நிதி ஆலோசகரைத் தலைவராகக் கொண்டும், மாநில அளவிலான உயர்நிலைக் குழு, நகராட்சி நிருவாக இயக்குநரைத் தலைவராகக் கொண்டும் அரசாணை (நிலை) எண் 65, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22-5-2007-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 20 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 458 எண்ணிக்கையிலான தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டுள்ளன.

நிருவாகத் துறையும் மற்றும் தணிக்கைத் துறையும் இணைந்து நடத்தும் ஆய்வுக் கூட்டங்கள்

53. கணக்குகள் மற்றும் தணிக்கைத் தொடர்பான பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே தீர்வு காண ஏதுவாக, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான நிருவாக மற்றும் தணிக்கை அலுவலர்களின் கூட்டு ஆய்வுக் கூட்டம், மாவட்ட / மண்டல மற்றும் மாநில அளவில் நடத்தப்படுகின்றது. இவ்வாறே இறுதி நிலை விவாதம் மற்றும் தணிக்கை அறிக்கை ஒப்புதல் ஆகியவற்றின்போது தணிக்கை செய்யப்படுகிற நிறுவனங்களின் செயல்நிலை அலுவலர்களோடு நிருவாகத்தின் உயர்நிலை

அலுவலர்களும் பங்கு பெறுகின்றனர். இதனால் தணிக்கையின்போது சுட்டிக்காட்டப்பட்ட தவறுகளை உடனுக்குடன் சரி செய்துகொள்ள ஏதுவாகிறது.

மானியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான பயன்பாட்டுச் சான்றிதழ் அளித்தல்

54. தணிக்கை வரம்பிற்குட்பட்ட பல்கலைக்கழகங்கள் ஏனைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு, பல்கலைக்கழக மானியக்குழு, மாநில / மத்திய அரசு மற்றும் ஏனைய நிதி அளிக்கும் நிறுவனங்களால் வழங்கப்படும் மானியங்களை பயன்படுத்தியதற்கான தணிக்கைச் சான்றிதழ்கள், இத்துறையால் வழங்கப்படுகின்றன. இதனால் திட்டப் பணிகள் முடிவடைந்தவுடன் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்களால் பயன்பாட்டுச் சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

சிறப்புப் பணிகள்

55. வழக்கமான தணிக்கைப் பணிகள் தவிர கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

(i) உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் அனுமதித்தல்/வழங்கல்:

56. நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு, சான்று / ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 34,283 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களில், 31-8-2015 அன்றுவரை 32,071 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் தாங்கள் உயிருடன் இருப்பதற்கான வாழ்வுச் சான்றிதழ் அளித்து, நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை, சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரகத்தால் பராமரிக்கப்படும் சம்பந்தப்பட்ட ஓய்வூதிய நிதியத்திற்கு வழங்கப்படுகிறது.

(ii) உள்ளாட்சி நிறுவனங்களின் ஓய்வூதியர்களின் குறை தீர்த்தல்

57. உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அவர்களது ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் தொடர்பான குறைகளைக் களைவதற்கும் தேவைப்படும் விவரங்களைக் காலதாமதமின்றி உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் ஒன்று இயங்கி வருகிறது.

(iii) நகராட்சி ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டத்தை நிருவகித்தல்

58. அரசு ஓய்வூதியதாரர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல் மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் ஆகியவை, அரசாணை (நிலை) எண் 120, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25-5-1999 ன்படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 1-8-1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. 2014-2015ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் 2015 ஆகஸ்டு மாதம் வரை கீழ்க்கண்டபடி கோரிக்கைகள் ஏற்கப்பட்டு தொகை அனுமதிக்கப்பட்ட இனங்களின் விவரங்கள் வருமாறு:

மருத்துவ நலத் திட்டம்		குடும்பப் பாதுகாப்புத் திட்டம்	
கோரிக்கைகளின் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)	கோரிக்கைகளின் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
623	163.60	656	267.54

(iv) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நலம் மற்றும் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை நிருவகித்தல்

59. அரசு ஓய்வூதியதாரர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல் மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் அரசாணை (நிலை) எண் 23, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நாள் 15-3-2013-இல் ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவது தொடர்பாக பின்பற்றத்தக்க வழிமுறைகள் மற்றும் செயல்முறைகள் தொடர்பாக அரசாணை (நிலை) எண் 142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 7-11-2014-ல் வெளியிடப்பட்டுள்ளது.

(v) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்

60. உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றின் முதலீடுகளும் அரசால் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. அவர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளில் உள்ள இருப்புகளுக்கு, வட்டி வழங்குவதற்கு, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாய் அளவிலான தொகை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், மேற்காணும் ஒதுக்கீட்டுத் தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மேலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக ஒப்பளிப்பு செய்யும் பொருட்டு 4 கோடி ரூபாய், 18-2-2015 அன்று அரசால் வழங்கப்பட்டுள்ளது.

(vi) அறக்கட்டளைகளின் நிருவாகம்

61. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 1-4-1952 முதல் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அரசு, அறக்கட்டளைகளை ஏற்று, ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

62. இந்த அறக்கட்டளை நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகை, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற

11-335—35c

கோரிக்கைகளின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது, அறக்கட்டளை நிதிப் பொருளாளர் என்ற நிலையில் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரின் கட்டுப்பாட்டில் 14.18 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 மத்திய அரசு அறக்கட்டளைகளும், 20.20 கோடி ரூபாய் மதிப்புள்ள 874 மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன. 2014-2015 ஆம் நிதியாண்டில் அறக்கட்டளைகளின் வட்டி வருவாயிலிருந்து படிப்புதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்குவதற்காக 273 அறக்கட்டளைகளுக்கு 15.76 இலட்சம் ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

63. அரசு உத்தரவுகளின்படி, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட பங்களிப்புத் தொகையையும், அத்தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டதையும் சரிபார்ப்பதற்காக, ஒரு சிறப்புக் குழு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் ஏற்படுத்தப்பட்டு, 1-4-2003 முதல் 31-3-2014 வரையிலான பதினோரு ஆண்டுகளுக்கான மேற்காணும் விவரங்கள் திரட்டப்பட்டு சரிபார்க்கப்பட்டுள்ளது.

64. இதன்படி, சென்னை நீங்கலாக 9 மாநகராட்சிகள், நிலை உயர்த்தப்பட்ட திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சிகளை உள்ளடக்கிய 125 நகராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 528 பேரூராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களின் பங்களிப்பான ரூ.59,24,40,463/-யுடன் நிருவாகப் பங்குத் தொகையையும் சேர்த்து அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

மின் ஆளுமை முயற்சிகள்

65. உள்ளாட்சி அமைப்பின் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வூதிய பணப்பயன்களை அவரவர் வங்கிக் கணக்கில் மின்னணு தீர்வை/மண்டல மின்னணு தீர்வை மூலம் நேரடியாக வழங்க வகை செய்வதற்கான மென்பொருளை உருவாக்குவதற்கு அரசு 30 இலட்சம் ரூபாய் அனுமதியளித்துள்ளது. இதற்கான பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

66. "தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு" என்ற திட்டத்தினை 2015-2016-ம் ஆண்டில் செயல்படுத்திட அரசு கொள்கை அளவில் ஒப்பளித்துள்ளது. இது இத்துறைத்

2015 செப்டம்பர் 29]

தணிக்கையாளர்கள் கணினி மயமாக்கப்பட்ட சூழலில் பணிபுரிய உதவுவதோடு சிறப்பான தணிக்கை மேற்கொள்வதையும் இவ்வமைப்பு உறுதிப்படுத்தும். மேலும் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நீண்டகாலமாகத் தீர்வு செய்யப்படாமல் நிலுவையாக உள்ள தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்யும் பொருட்டு அனைத்து தணிக்கைத் தடைகளையும் கணினிமயமாக்கவும் அவற்றை அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தின் உதவியோடு தணிக்கைத் தடைகளின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தி நிறுவனங்களின் பதில்களைப் பெற்று தணிக்கைத் தடைகளை எளிதாகத் தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தணிக்கை நடைமுறை கையேட்டினை புதுப்பித்தல்

67. ஊரக உள்ளாட்சி நிறுவனங்களுக்கான தணிக்கை நடைமுறை நூல், பல்கலைக்கழகங்களின் தணிக்கை நடைமுறை நூல், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை பணியாளர்களுக்கான பயிற்சி நடைமுறை நூல் ஆகியவற்றைப் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நிருவாகச் சீர்திருத்தம்

68. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் துணை ஆய்வர்களுக்கு இயல்புநிலையில் சேரும் அடிப்படையில் கணக்கு வைப்புமுறைத் (Accrual Based Accounting System) தொடர்பான பயிற்சி அளித்திட அரசு 10 இலட்சம் ரூபாய் அனுமதியளித்துள்ளது.

69. சேலத்தில் ஒரு புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டு 01.02.2015 முதல் செயல்பட்டு வருகிறது.

தணிக்கை நிலை

70. 2012-2013 ஆம் நிதியாண்டின் இறுதியில், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் நூலக ஆணைக் குழு உள்ளிட்ட நிறுவனங்களின் தணிக்கை 2008-2009 ஆம் ஆண்டுவரை மட்டுமே முழுமையாக முடிக்கப்பட்டு நிலுவைகள் பெருமளவில் இருந்தன. அதன் பிறகு எடுக்கப்பட்ட உறுதியான தொடர் நடவடிக்கைகள்மூலம்

31-7-2015 அன்றைய நிலையில் 2013-2014 ஆம் ஆண்டு முடிய அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், கிராம ஊராட்சிகளின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சிகளின் 2013-2014 ஆம் ஆண்டிற்கான தணிக்கை 30-9-2015-க்குள் முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும் அனைத்து மாநகராட்சிகள், (சென்னை மாநகராட்சி நீங்கலாக) நகராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் நூலக் ஆணைக் குழுக்களின் 2013-2014ஆம் ஆண்டு தணிக்கையினை 31-10-2015-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்காணும் நிறுவனங்களின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான தணிக்கை, 30-06-2016க்குள் முடிக்கவும் 2015-2016 ஆம் ஆண்டிற்கான தணிக்கை 01-7-2016 முதல் மேற்கொள்ளும் வகையில் பணித்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தணிக்கைக் கட்டணம்

71. பல்கலைக்கழகத் தணிக்கைக்கு 100 சதவீத தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50 சதவீத தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனைக் குழுக்கள் தணிக்கைக்கு மொத்த செலவினத்தில் இரண்டு சதவீதமும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2014-2015 ஆம் நிதியாண்டில் 17.90 கோடி ரூபாய் தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவு தணிக்கைத் துறை

72. சந்தானம் குழு மற்றும் நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி கூட்டுறவுத் துறையின் தணிக்கைப் பிரிவானது, தனியாகப் பிரிக்கப்பட்டு, 17-6-1981 முதல் கூட்டுறவு தணிக்கைத் துறை, தனித் துறையாக செயல்பட்டு வருகிறது. 1983 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 80-வது பிரிவின்படி, பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்த்து 14 நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கைகளை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

73. கீழ்க்காணும் துறைகளின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்டவையாகும்:

2015 செப்டம்பர் 29]

வ. எண்	பதிவாளரின் பெயர்	கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை
(i)	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்	8,971
(ii)	கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர்	1,397
(iii)	தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர்	315
(iv)	தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்.	1,145
(v)	தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்	
(vi)	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி)	880
(vii)	மீன் வளத் துறை இயக்குநர்	1,347
(viii)	கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப் பணிகள் இயக்குநர்	140
(ix)	சர்க்கரைத் துறை ஆணையர்	17
(x)	வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்)	116
(xi)	வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்	120
(xii)	பட்டுப்புழு வளர்பபுத் துறை இயக்குநர்	25
(xiii)	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர்	124
(xiv)	ஊரக வளர்ச்சி மறறும் ஊராடசித் துறை இயக்குநர்	47
	மொத்தம்	14,644

கூட்டுறவு தணிக்கைத் துறையின் நோக்கம்

74. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சரிபார்த்தல், அச்சங்கங்களின் இருப்பு நிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்குகள் முறையாகத் தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துதல் போன்றவை கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணிகளாக உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள், அதற்கான சட்டம், விதி, நடைமுறைகள் ஆகியவற்றின்படி செயல்படுவதை உறுதிபடுத்திக்கொள்ள சங்க உறுப்பினர்களுக்கு கூட்டுறவுக் தணிக்கை உதவியாக இருந்து வருகிறது. மேலும் அரசின் நிதியுதவி எதன்பொருட்டு வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும் சமுதாயமும் முழுமையாகப் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

நகர வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்.

75. முனைவர் வைத்தியநாதன் குழுவின் அறிக்கையை செயல்படுத்திய பின்னர், 2009 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் தணிக்கையும் மத்திய ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின்படி ரூபாய் 25 கோடிக்கு மேல் வைப்பீட்டு தொகைகளை கொண்டுள்ள நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வமான தணிக்கைகளும் பட்டய கணக்கர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுத் தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன் நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தணிக்கை முன்னேற்ற நிலை

76. சிறிய அளவிலான பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை, தொடர் தணிக்கை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 45 நாட்களுக்குள் முடிக்கப்பெற வேண்டும். தணிக்கை மேற்கொள்ளப்படும் காலத்திற்கென தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. 2014-2015 ஆம் ஆண்டில் தணிக்கைக் கட்டணமாக 3.65 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது. அதிக அளவிலான வணிக

2015 செப்டம்பர் 29]

நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான கட்டணம் அடிப்படை விதி 127-ன்கீழ் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. அடிப்படை விதி 127-ன்கீழ் 2014-2015 ஆம் ஆண்டில் தணிக்கை மேற்கொண்ட வகையில் பணியாளர்களின் செலவினத் தொகையாக 9.77 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

தணிக்கை முன்னேற்ற நிலை

77. கடந்த ஐந்தாண்டுகளில் தணிக்கை முன்னேற்ற விவரம் பின்வருமாறு:

வ. எண்	வருடம்	கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை	தணிக்கை முடிக்கப்பட்ட சங்கங்கள்	நிலுவையிலுள்ள சங்கங்கள்
(i)	2010-2011	17029	16354	675
(ii)	2011-2012	16742	15879	863
(iii)	2012-2013	16554	15383	1171
(iv)	2013-2014	15955	14465	1490

78. நிலுவையிலுள்ள மேற்கண்ட கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கைக்குரிய பதிவேடுகள் நீதிமன்றம், விசாரணை அலுவலர் மற்றும் வணிக குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் உள்ளதால் மேற்கண்ட சங்கங்களின் தணிக்கையை முடிக்க இயலாத நிலை உள்ளது. இப்பதிவேடுகள் கிடைக்கப்பெற்றவுடன் இச்சங்கங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தணிக்கை முடிக்கப்படும்.

சிறப்பு அறிக்கைகள்:—

79. தணிக்கையில் கடுங்குறைகள் காணும்போது அது தொடர்பான அனைத்து விவரங்களும் அடங்கிய சிறப்பு அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. 2014-2015 ஆம் ஆண்டில் 47.18 கோடி ரூபாய் தொடர்புடைய 233 சிறப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

[2015 செப்டம்பர் 29

மின் ஆளுமை வாயிலாக தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு:

80. "தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு" என்ற திட்டத்தினை 2015-2016 ஆம் ஆண்டில் செயல்படுத்திட அரசு முடிவு செய்துள்ளது. இது இத்துறைத் தணிக்கையாளர்கள் கணினி மயமாக்கப்பட்ட சூழலில் பணிபுரிய உதவுவதோடு சிறப்பான தணிக்கை மேற்கொள்வதையும் உறுதிப்படுத்தும்.

நிருவாக சீர்திருத்தம்:

81. கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் நிருவாகத்தினை மேம்படுத்துவதற்கும் தணிக்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் அடிப்படை விதி 127-ன்கீழ் உள்ள 16 உதவி இயக்குநர் பணியிடங்கள் துணை இயக்குநர் பணியிடங்களாக நிலை உயர்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் கூட்டுறவுத் தணிக்கைத் துறையில் உள்ள இணை இயக்குநர்களுக்கு அவர்களது அலுவலகப் பணிகளுக்காக 6 சிருந்துகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

தணிக்கையாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி

82. தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றினை மேம்படுத்த பல்வேறு வகையான பயிற்சிகளும், புத்தாக்கப் பயிற்சிகளும் வருடந்தோறும் அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சித் திட்டத்தில் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் விதிகள், அடிப்படை கொள்கைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவை உள்ளடக்கிய பயிற்சி வழங்கப்படுகிறது. இது தணிக்கையாளர்கள் பல்வேறு வகையான சங்கங்களில் திறம்பட தணிக்கைப் பணி ஆற்றிட உதவுகிறது. 2014-2015 ஆம் ஆண்டில் இத்தகைய 8 பயிற்சிகள் மூலமாக 316 தணிக்கையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இத்துடன் மாவட்ட மைய கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு நகர வங்கிகளில் உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்ளும் 100 தணிக்கையாளர்களுக்கு பிப்ரவரி மற்றும் மார்ச் 2015 திங்களில் 'நபார்டு' வங்கி மற்றும் மத்திய ரிசர்வ் வங்கி அலுவலர்கள் வாயிலாக பயிற்சி வழங்கப்பட்டது.

சிறு சேமிப்புத் துறை

83. சிறுசேமிப்பு, பொது மக்களிடம் உபரியாக உள்ள பணத்தினை சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு ஒரு முக்கிய கருவியாக விளங்குகிறது. இத்திட்டங்கள் அதிக பாதுகாப்பானதாகவும், கணிசமான வட்டியுடன் திரும்பக் கிடைக்க

2015 செப்டம்பர் 29]

கூடியதாகவும் உள்ளன. மத்திய அரசின் நிதி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டு அஞ்சலகங்கள் மூலமாக சிறுசேமிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாநிலத்தில் திரட்டப்படும் மாதாந்திர நிகர சிறுசேமிப்பு வசூலில் 50 சதவீதம், அந்தந்த மாநிலத்தின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு நீண்டகாலக் கடனாக 9.5 சதவீத ஆண்டு வட்டி விகிதம் அடிப்படையில் மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

சிறு சேமிப்புத் திட்டங்கள்

84. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் பயனளிக்கும் வகையில் பல சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. 1-4-2015 முதல் மத்திய அரசு, சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்களை கீழ்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது. மேலும் மத்திய அரசு மீண்டும் 'கிசான் விகாஸ்' பத்திரத்திட்டத்தை, 19-11-2014 முதல் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

தொடர் எண்	திட்ட விவரம்	1-4-2013 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)	1-4-2014 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)	1-4-2015 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)
(i)	அஞ்சலக சேமிப்பு கணக்கு (POSA)	4.0	4.0	4.0
	கால வைப்பீடு			
(ii)	1 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	8.2	8.4	8.4
	2 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	8.2	8.4	8.4
	3 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	8.3	8.4	8.4

தொடர் எண்	திட்ட விவரம்	1-4-2013 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)	1-4-2014 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)	1-4-2015 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)
	கால வைப்பீடு			
	5 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	8.4	8.5	8.5
(iii)	அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD 5 ஆண்டுகள்)	8.3	8.4	8.4
(iv)	மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS 5 ஆண்டுகள்)	9.2	9.2	9.3
(v)	அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம் (POMIS)	8.4 (5 ஆண்டுகள்)	8.4 (5 ஆண்டுகள்)	8.4 (5 ஆண்டுகள்)
(vi)	தேசிய சேமிப்புப் பத்திரம் NSC- VIII-வது வெளியீடு	8.5 (5 ஆண்டுகள்)	8.5 (5 ஆண்டுகள்)	8.5 (5 ஆண்டுகள்)
(vii)	10 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரம் NSC-IX-வது வெளியீடு	8.8	8.8	8.8

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

தொடர் எண்	திட்ட விவரம்	1-4-2013 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)	1-4-2014 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)	1-4-2015 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)
	கால வைப்பீடு			
(viii)	பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் (PPF 15 ஆண்டுகள்)	8.7 (ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,00,000)	8.7 (ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,50,000)	8.7 (ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,50,000)
(ix)	கிஸான் விகாஸ் பத்திரம் (KVP)	—	8.7 (100 மாதங்களில் பணம் இரட்டிப் பாகும்) (19-11-2014 முதல்)	8.7 (100 மாதங்களில் பணம் இரட்டிப் பாகும்)
(x)	சுகன்யா சம்ரிதி கணக்கு வைப்புத் திட்டம் (செல்வமகள் சேமிப்புத் திட்டம்)		9.1	9.2

செல்வமகள் சேமிப்புத் திட்டம்

85. மத்திய அரசு, அண்மைக் காலத்தில் செல்வமகள் சேமிப்புத் திட்டம் என்ற சேமிப்புத் திட்டத்தை குறிப்பாக பெண் குழந்தைகளுக்காக 3-12-2014 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கான வட்டி விகிதம், 1-4-2015 முதல் 9.1 சதவீதத்திலிருந்து 9.2 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 10 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஓர் ஆண்டுக்கு 1.50 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்யலாம். மூத்த குடிமக்களுக்கான சேமிப்புத்

திட்டத்திற்கும் 1-4-2015 முதல் வட்டிவிகிதம் 9.2 சதவீதத்திலிருந்து 9.3 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்

86. 2005-2006 முதல் 2014-2015 வரையிலான நிதியாண்டுகளில் சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாக தமிழகத்தில் திரட்டப்பட்ட நிதி வசூல் விவரங்கள் வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

தொடர் எண்	ஆண்டு	நிகர இலக்கு	மொத்த வசூல்	நிகர வசூல்
(i)	2005-06	5000	12455.75	5594.13
(ii)	2006-07	5700	10158.54	2637.25
(iii)	2007-08	—	7791.11	-965.98
(iv)	2008-09	—	8486.64	-1216.73
(v)	2009-10	—	12113.39	1539.39
(vi)	2010-11	—	13414.56	5163.2
(vii)	2011-12	—	10607.50	-2100.74
(viii)	2012-13	—	9797.05	-1506.83
(ix)	2013-14	—	9624.19	-730.78
(x)	2014-15	—	10936.37	-1084.12

87. தமிழகமெங்கும் சிறுசேமிப்புத் திட்டங்களை ஊக்கப்படுத்துவதிலும், சிறுசேமிப்பு முகவர்கள் மற்றும் முதலீட்டாளர்களின் நலனைப் பேணுவதிலும் சிறுசேமிப்பு இயக்குநரகம் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களும், சென்னையைப் பொறுத்தவரை மாநகராட்சி ஆணையாளரும் சிறுசேமிப்புத் திட்டங்களை, பொது மக்களிடையே கொண்டு செல்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

2015 செப்டம்பர் 29]

முகவரமைப்பு மற்றும் முகவர்களுக்கான மத்திய அரசின் தரகுத் தொகை மற்றும் மாநில அரசின் ஊக்கத்தொகை

88. சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்காக மாநிலம் முழுவதிலும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள், சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 28,771 முகவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக, 1-12-2011 முதல் அவர்களுக்குக் கீழ்க்காணும் வீதங்களில் மத்திய அரசு மற்றும் மாநில அரசால் தரகு மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

தொடர் எண்	முகவரமைப்பு வகை	சிறுசேமிப்புத் திட்டம்	சிறு சேமிப்பு முகவர்களின் மொத்த எண்ணிக்கை	மத்திய அரசின் ஆணைப்படி தரகுத் தொகை 1.12.2011 முதல்	மாநில அரசின் ஊக்கத் தொகை 31.3.2012 வரை
அ.	நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம்	அஞ்சலக மாத வருவாய் திட்டம், தேசிய சேமிப்பு பத்திரம், அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் (1,2,3 மற்றும் 5 ஆண்டுகள்)	7179	0.5%	0.5%
		கிசான் விகாஸ் பத்திரம் (19.11.2014 முதல் இந்திய அரசால் மீண்டும் அறிமுகப் படுத்தப் பட்டது)		(15.7.2015 லிருந்து) 0.5% லிருந்து 1.0% ஆக உயர்த்தப் பட்டுள்ளது	

தொடர் எண்	முகவரமைப்பு வகை	சிறுசேமிப்புத் திட்டம்	சிறு சேமிப்பு முகவர்களின் மொத்த எண்ணிக்கை	மத்திய அரசின் ஆணைப்படி தரகுத் தொகை 1.12.2011 முதல்	மாநில அரசின் ஊக்கத் தொகை 31.3.2012 வரை
ஆ.	மகளிர் முகவர் திட்டம் (MPKBY)	அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம்	2170	4%	2%
இ.	அனுமதியளிக்கப்பட்ட முகவர்களின் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்	பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்	422	—	—
ஈ.	மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்	மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்.		—	—
		மொத்தம்	28771		

89. மேற்கண்டவற்றில் மகளிர் முகவர் திட்டத்தின்கீழ் மட்டும் அஞ்சலக தொடர் வைப்புத் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து மகளிர் மட்டுமே சிறுசேமிப்பு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்திற்கு 31.03.2012 வரையில் முகவர்களுக்கு ஊக்கத் தொகையை வழங்க மாநில அரசு அனுமதித்துள்ளது.

விளம்பரம்:

90. பொது மக்களிடையே, சிறுசேமிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஒன்றிய அளவில் நாடகங்கள், மாவட்ட அளவில் பொருட்காட்சி அரங்கங்களில் குறும்படங்கள்

2015 செப்டம்பர் 29]

திரையிடுதல் மூலமாக ஆண்டு முழுவதும் முகாம்கள் சிறுசேமிப்புத் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

91. நிதி தொடர்பான தகவல்களை மிகவும் அர்த்தமுள்ள வகையில் பகுப்பாய்வு செய்யவும், மாநிலத்தின் கணக்குகளை மின்னணுத் தகவல் செய்முறை சாதனங்கள் மூலம் பகுப்பாய்வு செய்து சிறப்பான முறையில் வரவு-செலவுத் திட்டமிடும் நோக்குடன், *1971* ஆம் ஆண்டு மத்திய வரவு செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு தோற்றுவித்தது. இந்த மின்னணு தகவல் செய்முறை சாதனங்களைப் பயன்படுத்தி, அரசு துறைகளின் பலதரப்பட்ட செயல்பாட்டுத் தேவைகளை தொகுக்கும் வகையில், அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் *1972* ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிருவாக வசதிகளுக்காக மேற்கண்ட இரண்டு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு *1975* ஆம் ஆண்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந்த மையம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது:

(i) அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை தொகுக்கும் பணிகள்

(ii) இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத்தேர்வுகளுக்கான முகப்புத்தாள்கள் அச்சடித்தல்

(iii) ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி

(iv) பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்

தேர்வுப் பணிகள்

92. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை தொகுக்கும் பணிகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

93. அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம், அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் கீழ்க்கண்ட தேர்வுகளின் முடிவுகளைத் தொகுக்கும் பணியினை மிகுந்த கவனத்துடனும், துல்லியமாகவும் மேற்கொண்டு வருகிறது. முந்தைய கல்வியாண்டில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் மேற்கொண்ட பணிகளின் விவரம் வருமாறு:—

தேர்வுப் பணிகள்	மார்ச் 2014	சிறப்பு துணைத் தேர்வு 2014	அக்டோபர் 2014	மொத்தம்
மேனிலைப்பள்ளி தேர்வு	8,78,701	74,211	40,533	9,93,445
பத்தாம் வகுப்பு தேர்வு	10,94,710	83,877	46,439	12,25,026
எட்டாம் வகுப்பு தேர்வு	16,201	—	—	16,201
ஊரக திறனாய்வுத் தேர்வு	56,732			56,732
ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு தேர்வு	48,831			48,831
தேசிய வழி மற்றும் திறன்படிப்பு உதவித் தொகை திட்டத் தேர்வு	1,49,070			1,49,070
தொழில்நுட்பத் தேர்வு	14,373			14,373
தேசிய திறனாய்வுத் தேர்வு	1,41,950			1,41,950
பெரு மொத்தம்	24,00,568	1,58,088	86,972	26,45,628

விடைத்தாள்களுக்கு முகப்புத்தாள் அச்சடித்தல்

94. உயர்நிலை மற்றும் மேனிலை பொதுத் தேர்வுகளுக்கான முகப்புத்தாள்களை அச்சிடும் பணி அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மார்ச்/ஏப்ரல் 2015 உயர்நிலை மற்றும் மேனிலை பொதுத் தேர்வுகளுக்கான 1.68 கோடி முகப்புத்தாள்களை அச்சிட்டு வழங்குவதற்காக அரசு ரூபாய் 79,63,440/-க்கு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி

95. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்/நகராட்சிப் பள்ளிகள்/அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றின் ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி கணக்குகளை கணினி வழி தொகுக்கும் பணி அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29]

96. 2007-2008 ஆம் ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கு அதிகாரபூர்வமான வருங்கால வைப்பு நிதிக் கணக்குத் தாள்கள் வழங்க அரசுத் தகவல் தொகுப்பு விவர மைய ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்கான அதிகார பூர்வமான கணக்குத் தாள்கள், தொடக்கக் கல்வி இயக்ககம் மூலமாக வழங்கப்பட்டுள்ளன. தலைமை அரசு நிறுவனத் தணிக்கைத் துறையினரால், மொத்தமுள்ள 390 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களில் இதுவரை 233 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களில் 31-3-2014 வரையிலான இறுதி இருப்புக் கணக்குகளின் தணிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

97. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்/அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள்/நகராட்சிப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம் சார்ந்த தகவல்கள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநிலக் கணக்காயர் அலுவலகத்தால் பராமரிக்கப்பட்டு வந்த அரசுத் துறை பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டப் பணிகள் 2013-2014 ஆம் நிதியாண்டிலிருந்து அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதுவரை 4,03,413 பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு பங்களிப்பு ஓய்வூதிய குறியீட்டு எண்கள் வழங்கப்பட்டுள்ளன. அது பற்றிய விவரம் வருமாறு:—

	துறைகள்	இதுவரை வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள்
(i)	அரசுப் பணியாளர்கள்	2,93,604
(ii)	அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள் / ஊராட்சி ஒன்றியம் / நகராட்சிப் பள்ளிகளின் பணியாளர்கள்	87,759
(iii)	உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்கள்	22,050
		4,03,413

98. அரசுப் பணியாளர்கள், அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 2013-2014 வரை கணக்குத்தாள்கள் வழங்கப்பட்டுள்ளன. கணக்குத்தாள்கள், இணையதளத்தில் தேசிய தகவலியல் மையம் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை

99. அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, 1969 முதல் இயங்கி வருகிறது. அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகளுடன், பல்வேறு சட்டவரையறைக்கு உட்பட்ட (Statutory) வாரியங்கள் மற்றும் சட்டவரையறைக்கு உட்படாத (Non-Statutory) நிறுவனங்களின் தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பின்வரும் வாரியங்கள் மற்றும் நிறுவனங்களின் தணிக்கை, அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சட்டப்படியான நிறுவனங்களின் தணிக்கை

தொடர் எண்	நிறுவனத்தின் பெயர்	தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு
(i)	தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்	2013 – 14
(ii)	தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்	2013 – 14
(iii)	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்	2013 – 14
(iv)	சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்	2013 – 14
(v)	தமிழ்நாடு வக்ஃபு வாரியம்	2012 – 13
(vi)	தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்	2013 – 14

100. மேலே தெரிவிக்கப்பட்டுள்ள சட்டப்படியான வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை உடனிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

சட்டவரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் தணிக்கை

101. கீழ்க்கண்ட சட்டவரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் துறைத் தணிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடர் எண்	நிறுவனத்தின் பெயர்	எண்ணிக்கை/ நிறுவனங்கள்
(i)	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்	94,005
(ii)	வேளாண்மை விரிவாக்க மையங்கள்	874
(iii)	எடைகள் மற்றும் அளவைகள் நிறுவனங்கள்	302
(iv)	ஆண்டிற்கு ரூ.0.20 இலட்சத்திற்கு மேல் தொடர் மானியம் மற்றும் ரூ.1.20 இலட்சத்திற்கு மேல் தொடரா மானிய உதவி பெறும் நிறுவனங்கள்	724

102. இத்துடன், தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர் நல வாரியம், நாட்டுப்புற கலைஞர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் ஏனைய 16 நல வாரியங்களின் தணிக்கைகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தணிக்கைச் சான்று

103. மேலும் தணிக்கைக்குட்பட்ட சில நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களின் வருங்கால வைப்புநிதிக் கணக்கு முடிப்புகளுக்கான கருத்துருக்களுக்கு சான்றளிப்பதுடன் மானிய உதவிபெறும் நிறுவனங்களுக்கு, மானியத் தகுதிச் சான்று இத்துறையால் வழங்கப்பட்டு வருகிறது.

ஏனைய பணிகள்

104. அரசின் குறிப்பிட்ட ஆணைகளின்படி 14 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையின் உதவி இயக்குநர்கள் / ஆய்வாளர்கள் நிலையில் உள்ள அலுவலர்களால் மேற்பார்வையிடப்பட்டு அத்தகைய தணிக்கை தொடர்பான அறிக்கைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

105. மேலும், கீழ்க்காணும் தணிக்கை பணிகள் மற்றும் ஏனைய பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது:

[2015 செப்டம்பர் 29

(i) நிகர் நிலைப் பல்கலைக்கழகங்களின் நாட்டு நலப்பணித் திட்டம், தமிழ்நாடு அரசு மருத்துவ நல நிதித் திட்டம், குடும்ப பாதுகாப்பு நிதி மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதி ஆகியவற்றின் கணக்குகளின் தணிக்கை.

(ii) அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் கணக்குகள் தணிக்கை.

(iii) அயல்நாட்டு நிதி பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டம் 2010—இன் கீழ் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் விதிமீறல்களை கண்டறியும் வகையில் சிறப்பு தணிக்கை.

(iv) அரசுத் துறையில் பணிபுரியும் அலுவலர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஆசிரியர்களின் சேமநல நிதிக் கணக்குகளை சரிபார்த்து சான்றளித்தல்.

தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை

106. தணிக்கையின்போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் மாதந்தோறும் தொகுக்கப்பட்டு திருத்த நடவடிக்கைக்காக அந்தந்த துறைத் தலைவருக்கும் மற்றும் அரசின் துறைச் செயலாளரின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

தணிக்கைக் கட்டணங்கள்

107. சட்டப்படியான வாரியங்களின் தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கைப் பணியாளர்களின் சம்பளச் செலவின அடிப்படையிலும், வக்ஃபு நிறுவனத்தின் நிகர வருவாயில் 1.5 சதவீதமும் தணிக்கை கட்டணமாக இத்துறையால் வசூலிக்கப்பட்டு, அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

இணைப்பு V

(124 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016

"இந்தியாவிலேயே, முதலீட்டாளர்கள் நாடுகின்ற, முதன்மையான இடமாகத் தமிழகத்தை ஆக்குவதே இந்த அரசின் இலட்சியமாகும். முதலிடம் என்று நான் குறிப்பிடுவது முதலீட்டைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல, பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, மிக முக்கியமாக நம் மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றிலும் முதலிடம் பெறுவதே எனது இலட்சியம்".

—தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

முகவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடுத்த இரண்டு ஐந்தாண்டுத் திட்ட கால வரம்பை கருத்தில் கொண்டு, 2023 ஆம் ஆண்டு இறுதியில் மாநிலம் எய்த வேண்டிய இலக்குகளைக் கொண்ட, "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ஐ வெளியிட்டுள்ளார்கள். இந்த தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 நாட்டிலேயே மிகச் சிறந்த உள் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மாநிலமாகவும், மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளில் இந்தியாவில் முதன்மை மாநிலமாகவும், நமது மாநிலத்தை உயர்த்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மனிதவள மேம்பாட்டின் அனைத்து குறியீடுகளிலும், தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றிடுவதை, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. வேகமான, நீடித்து நிலைக்கத்தக்க மற்றும் அனைவரும் பங்கேற்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதே இந்த பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த திட்ட நடைமுறையின்

விளைவாக, வறுமை ஒழிக்கப்படுவதோடு, கூடுதலான மற்றும் மேம்பட்ட வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, இம்மாநில மக்களின் ஒட்டு மொத்த வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும் வாய்ப்பு ஏற்படும்.

மாநிலத்திற்கான ஆண்டுத் திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்தல் மாநிலத் திட்டச் செலவினங்கள், இருபது அம்சத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்தல் ஆகியவை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கியப் பொறுப்புகள் ஆகும். நிருவாகத் துறைகளால் சுற்றனுப்பப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த கோப்புகளை இத்துறை கூர்ந்தாய்வு செய்கின்றது. இந்த நோக்கத்திற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்தும் மற்றும் நிருவாகத் துறை என்ற முறையில் மாநிலத் திட்டக் குழு, பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளை கொள்கைகளை வகுக்க பயன்படுத்திக்கொள்கிறது. இத்துறை, மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்ட புதிய அமைப்பான "நிதி ஆயோக்" (NITI Aayog) உடன் கலந்துரையாடும் மாநில அரசின் முகமைத் துறையாகும். இத்துறை, அரசு மேற்கொள்ளும் புதிய முயற்சிகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு வேலைகளைச் செய்கிறது. இத்துறை, புவியியல் தகவலமைப்புமூலம் மின்-ஆளுமை திட்டம் (e-governance) ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுப்பது மற்றும் சிறப்பு முயற்சிகள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் உட்பட சிறந்த, புதுமையான பல்முனைத் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. துறையின் வலைத்தளமான <u>www.tn.gov.in/department/23-</u>ல் இத்துறையின் செயல்பாடுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

1.0 முக்கிய நடவடிக்கைகள்

i. ஐந்தாண்டுத் திட்டங்களையும் ஆண்டுத் திட்டங்களையும் தயாரிப்பதுடன் முந்தைய மத்திய திட்டக் குழு மற்றும் புதியதாக உருவாக்கப்பட்ட "நிதி ஆயோக்" உடன் தொடர்பு கொண்டு செயல்படுதல்;

2015 செப்டம்பர் 29]

ii. தொலைநோக்குத் திட்டம் தயாரித்தல், ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைநிலை ஆய்வு செய்தல், வளர்ச்சிக் குறியீட்டை அளவிடுதல் மற்றும் பெரிய அளவிலான திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

iii. மாநிலத்தின் இயற்கை வளங்களான நிலம் மற்றும் நீர்ப் பயன்பாடு உட்பட முக்கிய திட்டங்களைத் தயாரித்து, செயல்படுத்துகின்ற திட்டங்களின்மீது மேற்பார்வை ஆய்வுகள் மேற்கொள்ளுதல்;

iv. திட்டப் பணிகள், இருபது அம்ச திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ளும் திட்டங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

v. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஆகியவற்றை நிர்வகிப்பது;

vi. பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

vii. தொலையுணர்வு புவியியல் தகவல் அமைப்புகளை உருவாக்கிப் பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பது போன்ற பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் முகமைகளை உள்ளடக்கிய சிறப்பு மற்றும் புதுமையானத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுக்க ஊக்கமளித்தல். கடந்த காலங்களில் அரசு செயல்பாடுகளைக் கணினிமயமாக்குவதிலும் உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம் மற்றும் அதனால் மாநிலத்தில் ஏற்படும் தாக்கங்கள் குறித்த மாநிலத்தின் அணுகுமுறையினை வகுப்பதிலும் துறை முக்கிய பங்கு வகித்தது;

viii. சீரான பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளின் அடிப்படையில் சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு மாநில சமச்சீர் வளர்ச்சித் நிதி மூலமாக திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துதல்;

ix. மாவட்ட திட்டக் குழுவின் ஒரு அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்களைத் தயாரித்தல்;

x. மாநில வருவாய் மதிப்பீடுகள், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், மாநிலப் பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து பொது மற்றும் தனியார் துறைகளிலிருந்து புள்ளிவிவரங்களைச் சேகரித்தல், தொகுத்தல், மற்றும் பரவச் செய்தல்;

xi திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்;

xii. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற சிறப்புத் திட்டங்களை உருவாக்குதலும் செயல்படுத்துதலும் மற்றும் நக்சல்கள் பாதிக்கக்கூடிய பகுதிகளில் சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல் மற்றும் வரவு-செலவு திட்டம் 2015-16-ல் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்;

xiii. மாநிலத் திட்டக்குழு, பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல்படுவதற்கான வசதிகள் செய்தல்; மற்றும்

xiv சிறப்பு முயற்சிகள் பிரிவின்கீழ் 'மெட்ரோ இரயில்' போன்ற புதிய மற்றும் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

2.0 துறையின் செயல்பாடுகள் பற்றிய குறிப்பு

துறையின் செயல்பாடுகள் ஒவ்வொன்றின் தன்மை பற்றியும் தகுதிநிலை பற்றியும் கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

2.1 ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒதுக்கீட்டில் சீரான வளர்ச்சி

மாநில அரசின் திட்டச் செலவினங்கள் திட்ட ஒதுக்கீடுகளைவிட சீராக அதிகரித்து அதிக வளர்ச்சி விகிதங்களை ஊக்குவிக்கும் விதமாக உள்ளது. இவை ஒவ்வொரு ஐந்தாண்டு காலத்திற்கும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் ஏறக்குறைய இரண்டு மடங்கு உயர்வதற்கு உதவியாக அமைந்துள்ளது என்பதை கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது:

திட்டம்	ஆண்டுகள்	ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு	செலவினம்	விழுக்காடு
முதலாம் திட்டம்	1951—1956	86	80	93.0
இரண்டாவது திட்டம்	1956—1961	186	188	101.1
மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்கள்	1961—1969	608	613	100.8
நான்காவது திட்டம்	1969—1974	552	559	101.3
ஐந்தாவது திட்டம்	1974—1979	1,122	1,165	103.8
ஆறாவது திட்டம்	1980—1985	3,150	3,645	115.7
ஏழாவது திட்டம்	1985—1990	5,750	6,317	109.9
ஆண்டுத் திட்டம்	1990—1991	1,450	1,591	109.7
ஆண்டுத் திட்டம்	1991—1992	1,600	1,726	107.9
எட்டாவது திட்டம்	1992—1997	10,200	14,024	137.5
ஒன்பதாவது திட்டம்	1997—2002	25,000	25,036	100.1
பத்தாவது திட்டம்	2002—2007	40,000	43,568	108.9
பதினோராவது திட்டம்	2007—2012	85,344	92,656	108.6

[2015 செப்டம்பர் 29

2.2 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012)

மார்ச் 2012-ல் முடிவடைந்த பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம், பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 113 சதவீதம் அதிகரித்து, ரூபாய் 85,344 கோடி ஒதுக்கீட்டளவிற்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டம், 2007-2012 திட்டக் காலத்தில் மாநிலப் பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 9 சதவீதத்தை அடைவதற்கான நோக்கம் கொண்டிருந்தது.

2.2.1 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒதுக்கீடுகளும் செலவினங்களும்

ஆண்டுவாரியான ஒதுக்கீடு/ செலவினம்

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான ஆரம்ப திட்ட ஒதுக்கீடு ரூபாய் 85,344 கோடி

(ரூபாய் கோடியில்)

ஆண்டுத் திட்ட வருடம்	ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு (ஆண்டு வாரியாக)	செலவினம்
2007-2008	*14,000*	*14,224*
2008-2009	*16,000*	*16,275*
2009-2010	*17,500*	*17,834*
2010-2011	*20,068*	*20,465*
2011-2012	*23,535*	*23,858*
மொத்தம்	*91,103*	*92,656*

2015 செப்டம்பர் 29]

துறைவாரியான ஒதுக்கீடு/ செலவினம்

(ரூபாய் கோடியில்)

துறை	ஒதுக்கீடு	செலவினம்	விழுக்காடு
வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்தவை	11,145	10,427	93.6
ஊரக வளர்ச்சி	10,241	11,262	110.0
எரிசக்தி	10,743	12,669	117.9
தொழில் மற்றும் கனிமங்கள்	3,716	2,607	70.2
போக்குவரத்து	11,647	11,009	94.5
சமூக சேவைகள்	35,827	42,302	118.1
ஏனையவை	2,025	2,380	117.5
மொத்தம்	85,344	92,656	108.6

பதினோராவது திட்டக் காலத்தில் செலவினமானது ஒவ்வொரு ஆண்டும் ஒப்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டினை விட அதிகரித்துள்ளது என்பதனை மேலே உள்ள அட்டவணையில் காணலாம். எனினும், முக்கிய துறைகளான மின்சாரம், தொழில் மற்றும் விவசாயத்தின் வளர்ச்சி குறைந்தது, எனினும் சேவைத் துறையில் அதிக வளர்ச்சி அடைந்துள்ளதால் 2007-2012 ஆம் ஆண்டுகளில் மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 8.58 சதவீதத்தை அடைவதற்கு வழியாக அமைந்தது.

2.2.2 பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017)

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012-2017), பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 148 சதவீதம் அதிகரித்து, 2,11,250 கோடி ரூபாய் ஒதுக்கீட்டளவில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட, நிலைக்கத்தக்க மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை இத்திட்ட காலத்தில்

எய்துவதை உறுதி செய்யும் வகையிலும், மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 11 சதவீதத்தை அடைவதற்கான நோக்கமும் கொண்டுள்ளது. இத்திட்டம் "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023"-ல் உள்ள குறிக்கோளை அடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2.2.3 2012–13 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012-2017) முதல் ஆண்டான ஆண்டுத் திட்டம் 2012-13, 28,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இறுதியான செலவினம் 28,527.60 கோடி ரூபாய் ஆகும்.

2.2.4 2013–14 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012-2017) இரண்டாம் ஆண்டான ஆண்டுத் திட்டம் 2013-14, 37,128 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இறுதியான செலவினம் 37,745.52 கோடி ரூபாய் ஆகும்.

2.2.5 2014–15 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012-2017) மூன்றாம் ஆண்டான ஆண்டுத் திட்டம் 2014-15, 50,660 கோடி ரூபாய் (38,105.27 கோடி ரூபாய் (மாநில திட்டம்) + 12,554.73 கோடி ரூபாய் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் மத்திய அரசின் பங்கு) ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலான மத்திய நிதி உதவி பெறும் திட்டங்களில் மத்திய அரசின் நிதி உதவியில் குறைவு இருந்தாலும் கூட திட்டச் செலவினமானது திட்ட ஒதுக்கீட்டைவிட அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.2.6 2015–16 ஆம் ஆண்டுத் திட்டம்

மத்திய அரசானது மத்திய திட்டக்குழுவிற்குப் பதிலாக "நிதி ஆயோக்" என்னும் புதிய அமைப்பினைத் தோற்றுவித்துள்ளது. மாநிலங்களின் முதலமைச்சர்களைக் கொண்ட ஆட்சி மன்றக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் 08-02-2015 அன்று புதுதில்லியில் நடைபெற்றது. 2015-16 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடானது, புதிய அமைப்பான நிதி ஆயோக்கிடமிருந்து விரிவான வழிகாட்டு

2015 செப்டம்பர் 29]

நெறிமுறைகள் கிடைக்கப்பெற்ற பின்னர் இறுதி செய்யப்படும். 2015-16 வரவு-செலவுத் திட்டத்தில் ஆண்டுத் திட்டங்களுக்காக ரூபாய் 55,100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2.2.7 திட்டப் பணிகள் குறித்து ஆய்வு

ஒவ்வொரு மாதமும் ஆண்டுத் திட்டத்தின்கீழ் திட்டச் செலவினங்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின்மூலம் சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக துறைகளிலிருந்து பெறப்பட்டு, நிதி ஆண்டின் இறுதிக்குள் திட்ட ஒதுக்கீடுகள் யாவும் முழுமையாக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, ஆய்வுக்காக தலைமைச் செயலாளர் அவர்கள் முன் வைக்கப்படுகிறது.

2.3 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மத்திய மாநில அரசுகள் பங்கீட்டுக்கொள்ளும் திட்டங்கள்

மத்திய அரசின் முழுமையான அல்லது பகுதி பங்களிப்புடன் மற்றும் மாநில அரசின் சொந்த நிதி பங்களிப்புடன்கூடிய மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மாநிலத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2014-15 ஆம் ஆண்டில் மத்திய அரசு இரண்டு குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்துள்ளது. முதலாவதாக, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் மத்திய நிதி உதவி தற்பொழுது மாநில திட்ட நிதி உதவியாக கருதப்படவேண்டும். மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து இத்திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு மாநில திட்ட ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாக கருதப்படும். இரண்டாவதாக, மத்திய அரசு, நடைமுறையிலிருக்கும் 142 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை 66 திட்டங்களாக, 2014-15 ஆம் ஆண்டு முதல் மாற்றி அமைத்துள்ளது. மேலும், அந்தந்த மாநிலங்களுக்குப் பொருந்தும் வகையில் வழிகாட்டி நெறிமுறைகளைத் திருத்தி அமைப்பதற்கு ஏதுவாக, இத்திட்டங்களுக்கான வழிகாட்டி நெறிமுறைகளை ஆய்வு செய்து தேவையான மாற்றங்கள் செய்வது குறித்த ஆலோசனைகளைத் தெரிவிக்கும்படி மாநில அரசிடம் மத்திய அரசு கோரியது. இதன்படி, தமிழக அரசு, ஒவ்வொரு திட்டங்கள் மீதான விரிவான கருத்தினையும், பரிந்துரைகளையும் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இப்பரிந்துரைகளில், சில மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பல திட்டங்களின்

பரிந்துரைகள் மீதான நடவடிக்கைகள் இன்னும் மேற்கொள்ளப்படவேண்டி உள்ளது.

2.3.1 2015–16 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான திருத்திய பங்களிப்பு

பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில், மத்திய அரசு, தனது 2015-16 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், மத்திய வரி தொகுப்பிலிருந்து 42% வரி வரவினை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிப்பதாக குறிப்பிட்டுள்ளது. இந்த தொகையானது, 2014-15 ஆம் நிதியாண்டில் 13-வது நிதிக் குழுவின் பரிந்துரையான 32%-ஐ காட்டிலும் அதிகமாகும். மாநிலங்களுக்கு, மத்திய வரி வருவாயிலிருந்து பெருமளவு தொகை பகிர்ந்தளிக்கப்படுவதால், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் கூடுதல் நிதி உதவி திட்டங்களுக்கான பங்களிப்பினை, மாற்றியமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன் காரணமாக, மத்திய அரசு, தனது 2015-16 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், சில மத்திய நிதி உதவி பெறும் திட்டங்களை மத்திய அரசின் முழுமையான பங்களிப்புடன் தொடர்ந்து செயல்படுத்தவும், குறிப்பிட்ட சில மத்திய நிதி உதவி பெறும் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்ட பங்களிப்பு விகிதங்களுடன் செயல்படுத்தவும், 8 மத்திய நிதி உதவி பெறும் திட்டங்களுக்கான மத்திய அரசின் நிதி உதவியினை முழுவதும் நிறுத்தவும் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. தனித்தனி மத்திய அரசின் நிதி உதவி பெறும் திட்டங்களுக்கான பங்களிப்பு முறை மீதான தெளிவான இறுதி முடிவு இதுவரை பெறப்படவில்லை. மேலும், 14-வது நிதிக் குழுவின் பரிந்துரையின் விளைவாக, கிடைக்கப்பெறும் கூடுதல் நிதி ஆதாரங்களிலிருந்து இந்தத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவது குறித்து மாநில அரசு முடிவு எடுக்கலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்தைப் பொறுத்தவரை, 14-வது நிதிக்குழுவின் பரிந்துரையின் விளைவாக எந்த ஒரு கூடுதல் நிதியும் மாநில அரசுக்கு கிடைக்கவில்லை. மத்திய அரசின் வரி வருவாயிலிருந்து அனைத்து மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கும் பங்கு அதிகரித்த போதிலும் அனைத்து இனங்களிலும் மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதி அதிகரிக்காது. 14-வது நிதிக் குழுவின் அறிக்கையின்படியே 2011-12 ஆம் நிதியாண்டில் மாநிலங்களுக்கான மொத்த நிதி பரிமாற்றம் 53.4 சதவீதமாகும்.

ஆனால் 2015-16-ம் நிதியாண்டில் இது 49.4 சதவீதமாகவே தான் இருக்கும். மேலும், மிக முக்கியமாக, தமிழகத்தைப் பொறுத்தவரை மத்திய வரித் தொகுப்பிலிருந்து பகிர்ந்தளிக்கப்படும் வரியானது 4.969 சதவீதத்திலிருந்து 4.023 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது 19.14 சதவீதம் சரிவைக் காட்டுகிறது. மேலும், வருவாய்ப் பற்றாக்குறை மானியங்கள் பெற தகுதியிருந்தும் தமிழகத்திற்கு சிறப்பு மானியங்கள் எதுவும் மத்திய அரசால் வழங்கப்பெறவில்லை. எனவே, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் சில முக்கிய துறைகளில் நீக்கப்பட்ட திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தவும், சில குறிப்பிட்ட திட்டங்களில் குறைக்கப்பட்ட மத்திய நிதியுதவியை ஈடு செய்ய மாநில அரசால் கூடுதல் நிதி வழங்குவதற்காகவும், தமிழ்நாடு அரசால் கணிசமான கூடுதல் முயற்சியை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

2.3.2 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை மாற்றியமைத்தல்

இது தொடர்பாக, புதுடில்லியில் 8-2-2015 அன்று நிகழ்ந்த நிதி ஆயோக்கின் (NITI Aayog) ஆட்சி மன்றக் கூட்டத்தில், திருத்தியமைக்கப்பட்ட மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கான அளவுகோல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து கீழ்க்காணும் விரிவான கருத்துரைகளை மாநில அரசு முன்வைத்துள்ளது:

i. மாநிலங்களுக்கிடையிலான செயல்திறன் வேறுபாடுகள் மற்றும் வேறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் முதன்மை திட்டங்களின் வடிவமைப்பில் போதுமான நெகிழ்வுத்தன்மை இருக்க வேண்டும். திட்ட வடிவமைப்பு, உள்ளூர் தேவைகளின் அடிப்படையிலான திட்டங்களை மாநிலங்கள் செயல்படுத்துவதற்காக, அதிக அளவிலான நெகிழ்வுத்தன்மையினை அனுமதிக்கும் விரிந்த துறைவாரியான நிதி ஒதுக்கீடுகளை அளிப்பதாக இருக்க வேண்டும்.

ii. மத்திய நிதி உதவியின் மாநிலவாரியான ஒதுக்கீட்டிற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் வரன் முறை, மிகச்சிறந்த நடுநிலைத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அது, அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக ஏற்கெனவே தங்கள் சொந்த நிதியாதாரங்களை முதலீடு செய்து குறிப்பிடத்தக்க அளவுக்கான வளர்ச்சி பெற்ற மாநிலங்களைத் தண்டிப்பதாக அமையக்கூடாது.

[2015 செப்டம்பர் 29

iii. சிறந்த முறையில் திட்டமிடுவதற்கும், திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும், குறிப்பிட்ட ஆண்டிற்கான ஒதுக்கீட்டு அளவுகள் குறித்து தெளிவான, முன்னரே கணிக்கத்தக்க மற்றும் நிச்சயத்தன்மை உடைய நிதி ஒதுக்கீட்டிற்கான வரன்முறைகள் அமைய வேண்டும். மேலும், வருடாந்திர ஒதுக்கீடு குறித்த தகவல்கள் போதுமான கால அளவுக்கு முன்னரே தெரிவிக்கப்பட வேண்டும்.

iv. மாநிலங்களின் சொந்த முன்னுரிமைச் செலவினங்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டச் செலவுகளில் மாநிலங்களின் பங்கு அதிக பட்சம் 25 சதவீதம் என்ற அளவுக்குள் அமையுமாறு வரையறுக்கப்பட வேண்டும்

v. மத்திய அரசின் திட்டத்தினைப் போன்றதொரு திட்டம், மாநில அளவில் ஏற்கெனவே நடைமுறையிலிருந்தால் மத்திய திட்ட நிதியினை மாநிலத் திட்ட நிதியோடு இணைத்துக் கொள்ள அனுமதிப்பதற்கு ஏற்றவாறு வழிகாட்டு நெறிமுறைகள் அமைய வேண்டும்.

vi உறுதியளிக்கப்பட்ட ஒதுக்கீடு, எவ்வித இடைக்காலக் குறைவுகளுமின்றி முழுமையாக அளிக்கப்பட வேண்டும். மத்திய அரசின் பங்கு, ஒரு ஆண்டில் இரண்டு தவணைகளுக்கு மேற்படாத வகையில் அளிக்கப்பட வேண்டும். முந்தைய ஆண்டுகளின் விடுபட்ட நிதி, நடப்பு ஆண்டு நிதியினை வழங்குவதற்கு முன்பாகவே அளிக்கப்பட்டு விட வேண்டும்.

vii. நிதி வழங்குவதற்கான வரையறைகளில், விலைவாசி ஏற்றத்திற்கு ஏற்ப குறியீடுகள் பயன்படுத்தப்படும் முறை நடைமுறைப்படுத்தப் பட்டு, அதன் பயனாக வழங்கப்படும் நிதியின் அளவு தன்னியல்பாகவே (automatic) உயர்த்தப்பட வழிவகை செய்ய வேண்டும்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் உள்ள பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்ய நிதி ஆயோக் என்ற அதிகாரக்குழுவின்கீழ் ஒரு துணைக்குழு உள்ளது. இக்குழுவின் அறிக்கை இனிமேல்தான் சமர்ப்பிக்கப்பட்டு வெளியிடப்பட உள்ளது. எனினும், இதற்கிடையில் பல்வேறு மத்திய

அமைச்சகங்கள் தங்களின்கீழ் செயல்படுத்தப்படும் மத்திய திட்டங்களைத் தயார்செய்வதில் முனைந்துள்ளது. அதில் பல்வேறு திட்டங்களில் மாநில அரசின் பங்களிப்பு அதிகமாக உள்ளது.

2.4 இருபது அம்சத் திட்டம் 2006—ன் ஆய்வு

இருபது அம்சத்திட்டமானது வறுமை ஒழிப்புக்கான தொகுப்பு திட்ட நடவடிக்கையாக, 1975ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982, 1986 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டில் "இருபதுஅம்சத்திட்டம் 2006" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் வறுமையினை குறைத்தல், வேலைவாய்ப்பினைப் பெருக்குதல், கல்வி, வீட்டு வசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தம், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடப்பட்ட அம்சங்களைக் கொண்டதாகும்.

இருபது அம்சத் திட்டம்-2006 குறித்த மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் திட்டங்களைச் செயல்படுத்தும் துறைகள் / நிறுவனங்களின் பல்வேறு இனவாரியான செயல்பாடுகள் குறித்த ஆய்வு அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் (Monitorable Items) செயல்பாடுகள் குறித்து ஒவ்வொரு காலாண்டும் இத்துறையினால் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய புள்ளியியல் மற்றும் திட்டச்செயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

2.5 பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணித்து ஆய்வு செய்தல்

100 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட திட்ட மதிப்பீட்டிலான பெரிய உள் கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றத்தை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையினால் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்ட அலுவல் குழு ஆய்வு செய்து கண்காணிக்கிறது. இந்நோக்கத்திற்காக பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் பின்வரும் துறைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது:

i. எரிசக்தி,

ii. தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பம்,

iii. நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள்,

iv. சென்னை பெருநகருக்கான உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும்

v. இதர நகர உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் குடிநீர் திட்டங்கள்.

உயர்மட்ட அலுவல் குழு மேற்கண்ட திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பணிகளை நிறைவேற்றுவதில் உள்ள முட்டுக் கட்டைகளைக் கண்டறிந்து, துறைகளுக்கிடையே தேவைப்படும் ஒத்துழைப்பு உட்பட இது போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பற்றி ஆலோசனைகளை வழங்குகிறது.

2.6 மத்திய அரசிடம் நிலுவையிலுள்ள முக்கிய கருத்துருக்களுக்கு தீர்வு செய்தல்

மத்திய அரசு, அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கிடையே நிலுவையிலுள்ள மாநிலங்களின் கருத்துருக்களை விரைவாகத் தீர்வு செய்வதற்காக, "இ-சமிக்ஷா" என்ற வலைத்தளத்தை ஏற்படுத்தி உள்ளது. மத்திய அரசிடம் நிலுவையிலுள்ள முக்கிய கருத்துருக்கள் மேற்கண்ட வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றது. அந்தக் கருத்துருக்களின் தற்போதைய நிலை மத்திய மற்றும் மாநில அரசுகளால் காலமுறை அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு தீர்வு காணப்படுகின்றது. தமிழகத்தில் தற்போது நிலுவையிலுள்ள 139 கருத்துருக்களை இந்த 'இ—சமிக்ஷா' வலைதளத்தில் தீர்வுக்காக பதிவு ஏற்றம் செய்யப்பட்டுள்ளது.

2.7 மாநிலத்தில் செயல்படுத்தப்படும் முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களை ஆய்வு செய்தல்

மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் முக்கிய பெரும் முதலீட்டிலான உள்கட்டமைப்புத் திட்டங்களில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களைத் தீர்வு செய்வதற்காக "மத்திய அமைச்சரவையின் திட்ட முதலீட்டுக் குழு- திட்டக் கண்காணிப்புக் குழு" என்ற அமைப்பினை மத்திய அரசு, செயல்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளது. திட்டங்களின் செயலாக்கத்தை ஆய்வு

2015 செப்டம்பர் 29]

செய்வதற்கும், அத்திட்டங்களில் ஏற்படும் நடைமுறைத் தடைகளை தீர்ப்பதற்கும் மாநில அளவில் தலைமைச் செயலாளரின் தலைமையில், திட்டங்கள் தொடர்புடைய மத்திய மற்றும் மாநில அரசுகளின் அதிகாரிகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அலுவலர்களுடனும் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

2.8 புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு

புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு செயல்பாடுகளை அனைத்து அரசுதுறைகளிலும் ஒருங்கிணைத்து சீரிய முறையில் செயல்படுத்த அரசாணை (நிலை) எண் 19 திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை நாள் 15-02-1984-ன்படி மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழு உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 2009ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப துறை மாநிலத்தில் புவியியல் தகவல்அமைப்பு மற்றும் தொலையுணர்வு முறையை செயல்படுத்தும் முனைப்பு துறையாக அமைக்கப்பட்டது. அனைத்து தொலையுணர்வு விவரங்கள் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு வரைபடங்களை பராமரிக்கும் பணிகளைத் தமிழ்நாடு புவியியல் தகவல் அமைப்பு திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்-ஆளுமை (TNeGA) முகமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்து துறைகளுக்கும் தேவையான விவரங்கள் மற்றும் வரைபடங்களும் மத்திய விவரத் தொகுப்பிலிருந்து பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில ஒருங்கிணைப்பு குழு புவியியல் தகவல் அமைப்பு / தொலையுணர்வு பணியினை ஆய்வு செய்து வருகிறது. முதன்மை செயலாளர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் முதன்மை செயலாளர், தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியோரின் கூட்டுத் தலைமையின்கீழ் ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டு பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, புவியியல் தகவல் அமைப்பு / தொலையுணர்வு திட்டங்களுக்கான கருத்துருக்கள்மீது முடிவுகள் மேற்கொள்ளுவதை மேற்பார்வையிட்டு வருகிறது. தமிழகத்தின் புவியியல் தகவல் அமைப்புக்கான பூகோள வரைபடத்தின் அடிப்படை அலகுகளை ஒத்திசைவு செய்து நிலைப்படுத்தவும், அந்த வரைபடத்தின் பல்வேறு துறைகளில் தற்போது நடைமுறையில் உள்ள பலதரப்பட்ட அலகுகளை ஒன்றிணைக்கவும் இக்குழு முழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

2.9 புள்ளிவிவர தகவல் சேகரிப்பு, தொகுப்பு மற்றும் பரப்புதல்

இத்துறை மாநிலம் சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவைகளை வழங்குவதில் ஓர் ஒருங்கிணைப்பு மையமாக உள்ளது. அத்தகைய விவரங்கள் அரசுத் துறைகளில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்களிலிருந்தும், தனியார் துறைகள் உட்பட சேகரித்து தொகுக்கப்படுகின்றன.

துறைகளுக்குத் தேவைப்படும் அனைத்துப் புள்ளிவிவரங்களும் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பொருளியல் மற்றும் புள்ளியல் துறையின் மூலமாக பெறப்படுகின்றன. இத்துடன் நாட்டின் ஏனைய மாநிலங்களின் புள்ளிவிவரங்களை, நமது மாநிலத்தின் தொடர்புடைய செயல்பாடுகளின் புள்ளிவிவரங்களோடு ஒப்பு நோக்குவதற்கும் இத்துறை தகவல்களைச் சேகரிக்கிறது.

2.10 பெருந்திட்டங்கள் மற்றும் பணிகளை மதிப்பீடு செய்தல்

பல்வேறு அரசுத் துறைகள்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்து அத்திட்டங்களின் பயன்கள் உண்மையான பயனாளிகளுக்கு சென்றடைந்ததை உறுதி செய்வது இத்துறையின் முக்கியமான பணியாகும். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குநரகம்மூலம் திட்டங்களின் செயல்பாடுகளை உடனுக்குடனும், திட்டங்கள் முடிக்கப்பட்ட பின்னரும் மதிப்பீடு செய்யப்படுகிறது. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முதன்மை செயலாளர் தலைமையில் இயங்கும் குழுவின் ஒப்புதலைப் பெற்று மதிப்பீடு செய்யும் பணி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. மதிப்பீடு செய்யப்பட வேண்டிய திட்டங்களை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குநரகம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் தொடர்புடைய துறைகளுடன் கலந்து செயல்முறை மற்றும் ஆராய வேண்டிய வழிமுறைகளை இறுதி செய்கிறது. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஆலோசகர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கும்; ஆராய்ச்சி உதவியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும்; மதிப்பார்ந்த நிறுவனங்கள்மூலம் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில

2015 செப்டம்பர் 29]

திட்டக்குழுவின் துணைத் தலைவரின் தலைமையில் இயங்கும் அறிவுரைக் குழுவிற்கு மதிப்பீடு வரைவு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். இம்மதிப்பீடுகளின் வெளியீடுகள் களப்பணி விவர சேகரிப்புகளின் முடிவுகள் முறையான பகுப்பாய்வு மற்றும் திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் திட்டங்களை இடையிடையே சரிசெய்வதற்கும் கொள்கைகளை மாற்றுவதற்கும் ஆலோசனை வழங்கவும் ஆவணங்களாக வெளியிடப்படுகின்றன. இந்த ஆய்வறிக்கைகள் www.tn.gov.in/dear/index.htm என்ற அரசின் இணைய தளத்திலும் வெளியிடப்படுகின்றன.

2.11 ஆதாரம் அடிப்படையில் கொள்கை வகுப்பது

மாண்புமிகு முதலமைச்சர், 8-8-2014 அன்று, சட்டமன்றப் பேரவையில் விதி 110 இன்கீழ் முனைப்பான நிருவாகத்திற்கு ஆதாரம் அடிப்படையில் கொள்கை வகுப்பது ஒரு முக்கியமான திட்டக்கூறு என தெரிவித்து அறிவிப்பு செய்தார். அரசை சேர்ந்த வெவ்வேறு துறைகளின் ஓர் ஆலோசனைத் துறை என்ற முறையிலும் மாநில திட்டக்குழு, பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகியவற்றின் நிருவாகத் துறை என்ற வகையிலும், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கைத் தயாரிப்பை மேம்படுத்துவதற்கு, அரசு மேற்கொள்கிற சிறப்பு நடவடிக்கைகளுக்கு செயல்வடிவம் அளிப்பதை, தனிச் சிறப்பான முறையில் உறுதி செய்கிறது. கடந்த காலத்தில், அரசின், ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கைத் தயாரிப்பை மேற்படுத்துவதற்கு, இத்துறை, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

நடைபெற்று வரும் திட்டங்களையும், திட்டப் பணிகளையும் முறையாகக் கண்காணிப்பதும், மதிப்பீடு செய்வதும், ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கை தயாரிப்புக் கட்டமைப்புப் பணியில் ஒரு முக்கியமான அம்சமாக உள்ளது. எனவே, இந்த அரசானது, நடந்தேறி வருகின்ற திட்டங்கள் மற்றும் திட்டப் பணிகள் முறையாக கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்கும். பல்வேறு அரசு திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் பயன்களைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதிகளவிலான செயல்விளைவு

மதிப்பீட்டு ஆய்வுகளுடன், மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை வலுப்படுத்தப்பட்டு வருகிறது. அப்போதுதான் இடைக்கால திருத்தங்களை மேற்கொள்வதற்கும், இனிவரும் காலங்களில் சிறப்பான மற்றும் மிகவும் பயனுடைய திட்டங்களை வகுப்பதற்கும் அதிலிருந்து பெற்ற படிப்பினையை பயன்படுத்த இயலும்.

2.11.1 தெற்கு ஆசியா, மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம், அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்

யு.எஸ்.ஏ. மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (Massachussets Institute of Technology, USA) அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு (Abdul Latif Jameel - Poverty Action Lab (J-PAL)) என்பது, மிகவும் குறைந்த செலவிலும், செம்மையான முறையிலும், வறுமையைக் குறைக்கிற பல்வேறு கொள்கை முயற்சிகளின் உருவாக்கம் மற்றும் மதிப்பீடு குறித்து முனைப்பான ஆராய்ச்சியை செய்து வருகிற உலகம் முழுவதிலுமுள்ள வெவ்வேறு பல்கலைக் கழகங்கள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த சில சிறந்த மேம்பாட்டு பொருளாதார வல்லுநர்களையும், சமூக அறிவியலாளர்களையும் கொண்ட ஓர் கட்டமைப்பாகும்.

8-8-2014 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி 110 இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.2(ம)ம) துறையின் 2-9-2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 81-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் கிடைத்த பயன்களை ஆராய்ந்து வறுமை ஒழிப்புத் திட்டங்களில் அதிக பயனை அடையும் வகையில் கொள்கைகளை வகுப்பதற்காக அரசானது, தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல்-வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் (Abdul Latif Jameel-Poverty Action Lab (J-PAL)) 19-11-2014 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கியத் திட்டக் கூறுகள் வருமாறு:

2015 செப்டம்பர் 29]

(i) கொள்கைக் குறித்த பேச்சு வார்த்தை

தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பும், தமிழ்நாடு அரசும் தமிழ்நாடு அரசின் தலைசிறந்த கொள்கை முன்னுரிமைகளைக் கண்டறிந்து பின்வருவன பற்றி கலந்துரையாடல்களை மேற்கொள்ளும்.

(i) மாநில அளவில், படிப்படியான அளவு வீதத்தில் பெரிதாக்கி காட்டுவதற்கு முன், களப்பணி பரிசோதனைக்கு முனைப்புடன் உட்படுத்தப்படும், புதுமையான வளவாய்ப்புத் தீர்வுகளைக் கூட்டாகக் கண்டறிதல்.

(ii) இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் உலகளவிலும் பரிசோதிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் செயல்படுத்தக்கூடிய கொள்கை புதுமைகளைக் கண்டறிதல். 2014-15ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் இந்தப்பயிற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) மதிப்பீட்டுத் திட்டங்கள்

சாத்தியக் கூறினை அளவிடு செய்வதற்கு முன்னர், மதிப்பீடு செய்யப்பட வேண்டிய குறிப்பிட்ட நடவடிக்கைகளைத் தெரிவு செய்தல்.

(iii) திறன் மேம்பாடு

பின்வரும் நடவடிக்கைகள் வாயிலாக நடந்தேறி வருகிற அல்லது புதிய திட்டங்களைக் கண்காணித்து மதிப்பீடு (Monitoring & Evaluation) செய்யும் பணியை மேற்கொள்வதற்கு, உள்ளார்ந்த திறன் மேம்படுத்துதலில், தமிழ்நாடு அரசுக்கு, தெற்கு ஆசியாவின் அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு உதவும்.

(அ) கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுத் தேவைகளை அறுதியிடல்

தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பானது, நடைமுறையிலுள்ள கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டு தகவல் ஆதாரங்கள், கண்காணித்தலில் அவற்றில் பயன்பாடு, முடிவுகளை/விளைவுகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை தொடர்பான

வேறுபாடுகள் ஆகியவற்றை கண்டறிவதற்கு, மதிப்பீடு தேவைகளைக் கண்டறியும் பயிற்சி முறை ஒன்றை நடத்தும். இந்தப் பயிற்சி முறையானது, தொடக்கத்தில் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் தெரிவு செய்யப்பட்ட 3 செயல்படுத்தும் துறைகளுடன் மேற்கொள்ளப்படும். தேவைகள் மதிப்பீட்டின் அடிப்படையில், பரிந்துரைகள் மற்றும் திறன் மேம்பாடு பற்றிய அடுத்த கட்ட நடவடிக்கைகளுடன் கூடிய விரிவான செயற்குறிப்பு ஒன்று அளிக்கப்படும்.

(ஆ) மதிப்பீட்டு வழிகாட்டி குறிப்புகள்

தேவைகள் மதிப்பீட்டின் அடிப்படையில், மதிப்பீடுகளைத் தொடங்கி நிருவகிப்பது குறித்த வழிகாட்டி குறிப்புகளை உருவாக்குவதற்கு மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு தொழில்நுட்ப நிதியுதவிக்கு தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு வகைசெய்யும்.

(இ) திறன் மேம்பாட்டு பயிலரங்குகள்

தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பானது, தொடர்புடைய கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு தலைப்புகள் பற்றி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கும், தேர்வு செய்யப்பட்ட செயல்படுத்தும் துறைகளுக்கும் செயல்முறை பயிற்சி வகைசெய்யும்.

(ஈ) கண்காணிப்பு ஏற்பாட்டு முறைகளுக்கு தொழில்நுட்ப நிதியுதவி

செயல் விளைவு அடிப்படையிலான கண்காணிப்பு கட்டமைப்புகளை பின்பற்றுவதற்கும், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் தேர்வு செய்யப்பட்ட செயல்படுத்தும் துறைகள், முனைப்புடன் கண்காணித்து முடிவு எடுப்பதற்கான ஏற்பாட்டு முறைகளை வலுப்படுத்துவதற்கும், தமிழ்நாடு அரசிற்கு தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு உதவிசெய்யும்.

17-9-2014 அன்று தலைமைச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற முதலாம் நெறிப்படுத்துதல் குழு ஒப்புதலின் அடிப்படையில் அப்துல் லத்தீப் ஜமீல்-வறுமை குறித்த செயல்

2015 செப்டம்பர் 29]

ஆராய்ச்சி ஆய்வக அமைப்பின் (Abdul Latif Jameel - Poverty Action Lab (J-PAL)) மூலமாக ஐந்து முன்னோடி ஆய்வுகளை மேற்கொள்வதற்கு செயல்பாட்டுத் துறைகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டன. அதுபற்றிய விவரம் வருமாறு:

I. சிசு இறப்பு வீதத்தை குறைக்கிற வகையில் தமிழ்நாட்டில் தாய்ப்பால் கொடுப்பதால் ஏற்படும் பயன்களைப் பற்றி பெண்களுக்கு ஆலோசனை வழங்கும் செயற்குறிப்பிற்கு ரூ.18,31,020/-க்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

II. வளரிளம் பருவத்தில் மாணவ, மாணவிகளுக்கு இரத்த சோகை ஏற்படுகிற பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவும், வாரந்தோறும் இரும்புச் சத்து செறிவூட்டப்பட்ட மாத்திரைகளை எடுத்துக்கொள்வதால் ஏற்படுகிற பயன்களை எடுத்துரைப்பதற்காக ரூ.26,12,448/-க்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

III. வருங்காலங்களில் தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களினால் ஏற்படுகின்ற பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் வகையில் இதுபோன்ற தொற்று அல்லாத நோய்களின் பாதிப்பைக் குறைப்பதற்கு ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை கற்பிக்கும் செயற்குறிப்பிற்கு ரூ.2,21,86,483/-க்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

IV. கல்வியின் உயர்ந்த பயன்களை அடைவதற்காக, முன்னோடி நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிப்பதற்கு தமிழ்நாடு அரசுக்கு உதவுவதற்காக வேலூர், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய வடமாவட்டங்களில் தொடக்கப்பள்ளி கல்வி நடைமுறை குறித்து மதிப்பீடு செய்வதற்கான செயற்குறிப்பிற்கு ரூ.41,89,845/-க்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

V. வேலையின்மை மற்றும் தகுதி குறைந்த வேலைவாய்ப்பு ஆகிய முதன்மை சவால்களை களைவதற்காக, திறன் வளர்ப்பின் மூலம் இளந் தொழிலாளர் சந்தையின் பயன்களை அதிகரித்தல் என்னும் செயற்குறிப்பிற்கு ரூ.29,72,475/-க்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

2.11.2 தரவு ஆய்வு

பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து, தரவு ஆய்வு அலகு (Data Analytics Unit) உருவாக்கப்படும். அரசிடம் குவிந்துள்ள புள்ளிவிவரங்கள் நிகழ்கால அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு, மக்களுக்கு சேவைகளை சிறப்பாகக் கொண்டு செல்லும் நோக்குடன் அரசின் கொள்கைகளை அவ்வப்போது மேம்படுத்துவதற்கான வாய்ப்பு இதன் மூலமாக ஏற்படும். இத்தகைய அலகை ஏற்படுத்தும் முதல் மாநிலம் தமிழ்நாடு என்பது குறிப்பிடத்தக்கது. இது ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுப்பதற்கு முக்கிய காரணியாக அமைகிறது.

2.11.3 கல்வி நிறுவனங்களுடன் அதிகளவில் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்

கொள்கை தயாரிப்பு குறித்த ஆலோசனையைப் பெறுவதற்காக, சமூக அறிவியலாளர்கள் மற்றும் பிற வல்லுநர்களின் சிறப்பறிவுத் திறனைப் பயன்படுத்துகிற ஓர் முயற்சியாக, வெவ்வேறு கருத்துக்களைக் கேட்டறிந்து, அவற்றை கொள்கை தயாரிப்புக்கான முயற்சிகளில் சேர்க்கிற வகையில், வெவ்வேறு கருத்தரங்குகள் மற்றும் குழுக்கூட்டங்களில், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், இந்திய புள்ளியியல் நிறுவனம், இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பொருளியல் கல்வி நிறுவனம் மற்றும் IFMR போன்ற நிறுவனங்களைச் சேர்ந்த வல்லுநர்களின் பங்கேற்பை துறை ஊக்குவிக்கிறது.

2.12 சிறப்புத் திட்டங்கள், திட்டப் பணிகளைச் செயல்படுத்துதல்

1975 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களிடையே பெரிய வனப் பகுதிகளை எல்லைகளாகக் கொண்டும், மேலும் வடக்கு வரை நீண்டு செல்லும் மலைப்பாங்கான மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒப்பற்ற உயிரினச் சூழல்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு, செயல்படுத்தப்பட்ட இரண்டு மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை செயல்படுத்தி வந்தது. நீலகிரி மாவட்டத்தை மையமாகக் கொண்டும் கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களை எல்லைகளாகக் கொண்டும் தனியாக

செயல்படுத்தப்படும் திட்டம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்று அழைக்கப்படுகிறது. நீலகிரி மலைப்பகுதியின் தென்பகுதியில் உள்ள ஏனைய மலைத்தொடர்கள் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் கொண்டுவரப்பட்டு உள்ளது. இவ்விரு திட்டங்களுக்கு பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலம் முழுவதற்கும் முதலீட்டினை கணிசமான அளவு உயர்த்தி மேலும் தொடர மத்திய அரசினை மாநில அரசானது வலியுறுத்தியது. எனினும், மத்திய அரசானது இத்திட்டங்களை 2015-16 ஆம் நிதியாண்டு முதல் மத்திய நிதியுதவியிலிருந்து நீக்கிவிட்டது. எனவே, மாநில அரசானது இந்த இடர்ப்பாட்டிலிருந்து மீளும் முயற்சியாக சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூபாய் 75.00 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

2.12.1 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் 1975 ஆம் ஆண்டு முதல் மத்திய திட்டக் குழுவின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தது. மலைப்பகுதியின் உயிரினப் பன்மயத்தினை பேணுதல், பாதுகாத்தல் மற்றும் வளப்படுத்துதல் ஆகிய மாநில அரசின் முயற்சிகளுக்கு உறுதுணை அளிக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், இயற்கைச் சூழலைப் பேணுவதும், இயற்கைச் சூழலை மீளச்செய்வதும் ஆகும். ஒருங்கிணைந்த நீர்பிடிப்பு பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதற்கென, நீலகிரி மாவட்டம் முழுவதும் 75 பெரிய நீர்வடிப்பகுதிகளாக பகுக்கப்பட்டு உள்ளது. இவற்றில், 37 முன்னுரிமை நீர்வடிப்பகுதிகள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக படிப்படியாக எடுத்துக்கொள்ளப்பட்டன. வடிகால்களை சீர்செய்தல் மற்றும் விவசாயத்திற்கு உகந்த நிலத்தில் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ற வேளாண் உற்பத்தி முறைகளைக் கையாண்டு மழை நீரை சேமிப்பதன் மூலமாக குறு நீர்வடிப்பகுதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

2.12.1.1 2014–15 ஆம் ஆண்டின் செயல்பாடு

2014-15 ஆம் ஆண்டிற்கான மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ரூபாய் 47.34 கோடியாகும். இந்த

[2015 செப்டம்பர் 29

முழு ஒதுக்கீட்டிற்கும் ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டுவிட்டன. மேற்படி நிதி ஒதுக்கீட்டில், மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, தோட்டக்கலை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மேம்பாடு, சிறுபாசனம், சாலைகள் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளின் வளர்ச்சிப் பணிகளுக்காக பெரும்பாலான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

2.12.1.2 2015–16 ஆம் ஆண்டுத் திட்டம்

மத்திய வரவு-செலவு திட்டம் 2015-16-ல், மத்திய அரசானது மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், 2015-16 ஆம் ஆண்டு முதல் மத்திய நிதியுதவியிலிருந்து நீக்கப்படுகிறது என்றும், அத்திட்டத்தை மாநில அரசின் நிதி ஆதாரங்களில் இருந்து தொடர்ந்து செயல்படுத்தலாம் என்றும் அறிவுறுத்தியுள்ளது. வரவு-செலவுத் திட்டம் 2015-16-ல், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களின் திட்டப் பகுதிகளைச் சேர்த்து ரூபாய் 75.00 கோடி ஒதுக்கீட்டில் புதிதாக சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தினை மாநில அரசு அறிவித்துள்ளது. இப்புதிய திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

2.12.2 மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் 1975-76-ல் தொடங்கப்பட்டு மத்திய அரசின் திட்டக்குழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தது (90 சதவிகிதம் மானியம் மற்றும் 10 சதவிகிதம் கடன்). ஆண்டுத்திட்டம் 2009-2010 முதல் 90 சதவிகிதம் மத்திய அரசின் மானியமாகவும் 10 சதவிகிதம் மாநில அரசின் பங்காகவும் மாற்றப்பட்டுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியானது, தமிழ்நாட்டில் 26,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உள்ளது. இது தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் 20 சதவிகிதமாகும். இத்திட்டம் தற்பொழுது, 8 மாவட்டங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 60 வட்டாரங்களைக் கொண்ட 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 8 மாவட்டங்களில் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இத்திட்டம் முழுமையாகவும் மீதமுள்ள மாவட்டங்களில் பகுதியாகவும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் 2010-11 ஆம் ஆண்டில் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை (TAWDEVA) யிடம் செயல்படுத்த ஒப்படைக்கப்பட்டது. 2012-13 ஆம் ஆண்டில் கூடுதலாக விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த இந்த முகமையிடம் ஒப்படைக்கப்பட்டது. 2013-14 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தினைச் செயல்படுத்த கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மீதமுள்ள மூன்று மாவட்டங்களிலும் இந்த முகமையின் மூலமாகச் செயல்படுத்த ஒப்படைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

i. உயிரினப் பாதுகாப்பிற்கு, இயற்கைச் சூழலின் சமநிலையை பேணுதல்.

ii. இப்பகுதியில் அபரிமிதமாக காணப்படும் மாறுபட்ட மரபணு உயிரினங்களை பாதுகாத்தல்.

iii. மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்படுகின்ற சீரழிவுகளை சரி செய்தல்,

iv. அங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச் சூழல் சீர்கேட்டினால் ஏற்படும் அபாயம் பற்றி புரியவைத்து சுற்றுச் சூழல் வளர்ச்சிக்கான திட்டங்களில் அவர்களை தீவிரமாக பங்கு கொள்ளச் செய்தல்.

இத்திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு, வனம், தோட்டக்கலை, விவசாயம், ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர் நலன், கால்நடை பராமரிப்பு, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், பேரூராட்சிகள் மற்றும் ஊரக வளர்ச்சி ஆகிய துறைகளில் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. 2014-15 ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக 77 நீர்வரத்துப் பகுதிகள் கண்டறியப்பட்டு இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

2.12.2.1 2014–15 ஆம் ஆண்டுத் திட்டம்

2014-15 ஆம் ஆண்டுத்திட்டத்திற்கு மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்த மத்திய அரசின் திட்டக்குழு ரூ.22.84 கோடிக்கு ஒப்புதல் அளித்திருந்தது. இதற்கான திட்டப்பணிகள், தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை

மூலமாக தொடர்புடைய துறைகளால் செயல்படுத்தப்பட்டு தற்போது பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

2.12.2.2 2015–16 ஆம் ஆண்டுத் திட்டம்

மத்திய வரவு செலவு திட்டம் 2015-16-ல், மத்திய அரசானது மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் 2015-16 முதல் மத்திய நிதியுதவியிலிருந்து நீக்கப்படுகிறது என்றும், அத்திட்டத்தை மாநில அரசின் நிதி ஆதாரங்களிலிருந்து செயல்படுத்திட அறிவித்து உள்ளது. வரவு செலவு திட்டம் 2015-16-ல், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களின் திட்டப் பகுதிகளைச் சேர்த்து ரூபாய் 75.00 கோடி ஒதுக்கீட்டில் புதிதாக சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தினை மாநில அரசு அறிவித்துள்ளது. இப்புதிய திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.12.2.3 மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்கு திட்டங்களைச் செயல்படுத்துதல்

தமிழகத்தின் எல்லையோர மலைப்பகுதிகளில் அண்டை மாநிலங்களிலிருந்து மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்கு பழங்குடியினர் உள்ளிட்ட மக்களுக்கு நலத் திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களைச் செயல்படுத்த திண்டுக்கல், தேனி, மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 2013-14-ல் சிறப்பு ஒரு முறை மானியமாக ரூபாய்4.00 கோடி வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2.12.2.4 மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்தல்

நீலகிரி மாவட்டத்தில் மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்குத் தேவையான கூட்டங்கள் மாநில அரசால் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

2.13 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின், 29-04-2003 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 31-இல் சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஒரு பகுதியாக

இணைத்து துறையினை விரிவாக்க அரசு முடிவெடுத்தது. வெவ்வேறு துறைகளிலிருந்து உருவாகி அரசின் முன்னுரிமையைப் பெறும் புத்தாக்கத் திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்வது இத்துறையின் நோக்கமாகும். சம்பந்தப்பட்ட நிருவாக துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட அதிக எண்ணிக்கையிலான திட்டங்கள் கண்டறியப்பட்டது.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின், 2-11-2006 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 146 இல் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் "ஒருங்கியல் பட்டியலில்" சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு திட்டத்தினை "சிறப்பு முயற்சி" திட்டமாகக் கருதுவதற்கு ஆராய வேண்டிய அறிவுரைகள் வழங்கப்பட்ட பின்னர் அதற்கான செயலாக்கங்களை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அல்லது சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பாட்டினை முதிர்விற்குக் கொண்டு வருவதாகும். ஒரு குறிப்பிட்ட சிறப்பு முயற்சி முதிர்வு நிலை அடைந்துவிட்டது என்று முடிவெடுக்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் தொடர் கண்காணிப்பு இனி தேவையில்லை என்று கருதப்பட்டால், அந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையிடம் ஒப்படைக்கப்படும். இந்த முறையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 18-1-2007 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 10-ல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின்கீழ் "சிறப்பு முயற்சி" திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2.13.1 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

2012-13 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பிற்கிணங்க, வட்டாரங்களுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வுகளை களைவதற்குரிய முக்கிய காரணிகளான சுகாதாரம் மற்றும் கல்வி, மேலும் பிற காரணிகளான தனிநபர் வருமானம், வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மை மற்றும் பாலினம் சார்ந்த வளர்ச்சி ஆகிய காரணிகளின் அடிப்படையில் 100 மிகவும் பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் கண்டறியப்படும். இதற்கென ஆண்டிற்கு ரூபாய் 100 கோடி

ஒதுக்கீட்டில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி ஒன்று நிறுவ ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நிதியின்மூலம் இவ்வாறு கண்டறியப்பட்ட பகுதிகளில் ஏற்றத்தாழ்வுகளை களையும் பொருட்டு இலக்குகளைக் கொண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசாணை நிலை எண் 68, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை நாள் 26-8-2015-ல் 105 மிகவும் பின்தங்கிய வட்டாரங்களை பொருத்தமான அளவுகோலின் அடிப்படையில் தேர்வு செய்து மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியை செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2.13.2 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் அமைப்பை நிறுவுதல் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஏற்படுத்துதல்

8-8-2014 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி எண் 110 இன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படியும் தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023 இன், குறிக்கோள்களில் ஒன்றான, தமிழ்நாட்டைப் புத்தாக்க மையமாக உருவாக்குவதின் தொடர்ச்சியாக "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" (Tamil Nadu Innovation Initiatives -TANII) என்ற ஓர் அமைப்பினை மாநில திட்டக்குழுவில் நிறுவுவதற்கு அரசு ஆணை (நிலை) எண் 93, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மா.தி) துறை, நாள் 26-9-2014-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசுத்துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் ரூ.150 கோடி நிதி ஒதுக்கீட்டில் மாநில புத்தாக்க நிதியம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு பரிசுகள் வழங்குவதற்காக "மாண்புமிகு முதலமைச்சரின் புத்தாக்க விருது" என்ற பெயரில் விருது ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

3.0 துறைத் தலைமையிடங்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

i. மாநிலத் திட்டக் குழு

ii. பொருளியல் மற்றும் புள்ளியல் துறை

iii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

TRUTH ALONE TRIUMPHS

iv. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், இதற்கென ஏற்படுத்தப்பட்ட தனிச் செயலாளரின் (சிறப்பு முயற்சிகள்) கீழ் உள்ள ஒரு கூட்டுத் துறை நிறுவனம்

மேற்கண்ட துறைகளின் பணிகள் சுருக்கமாக பின்வருமாறு:

3.1.1 மாநிலத் திட்டக் குழு

மாநிலத் திட்டக்குழு தமிழ்நாட்டில், 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் மாநிலத் திட்டக் குழு ஒரு ஆலோசனை அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, மாநிலத்தின் வளர்ச்சி குறித்த பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு இத்திட்டக்குழு அளித்து வருகிறது. 2-7-2011 அன்று ஒரு துணைத்தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டு இம்மாநிலத் திட்டக்குழு திருத்தி அமைக்கப்பட்டது. அரசு முதன்மைச் செயலர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் அரசு முதன்மை செயலர், நிதித் துறை ஆகியோர் இக்குழுவின் அலுவல் சார் உறுப்பினர்களாவர். மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர் செயலர் இக்குழுவின் நிருவாகப் பொறுப்பு வகிக்கிறார்.

3.1.2 மாநிலத் திட்டக் குழுவின் முதன்மையான பொறுப்புகள்

i. ஐந்தாண்டுத் திட்டத்தில் அளிக்கப்பட வேண்டிய முன்னுரிமைகள் மற்றும் அத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசனைகளை அரசிற்கு வழங்குதல்.

ii. வரைவு ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டுதல் குழுக்கள் மற்றும் பணிக்குழுக்களை அமைத்தல் மற்றும் வரைவு ஐந்தாண்டுத் திட்டம் தயாரித்து ஒப்புதலுக்கு அனுப்புதல்.

iii. நிதி ஆதாரங்களுக்கேற்ப வரவு-செலவுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது குறித்து அரசுக்குப் பரிந்துரைத்தல்.

iv. வரைவு ஆண்டுத் திட்டங்களைத் தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்புதல்.

[2015 செப்டம்பர் 29

v. ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எய்துவது குறித்தும் காலமுறை அடிப்படையில் ஆய்வு செய்தல்.

vi. ஐந்தாண்டுத் திட்டத்தை இடைக்கால ஆய்வு மேற்கொள்வதுடன், அவ்வாய்வின் அடிப்படையில் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களை திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசிற்கு ஆலோசனை அளித்தல்.

vii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உதவியுடன், பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல், அம்மதிப்பீட்டின் அடிப்படையில் திட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் செம்மைப்படுத்துதல் குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல்.

viii. நடைமுறையில் உள்ள அரசாணைகள் மற்றும் வழிமுறைகளின்படி மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியை திறம்பட செயல்படுத்துதல்.

ix. மாவட்டத் திட்டக்குழுக்களின் பணிகளை ஒருங்கிணைத்து, திட்டமிடல் நடவடிக்கைகளை மாவட்டம்/வட்டாரம்/ கிராம அளவில் மேற்கொள்ளுதல்.

x. ஐந்தாண்டுத் திட்டம் / ஆண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கான துணைத் திட்டங்களைத் தயாரிப்பது குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

xi. மாநில மனித மேம்பாட்டுக் குறியீடு, பாலின மேம்பாட்டுக் குறியீடு ஆகியவற்றில் மாற்றம் / பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வளர்ச்சிக் காரணிகளைப் பல்வேறு நிலைகளில் கண்காணித்து அவற்றை சரிசெய்ய தேவையான வழிமுறைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறுதல்.

xii. திட்டங்கள் வகுத்திடவும், செயல்படுத்தவும் தேவையான சிறப்பு மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளுதல்.

xiii. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்து, தேவையான அறிக்கைகளை தேவைப்படும்பொழுது அரசுக்கு அளித்தல் மற்றும்

xv. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஆகியவற்றை நிர்வகிப்பது.

3.1.3 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்

"தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023" அறிக்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக இந்தியாவிலேயே புதுமையாக்கத்தின் இருப்பிடமாக தமிழ்நாட்டை உருவாக்க குறிக்கோள் கொண்டுள்ளது. அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" என்ற ஓர் அமைப்பு மாநிலத் திட்டக்குழுவில் நிறுவப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இந்த அமைப்பு அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். இது படிப்படியாக அரசுத் துறை அல்லாத சேவை நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்படும். "முதலமைச்சரின் புத்தாக்க விருது" நிறுவப்பட்டு சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு விருது வழங்கும் திட்டமும் உருவாக்கப்படும்.

3.1.4 மாநில புத்தாக்க நிதி

அரசு மாநில புத்தாக்க நிதி என்ற ஓர் அமைப்பை ஏற்கெனவே உள்ள பகுதி-II புதிய திட்டத்தை மாற்றியமைத்து புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளிக்கும் பொருட்டு ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியத்திற்கு 2015-16 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் ரூ.150 கோடி வழங்கப்படும். அரசு ஆணை எண் 124, திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 24-10-2014-ல் புத்தாக்க திட்டங்களை கண்டறிவதற்கும், நடைமுறைப் படுத்துவதற்கும் தொடர்புடைய விரிவான வழிகாட்டும் முறைகள் வழங்கப்பட்டுள்ளன.

3.1.5 தொடர் திட்டங்களுக்கான மறு ஆய்வு

அரசு ஆணை எண் 83, திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 3-9-2014-ல், குறிப்பிட்டுள்ளபடி வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் ஆண்டுத் திட்டம் 2015-16 தயாரிப்பின் ஒரு

பகுதியாக குறிப்பிட்ட 14 துறைகளின் தொடரும் திட்டங்களுக்கான மறு ஆய்வு மாநிலத் திட்டக்குழுவால் மேற்கொள்ளப்பட்டது. இந்த மறு ஆய்வு, செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் அரசின் கொள்கை முடிவுகளை சார்ந்து செயல்படுகின்றனவா, அந்த திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கீடு சரியான அளவில் அளிக்கப்படுகின்றனவா மற்றும் அத்திட்டங்கள் சார்ந்த துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றதா மற்றும் மாநில முழுமைக்குமான சமூக பொருளாதார முன்னுரிமைகளை அடைய உதவி புரிகின்றனவா என்பதனை அறிந்து கொள்வதற்காக நடத்தப்பட்டன. மேலும், தொடர் திட்டங்களை ஆய்வு செய்து திட்டத்தை தற்போதுள்ள வடிவமைப்பு மற்றும் ஒதுக்கீட்டின் அளவுடன் தொடர்வதற்கான தேவை அல்லது திட்ட ஒதுக்கீட்டைக் குறைப்பது மற்றும் திட்டத்தின் அமைப்பினை மாற்றுவது அல்லது திட்டத்தினை முழுவதுமாக நிறுத்துவது அல்லது திட்டத்தினை திட்டம் சாராதத் திட்டமாக மாற்றுவது குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டன. இந்த மறு ஆய்வின் மூலமாக குறைவான செயல்பாடு கொண்ட திட்டங்கள் கண்டறியப்பட்டு அத்திட்டங்களைத் திருத்தி அமைப்பதற்கும் தேவைக்கேற்றவாறு நிதி ஒதுக்கீடு செய்யவும் பரிந்துரை செய்யப்பட்டது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டு ஆண்டுத் திட்டம் சிறந்த முறையில் தயாரிப்பதற்கு தீர்வு காணப்பட்டது. மேலும் மாநில அரசு, மைய அரசு மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு உதவியாக இருந்தது.

3.1.6 ஐந்தாண்டுத் திட்டம், ஆண்டு திட்டம் தயாரித்தல்

தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டதிலிருந்து திட்டமிடல் மற்றும் வளர்ச்சி போன்ற அடிப்படைத் குறிக்கோள்களை அடையும் பொருட்டு ஐந்தாண்டு திட்டங்களை தயாரிக்கின்றது. இதுவரை பதினொன்று ஐந்தாண்டு திட்டங்களை நிறைவு செய்துள்ளது.

3.1.6.1 பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017)

பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டம் (2012-2017) மொத்த ஒதுக்கீடு ரூ.2,11,250 கோடி என்ற அளவில் செயல்படுத்த கருதப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கை திட்டத்தைப்பற்றிய ஒரு

2015 செப்டம்பர் 29]

முன்னோட்டமும், மாநிலத்தின் பொருளாதார நிலையினை உள்ளடக்கிய துறை வாரியான விளக்கமான அத்தியாயங்களைத் கொண்டுள்ளது.

3.1.6.2 ஆண்டுத் திட்டம் 2015-16

மாநிலத்தின் ஆண்டுத் திட்டங்கள் மாநில, நடுவண் அரசுகளின் ஐந்தாண்டுத் திட்ட முன்னுரிமைகளையும், குறிக்கோள்களையும் பெரிதும் பின்பற்றி, உருவாக்கப்படுகின்றன. ஆண்டு திட்டம் *2014-15-ல்* திட்ட ஒதுக்கீடாக ரூ.*50,660* கோடி அளவில் செயல்படுத்தப்பட்டது. இது 12-வது திட்ட மொத்த ஒதுக்கீட்டில் 23.98 சதவிகிதமாகும். 2015-16 வரவு-செலவுத் திட்டத்தில் ஆண்டுத் திட்டங்களுக்காக ரூபாய் 55,100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

3.1.6.3 பன்னிரெண்டாவது திட்ட இடைக்கால ஆய்வு

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இடைக்கால ஆய்வு மேற்கொள்வது திருத்தி அமைக்கப்பட்ட மாநிலத் திட்டக்குழுவின் ஒரு முக்கிய பணியாகும். இடைக்கால ஆய்வு ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றாம் ஆண்டின் முடிவில் மேற்கொள்ளப்பட வேண்டும் அதன்படி மாநிலத் திட்டக் குழு பல்வேறு வளர்ச்சி துறைகளின் செயல்பாடுகளை ஆயவு செய்யும் பொருட்டு ஆரம்ப பரிசீலனைக் கூட்டங்களை நடத்தியது. இவற்றில் பன்னிரெண்டாவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் துறை வாரியான திட்ட செயல்பாடுகள் மற்றும் நிதி பயன்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்த ஆரம்ப கட்ட ஆய்வின்னை கொண்டு மாநிலத் திட்டக் குழு பன்னிரெண்டாவது திட்ட இறுதி இடைக்கால ஆய்வை தயாரிக்கும்.

3.1.7 தமிழ்நாடு நிலப்ப யன்பாடு ஆராய்ச்சி வாரியம்

"தமிழக அரசால் 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் தலைமையில், "தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்" என்ற அமைப்பை மாநிலத் திட்டக்குழுவில் ஒரு நிரந்தர அமைப்பாக செயல்பட ஆணை பிறப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த வாரியம், நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை நிர்வகிக்கவும், மேம்படுத்தவும், பல்வேறு அரசு துறைகள் / ஆராய்ச்சி நிறுவனங்கள் / பங்குதாரர்களுடன் இணைந்து செயல்பட்டு புதிய திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுக்க வழிவகை செய்கிறது.

தமிழ்நாடு நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியம் நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், கருத்தரங்கு மற்றும் ஆராய்ச்சிகள் / விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகிறது.

3.1.8 தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு வாரியத்தின் 2014–15 ஆம் ஆண்டின் செயல்பாடுகள்

மாநிலத் திட்டக்குழு தற்போது வரைவு நிலப் பயன்பாட்டுக் கொள்கை தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின்கீழ் வரைவு நிலப் பயன்பாட்டுக் கொள்கை தயாரிப்பதற்கு ஏதுவாக 6 (ஆறு) முதல்நிலை ஆராய்வுகள், 2013-14 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இந்த முதல்நிலை ஆராய்வுகளின் தொடர்;ச்சியாக 2014-15 ஆம் ஆண்டில் மேலும் 6 (ஆறு) புதிய ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்வுகளில் நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் மற்றும் சமூகப் பொருளாதார நிலை மற்றும் தற்போது உள்ள நிலப் பயன்பாட்டு கொள்கைகள் தொடர்பான சட்டங்களின் கட்டமைப்புகளின் காரணமாக நிலப் பயன்பாடு மற்றும் நிலப்பரப்பு மாற்றங்கள் மதிப்பிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவிர, மேலும் இரண்டு நீர் மேலாண்மை ஆராய்வுகள் மற்றும் ஒரு சுற்றுச்சூழல் தொடர்புடைய ஆராய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2014-15 ஆம் ஆண்டு, 9 (ஒன்பது) ஆராய்வுகள் மற்றும் 4 (நான்கு) பயிலரங்கங்கள் / கருத்தரங்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாநிலத் திட்டக் குழுவின் தமிழ்நாடு மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின்கீழ் புவியியல் சார் தகவல் அமைப்பு / தொலையுணர்தல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை தொடர்ச்சியாக நடத்த ஏற்பாடுகள் செய்வதன் வாயிலாக தமிழ்நாடு புவியியல் சார் தகவல் அமைப்பு திட்டம் மற்றும் புவியியல் சார் தகவல் அமைப்பிற்கான தரநிலைகள் முறைப்படுத்துதலுக்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2015-16 ஆம் ஆண்டு பல தொடர்ச்சியான பயிலரங்கங்கள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலமாக தமிழ்நாட்டிற்கான புவியியல் சார் தகவல் அமைப்பின் தரநிலைகள் முறைப்படுத்தப்படும் மற்றும் இந்த பயிலரங்குகளின் செயல்முறைகளை புத்தகமாக அச்சிட்டு துறை சார்ந்த வல்லுனர்களுக்கு விநியோகிக்கப்படும்.

2015 செப்டம்பர் 29]

2015-16 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின்கீழ் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள அரசு துறைகள் / கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள்/ முகவர்களிடமிருந்தும் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளது. 2015-16 ஆம் ஆண்டுக்கான திட்டப் பணிகள் தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்படும்.

3.1.9 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

தனிநபர் வருமானம், வேலைவாய்ப்பின்மை, வறுமை நிலை சுகாதாரம், கல்வி மற்றும் பாலின மேம்பாடு இவற்றில் மாவட்டங்களுக்கு இடையே மற்றும் மாவட்டத்திற்குள் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைச் சீரமைக்க 2012-13 ஆம் ஆண்டிலிருந்து தமிழக அரசால் செயல்படுத்தப்படும் ஒரு தனித்துவமான திட்டம், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் வாயிலாக 100 மிகவும் பின் தங்கிய வட்டாரங்கள் மற்றும் பின்தங்கிய நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.100.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாநிலத் திட்டக் குழு, இக்காரணிகளைப் பயன்படுத்தி 105 பின் தங்கிய வட்டாரங்களையும், மாநகராட்சி, நகராட்சி மற்றும் நகர பஞ்சாயத்துகளில் உள்ள குடிசைப் பகுதிகளை கண்டறிந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாநிலத் திட்டக் குழுவில் இத்திட்டம், மாவட்ட ஆட்சியாளர்களின் மூலமாக மாவட்ட திட்டப் பிரிவுகள் மற்றும் பிற துறைகளின் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட அளவில் முன் மொழியப்படும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும், திட்டச் செயல்பாட்டை வழி நடத்தவும், கண்காணிக்கவும் மாநில அளவில் ஒரு அதிகாரக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், தொலைநோக்கு திட்டம் தயாரித்தல், தகுந்த திட்டங்களை உருவாக்குதல், திறனை மேம்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடல் போன்ற பணிகளை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்திற்கு உதவிட கல்வி மற்றும் ஆராய்ச்சி வள நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

சில குறிப்பிடத் தகுந்த திட்டங்களாவன; ஒருங்கிணைந்த பண்ணையம் முறையை ஊக்கப்படுத்துதல், ஆயத்த ஆடை

தயாரிப்பு, இணைப்பு வசதி இல்லாத மக்களின் இருப்பிடங்களுக்கு சாலை அமைத்தல், போக்குவரத்து வசதி இல்லாத பகுதிகளுக்கு ஆட்டோ வழங்குதல், ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை, தோட்டக்கலை சார்ந்த திட்டங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல் மற்றும் அடிப்படை வசதி மேம்படுத்துதல் போன்றவை.

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ் இதுவரை 210.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டிலுள்ள 30 மாவட்டங்களில் உள்ள 105 பின்தங்கிய வட்டாரங்களில், 320 திட்டங்களைச் செயல்படுத்த மாநிலத் திட்டக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. 2015-16 ஆம் ஆண்டிலும் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3.1.10 மனித மேம்பாட்டு அறிக்கை

மாநிலத் திட்டக்குழு மாநிலத்திற்கும் மற்றும் 32 மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் மனித மேம்பாட்டு அறிக்கையை மனித மேம்பாட்டிலுள்ள ஏற்றத்தாழ்வுகளில் இடைவெளியை நீக்கும் திட்டத்தின்கீழ் தயாரித்து வருகிறது. மனித மேம்பாட்டுக் குறியீடுகள் மாவட்டங்களுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை வெளிக்கொணரும் மாவட்ட மனித மேம்பாட்டு அறிக்கைகள், மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை ஆராயும். மனித மேம்பாட்டு அளவுகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கும், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதிக்கான தொலைநோக்குத் திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளீடுகளை அளிப்பதற்கும் இவ்வறிக்கை பயனுள்ளதாய் அமையும். மனித மேம்பாட்டு அறிக்கை தயாரிப்பது மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தேவையான உள்ளீடுகளை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மனித மேம்பாட்டு அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்களை ஒத்திசைவு செய்யவும், ஆய்வு முடிவுகளை விவரிக்கவும், மாநில உயர்நிலை குழு கூட்டம் நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சில புள்ளிவிவரங்களில் தற்போதைய புள்ளிவிவரத் தகவல்களை அறிக்கையில் அளிப்பதற்கு தொடர்புடைய துறைகளுடன் தனித்தனியே கூட்டங்கள் நடத்தப்பட்டது. அவ்வாறு சீரமைக்கப்பட்ட மாநில மற்றும் 20

2015 செப்டம்பர் 29]

மாவட்டங்களுக்கான மனித மேம்பாட்டு அறிக்கை உயர்நிலை குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ளது.

3.1.11 பயிலரங்கங்கள் / கருத்தரங்கங்கள் மற்றும் ஆராய்வுகள் மேற்கொள்ளுதல்

பயிலரங்கங்கள் / கருத்தரங்கங்கள் மற்றும் ஆராய்வுகள் மேற்கொள்ளுதல் வளர்ச்சி குறித்த முக்கிய பிரச்சினைகள் மற்றும் வருங்காலத்தில் முன்னுரிமை அளிக்க வேண்டிய இலக்குகள் வல்லுநர்களோடு பயிலரங்கங்கள் / கருத்தரங்குகளை நடத்துவதன் வாயிலாக மாநிலத் திட்டக் குழுவினரால் கண்டறியப்பட்டுள்ளன. இதன் தொடர்பாக 2014-15ஆம் ஆண்டில் 29 கருத்தரங்கங்கள் மற்றும் பயிலரங்கங்கள் மேற்கொள்ளப்பட்டு அக்கூட்டத்தின் பரிந்துரைகள் புத்தகங்களாக தயாரிக்கப்பட்டு அனைத்து துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்கப்பட்டது. மேலும் 2014-15 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகள் தொடர்புடைய முக்கிய பிரச்சினைகள் குறித்து 15 ஆராய்வுகள் துறைசார்ந்த வல்லுனர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் 2015-16 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய பயிலரங்கங்கள்/ கருத்தரங்கங்கள் மற்றும் ஆராய்வுகள் துறைகளிடம் கோரப்பட்டுள்ளது.

3.1.12 மாநில மதிப்பீடு மற்றும் ஆய்வுக் குழு

மாநிலத் திட்டக் குழுவில் செயல்படும் மதிப்பீடு மற்றும் ஆய்வுக்குழு, விரிவான கலந்தாய்வு மேற்கொண்டு மதிப்பீட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளைப் பரவலாக்கம் செய்து உரிய மேல் நடவடிக்கை எடுத்திட உறுதுணை செய்கிறது. 2014-15 ஆம் ஆண்டில் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறையின் 8 மதிப்பீட்டு ஆய்வறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளின் மேல் மறு ஆய்வு மற்றும் அது தொடர்புடைய துறைகளின் மேல்நடவடிக்கை குறித்து மாநில திட்டக் குழுவிடம் முன்னிலைப்படுத்தப்பட்டது.

3.2 பொருளியல் மற்றும் புள்ளியல் துறை

3.2.1 அரசின் பல்வேறு வளர்ச்சி திட்ட உருவாக்கத்திற்கு தேவையான முக்கிய குறியீட்டெண்களுக்கான புள்ளிவிவரங்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், அறிக்கை வெளியிடுதல் போன்ற பணிகளில் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை ஈடுபட்டு

[2015 செப்டம்பர் 29

வருகிறது. மத்திய, மாநில அரசுகளால் எடுக்கப்படும் கொள்கை முடிவுகளை செயல்படுத்துவதற்குத் தேவையான தொடர்புடைய விவரங்களை சரியான நேரத்தில் வழங்கி வருகிறது. இத்துறை மாநிலத்தின் புள்ளிவிவர முகமை அமைப்பாக செயல்பட்டு வருகிறது. வேளாண்மை, வேளாண்மை சார்ந்த பிரிவுகள், தொழில் துறைப் பிரிவு, பணிகள் பிரிவு ஆகியவற்றிற்கான புள்ளிவிவரங்களை தொகுத்து வெளியிடுவதும் இத்துறையின் முக்கிய பொறுப்பாகும்.

இத்துறை, மத்திய, மாநில அரசுகளால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் சிறப்பு கணக்கெடுப்புகள் மற்றும் ஆய்வுகள் மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை தயாரித்து வழங்குவது மட்டுமன்றி, பல்வேறு பொருளாதார அளவீடுகளான மாநில வருவாய், மாவட்ட வருவாய், தொழில் உற்பத்தி குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண், மொத்த விலை குறியீட்டெண் போன்ற மதிப்பீடுகளும் இத்துறையினால் கணிக்கப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு புள்ளியியல் கையேடு, தமிழ்நாடு பருவமும் மற்றும் பயிர் பற்றிய அறிக்கை, பொருளாதார நிலை குறித்த அறிக்கை போன்றவை இத்துறையால் வெளியிடப்படுகின்றன. இவ்வறிக்கைகள், தொடர்புடைய பிற துறைகளுக்கு உடனடி பார்வைக் கையேடுகளாக (ready reference material) பயன்படுகின்றன. இத்துறைப் பணியாளர்கள் பிற துறைகளில் பணியமர்த்தப்பட்டு அத்துறைகளில் அன்றாட செயல்பாடுகள், அவ்வப்போது தேவைப்படுகின்ற புள்ளி விவரங்களை சேகரித்தல், தொகுத்தல், அறிக்கை தயாரித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்துறை, பின்வரும் திட்டம் சார்ந்த பணிகளுக்கும் திட்டம் சாரா பணிகளுக்கும் முன்னுரிமை அளித்து செயல்படுத்தி வருகிறது.

3.2.2 திட்டம் சார் பணிகள்

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

1. வேளாண்மைக் கணக்கெடுப்பு

வேளாண்மைக் கணக்கெடுப்பு இத்துறையால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. இது விரிவான வேளாண்மை புள்ளியியல் திட்டத்துடன் ஒருங்கிணைந்த திட்டமாகும்.

இக்கணக்கெடுப்பில், மாநிலத்தின் வேளாண்மை தொடர்பான முக்கிய புள்ளிவிவரங்களை சேகரித்தல், தொகுத்தல் ஆகியன முக்கிய செயல்பாடுகளாகும். பல்வேறு வகையான நில கைப்பற்றுகள் தொடர்பான விவரங்கள் வருவாய் துறையின் நிலப் பதிவேடுகளிலிருந்து பெறப்படுகின்றன. நில உடைமையாளர்களின் சமூகநிலை, நிலப் பயன்பாடு, நீர்ப்பாசன ஆதாரம், பயிர் சாகுபடி முறை, குத்தகைத் தன்மை, கால்நடைகள், வேளாண் உபகரணங்கள், கருவிகளின் பயன்பாடு, பூச்சிக் கொல்லி, இயற்கை உரப் பயன்பாடு போன்ற பல புள்ளிவிவரங்கள் இக்கணக்கெடுப்பின்மூலம் சேகரிக்கப்படுகின்றன.

ஒன்பதாவது வேளாண்மைக் கணக்கெடுப்பில் (2010-11), மூன்று பகுதிகளுக்கான களப்பணிகள் முடிவுற்று, அதன் முடிவுகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. மூன்று பகுதிகளுக்கான அடிப்படைப் புள்ளிவிவரங்கள் மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் பகுதி-I-க்கான அறிக்கை 27-5-2014 அன்று வெளியிடப்பட்டது. பகுதி—II-க்கான அறிக்கை தயாரிக்கும் பணி தற்பொழுது நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்றதும், அடுத்த கட்ட பகுதிக்கான அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

பத்தாவது வேளாண்மைக் கணக்கெடுப்பின் (2015-16) மண்டல அளவிலான கூட்டம் மத்திய அரசால் 30-10-2014 முதல் 1-11-2014 வரை மதுரையில் நடத்தப்பட்டது. பத்தாவது வேளாண்மைக் கணக்கெடுப்பினை அகில இந்திய அளவில் சிறப்பாக நடத்துவதற்காக விரிவான அறிவுரைகளும் படிவங்களை பூர்த்தி செய்வது குறித்து வழிமுறைகளும் இக்கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து மாநில, யூனியன் பிரதேச அலுவலர்களால் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

2. பொருளாதாரக் கணக்கெடுப்பு

பொருளாதாரக் கணக்கெடுப்பு இத்துறையால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. அமைப்புசாரா நிறுவனங்களின் எண்ணிக்கை, அதில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகியவைப் பற்றிய விரிவான புள்ளிவிவரக் கட்டமைப்பை உருவாக்குவதே பொருளாதாரக்

[2015 செப்டம்பர் 29

கணக்கெடுப்பின் நோக்கமாகும். இவ்விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய வருவாய் மதிப்பீடுகளில் அமைப்புசாரா துறையின் பங்களிப்பை கணிப்பதற்குத் தேவையான தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் தேவையான நிறுவன புள்ளிவிவரங்கள் குறிப்பாக அமைப்புசாரா துறை, அவற்றில் வேலைவாய்ப்பு நிலை பற்றிய விவரங்கள் இக்கணக்கெடுப்பின்மூலம் கிடைக்கப்பெறுகின்றன.

- ✓ பொருளாதாரக் கணக்கெடுப்பு மத்திய அரசின் 100 விழுக்காடு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பினை தமிழ்நாட்டில் நடத்துவதற்கான பணியிடங்கள் உருவாக்கத்திற்கும் முப்பது மாதங்கள் செயல்பாட்டில் இருக்கவும் இந்திய அரசின் மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் தனது இசைவை தெரிவித்துள்ளது.

- ✓ அரசு ஆணை (நிலை) எண் 96, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 13-6-2011-க்கிணங்க மாநில அளவிலான வழிகாட்டுதல் குழுவும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ✓ தமிழ்நாட்டில் ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்துவதற்காக இந்திய அரசின் மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் மொத்த செலவாக 37.93 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டில் இப்பணிக்கான களப்பணி / கணக்கெடுப்புப் பணி முடிக்கப்பட்டுள்ளன.

- ✓ ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பிற்கான கணக்கெடுப்புப் பணி மாநிலம் முழுவதும் நடத்தி முடிக்கப்பட்டு தற்காலிக அட்டவணை முடிவுகள் 15-10-2014 அன்று வெளியிடப்பட்டுள்ளன. மேலும், 6இ படிவங்கள் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, தொடர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3. பழங்கள், காய்கறிகள் மற்றும் சிறுபான்மைப் பயிர்கள் குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு

இத்திட்டம்மூலம் பழம், காய்கறி, சிறுபான்மைப் பயிர்கள் ஆகியவற்றிற்கான விளைச்சல் விகிதத்தையும், மொத்த

2015 செப்டம்பர் 29]

உற்பத்தியையும் பயிர் அறுவடை பரிசோதனைகள்மூலம் துல்லியமாகக் கணக்கிடப்படுகின்றன. இத்திட்டத்தில் மா, பலா, வாழை, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை, அன்னாசி ஆகிய பழவகைப் பயிர்களுக்கும், தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைகோசு, சர்க்கரைவள்ளி ஆகிய காய்கறிப் பயிர்களுக்குமான விளைச்சல் விவரங்கள் கணிப்பதற்காக 2014-15-ல் 660 கிராமங்களில் 1320 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டன. சிறுபான்மைப் பயிர் திட்டத்தில் 2014-15-ல் மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக்கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக் கிழங்கு, முந்திரி, இஞ்சி ஆகிய பயிர்களில் 625 கிராமங்களில் 1250 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

4. இந்தியப் புள்ளியியல் அமைப்பினை வலுப்படுத்தும் திட்டம்

இந்தியப் புள்ளிஇயல் வலுப்படுத்தும் திட்டம் (India Statistical Strengthening Project) மாநில அளவில் புள்ளியியல் பணிகளை ஒருங்கிணைக்கவும், நிர்வகிக்கவும், மனிதவளத்தை மேம்படுத்தவும், புள்ளியியல் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், புள்ளியியல் விவரங்கள் சேகரிக்கும் 22 இணை துறைகளுக்கு தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வசதி செய்வதற்கும் வழிவகுக்கின்றது.

இத்திட்டத்தில், மாநில அரசின் பொருள்இயல் மற்றும் புள்ளியியல் துறையில் பின்வரும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன:

- துறைத் தலைமையிடத்திற்கு 4.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, இக்கட்டடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 26-6-2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- மொத்தமுள்ள 385 வட்டாரங்களில், 242 வட்டாரங்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மூலமாக வட்டாரப் புள்ளியியல் ஆய்வாளர்களுக்கென 6.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, தற்போது 229 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

[2015 செப்டம்பர் 29

- **மண்டல புள்ளியியல் இணை இயக்குநர் அலுவலகங்கள் :** மொத்தம் கட்டப்பட வேண்டிய ஐந்து கட்டடங்களில் மூன்று அலுவலகங்களுக்கான கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

- **மாவட்ட புள்ளியியல் துணை இயக்குநர் அலுவலகங்கள் :** மொத்தம் கட்டப்பட வேண்டிய 14 அலுவலகங்களில் ஒன்பது அலுவலகங்களுக்கான கட்டடப் பணி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள அலுவலகங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

- **கோட்ட புள்ளியியல் உதவி இயக்குநர் அலுவலகங்கள்:** மொத்தம் கட்டப்பட வேண்டிய 49 அலுவலகங்களில் 23 அலுவலகங்களுக்கு கட்டடப் பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள அலுவலகங்களுக்கு பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- புள்ளியியல் பணியாளர்களின் திறனை மேம்படுத்த உரிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தில், மாநில புள்ளியியல் பயிற்சி நிறுவனம் அமைக்கப்பட்டு, 1-5-2012 முதல் துறைத் தலைமையிட கட்டடத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனத்திற்கு கட்டடம் கட்டத் தேவையான நிலம் சென்னை மாவட்டம், மயிலாப்பூர்—திருவல்லிக்கேணி வட்டம், களிக்குன்றம் கிராமத்தில் கண்டறியப்பட்டு, கட்டடப் பணிகள் தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- மாவட்ட அளவில் திட்டப் பணிகளின் தரத்தை உயர்த்தவும், ஆய்வுப் பணிகளை மேம்படுத்தவும், தேவையான ஊர்தி வசதியை கருத்திற்கொண்டு 187.73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 31 மாவட்டங்களுக்கு பொலிரோ வாகனமும், துறைத் தலைமையிடத்திற்கு ஒரு சிருந்தும், தமிழ்நாடு மாநில புள்ளியியல் பயிற்சி நிறுவனத்திற்கு ஒரு சிருந்தும், பொலிரோ வாகனமும் வாங்கப்பட்டுள்ளன.

- இணையதள அமைப்பிற்கென (Web Portal) 103 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29]

❖ மைய அரசின் ஒதுக்கீடு குறைப்பு

இத்திட்டத்தின்கீழ், மாநில புள்ளியியல் செயல்முறை திட்டத்தினை 40.76 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் தமிழ் நாட்டில் அமல்படுத்துவதற்கு 28-9-2011 அன்று மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதில் மத்திய அரசின் பங்கு 39.34 கோடி ரூபாய் மற்றும் மாநில அரசின் பங்கு 1.42 கோடி ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிறகு மத்திய அரசு 2011-12 ஆம் நிதியாண்டில் 11.54 கோடி ரூபாய் மட்டும் விடுவித்தது.

மைய அரசு பல்வேறு காரணங்களை முன்னிட்டு பின்னர் தொகை ஏதும் விடுவிக்காததாலும், இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட வேண்டிய அனைத்து பணிகளும் முடங்கிப்போனதாலும் மாநில அரசு, மத்திய அரசிடமிருந்து ஒதுக்கீட்டை எதிர்நோக்கி கட்டடப் பணிகளுக்காக மேலும் கூடுதலாக 13.46 கோடி ரூபாயும், அனைத்து அலுவலகங்களுக்கு அறைகலன் வழங்குவதற்கு 2.32 கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளது.

மத்திய அரசு மாநில அரசை கலந்தாலோசிக்காமல் 17-12-2014 நாளிட்ட கடிதத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட 39.34 கோடி ரூபாயை தற்போது 19.31 கோடி ரூபாயாகக் குறைத்தும், மாநில அரசின் பங்கு தொகையை 1.42 கோடி ரூபாயிலிருந்து 4.84 கோடி ரூபாயாக உயர்த்தியும் அங்கீகரித்துள்ளது. மேலும், இப்புதிய ஒதுக்கீட்டின்படி திருத்திய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தயார் செய்ய மாநில அரசை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. திருத்தப்பட்ட ஒதுக்கீட்டின்படி திருத்தப்பட்ட வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தம் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

5. மாநிலம், மாவட்ட அளவில் 13–வது நிதிக் குழுவின் மானியத்தின் மூலம் புள்ளியியல் அமைப்பை வலுப்படுத்துதல்

தரமான புள்ளிவிவரங்கள் முக்கிய கொள்கை முடிவுகள் எடுக்க ஏதுவாகவும், மாநிலங்களின் புள்ளிவிவரத் திறனை அதிகரிக்கவும், மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் தேவைப்படும் புள்ளிவிவரங்களைத் துல்லியமாக குறிப்பிட்ட காலத்திற்குள் அளிப்பதற்கும் ஏதுவாக, 13-வது நிதிக்குழு மானியத்தில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் வீதம்

தமிழ்நாடு மாநிலத்திற்கு 31 கோடி ரூபாய் நிதியினை 2010-2015 காலத்திற்குள் செலவு செய்யும் வகையில், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, 13-வது நிதிக் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்தும் வகையில், மத்திய புள்ளியியல் அலுவலகம் அகில இந்திய அளவிலான ஐவகை முக்கிய பணிகளை மைல்கற்களாக (Five Milestones) நிர்ணயித்துள்ளது:

1. வணிக நிறுவனப் பட்டியலைத் (Business Register) தயாரித்தல்.
2. உள்ளாட்சி நிறுவனங்களின் வரவு-செலவின அறிக்கைகளைத் தயாரித்தல், அவற்றை மேம்படுத்துதல்.
3. மத்திய மாநில மாதிரிகளின் விவரங்களை ஒருங்கிணைத்து மாவட்ட அளவில் புள்ளிவிவரங்கள் தயாரித்தல்.
4. வேளாண்மைப் பணிகள் தொடர்பான விவரங்களை சேகரித்தல்.
5. மாவட்ட அலுவலகங்களை மாநில துறைத் தலைமையிடத்துடன் இணையதள/உள்தள வலைய வசதியுடன் இணைத்தல்.

பதின்மூன்றாவது நிதிக் குழு மானியத்திலிருந்து இதுவரை,

- அனைத்து மாவட்டங்களுக்கும் ஒலிபெருக்கியுடன் ஒளிபடக்காட்சிக் கருவி (Projector with Amplifier), பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ள உபகரணப் பெட்டிகள் போன்றவை வாங்குவதற்கும், முக்கிய அறிக்கைகள் மற்றும் சிறப்பு வெளியீடுகள் தயாரித்து அச்சிடவும் 1.03 கோடி ரூபாய் 2011-12ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது.
- மீதமுள்ள 29.97 கோடி ரூபாய்க்கான திருத்திய நடவடிக்கை திட்டம் (Revised Action Plan), மாநில உயர்மட்ட கண்காணிப்புக் குழு மற்றும் பிரத்யேகமாக மத்திய அரசின் கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மற்றும் கால்நடை பராமரிப்பு அறிவியல் பல்கலைக்கழகம்,

மீன் வளத் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை ஆகிய பிற நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் ஆய்வுகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. இத்துறையின் மூலமும் ஆய்வுகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அவற்றில் சில ஆய்வுகள் முடிவடைந்து அறிக்கை வெளியிடப்படும் நிலையிலும், முடிவுகளை ஆய்வு செய்யும் நிலையிலும் உள்ளன. அவ்வாய்வுகள் குறித்த கருத்துப்பட்டறை 21-1-2015 அன்று சென்னையில் நடத்தப்பட்டது. இதில் மத்திய அரசு அதிகாரிகளும் மற்ற துறையின் அரசு அலுவலர்களும் பங்கேற்றனர்.

- மத்திய அரசிடமிருந்து இதுவரை (ஒரு தவணைக்கு 6.20 கோடி ரூபாய் வீதம்) மூன்று தவணைகளில், மொத்தம் 18.60 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசு இதுவரை விடுவித்துள்ள மொத்த தொகையான 18.60 கோடி ரூபாயில், மார்ச் 2015 வரை 18.88 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.
- மாவட்ட அலுவலகங்களை மாநில துறைத் தலைமையிடத்துடன் இணையதள/ உள்தள வலைய வசதி மூலமாக இணைத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6. பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்களை உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்

நிலப் பயன்பாடு குறித்து மதிப்பிடவும், வேளாண் விளை நிலங்களை விவசாயமற்ற காரணங்களுக்காகப் பயன்படுத்துவதைத் தடுப்பது தொடர்பாக முக்கிய விவரம் சேகரிப்பதற்கும் நிலப் பயன்பாடு புள்ளிவிவரம் பயன்படுகிறது. நிலப் பயன்பாடு குறித்த உத்தேச மதிப்பீட்டறிக்கை ஆண்டுதோறும் பயிர் பரப்பு உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டத்தின்மூலம் தயாரிக்கப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோகப் புள்ளிவிவரங்கள் கணக்கெடுத்தல், மூன்று பருவத்திலும் (காரிப், ராபி, கோடை), பயிர் வாரியாக பாசன, மானாவாரி பரப்பில் நவீனப் பயிர்கள் உள்ளூர் ரகப் பரப்பு ஆகியன மதிப்பீடு செய்யப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் வருவாய், புள்ளியியல்,

வேளாண்மை ஆகிய மூன்று துறை அலுவலர்களும் இணைந்து கூட்டு பயிர் பரப்பாய்வு பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது.

2014-15 ஆம் ஆண்டில் 3,482 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு காரிப் பருவத்திற்கான மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு கூடுதல் புள்ளி இயல் ஆலோசகர், புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

7. பயிர் மேம்பாட்டுத் திட்டம்

மாநிலத்தில் பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் கிராம நிருவாக அலுவலர்களால் பயிர் பரப்பு கணிக்கப்பட்ட பின்னர் பயிர் பரப்பாய்வு செய்தலும், அடங்கலில் கிராமத்திற்கான பயிர் பரப்பின் கூட்டுத்தொகை சரியான முறையில் கணிக்கப்படுகிறதா என ஆராயவும், முக்கிய உணவுப் பயிர்களுக்கும், இதரப் பயிர்களுக்குமான விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்க அறுவடை நிலையில் பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்பார்வை செய்தலும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இப்பணிகளானது மத்திய, மாநில அரசு அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் கிராம நிருவாக அலுவலர்களால் சேகரிக்கப்படும் வேளாண் புள்ளி விவரங்களை முறையாக ஆய்வு செய்து, அவற்றை செம்மைபடுத்த தக்க வழி வகைகளை ஏற்படுத்தி புள்ளிவிவரங்களின் தரத்தினை உயர்த்துவதாகவும் அமைந்துள்ளது.

இத்திட்டம் பின்வரும் நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது.

- **பயிர் பரப்பில் மாதிரி ஆய்வு (படிவம் ஏ.எஸ்.1.0)**

2013-14 ஆம் ஆண்டு பயிர் பரப்பாய்வுப் பணிக்கான ஏ.எஸ்.1.0 படிவங்கள் (மத்திய மற்றும் மாநில மாதிரிகளுக்கு 260 கிராமங்கள் வீதம்) அனைத்து மூன்று பருவங்களுக்கும் கிடைக்கப்பெற்றுள்ளன. ஏ.எஸ்.1.0 படிவங்களின் இறுதி அட்டவணைகள் 2012-13 ஆம் ஆண்டுக்கு அனைத்து மூன்று பருவங்களுக்கும், 2013-14 ஆம் ஆண்டுக்கு முதல் பருவத்திற்கு தயாரிக்கப்பட்டு தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- **அடங்கல் பதிவேட்டின் பக்கவாரியான பயிர்பரப்பு விவரங்களின் கூட்டுத்தொகை சரிபார்த்தல் (படிவம் ஏ.எஸ்.1.1)**

2013-14 ஆம் ஆண்டுக்கு பயிர் பரப்பாய்வு பணிக்காக தேர்வு செய்யப்பட்ட கிராமங்களின் அடங்கலின் பக்கவாரியான பயிர்

2015 செப்டம்பர் 29]

பரப்பு விவரங்களின் கூட்டுத்தொகை சரிபார்த்தல் சம்பந்தமான ஏ.எஸ்.1.1 படிவங்கள் (மத்திய மற்றும் மாநில மாதிரிகளுக்கு 260 கிராமங்கள் வீதம்) அனைத்தும் களப்பணி அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. ஏ.எஸ்.1.1 படிவங்களின் இறுதி அட்டவணைகள் 2012-13 ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்பட்டு, தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- **பயிர் அறுவடை பரிசோதனை மேற்பார்வைப் பணி (படிவம் ஏ.எஸ்.2.0)**

2013-14 ஆம் ஆண்டுக்கு பயிர் அறுவடை பரிசோதனை ஆய்வுக்கான ஏ.எஸ்.2.0 படிவங்கள் (780 பரிசோதனைகள் வீதம் மத்திய மற்றும் மாநில மாதிரிகள்) அனைத்தும் களப்பணி அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. 2012-13 ஆம் ஆண்டுக்கு ஏ.எஸ்.2.0 படிவங்களின் இறுதி அட்டவணைகள் நெல் (கார், சம்பா, நவரை) மற்றும் இதர பயிர்களுக்கு (சோளம், கம்பு, கேழ்வரகு, பருத்தி, கரும்பு, வேர்க்கடலை, எள் மற்றும் மக்காச்சோளம்) தயாரிக்கப்பட்டு தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

3.2.3. துறையால் செயல்படுத்தப்படும் இதர புள்ளியியல் திட்டங்களின் சுருக்கம்

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால் செயல்படுத்தப்படும் இதர திட்டம் சார், திட்டம் சாரா திட்டப்பணிகளின் சுருக்கம் பின்வருமாறு:

வேளாண் புள்ளியியல்

1.	பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி முன்மதிப்பீடு	ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர், டிசம்பர், மார்ச், ஜூன் மாதங்களில் பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன்மதிப்பீடு செய்யப்படுகின்றது.
2.	ஜமாபந்தி மூலம் இறுதி செய்யப்படும் கிராமவாரியான பரப்பு	ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும் கிராம வாரியான பயிர் பரப்பு விவரங்கள் ஜமாபந்தியில் இறுதி செய்யப்பட்டு, மாவட்ட வாரியாகவும், மாநில அளவிலும் தொகுக்கப்படுகின்றன.

3.	பொது பயிர் மதிப்பீட்டாய்வு	9,276 பயிர் அறுவடை பரிசோதனைகள் 2014-15 ஆம் ஆண்டு (பசலி ஆண்டு 1424) நடத்தப்பட்டு முக்கியமான 16 பயிர்களுக்கு விளைச்சல், உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் ஆகியவை மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன.
4.	தென்னை மற்றும் கமுகு குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு	தென்னை பயிருக்கு சுமார் 380 கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சராசரி விளைச்சல் மற்றும் உற்பத்தி மதிப்பீடும், கமுகு பயிருக்கு சுமார் 75 கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சராசரி விளைச்சல் மற்றும் உற்பத்தி மதிப்பீடும் செய்யப்படுகின்றன.
5.	மேம்படுத்தப் பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (தேசிய பயிர் காப்பீட்டு திட்டம்) 2014-15-ல் உள்வட்ட அளவில் காரிப் பருவத்தில் மட்டும்	மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (தேசிய பயிர் காப்பீட்டு திட்டம்) 1424 ஆம் பசலி ஆண்டில் (2014-15) காரிப் பருவத்தில் 16 பயிர்களுக்கு 42,500 பயிர் அறுவடை பரிசோதனைகள் உள்வட்ட அளவில் மேற்கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.
6.	தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்	1424 ஆம் பசலி ஆண்டில் (2014-15), இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும்பொருட்டு, 20 பயிர்களின் கீழ் அறிவிக்கை செய்யப்படும் வட்டாரம் / குறுவட்டம் வாரியாக ராபி பருவத்தில் சுமார் 41,300 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன.

7.	மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (2014—15ல் கிராம அளவில் காரிப் பருவத்தில் மட்டும்)	இத்திட்டம், தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. வட்டார / உள்வட்ட அளவில் பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்துவதற்கு பதிலாக அனைத்து வருவாய் கிராமங்களிலும் பயிர் அறுவடை பரிசோதனைகள் முன்னோடித் திட்டமாக நாமக்கல், கடலூர் மற்றும் சிவகங்கை ஆகிய மூன்று மாவட்டங்களில் 1424 ஆம் பசலி ஆண்டில் (2014-15) காரிப் பருவத்தில் பத்து பயிர்களுக்கு 7,588 பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது.
8.	மழைப் புள்ளியியல்	சுமார் 628 நிலையங்களிலிருந்து சாதாரண மழைமானி மூலம் மழை விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மாதம், பருவம், ஆண்டு வாரியாக தொகுக்கப்படுகின்றன.
9.	நீர்ப்பாசன புள்ளியியல்	பாசன ஆதாரங்கள் வாரியாக முக்கிய பயிர்களின் பரப்பு, நீர்ப்பாசன வகை ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்படுகின்றன.
10.	விவசாயக் கூலி குறியீட்டெண்	மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஒரு வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம் 385 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் விவசாய தொழில்களுக்கு வழங்கப்படும் கூலி விவரங்கள் சேகரிக்கப்பட்டு விவசாயக் கூலி குறியீட்டெண் மதிப்பீடு கணிக்கப்படுகின்றது.
11.	விற்பனை மிகுதி திட்டம்	நெல் உற்பத்தியில் வழங்கப்பட்ட கூலி, விதைப் பயன்பாடு, சொந்த உபயோகம் போன்றவை போக விற்பனைக்காக ஒதுக்கப்படும் நெல் அளவு குறித்து மதிப்பீடு செய்யப்படுகிறது.

12.	பேரிடர் மேலாண்மை	எதிர்கால கொள்கை முடிவுகளுக்கு பயன்படும் வகையில் மாவட்ட வாரியாக ஏற்படும் இயற்கை பேரிடர் அழிவு மற்றும் மீட்பு தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மாநில அளவில் தொகுக்கப்படுகின்றன.
13.	சுற்றுச் சூழல் புள்ளிஇயல்	சுற்றுச் சூழல் தொடர்பான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை "சுற்றுச் சூழல் தொகுப்பாக" வெளியிடப்படுகிறது.

சமூகப் புள்ளியியல்

14.	தேசிய மாதிரி ஆய்வு	தேசிய மாதிரி ஆய்வு ஒவ்வொரு ஆண்டும் மக்களின் சமூக பொருளாதார நிலைமை குறித்து அறிவியல் ரீதியான மாதிரி முறையைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. நுகர்வோர் செலவின விவர ஆய்வின் முடிவுகள் மக்களின் வாழ்க்கை தரத்தினை அறிய உதவும் ஒரு கருவியாகவுள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை ஆய்வின் முடிவுகள் தேசிய, மாநில அளவில் மக்களின் பல்வேறு வகையான வேலைவாய்ப்பு தன்மைகளை அறிய உதவுகின்றன. இவ்விவரங்கள் மாநில திட்டக் குழுவின் திட்டமிடலுக்குப் பயன்படுகின்றன. தற்போது தேசிய மாதிரி ஆய்வு 72—வது சுற்றின் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. இக் கணக்கெடுப்பு ஜுலை'14-ல் தொடங்கி ஜுன்'15-ல் முடிவடைந்தது. இவ்வாய்வில் "உள்நாட்டு சுற்றுலா செலவினங்கள்" பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.
15.	வீட்டுவசதிப் புள்ளிஇயல்	பொது மற்றும் தனியார் துறைகளில் கட்டுமான விவரங்கள் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

16.	கட்டுமான செலவு குறித்த குறியீட்டெண்	சில முக்கிய கட்டுமானப் பொருட்களின் விலை விவரங்கள் மற்றும் கட்டுமான தொழிலாளர்களின் கூலி விவரங்கள் ஆகியன மாநிலத்தின் 16 மாவட்ட மையங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு காலாண்டு அடிப்படையில் குறியீட்டெண் கணிக்கப்படுகின்றது.

தொழில் புள்ளி விவரங்கள்

17.	ஆண்டுத் தொழில் ஆய்வு	மாநில வருவாய் மதிப்பீட்டிற்கென தொழிற்சாலை சட்டம் 1948 பிரிவு 2m(i) மற்றும் 2m(ii)-ன்கீழ் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் முதலீடு, கடன், உற்பத்தி மற்றும் கூடுதல் பெறுமானம், தொழிலாளர்கள், சம்பளம், இடுபொருள் ஆகியவை குறித்து ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய குறியீடுகள் ஆய்வு செய்வதன் மூலம், மாநிலத்தில் தொழில் உற்பத்தி துறையின் பங்களிப்பையும் மற்றும் உள்நாட்டு உற்பத்தியையும் மதிப்பிடுவதற்கும் உதவுகிறது. தற்போது, 2013-14-ஆம் ஆண்டிற்கான ஆண்டு தொழில் ஆய்வு, தமிழ் நாடு மாநிலத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.
18.	தொழில் உற்பத்திக் குறியீட்டெண்	கனிமம், உற்பத்தி மற்றும் மின்சாரம் ஆகிய மூன்று பெரும் தொழில் பிரிவுகளிலிருந்து ஒவ்வொரு மாதமும் உற்பத்தி விவரம் பெறப்பட்டு அதனடிப்படையில் தொழில் உற்பத்திக் குறியீட்டெண் கணிக்கப்படுகிறது. 2014-15-ஆம் ஆண்டிற்கு, கனிமம் தொகுப்பில் 14 வகையான விவரங்களும், உற்பத்தி தொகுப்பில் 1,373 தொழிற்சாலை களிலிருந்து 368 வகையான விவரங்களும் மற்றும் மின்சாரத் தொகுப்பில் ஒரு வகைக்கும், மாதாந்திர உற்பத்தி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

19.	கைத்தறிப் புள்ளி விவரம்	கைத்தறி துணியின் உற்பத்தி, விற்பனை மற்றும் இருப்பு ஆகிய விவரங்கள் காலாண்டுதோறும் சேகரிக்கப்பட்டு நெசவாளர்களின் சமூக பொருளாதார நிலை குறித்த ஆய்வு ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்படுகின்றது. சென்னை, கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் அமைந்துள்ள 195 குவி மையங்களிலிருந்து கைத்தறி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநில வருவாய் புள்ளி விவரங்கள்

20.	மாநில வருவாய் மற்றும் மாவட்ட வருவாய் மதிப்பீடு	பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட்பிரிவுகளின் கீழ் மொத்த / நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி (மாநில வருவாய்) மற்றும் தனிநபர் வருவாய் ஆகியவை மாநில அளவிலும், மாவட்ட வருவாய் மதிப்பீடுகளும் ஒவ்வொரு வருடமும் கணிக்கப்படுகின்றன. மாநில வருவாய் மதிப்பீடுகள் 2004-05 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ் நாட்டிற்கு 2011-12 ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடும், 2012-13 ஆம் ஆண்டிற்கு துரித மதிப்பீடும், 2013-14 ஆம் ஆண்டிற்கு முன் மதிப்பீடும், 2014-15 ஆம் ஆண்டிற்கு முன் மதிப்பீடு தற்காலிகமும் நடப்பு மற்றும் நிலையான விலையில் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மாவட்ட வருவாய் மதிப்பீடுகள் (அடிப்படை ஆண்டு: 2004-05) 2004-05ஆம் ஆண்டு முதல் 2011-12 ஆம் ஆண்டு வரையில் நடப்பு மற்றும் நிலையான விலையில் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

21.	மாநிலக் கணக்குகள்	அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவரங்களும், 12 மாநகராட்சிகள், 125 நகராட்சிகள், 529 பேரூராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளின் வரவு-செலவு கணக்கு விவரங்களும் சேகரிக்கப்பட்டு அவ்விவரங்கள் மாநில வருவாய் மதிப்பீடு கணிக்க பயன்படுத்தப்படுகிறது.
22.	மூலதன ஆக்கம்	மாநில பொதுத் துறைக்கான மொத்த நிலையான மூலதன ஆக்கம் கணிக்கப்பட்டு அதன் அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்படுகின்றது.

விலைவாசிப் புள்ளி விவரங்கள்

23.	அங்காடிப் புலனாய்வுத் திட்டம் மற்றும் விலைகள்	மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள்மூலம் முக்கிய வேளாண்மைப் பொருட்களின் விலைகள், வரத்து, இருப்பு, அனுப்புகை போன்ற விவரங்கள் சேகரிக்கப்படுவதன்மூலம் அங்காடியின் அன்றாட நிலவரம் அறிய முடிகின்றது.
24.	மொத்த விலைக் குறியீட்டெண்	வேளாண்மை மற்றும் தொழில் சார்ந்த பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் சேகரித்து ஒவ்வொரு மாதமும் தமிழ் நாட்டிற்கான மொத்த விலைக் குறியீட்டெண் கணிக்கப்படுகின்றது.
25.	நுகர்வோர் விலைக் குறியீட்டெண்	நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்க ஆறு மையங்களுக்கான விலைவாசிப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு சிம்லா தொழிலாளர் அமைப்பகத்திற்கு அளிக்கப்படுகின்றது. இத்துறை மூலமாக மாதந்தோறும் கடலூர் மற்றும் நாகர்கோவில் மையங்களுக்கு நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்கப்படுகின்றது.

வெளியீடுகள்

26.	வெளியீடுகள்	இத்துறையிலிருந்து முக்கியமாக தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு, ஆண்டு புள்ளிஇயல் தொகுப்பு, பருவமும் மற்றும் பயிரும் பற்றிய அறிக்கை, மாவட்ட புள்ளிஇயல் கையேடு, வட்டாரப் புள்ளிஇயல் கையேடு முதலிய வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன.

3.2.4 மனித வள மேம்பாடு

துறை நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்துவதற்கு முதுகெலும்பாக இத்துறையின் பணியாளர்கள் திகழ்கின்றனர். இத்துறையில் பணியாளர்களின் நலனில் போதிய கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

காலிப் பணியிடங்கள் காரணமாக பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பணிச் சுமையை குறைக்கும் வகையில் அனைத்து நிலைகளிலும் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 231 புள்ளிஇயல் உதவி ஆய்வாளர்கள், நான்கு தட்டச்சர்கள், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்கள் நிரப்பப்பட்டன. மேலும், கருணை அடிப்படையில் ஐந்து இளநிலை உதவியாளர்களும், வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக ஓர் ஓட்டுநர், 13 அலுவலக உதவியாளர்கள் ஆகியோரும் பணியமர்த்தப்பட்டனர். தமிழ் நாடு முன்னாள் இராணுவத்தினர் கழகம் (TEXCO) மூலம் தொகுப்பூதியத்தில் ஓர் ஓட்டுநர் பணியிடமும் நிரப்பப்பட்டது. மேலும், 268 புள்ளிஇயல் உதவி ஆய்வாளர் பணியிடம் நிரப்புவதற்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவிக்கை வெளியிட்டுள்ளதுடன் தேர்வு செய்யும் பணி தொடரப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சமீபத்தில் 23 உதவி புள்ளி இயல் இயக்குனர் பணியிடங்களின் நேரடி நியமனத்திற்கான எழுத்துத் தேர்வு முடிவை வெளியிட்டுள்ளது.

3.2.5. பகுதி–II திட்டங்கள் 2014–15

இத்திட்டத்தில் நான்கு கணிப்பொறிகள் வாங்குவதற்கும், கருத்தரங்குகள், ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் பயிலரங்குகள் ஆகியவற்றை இத்துறையிலும், தமிழ்நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனத்திலும் நடத்துவதற்காக 17.00 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.2.6. தமிழ்நாடு மாநில புள்ளியியல் பயிற்சி நிறுவனம்

பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்காக அவர்களுக்குப் பயிற்சி அளிக்க

வேண்டி 'தமிழ்நாடு மாநில பயிற்சி நிறுவனம்' நிறுவப்பட்டு, தற்பொழுது அரசால் ஒப்புளிக்கப்பட்ட பதவிகளில் இயக்குநருடனும், மற்ற பணியாளர்களைக் கொண்டும் 1-5-2012 முதல் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை தலைமையிட வளாகத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

தமிழ்நாடு மாநில புள்ளியியல் பயிற்சி நிறுவனம், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை பணியாளர்களுக்கு உரிய கால இடைவெளியில் பின்வரும் பயிற்சிகளைப் பல்வேறு துறை வல்லுநர்களின் உதவியுடன் செயல்படுத்தி வருகின்றது.

- ✓ பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் தொடர்பான அடிப்படைக் கொள்கைகள், அலுவலக புள்ளிஇயல் அமைப்பு, அது தொடர்பான முறைகள், காரணங்கள் பகுத்தாய்தல் தொடர்பு திறமைகள், அறிக்கை தயாரிக்கும் திறமைகள் போன்றவற்றில் அறிமுகப் பயிற்சிகள்.
- ✓ தேவை அடிப்படையிலான குறுகிய கால பயிற்சிகள் முறையே தேசிய மாதிரி ஆய்வு, மாநில வருவாய் கணக்கிட்டு முறைகள், புள்ளி இயல் தொகுப்புகளின் பயன்பாடுகள், மென்பொருள் உருவாக்குதல், தகவல் விவரங்களை பாதுகாத்தல் மற்றும் கணினி மேலாண்மை.

இந்நிறுவனத்திற்கு, 2014-15 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திருத்திய மதிப்பீடு 61.12 இலட்சம் ரூபாய் ஆகும். இம்மதிப்பீட்டுத் தொகையில், 11 விதமான பயிற்சிகள் 19 தொகுதிகளாக நடத்தப்பட்டு, 445 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

நாட்டில் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதியளித்து நிறைவேற்றி வருகின்றன. அந்தத் திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை நுட்பத்துடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதன்படி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மதிப்பீட்டாய்வுகளை மேற்கொண்டு கொள்கைகள் வகுப்பது மற்றும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு அரசுக்கு உதவி வருகிறது.

3.3.1 இத்துறையின் முக்கியப் பணிகளாவன:

(i) மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

(ii) குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்; மற்றும்

(iii) வருடாந்திர வெளியீடான 'தமிழ்நாடு - பொருளாதார ஆய்வறிக்கை' ஆவணத்தை தயாரித்து வெளியிடுதல்.

3.3.2 தமிழ்நாட்டில் மாநில, மத்திய அரசுகள் மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்கள் இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பாசனபரப்பு மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மை திட்டம் ஆகிய திட்டங்களும் அவற்றின் வேறுபட்ட உட்கூறுகளும் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன. இவை தவிர, குறுகிய கால உடனடி மதிப்பீடுகளும் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

3.3.3 கீழ்க்கண்ட நோக்கங்களைக் கண்டறிவதற்காக மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன:

i. திட்ட வடிவமைப்பு

ii. திட்ட செயல்முறை மற்றும் செயல் விளைவுகளை மதிப்பிடல்

iii. செயல் இலக்கு மற்றும் நிதி இலக்கில் காணப்படும் முன்னேற்றம்

iv. திட்ட நோக்க நிறைவேற்றம்

v. திட்டப் பயன்கள் குறிப்பிட்ட பயனாளிகளைச் சென்றடைகின்றனவா என்று ஆய்வதுடன் செலவழிக்கப்படும் தொகைக்கு உரிய மதிப்பிலான பயன்கள் ஏற்பட்டனவா என்று ஆய்தல்

3.3.4 ஆய்வின்மூலம் கண்டறியப்பட்ட முடிவுகளும், ஆலோசனைகளும் திட்டத்தைச் செயல்படுத்துபவர்கள் திட்டத்தை முறைப்படுத்தி நன்கு செயல்படுத்த உதவுகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 29]

இத்துறையால், இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, மார்ச்-2015 ஆம் ஆண்டு வரை, பல்வேறு துறைகளைச் சார்ந்த 730 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மதிப்பீட்டாய்வுகள் சமூகநலம், சுகாதாரம், நீர்ப்பாசனம், வேளாண்மை, வனம், கல்வி, வீட்டுவசதி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், தோட்டக்கலை, போக்குவரத்து, ஊரக வளர்ச்சி, உள்பட பல்வேறு துறைகளின் திட்டங்களை சார்ந்ததாகும்.

3.3.5 2014–15 ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டம்:

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் மற்றும் தரமான தன்னிச்சையாக வெளியார் நிறுவனம் மற்றும் பட்டதாரி / முதுகலை பட்டதாரிகளை நியமித்து மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ரூ.57.00 இலட்சம் பகுதி-II திட்டத்தின்கீழ் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன;

1. இத்துறைக்கு மடிக்கணினி, கலர் ஜெராக்ஸ், பிரிண்டர் மற்றும் துணைப்பொருட்கள் வாங்குதல்;
2. ஸ்பைரல் பைண்டிங் இயந்திரம் வாங்குதல்;
3. இத்துறையின் தொழில் நுட்பப் பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு மாநில / தேசிய நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளித்தல்;
4. மதிப்பீட்டாய்வுகளை தரமான / தன்னிச்சையான நிறுவனங்கள் மற்றும் பட்டதாரிகள் / முதுகலை பட்டதாரிகள் வேலை வாய்ப்பு மூலம் மேற்கொள்ளல்.

3.3.6 2015–16 ஆம் ஆண்டிற்கான ஆய்வுகள்:

2015-16 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த 20 ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், பாசனப்பரப்பு வளர்ச்சித் திட்டம், பல்வேறு துறை சார்ந்த முக்கிய திட்டங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவை தவிர, 2014-15 ஆம் ஆண்டு தமிழ்நாடு-பொருளாதார ஆய்வறிக்கை தயாரித்து வெளியிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2015 செப்டம்பர் 29

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8-8-2014 அன்று தமிழக சட்டசபையில் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் ஆக்கத்திறமையை ஜே-பால், கிழக்கு ஆசியாவின் உதவியுடன் வளர்க்க விதி எண் 110-ன்கீழ் அறிவித்தார். 2015-16 ஆம் ஆண்டு இந்த இலக்கினை அடையும் பொருட்டு மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மேற்கொள்ளும் மதிப்பீட்டு அறிக்கையின் தொழில் நுட்பத் திறமையை வலுப்படுத்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகளில் ஒன்றாக, தமிழ்நாட்டில் 0-6 வயதுக் குழந்தைகளின் ஊட்டச் சத்தினை அறியவும் மேலும் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்களின் செயல்பாட்டினை அறியவும் ஒரு மதிப்பீட்டு ஆய்வினை செயல்படுத்த ஜே-பால், கிழக்கு ஆசியா, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு உதவியது. இந்த ஆய்வானது நான்கு ஆய்வுகளை உள்ளடக்கியது. மேலும் இவை தமிழ்நாட்டின் 32 மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும்.

3.4 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

சென்னைப் பெருநகரம் அதிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இதனால் சாலைகளில் போக்குவரத்தின் அளவும் அதிகரித்து வருவதால், போக்குவரத்து கட்டமைப்பு அதிக அளவில் தேவைப்படுகின்றது. இந்த தேவையைப் பூர்த்தி செய்வதன் முதற்கட்டமாக, ஒரு புதிய துரித இரயில் போக்குவரத்துத் தேவையின் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசு, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்றிட முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் குறிக்கோள் சென்னைப் பெருநகர மக்களுக்கு வேகமான, நம்பத்தக்க, வசதியான, திறன்மிக்க மற்றும் சிக்கனமான பொதுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது ஆகும். மேலும் இத்திட்டம் இதரப் பொது மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளாகிய, பேருந்து, புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டங்களுடனும், மேலும் எதிர்காலத்தில் மோனோ இரயில் உள்ளிட்ட கூடுதல் இரயில் அமைப்புகளுடனும் சீரிய முறையில் ஒருங்கிணைக்கப்படும்.

டில்லி மெட்ரோ இரயில் நிறுவனம் (சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் முதன்மை ஆலோசகர்) தயார்செய்து வழங்கிய விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் இரண்டு

2015 செப்டம்பர் 29]

வழித்தடங்கள் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை 23.1 கி.மீ நீளத்திலும் மற்றும் சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரை 22.0 கி.மீ நீளத்திலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த வழித்தடங்களில் கீழ்காணும் நிறுத்த நிலையங்கள் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது:

வழித்தடம்-1: வண்ணாரப்பேட்டை—மண்ணடி—உயர்நீதி மன்றம் -சென்னை சென்ட்ரல்-அரசினர் தோட்டம்—எல்.ஐ.சி.—ஆயிரம் விளக்கு-ஏ.ஜி-டி.எம்.எஸ்—தேனாம்பேட்டை—நந்தனம்—சைதாப்பேட்டை—சின்னமலை-கிண்டி—ஆலந்தூர்—நங்கநல்லூர் சாலை—மீனம்பாக்கம்-சென்னை விமானநிலையம்; மற்றும்

வழித்தடம்-2: சென்னை சென்ட்ரல்—எழும்பூர்—நேரு பூங்கா—கீழ்ப்பாக்கம்—பச்சையப்பன் கல்லூரி—செனாய்நகர்—அண்ணாநகர் கிழக்கு—அண்ணாநகர் கோபுரம்—திருமங்கலம்—கோயம்பேடு—புறநகர் பேருந்து நிலையம்—அரும்பாக்கம்—வடபழனி—அசோக் நகர்—ஈக்காட்டுதாங்கல்—ஆலந்தூர்—பரங்கிமலை.

மேற்கண்டுள்ள இரண்டு வழித்தடங்களும் சென்னை சென்ட்ரல் மற்றும் ஆலந்தூரில் ஒன்றாக இணையும். வழித்தடம்-1 இல் வண்ணாரப்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலுள்ள பகுதி மற்றும் வழித்தடம்-2 இல் சென்னை சென்ட்ரல் முதல் திருமங்கலம் வரையிலுள்ள பகுதி நிலத்திற்கடியிலும் எஞ்சியுள்ள பகுதிகள் உயர்த்தப்பட்ட நிலையிலும் செயல்படுத்தப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு வழித்தடங்களுக்கும் தமிழ்நாடு அரசு தனது கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியதைத் தொடர்ந்து, மத்திய அரசின் நிதியுதவி மற்றும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெறுவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது. இத்திட்டத்தினை மத்திய அரசும் மாநில அரசும் கூட்டாக இணைந்து 14,600 கோடி ரூபாய் செலவில் கட்டிமுடிப்பதற்கு மத்திய அரசு தனது நிருவாக

ஒப்புதலை பிப்ரவரி 2009 இல் வழங்கியுள்ளது. ஏற்கெனவே அமைக்கப்பட்ட சிறப்புவகை நிறுவனத்தை (Special Purpose Vehicle) ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றியமைக்கவும் உத்தேசிக்கப்பட்டது. மத்திய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதத்தைப் பங்கு மூலதனமாகவும், 5 சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டுள்ளது. அதே போன்று தமிழ்நாடு அரசும் திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதத்தைப் பங்கு மூலதனமாகவும், 5.78 சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டுள்ளது. மீதமுள்ள 59.22 சதவிகிதத்தை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடமிருந்து (Japan International Cooperation Agency) மத்திய அரசு இதுபோன்ற வெளிநாட்டு கடனுதவி பெறுவதற்கு வெளியிட்டுள்ள வரைமுறைகளுக்கிணங்க கடனாகப் பெறப்படும்.

தமிழ்நாடு அரசு 'சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட்' என்ற நிறுவனம் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஏற்கெனவே நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பின்னர் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குகளை வெளிக்காட்டும் வகையில் ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் செயலாளரையும் சேர்த்து 5 இயக்குநர்களை மத்திய அரசும், மேலாண்மை இயக்குநரையும் சேர்த்து 5 இயக்குநர்களை மாநில அரசும் நியமித்துள்ளன.

தமிழ்நாடு அரசு 2,261.82 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும் 1,442.22 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு 31-3-2015 வரை 1,950.53 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும், 287.45 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் மற்றும் 5,304.59 கோடி ரூபாயை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக் கடனை நிறுவனத்திற்கு அனுப்பும் உதவியாகவும் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மாநில அரசு மற்றும் அதன் சார்பு நிறுவனங்களின் நிலங்கள் அரசாணைகள் மூலம் பெறப்படுகின்றன. மத்திய அரசு மற்றும் அதன் சார்பு நிறுவனங்களின் நிலங்களைச் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நேரடியாகப் பெற்றுள்ளது. தனியார் நிலங்களைப் பொறுத்தவரையில், நிலக் கையெடுப்புச் சட்டம் 1894 இன்கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

2015 செப்டம்பர் 29]

பெரிய அளவிலான கட்டுமானம் மற்றும் அமைப்பு சார்ந்த ஒப்பந்தங்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டு பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் 85 சதவிகிதமும், கோயம்பேட்டில் உள்ள பணிமனை கட்டுமானங்கள் 95 சதவிகிதமும், நிலத்தடி நிலையங்கள் மற்றும் தொடர்புடைய சுரங்கப்பாதைகளின் கட்டுமானப் பணிகள் 60 சதவிகிதமும் முடிவுற்றுள்ளன. 2014—15 ஆம் ஆண்டு இறுதிவரை ஒட்டுமொத்த செயலாக்க சாதனை 76 சதவிகிதமாகும். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயிலை பன்முக போக்குவரத்துகளான பேருந்து, புறநகர் இரயில், பெருந்திரள் இரயில் மற்றும் மோனோ இரயிலுடன் ஒருங்கிணைப்பதை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனால் பயணிகள் ஒரு போக்குவரத்திலிருந்து மற்றொன்றிற்கு சிரமமேதுமின்றி மாறிச் செல்ல வசதியாக இருக்கும்.

வரலாற்று நிகழ்ச்சியாக, கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான (10.15 கி.மீ) உயர்த்தப்பட்ட வழித்தடப் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29—6—2015 அன்று பயணிகள் சேவையைத் துவக்கி வைத்தார்கள்.

3.4.1 கட்டம்—I இன் நீட்டிப்பு மற்றும் கட்டம்—II வழித்தடங்கள்

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் வழித்தடம்—I-ஐ தற்போதுள்ள வடக்கு முனையமான வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையில், ரூ.3,770 கோடி செலவில் நீட்டிப்பதற்கான கருத்துருவிற்கு மத்திய அரசின் ஒப்புதலை பெறுவதற்கு இந்த அரசு முயற்சித்து வருகின்றது.

இரண்டாம் கட்ட வழித்தடங்களைச் செயல்படுத்துவதற்கான வரைவு சாத்தியக்கூறு ஆய்வு / விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை அரசு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக ரூ.8 கோடிக்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–VI

(124 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறையென்று வைக்கப்படும். *(குறள் 388)*

தெய்வப் புலவர் திருவள்ளுவரின் மேற்சொன்ன வாக்கிற்கேற்ப ஓய்வூதியதாரர்கள் உள்ளிட்ட மக்களின் நலன்களை பேணிக்காக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறமையான தலைமையின்கீழ் இந்த அரசு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அரசு ஓய்வூதியம் பெறுவோர் நலன்கருதி எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளில் முக்கியமான ஒன்று அரசு அலுவலர்களுக்கு உள்ளது போலவே ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014-ஐ நடைமுறைபடுத்தியதாகும். இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டம் 1995-ன்கீழ் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்ட அதிகபட்ச மருத்துவ நிதியுதவியான ரூ.1.00 இலட்சத்திற்கு மாற்றாக 1-7-2014 முதல் நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு ரூ. 2.00 இலட்சம் வரை மருத்துவ நிதியுதவியினை பெற முடியும்.

2. தமிழ் நாட்டில் 25-9-2015 நாள் நிலவரப்படி சுமார் 7,14,041 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் உள்ளனர். ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கும், ஓய்வூதிய பலன்களை விரைவாக பெறுவதற்கும் 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககம் செயல்பட்டு வருகிறது.

3. இம்மாநிலத்தில் 25-9-2015 நாள் நிலவரப்படி உள்ள ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

வ. எண்.	விவரம்	கருவூலம் மூலம்	பொதுத் துறை வங்கிகள் மூலம்	மொத்தம்
1.	மாநில அரசு ஓய்வூதியதாரர்கள்	3,49,173	54,427	4,03,600
2.	ஆசிரியர் ஓய்வூதியதாரர்கள்	67,952	14,495	82,447
3.	மாநில அரசு குடும்ப ஓய்வூதியதாரர்கள்	1,71,317	10,864	1,82,181
4.	ஆசிரியர் குடும்ப ஓய்வூதியதாரர்கள்	26,920	1,640	28,560
5.	ஏனைய ஓய்வூதியதாரர்கள்	15,712	1,541	17,253
	மொத்தம்	6,31,074	82,967	7,14,041

4. இந்த மானியக் கோரிக்கையின் கீழ் அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு நிதி உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பான முக்கியமான செலவினங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில், ஓய்வூதிய இயக்குநரகத்தின் செயல்பாடுகள், விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும்.

5. இந்த மானியக் கோரிக்கையின்கீழ், 2015-2016 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களுக்கான செலவினத்தை மேற்கொள்ளும் பொருட்டு 19,933.40 கோடி ரூபாயும், பல்வகைப் பொதுவான பணிகளுக்காக 120.00 கோடி ரூபாயும், சமூக பாதுகாப்பு மற்றும் நலன்களுக்காக 20.70 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 20,074.10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 29]

6. ஓய்வூதியம் (Pension)

(i) ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 10 ஆண்டுகளாகும். முழு ஓய்வூதியம் பெற பணிக்காலம் 33 ஆண்டுகளாக இருந்ததை 1-7-1996 முதல் 30 ஆண்டுகளாக குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அரசுப் பணியாளர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி 10 மாத பணிக்கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.

(ii) 1-1-2006 முதல், ஓர் ஓய்வூதியதாரர் குறைந்தபட்ச ஓய்வூதியமாக மாதம் ரூ. 3,050/- பெறத் தகுதியுடையவராவார்.

7. பணிக்கொடை (Gratuity)

(i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை (Service Gratuity)

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணி புரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுற்ற ஒவ்வொரு ஆறுமாத காலப்பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் இப்பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுக்காலப் பணிக்கொடைக்கு கூடுதலாக ஒரே நேரத்தில் வழங்கப்படுகிற ஒட்டு மொத்தத் தொகையாகும்.

(ii) இறப்புப் பணிக்கொடை (Death Gratuity)

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், பின்வரும் வீதங்களில் இறப்பு பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:

வ. எண்	பணிக்காலம்	பணிக்கொடையின் வீதம்
1.	ஓராண்டுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் இரு மடங்கு
2.	ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் ஆறு மடங்கு

வ. எண்.	பணிக்காலம்	பணிக்கொடையின் வீதம்
3.	ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு
4.	இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக	அதிகபட்சமாக மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக் கொடை 1-1-2006 முதல் ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும்.

(iii) ஓய்வுகாலப் பணிக்கொடை (Retirement Gratuity).

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது உயரளவாக மாத ஊதியத்தில் 16$^1/_2$ மடங்கு என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கு ஓய்வுக்காலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. 1-1-2006 முதல் ஓய்வுக்காலப் பணிக்கொடையின் உயரளவு உச்சவரம்புத் தொகை ரூ. 10 இலட்சம் ஆகும். 1-4-1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. 1-1-2006 முதல் அடிப்படைச் சம்பளம் என்பது தர ஊதியத்தையும் உள்ளடக்கியதாகும்.

8. குடும்ப ஓய்வூதியம் (Family Pension).

(i) அரசுப் பணியாளர் ஒருவர், பணியாற்றும்போதோ அல்லது ஓய்வு பெற்ற பின்னரோ இறந்து விட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய

பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றியிருக்க வேண்டும். அரசுப் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்கும் நேர்வுகளில், குடும்ப ஓய்வூதியம், அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 விழுக்காடு, அவர் இறந்த பின்னர் 7 ஆண்டுகள் வரை வழங்கப்படுகிறது. அதன் பின்னர் குடும்ப ஓய்வூதியம் அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 30 விழுக்காடாக அளிக்கப்படும். அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும் போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் இறக்கும் போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும்.

(ii) விதவைக்கு / மனைவியை இழந்த கணவனுக்கு, அவர் மறுமணம் செய்து கொள்ளும் வரையில் அல்லது இறக்கும் வரையில் இதில் எது முந்தியதோ அதுவரையில் அவருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு, அவருடைய குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரையிலோ அல்லது அவர்கள் திருமணம் செய்துகொள்ளும் வரையிலோ இதில் எது முந்தையதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. எனினும் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட, பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, மாற்றுத்திறனாளியாக அல்லது இயலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு, வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும். 28-11-2011 முதல் இம்மாநில ஓய்வூதியதாரர்களின் மணமாகாத/ விவாகரத்து பெற்ற / விதவை மகள்களுக்கும், சில நிபந்தனைகளுக்குட்பட்டு வாழ்நாள் குடும்ப ஓய்வூதியமாக ரூ.3,050/- மருத்துவ படியுடன் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(iii) *1-1-2006 முதல் வழங்கப்படும் குறைந்தளவு குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.3,050/- ஆகும்.*

9. கருணைத் தொகை (Ex-Gratia Payment)

பங்களிப்பு வருங்கால வைப்பு நிதி/மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்த இறந்த பணியாளர் குடும்பங்களுக்கும், 1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற / பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியில்லாத நபர்களுக்கும் 1-1-2015 முதல் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை 215 சதவீத அகவிலைப்படியுடன் ரூ. 605/-லிருந்து ரூ. 645/- ஆக உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

10. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல் (Commutation of Pension)

ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியாக 33 1/3 விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டுமொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் அவர்கள் விண்ணப்பித்திருந்தால், மருத்துவ பரிசோதனை இல்லாமல், ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக் கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் பெற்றிட அரசு அனுமதியளித்துள்ளது.

2015 செப்டம்பர் 29]

11. ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள்

(i) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பில், உயரளவாக 240 நாட்களை ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(ii) ஓய்வு பெறும்போது, பணியாளர் கணக்கில் உள்ள சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பில், அதிகபட்சமாக 180 நாட்களை 90 நாட்களாக மாற்றி முழு சம்பளத்திற்கு ஒப்படைப்பு செய்து ரொக்கம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவினையும் சொந்த அலுவல்கள் குறித்த அரை சம்பள விடுப்பினையும் ரொக்கமாகப் பெற அடிப்படைச் சம்பளத்துடன் தர ஊதியமும், அகவிலைப்படியும், வீட்டு வாடகைப்படியும் நகர ஈட்டுப்படியும் சேர்த்துக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வு பெறும் பணியாளர் ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விரும்பும் ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

12. ஓய்வூதியம் பெறுவோருக்கான ஏனைய பயன்கள்

(அ) அகவிலைப்படி

(i) ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

(ii) இராணுவ ஓய்வூதியம் பெறும் மாநில அரசின் ஓய்வூதியதாரர்கள், மைய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப்படியுடன், மாநில அரசின் ஓய்வூதியத்திற்கான அகவிலைப் படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(ஆ) மருத்துவப்படி

(i) 1-6-2009 முதல் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு மாதமொன்றுக்கு ரூ.100/- மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

[2015 செப்டம்பர் 29

(ii) தற்காலிக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(இ) பொங்கல் பரிசு

அனைத்திந்திய பணி உட்பட, மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் உட்பட ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் ஒட்டுமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ரூ.500/- அரசு வழங்குகிறது.

(ஈ) பண்டிகை முன்பணம்

அரசு ஊழியர்களை போல ஓய்வூதியதாரர்களுக்கும் பண்டிகை முன்பணம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை ரூ.1,000/-லிருந்து ரூ.2,000/-ஆக 14-3-2013 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

13. ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத்துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014

(i) 1995 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டத்திற்கு மாற்றாக தமிழ்நாடு ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத்துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2014 நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு (1-7-2014 முதல் 30-6-2018 முடிய), இரண்டு இலட்சம் ரூபாய் வரை பணச் செலவின்றி மருத்துவச் சிகிச்சை பெற்றுக் கொள்ளும் வகையில், 1-7-2014 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதமொன்றுக்கு சந்தாத் தொகையாக ரூ.150/- பிடித்தம் செய்யப்படுகிறது.

(ii) தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்கெனவே நடைமுறையில் இருந்த தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டம் 1995-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளை விட கூடுதலான

மருத்துவ சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளை ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத்துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்கள் பெறுவார்கள். இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டம்-1995-ன்கீழ் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்ட அதிகபட்ச மருத்துவ நிதியுதவியான ரூ.1.00 இலட்சத்திற்கு மாற்றாக தற்போது நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு ரூ.2.00 இலட்சம் வரை பணச்செலவின்றி மருத்துவ சிகிச்சை பெற முடியும். இப்புதிய திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து அதாவது 1-7-2014 முதல் 31-8-2015 வரை 53,790 பயனாளிகள், 153.10 கோடி ரூபாய் மதிப்பிலான மருத்துவ உதவியைப் பெற்றுள்ளனர்.

14. ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்

1-1-1997 முதல் ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு, ஓய்வூதியத்திலிருந்து மாதமொன்றுக்கு சந்தாத் தொகையாக ரூ.80/- பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதிக்கு ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகை செலுத்திய பிறகு, இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு 7-6-2013 முதல் உயர்த்தப்பட்ட ரூ.50,000/- வழங்கப்படுகிறது. 30-6-2015 வரை இத்திட்டத்தின்கீழ் 1,50,797 குடும்பங்கள் பயனடைந்துள்ளன மற்றும் இறந்துபோன ஓய்வூதியதாரரின் குடும்பங்களுக்கு ரூ.424.55 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

15. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம், 1984.

இத்திட்டம் 1-4-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் ரூ.20/- வீதம் 148 மாதங்கள் வரை அரசு பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அத்தொகை பணியிலிருந்து ஓய்வுபெறும்போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக ரூ.10,000/-மும் சேர்த்து கொடுக்கப்படுகிறது.

16. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000

(i) இத்திட்டம் 1-10-2000 முதல் துவக்கப்பட்டது.

(அ) 30-9-2000 வரை அரசுப் பணியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணி அரசு அலுவலர்களும் விருப்பத்தின்பேரில் இத்திட்டத்தில் சேரலாம். இத்திட்டத்தில் ரூ.50/- வீதம் மாதந்தோறும், ஓய்வு பெறும் மாதத்திற்கு முந்தைய மாதம் வரை செலுத்தலாம். அத்தொகை ஓய்வு பெறும்போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

(ஆ) இத்திட்டம் 1-10-2000 அன்றும், அதற்குப் பிறகும் பணியில் சேருபவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாதச் சந்தாத் தொகை ரூ.70/- ஆகும். இத்தொகையுடன் வட்டியும், அரசின் பங்குத் தொகை ரூ.10,000/-மும் பணியில் இருந்து ஓய்வுபெறும்போது வழங்கப்படுகிறது.

(ii) மேற்கண்ட திட்டங்களுக்கு ஓய்வூதிய இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு அலுவலர் ஆவார். வரவு-செலவுத் திட்டத்தில் அரசால் அனுமதிக்கும் தொகையை, ஓய்வு பெறும் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, (அரசு உதவி பெறும் பள்ளிகள் / கல்லூரிகள் / தொழில்நுட்ப கல்லூரிகள் தவிர) அந்தந்தத் துறைகள்மூலம் தொகை வழங்கப்பட்டு தீர்வு செய்யப்படுகிறது.

17. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கான ஓய்வூதியம்.

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வுக்காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

2015 செப்டம்பர் 29]

18. கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்

மாநில அரசின் 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அவர்களின் வயதிற்கு ஏற்ப அடிப்படை ஓய்வூதியம் / அடிப்படை குடும்ப ஓய்வூதியத்தில் கீழ்கண்டவாறு கூடுதல் ஓய்வூதியமாக / கூடுதல் குடும்ப ஓய்வூதியமாக 1-1-2011 முதல் வழங்கப்பட்டு வருகின்றது:

வ. எண்	ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு	கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்
1.	80 முதல் 84 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 20%.
2.	85 முதல் 89 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 30%.
3.	90 முதல் 94 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 40%.
4.	95 முதல் 99 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 50%.
5.	100 மற்றும் அதற்கு மேல்	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 100%.

19. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்கள் குறித்து ஏற்பட்டுள்ள செலவு வருமாறு:—

ஆண்டு	ஓய்வூதியம் மற்றும் ஓய்வு காலப் பயன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்)	மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம்
2001-2002	3,050.48	16.07
2002-2003	3,488.20	16.86
2003-2004	3,279.96	13.84
2004-2005	3,921.05	13.78
2005-2006	4,488.83	13.22
2006-2007	5,461.68	13.35
2007-2008	6,038.96	12.71
2008-2009	7,776.21	14.13
2009-2010	8,439.24	15.11
2010-2011	11,855.27	16.89
2011-2012	12,687.97	14.89
2012-2013	13,248.08	13.41
2013-2014	14,934.37	13.82
2014-2015 (RE)	18,466.87	13.87
2015-2016 (BE)	20,074.10	14.07

2015 செப்டம்பர் 29]

20. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

1-4-2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்துள்ள புதிய பணியாளர்கள் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். 1-4-2003-க்குப் பின்னர் பணியில் புதியதாக பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களிடமிருந்து புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பாக அடிப்படை ஊதியம் (ஊதிய கட்டில் உள்ள ஊதியம் மற்றும் தர ஊதியம்) மற்றும் அகவிலைப்படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், அரசு அதற்கு சமமான அளவு பங்குத் தொகையினை செலுத்துகின்றது. மாநில கணக்காயர், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளை நிருவகித்து வந்த நிலையில், அதனை தற்போது கருவூலக் கணக்கு இயக்குநருக்கு மாற்றப்பட்டு, அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் வாயிலாக கணக்குகள் பராமரிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 31-8-2015 ஆம் நாள் நிலவரப்படி சுமார் 3,89,220 அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்கள் கொண்டு வரப்பட்டு, வட்டி உட்பட மொத்தம் 9,700 கோடி ரூபாய் ஓய்வூதிய பொதுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

ஓய்வூதிய இயக்குநரகம்

21. தமிழ்நாடு அரசு ஓய்வூதிய விதிகள் 1978-ன்படி ஓய்வூதியம் பெறுவதற்குரிய பணி புரிந்து, ஓய்வூதியம் பெற தகுதியுள்ள மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஓய்வுபெற்றபின், ஓய்வுபெற்ற காலம் வரை நிர்ணயிக்கும் மற்றும் அவ்வப்போது அரசு அனுமதிக்கும் ஓய்வூதியப் பலன்களில் மறு நிர்ணயம் செய்யும் ஓய்வூதியம், ஓப்பளிப்பு வழங்கும் அலுவலரால் மாநில தலைமைக் கணக்காயர்மூலம் அனுமதிக்கப்பட்டு விதித் தொகுப்பின்படி கருவூலம் / சார் கருவூலம் / ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மற்றும் பொதுத் துறை வங்கிகள்மூலம் பெற்று வருகின்றனர். மேலும் பணி முடித்த ஓய்வூதியதாரர்களைத் தவிர, பணியில் இருக்கும்போது இறக்கும் அரசுப் பணியாளர்கள் மற்றும் மறைந்த ஓய்வூதியதாரர்களின் மனைவி/கணவர் அல்லது தகுதியுள்ள மகள் / மகன் ஆகியவர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

[2015 செப்டம்பர் 29

அரசு 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககத் துறையை உருவாக்கியது. இவ்வியக்ககம் தற்போது நிதித் துறை இணைச் செயலாளர் நிலையில் உள்ள அலுவலரை இயக்குநராகக் கொண்டுள்ளது. இயக்குநரைத் தவிர ஓர் இணை இயக்குநர், ஒரு துணை இயக்குநர், ஒரு கணக்கு அலுவலர், ஓர் உதவிக் கணக்கு அலுவலர், பிற அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்களின் துணையுடன் இயங்குகிறது. இந்த இயக்ககம், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது:

(i) மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதிய குறைகளைத் தீர்த்தல்.

(ii) ஓய்வூதியதாரர்களின் குறைகளை, ஓய்வூதிய அதாலத் அமைப்புமூலம் தீர்த்தல்.

(iii) ஓய்வூதியதாரர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

(iv) அரசுத் துறைகளின் தொழிற்சாலை பணியாளர்களின் சேமநல நிதித் திட்டம் தொடர்பான பணிகளை நிருவகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(v) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நலநிதித் திட்டம், 1995 நிருவகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(vi) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம், 1997-ஐ நிர்வகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(vii) தமிழ்நாடு அரசு பணியாளர்களின் சிறப்பு சேமநலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984-ன் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(viii) தமிழ்நாடு அரசு பணியாளர்களின் சிறப்பு சேமநலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000-ன் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(ix) ஓய்வூதிய இயக்ககத்தில் பணிபுரிவோரின் ஊதியம் மற்றும் இதர பயன்களின் வரவு-செலவுத் திட்டம் மதிப்பீடு செய்தல் மற்றும் துறைக் கணக்குகளை சம்பள கணக்கு அலுவலகம் மற்றும் மாநில கணக்காயர் கணக்குகளுடன் ஒத்திசைவு பணி செய்தல்.

(x) அமைப்புச் சாரா தினக்கூலிப் பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொது மக்களுக்கான தமிழ்நாடு அரசு சமூக பாதுகாப்புத் திட்டம், 1974-ஐ நிருவகித்து நிறைவேற்றுதல்.

ஓய்வூதியதாரர்கள் குறை தீர்வு

ஓய்வூதிய இயக்ககத்தின் மூலம் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்.

22. பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாகவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாகவும் பெறப்படும் மனுக்கள்மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, ஓய்வூதியதாரர்களின் குறைகள் உடனடியாக தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டில் முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து 625 மனுக்களும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் 816 மனுக்களும் மற்றும் மாவட்டங்களிலிருந்து 2,108 மனுக்களும் ஓய்வூதிய இயக்ககத்தில் பெறப்பட்டது. இத்தகைய மனுக்கள்மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, மனுதாரர்களின் குறைகள் களையப்பட்டு வருகின்றன.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

23. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தினை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தங்களது மாவட்டங்களில் நடத்துகின்றனர். இக்கூட்டத்தில், இயக்குநர் அல்லது இணை இயக்குநர் பங்கேற்று, அம்மாவட்டத்திலுள்ள ஓய்வூதியதாரர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு, அவற்றை விரைந்து களைந்திட மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிகின்றனர். ஓய்வூதியப் பலன்கள் தொடர்பான கோப்புகள் மாநில கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையிலிருந்தால் அவற்றை விரைந்து முடித்திட, இவ்வியக்ககத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டவாரியான குறை தீர்க்கும் மனுக்கள்மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மாவட்டங்களில் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு, துறைவாரியாக ஓய்வூதியதாரர்களின் குறைகள் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

[2015 செப்டம்பர் 29

ஓய்வூதிய அதாலத்

24. ஓய்வூதியதாரர்களின் குறை தீர்ப்பதற்கென்று லோக் அதாலத், உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தில் 22-2-2002 முதல் செயல்படுகிறது. ஓய்வூதிய அதாலத் முன்பு வைக்கப்படும் ஓய்வூதியதாரர் குறைகள் மீது வழங்கப்படும் உத்தரவின்மீது தொடர் நடவடிக்கை எடுத்து செயல்படுத்திட, ஓய்வூதிய இயக்குநர், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயரின் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினை அரசு அமைத்துள்ளது. ஓய்வூதிய துறை இயக்குநர் ஓய்வூதிய அதாலத் ஒருங்கிணைப்பு அலுவலராவார் (Nodal Officer). மாதம் இரு முறை இந்த அதாலத் நடைபெறுகிறது. 1-1-2014 முதல் 31-12-2014 வரை 51 ஓய்வூதியதாரர்களின் மனுக்கள் விசாரிக்கப்பட்டு 19 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளன.

ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், தொடர்பு வங்கி அலுவலர்கள் மற்றும் ஓய்வூதிய சங்கங்கள் தொடர்பான கூட்டம்

25. ஓய்வூதிய இயக்குநர், ஓய்வூதியதாரர் சங்கப் பிரதிநிதிகளின் முன்னிலையில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் மற்றும் தொடர்பு வங்கி அலுவலர்களுடன் மாதாந்திர கூட்டங்கள் நடத்தி, ஓய்வூதியதாரர்களுக்கு வங்கிகள்மூலம் செயல்படுத்தப்படும் பொதுத் துறை வங்கித் திட்டம் மூலமும், ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மூலம் செயல்படுத்தப்படும் முன்னோடித்திட்டம் மூலமும், ஓய்வூதியம் பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன.

ஓய்வூதியர்களின் வழிகாட்டி

26. ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள், அவ்வப்பொழுது அரசால் வெளியிடப்படும் ஆணைகள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் கருத்துரு அனுப்ப வழிகாட்டுதல் ஆகியவற்றை ஓய்வூதியதாரர்கள் தெரிந்துகொள்ளும் பொருட்டு வழிகாட்டி ஏடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணைய தளத்தில் (www.tn.gov.in/dop) வெளியிடப்பட்டுள்ளது. ஓய்வூதியப் படிவங்களை இணைய தளத்தில் இருந்து உடனடி உபயோகத்திற்காக பதிவிறக்கம் செய்யலாம். மின் அஞ்சல் மூலமாகவும் ஓய்வூதிய இயக்குநகரத்தைத் தொடர்பு கொள்ளலாம். இத்துறைக்கான மின் அஞ்சல் முகவரி dop@tn.nic.in.

2015 செப்டம்பர் 29]

ஓய்வூதிய இயக்குநரக கணினிமயமாக்கம்

27. தேசிய தகவல் மையம் உருவாக்கியுள்ள மென்பொருளைக் கொண்டு, மருத்துவ நலநிதித் திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தேவையான அடிப்படை விவரங்கள் அளிக்கப்பட்டு, ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன. அதைப்போன்று, ஏற்கெனவே கணினிமயமாக்கப்பட்டுள்ள தொழிலாளர் சேமநலநிதித் திட்டமும் தேசிய தகவலியல் மையத்தால் சிறு மாற்றங்களுடன் முழுமைப்படுத்தி கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஓய்வூதியதாரர்களின் நலத் திட்டங்களில் பெறும் உதவிப் பணத்தை மின்னணு பணப் பட்டுவாடா முறையில் (E.C.S.) நிசர்வ் வங்கி மூலமாக அவரவர் வங்கிக் கணக்குகளில், கணினி மூலம் நேரடியாக பணம் பட்டுவாடா செய்யும் ஏற்பாட்டை நடைமுறைப்படுத்த தேசிய தகவலியல் மையம் மற்றும் வங்கி அலுவலர்களோடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணினி மூலம் பணம் பட்டுவாடா செய்வதன் மூலம், காசோலை மூலம் பணம் அனுப்புவது நிறுத்தப்பட்டு, உடனடியாக வங்கிகள் மூலம் அவரவர் வங்கி கணக்குகளில் பணம் வரவு வைக்கப்படுவது உறுதிபடுத்தப்படுகிறது.

மின்னணு ஓய்வூதியம் (e-Pension)

28. ஓய்வூதியம் வழங்கும் நடைமுறையும் மற்றும் ஓய்வூதியதாரர்கள் தொடர்பான புள்ளிவிவரங்களையும் பெற கணினித் தகவல் மென்பொருள் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களை நேரடியாக அவரவர் வங்கிக் கணக்குகளில் மின்னணு தீர்வு முறை (Electronic Clearing Service) / மண்டல மின்னணு தீர்வு முறை (Regional Electronic Clearing Service) வழியாக வரவு வைக்கப்படுகிறது. மேலும், முதன்மை மாநிலக் கணக்காயரின் தொகுப்பிலுள்ள ஓய்வூதியம் குறித்த விவரங்கள் அனைத்தும் மின்னணு ஓய்வூதிய மையத் தொகுப்பிற்கு (e-Pension Central Server) மாற்றப்பட வழிவகை செய்வதன்மூலம் ஓய்வூதியம் குறித்த விவரங்களைத் துல்லியமாக பெறுவதோடு குறைந்த செலவு மற்றும் குறுகிய காலத்தில் அதிக பயன் பெற வழி ஏற்படும்.

ஓய்வூதியதாரர்களின் நேர்காணல் (Mustering)

29. மூத்த குடிமக்களுக்கு ஏற்படும் இடர்களை கருத்தில் கொண்டு, ஓய்வூதியர் நேர்காணலை எளிமைப்படுத்தும் முயற்சியாக தேசிய தகவலியல் மையத்துடன் (NIC) இணைந்து ஓய்வூதியதாரர்களை அடையாளம் காண மின்னணு விரல் ரேகை பதிவு செய்தல் முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. வருங்காலங்களில் இந்த வசதியினை வங்கிகளில் கிடைக்கச் செய்வதன்மூலம், ஓய்வூதியதாரர்கள் இணையதளம் வாயிலாக அருகிலுள்ள வங்கிகளிலேயே அடையாளம் காணும் மின்னணு பதிவு செய்தல் முறையினை பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும்.

ஓய்வூதியதாரர்களிடமிருந்து வாழ்வுச் சான்றிதழ் பெறுவதில் மிகவும் எளிய நடைமுறைகளை பின்பற்றும் வகையில், ஓய்வூதியதாரர்கள் மின்னணு வாழ்வுச் சான்றிதழ் (Digital Mustering) வழங்கும் நடைமுறை 2016 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

30. இது தவிர வரவிருக்கும் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை திட்டம்மூலம் ஓய்வூதியதாரர்கள் தங்களுக்கான அரசின் சேவைகள் அனைத்தையும் எவ்வித சிரமமுமின்றி மிக எளிதான முறையில் பெற முடியும்.

ஓய்வூதிய சான்றிதழ்கள் மின்னணுமயமாக்கல் (Digitalisation)

31. ஓய்வூதியம் பெறும் ஆணைகளைக் கணினிமயமாக்க ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்து கருவூலங்களில் மின்னணுமயமாக்கல் செய்யப்பட்டு இந்த ஆணைகளை மின்னணு ஓய்வூதிய மென்பொருளில் இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இச்செயலாக்கத்தின்மூலம் சான்றிதழ்கள் மற்றும் தகவல்களை நீண்ட காலம் பாதுகாப்பாக வைக்க முடியும். ஒரே நேரத்தில் பதிவுகளை பலர் எல்லைகளைச் கடந்து பயன்படுத்தவும், பார்வையிடவும் இது வழிவகுக்கும். கணினிமயமாக்குவதன் காரணமாக சான்றிதழ்களின் நிறமாற்றம் தவிர்க்கப்பட்டு, தெளிவாக மேம்பட்ட தரத்துடன் அவற்றைப் பாதுகாக்க இயலும்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய ராணுவத்தினருக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்.

32. விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு நமது நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட தியாகிகளுக்கும் அவர்தம்

2015 செப்டம்பர் 29]

குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. அவர்களின் நலனுக்காக விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குதல், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி அளித்தல், வீடுகள் ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற பல திட்டங்களை அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

33. விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் 1-10-1966 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறை தண்டனை பெற்றவர்கள் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்கள், துப்பாக்கி சூடு அல்லது சுதந்திரப் போராட்டத்தின்போது காவலர் தடியடி ஆகியவற்றில் இறந்தவர்கள் அல்லது நிரந்தரமாக ஊனமுற்றவர்கள் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். இது தவிர, இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும், 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை அடைந்தவர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், சுதந்திரப் போராட்டத்தின் போது பிடியாணை பிறப்பிக்கப்பட்டதை தவிர்ப்பதற்காகத் தலைமறைவாக இருந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப் பணியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற அல்லது அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாக இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான மூன்று மாத கால சிறைவாசம் என்பது 1-4-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்ச வரம்பு 11-3-1983 முதல் நீக்கப்பட்டது.

34. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டுள்ளது. 15-8-2015 முதல் ஓய்வூதிய தொகை ரூ. 10,000/லிருந்து ரூ. 11,000/-ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

[2015 செப்டம்பர் 29

35. மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறக்க நேரிட்டால், இந்த ஓய்வூதியத் தொகையானது அன்னாரின் மனைவிக்கு / கணவருக்கு / உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. மேற்படி ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனாயிருந்தால் 18 வயதுக்கு மேலும், மகளாயிருந்தால் 21 வயதுக்கு மேலும், சுயமாய் சம்பாதித்து வாழமுடியாத அளவிற்கு மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது மாற்றுத் திறனாளியாகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும், தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த குடும்ப ஓய்வூதியத் தொகையும் அவ்வப்போது உயர்த்தப்பட்டுள்ளது. 15-8-2015 முதல் குடும்ப ஓய்வூதிய தொகை ரூ. 5,000/லிருந்து ரூ. 5,500/- ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

36. விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புற பணியாற்றிய மேலோரின் தியாகத்தைப் பாராட்டி அவர்களது வாரிசுகளுக்கும் சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின்படி, சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வழித்தோன்றல்கள், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் ஆகியோருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 5,000/- ஆக உயர்த்தி 15-8-2015 முதல் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது, சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் 112 பேர்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வழித்தோன்றல்கள் 5 பேர்கள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் 67 பேர்களுக்கும் மற்றும் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பேரன் ஒருவருக்கும் இந்த சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பயனாளிகள் சிறப்பு ஓய்வூதியத்தை அவர்கள் வாழ்நாள் முழுவதும் பெறுவார்கள்.

37. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

2015 செப்டம்பர் 29]

(அ) மருத்துவ வசதிகள்

மைய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/ விதவைகளுக்கும் / உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மருத்துவப்படி வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையானது மாதமொன்றிற்கு ரூ.100/-லிருந்து மாதமொன்றிற்கு ரூ.500/- ஆக உயர்த்தப்பட்டு 15-8-2012 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள் மருத்துவச் சிகிச்சைக்காக பழைய அரசு மருத்துவமனைகளுக்கு வரும்போது 'அ' வகுப்பு வசதிகளுடன் கூடிய இலவச மருத்துவ சிகிச்சையும், புதிய மருத்துவமனைகளின் கட்டணப் பிரிவுகளில் எந்தவித கட்டணமும் இல்லாமல் சிகிச்சை வழங்கப்படுகிறது.

(ஆ) போக்குவரத்து வசதி

மைய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகள் மற்றும் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) வீட்டு வசதி

தமிழ் நாடு வீட்டுவசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில் / மனைகளில்/அடுக்கு மாடி வீடுகளில், ஆதிதிராவிடர்/ பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலிருந்தும், சலவையாளர்/நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலிருந்தும் மற்றும் பொது மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலிருந்தும் தலா ஒரு சதவிகிதம் வீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர் பட்டியல் அனுப்பப்படும்பொழுது விடுதலைப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

(உ) ஈமச் சடங்குச் செலவு

விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், அவர்தம் ஈமச் சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய நேரடி வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகையாக ரூ.5,000/- உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வட்டாட்சியருக்கு குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மறைந்தவரின் உடல் மீது மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது. மாநில அரசின்/மைய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தும்.

38. தற்போது மாநில அரசின் பல்வேறு வகையான ஓய்வூதியங்களைப் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

வ. எண்	பல்வேறு வகையான ஓய்வூதியங்கள்	எண்ணிக்கை
1.	மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ. 11,000/- + ரூ.500/- மருத்துவப்படி.)	405
2.	மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ.5,500/- + ரூ.500/- மருத்துவப்படி.)	1,476
3.	சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம்)	112
4.	வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம்)	5

வ. எண்	பல்வேறு வகையான ஓய்வூதியங்கள்	எண்ணிக்கை
5.	மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/- விதம்)	67
6.	வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழித்தோன்றல் (மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/- விதம்)	1

39. மைய அரசின் ஓய்வூதியத் திட்டம்

15-8-1972 முதல் மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத் திட்டத்தை (Swatantrata Sainik Samman Pension) செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

(அ) மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றிற்கு ரூ.6,330/- ஓய்வூதியத்துடன் 1-6-2014 முதல் 218 சதவீதம் அகவிலைப்படியும் சேர்த்து மொத்தம் ரூ.20,129/- வழங்கி வருகிறது. இவ்வாறு மைய அரசு ஓய்வூதியம் பெற்று வரும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை 1,526 ஆகும்.

(ஆ) மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் / மைய அரசு குடும்ப ஓய்வூதியம் பெறுபவருக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து, ரூ.500/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

40. மேற்குறிப்பிட்ட விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டங்களுக்காக 2015-2016 ஆம் ஆண்டிற்கு ரூ. 19,55,03,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இணைப்பு VII

(249 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

பேரவை விதி 110-ன்கீழான அறிவிப்புகள்

நடப்பாண்டில் 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்குதல், மேலும் 10 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல், 6 கோடி ரூபாய் செலவில் செவிலியர்கள் குடியிருப்புகள் கட்டுதல், 12.12 கோடி ரூபாய் செலவில் புதிய இரத்த வங்கிகள், இரத்த சேமிப்பு மையங்கள், இரத்த சேகரிப்பு பிரிவுகள் நிறுவுதல், 5 பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை மையங்கள் ஏற்படுத்துதல், ராஜபாளையத்தில் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு அமைத்தல், பிரசவிக்கும் தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் வசதிக்காக 20 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வாகனங்கள் வழங்குதல், 108 ஆம்புலன்ஸ் சேவைக்காக 5 கோடி ரூபாய் செலவில் 50 பழைய ஊர்திகளை மாற்றுதல், இளம் சிசு பராமரிப்பு மையங்களுக்கு 10.08 கோடி ரூபாய் செலவில் உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட தாய்-சேய் நலத் திட்டங்களை 25-8-2015 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், சென்னை, அடையாறு புற்றுநோய் மையத்தை மாநில உயர்நிலை மையமாகவும், ஒப்புயர்வு மையமாகவும் 120 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்துவது குறித்தும், 15 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் மார்பகப் புற்றுநோயைக் கண்டறியும் கருவிகள் நிறுவ 2.25 கோடி ரூபாய் ஒதுக்கப்படுவது குறித்தும், மாற்று உறுப்பு அறுவை சிகிச்சைகளுக்கான தொகுப்பு நிதிக்கு கூடுதலாக 25 கோடி ரூபாய் வழங்குவது குறித்தும், 302 அரசு மருத்துவமனைகளுக்கு 9.05 கோடி ரூபாய் செலவில் இரத்த உட்கூறுகளின் அளவைக் கண்டறியும் உபகரணங்கள் வழங்குவது குறித்தும், புதிதாக துவக்கப்படும் வட்டங்களுக்கு மருத்துவ வசதிகளை மேம்படுத்த 70 கோடி ரூபாய் ஒதுக்கப்படுவது குறித்தும் இனிய பல திட்டங்களை அந்த அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

அதுமட்டுமல்லாமல், சென்னை அரசு பொது மருத்துவமனை முடநீக்கியல் சிகிச்சை மையத்திற்கு 5 கோடி ரூபாய் சிறப்பு நிதி, புற்றுநோய் கதிர்வீச்சு நிலையத்திற்கு 25 கோடி ரூபாயில் மேம்பாட்டுத் திட்டம், சென்னை எழும்பூரிலுள்ள குழந்தைகளுக்கான மருத்துவமனைக்கு 10 கோடி ரூபாய் செலவில் உயர்தர ஆய்வகம், அரசின் பல்வேறு மருத்துவத் திட்டங்களுக்கென கூடுதலாக மருந்துகள் வழங்க 102.51 கோடி ரூபாயில் திட்டம், புதுக்கோட்டையில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குதல், தென் தமிழகத்தில் புதிய அரசு பல் மருத்துவக் கல்லூரி தொடங்குதல், தேனி அரசு மருத்துவக் கல்லூரி செவிலியர் பயிற்சிப் பள்ளி மாணவியர்களுக்கு விடுதி கட்டுதல், செங்கல்பட்டு மற்றும் திருவாரூரில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் பேராசிரியர் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள், விரிவுரை அரங்கம் கட்டுதல், 20 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மின்கல ஊர்திகள் வழங்குதல் மற்றும் கோபிசெட்டிப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு 2.27 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டுதல் குறித்தும் அன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் பேரவையில் அறிவித்தார்கள்.

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக, நாடே போற்றும்வண்ணம், உலகத் தலைவர்கள் அனைவரும் வியக்கும் வகையில் வள்ளுவரின் வாய்மொழிப்படி, நோய் வருவதற்கு முன்பே அதைத் தடுத்து நிறுத்தும்வண்ணம் உன்னதத் திட்டமாக சென்னை அரசு பொது மருத்துவமனையில் 'அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்', 'அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம்' எனக் குறைந்த கட்டணத்தில் பரிசோதனைத் திட்டங்களையும் மேற்கொள்ள மருத்துவக் கருவிகள் வழங்க ரூ. 10 கோடி ஒதுக்குதல், 385 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டணமின்றி அடிப்படை மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள 'அம்மா ஆரோக்கிய திட்டம்' என்ற திட்டம் அறிமுகம் செய்தல் ஆகியவை பற்றி அறிவித்தார்கள்.

இந்திய மருத்துவ முறைகளின் பலன்கள் தாய்மார்களைச் சென்றடையும்வண்ணம் 11 வகை மூலிகை மருந்துகள் கொண்ட 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' என்ற மருத்துவ பொக்கிஷம் வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

[2015 செப்டம்பர் 29

தமிழுக்கு தன்னைத் தந்த பழுவூர் சின்னச்சாமிக்கு,
தமிழனுக்குத் தண்ணீர் தந்த கர்னல் பென்னிகுவிக்குக்கு,
சிவகங்கை சீமை தந்த வீரமங்கை வேலுநாச்சிக்கு,
தீரன் சின்னமலைக்கு, தன்னிகரில்லா பாளையத்து வீரன் கட்டபொம்மனுக்கு,
கல்லணை கட்டிய கரிகால் பெருவளத்தானுக்கு,
மணி மண்டபங்கள், சிலை என அறிவித்த தியாகத்தாய்,

மதிப்பிற்குரிய நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் அவர்களுக்கு தமிழக அரசின் சார்பாக சென்னையில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பை 26-8-2015 அன்று அறிவித்து கலைத் தாய்க்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரும்பெரும் சேவையைச் செய்தார்கள்.

வனவிலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் இடையே ஏற்படும் மோதல் நிகழ்வுகளை குறைக்க 5 அதிவிரைவுக் குழுக்கள் அமைத்தல், 100 கோடி ரூபாய் செலவில் ஜவ்வாது மலை, கொல்லி மலை உள்ளிட்ட பகுதிகளில் பழங்குடியினர் மூலமாக சந்தன மரம் வளர்த்தல், 25 இடங்களில் தொடர் காற்று கண்காணிப்பு நிலையங்கள் அமைத்தல் குறித்த ஓர் அறிவிப்பை 27-8-2015 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டார்கள்.

அதே நாளன்று பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு 12.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உணவு தயாரிக்கும் நீராவி கொதி கலன்கள் வழங்குதல், 1.46 கோடி ரூபாய் செலவில் எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்குதல், பணிபுரியும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மகளிர்க்கு 4.40 கோடி ரூபாய் செலவில் தங்கும் விடுதிகள் கட்டுதல், ஆதி திராவிடர்/பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல், நீலகிரி மாவட்டத்தில் மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி தோற்றுவித்தல், பழங்குடியின உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில் அறிவுத் திறன் வகுப்பறைகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட மற்றுமொரு அறிவிப்பை செய்து ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியரின் வாழ்க்கையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒளியேற்றி வைத்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 29]

அரசு நிருவாகத்தின் அச்சாணியாக விளங்கும் வருவாய்த் துறையின் சேவைகள் மேலும் எளிதில் மக்களைச் சென்றடையும்வண்ணம் இவ்வாண்டு பல்வேறு மாவட்டங்களில் 16 புதிய வட்டங்களை 16 கோடி ரூபாய் செலவில் உருவாக்கும் ஒரு மகத்தான திட்டத்தையும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 5 வருவாய்க் கோட்டங்களை 1.65 கோடி ரூபாய் செலவில் உருவாக்கவும் 31–8–2015 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள்.

அதே நாளன்று, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான புதிய தொழிற்கொள்கை உருவாக்கப்படுவது குறித்தும், இத்துறை சார்ந்த பன்னாட்டு அளவிலான ஆய்வு மேற்கொள்வது குறித்தும், கிண்டி தொழிற்பேட்டையில் சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓர் அடுக்குமாடி தொழில் வளாகம் அமைப்பது குறித்தும் சீரிய திட்டம் ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த கள்.

குற்றம் புரிந்தவர்களை சீர்திருத்தும் சமூக மருத்துவமனைகளாக விளங்கும் சிறைச்சாலைகளை மேம்படுத்தும் பல அறிவிப்புகளை 1–9–2015 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டார்கள். அதில் சிறைக் கைதிகளின் பயன்பாட்டிற்கான உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்கள் வழங்க 2.34 கோடி ரூபாய் ஒதுக்கீடு, நடப்பாண்டில் சிறைத் துறை களப் பணியாளர்களுக்கு 14.57 கோடி ரூபாய் செலவில் மொத்தம் 100 குடியிருப்புகள் கட்டுதல் ஆகியவையும் அடங்கும்.

மின் உற்பத்தியில் செழுமையை ஏற்படுத்தும் விதமாக இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டத்தில் 24,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,000 மெகாவாட் திறன் கொண்ட மாபெரும் அனல் மின் திட்டம் நிறுவுதல், 2,335 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வட சென்னையில் தொகுப்பு துணை மின் நிலையம் அமைத்தல், அரியலூரில் சுமார் 2,121 கோடி ரூபாய் செலவில் துணை மின் நிலையம் அமைத்தல், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2,335 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின் நிலையம் அமைத்தல் குறித்த அறிவிப்புகளை அன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டார்கள்.

[2015 செப்டம்பர் 29

மேலும், நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில ஜவுளி ஆலோசனைக் குழு அமைப்பது குறித்தும், பட்டுத் துணிகளுக்கு 15% சிறப்புத் தள்ளுபடி வழங்குவது குறித்தும், ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு தொழில் முனைவோர்களுக்கு 2.50 கோடி ரூபாய் வரை நிதி உதவி வழங்குவது குறித்தும், மத்திய அரசின் ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஜவுளி நிறுவனங்களுக்கு மாநில அரசின் பங்காக 25% நிதி உதவி வழங்குவது குறித்தும், பட்டு விவசாயிகளுக்கான சில முக்கிய திட்டங்களில் மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து மாநில அரசே கூடுதல் நிதி வழங்குவது குறித்தும், 22.55 கோடி ரூபாய் செலவில் உயர் மல்பெரி ரகம் பயிரிட்டு பட்டுப் புழு வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்வது குறித்தும் அன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிப்புகளை வெளியிட்டார்கள்.

ஊரகப் பகுதிகளில் சாலைகள், பாலங்கள், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை சேர்த்து நடப்பாண்டில் 1,475 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வது குறித்தும், இவ்வாண்டு கிராம ஊராட்சிகளில் அரசு சேவை மையங்கள் 661.30 கோடி ரூபாய் செலவில் அமைப்பது குறித்தும், கிராமங்களை ஒளிமயமாக்கும்வண்ணம் 300 கோடி ரூபாய் செலவில் எட்டு இலட்சம் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைப்பது குறித்தும், முன்னோடித் திட்டமான "தாய்" திட்டத்தின்கீழ் சிமெண்ட் பேவர் பிளாக் தெருக்கள் அமைப்பது குறித்தும், ஊரகப் பகுதிகளிலுள்ள தூய்மைக் காவலர்கள் திட்டத்தை மக்கள் தொகை அதிகம் கொண்ட, நகர்ப் பகுதிகளை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளுக்கும் 300 கோடி ரூபாய் செலவில் நீட்டித்தல், புது வாழ்வு திட்டத்தின்கீழ் 30 கோடி ரூபாய் செலவில் 30,000 இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்குதல், ஊரகப் பகுதிகளிலுள்ள சாலைகளின் இரு மருங்கிலும் இரண்டாயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு மரக் கன்றுகள் நடுதல், 1,14,000 குடியிருப்புகளில் வீட்டுத் தோட்டம் அமைக்க பழம் மற்றும் மரக் கன்றுகள் வழங்குதல், நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் சில கூறுகளை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்துதல், சுய உதவிக் குழுக்களுக்கு அமுதசுரபி நிதியாக

2015 செப்டம்பர் 29]

நடப்பாண்டில் 58 கோடி ரூபாய் வழங்குதல், ஒத்த தொழில் செய்யும் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து 15 கோடி ரூபாய் நிதி உதவி வழங்குதல், கிராமப்புற மாற்றுத் திறனாளிகள், நலிந்தவர்களுக்கு உதவ 600 கிராம ஒழிப்பு சங்கங்களுக்கு மொத்தம் 12 கோடி ரூபாய் அளவுக்கு வட்டியில்லா கடன் வழங்குதல், ஆதரவற்றோர், ஏழைகள், நலிந்தவர்களைக் கொண்டு பத்தாயிரம் சுய உதவிக் குழுக்களை இவ்வாண்டு அமைத்தல், சுய உதவிக் குழுக்களுக்கு 6,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்குதல் உள்ளிட்ட முனைப்பான ஊரக மேம்பாட்டு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் 3-9-2015 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

அம்மாவின் கனவுத் திட்டம், ஏழைகளே இருக்கக் கூடாது என்ற ஏற்றமான முதன்மைத் திட்டம். ஏழைகளும் இல்லை, எதிரிகளுக்கும் இங்கு இடமில்லை. அதற்கான அறிவிப்புகள். வாரி வழங்கும் குணம், வறுமையை ஒழிக்கும் மனம், ஏற்றத்தாழ்வு இல்லா நாடு, எட்டிப்பார், அதுவே தமிழ்நாடு என்றே, ஏக்கத்துடன் ஏனைய மாநிலத்தோர் நோக்கச் செய்த தீர்க்கத் தலைவியின் அறிவிப்புகள்.

முடியாது என்ற வார்த்தை அகராதியிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்று முழங்கியவர் மாவீரன் நெப்போலியன். உங்களுக்குத் தெரியுமா? ஜப்பானியர் மொழியில் ஓய்வு என்ற சொல்லே கிடையாது. அகராதியில் மட்டுமா? ஜப்பானியர் உழைப்பிலும்தான் ஓய்வு இல்லை.

தமிழினத்தை வளமோடு வாழ வைத்திட . . .
எத்தனை துன்பங்கள், எத்தனை துயரங்கள்,
எத்தனை துரோகங்கள், எத்தனை இடையூறுகள்,
எத்தனை சோதனைகள், எத்தனை வேதனைகள்,
எத்தனை தடைக் கற்கள், எத்தனை சூழ்ச்சிகள்,
எத்தனை எதிரிகள், எத்தனை எதிர்ப்புகள்,
இவை அத்தனையையும்
தொடர் அறப்போராட்டத்தாலும்,

அனைவரும் வியக்கும் வண்ணம் அயராத உழைப்பாலும்,
எல்லையில்லா வீரத்தாலும்,
மாற்றார் போற்றும் மதி நுட்பத்தாலும்,
வல்லரசு நாடுகளும் வரவேற்கின்ற,
வற்றாத வல்லமையினாலும்,
அவனி போற்றுகின்ற, அழியாத ஆற்றலாலும்,
ஈடு இணையில்லா தியாகத்தாலும்,

சமுதாயத்தின் விளிம்பில் வாடிய மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளியேற்றி வைத்த மாண்புமிகு அம்மா அவர்கள், மேலும் இவ்வாண்டு அவர்கள் பயன்பெறும் வகையில் புதுக்கோட்டையிலுள்ள காது கேளாதோருக்கான அரசு நடுநிலைப் பள்ளிக்கு விடுதி மற்றும் வகுப்பறைகளுடன்கூடிய சொந்தக் கட்டடத்தை ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டுவது குறித்தும், முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கென 1.92 கோடி ரூபாய் செலவில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்குவது குறித்தும் 14–9–2015 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

மேலும், தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் மூவாயிரம் கோடி ரூபாய் செலவில் மத்திய அரசு உதவியுடன் ஆப்டிக்கல் ஃபைபர் மூலம் இணைய வசதி அளிக்கவும், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் மூலமாக இல்லம்தோறும் இணையம் என்ற கொள்கையின் அடிப்படையில் குறைந்த செலவில் இணைய வசதி அளித்தல் மற்றும் அதிவேக அகண்ட அலை வரிசை மற்றும் இணையவழி தொலைக்காட்சி சேவைகள் வழங்குவது குறித்தும், தமிழக அரசின் இ–சேவை திட்டத்தின்கீழ் மேலும் 300 சேவைகளை வழங்குவது குறித்தும் அதே நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவிப்புகளை வெளியிட்டார்கள்.

மனிதனுக்கு அத்தியாவசியமான வீட்டு வசதித் தேவையினை பூர்த்தி செய்யவும், நகர்ப்புறங்களில், குறிப்பாக சென்னையில், பல்வேறு வசதிகளைச் செய்வது குறித்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க பல அறிவிப்புகளை 15–9–2015 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேரவையில் அறிவித்தார்கள். சென்னையில் குறைந்த வருவாய் பிரிவினருக்கு 380 கோடி ரூபாய் செலவில் 2,300 குடியிருப்புகள் கட்டி, ரூபாய் 20 இலட்சத்திற்கும் குறைவான

2015 செப்டம்பர் 29]

விலைக்கு வழங்குதல், சென்னையில் 'சி' மற்றும் 'டி' அரசு அலுவலர்களுக்கு 225 கோடி ரூபாய் செலவில் 500 பன்னடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டுதல், வீட்டு வசதி வாரியம் மூலம் சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட எட்டு மாவட்டங்களில் சுமார் 675 கோடி ரூபாய் செலவில் 2,800 குடியிருப்பு அலகுகள் கட்டுதல், குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் 457.50 கோடி ரூபாய் செலவில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கென 12,500 குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் பழைய குடியிருப்புகளைப் பராமரிக்க 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்குதல், மதுரை நகரத்தை குடிசைப் பகுதிகளற்ற நகரமாக மாற்ற பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கென 4,500 குடியிருப்புகள் கட்டுதல், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் அமைந்துள்ள பகுதியை 400 கோடி ரூபாய் செலவில் உலகத் தரத்தில் மத்திய சதுக்கமாக மேம்படுத்துதல், அனைத்து தொகுப்பு வளர்ச்சிகள் மற்றும் பல மாடிக் கட்டடங்களில் சூரிய மின்சக்தி அமைப்புகளை நிறுவுவதைக் கட்டாயமாக்க வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுதல், சென்னை எண்ணூர் அருகே எர்ணாவூரில் தோராயமாக 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட சரக்குந்து வாகன நிறுத்துமிடம் அமைத்தல் உள்ளிட்ட திட்டங்கள் இதில் அடங்கும்.

தமிழகத்தின் தொழில் திறனை மேலும் மேம்படுத்தும் விதமாக தஞ்சாவூர், புதுக்கோட்டை, விருதுநகர், பெரம்பலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் விடுதிகளுடன்கூடிய புதிய அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களை சுமார் 46 கோடி ரூபாய் செலவில் துவக்குவது குறித்த அறிவிப்புகளையும் அதே நாளன்று மாண்புமிகு அம்மா அவர்கள் பேரவையில் வெளியிட்டார்கள்.

மனிதனுக்கு எண்ணும் எழுத்தும் இரண்டு கண்களாகின்றன என்றும், கல்லாதவர்களுக்கு இரண்டு கண்களும் புண்களாகின்றன என்றும் நீதி நூல்கள் கூறுகின்றன.

கல்விப் புரட்சிக்கு கால்கோல் இடும் கனிவான திட்டங்களால் அறிவுப் புரட்சி படைத்து வருகிறார் மாண்புமிகு அம்மா அவர்கள். கோடானுகோடி மக்களின் இதயங்களில் வருங்கால பாரதத்தை வல்லரசாய் வடிக்கக் காத்திருக்கும் மாணவ சமுதாயத்தின் மனங்களிலும்ட, ஏழையெளிய மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் வரையப்பட்டிருக்கும் ஓவியமாக,

ஒப்பில்லா காவியமாக காலத்தால் அழிக்க முடியா கல்வெட்டாகத் திகழ்கிறார் மாண்புமிகு அம்மா அவர்கள்.

23-9-2015 அன்று பள்ளிக் கல்வித் துறையில் புரட்சி படைக்கும் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இவ்வாண்டு 5 அரசு தொடக்கப் பள்ளிகளை நிலை உயர்த்துதல் மற்றும் 39 புதிய தொடக்கப் பள்ளிகள் அமைத்தல்; போதிய ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்குதல்; 770 கூடுதல் வகுப்பறைகள் கட்டவும், 287 பள்ளிகளின் வகுப்பறைகளைப் பழுதுபார்க்கவும் ரூ.56.53 கோடி ஒதுக்கீடு; பெரம்பலூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் புதிய பணியிடங்களுடன் தோற்றுவித்தல்; புதியதாக 7 மாவட்டங்களில் போதிய பணியிடங்களுடன் ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் அமைத்தல்; அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் 1 முதல் 8 ஆம் வகுப்புகளில் உள்ள பார்வையற்ற மாணவர்களுக்கு, பார்வை குறைபாடுள்ள மாணவர்களுக்கு முறையே பிரெய்லி பாடப் புத்தகங்களும், உருப் பெருக்கப்பட்ட அச்சுப் பாடப் புத்தகங்களும் வழங்குதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இதுமட்டுமல்லாமல், ரூ.9 கோடி செலவில் சமூகத் திரட்டுத் திட்டம் மற்றும் தனி விழிப்புணர்வு மற்றும் பாலினக் கூர் உணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஆசிரியர் இல்லங்கள் அமைத்தல், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 31-3-2003-க்கு முன்னர் பணி நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை மாநிலக் கணக்காயர் அவர்களின் பராமரிப்பில் கொண்டு வருதல், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகத்தின் கிடங்குகளை ரூ.30 கோடி செலவில் நவீனப்படுத்தி கணினிமயமாக்குதல், தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் கட்டடங்கள் கட்டுவதற்காக மாநில அரசின் சார்பில் ரூ.1,263 கோடியே 53 இலட்சம் ஒதுக்கீடு செய்தல் குறித்த அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் பேரவையில் வெளியிட்டார்கள்.

மேலும், இந்து சமய அறநிலையங்கள் துறையின் கீழுள்ள 1,004 திருக்கோயில்களில் இவ்வாண்டு திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்வதற்கு ரூ.5.02 கோடி நிதி ஒதுக்குதல், இதே

2015 செப்டம்பர் 29]

போன்று, துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத ஆதி திராவிட பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களுக்கும் திருப்பணி செய்தல், சிதிலமடைந்த, தொன்மையான 23 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்தல், திருவெள்ளறை அருள்மிகு புண்டரீகாட்சப் பெருமாள் திருக்கோயில் இராஜகோபுரப் பணிக்கு ரூ.5 கோடி ஒதுக்குதல், அபூர்வமான தல விருட்சங்களை மீட்டெடுத்தல், 14 திருக்கோயில்களுக்குச் சுற்றுச் சுவர்கள் அமைத்தல் ஆகிய அறிவிப்புகளையும் அன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டார்கள்.

வளமான கால்நடைகள், நம் வாழ்வின் பெருங்கொடைகள். குறைவான முதலீட்டில் இவை குவிக்கும் செல்வம் நம் வீட்டில். இடர் நீக்கும் அவதாரம், ஏழை மக்களின் ஆதாரம். தந்திடும் நிச்சய வருமானம். என்றும் காத்திடும் ஏழையின் தன்மானம். கால்நடைகளின் துயருக்கு, விடைகொடுக்கும் வகையில், கால்நடைகளும் மகிழக்கூடிய அறிவிப்புகளை வெளியிட்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

கிராமப்புற விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் முதுகெலும்பாகவும், பெண்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கத்தக்கதாகவும், கிராமப் பொருளாதாரத்திற்கு இன்றியமையாததாகவும் விளங்குவது கால்நடைகள். அத்தகைய கால்நடைகளுக்கு . . . ஆடுகளும் மாடுகளும் அன்புருகி அழைப்பது அம்மா, அம்மா. இல்லாதவர்களுக்கும் இயலாதவர்களுக்கும் கறவை மாடும், ஆடும் வழங்கி இல்லாமை போக்குபவர் நம் அம்மா அவர்கள்.

கறவை மாடும் ஆடும் தந்து வறியவர் வாழ்வை உயர்த்திட வழிவகுத்த வாழ்வரசி, மனித நேயமிக்க மக்கள் தாய் நம் அம்மா அவர்கள். கணினி முதல் கழனி வரை செழிக்க வைக்கும் காவியம், கறவை மாடு, ஆடுகள் தந்த கனிவுளத்து ஓவியம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மேலும், 193 கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், உயர் மரபுத் திறன்கொண்ட கால்நடைகளைக் கொள்முதல் செய்தல், தரமான தடுப்பு ஊசிகளை விநியோகித்தல், சைதாப்பேட்டையில் பல் துறை அலுவலக வளாகம் அமைத்தல், சென்னையில் கால்நடை நோய்களைக் கண்டறிய உலகத் தரமிக்க சிறப்பு உயிரியல்

ஆராய்ச்சி மையம் அமைத்தல், இந்தியாவிலேயே முதன்முறையாக கால்நடைகளுக்காக நடமாடும் மருத்துவ ஊர்திகள் ரூ.6.34 கோடி செலவில் வாங்குதல், கூட்டுறவு ஒன்றிய பால் பண்ணைகளில் கட்டமைப்பு வசதிகளை சுமார் ரூ.33 கோடி செலவில் மேம்படுத்துதல், 61 பால் டேங்கர்கள் வாங்குதல், பால் குளிரூட்டும் வசதிகள் மற்றும் சிப்பம் செய்வதற்கான இயந்திரங்கள் நிறுவுதல், ஆவின் நிறுவனம் சார்பில் அதிநவீன பாலகங்கள் அமைத்தல், மாதவரம், அம்பத்தூர், சோழிங்கநல்லூரில் உள்ள ஆவின் பால் பண்ணைகளை மேம்படுத்துதல், மீன் குஞ்சு உற்பத்தியை அதிகரிக்க ரூ.25 கோடி செலவில் உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், 13 இடங்களில் மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணைகளை மேம்படுத்துதல், ரூ.10.30 கோடி செலவில் அலங்கார மீன் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட அறிவிப்புகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் 23–9–2015 அன்று வெளியிட்டார்கள்.

23–9–2015 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், இந்த அவையில், விதி எண் 110–ன்கீழ் சில அறிவிப்புகளை வெளியிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர்களும், அமைச்சர்களும் அந்த அறிவிப்புகளுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்கள். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் நன்றி தெரிவித்து உரையாற்றுகையில், ஒலி வாங்கிக்கு மிக அருகில் நின்றுகொண்டு உரையாற்றியதால், அவரது உரையை அனைவராலும் தெளிவாகக் கேட்கமுடியவில்லை. இதனைக் கவனித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், ஒலி வாங்கிக்கு சற்று தள்ளி நின்று உரையாற்ற அறிவுறுத்தினார்கள் ஒவ்வொரு நடவடிக்கையையும் கூர்ந்து கவனித்து அறிவுரை வழங்கி வந்தார்கள்.

திருவண்ணாமலை கிரிவலப் பாதையை மேம்படுத்துதல், சென்னை மாநகராட்சி சாலைகள் பலவற்றை மேம்படுத்துதல், இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக பாலப் பணிகளை மேற்கொள்ளுதல், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகளை ஐந்தாண்டுகளுக்குப் பராமரித்தல் வண்டலூர்–ஒரகடம் சாலையை மேம்படுத்துதல், வண்டலூர்-மாம்பாக்கம்–கேளம்பாக்கம் சாலை சந்திப்பில் உயர் மட்டப் பாலம் அமைத்தல், பெரம்பூர்–செங்குன்றம் சாலைச் சந்திப்பில் இரண்டாம் கட்ட மேம்பாலப் பணிகள் மேற்கொள்ளுதல்

2015 செப்டம்பர் 29]

உள்ளிட்ட ரூபாய் 1,855 கோடியே 36 இலட்சம் மதிப்பிலான சாலை மற்றும் பாலப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 25–9–2015 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

உதகமண்டலத்தில் ரூபாய் 5 கோடி செலவில் மலை மேலிட பயிற்சி மையம் அமைத்தல், வேலூரில் உள்ள சிறப்பு நிலை பளு தூக்கும் பயிற்சி மையத்தைத் தரம் உயர்த்துதல், சர்வதேசத் தரத்தில் அனைத்து வசதிகளுடன்கூடிய விளையாட்டு அறிவியல் மையம் மதுரையில் அமைத்தல், இந்தியாவிலேயே முதன்முறையாக, மதுரையில் தேசிய மாணவர் படை பயிற்சி அகாடமியில் ஓட்டுநர் பாவிப்பு, வானூர்தி பாவிப்பு மற்றும் ஆயுத பாவிப்பு மற்றும் மொழி ஆய்வுக்கூடம் அமைத்தல் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அன்றையதினம் அவையில் அறிவிப்புகள் வெளியிட்டு தமிழக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவித்தார்கள்.

ஆழியாறு–ஊட்டுக் கால்வாயைப் புனரமைத்தல், மதுரை, பெரியாறு பிரதானக் கால்வாயின் கிளை வாய்க்கால்களைப் புனரமைத்தல், கரூர் மாவட்டம், ஆண்டான்கோயில் என்ற இடத்தில் அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல், அம்பாசமுத்திரம் வட்டம், ராம நதி அணையின் உபரி நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துதல், தேனி மாவட்டம், சின்னமனூர் அணைக்கட்டு வாய்க்கால்களைப் புனரமைத்தல், மேட்டூர் கரை கால்வாய்களைப் புனரமைத்தல், 105 ஏரிகளைப் புனரமைத்தல் என மொத்தம் 321.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறைமூலம் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு பாசனத் திட்டங்கள் குறித்த விரிவான அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அன்றையதினம் அளித்தார்கள்.

மேலும், பல்வேறு இடங்களில் 22 நீதிமன்றங்கள் அமைப்பது பற்றியும், 10 விரைவு நீதிமன்றங்கள் அமைப்பது பற்றியும் ஓர் அறிவிப்பை அன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

ஸ்ரீபெரும்புதூர், மேட்டூர், பழனி, சிவகாசி, கோவில்பட்டி ஆகிய வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகங்களைத் தரம் உயர்த்துவது பற்றியும், நத்தம், ஆலங்குடி, திருக்கழுகுன்றம் ஆகிய இடங்களில் புதிய பகுதி அலுவலகங்களை உருவாக்குவது பற்றியும் மற்றொரு அறிவிப்பை அன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

[2015 செப்டம்பர் 29

மாணவர்களின் எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்கும் உயர் கல்வித் துறை சம்பந்தமாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள் மற்றும் அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளில் மொத்தம் 1,144 உதவி பேராசிரியர் / விரிவுரையாளர் பணியிடங்களை நேரடி நியமனம்மூலம் நிரப்புவது குறித்தும், அண்ணா பல்கலைக்கழகத்தில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளை ரூபாய் 252.60 கோடி செலவில் ஏற்படுத்துவது குறித்தும், அண்ணா பல்கலைக்கழகம்மூலம் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் ஆளில்லா வான்வெளி வாகனம் வடிவமைக்கும் பணிகளை மேற்கொள்வது குறித்தும், 6 பல்கலைக்கழகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை ரூபாய் 60 கோடி செலவில் மேம்படுத்துவது குறித்தும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசுக் கல்வியியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் கட்டமைப்பு வசதிகளை இவ்வாண்டு 62 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்துதல், 5 புதிய அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளை நிறுவுதல், 5 புதிய கல்வியியல் கல்லூரிகள் துவங்குதல் உள்ளிட்ட பல புரட்சிகரமான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 25-9-2015 அன்று அறிவித்தார்கள்.

நாட்டுக்கே உணவளிக்கும் விவசாயிகளுக்குப் பேருதவியாக விளங்கும்வண்ணம் நெல் நடவு இயந்திரங்கள், பவர் டில்லர்கள் உள்ளிட்ட பல்வேறு வேளாண் உபகரணங்களை வாங்க 80 கோடி ரூபாய் மானியம் வழங்குதல், வேளாண் உற்பத்தியில் நவீனத் தொழில்நுட்பப் பயன்பாட்டை அதிகரிக்க ரூபாய் 65 கோடியே 30 இலட்சம் ஒதுக்கீடு, நடப்பாண்டில் 29 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் ஆகியவற்றுக்கு உற்பத்தி மற்றும் விநியோக மானியம், அரசு விதைப் பண்ணைகள் மற்றும் தோட்டக் கலைப் பண்ணைகளை படிப்படியாக மாதிரிப் பண்ணைகளாக மேம்படுத்த 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு, பயறு வகை உற்பத்தியை மேலும் அதிகரிக்க நடவடிக்கை, குறைந்த நீர் வசதி கொண்டு நவீன முறையில் தோட்டப் பயிர் சாகுபடியினை மேற்கொள்ள 56 கோடியே 76 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு, நுண்ணீர்ப் பாசனத்திற்கான மானியத்தை மத்திய அரசு குறைத்தபோதிலும் தற்போது உள்ள அளவுக்கே தொடர்ந்து மாநில அரசு வழங்குதல், நீரைச் சிக்கனப்படுத்தி நவீன முறையில் மகசூல் பெருக்க 100 விவசாயிகளை முன்னேறிய வெளிநாடுகளுக்கும், 10,000 விவசாயிகளை இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும் கல்விச்

சுற்றுலா அழைத்துச் செல்லுதல், காய்கறி வளர்ப்பு இடுபொருட்களை மக்களுக்கு வழங்கும் திட்டத்தை திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாநகரத்திற்கு நீட்டித்தல், இயற்கை இடுபொருள் பயன்பாட்டை அதிகப்படுத்தவும் அங்கக கிராமங்கள் அமைக்கவும் ரூ.8 கோடி ஒதுக்கீடு, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக மாணவியருக்கு தங்கும் விடுதி கட்ட ரூ.22.95 கோடி ஒதுக்கீடு, ரூ.48.50 கோடி செலவில் ஒருங்கிணைந்த பண்ணைய திட்டம் செயல்படுத்துதல் குறித்த சீரிய அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் 28–9–2015 அன்று வெளியிட்டார்கள்.

வெள்ளாமை காத்திட்ட வீரமங்கை மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்புகள் உழவர் நலனைக் காத்து உயர்வடையச் செய்தது. கலப்பை கொண்டு உழைக்கும், களைப்படைந்த உழவனை, களிப்படையச் செய்தது.

கர்ணனுக்குப் பிறகு கொடையில்லை; கார்த்திகைக்குப் பிறகு மழை இல்லை என்பது பழையமொழி. அம்மா உணவகம், திருக்கோயில்கள், தேவாலயம், தர்காக்களில் அன்னதானம் என பட்டினிக் கொடுமையைப் பட்டெனத் துடைத்தெறிந்த பாரதத்துப் பைந்தமிழின் பாசத்தாயின் அறிவிப்புகளால் அம்மாவின் கொடைக்கு எல்லையில்லை; கார்த்திகைக்குப் பிறகு மழையில்லை என்பது புதுமொழி.

வறுமை, இல்லாமை அனைத்தையும் விரட்டி, இருந்த இடம் தெரியாமல் புரட்டி, பதிந்த தடம் அறியாமல், துடைத்தெறியத் துடிக்கும் தங்களின் இதயத் துடிப்பின் அறிவிப்புகளால், வாட்டிய வறுமை வறண்டு போனது, துரத்திய இல்லாமை துளிராமல் நின்றது.

பார்வைக்குத் தென்படாமல் பாறைக்குள் வாழும் தேரைக்கும் உணவளிக்கும் தெய்வத்தைப் போல, மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களுக்கு உணவளிக்கிறார்கள். பயிர் வாடிய போதெல்லாம் மனம் வாடிய வள்ளலாரைப் போல, மனம் வாடிய ஏழைகளின் நலம் நாடிய வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மேலும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை குறித்த ஒப்பற்ற திட்டங்களையும் அன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். நடப்பாண்டில் 4 கூட்டுக்

குடிநீர்த் திட்டங்களை 195 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்துதல், சென்னை மாநகரின் குடிநீர் ஆதாரங்களைப் பாதுகாக்கவும், மழைநீர் சேகரிப்பை மேலும் தீவிரப்படுத்தவும் நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம் அமைத்தல், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாநகராட்சிப் பகுதிகளில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மோட்டார் அல்லாத வாகனப் போக்குவரத்திற்கான தனி திட்டங்கள் மேற்கொள்ளுதல், நடப்பாண்டில் 10 நகராட்சிகள் மற்றும் 214 பேரூராட்சிகளில் 69 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளுதல், சென்னையில் 117 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எண்ணூர் நெடுஞ்சாலை மற்றும் மணலி சாலையில் ஒருங்கிணைந்த மேம்பாலம் அமைத்தல், சென்னை சோழிங்கநல்லூரில் ரூபாய் 65.97 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட மின் உற்பத்தி செய்யும் அமைப்புகளுடன்கூடிய புதிய கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைத்தல், சென்னையில் 310 கிலோ மீட்டர் நீளத்திற்கு குடிநீர்க் குழாய் பதிக்க ரூ.116 கோடியில் திட்டம், சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மண்டலத்தில் 40 கோடி ரூபாய் மதிப்பிலான அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள், சென்னையில் 51 கோடி ரூபாய் செலவில் நவீனப் பேருந்து நிழற்குடைகள் அமைத்தல், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டை வழங்குதல் உள்ளிட்ட முக்கிய அறிவிப்புகள் இவற்றில் அடங்கும்.

அதுமட்டுமல்லாமல், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களது செயல்பாடு குறித்த விவரங்களைப் பதிவு செய்யவும், அவற்றின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும், 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ் மொழியில் சிறப்பு மென்பொருளுடன்கூடிய அம்மா கைப்பேசிகளை 20 ஆயிரம் சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு வழங்கும் உன்னதமான மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தையும் நேற்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

அதுமட்டுமல்லாமல், பெண் படைப்பாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் "அம்மா இலக்கிய விருது" சித்திரைத் திருநாளில்

2015 செப்டம்பர் 29]

வழங்குதல், 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஆண்டுதோறும் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது வழங்குதல், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 125–வது பிறந்த நாளையொட்டி 125 கவிஞர்களைக் கொண்டு, இரண்டு நாள் கவியரங்கம் ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் நடத்துதல் மற்றும் இந்த ஆண்டு முதல் அவரது பிறந்த நாளை 'தமிழ் கவிஞர் நாள்' என்ற பெயரில் அரசு விழாவாகக் கொண்டாடுதல், இலக்கணம், இலக்கியம் மற்றும் மொழியியல் துறைகளில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழறிஞர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும், சித்திரை தமிழ்ப் புத்தாண்டில் 'உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்' வழங்குதல், உலகப் பொதுமறையாம் திருக்குறளை கொரிய மொழியில் வெளியிட நடவடிக்கை, தமிழ் மொழியின் அறநெறிக் கருவூலமான ஆத்திச்சூடியை சீனம் மற்றும் அரபு மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட நடவடிக்கை குறித்த தமிழ் வளர்ச்சி தொடர்பான மகத்தான அறிவிப்புகளை இன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வெளியிட்டார்கள்.

மேலும், காலம் நேரம் பாராமல் உழைக்கின்ற பத்திரிகையாளர்களின் உழைப்பை அங்கீகரித்து அவர்கள் நலம் பேண பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத்தை 7,500 ரூபாயிலிருந்து 8,000 ரூபாயாக உயர்த்தியும், மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கான குடும்ப ஓய்வூதியத்தை 4,500 ரூபாயிலிருந்து 4,750 ரூபாயாக உயர்த்தியும் அறிவிப்பு செய்தார்கள்.

அதோடு, இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டத்தில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்மூலம் 150 கோடி ரூபாய் மதிப்பில் சுமார் 224 ஏக்கர் நிலப்பரப்பில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைத்தல், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலதனத்தை மேலும் 100 கோடி ரூபாய் அதிகரித்தல், நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் தனியாருடன் இணைந்து 200 கோடி ரூபாய் முதலீட்டில் காஸ்டிக் சோடா தொழிற்சாலை, கோவை டைடல் பார்க்கில் உட்கட்டமைப்பு வசதியுடன் அபிவிருத்தி மையம் அமைத்தல், வானூர்தி உற்பத்தி தொடர்பாக திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம்–வடகால் கிராமங்களில், டிட்கோமூலம் சுமார் 350 கோடி ரூபாய் முதலீட்டில் உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம் அமைத்தல், 50 கோடி ரூபாய் நிதியுடன் "உயிரி தொழில்நுட்ப மூலதன முதலீட்டு

நிதி" உருவாக்குதல், சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தினை 298 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்தல், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையை 56 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்துதல், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை 25 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்துதல் உள்ளிட்ட தொழில் வளர்ச்சித் திட்டங்களையும் இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தேனி மாவட்டம், வீரபாண்டியிலும், ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்திலும், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலிலும் ரூபாய் 25 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்குவது பற்றியும், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது பற்றியும் அறிவித்து, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லாத மாவட்டமே தமிழ்நாட்டில் இல்லை என்ற அளவிற்கு உன்னத நிலையினை ஏற்படுத்தியுள்ளார்கள்.

முப்பருவக் கல்வி முறை தந்து, குழந்தைகளின் முதுகு வலி தீர்த்து, சுகமும் தந்து, அரசு கேபிள் தந்து, அதன்மூலம் அரசுக்கு வருமானம் என, உழைக்கும் தொண்டர்களின் உயிர்த் துடிப்பு, உரிமைகளை நிலைநாட்டும் வீராங்கனை, மாட்சிமை மிகுந்த ஆட்சியை வழங்கும் நம்பிக்கை ஒளிக்கீற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்புகள். அம்மாவைக் கும்பிட நினைப்பு முடியுமுன்னே அவரது குறைகள் தீர்கின்றன. வணங்கிய கைகள் விலகுமுன்னே வரங்கள் கிடைக்கின்றன.

மேலும், 23.73 கோடி ரூபாய் செலவில் 110 கூட்டுறவு அமைப்புகளுக்கு கட்டடங்கள் கட்டுதல், 203 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.8.32 இலட்சம் செலவில் பாதுகாப்பு அறைகள் மற்றும் கதவுகள் அமைத்தல், 2,966 கூட்டுறவு நிறுவனங்களின் பாதுகாப்பை மேம்படுத்த ரூ.16.2 கோடி செலவில் சி.சி.டி.வி. கேமராக்கள் நிறுவுதல், பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களைக் கணினிமயமாக்குதல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் சுமை தூக்குவோர் மற்றும் சிப்பமிடும் பணியாளர்களின் பணிச்

சுமையை எளிதாக்கும் வகையில் தற்போது கட்டப்பட்டு வரும் கிடங்குகளில் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தானியங்கி இழுவை இயந்திரங்கள், சுமைதூக்கிகள், மின்னாக்கிகள் உள்ளிட்ட நவீன வசதிகள் செய்வது குறித்தும் இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

இணைப்பு VIII

(250 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

பேரவை நிறைவேற்றிய இதர அலுவல்கள்

பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்—

பொது நிறுவனங்கள் குழு	— 68
பொதுக் கணக்குக் குழு	— 63
அரசு உறுதிமொழிக் குழு	— 61
சட்ட விதிகள் ஆய்வுக் குழு	— 9
மதிப்பீட்டுக் குழு	— 4
மனுக்கள் குழு	— 6
பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு	— 2
அவை உரிமைக் குழு	— 1

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்	— 159
(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்	— 143

உறுப்பினர்கள் வருகை—

17—2—2015 முதல் 29—9—2015 வரை பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் பட்டியல்—

வ. எண்	உறுப்பினர் பெயர்
1.	திரு. எம்.கே. அசோக்
2.	திரு. ஆ.க. அரங்கநாதன்
3.	திருமதி க. அழகுவேலு
4.	திரு. கே.பி. அன்பழகன்

வ.எண்	உறுப்பினர் பெயர்
5.	திரு. வி.சி. ஆறுக்குட்டி
6.	திருமதி த. இந்திராகாந்தி
7.	திரு. கே.வி. இராமலிங்கம்
8.	திரு. வி.எஸ். இராஜி
9.	திரு. இரா. இராஜேந்திரன்
10.	திரு. பி.ஜி. இராஜேந்திரன்
11.	திரு. கடம்பூர் ராஜு
12.	திரு. பா. கணேசன்
13.	திரு. கே.பி. கந்தன்
14.	திரு. ஏ.ஏ. கருப்பசாமி
15.	திரு. ம. கலை அரசு
16.	திரு. வி.பி. கலைராஜன்
17.	திரு. என்.வி. காமராஜ்
18.	திரு. ஆர்.என். கிட்டுசாமி
19.	டாக்டர் க. கிருஷ்ணசாமி
20.	திரு. சி. கிருஷ்ணன்
21.	திரு. ம. குணசேகரன்
22.	திரு. கே. குப்பன்
23.	திரு. க. கோபால்சாமி
24.	திருமதி ம. சக்தி
25.	திரு. சி. சண்முகவேலு
26.	திரு. ஆர். சந்திரசேகர்
27.	திரு. கோவி. சம்பத்குமார்
28.	திருமதி பி. சரோஜா
29.	திரு. அ. சவுந்தரராசன்
30.	திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
31.	திரு. எம்.பி.எஸ். சிவசுப்ரமணியன்

[2015 செப்டம்பர் 29

வ.எண்	உறுப்பினர் பெயர்
32.	திரு. என்.ஆர். சிவபதி
33.	திரு. ஓ.கே. சின்னராஜ்
34.	திரு. இ. சுப்பையா
35.	திரு. கே.ஏ. செங்கோட்டையன்
36.	திரு. ஞா. செந்தமிழன்
37.	திரு. வி. செந்தில் பாலாஜி
38.	திரு. சி.த. செல்லப்பாண்டியன்
39.	திரு. எம்.கே. செல்வராஜு
40.	திருமதி செல்வி ராமஜெயம்
41.	திரு. வி. சோமசுந்தரம்
42.	முனைவர் செ.கு. தமிழரசன்
43.	திரு. இரா. தமிழ்ச்செல்வன்
44.	திரு. ப. தன்சிங்
45.	திரு. ஆர். துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை
46.	திரு. கே.பி. நாகராஜன்
47.	திரு. வீ.பி. நாகைமாலி
48.	திரு. வ. நீலகண்டன்
49.	திரு. கே.டி. பச்சைமால்
50.	திரு. கே.பி. பரமசிவம்
51.	திரு. சு. பவுன்ராஜ்
52.	திரு. ச. பழனிச்சாமி
53.	திரு. க. பாண்டியராஜன்
54.	திரு. ஜே.சி.டி. பிரபாகர்
55.	திரு. புத்திசந்திரன்
56.	திரு. இரா. பெருமாள்
57.	திரு. கே. பொன்னுசாமி
58.	திரு. வெ. பொன்னுப்பாண்டி

2015 செப்டம்பர் 29]

வ.எண்	உறுப்பினர் பெயர்
59.	திரு. ஏ.கே. போஸ்
60.	திரு. இரா. மணிமாறன்
61.	திரு. துரை. மணிவேல்
62.	திருமதி மனோரஞ்சிதம்
63.	திரு. சு. மாதேஸ்வரன்
64.	திரு. கு.வ. மார்க்கண்டேயன்
65.	திருமதி ச. முத்துசெல்வி
66.	திரு. ம. முத்துராமலிங்கம்
67.	திரு. என். முருகுமாறன்
68.	திரு. கே.பி. முனுசாமி
69.	திரு. வி. மூர்த்தி
70.	திரு. எஸ்.எஸ். ரமணீதரன்
71.	திரு. கா.கோ. ரமேஷ்
72.	திரு. சு. ரவி
73.	திருமதி ஆர். ராஜலட்சுமி
74.	திரு. பொன். ராஜா
75.	திரு. எம். ரெங்கசாமி
76.	திரு. மு. ரெத்தினசாமி
77.	திருமதி சீ. வளர்மதி
78.	திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி
79.	டாக்டர் வி.எஸ். விஜய்
80.	திரு. கோ. வெங்கடாஜலம்
81.	திரு. வி.என்.பி. வெங்கட்ராமன்
82.	திரு. எஸ். வேதாச்சலம்
83.	திரு. எ.வ. வேலு
84.	முனைவர் வைகைச்செல்வன்
85.	திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வ.எண்	உறுப்பினர் பெயர்
86.	திரு. டி. ஜெயக்குமார்
87.	டாக்டர் த. ஹரிதாஸ்

பார்வையாளர்கள்—

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள் மொத்தம்	— 16526
ஆண்கள்	— 12304
பெண்கள்	— 4222

நூலகம்—

பத்தாவது கூட்டத்தொடரின்போது சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்	— 388
வழங்கப்பெற்ற நூல்கள்	— 414
இவ்வாண்டு புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள்	— 18

நடவடிக்கைக் குறிப்புகள்—

உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர)	— 502
தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள்	— 4831
மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	— 1584
தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	— 448

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS